# தமிழ் ஆட்சி மொழி- ஒரு வரலாற்று நோக்கு

## (1921-1956)

திரு துரை. சுந்தரேசன், இ.ஆ.ப.,
செயற்பாட்டியக்குநர்,
சென்னைப் பெருநகரக் குடிநீர் வழங்கு வாரியம்,
சென்னை.

தமிழ்ப் பல்கலைக் கழகம்,
தஞ்சாவூர்.

தமிழ்ப் பல்கலைக் கழகக்
குறுகிய கால ஆய்வுத்
திட்டத்தின் கீழ்
உருவாக்கப்பட்டது.

தமிழ்ப் பல்கலைக் கழக
வெளியீடு : 70

திருவள்ளுவர் ஆண்டு 2017 ஐப்பசி; அக்டோபர்-1986
நூல் : தமிழ் ஆட்சி மொழி-
ஒரு வரலாற்று நோக்கு
ஆசிரியர் : துரை. சுந்தரேசன்
விலை : உரூ.95-00
பதிப்பு : முதற்பதிப்பு
அச்சு : தமிழ்ப் பல்கலைக் கழக
மறுதோன்றி அச்சகம்,
தஞ்சாவூர்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புக் குறிப்புகள் | |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | துவக்கம் | 12 |
| 3. | இணைப்புகள் | 341 |
| 4. | முடிவுரை | 365 |

# பதிப்புக் குறிப்பு

'தமிழ் ஆட்சி மொழி-ஒரு வரலாற்று நோக்கு' என்னும் நூலாய்வுக்கு நூலாசிரியர் சட்டமன்றப் பேச்சுக்களையே அடித்தளமாகக் கொண்டுள்ளார். சட்டமன்றத்தமிழ்ப் பேச்சுகளும் பிறமொழிப் பேச்சின் மொழி பெயர்ப்புகளும் சட்டமன்ற நடைமுறைப் புத்தகத்தில் பதியப் பட்டவாறே பதிப்பிக்கப்பட்டுள்ளன. புதிய எழுத்து மாற்றம் ஒன்றே செய்யப்பட்டுள்ளது. வேறு எம்மாற்றமும் செய்யப்படாமையால் ஆங்கிலச் சொற்கள், வடமொழிச் சொற்கள், திரிந்த வழக்குச் சொற்கள் மாற்றப்படாமலும் திருத்தப்படாமலும் உள்ளன.

பதிப்புத்துறை.

# முன்னுரை

1919—ஆம் ஆண்டு இந்திய அரசியல் சட்டத்தின் படி, இரட்டை ஆட்சி முறை இந்தியாவில் நிறுவப்பட்டது. பொறுப்புள்ள மாநில அரசுகளை ஏற்படுத்துவது இச் சட்டத்தின் குறிக்கோளாகும். அதன்படி, சென்னை மாநிலச் சட்டமன்றம் கூடியது. இந்த நேரத்தில் சென்னைக்கு வேல்ஸ் இளவரசர் வருகை தந்தார். இந்தியர்கள் முதன் முதலாக அமைச்சர்களாகும் நிலைமையும் ஏற்பட்டது. சட்ட மன்றங்களில் விவாதம் நடக்கவும், விவாதத்திற்குப் பின் சட்டங்கள் இயற்றவும், அச்சட்டங்களின் வாயிலாக மக்களின் நலன்கள் பாதுகாக்க ஏற்பாடுகள் செய்யவும் என, மக்களாட்சி முறையின் முழுப் பயனையும் மக்கள் அடைவதற்குரிய வாய்ப்பு இல்லையென்றாலும், மக்களின் குரல் ஆட்சி செய்கின்றவர்களுக்குக் கேட்கும் ஒருவடிவம் ஏற்படுத்தப்பட்டது 1921—ஆம் ஆண்டில்தான்.

சென்னை மாநிலம் விரிந்து, பரந்து கிடந்த ஒன்றாகும். இந்த மாநிலத்தின் அமைப்பும், இதில் அடங்கியுள்ள பகுதிகளும், ஒரு 'வரலாற்று விபத்து என்பது ஒரு சிலருடைய கருத்து. உள் நாட்டிலே போர்; குறுநில மன்னர்களுக்குள் போராட்டம்; ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திலிருந்த பகுதிகளில் நடைமுறைக்கு வந்த பல சட்டதிட்டங்களினால் ஏற்பட்ட விளைவுகள்; ஆங்கிலேயர் களுக்கும் மற்றவர்களுக்கும் ஏற்பட்ட அரசியல் போராட் டங்கள்; சமூக நிகழ்ச்சிகள்; பொருளாதாரக் குழப்பங்கள் என எல்லைகள் அடிக்கடி கை மாறுவதும், மாற்றி அமைக்கப்படுவதும், குறைவதும் குறைக்கப்படுவதுமாக, மாறி வந்த நேரத்தில், பல பகுதிகள் சென்னையைத்

தலைமையிடமாகக் கொண்டு ஆண்ட ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் வந்தன. ஆட்சி செய்து அடக்குவதற்குப் படையும், ஆட்சி செய்து நடத்துவதற்குப் பொதுப் பணியாளர்களும், ஆட்சி செய்து படைப்பதற்குப் பொது மொழியொன்றும் என்று ஆங்கிலேயர்களுக்குச் சார்பான சூழ்நிலை அன்று நிலவியது.

அதற்கேற்றாற்போல், சென்னைநகரமும் கப்பல் துறையும் அவர்களுடைய போரிடும் துணிச்சலையும், போரிட்டுப் புது இடங்களைச் சேர்த்துக் கொள்ளும் வாய்ப்பையும் ஏற்படுத்தித் தந்தன. வடக்கே ஒரிசா மற்றும் ஐதராபாத் பகுதிகள், தெற்கே திருநெல்வேலியும் மதுரையும் உள்பட வளமான மாவட்டங்கள், மேற்கே குடகு, தெற்கு மற்றும் வடக்குக் கனரா, கள்ளிக்கோட்டை முதலிய மேற்குக் கடற்கரையோரப் பகுதிகள் எனப் பலமொழி பேசப்படும் மாவட்டங்களை ஒரே அரசின் கீழ் ஆட்சி செய்வது என்பது கடினமாக அவர்களுக்குப் படவில்லை.

தாய்மொழிப் படிப்பில்லாத மக்களின் மீது, ஆங்கில மொழியைக் கொண்டு ஆங்கிலேயர்களும் ஆங்கிலம் படித்த இந்தியர்களும் ஆட்சி செய்ததும், ஆட்சி செய்வதற்கு வசதியாகப் பல சட்டங்களை இயற்றியதும் பெரிய சாதனைதான்.

சென்னைச் சட்டமன்ற வரலாற்றில் ஏராளமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. அவையெல்லாம் ஆங்கிலத்தில் ஆக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு, முடிவெடுக்கப்பட்டு, சட்டமாக ஆனபின், மக்களின் நலனுக்காக நிருவகிக்கப்பட்டிருக்கின்றன. இந்த நிகழ்ச்சியெல்லாம் ஆங்கிலத்தில்தான் நடந்திருக்கிறது. இன்னும் அதே சூழ்நிலைதான். இதற்கு விடிவுகாலம் இல்லையென்றே சொல்லலாம்.

1921—ஆம் ஆண்டு தொடங்கி, ஒவ்வொரு ஐந்தாண்டு முடிவிலும் புதிய சட்டமன்றங்கள் பொறுப்பெடுத்திருக்கின்றன. 1939—ஆம் ஆண்டிற்குப் பிறகு,

1946—ஆம் ஆண்டு வரையிலும், ஆலோசகரது ஆட்சியும், மறுபடியும் புதிய அமைச்சரவைகளும், அமைச்சர்களும் என இந்திய ஆட்சி வரலாறு தொடர்கிறது. நாடு விடு தலையடைந்த பிறகு, 1950—ஆம் ஆண்டிலே குடியரசாகி, 1952—இலே பொதுத் தேர்தல் வந்த பிறகு, விரிவான முறையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் (பிரதிநிதிகள்) தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

1953—ஆம் ஆண்டிலே ஆந்திரமும், 1956—ஆம் ஆண்டிலே கருநாடகமும், கேரளமும் பிரிந்தன. ஆந்திர தேசம் தனி மாநிலமாகப் பிரிய வேண்டுமென்று எத்தனை வகையான போராட்டங்கள்? எத்தனை முறை சட்டமன்றத் திலே தீர்மானங்களை இயற்றுவது? சட்டமன்றத்திலே ஓர் உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல, வட்டமேசை மாநாடு நடந்த போது ஆந்திரதேசம் வேண்டுமென்று எவராவது ஓர் உறுப்பினர் தாளில் எழுதி வைத்துக் கொண்டு படித்திருந் தாலும், அப்போது இங்கிலாந்து முதலமைச்சராயிருந்தவர், தனி மாநிலத்தைத் தந்திருப்பார் என்று பேசினார். ஆந்திர தேசத்தைத் தனி மாநிலமாக ஆக்க வேண்டும் என்று சென்னை மாநிலச் சட்ட மன்றத்திலே தீர்மானம் இயற்றப் பட்டும், அது மேல் நடவடிக்கை இல்லாமல் நின்று போயிற்று.

ஆந்திர தேசக் கோரிக்கையைப் போல், மற்றப் பகுதிகளில் தனி மாநிலமாக ஆகவேண்டுமென்று கோரிக் கை வந்ததெல்லாம், மொழிவாரி அடிப்படையில் மாநிலங் களை ஆக்க வேண்டும் என்பதால்தான். மகாத்மா காந்தி அடிகளே, காங்கிரஸ் கட்சியின் கிளைகளை எல்லாம், அங்கங்கே பேசப்படுகின்ற தாய்மொழிகளை அடிப்படை யாகக் கொண்டு தொடங்கினார்.

சென்னைப் பல்கலைக்கழகமும் தவிர்த்து, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பெற்றது,

தமிழுக்கு முதன்மை கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்தினால்தான். அதே போது, தமிழ்ப் பல்கலைக்கழகமும் தொடங்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோள் வலுவாக இருந்தது. இப்போது கல்விக்காகவும் நிதிக்காகவும் இருந்த செயற்குழு உறுப்பினர்கள் ஒப்புக் கொண்டபின்பும், தமிழ்ப் பல்கலைக்கழகம் வராமலேயே நின்று போயிற்று. இருப்பினும், ஆந்திரத் தேசத்திற்காகத் தெலுங்கு மொழியைப் பரப்ப, ஆந்திரப் பல்கலைக்கழகத்தை ஏற்படுத்தினார்கள்.

பல மொழிகளைப் பேசக்கூடியவர்கள் சட்ட மன்றத்திலே இருந்தார்கள். தமிழ், மலையாளம், கன்னடம், ஒரியா, தெலுங்கு ஆகிய மொழிப் பகுதிகளிலிருந்து வந்த உறுப்பினர்கள் சட்டமன்றத்தில் இருந்தார்கள். ஆனால் விவாதங்கள் ஆங்கிலத்திலே நடந்தன. சட்டப்படி நடந்தன. மற்ற மாநில மொழிகளில் விவாதங்கள் நடக்க வேண்டும்; அப்படியில்லையென்றால் ஆங்கிலம் அடியோடு தெரியாத உறுப்பினர்களாவது மற்ற மொழிகளில் பேசுவதற்கும், கேட்பதற்கும் வசதிகள் செய்யவேண்டும் என்ற வேண்டுதலும் அவ்வப்பொழுது மிகவும் வலுவற்ற முறையிலே சட்டமன்றத்தில் வைக்கப்பட்டது. மொழி பெயர்ப்புச் சாதனங்களையாவது பயன்படுத்தவேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள்.

ஆந்திர தேசமும் ஒரிசா மாநிலமும் மொழிவாரி அடிப்படையில் அமைக்கப்பட வேண்டுமென்று பலமுறை சட்டமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. இது ஏன்? இதனுடைய அடிப்படைக் கருத்து அந்தந்தப் பகுதியின் மொழியிலே நிருவாகம் நடக்கவும், சட்டமன்றங்கள் நடக்கவும், அவர்களுடைய இலக்கியம், கலை, பண்பாடுகள் வளர்க்கப்படவும் வேண்டும் என்பதற்காகத்தான். ஊராட்சி மன்றங்களிலும், நகர்மன்றங்களிலும், மாவட்ட மன்றங்களிலுங்கூட, 1921—ஆம் ஆண்டு வரையில் ஆங்கிலத்தில்

நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன என்பது வியப்புக்குரியது தான். ‘அனகாபள்ளி’ நகராட்சி மன்றத்தின் தலைவர் அனுப்பிய பரிந்துரையின்படி, நகர்மன்ற நடவடிக்கைகள் ஆங்கிலத்திலோ வட்டார மொழிகளிலோ நடத்தப்படலாம் என்ற ஆணையை அப்போது இருந்த அரசு அளித்தது. ஆங்கிலமே தெரியாத உறுப்பினர்களைக்கொண்ட மாவட்ட மன்ற நடவடிக்கைகள் எப்படி நடத்தப்பட்டன என்பது வியப்புக்குள்ளாக்கும். தொடக்கப் பள்ளிகளிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் பாடங்கள் அனைத்தும் வட்டார மொழிகளில் நடத்தப்பட வேண்டுமென்ற ஆணை இடப்பட்டதும் இந்தக் காலத்தில்தான். வட்டார மொழி களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதற்காக ஆங்கிலேய அதிகாரிகளுக்கும், ஆங்கிலமே தெரிந்த இந்திய அதிகாரி களுக்கும் உதவித்தொகை வழங்கக் கூடாது என்ற எதிர்ப்பு இருந்த நேரம் உண்டு. இங்கிலாந்து நாட்டில் படித்துவிட்டு, சென்னையின் பட்டி தொட்டிகளில் வேலை செய்த பொழுது அவ்வட்டார மொழிகளை நன்கு கற்றுப் புலமை பெற்ற அதிகாரிகளும் இருந்தார்கள். மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு இலக்கியச் செல்வங்களைப் பாதுகாப்பதில் பலர் ஆர்வம் காட்டினார்கள்.

இந்தக் காலக்கட்டத்தில், சென்னை மாநில அரசியலில் ஈடுபட்ட பல தலைவர்கள் விடுதலைப் போரிலும், நாடு விடுதலை அடைந்த பின்பும் இம் மண்ணின் தலைவிதியை விதிப்பவர்களாக இருந்திருக்கி றார்கள். அதில் புகழை அடைந்தவர்கள் பலர். தங்க ளுடைய அறிவை, ஆற்றலை அளித்தவர்களும் பலர். அதிகாரத்தின் பயனை அனுபவித்தவர்களும் பலர். எங்கோ பிறந்தாலும் இங்கு வந்துவிட்ட காரணத்தினால் இத் துறையில் அயராது உழைத்த அயல்நாட்டுப் பெரு மக்களும் பலர். அன்று உழைத்தவர்களில் சிலர் இன்று ஓய்ந்து இருந்தாலும், இன்னும் ஒளியைத் தந்து கொண்டிருக்கின் றார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும்.

குறிப்பிடத்தக்க தலைவர்கள் எல்லோருடைய பெயர்களையும் குறிப்பிடுவது என்பதும், அவர்கள் ஆற்றிய பணிகளையெல்லாம் சுருங்கச் சொல்வது என்பதும் இயலாது. 1928—ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 9—ஆம் நாள், மதிப்பிற்குரிய திரு எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் சட்டமன்றத்திலே, பாரதியின் கவிதைகளை அரசு பறிமுதல் செய்ததற்காகக் கொண்டுவந்த ஒத்திவைப்புத் தீர்மானமும், அதைத் தொடர்ந்து அவர் ஆற்றிய ஆங்கிலச் சொற் பொழிவும் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். அவருடைய பேச்சு வன்மையால் ஆங்கிலேயர்களைத் தவிர மற்ற உறுப்பினர்கள் அவையை ஒத்தி வைக்க வேண்டுமென்று சாதகமாக வாக்கு அளித்தது ஒன்றே, தமிழ் மொழியிடத்தும் தமிழ் மொழியில் இயற்றப்பட்டக் கவிதைகளிடத்தும் மக்களிடம் இருந்த பற்றும், விடுதலை விழிப்புணர்ச்சியும் எந்த அளவிற்கு ஏற்பட்டு இருந்தன என்பதற்கு எடுத்துக் காட்டாகும்.

சர்.சி.பி.இராமசாமி அய்யர், டாக்டர் பி.சுப்ப ராயன், பனகல் இராசா, அரங்கநாத முதலியார், ஆரோக்கியசாமி முதலியார், பி.டி.இராசன், ஏ.டி.பன்னீர் செல்வம் ஆகிய தலைவர்கள் அமைச்சர்களாக இருந்தவர் கள். ஏ.இராமசாமி முதலியார், எம்.இரத்தினசாமி, சிவஞானம் பிள்ளை, தணிகாசலம் செட்டியார், பி.தியாக ராசன் செட்டியார் முதலியவர்களும் மேலும் பலரும் உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். இராமநாதபுரம் இராசா, மாணிக்கவேல் நாயக்கர், அவினாசிலிங்கம் செட்டியார், எம்.பக்தவத்சலம், ஓ.பி.இராமசாமி ரெட்டியார், சி.சுப்பிரமணியம், முதலானவர்கள் பல சமயங்களில் சட்டமன்றத்திலே இருந்தவர்கள். குமாரசாமி இராசா, கோபால் ரெட்டி, சஞ்சீவரெட்டி முதலானவர் களும் சென்னை மாநிலச் சட்ட அவையை அணிசெய்தவர் கள். மஜோரிபங்க்ஸ், தாடண்டர், மோயிர் ஆகியவர்களும் செயற்குழு உறுப்பினர்களாக இருந்தவர்கள். 1937—இலும்

1952—இலும் சென்னை மாநில அரசியலில் நடுநாயகமாக இருந்தவர்கள் சி.இராசகோபாலாச்சாரியார் அவர்களும், ஆந்திரத் தலைவர்களான டி.பிரகாசம், டி.விசுவநாதம் ஆகியவர்களும் ஆவார்கள்.

1921—ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தேர்தல்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன. முதல் உலகப் பெரும் போர் நடந்து முடிந்ததும் இந்தியர்களை மேலும் மேலும் நிருவாகத்தில் ஈடுபடுத்த வேண்டுமென்ற நினைப்பு வந்து, பொறுப்புள்ள மத்திய மாநில அரசுகளை ஏற்படுத்த வேண்டுமென்ற கட்டாயமான சூழ்நிலை ஏற்பட்டது. வட்டமேசை மாநாடு இந்தக் காலத்தில்தான் நடந்து முடிந்தது. இரண்டாவது உலகப்போர் தொடங்கி முடிந்ததும் இந்தக் காலக் கட்டத்தில்தான். 'வெள்ளையனே வெளியேறு!' என்று சொன்னதும், விடுதலை அடைந்ததும், குடியரசாக மலர்ந்து மக்களாட்சியை அறிவித்ததும் இந்தக் காலத்தில்தான்.

இந்திய நாடு என்பது ஒன்று. அதனுடைய குறிக்கோள் விடுதலையடைவதுதான். மொழி, இனம், மதம் என்ற பாகுபாடு கூடாது என்ற உயர்ந்த தத்துவங்கள் பேசப்பட்டு, விடுதலை இயக்க உணர்வு மக்களிடையே மேலோங்கி இருந்த நேரம். 1937—ஆம் ஆண்டு திரு சி.இராசகோபாலாச்சாரி அவர்கள் சென்னை மாநிலத் தலைமை அமைச்சராக இருந்தபோது, தென்னாட்டு மக்கள் இந்தியைப் படிக்க வேண்டுமென்று எல்லா எதிர்ப்புகளுக்கிடையேயும் எடுத்த முயற்சிகள் கைவிடப்பட்டன. அவரே மீண்டும் தலைமை அமைச்சராக 1952—ஆம் ஆண்டு ஆனபொழுது இந்தியைக் கட்டாயமாகப் பள்ளிகளில் புகுத்த வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்த போது, சென்னை மாநிலத்தின் தீர்ப்பு வேறுவிதமாக இருந்தது. ஆங்கிலம் தொடர வேண்டுமென்ற ஆசையும், நாட்டின் ஒருமைப்பாட்டைக் காக்க இந்தியைக் கற்க

வேண்டும் என்ற வற்புறுத்தலும், எங்கள் தாய் மொழி எழுச்சி பெற வேண்டும் என்ற எண்ணப் போக்கும் விடாது மோதிய காலக்கட்டம் இது.

சட்டமன்ற நடவடிக்கைகளைத் தலைமைச் செயலகத்து நிருவாகம், மாநிலத் தலைமை அலுவலகக் கடிதப் போக்குவரத்து, மாவட்ட நடைமுறை, கிராம அலுவலகங்களின் விதிகள் என்று எல்லா மட்டத்திலும் எந்த மொழியைப் பயன்படுத்துவது? வட்டார மொழிகளில் விவாதங்கள் அமைய வேண்டுமென்று வாதாடிய பலர், ஆங்கிலத்தில்தான் அப்பொழுது வாதாட வேண்டியிருந்தது. மக்களாட்சியின் முழுப்பயனை மூலை முடுக்கிலெல்லாம் இருக்கும் மக்கள் அடைய வேண்டுமென்றால், அவர்களுடைய எண்ணத்தின் வெளிப்பாடு, அவர்களுடைய மொழியிலே சட்டமன்றங்களில் ஒலிக்க வேண்டும்; 'ஊமை'யாக இருக்கும் இலட்சக்கணக்கான மக்களுக்காக இயற்றப்படும் சட்டங்களும், தீட்டப்படும் திட்டங்களும், அயல்மொழியில் அமைவது பொருத்தமில்லாதது. வளர்ந்த நாடுகள் எல்லாம், தங்கள் வளர்ச்சியைத் தாய் மொழிப் படிப்பின்மூலம்தான் பெற்றார்கள் என்று எடுத்துக் கூறிய அறிஞர்களின் கருத்தெல்லாம் ஏட்டளவில் நின்றன. இந்தச் சமயத்தில், இந்தி மொழியா, இந்துஸ்தானியா, ஆங்கிலமா, வட்டார மொழிகளா, எல்லா மொழிகளுக்கும் பொருந்தும் பொதுவான எழுத்துகளா; அப்படியெனில் உரோமன் எழுத்தா, தமிழ் எழுத்தா, தேவநாகரி எழுத்தா என்றெல்லாம் எல்லையில்லா விவாதங்களும் எடுத்துச் சொன்ன கருத்துகளும், ஏட்டை நிரப்பினவேயொழிய, எளிய பாமர மக்களுடைய ஆசைகளை, எண்ணப்போக்கை வெளிப்படுத்துவனவாக அமையவில்லை. சிறுபான்மையினர் மிகுதியாக வாழும் பகுதிகளில், அவர்களுடைய சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தையும் அதை ஏற்றுக் கொண்டால், காலப் போக்கில் ஏற்படும் தீமைகளையும் விளக்கிப் பேசிய

திரு அவினாசிலிங்கம் செட்டியாருடைய பேச்சு, சென்னை மாநில வரலாற்றில் ஒரு மைல்கல் என்றே சொல்லலாம். மாநிலங்களின் ஆட்சிமொழியாக எந்த மொழியை, எந்தக் கால அளவில் ஏற்றுக் கொள்வது என்று சென்னைச்சட்ட மன்றம் நீண்ட விவாதங்களை நிகழ்த்திக் கொண்டிருந்த பொழுது, அரசியல் நிர்ணய சபை கூடி, மத்திய அரசின் ஆட்சிமொழி இந்தி மொழிதான் என்று திட்ட வட்டமாக அறிவித்து, அரசியல் சட்டத்திலும் ஏற்றப்பட்டுவிட்டது விந்தையிலும் விந்தையானது. ஒரு மொழி வளர்ந்த பின்பு தான், அதை ஆட்சிமொழியாகவோ பயிற்றுமொழி யாகவோ ஆக்க முடியும் என்று ஆணித்தரமாகச் சொல்லி, வட்டார மொழிகளின் இயலாமைக்கு விளக்கம் தந்து கொண்டிருந்தார்கள் ஒரு பக்கம்; இந்திமொழிதான் மத்திய அரசின் ஆட்சிமொழி என்று வேறொரு பக்கம் அறிவித்து விட்டார்கள். நாட்டின் ஒற்றுமையைக் கருத்தில் கொண்டு, இந்தி மொழியைப் பயிற்று மொழியாகப் பள்ளிகளில் ஆக்க வேண்டும் என்ற இயக்கம் வேறொரு பக்கம்; இவை அரசியலின் பல்வேறு கட்டங்கள். அரசு முன்வராத பொழுது தனிநபர் மசோதாக்கள் சட்டமன்றத்தில் வைக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டன. பலவேறு மொழிகளைப் பேசக்கூடிய பகுதிகளை இணைந்ததாகச் சென்னை மாநிலம் இருந்ததனால், ஒரு பொது மொழியை ஏற்க இயலாது என்று சொல்லிவிட்டார்கள். அது முடியாத பொழுது, ஒரே காலத்தில் மொழி பெயர்க்கக் கூடிய சாதனங்களையாவது வாங்கி வைத்து உறுப்பினர் கட்கு உதவுங்கள் என்ற பொழுது, செலவாகும், ஆகவே அது தேவையில்லை என்றும் தீர்மானித்தார்கள்.

ஆந்திரம், கேரளம், கருநாடகம், பிரிந்த பிறகும், சற்றுத் தயக்கம். 1956—ஆம் ஆண்டு சட்ட மன்றத்தில் ஓர் உறுப்பினர் குறிப்பிட்டது போல, 1957—ஆம் ஆண்டு தேர்தல் வருவதனால், அவசர அவசரமாகத்

தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கிச் சட்டம் இயற்று கிறார்கள் என்று குற்றம் சாட்டினார்கள். நாடு விடுதலை யடைந்த பிறகு, மாநிலங்களின் ஆட்சி மொழியாக எம் மொழியிருக்க வேண்டும் என ஆணித்தரமாக உரையாற்றிய திரு பி.இராமமூர்த்தி அவர்களின் கருத்துகளும், திரு எம்.கல்யாணசுந்தரம் அவர்களுடைய பேச்சும் மிக முக்கி யத்துவம் வாய்ந்தனவாகும்.

மைய ஆட்சிமொழி இந்தியென்றும், மற்றும் பதினான்கு மொழிகள் தேசிய மொழிகள் என்றும் அறிவித்த பின், மொழி ஆணைக்குழு ஒன்றை மத்திய அரசு நிய மித்தது. மொழி ஆணைக் குழுவால் மாநிலங்களுக்கு அனுப்பப்பட்ட வினாத்தாள், மாநிலத்தின் மேலவை கீழவை இரண்டிலும் விரிவாக விவாதிக்கப்பட்டது. அந்த விவாதங்களில் கலந்து கொண்டு முகம்மது இராசாகானும் அவரைப் போன்றவர்களும் கொண்டு வந்த திருத்தங்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை.

புதிய அரசியலமைப்பை அரசியல் நிருணய சபை முடிவாக ஒப்புக் கொள்வதற்கு முன்பாக, மாநிலங்களின் கருத்தை அறியப் 'புதிய அரசியல் அமைப்பின் கருத்து' அனுப்பப்பட்டு, மாநிலச் சட்டமன்றத்தில் விவாதித்த பொழுது, மாநிலத்தின் ஆட்சிமொழி பற்றியோ மத்திய—மாநிலக் கடிதப் போக்குவரத்து பற்றியோ பயிற்று மொழி பற்றியோ எந்த உறுப்பினரும் எவ்விதமான கருத்தையும் சொல்லாதது பெரிய ஏமாற்றத்திற்குரிய ஒன்றாகும். ஒரு வேளை, மாநிலத்தைச் சேர்ந்த அறுபதுக்கு மேற்பட்டவர் கள் அரசியல் நிருணய சபையில் உறுப்பினர்களாக இருந்த தனால், இப்பொருள் மாநிலச் சட்டமன்றத்தில் விவாதிக்கப் படாமல் விடுபட்டிருக்கலாம்.

அரசியல் கட்சிகளுக்கென்று தனியான ஒரு கருத்து சட்ட மன்றத்தில் எதிரொலிக்கவில்லை என்றே தெரிகிறது. தனி மனிதருடைய கருத்தும், தனித்த கருத்துகளும் பெரு மளவில் வெளி வந்திருக்கின்றன. திரு கஜபதி நாயக்கரே

தனி நபர் மசோதாவாக, தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று ஒரு தடவைக்கும் மேலாகச்சட்ட மன்றத்தில் தீர்மானங்களைக் கொண்டு வந்து வற்புறுத்தியிருக்கிறார். தமிழே ஆட்சி மொழியென்று 1956—ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் மசோதா நிறைவேறிய பொழுது, அளவிட முடியாத மகிழ்ச்சியை எல்லா உறுப்பினர்களும் அடைந்திருக்கிறார்கள்.

1921—ஆம் ஆண்டிலிருந்து 1956—ஆம் ஆண்டு வரை, சட்டமன்ற நடவடிக்கைப் புத்தகங்களிலிருந்து சேகரித்த தகவல்கள் எல்லோருக்கும் பயனுடையனவாக இருக்குமென்றே கருதுகிறேன்.

எந்த ஓர் இயக்கத்தையும் தனிமனிதருடைய இயல்புகளையும் எடுத்துக் காட்ட வேண்டுமென்று நான் முயற்சிக்கவில்லை. இம்முயற்சி ஒரு வரலாற்று நோக்காகவே, தகவல் சேகரிக்கும் முயற்சியாகவே எடுத்துக் கொண்டேன்.

சட்டமன்ற நடவடிக்கையான, கேள்வி—பதில், வரவு—செலவுத் திட்டத்தின் மீதான விவாதங்கள், ஆளுநரின் உரைமீதான விவாதம், கல்வித்துறை மானியத்தின் மீதான விவாதங்கள், தனிப்பட்ட மசோதாக்களின் மீது விவாதம் என எல்லாப் பகுதிகளையும், ஏராளமான தொகுப்புகளிலிருந்து சேகரித்துள்ளேன். ஆங்கிலப் பேச்சுக்களுக்கு என்னால் இயன்றவரை, சொந்தமாகவே முக்கியமான பகுதிகளை மட்டும் மொழிபெயர்த்துக் கொடுத்திருக்கிறேன்.

1940—ஆம் ஆண்டிற்கு முன்பு, தமிழில் ஆற்றிய ஒரு சில உரைகளை அப்படியே தகவலுக்காக அட்டவணையில் கொடுத்திருக்கிறேன். அப்போது இருந்த உறுப்பினர்களுடைய பெயர்களையும், தகவல் முழுமையுற வேண்டும் என்ற நோக்கத்துடன் சேகரித்திருக்கிறேன். 1956—ஆம் ஆண்டிற்குப் பின் 1970—ஆம் ஆண்டுவரை, அரசு அலுவலகங்களில் தமிழ் எந்த அளவிற்குப் பயன்படுத்தப்

பட்டது; மற்ற வளர்ச்சி என்ன என்பன பற்றி 'மாநில நிருவாக அறிக்கை'யிலிருந்து சேர்த்துக் கொடுத்திருக் கிறேன்.

சட்டமன்ற நடவடிக்கையைத்தவிர, மாநிலத்தின் பல பாகங்களில் நடத்தப்பட்ட மாநாடுகள், இயக்கங்கள், இவற்றைப் பற்றிய தகவலும் சேர்க்க முடிந்திருந்தால் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்திருப்பேன். அதற்கு உரிய காலமும், மிகுந்த முயற்சியும், உழைப்பும் தேவை. அதனால் அப் பகுதியை நான் நாடவில்லை.

இன்றும் நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னாள் தமிழக முதல்வர் திரு பக்தவத்சலம், திரு சி. சுப்ரமண்யம், திரு அவினாசிலிங்கம் செட்டியார் ஆகி யோருடைய இன்றைய கருத்துகளை அறிந்து அவற்றையும் இவ்வறிக்கையில் சேர்க்க நினைத்தேன்; இயலவில்லை.

இன்னமும் நாம் ஒரு தீர்மானமில்லாத குழப்பத்தில் இருப்பதாகவே தெரிகிறது.

## துவக்கம்

1919—ஆம் ஆண்டின் மாண்ட்போர்டு அறிக்கையின் படி, இரட்டை ஆட்சிமுறை அமுலுக்கு வந்தது. சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அமைச்சர்களை ஆளுநரே நியமித் தார். அமைச்சர்கள் 'மாற்றப்பட்ட' துறைகளைக் கவனித் தார்கள். நான்கு பேர் கொண்ட நிருவாகக் குழுவினர் 'ஒதுக்கப்பட்ட' துறைகளுக்குப் பொறுப்பேற்றனர். சட்ட மன்றம், நிருவாகக் குழு உறுப்பினர்களையும், தேர்ந்தெடுக் கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களையும் கொண்டிருந்தது. அந்த உறுப்பினர்கள் மூன்றாண்டுகளுக்குப் பதவி ஏற்றிருந்தார்கள்.

1919—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டம், நிருவாகத்தில் பெருமளவு இந்தியர்களை ஈடுபடுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியது. ஆங்கிலப் பேரரசில்

பொறுப்புள்ள இந்திய அரசாங்கத்தை நிறுவுவதன் அவசியத்தை, இச்சட்டம் அடிப்படையாகக் கொண்டிருந்தது.

மேன்மைதங்கிய விஸ்கவுன்ட் கோஷன் அவர்கள் ஆளுநராக 1924—ஆம் ஆண்டு ஏப்ரல் 14—ஆம் நாள் பதவி ஏற்றுக் கொண்டார். நிருவாகக் குழுவில் இருந்த உறுப்பினர்கள்:

1)மாண்புமிகு கான்பகதூர் சர் முகம்மது ஹபிபுல்லா சாயபு பகதூர் (வருவாய்த் துறை) 1920—ஆம் ஆண்டு டிசம்பர் 17—ஆம் நாள் பதவி ஏற்றார்.

2)மாண்புமிகு சர் ஆர்தர் சௌலண்டு நாப், ஐ.சி.எஸ். (உள்துறை) 1922—ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் நாள் பதவி ஏற்றார்.

3)மாண்புமிகு சேத்துப்பட்டு, பட்டாபிராம இராமசாமி ஐயர் (சட்டம்) 1923—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12—ஆம் நாள் பதவியேற்றார்.

4) ஆர்.ஏ.கிரஹாம், ஐ.சி.எஸ்., (நிதித்துறை) 1924—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 24—ஆம் நாள் பதவியேற்றார்.

அப்பொழுது அமைச்சர்களாய் இருந்தவர்கள்:—

1) மாண்புமிகு பனகல் இராசா (உள்ளாட்சித் துறை) 1923—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19—ஆம் நாள் பதவியேற்றார்.

2)மாண்புமிகு இராவ் பஹதூர் ஏ.பி.பத்ரோ (கல்வி மற்றும் பொதுப்பணித்துறை)

3)திவான் பஹதூர் டி.என்.சிவஞானம் பிள்ளை (வளர்ச்சித் துறை) 1923—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19—ஆம் நாள் பதவியேற்றார்.

மேதகு சர் ஜார்ஜ் பிரெடரிக் ஸ்டான்லி, ஆளுநர் (12.11.1929)

1)சர் முகம்மது உஸ்மான் சாகிப் பகதூர் (உள்துறை) (30.3.1925)

2)சர் தாமஸ் மொயர், நிதித்துறை (27.4.1925)

3)திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர், சட்டம் (25.4.1928)

4)ஏ.ஒய்.ஜி.கேம்ப்பெல்,வருவாய்த்துறை(29.6.1929)

5)டாக்டர் பி.சுப்பராயன், கல்வியமைச்சர் (4.12. 1926)

6)எஸ்.முத்தையா முதலியார், ஆயத்துறை (கலால்) மற்றும் நல்வாழ்வு (சுகாதாரம்) (16.3.1926)

7)எம்.ஆர்.சேதுரத்தினம் ஐயர், விவசாயம் மற்றும் பொதுப் பணித்துறை, (16.3.1928).

நிருவாகக் குழு உறுப்பினர்களாகவும் அமைச்சர்களாகவும் இருந்த மற்றவர்கள்:—

1)என்.ஈ.மனோரம்பாங்க், வருவாய்த் துறை (27.12. 1924)

2)ஏ.அரங்கநாத முதலியார், விவசாயம் மற்றும் பொதுப் பணித்துறை (4.12.1926)

3)ஆர்.என்.ஆரோக்கியசாமி முதலியார், நல்வாழ்வு (4.12.1926)

1934—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15—ஆம் நாள் மேதகு எர்ஸ்கின் அவர்கள் ஆளுநராகப் பதவியேற்றார்.

1)சர் ஹோப்டவுன் ஸ்டோக்ஸ், நிதித்துறை (19.3. 1930)

2)இராவ் பகதூர் வெங்கடா ரெட்டி நாயுடு, சட்டம் (25.4.34)

3)ஏ.டி.பன்னீர்செல்வம், உள்துறை (16.8.1934)

4)சி.ஏ.சூட்டர், ஐ.சி.எஸ்., வருவாய்த்துறை (3.1. 1935)

5)மாண்புமிகு பொப்பிலி அரசர், உள்ளாட்சித் துறை (5.11.1932)

6)பி.டி.இராசன், பொதுப்பணித்துறை (5.11.1932)

7)எஸ்.குமாரசாமி ரெட்டியார், கல்வி மற்றும் ஆயத் துறை (5.11.1932)

1937—ஆம் ஆண்டு வரை இரட்டையாட்சி முறை தொடர்ந்தது. அதனால், நிருவாகக் குழு உறுப்பினர்களில் இருவர் ஆங்கிலேயர்களாகவும், மற்ற அமைச்சர்கள்

மூன்றிலிருந்து ஐந்து பேர் வரை, சென்னைச் சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், நியமிக்கப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். சட்டமன்றத்தில் ஆங்கிலத்தில் பேசுவது வற்புறுத்தப்பட்டது. தமிழிலோ 'மற்ற மொழியிலோ பேசும் உறுப்பினர்கள் விருப்பப்பட்டால் ஆங்கில மொழி பெயர்ப்பையும் சட்டமன்றத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம் என்ற நிலைமையும் இருந்தது. சென்னை மாநிலம், ஆந்திரத்தையும், திருவாங்கூர்—கொச்சி நீங்கிய கேரளப் பகுதியையும், தென், வடக்குக் கனரா மாவட்டங்களையும், ஒரிசா, ஆந்திரம் முதலான பல மொழி பேசக்கூடிய பகுதிகளையும் உள்ளடக்கி இருந்தது.

சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதிகளும் பலவாறாக இருந்தன. இந்தியக் கிறித்தவர்கள், ஆங்கிலேயர்கள், சென்னை வாணிகக் கழகம், சென்னைத் தோட்ட முதலாளிகள், நிலக்கிழார்கள், நாட்டுக் கோட்டை நகரத்தார் சங்கம், முகமதியர்கள், சென்னைப் பல்கலைக் கழகம் ஆகிய பல பிரிவுகளிலிருந்து உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டும், நியமிக்கப்பட்டும் மன்ற உறப்பினர்களாக இருந்தார்கள்.

சட்டப்படி ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற கட்டாயம் இருந்தது. ஆங்கிலத்தில் பேசக்கூடியவர்கள் உறுப்பினர்களாக இருந்தார்கள். ஆங்கிலத்தில் பேசினால் தான் புரிந்து கொள்ள முடியும் என்ற நிலைமை இருந்தது. அப்படியே வட்டார மொழியில் பேசினாலும், சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளில் பதிய வேண்டும் என்றால், ஆங்கில மொழி பெயர்ப்பு கொடுத்தாக வேண்டும்.

1921—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28—ஆம் நாள் திரு பி.சி. முத்துச் செட்டியார் என்ற உறுப்பினர் தமிழில் பேசிய பேச்சு வருமாறு:—

''இந்தச் சபையிடத்தில் அநேகம் பேர்கள் விஸ்தார

மாய்ப் பேசிவிட்டார்கள். கவர்ன்மெண்டார் விவசாய சம்மந்தப்பட்ட மட்டில் தங்கள் கடமை ஜல சப்ளைதான் என்று நீண்ட காலமாக நினைத்திருந்தார்களென்று தெரி கிறது. சுமார் 13,14 வருஷமாக (Agriculture) விஷயத்தை மேனாட்டுக்கொப்ப முன்னுக்குக் கொண்டு வர எண்ணினார்கள் என்று அறியலாம். ஆகையினால், இந்த கவர்ன்மெண்டார் புதிதாய்ச் செலவிட நேர்ந்தது நமக்கு இலாபகரமே. இதில் நான் ஆட்சேபிப்பதற்கு ரொம்ப தைரியம் வேண்டும். எந்த விவசாயி என்ன விதமான புதுப் படிப்பு படித்துப் புது மாதிரியான விவசாயம் செய்திருக் கிறார் என்று தெரியவில்லை. ஒரு விதமான ஸ்டேட் மெண்டு இருந்தாலொழிய நான் ஒத்துக் கொள்ள முடியாது. இந்த விஷயத்தில் 20,23 மெம்பர்கள் பலவித ஆட்சேபணை கொண்டு வந்து இருக்கிறார்கள். அவை எல்லாவற்றையும் சேர்த்து நான் பதில் சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன். தற்போதைய இங்கிலீஷ் பாஷையில் நான் அப்பியாச மில்லாதவனாய் இருக்கிறபடியால், இங்கு நடக்கும் நட வடிக்கைகளை எல்லோரும் அறியும்படியாய், சுயபாஷை யில் எப்பொழுது பேசும்படி ஏற்படுமோ தெரியவில்லை. அடிக்கடி எழுந்து பேச முடியாமல் இந்த டிமாண்டில் எல்லாப் பிராஞ்சையும் சேர்த்து ஒரே சமயத்தில் பேச வேண்டியவனாயிருக்கிறேன். இது வரையில் என்ன புதிய மாதிரி விவசாயம் செய்து விட்டார்கள்? 14 வருஷங்களில் செய்யாதது இனிமேல் செய்யப் போகிற மாதிரி இன்ன தென்று புலப்படவில்லை. 'தொட்டுக் காட்டியது வித்தை' யென்று பழமொழி. பழைய உபாத்தியாயர்கள் பலகையில் பள்ளந்தோண்டி, கையைத் தொட்டு வரைந்து காண்பிக் கிறது வழக்கம். மிகு புத்தி உடைய விவசாயிகளை நம்பிப் பெரும் பணங்களை இழந்திருக்கும் பெரும் குடும்பஸ்தர் களுக்கும், இந்த டிபார்டுமெண்டு லாபகரமானதே. எந்த விவசாயிகளுடைய பிள்ளைகள் இந்த விவசாய காலேஜில் வாசித்தார்களென்று தெரியவில்லை. ஆனால்

Agricultural Inspection Demonstration என்ற உத்தியோகங்கள் சம்பாதிக்கிறதற்கு உபயோகமாயிருக்கிறது. விவசாயிகள் பிள்ளைகள் எப்படியிருக்கிறதென்று கேட்டால், 5 வயது ஆனவுடன் ஆடு மேய்க்கவும், 7 வயது ஆனவுடன் எருமைக்கடா மேய்க்கவும், 8 வயதானவுடன் ஏர் உழவும் போய்விடுகிறார்கள். இந்த விவசாயக்காலேஜுக்கு எப்படி வருவார்கள் என்று தெரியவில்லை. ஒருகால் Compulsory ஆகியிருந்தால்தான் வருவார்கள். ம—ா—ா—ஸ்ரீ எஸ். சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் அமெரிக்கா என்றால் விசிடேபிள் என்று சொல்லியது போல், கம்போடியா காட்டன் என்றால் காய்கறி என்று நினைத்துக் கொள்வார்கள். லண்டன் அல்லது சீமைப்பருத்தி என்று சொன்னால்தான் தெரியும். ஆகையினால், இந்த டிபார்ட்மெண்ட் பணம் சம்பாதிக்கிறதற்காகவா அல்லது ஜனங்களுடைய ஆத்மாவை ரக்ஷிப்பதற்கு வேண்டிய உணவுப் பொருளை விருத்தி செய்வதற்கா என்பதை ஆனரபிள் மெம்பர்கள் ஒருவரும் யோசித்ததாகத் தெரியவில்லை. ஆனால், பஞ்சம் முற்காலத்தில் பணமில்லாக் கொடுமையால் ஜனங்களை வருத்தினது. இக்காலத்தில் தானியமில்லாது பஞ்சம் என்ற பெயரை வைத்து அனேகக் காலமாய் கவர்ன்மெண்டு பஞ்சப்படி கொடுக்கும்படியாகவும் நேர்ந்தது. பணம் சம்பாதிக்கும்படியான மாசூல்களை, அதாவது பருத்தி, கடலை முதலியவைகளை விருத்தி செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களே ஒழிய நெல்லுப் பயிரோடு புஞ்சைத் தானியங்களை விருத்தி செய்வதினால்தான் பஞ்சம் எப்பொழுதும் வராதென்று ஒருவராவது நினைக்கவேயில்லை. இந்த டிபார்ட்மெண்டு இப்பொழுது வேலை செய்கிற மாதிரியை ஆட்சேபிப்பதற்கு இடமாகிறது. அவர்கள் group-group ஆக ஒவ்வொரு ஜில்லாவிலும் குறைந்த சம்பளக்காரர்களைப் பல இடத்தில் instrument, manure விதை சகிதம் இருக்கும் படி

செய்து ஆங்காங்கு வேலை செய்து காண்பித்து, ஜனங்களை ஒரு மூன்று வருஷங்களில், தாங்கள் முன் வருஷங்களில் அடைந்த செலவு வரும்படியையும், இப்பொழுது அடைகிற செலவு வரும்படியையும் ஸ்டேட்மெண்டு மூலமாய்த் தெரியப்படுத்தினால், இந்த டிபார்ட்மெண்டின் முக்கிய மான அனுகூலமாகும். Manure விஷயமாக ஒருவித ஏற்பாடும் கவர்ன்மெண்டார் விவசாயிகளுக்குச் செய்ததாக இல்லவேயில்லை. சில விதைகள் sample விதைகளாகக் கொடுக்கிறார்கள். அவைகள் உயர்ந்த விதைகள்தான். ஆனால் பழைய விதைகளைப் பார்க்கிலும் புதிய விதை களை விதைப்பது லாபகரமென்று புலப்படவில்லை. கிராமத்தார்கள் இந்த டிபார்ட்மெண்டினால் முன்னேற்ற மடைந்த ஸ்திதியைச் சரியான ஸ்டேட்மெண்டு மூலமாய் கிராமத்தாரில் கௌரவஸ்தர்களுடைய கையொப்பத்தோடு ரிப்போர்ட் செய்ய வேண்டும். அப்படி ஒவ்வொரு ஜில்லா விலும் செய்து அந்த ஜில்லா திருப்தியாயிற்றதென்று close செய்ய வேண்டும்''. (இந்த உறுப்பினர் பலமுறை தொடர்ந்து தமிழிலேயே பேசி இருக்கிறார்).

தமிழிலும் மற்றத் தென்னக மொழிகளான மலையாளம், தெலுங்கு, கன்னடம், ஒரியா ஆகிய மொழி களிலும் ஆற்றப்பட்ட சொற்பொழிவுகள் மிகவும் குறைவு.

சட்டமன்றத்தில் 1921—ஆம் ஆண்டு முதல் 1937—ஆம் ஆண்டு வரை வெகுசில சொற்பொழிவுகளே தமிழிலும் மற்ற மொழிகளிலும் பேசப்பட்டன. ஆற்றிய உரைகளும் ஆங்கில உரைகளுக்கு ஈடாகா. சட்டமன்ற நடவடிக்கையில் கலந்து கொண்டு, தமிழில் பேசிய உறுப்பினர்களின் பெயர்கள் வருமாறு:—

திருவாளர்கள் பி.சி.முத்துச் செட்டியார்; எம்.சி. மதுரைப் பிள்ளை; சுவாமி ஏ.எஸ்.சகஜானந்தம்; கே. கிருஷ்ணசாமி நாயக்கர்; எஸ்.சுப்பிரமணிய மூப்பனார்; சையது இப்ரஹீம் சாயபு பகதூர்; கே.எஸ்.இராமசாமிக்

கவுண்டர்; அப்துல் அமீது கான் சாயபு, திருமதி வி.இலட்சுமி அம்மாள் ஆகியோர் ஆவார்கள்.

வெட்கப்பட்டுக் கொண்டு, தனக்கே தெரிந்த சில கருத்துகளை எடுத்துச் சொன்னது போலத்தான் ஒவ்வொரு சொற்பொழிவும் அமைந்திருந்தது. தூய தமிழில் பேசக் கூடிய திறமையும், பேச வேண்டும் என்ற தீர்மானமும் இருந்ததாகத் தெரியவில்லை. இவற்றிற்கு விதி விலக்காக, சுவாமி சகஜானந்தம் இருந்திருக்கிறார். தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரம் தொகுதியைச் சார்ந்தவர் அவர். அவருடைய பேச்சுகள் தெள்ளத் தெளிவாகவும், நீண்டும் இருந்தன. அவர், எந்தத் தலைப்பின் மீதும் தீர்க்கமாகப் பேசும் திறமையும் உடையவராகத் திகழ்ந்திருக்கிறார். சில உறுப்பினர்களுடைய பேச்சுகள் தனியே கோக்கப் பட்டுள்ளன.

தமிழ் பேசும் பல முக்கியத் தலைவர்கள் 1921—ஆம் ஆண்டிலிருந்து 1937—ஆம் ஆண்டு வரை சிலர் தொடர்ந்தும், சிலர் அவ்வப்பொழுதும் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள். சட்டமன்ற நட வடிக்கைகளும் நிருவாகமும் தமிழில் நடைபெற வேண்டு மென்று பல நேரங்களில் கேள்வி மூலமும், தனித் தீர் மானங்கள் இயற்றுவதன் மூலமும் தெரிவிக்க முன் வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட தீர்மானங்களெல்லாம் கூட, ஆங்கிலத்திலேயே விவாதித்தப்பட்டுள்ளன. அவ் விவாதங்களில் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். 1928—ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகவிருந்து, தமிழைத் தாய்மொழியாக அல்லது தமிழை நன்றாகப் பேசும் திறமைபெற்றிருந்தவர்களாக விளங்கிய திருவாளர்கள் :—

1. டாக்டர் பி.சுப்பராயன்; 2.எம்.ஏ.மாணிககவேல் நாயக்கர்; 3.என்.சிவராஜ்; 4.டபுள்யூ. பி.ஏ.சௌந்தரபாண்டிய நாடார்; 5.கே.இராமச்சந்திர படையாச்சி; 6.எஸ்.அற்புத

சாமி உடையார்; 7.ஏ.எம்.எம்.முருகப்பச் செட்டியார்; 8.எஸ்.சத்தியமூர்த்தி; 9.இராமநாதபுரம் அரசர்; 10.டி.ஏ.இராமலிங்க செட்டியார்; 11.ஏ.இராமசாமி முதலியார்; 12.எம்.ஆர்.சேதுரத்தினம் அய்யர்; 13.டி.சிவ ஞானம் பிள்ளை; 14.சாவடி சுப்ரமண்யப் பிள்ளை; 15.எல்.டி.சுவாமிக்கண்ணுப்பிள்ளை; 16.பி.தியாகராயச் செட்டியார்.

குறிப்பிட்ட ஒரு சில தலைவர்கள் மட்டும் மேலே சுட்டிக் காட்டப்பட்டுள்ளனர். தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பல முகமதிய உறுப்பினர்கள்பற்றிய சரியான செய்தி கிடைக்காததனால் மேலே இணைக்கவில்லை.

1921—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31—ஆம் நாள் 'மானியம் 33—பலதரப்பட்டவை' என்ற மானியக் கோரிக் கையின் விவாதத்தில் கலந்து கொண்ட திரு கே.எஸ். வெங்கடராம அய்யர், ஒரு வெட்டுத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். இங்கிலாந்திலிருந்து இந்தியாவிற்கு வரும் அதிகாரிகள், எந்தவிதத் தூண்டுதலோ ஊக்கத் தொகையோ இல்லாமல் இந்திய மொழிகளைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார். இந்திய மொழி களைக் கற்றுக் கொள்வது அதிகாரிகளின் கடமையென்றும், ஆகவே, எந்தவித் ஊக்கத் தொகையும் அளிக்கக் கூடாது என்றும் சொன்னார்.

பதிலளித்துப் பேசிய நிதி உறுப்பினர் திரு சி.ஜி. தாடண்டர் அவர்கள் ஐரோப்பிய அதிகாரிகள் மட்டு மல்லாது இந்திய அதிகாரிகளுக்கும் மொழிகளைக் கற்பதற் கான ஊக்கத் தொகை, பல வருஷங்களாகக் கொடுக்கப் பட்டு வருவதாகவும், இதைக் கவுன்சில் குறைக்கக் கூடாது என்றும் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சர் லயனல் டேவிட்சன் அவர்கள், பல வருடங்களுக்கு முன்பு சமஸ்கிருதமொழி பயின்றதற்காகத், தாமே ஊக்கத் தொகை வாங்கியதாகவும், சமஸ்கிருத

மொழியைக் கற்றுக் கொள்வது தம்முடைய பொதுவான அலுவல்களுக்குத் தொடர்பானது இல்லை என்றும், இருப்பினும் சமஸ்கிருதம் கற்றுக் கொண்டதனால் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் தன்னுடைய பணியைத் திறமையாக ஆற்றுவதற்கு வசதியாக இருந்ததெனவும் குறிப்பிட்டார். சாதாரணப் பேச்சு வழக்கில் இருக்கிற மொழியுடன் படிக்கின்ற மொழியில் சிறந்த புலமையையும் அடைந்தால்தான் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. கொச்சையான பேச்சு மொழியை மட்டும் புரிந்து கொள்வதனால், நிர்வாகத்திற்கு உதவியாக இருக்கும் என்பது தவறான கருத்தாகும் என்றார்.

''ஒரே மொழியைப் பேசுகின்ற மாநிலத்தில் நாம் வாழ்ந்தால், கேசவப் பிள்ளையும் அவர் போன்றவர்களும் குற்றம் கண்டுபிடிப்பதில், ஊக்கத் தொகை அளிக்காமலிருப்பதில் அர்த்தம் உண்டு. சென்னை மாகாணத்தில் பல மொழிகள் உள்ளன. ஆகவே, என் பொறுப்பிலுள்ள சில பகுதியின் மொழிகளான கோயா, கோண்டு, சவாரா முதலான மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கும், மற்ற மொழிகளைக் கற்றுக் கொள்வதற்கும், ஊக்கத் தொகை கொடுத்து ஊக்குவிப்பது மிகவும் அவசியமானதாகும்'' என்றார்.

அவைத் தலைவர், திரு வெங்கட்ராம அய்யரைப் பார்த்து, அவருடைய வெட்டுப் பிரேரணையைத் திரும்பப் பெற விருப்பப்படுகிறாரா என்று கேட்க, அவர் தம் தீர்மானத்தை வற்புறுத்துவதாகச் சொன்னார். வெட்டுப் பிரேரணை அவையின் முடிவுக்கு விடப்பட்டதில், 15 உறுப்பினர்கள் ஊக்கத்தொகை அளிக்கக் கூடாது என்றும், 40 உறுப்பினர்கள் அளிக்க வேண்டும் என்றும் வாக்களித்தனர்.

1921—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 4—ஆம் நாள், சட்ட மன்றத்தில் இராவ் பகதூர் சி.வெங்கடரங்கா ரெட்டி

அவர்கள் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதாவது:—

'சட்டமன்ற நடவடிக்கைகளை வட்டார மொழிகளில் மொழி பெயர்த்து, சுருக்கமாக அதன் சாராம்சத்தை உறுப்பினர்களுக்கு மாவட்ட கெஜட்டுகளுடன் விநியோகிக்க வேண்டும்' என்பதாகும்.

அவர் தீர்மானத்தின் மீது தொடர்ந்து பேசியதாவது:—

''சட்டமன்றத்தின் நடவடிக்கை நாட்டிலுள்ள எல்லா மக்களுக்கும் தெரியவேண்டும் என்ற எண்ணத்தில்தான் இத்தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்திய நாட்டு மக்கள் அரசாங்கத்தை நடத்துவதில் பயிற்சி பெற வேண்டும் என்பதுதான் அரசாங்கம் புதிய சீர்திருத்தங்களைப் புகுத்தியதின் நோக்கமாகும். சட்டமன்ற நடவடிக்கைகளை வட்டார மொழிகளில் பிரசுரிப்பதன் மூலம்தான் சாதாரணக்குடிமகனும், அரசாங்க நடவடிக்கைகளைப் புரிந்து கொண்டு ஈடுபாடு காட்டுகிறான். இதுதான் பயிற்சி கொடுப்பதற்குரிய சிறந்த முறையாகும். இந்த அரசாங்கத்தைப் பற்றியும் அமைச்சர்களைப் பற்றியும் ஒத்துழையாமை இயக்கத் தலைவர்கள் தவறான மற்றும் உருக்குலைந்த தகவல்களைச் சொல்லி, பொதுமக்களைத் திசை திருப்புகிறார்கள். கொழுத்த சம்பளத்தை வாங்கிக் கொண்டு பொது மக்களுக்கு அமைச்சர்கள் எந்தவித நன்மையும் செய்யவில்லை என்ற தவறான தகவலும் மக்கள் மத்தியிலே பரப்பப்படுகிறது. ஒத்துழையாமை இயக்கத்தைத் தடுத்து நிறுத்தவும் தொலைதூரத்துக் கிராமத்திலுள்ள மக்கள் நாம் செய்கின்ற நல்ல காரியங்களைப் புரிந்து கொள்ளவும், சட்டமன்ற நடவடிக்கைகளை வட்டார மொழியில் மொழி பெயர்த்து, சுருக்கமாக விநியோகிக்க வேண்டும். ஒத்துழையாமை இயக்கத்தைச் சார்ந்தவர்கள் கிராமங்களில் குறுக்குத்தனமாகச் செய்திகளைப் பரப்பி வருகிறார்கள். இப்படிப்பட்ட கூலிப் பட்டாளத்தின் பேச்சுகளை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். நம்முடைய

விளம்பரத்துறை ஓரளவிற்கு நம் பேச்சுகளை மொழி பெயர்த்து, கிராமங்களில் விநியோகம் செய்கிறார்கள் என்றாலும், இது போதாது'' என்றார்.

மேலே கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை வழி மொழிந்து திரு சி.எஸ்.வெங்கடரமண அய்யர் பேசினார். செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஜட்டில் வெளியாகிற மொழி பெயர்க்கப்பட்ட விவரங்கள் இனிமேல் நிறுத்தப் படும் என்று தான் அறிவதாகக் குறிப்பிட்டு, இனிமேல் ஆண்டிற்கொரு முறையோ ஆறு மாதத்திற்கொரு முறையோ இப்படிப்பட்ட பேச்சுகளின் சுருக்கங்கள் அச்சிடப்பட்டுச் கோப்புகளாகக் கொடுக்கப்பட்டாலும், அது போதாது என்றார். அப்படியே கெஜட்டில் வெளியானாலும், விலை கொடுத்து வாங்கி மக்கள் படிக்க மாட்டார்கள் என்றார். கெஜட்டுகளும், நீண்ட நாள்களுக்குப் பின்பே வெளிவரும்; அதனால் உண்டாகும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும் என்றார். இங்கிலாந்து பாராளுமன்றம், மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிறது. ஆனால், இந்த நாட்டில் சட்டமன்ற உறுப்பினர்களை அரசும், மக்களும் சரியான முறையில் நடத்துவதில்லை. இங்கிருக்கும் செய்தித் தாள்களும், சட்ட மன்ற நடவடிக்கைகளை அப்படிப் பிரசுரிப்பதும் இல்லை என்றார். தன்னைப் போன்ற உறுப்பினர்கள் சட்டமன்றத் தில் ஆற்றுகிற பணியை மக்கள் தெரிந்து கொள்ளும் வகையில் தங்களுடைய பெயருடன் பேச்சையும் பிர சுரித்து, கெஜட்டுகள் விநியோகிக்கப்பட வேண்டும் என்றார்.

அடுத்துப் பேசிய திரு கே.சீனிவாச அய்யங்கார் அவர்கள், 'இதைப் போன்ற தீர்மானம் 1919—ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் விவாதத்திற்கு வந்தது' என்றும், 'இது தேவையில்லாத ஒன்று என்று அப்பொழுது தீர்மானிக்கப் பட்டது' என்றும் குறிப்பிட்டார். ''வட்டார மொழிகளில் மொழி பெயர்த்து வெளியிடுவது இப்பொழுதும் தேவை யில்லாத ஒன்று என்றுதான் நானும் கருதுகிறேன். இதற்காக

அதிகமான சிலவாகும். நாம் பேசிய பேச்சுகள், ஆறு வாரங்களில் ஆயிரம் பக்கங்களுக்கு மேல் உள்ளது. இவ்வளவையும் மொழி பெயர்த்துப் பொது மக்களுக்குக் கொடுப்பதனால், அது எவ்வாறு பயன்படப் போகிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஆகவே, முக்கிய மான் பேச்சுகளையும், தலைப்புகளையுழ் மட்டுமே மொழி பெயர்த்து அச்சிடுவது பயனுள்ளதாக இருக்குமென்று கருதுகிறேன்'' என்றார்.

திவான் பகதூர் கிருஷ்ணன் நாயர்:—

''ஆங்கிலம் தெரிந்தவர்கள், சட்ட மன்ற நடவடிக்கைகளைச் செய்தித் தாளில் ஆங்கிலத்திலேயும், மற்ற மொழிப் பத்திரிகைகளில் சுருக்கிய பேச்சுகளையும் படித்துத் தெரிந்து கொள்கிறார்கள். செய்தித் தாளிலேயே பொது மக்கள் அன்றாட நடவடிக்கைகளைப் படித்துத் தெரிந்து கொள்வதால், காலந்தாழ்த்தி வரும் கெஜட்டைப் புரட்டிப் பார்க்க விருப்பப்பட மாட்டார்கள். இதற்காக ஆகும் சிலவும் வெள்ளளைத்தாளும் வீணானது'' என்றார்.

''இம்மாநிலத்தில் ஐந்தாறு வட்டார மொழிகள் இருப்பதனாலும், படித்தவர்களின் எண்ணிக்கை ஐந்து சத வீதமே இருப்பதனாலும், சட்டமன்ற நடவடிக்கைகளை மொழி பெயர்த்து வெளியிடுவது வீணானது; தேவை யில்லாதது'' என்று ராவ்பகதூர் டி.நம்பெருமாள் செட்டி குறிப்பிட்டு இத்தீர்மானத்தை எதிர்ப்பதாகச் சொன்னார்.

திவான் பகதூர் கேசவப் பிள்ளை:—

''சட்டசபையின் நடவ்டிக்கைகளின் சாராம்சத்தை வெளியிடுவதனால், பொதுமக்களுக்கு மட்டுமல்லாமல், இச்சபையிலே உள்ள உறுப்பினர்களுக்கும் உதவியாக இருக்கும். கவுன்சிலில் நடைபெறும் நிகழ்ச்சிகள் கெஜட்டிலும் பிரசுரிக்கப்படவில்லை என்றால், சட்டமன்ற' உறுப்பினர்களுக்கும் செய்தி கிடைக்காமல் திண்டாடு

வார்கள். சட்டமன்றத்தில் சொற்பொழிவை உறுப்பினர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றால், தங்களுடைய தொகுதிக்குச் சென்று மக்களிடம் எதைப்பற்றிப் பேசுவார்கள்?. ஆகவே, கவுன்சில் பேச்சுக்களின் சாராம்சத்தைப் பிரசுரிக்க வேண்டும்'', என்றார். சட்டமன்றத்தில் எடுத்த வாக்கெடுப்பில் இத்தீர்மானம் தோல்வி அடைந்தது.

19-1-1922 இல் திரு டி.சிவசங்கரம் பிள்ளை அவர்கள் சட்டமன்றத்தில் கிராமத்து மக்கள் பயனடையும் வகையில் அரசின் பலவித சட்டப் புத்தகங்களை வட்டார மொழியில் மொழி பெயர்த்தல் தொடர்பாக,

1) வட்டார மொழிகளில் கிராமப் பஞ்சாயத்துச் சட்டம், ஆரம்பக் கல்விச் சட்டம், கிராம நீதிமன்றச் சட்டம், உள்ளாட்சித்துறைச் சட்டம் மற்றும் கிராமக் கணக்குகளின் கையேடு ஆகியவற்றை வட்டார மொழிகளில் மொழிபெயர்த்தல்.

2) மொழி பெயர்க்கப்பட்ட சட்டப் புத்தகங்களை விளம்பரத் துறையின் மூலமாக மலிவான விலையில் விற்பது;

3) ஆண்டுக்கொரு முறை தேர்வு நடத்தி, வெற்றி காணும் நபர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் —என்று தன்னுடைய தீர்மானங்களை முன்மொழிந்தார்.

அவர் தொடர்ந்து பேசும்பொழுது குறிப்பிட்டதாவது:—

''இப்படிப்பட்ட சட்டங்கள் ஆங்கிலத்தில் இருப்பதனால் பலர் படிப்பதில்லை. கிராமத்தில் இருக்கும் மக்கள் இச்சட்டத்தைப் படித்து புரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டங்களைப் புரிந்து கொள்ளாததனால்தான் பொறுப்பற்ற தன்மை கிராம மக்களிடையே நிலவுகிறது. பொது வாழ்க்கையை முன்னேற்றம் செய்வதற்கும், மக்கள் நலனை ஒழுங்கு செய்வதற்குரிய கருத்துக்களும் இப்படிப்பட்ட சட்டப் புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன.

மக்களுடைய அறிவையும் நேரத்தையும் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு வீணடிக்கும் முயற்சியில் ஒத்துழையாமை இயக்கம் செய்து' வருகிறது. இச்சட்டங்களை மொழி பெயர்ப்பதனால் மக்களுடைய சக்தி நல்ல முறையில் செலுத்துவதற்கு ஏதுவாகும் என்று நான் கருதுகிறேன். ஆகவே, ஒவ்வொரு சட்டப் புத்தகத்திற்கும் விளக்கமும் முன்னுரையும் கொடுத்தால் மக்கள் அவற்றை நேரான முறையில் புரிந்து கொண்டு செயல்பட முடியும் என்றார். கல்வி முன்னேற்றத்திற்காகத் துணைவரி ஒன்று விதிக்கப் படுகிறது. இவ்வரியை அரசு ஏன் விதிக்க வேண்டும் என்று ஆங்கிலம் படித்தவர்களும் வழக்கறிஞர்களும் கேட்கிறார்கள். இச்சட்டங்களை அவர்கள் படிக்காத காரணத்தினால் சந்தேகம் ஏற்படுகிறது. படித்தவர்கள் மத்தியிலே நான் விளக்கம் கொடுத்தால் அதை ஏற்றுப் புரிந்து கொள்கிறார்கள். கிராம நீதிமன்றங்களின் சட்டம், கிராமப் பஞ்சாயத்துக்கள் சட்டம் முதலியவைகளும் மொழி பெயர்க்கப் பட்டால் மக்கள் புரிந்து கொண்டு அதற்கேற்ப கிராமத்து வாழ்க்கையிலும் மாறிவரும் சூழ்நிலைக்கு ஏற்ப அவர்கள் தங்களை இணைத்துக் கொள்வார்கள். பொறுப்புள்ள அரசை உருவாக்குவதில் இது மிகவும் முக்கியமான கட்டமாகும்'' என்றார் அவர்.

திரு அரங்கநாத முதலியார் தீர்மானத்தை வழிமொழிந்து பேசினார்:—

''நம் நாட்டு மக்களுக்கு வாக்குரிமை அளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே, வட்டார மொழிகளே தெரிந்த பலர் ஊராட்சிகளிலும் ஜில்லா போர்டுகளிலும் பதவி வகிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, கர்நூல் மாவட்டத்தில் இரண்டு தாலுக்கா போர்டு தலைவர்களுக்கு ஆங்கிலமே தெரியாது. அவர்களுக்கே இந்த நிலைமையென்றால், தாலுக்கா போர்டுகளில் பதவி

வசிக்கும் உறுப்பினர்களில் பல பேர் வட்டார மொழி களையே தெரிந்தவர்கள். அவர்கள் தங்களுடைய அலுவல் களில் சரியான ஈடுபாடு காட்ட வேண்டுமென்றால் சட்ட திட்டங்களை வட்டார மொழிகளில் மொழி பெயர்த்தே ஆகவேண்டும். இது மிகவும் அவசரமானதும் கூட'' என்றார்.

மாண்புமிகு திரு கே.சீனிவாச அய்யங்கார் (நிருவாகக் குழு உறுப்பினர்—சட்டம்):—

'சட்ட திட்டங்களை வட்டார மொழிகளில் மொழி பெயர்ப்பதனால் எந்தவிதப் பயனும் ஏற்படப் போவ தில்லை. சரியான அறிவுள்ள எவரும் இக்கருத்தை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். தேர்வுகள் வைப்பதானாலும், பரிசுகள் கொடுப்பதானாலும் இம்மாற்றத்தை ஒப்புக் கொள்ள எவரும் விரும்ப மாட்டார்கள். உறுப்பினர்களே செய்ய வேண்டிய காரியத்தை அரசின் பொறுப்பாக்குவது சரியில்லை'' என்றார்.

திரு டி.ஏ.இராமலிங்க செட்டியார்:—

''சட்டங்களை வட்டார மொழிகளில் மொழி பெயர்ப்பதற்குரிய அவசியம் இப்பொழுது இருக்கிறது. ஒத்துழையாமை இயக்கம் மிகவும் வேகமாகப் பரவி வருவதாகச் சொல்லப்படுகிறது. மக்களுக்குப் பலவித உரிமைகளும், வசதிகளும் இருப்பது இப்பொழுது தெரியாமல் இருக்கிறது. மக்கள் தங்களுக்குப் பல அதிகாரங் கள் இச்சட்டங்களினால் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று தெரிந்து கொண்டார்களானால், ஒத்துழையாமை இயக்கமும் தடுத்து நிறுத்தப்படும். தலைமை நீதிமன்றத்தின் தீர்ப்புகளைத் தெரிந்து கொள்ளாத காரணத்தினால், கீழ் மட்டத்திலுள்ள கிராம நீதிமன்றங்களில் ஒன்றுக்கொன்று முரணான தீர்ப்புகள் வழங்கப்படுகிறது. சாதாரண

மக்களுக்குச் சட்டத்தின் சரியான வாசகங்கள் தெரியாத நிலைமையிலும் தலைமை நீதிமன்றத்திற்குச் சென்று செலவு செய்யமுடியாத சங்கடத்திலும் பல கஷ்டங்களுக்குக் கிராம மககள் உள்ளாக்கப்படுகிறார்கள். ஆகவே, இப்படி மொழிபெயர்ப்பதால்,. அதிகமான சிலவும் ஆகாது'' என்று குறிப்பிட்டு மொழிபெயர்ப்புக்கு ஆவன செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு சட்ட உறுப்பினர் பதிலளித்த பிறகு இத்தீர்மானம் அவையின் முடிவிற்கு விடப்பட்டது. தீர் மானத்தை ஆதரித்து வாக்களித்தவர்களில் ஒரு சிலர் பெயர்கள் வருமாறு:—

1) வி.அப்பாசாமி வாண்டையார்; 2) டி.ஏ.இராமலிங்கம் செட்டியார்; 3) ஓ.தணிகாசலம் செட்டியார்; 4) பி.டி. இராசன்; 5) டபிள்யூ பி.ஏ. சௌந்திரபாண்டிய நாடார்; 6) ஆர்.கே.சண்முகம் செட்டியார்; 7) எஸ்.அற்புதசாமி உடையார்; 8) எ.டி.பாமர்; 9) எம்.சி.இராசா.

தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்தவர்கள்:—

1) சர் சார்லஸ் தாடண்டர்; 2) கே.சீனிவர்ச அய்யங்கார்; 3) எஸ்.டி.சண்முகம் பிள்ளை; 4) பி.சுப்பராயன்; 5) எஸ். சோமசுந்தரம் பிள்ளை; 6) எம்.இரத்தினசாமி; 7) இராம நாதபுரம் இராசா.

இத்தீர்மானத்தின் மீது எடுக்கப்பட்ட வாக்கெடுப் பில் 48 உறுப்பினர்கள் ஆதரித்தும் 22 உறுப்பினர்கள் எதிர்த்தும் வாக்களித்தார்கள். 1922—ஆம் ஆண்டு சனவரி மாதம் 20—ஆம் தேதி டாக்டர் கில்பர் ஸ்லேடர் அவர்கள் ஒரு தீர்மானத்தைச் சட்டமன்றத்தின் முன் கொண்டு வந்தார்., அதாவது:— ''சென்னை மாகாணத்திலுள்ள மொழிகளுக்குப்

பொதுவான எழுத்தைத் தயாரிக்கவும், அப்படிப்பட்ட எழுத்து அவசியமானதா? அதற்கு வழிவகை என்ன என்று ஆராய்ந்து சொல்ல ஒரு குழுவை ஏற்படுத்த அரசைக் கேட்டுக் கொள்வது''

இத்தீர்மானத்தின் மீது தொடர்ந்து அவர் பேசியதாவது:

''இந்தியா முழுவதற்கும் உள்ள மொழிகளுக்குப் பொதுவான எழுத்து அவசியம் என்பதை உணர்ந்திருந்தாலும், அந்த வகையில் முன்னேற்றம் ஏற்படாததற்குக் காரணம், பல பொதுவான எழுத்துக்கள் இருக்கக்கூடிய வாய்ப்புகளினால்தான். இப்பொழுது இருக்கக்கூடிய மொழிகளில் ஏதாவது ஒன்றிற்குரிய எழுத்தை எடுத்துக் கொண்டு, தேவையான மாற்றங்களுடன் நாம் அதைப் பயன்படுத்திக் கொள்ளலாம். இன்றைய சூழ்நிலையில் பொது எழுத்து தேவைதானா; அல்லது அதை எப்படிப் புகுத்துவது என்பதல்ல. எல்லோரையும் திருப்தி செய்யக் கூடிய பொதுவான எழுத்துக்களைத் தேர்ந்தெடுப்பதிலும், அப்படித் தேர்ந்தெடுக்கக்கூடிய எழுத்து எதுவாக இருக்க வேண்டும் என்பதுந்தான் இன்றைய சிக்கல். இந்திய நாட்டின் வளர்ச்சி பலவிதமான எழுத்துக்கள் இருப்பதினால் பெரிதும் தடைப்படுகிறது. இதனால் கலவித் துறையிலும், புத்தகங்களைப் பதிப்பிப்பதிலும் வீண் சிலவு ஆகின்றது. வட்டார மொழிகளில் பாடப் புத்தகங்களைத் தயாரிப்பதிலும் அச்சிடுவதிலும் தடை ஏற்பட்டுப் பணமும் நேரமும் வீணாகின்றன. தமிழுக்கும் தெலுங்குக்கும் பொதுவான எழுத்தைப் பயன்படுத்தினால் தமிழ் தெரிந்தவருக்குத் தெலுங்கு படிப்பதும், தெலுங்கு தெரிந்தவருக்குத் தமிழ் படிப்பதும் எளிதான காரியமாகும். இதனால், புத்தகங்களுடைய எண்ணிக்கை விரிவடைந்து அச்சிடுவதற்கு எளிதாகும். சாதாரண மக்கள் கல்வியறிவு பெறவும், நாட்டின் பண்பாட்டை வளர்க்கவும் பொதுவான

எழுத்து இருந்தால்தான் முடியும். சீனாவிலும் சப்பானிலும் எழுத்துச் சீர்திருத்தம் வெகுவாக முன்னேறியிருக்கிறது. ஆகவே, ஒரு குழுவை அமைத்துப் பொதுவான எழுத்தைத் தேர்ந்தெடுப்பதனால் சில சங்கடங்கள் வந்தாலும் இப்படிப்பட்ட முயற்சி மிகவும் அவசியமானதாகும்'' என்றார்.

மாண்புமிகு திரு கே.சீனிவாச அய்யங்கார் (சட்ட உறுப்பினர்) 20.1.22:—

''1912—ஆம் ஆண்டிலேயே பொதுவான எழுத்தின் அவசியத்தைப் பற்றி ஆராயப்பட்டது. ரோமன் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு வட்டார மொழிகளை எழுதலாம் என்ற முயற்சி செய்யப்பட்டது. இந்தக் கருத்து பல நிபுணர்களுக்கும் சொல்லப்பட்டு ஆராயப்பட்டது. ஆனால், ஒருமித்த கருத்து எழவில்லை. பெரும்பான்மையோர் ரோமன் எழுத்தை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றார்கள். தேவநாகரியைப் பயன்படுத்தலாம் என்றும் கருதப்பட்டு, பின்பு கைவிடப்பட்டது . . . . என்னுடைய் தனிப்பட்ட அனுபவத்திலிருந்து சொல்லப் போனால், செட்டியார்கள் ஆங்கில எழுத்தைப் பயன் படுத்தி தமிழ் மொழியில் தந்தி கொடுப்பதும் உண்டு. சர் ஹென்றி ஸ்டோன், கல்வித்துறை இயக்குநராக இருக்கும் பொழுது இந்த முயற்சியில் ஈடுபட்டு, ரோமானிய எழுத்துக்களைப் பயன்படுத்தி வட்டார மொழிகளில் பாடங்களைத் தயாரித்து, பள்ளிகளில் பாடமாகப் போதித்தல் வேண்டும் என்றார். இந்த முயற்சியை நம் மாணவர்களும் ஆசிரியர்களும் வரவேற்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன். பல அறிஞர்களின் கருத்தையும் கேட்டறிந்த பின், நமக்குத் தெரிந்தது என்னவென்றால், திராவிட மொழிகளில் எழுத்துக்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது; ஒவ்வொரு மொழியிலுள்ள எழுத்துக்

களுக்கும் ஓசையில் வேறுபாடு உள்ளது. பொதுவான எழுத்தாக ரோமானிய எழுத்தைப் பயன்படுத்தினால், குழப்பமேற்பட்டு மொழியின் உண்மையான பொருள் மறைந்து விடும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்த பின்பும் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று சட்ட மன்றம் கருதினால், அவ்வாறு அமைப்பதிலே எந்தத் தடையும் இல்லை'', என்றார்.

திரு.ஏ.டீ.பாமர்:—

''நான் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கிறேன். பொதுவான எழுத்தைத் தயாரிக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபடக் கூடாது என்பது என் கருத்து. பேராசிரியர் டாக்டர் ஸ்லேடர் போன்றவர்கள் இந்தப் பணியை எடுத்துச் செய்யலாம். அதில் வெற்றி பெற்றால் பொது மக்களும் இதை வரவேற்று ஒப்புக் கொள்வார்கள். மேலும், பொதுவான எழுத்துக்களை உருவாக்குவதனால், பள்ளியில் பயிலுகிற மாணவன் இரண்டு வகையான எழுத்துக்களைக் கற்றுக் கொள்ளக்கூடிய நிர்ப்பந்தத்தில் வைக்கப்படுவான். ரோமானிய எழுத்தில் எழுதப்பட்ட இந்துஸ்தானி பாட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு பாடலை ஒரு முஸ்லீம் நண்பருக்குப் பாடிக் காட்டினேன். பாட ஆரம்பித்தவுடனேயே அவர் சிரித்தார். ஏனென்றால், ரோமானிய எழுத்தில் இருந்த இந்துஸ்தானி பாடலை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆகவே, பொது எழுத்தாக எதைப் புகுத்தினாலும் அம்முயற்சி சிக்கலாகவும் கடினமாகவும் ஆகிவிடும்'' என்றார்.

திரு.எஸ்.டி. சண்முகம்பிள்ளை:—

''நாமிருக்கும் காலக்கட்டத்தில் பொதுவான எழுத்தின் தேவையைப் பற்றிப் பேச வேண்டிய அவசியமே இல்லை. சாதாரண மக்கள் கல்வியறிவு இல்லாதவர்களாகவும், அறியாமையிலும் மூழ்கிக் கிடப்பதாலும்,

தங்களுடைய வட்டார மொழியையே படிக்காத காரணத்தினாலும், வேறு மொழியிலுள்ள எழுத்தைக் கற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் அவர்கள் இல்லை. நம்முடைய மக்களுக்குக் கொடுக்கப்படும் கல்வியறிவே இதனால் தடைப்படும். ஆகவே, இத்தீர்மானத்தை நான் எதிர்க்கிறேன்'' என்றார்.

வாக்கெடுப்பில் இத்தீர்மானம் தோல்வியடைந்தது. 1925—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5—ஆம் நாள் திரு.கே. இரகுசந்திர பல்லால் என்பவர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அத்தீர்மானமாவது:—

'தாலுக்கா மற்றும் ஜில்லா போர்டு கூட்டங்களிலும் நகரமன்றக் கவுன்சில் கூட்டங்களிலும் வட்டார மொழி களையே பயன்படுத்துவதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடு களையும் செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்ள இச்சட்டமன்றம் தன் பரிந்துரையை அனுப்பக் கோரும் தீர்மானம்'.

''இத்தீர்மானத்தை முன் மொழிந்து திரு இரகுசந்திர பல்லால் கன்னட மொழியிலே சொற்பொழிவாற்றினார். அவரைத் தொடர்ந்து பேச முன்வந்த திரு அரங்கநாத முதலியார், தான் கன்னட மொழியில் பேச விரும்புவதாகத் தெரிவித்தார். சட்டமன்றப் பெருந்தலைவர், திரு அரங்க நாத முதலியாரின் வேண்டுகோளை நிராகரித்ததோடல்லா மல், ஆங்கிலத்தைத் தவிர வேறு எந்த மொழியில் வேண்டு மென்றாலும் தன்னுடைய அனுமதியைப் பெற்ற பின்புதான் பேசமுடியும் என்றார். அப்பொழுது திவான் பகதூர் கேசவப்பிள்ளை அவர்கள் எழுந்து ''கன்னடத்தில் உறுப் பினர்கள் பேசினால் கன்னடத்திலேயே அமைச்சர் பதில் அளிப்பார்களா'' என்று கேட்டார்.

அதற்குப் பதிலளித்த சட்டமன்றப் பெருந்தலைவர் அவர்கள், ''சட்டமன்ற விதி 14—இன் படி ஆங்கிலம் தெரியாதவர்களை உறுப்பினர்களின் வட்டார மொழியில் பேசுவதற்கு அனுமதிக்கலாம். அதே போன்று அமைச்சர்கள்

ஆங்கிலத்தில் தெளிவாகப் பேச முடியாது என்ற நிலைமையிருந்தால்தான் அவர்களுடைய வட்டார மொழியில் பேசுவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்" (சிரிப்பு) என்றார். மறுபடியும் திரு அரங்கநாத முதலியார் குறுக்கிட்டு, தன்னைக் கன்னட மொழியில் பேசுவதற்கு அனுமதிக்க வேண்டுமென்றும், ஏனென்றால், பொருளை முன்மொழிந்தவர் கன்னடத்தில் பேசினால்தான் புரிந்து கொள்வார் என்றும் கூறினார்.

சட்டதன்றத் தலைவர் விளக்கமளித்துப் பேசும்பொழுது, சட்டமன்ற விதி 14—இன் படி, சட்டமன்ற நடவடிக்கைகள் ஆங்கிலத்தில்தான் நடைபெற வேண்டும் என்றும், ஆனால் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசிப் பழக்கமில்லாத உறுப்பினர்கள் அதே சமயம் சட்டமன்றப் பெருந்தலைவருடைய கருத்தில் ஓர் உறுப்பினரை அவரை நன்றாகத் தெரிந்த மொழியில் பேசப் பணிக்கலாம் என்று விதி இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

திரு.ஏ.அரங்கநாத முதலியார்:—

"என்னுடைய மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், அங்கிருக்கும் தாலுக்கா மற்றும் ஜில்லா போர்ட் தலைவர்கள் பலருக்கு அவர்களுடைய வட்டார மொழி மட்டும் தான் தெரியும். நடைமுறையில் அலுவலகக் கடிதப் போக்குவரத்தும், அங்குள்ள பதிவேடுகளும் ஆங்கிலத்திலே இருப்பதால், அத்தலைவர்கள் அலுவலகத்திலுள்ள எழுத்தர்களின் கைப்பாவையாகும் நிலைமை இருக்கிறது. ஆகவே, மாவட்ட அளவிலே நடைமுறையில் உள்ள கடிதப் போக்குவரத்து, கூட்ட நடவடிக்கைகள் வட்டார மொழியிலே இருப்பதுதான் உசிதமானது. இருப்பினும், இப்பொழுது இருக்கின்ற விதிகளின்படி, இம்மாறுதல் சாத்தியமா என்பது எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை" என்றார்.

மாண்புமிகு திரு பனகல் இராஜா:—

"1921—ஆம் ஆண்டில் போடப்பட்ட அரசு ஆணையின்படி, ஊராட்சி மன்றங்கள் தங்கள் நடவடிக்கைகளை ஆங்கிலத்திலோ தங்கள் மாவட்டத்திலுள்ள வட்டார மொழியிலோ நடத்தலாம் என்றுள்ளது. அந்த ஆணையின்படி, பல ஊராட்சி மன்றங்கள் தங்களுடைய அலுவல்களை வட்டார மொழிகளிலேயே நடத்தி வருகின்றன" என்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பிறகு, தீர்மானம் திரும்பப் பெறப்பட்டது.

1926—ஆம் ஆண்டு மார்ச் 22—ஆம் நாள் கல்வித் துறை மானியத்தின் மீது திரு முகமது கௌஸ்மியான் சாகிபு அவர்கள் ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்தார். அந்தச் சமயம் அவர் பேசும் போது கல்வித் துறை உறுப்பினரிடம் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பது சம்மந்தமான விவரங்களைக் கேட்டார். சென்னை மாகாணத்தின் தமிழ் மொழி பேசக்கூடிய மக்களால் இவ்விஷயம் மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைக்கப்படும்பொழுது எதிர்காலத்தில் தமிழ்ப் பல்கலைக்கழகமும் உறுதியாக அமைக்கப்படும் என்ற நிலைமை இருந்தது. அதற்கான கோரிக்கையையும் மாண்புமிகு கல்வியமைச்சரிடம் விடுக்கப்பட்டிருந்தது. தமிழ் மொழி பேசும் மாவட்டங்களில் இருக்கின்ற ஊராட்சித் துறையைச் சார்ந்த பல நிறுவனங்கள் தமிழ் நாட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் கட்டாயமாக நிறுவப்பட வேண்டுமென்பதற்கான தீர்மானங்களை இயற்றி அரசுக்கு அனுப்பினார்கள். அப்படிப் பட்ட பல்கலைக் கழகம் திருச்சியை மையமாகக் கொள்ள வேண்டும். அந்நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட தீர்மானங்களைக் கொண்டு அரசும் விரைவிலேயே ஒரு நல்ல முடிவை எடுப்பதாகச் சொன்னார்கள். தென் மாநிலங்களில்

முதல் தரமான பல கல்லூரிகள் இருக்கின்றன. திருச்சியிலும் முதல்தரமான மூன்று கல்லூரிகள் உள்ளன. ஆகவே, தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதற்கு எந்தவிதத் தடையும் இருக்க முடியாது என்றும், இக்கருத்தை வலியுறுத்தவே தாம் வெட்டுப் பிரேரணை கொண்டு வந்ததாகவும் திரு முகமது கௌஸ் அவர்கள் சொன்னார்கள்.

திரு சாவடி சுப்பிரமணியப் பிள்ளை அவர்கள்:—

''தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழ் மாநிலங்களில் ஏற்படுத்த வேண்டுமென்ற ஓர் உணர்வு பூர்வமான எழுச்சி இருக்கிறது என்பதை அறிவேன். பல்கலைக் கழகம் அமைப்பது என்பது ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட ஒன்றாகும். தமிழ் மொழி பேசுகின்ற மாவட்டங்களான செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வடஆர்க்காடு (ஒரு பகுதி), தஞ்சாவூர், திருச்சி (புதுக்கோட்டையும் சேர்த்து), இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி, சேலம் ஆகிய மாவட்டங்களில் ஏதாவது ஒன்றில் தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவ வேண்டுமென்று பொதுக் கூட்டங்களின் வாயிலாக வும், ஆங்காங்குத் தீர்மானம் இயற்றுவதன் மூலமாகவும் அரசை வற்புறுத்தியுள்ளனர். தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் கொள்கைகளாகக் கீழ்க்கண்டவற்றைச் சொல்லலாம்:—

1)தமிழ் மொழியை வளப்படுத்துவதும் வளர்ச்சி யடையச் செய்வதும்;

2)தமிழ் மக்களிடையே வரலாற்று அறிவை வளர்ப் பதற்கும், ஆராய்ச்சி உணர்வைப் பெருக்குவதற்கும்;

3)ஏட்டறிவும் மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யும் கருவியாக அமைய வேண்டும். மக்கள் அரசை மட்டும் நம்பி வாழ்க்கையை நடத்தக் கூடாது; நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதும், பயனுள்ள அறிவைக் கொடுக்கக் கூடியதுமான அடிப்படை வேலைகளில் மக்களை ஈடுபடுத்தும் கல்வியைப் பெறுவதற்கும் பயன்பெற வேண்டும்.

ஆந்திரப் பல்கலைக்கழகம் அமைந்ததனால் அம் மக்கள் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அதே போன்று, தமிழ் பேசுகின்ற மாவட்டத்தில் வாழ்கின்ற மக்கள் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டுமென்று எதிர்நோக்கி இருக்கிறார்கள். ஆகவே, கல்வியமைச்சரைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அதற்குத் தேவையான மசோதாக்கள், வரைபடங்கள் போன்ற வற்றைத் தயார் செய்து, இந்த ஆண்டிலேயே பல்கலைக் கழகம் துவக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்'' என்றார்.

மாண்புமிகு இராவ்பகதூர் சர் ஏ.பி.பத்ரோ (கல்வித்துறை உறுப்பினர்):—

“தமிழ்ப் பல்கலைக்கழகம் நிறுவப் படுவதைக் குறித்து எந்தவித ஐயப்பாடும் எழத் தேவையில்லை. ஏனென்றால், சென்னைப் பல்கலைக் கழகச் சீர்திருத்தச் சட்டத்தில் மேலும் புதுப் பல்கலைக் கழகங்கள் ஆரம்பிக்கப் படுவதற்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் செனட்டில் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்படுவதற்குத் தீர்மானத்தை ஓர் உறுப்பினர் கொண்டுவந்த போது அரசாங்கத்தின் சார்பில் மறுப்புச் சொல்லாமல் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. சென்னைப் பல்கலைக் கழகம் எல்லாவித முன்னேற்பாடு களையும் செய்து புதிய பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற் கான திட்டத்தைத் தயாரித்து அனுப்பினால், அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறது. புதிய பல்கலைக்கழகம் அமைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைப் பரிசீலனை செய்ய, சென்னைப் பல்கலைக்கழகமானது ஒரு குழுவை அமைக்க வேண்டும். ஆகவே, சென்னைப் பல் கலைக் கழகம் இதுவரையிலும் எந்தவிதத் திட்டத்தையும் அனுப்பவில்லை. இப்பொருள் தொடர்பான தீர்மானம் செனட்டின் விவாதத்திற்கு வந்தபொழுது கருத்து வேற்றுமை நிலவியது. அப்புதிய பல்கலைக்கழகம் நிறுவு

வது அவ்வளவு அவசியமானதாகவும், அவசரமானதாகவும் செனட்டில் கருதப்படவில்லை. ஆகவே, என்றைக்குப் பல்கலைக்கழகத்துச் செனட்டில் இத்தீர்மானம் நிறை வேற்றப்பட்டுத் திட்டம் அரசுக்கு அனுப்பப்படுகிறதோ, அப்பொழுது அரசு இதைப் பரிசீலிக்கும்.

தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு நிதியைத் தவிர விருப்பமும் இருக்க வேண்டுமென்று உறுப்பினர் குறிப்பிட்டார். தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதில் அரசு தீவிரமாகவும் அதை ஒரு மகிழ்ச்சியான செயலாகவும் எடுத்துச் செயல்படும். இப்பல்கலைக் கழகமானது பழமை வாய்ந்த திராவிட மக்களின், குறிப்பாகத் தமிழ் மக்களின் பண்பாடு, அவர்களுடைய அனுபவம், அறிவு இவைகளை எடுத்துக்காட்டும் முறையில் அமைய வேண்டுமென்று அரசு கருதுகிறது. அதற்கேற்ற திட்டத்தைத்தான் தீட்ட வேண்டும். நாட்டின் ஒரு பகுதியில் வாழும் மக்களின் பண்பாடு, வாழ்க்கை முறை, அவர்களுடைய செயல்திறன் ஆகிய வற்றை வளர்ச்சி பெறச் செய்ய வேண்டுமென்றால் அத்துறைகளில் அனுபவம் வாய்ந்தவர்கள் ஒன்றாகக் கூடி, புதிய பல்கலைக்கழகத்திற்கான திட்டத்தைத் தீட்ட வேண்டும். ஆகவே, சரியான திட்டத்தைச் சென்னைப் பல்கலைக்கழகச் செனட் தயாரித்து அரசுக்கு அனுப்புமே யானால், அத்திட்டம் நிச்சயமாகக் கவனிக்கப்படும்'' என்றார்.

அவரைத் தொடர்ந்து திரு பி.டி.இராசன் அவர்களும், கான் பகதூர் பி.கலிபுல்லா சாகிப் அவர்களும் பேசும்பொழுது அரசாங்கமே ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அடுத்ததாக டாக்டர் பி.சுப்பராயன் பேசியதாவது:

''தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டு மென்று மாண்புமிகு வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் தங்களையே ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்கள். தமிழ்ப்

பல்கலைக்கழக மாநாட்டில் அவர் ஆற்றிய உரை மிகவும் போற்றுதற்குரியது. அந்த உரையை நான் டெல்லியில் தங்கியிருந்தபோது செய்தித்தாளில் படித்தேன். மாண்புமிகு வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் திருச்சியில் ஆற்றிய உரை 'இந்துஸ்தான் டைம்ஸ்' பத்திரிக்கையில் வெளி வந்திருந்தது. அப்பத்திரிக்கையில் ஒரு பத்தியில் இச்செய்தி வெளியானது.இவ்வுரையைப் பாராட்டி டில்லியிலிருந்த ஒரு தலைவர் அப்பத்திரிக்கையில் கடிதம் எழுதி இருந்தார். நம் அமைச்சர் காட்டிய வழியை வட இந்திய மக்களும் பின்பற்ற வேண்டுமென்று அத்தலைவர் தம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்த நிகழ்ச்சி தமிழ் மக்களின் பெருமையை நிலை நாட்டும் ஒன்றாகும். நிலைமை இப்படியிருக்க, நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக செனட்டில் தீர்மானம் இயற்றப்படவில்லை என்ற காரணத்தை வைத்துக் கொண்டு அரசு எந்தவித ஏற்பாடும் செய்ய முடியாது என்று சொல்வது பொருத்தமற்றதாகும். உண்மையிலேயே நம் முடைய கல்வியமைச்சருக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பதில் ஈடுபாடும் ஆர்வமும் இருக்குமேயானால், ஆந்திரப் பல்கலைக்கழகம் அமைப்பதில் அவர் எந்த அளவிற்கு அக்கறை காட்டினாரோ, அதற்கு மேலேயும் அவர் செயல்பட்டிருக்க வேண்டும். ஆகவே, ஆந்திரப் பல்கலைக்கழகம் எப்படி ஏற்படுத்தப்பட்டதோ, அதே முறையில் ஒரு குழுவை அமைத்துத் திட்டம் தீட்டித் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

இந்த விவாதத்தில் குறுக்கிட்ட கல்வி உறுப்பினர் இராவ்பகதூர் ஏ.பி.பத்ரோ அவர்கள் ஒரு குழுவை அமைப்பதற்குத் தான் தயங்கவில்லையென்றும், நிதி உறுப்பினர் போதிய நிதி ஒதுக்கீடு செய்தால் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் குறுக்கிட்டு, ''முதல்

கட்டமாகக் குழு ஒன்று அமைக்கப்பட வேண்டுமேயன்றி, நிதி வசதியைத் தேடுவது இரண்டாம் கட்டம்'' என்றார்.

அடுத்துப் பேசிய திரு பத்ரோ அவர்கள் ''நிதி உறுப்பினர் எப்பொழுது நிதி ஒதுக்கீடு செய்வார் என்பது திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை என்றாலும், தமிழ்ப் பல்கலைக்கழகம் அமைப்பதில் தயாராக இருப்ப தாகச் சொன்னார். அக்குழுவிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதில் காலதாமதம் ஆகலாம்'' என்றார்.

இக்கட்டத்தில் சட்டமன்றத்தின் துணைத்தலைவர் அவர்கள் முகமது கௌஸ் சாகிப் அவர்களை நோக்கித் 'தம்முடைய வெட்டுப் பிரேரணையை வற்புறுத்துகிறாரா என்று கேட்டார்.

முகமது கௌஸ் சாகிப் அவர்கள் பேசும்பொழுது, ஒரு குழுவை அமைக்க அமைச்சர் ஒப்புக் கொண்டதாலும், அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய அரசின் சார்பில் உறுதி மொழி கிடைத்திருப்பதாலும்தான் தன் வெட்டுப் பிரேரணையைத் திரும்பப் பெறுவதாகக் குறிப்பிட்டார்.

1927—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14—ஆம் தேதி சட்டமன்றத்தில் திரு பி.ஆஞ்சநேயலு என்ற உறுப்பினர் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதாவது:— 'இம் மாநிலத்தில் தெலுங்கு மொழி பேசுகின்ற பகுதிகளை இணைத்துச் சட்டமன்ற நிருவாக மற்றும் நீதி நிருவாக வசதிகளுக்காகத் தனி மாநிலமாக ஆக்கி, ஆந்திர மாநிலம் என்று பெயர் சூட்டவும், தீர்மானத்தைக் கவர்னர் ஜெனரல் பெருமானுக்கு அனுப்பி வைக்கும் பரிந்துரையை இச்சட்ட மன்றம் செய்யவும்' என்பதாகும்.

தீர்மானத்தை முன் மொழிந்து அவர் பேசியதாவது:—

''இப்படிப்பட்ட தீர்மானத்தை முன் மொழிவதற்கு உசிதமான நேரமாகும் இது. மேலவையில் சில காலத்திற்கு முன்பு இப்படிப்பட்ட தீர்மானம் கொண்டு வந்த பொழுது, இத்தீர்மானம் கீழவையில் விவாதிக்கப்படவில்லை.

ஆகவே, தனி ஆந்திர மாகாணமோ, தமிழ் மாகாணமோ ஏற்படுவதற்குத் தேவையான தீர்மானத்தைச் சட்டமன்றத் தில் அறிமுகப்படுத்திய பின்புதான் விவாதத்திற்கு எடுத்துக் கொள்வோம் என்று அறிவித்து விட்டார்கள். மேலும் ஆந்திர மாநிலம் வேண்டும் என்று கேட்பவர்கள் மத்தியி லும் ஒருமித்த கருத்து இல்லை. ஆந்திர மாநிலம் பிரிக்கப் பட வேண்டும் என்ற கோரிக்கைக்காக நடத்தப்பட்ட மாநாடுகளுக்குத் தலைமை வகித்தவர்கள் மூன்று அல்லது நான்கு தலைவர்கள் இச்சட்டமன்றத்திலே உறுப்பினர் களாக இப்பொழுது இருக்கிறார்கள். முன்பு அமைச்சராக இருந்த திரு பனகல் இராசா அவர்கள், இன்றைய அமைச்ச ரான திரு அரங்கநாத முதலியார் அவர்கள், மற்றும் ஏ.பி.பத்ரோ ஆகியோர் உறுப்பினராக இன்னும் இருக்கி றார்கள். சட்டமன்றம் அமைந்திருக்கிற இடத்தை 16—ஆம் நூற்றாண்டில் ஓர் ஆந்திர மன்னர்தான் கிழக்கிந்தியக் கம்பெனிக்குக் கொடுத்தார் . . . .'' என்று திரு ஆஞ்சநேயலு பேசும்பொழுது திரு சத்தியமூர்த்தி அவர்கள் குறுக்கிட்டு, ''அந்தச் செயல் புத்திசாலிகள் செய்யக்கூடாத ஒன்றாகும்'' என்றார்.

தொடர்ந்து திரு ஆஞ்சநேயலு பேசியதாவது:—

''ஆந்திர மாநிலம் உருவாக்கப்பட வேண்டும் என்ற இயக்கம் 1910—ஆம் ஆண்டிலிருந்தே இருக்கிறது. பாபட்லாவில் ஆந்திர மாநிலப் பிரிவினை மாநாடு 1910— ஆம் ஆண்டு நடந்தபொழுது திரு பி.என்.சர்மா தலைமை தாங்கினார். அம் மாநாட்டில் ஆந்திரப் பிவினைக்கான திட்டவட்டமான தீர்மானம் எதுவும் இயற்றப்படவில்லை. இரண்டாவது மாநாடு விஜயவாடாவில் நடைபெற்றது. அப்பொழுது ஆந்திர மாநிலம் மட்டுமல்ல, ஆந்திர தேசத்திற்கென தனிப் பல்கலைக்கழகமும் தேவை என்று கோரப்பட்டது. மூன்றாவது மாநாடு கோகநாடாவில் நடந்தது. இதற்கு மத்தியில் உலகப்போர் மூண்டது. போர் நிறுத்தத்திற்குப் பின்பு ஆந்திர மாநிலம் உருவாகலாம்

என்று எதிர்பார்த்தோம்.

"ஆங்கிலேயர்கள் எப்படி நம் நாட்டிற்குள் நுழைந்தார்கள் என்று நமக்குத் தெரியும். அதை ஒரு விபத்து என்றே சொல்லலாம். நம் மீது போர் தொடுப்பதற்காக அவர்கள் வரவில்லை. வணிகம் செய்ய வந்தார்கள். வணிகம் செய்ய ஏதாவது ஓர் இடம் தேவையாக இருந்தது. இப்படிப்பட்ட வரலாற்றின் பின்னணியில் எழுதப்பட்டதுதான் மாநிலங்கள். இதற்கு முன்னேற்பாடோ முனைப்பான திட்டமோ இருந்ததில்லை. ஆகவே, இப்போதைய மாநிலங்கள் எந்த வித அடிப்படையாலும், கொள்கையின் தேவைகளினாலும் ஏற்படுத்தப்பட்டதல்ல. ஒரு மாவட்டத்தைத் தொடர்ந்து வேறொரு மாவட்டம் என்று மேலும் மேலும் நிலப் பகுதிகளைச் சேர்த்து மாநிலங்களாக ஏற்படுத்தி விட்டார்கள். நிருவாகக் காரணங்களுக்காக இம்முறையைத் தவிர வேறு வகையில் மாநிலங்களில் அமைப்பை ஏற்படுத்தியிருக்க முடியாது. ஆகவே, எதிர்காலத்தில் இந்திய நாட்டிற்குச் சுதந்திரம் வந்தாலும் வராவிட்டாலும் மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்டு இந்த நாடு அமெரிக்கா நாட்டைப் போன்ற அமைப்பைப் பெற வேண்டும்.

1911—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15—ஆம் நாள் அனுப்பிய குறிப்பில் அன்றைய கவர்னர் ஜெனரலாக இருந்த மேன்மை தங்கிய ஹார்டின்ஜி அவர்கள், மாநிலங்களுக்குள் எல்லையைத் தீர்மானிப்பதில் அரசியல் மற்றும் நிருவாக வசதியை முன்னிறுத்திப் பிரிக்க வேண்டும். அதே சமயம் மக்களுடைய உண்மையான ஆசையைப் பூர்த்தி செய்யும் வகையில் மாநிலத்தின் எல்லைகள் வகுக்கப்பட வேண்டும் என்று சொன்னார். லார்டு ஹார்டின்ஜி அவர்களுடைய குறிப்பில்தான் ஐக்கிய இந்தியா உருவாக வேண்டும் என்ற கருத்து வெளிப்பட்டது. ஐக்கிய இந்தியா என்பது மட்டுமல்ல, மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் பிரிக்கப்பட வேண்டும் என்ற கருத்தும் அவருடைய குறிப்பில்

உள்ளது. அவருடைய கருத்து இரண்டு வழியில் உருவம் பெற்றது. இந்தியாவின் தலைநகரமாக டில்லியை ஆக்கிய தோடு அல்லாமல், அமெரிக்க நாட்டின் தலைநகரமாக வாஷிங்டன் நகரம் எப்படி ஆக்கப்பட்டதோ, அதே போன்று டில்லியையும் தனி மாநிலமாக ஆக்கினார். வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார். ஒரே மொழி பேசுகின்ற பகுதியை இரண்டாகப் பிரித்தார்கள். தென்னாட்டைப் பொறுத்த வரையில் ஒரே மொழி பேசுகின்றவர்கள் வேறுமொழி பேசுகின்ற பகுதியிலிருந்து பிரிந்து போக விரும்புகிறார்கள். தமிழ் பேசுபவர்கள் மீது கொண்டுள்ள பொறாமையின் காரணமாக ஆந்திர மக்கள் தனி மாநிலம் கோரவில்லை. இந்த அடிப்படையில்தான் ஆந்திர தேசப் பிரிவினையைப் பார்க்க வேண்டும். இப்பொழுதிருக்கிற சென்னை மாநில அமைப்புக்கு எந்தவித வரலாற்றுப் பின்னணியும் கிடையாது. ஆங்கில ஏகாதி பத்தியத்தார் புதிய எல்லைகளை வெறியோடு பிடுங்கிச் சேர்த்ததின் அடிப்படையில்தான் மாநிலங்கள் உருவாக்கப் பட்டன. தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்ட உள் நாட்டுக் குறுநில மன்னர்களான நாஜிர்ஜன், முஜாபர்ஜன் போன்றோரும், சந்தாசாகிப், ஹைதர் அலி போன்றோரும் மற்றும் ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியும் எனப் பலர் நிகழ்த்திய உள் நாட்டுப் போரும், குழப்பமும்தான் இறுதியில் புதிய எல்லைகளைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக இருந் தவை. இப்படிப்பட்ட சண்டைகளினால் நாம் பெருமைப் படவும் மகிழ்ச்சி அடையவும் முடியாது. இந்த நிகழ்ச்சி களை நாம் அவமானமாகக் கருத வேண்டும். தமிழ் மற்றும் தெலுங்கு மொழி பேசுபவர்களுக்காகப் புதிய மாநிலங்கள் தோற்றுவிக்கப்பட்டால், நாம் நம்முடைய பழைய கால வரலாற்றை நினைப்பதற்கும், நம்முடைய கலை, கலாச் சாரம் மற்றும் நம்மை ஆண்டு பெருமை படைத்த மன்னர் களை நினைவு கூர்ந்து பெருமை அடைவதற்கும் வழி

கோலும்'' என்றார்.

திருவாளர் பிஸ்வநாத் தாஸ் மகாசாயோ: (14.3.1927)

''1917—ஆம் ஆண்டு கூடிய காங்கிரஸ் மாநாடு, மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற கருத்தைக் கொள்கை அளவில் ஒப்புக் கொண்டது. ஒரியா மொழி பேசுகின்ற மக்கள் தனி மாநிலக் கோரிக்கையை 1901—ஆம் ஆண்டே எழுப்பினர். அதற்காகக் காங்கிரஸ் கட்சியையும் அவர்கள் வற்புறுத்தி வந்தனர். தங்களுடைய கோரிக்கை காங்கிரஸ் கட்சியினால் ஒப்புக் கொள்ளப் படவில்லை என்று தெரிந்தவுடன், 1905—ஆம் ஆண்டு சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டில், ஒரிசா பிரிவினையைக் கோரியவர்கள் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார்கள். நிதிவசதி காரணங்களுக்காக மொழிவழி மாநிலங்கள் ஏற்படுவது இயலாது என்று ஆளுங்கட்சித் தரப்பிலிருந்து சொல்லப்பட்டது.

நான் அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், அரசாங்கம் அதனுடைய பணம் பல வழிகளில் மாதா மாதம் வீணாக்கப்படுகிறது. சென்னைக் கோட்டையி லிருந்து வெளியாகிற கெஜட்டில் வருகிற பிரசுரங்கள், அறிக்கைகள், மசோதாக்கள் என்று பல தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் ஒரியா ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகிறது. என்னுடைய மாவட்ட கெஜட், ஆங்கிலம், தெலுங்கு மற்றும் ஒரியா ஆகிய மொழிகளில் வெளிவருகிறது. இவையெல்லாம் வீண் செலவு இல்லையா? ஆகவே, நல்லரசு அமையவேண்டுமானால்; அரசின்மீது மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் கட்டுப் பாடு இருக்க வேண்டுமானால், மாநிலங்கள் மொழி வழியாகத்தான் பிரிக்கப்பட வேண்டும். அத்துடன் மட்டுமல்லாது அரசாங்க நடவடிக்கையும், மக்களால் பேசக்கூடிய மொழியிலேயே அமைய வேண்டும். மாநிலங் களை இந்த முறையில் பார்க்க வேண்டும் என்று நான்

சொல்வது குறுகிய எண்ணத்தாலோ அல்லது சாதி அடிப்படையாலோ அல்ல'' என்றார்.

*1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாள் திரு சி.இராமசோமாயாஜுலு அவர்கள் ஆற்றிய உரை:-*

''இச்சபையில் ஆந்திர மாநிலம் தனியாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் பெரும்பான்மை பலத்துடன் நிறைவேற்றப்பட்டது. நிறைவேற்றப்பட்ட தீர்மானம் மாநில அரசின் பரிந்துரையில்லாமலேயே மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியல் சட்ட விதிகளின்படி, மாநில அரசு தன்னுடைய குறிப்பிட்ட பரிந்துரையையும் சேர்த்து அனுப்பியிருக்க வேண்டும். ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட வேண்டுமென்று மத்திய சட்டமன்றத்திலும் விவாதத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால், புதிய மாநிலங்களைத் தோற்றுவிக்க வேண்டுமானால் மாநிலச் சட்டமன்றத்தில் அப்பொருள் விவாதிக்கப்பட்டு, மாநில அரசின் சிபாரிசுடன் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டால், மேலும் பரிசீலனை செய்யலாம் என்று முன்பு சொன்னார்கள். ஆந்திர மாநிலம் வேண்டுமென்று 18 ஆண்டுகளாக நாங்கள் போராடி வருகிறோம். ஒவ்வொரு மாநாட்டிலும் இதற்காகத் தீர் மானங்களை இயற்றி வருகிறோம். மாண்டேகு—செம்ஸ் போர்டு திட்டத்திலும் மாண்டேகு அறிக்கையிலும் புதிய மாநிலம் அமைப்பதற்கான வழி முறைகள் அறிவிக்கப் பட்டுள்ளது. இதை மனத்தில் வைத்தே, அரசுப் பற்றற்வர் களும், அரசியல் அங்கங்களும், அவரவர்களுக்கே உரிய வகையில் மொழிவாரி மாநிலப் பிரிவினையை வற்புறுத்தி வருகிறார்கள். தனி ஆந்திர மாகாணம் பிரிக்கப்படுமே யானால், எங்களுடைய அறிவைப் பெருமளவில் வளர்த்துக் கொள்ள முடியும்'' என்றார்.

*மாண்புமிகு சர் நார்மன் மர்னோரிபாங்கு (19.3.1928):—*

''இந்திய அரசியல் சட்டம் 52-ஆவது பிரிவின்படி,

ஏற்கனவே இத்தலைப்பின் மீது ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்தீர்மானத் மீது மேல் நடவடிக்கை இந்த அரசு எடுக்கவில்லை என்று இப்பொழுது குற்றம் சாட்டுகிறார்கள். இவ்விஷயத்தை மத்திய அரசு பரிசீலனை செய்து, மேல் நடவடிக்கை எடுக்கத் தேவையான விவரங்களைக் கேட்டால் ஒழிய, நாமாக செய்ய வேண்டிய முயற்சிகள் எதுவுமில்லை. அப்படியே செய்வதும், வீணான ஏற்பாடாகும். இத்தீர் மானத்தை மத்திய அரசுக்கு அனுப்பி ஓராண்டிற்கு மேல் ஆகியுள்ளது. ஆகவே, மேற்கொண்டு நாம் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை'' என்றார்.

*அப்துல் ஹமீது கான் (19.3.1928)*

''ஆந்திர மாநிலம் அமைவதற்குத் தமிழர்கள் எதிர்ப்புத் தெரிவிக்க மாட்டார்கள். ஏனென்றால், ஆந்திரப் பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்ற வேண்டுகோள் வந்தபொழுது, தமிழர்கள் அமைதியுடன் அக்கருத்தை ஆமோதித்தார்கள்; தமிழ்ப் பல்கலைக்கழகமும் வந்துவிடும் என்று தமிழர்கள் நம்பினார்கள். ஆந்திரப் பிரதேசம் அமைவதனால், அவர்களுடைய பண்பாடு, இலக்கியம், பொருளாதார நிலை ஆகியவை உயரும் என்று நம்புகிறார் கள். ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டால், நிருவாக இயந்திரத்தைத் தெலுங்கு மொழியில் மாற்றிவிட முடியும் என்று அம்மக்கள் நினைக்கின்றார்கள். அவ்வாறு நிரு வாகத்தை வட்டார மொழியில் நடத்துவது மிகவும் அவசியமாகும். அதனால் பல நன்மைகளும் இருக்கிறது. புதிய மாநிலத்தில் உருது பேசும் மக்களின் நலனும் பாதுகாக்கப்படும் என்று நான் நம்புகிறேன்'' என்றார்.

*திரு சி.ஆர்.பார்த்தசாரதி அய்யங்கார்:—*

''புதிய மாநிலம் ஏற்பட்டால், ஆளுநர் என்றும், செயற்குழு உறுப்பினர் என்றும், புதுப்புது பதவிகள் நியமிப்பது முக்கியமில்லை. நாம் கிராமங்களில் செய்ய

வேண்டிய வளர்ச்சித் திட்டங்கள் நிறைய உள்ளது. நம்முடைய கிராமங்களின் பொருளாதார வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு அவற்றை மாற்றி அமைக்க வேண்டும். கிராமங்களை அடித்தளமாகக் கொண்டுதான் ஆந்திர மாநிலம் உதயமாக வேண்டும். கிராமங்கள் தான் நம் நாட்டின் முதுகெலும்பு. ஆகவே, கிராமங்களிலுள்ள மக்களை முன் வைத்துத்தான் நம் நாட்டின் வளர்ச்சிப் பணிகள் துவக்கப்பட வேண்டும்'' என்றார்.

பொது நிர்வாகம், தலைமைச் செயலகம் என்ற பத்தாவது மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணை சபையின் முடிவுக்கு தோல்வியடைந்தது.

*1928*—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் *26*—ஆம் நாள் திரு.எஸ்.சத்தியமூர்த்தி அவர்கள் *1923*—ஆம் ஆண்டின் சென்னைப் பல்கலைக்கழகச் சட்டத்தின் திருத்த மசோதா மீது ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டு வந்து பேசினார்:—

'' 'வெர்னாகுலர்' என்பதும் 'இந்தியன்' என்பதும் ஒரே அர்த்தம் உடையதாகும். ஆனால் வெர்னாகுலர் என்ற வார்த்தையைப் பல்கலைக்கழகச் சட்டத்திலிருந்து அகற்றி விட வேண்டுமென்பதுதான் என் திருத்தமாகும். வெர்னாகுலர் என்பது அடிமைகளின் மொழி என்று பொருள்படும். இந்த முறையில் நம் மொழிகளை நாமே அவமானப்படுத்தக் கூடாது. ஆங்கிலேயர்கள் வேண்டுமென்றால் எங்களுடைய வெர்னாகுலர் ஆங்கில மொழி என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால், வெர்காகுலர் என்ற சொல்லை தன் தாய் மொழியைக் குறிப்பதற்காகப் பயன்படுத்துவதில்லை. ஆந்திரப் பல்கலைக்கழகச் சட்டத்திலும் என் தலையீட்டால் வெர்னாகுலர் என்ற வார்த்தை தள்ளப்பட்டு இந்தியன் என்ற வார்த்தை கையாளப்பட்டுள்ளது. என்னுடைய திருத்தத்தை ஏற்க முடியாது என்று அமைச்சர் ஒரு வேளை மறுக்கலாம். ஏனென்றால், சமஸ்கிருத மொழியைச் சேர்க்க வேண்டியிருக்கும். ஆகவே, என்னுடைய திருத்தத்தை

ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

திரு சி.வி. வெங்கடரமண அய்யங்கார் அவர்களால் வழி மொழியப்பட்டு, அமைச்சர் டாக்டர் பி.சுப்பராயன் அவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவையில் நிறைவேற்றப்பட்டது.

1929—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 8—ஆம் நாள் சென்னை சட்டமன்றத்தில் திரு பி.சிவராவ் அவர்கள் கருநாடக மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்ற ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அத்தீர்மானத்தின் மீது அவர் பேசுகையில், ''நம் நாட்டில் மாகாணங்கள் பிரிக்கப்பட்டிருப்பதில் எந்தவித அடிப்படை விதிகளோ காரணங்களோ இல்லை. ஆங்கிலப் பேரரசின் இந்தியக் கொள்கையின்பாற்பட்ட அர்த்தமற்ற பிரிவுகள்தான் இன்றைய மாநிலங்கள். இன்றைய மாநிலங்கள் அமைந்து இருப்பது பொருளாதார அடிப்படையிலோ வரலாற்றுப் பின்னணியிலோ பேசப்படுகின்ற மொழியின் அடிப்படையிலோ அமைக்கப்பட்டன அல்ல. ஆகவே, பேசப்படுகின்ற மொழியின் அடிப்படையில் மாநிலங்களின் எல்லையை வரையறுத்துப் புதிய மாநிலங்கள் உண்டாக்கப்பட வேண்டும் என்பது அவசரமும் அவசியமும் ஆனதாகும். தெலுங்கு மொழி பேசும் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆந்திரப் பல்கலைக் கழகத்தை உருவாக்குவதற்கு ஏற்பாடு செய்ததன் மூலம் ஆந்திர மாநிலம் பிரிவதற்குத் தேவையான முயற்சியில் வெற்றிபெற்று இருக்கிறார்கள் என்று சொல்லலாம். மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சர்வகட்சி மாநாடு ஏற்கனவே ஜவஹர்லால் நேருவிடம் முறையிட்டிருக்கிறது. அக்குழுவும் மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவது அவசியமானது என்றுஉறுதி செய்து இருக்கிறது. ஒரே மொழி பேசப்படுகின்ற ஒரு பகுதியை மாநிலமாக ஆக்குவதற்குப் பல காரணங்கள் உண்டு. மக்களாட்சியில் நடத்தப்படுகின்ற அலுவலகங்களிலும்

நீதிமன்றங்களிலும் சட்டமன்றங்களிலும் அம் மாநிலத்தில் வாழ்கின்ற மக்கள் பேசுகின்ற மொழியே பயன்படுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் அம்மாநிலமும் நம்முடைய நாடும் பொருளாதார வளர்ச்சியைக் காணமுடியும். கருநாடக மாநில்ம் அமைப்பதில் சில சிக்கல்கள் இருப்பதென்பது உண்மைதான். ஆனால், அவைகளைத் தீர்க்க முடியும் என்றார்.

அடுத்ததாகப்பேசிய திரு ஏ.அரங்கநாத முதலியார் அவர்கள் ''இந்தியத் தேசிய காங்கிரஸ், மொழிவாரி மாகாணங்களை அமைப்பதற்குக் கொள்கையளவில் எட்டு ஆண்டுகளுக்கு முன்பாக ஒப்புக் கொண்டுள்ளது'' என்றார். கருநாடக ஒற்றுமை மாநாட்டிற்குத் தாம் தலைமை தாங்கியதாகவும், கருநாடக மாநிலம் அமைப்பதில் எந்தவித எதிர்ப்பும் இருக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

அவரைத் தொடர்ந்து திரு விஸ்வநாத் தாஸ் மகாசாயோ அவர்கள் விவாதத்தில் கலந்து கொண்டார். சென்னை அரசாங்கத்தின் போக்கு தனக்குக் கவலை அளிப்பதாகவும், மொழிவாரி மாநிலங்களாகத் தமிழ், தெலுங்கு, கன்னடா மற்றும் ஒரியா போன்ற மொழிகளைப் பேசக்கூடிய பகுதிகளைத் தனித்தனி மாநிலங்களாக ஆக்குவதற்குத் தயக்கம் காட்டுவதாகவும், இது சென்னை அரசாங்கத்தின் அலட்சியப் போக்கையே குறிப்பதாகவும் கூறினார். மாநில சுயாட்சி என்பதும், தாங்களாகவே ஆண்டு கொள்கிறோம் என்பதும் அர்த்தமுள்ளதாகும். எப்பொழுது என்றால், ஒரே மொழி பேசுகின்ற மக்கள் தங்களுக்காகத் தனிச் சட்டமன்றத்தை ஏற்படுத்தித் தங்களுடைய வட்டார மொழியின் துணை கொண்டு விவாதங்களை நடத்தும் போதுதான் மாநில சுயாட்சி முழுமை பெறுகிறது. இம்மாமன்றத்தில் ஆங்கிலத்தில் பேசுவதால் ஒவ்வொரு உறுப்பினரும் எடுத்துச் சொல்ல வேண்டிய கருத்துகளுக்கும் அவர்களுடைய உணர்ச்சிகளுக்கும் ஓர் எல்லைக்கோடு இருப்பதாகவே நான் உணர்கிறேன். நம்

சட்டமன்றத்தின் வரலாற்றில் ஏழைக்குடியானவனும் படிக்காத இளைஞனும் ஆங்கிலம் படித்த அறிஞர்களோடு தோளோடு தோள் உராய்ந்து உட்கார்ந்து நடவடிக்கைகளில் பங்கெடுத்துக் கொள்ளும் நாள் வெகு தூரத்தில் இல்லை. மொழிவாரி மாநிலங்கள் அமைக்க வேண்டுமென்று சென்னை அரசாங்கம் மட்டுமல்ல, மத்திய அரசும் 1912—ஆம் ஆண்டிலிருந்தே பரிசீலித்து வருகிறார்கள். 1912—ஆம் ஆண்டில் புகழ்மிக்க முடிசூட்டு விழா வெளியீட்டின் வழியாகவும் அந்தச் சமயம் கவர்னர் ஜெனரலாக இருந்த ஹார்டின்ஜ் துரை அவர்களுடைய கொள்கையின் அடிப்படையில் நம் நாடு சுயாட்சி பெற்ற மாநிலங்களாகவும், மொழியின் அடிப்படையில் பிரிக்கப்பட வேண்டும் என்பதெல்லாம் நமக்குத் தெரியும். மக்களின் ஒத்துழைப்புடன் இப்பிரிவினைகள் எம்முறையில் செய்யப்பட வேண்டுமென்பதை மாண்ட்போர்டு அறிக்கையைத் தயாரித்தவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதையடுத்து, மொழிவாரி மாகாணங்கள் எப்படி அமைக்கப்பட வேண்டும் என்பதைக் கூட்டுப் பொதுக்குழுவும் தீர ஆலோசித்துத் திட்டத்தைச் சொல்லி இருக்கிறது. ஆனால், மாகாண அரசு இவற்றையெல்லாம் தடை செய்து கிடப்பில் போட்டுவிட்டது. இதே மாமன்றத்தில் ஆந்திர மாநிலத்தைப் பிரிக்க வேண்டுமென்ற தீர்மானத்தை நிறைவேற்றினோம். அத்தீர்மானத்தை மாகாண அரசு மத்திய அரசுக்கு அனுப்பியதுடன் தன் கடமை முடிந்து விட்டதாகக் கருதிக் கொண்டு வாளாவிருக்கின்றது எனக் குறிப்பிட்டார்.

திரு ஏ.ஒய்.ஜி.கேம்ப்பெல் (செயற்குழு உறுப்பினர்):—

''மொழிவாரி மாகாணங்கள் அமைப்பதைப்பற்றிக் கவனமாகவும் விரிவாகவும் நாம் விசாரணை செய்த பின்பே தீர்மானம் செய்ய வேண்டும். அப்படி மொழிவழி மாகாணங்கள் அமைப்பதில் நிருவாகம் மற்றும் நிதி விஷயங்களைக் கவனத்தில் கொள்ளல் வேண்டும்,

ஏனென்றால், புதிய மாநில நிருவாக அமைப்புகளான தலைமைச் செயலகம், உயர்நீதிமன்றம், மற்றும் தலைமை அலுவலகங்கள் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது. இது தவிர, மக்களுடைய சமூக, பொருளாதார அமைப்பும், வரலாற்றுப் பின்னணியும், எல்லையின் தன்மையும் எண்ணிப் பார்த்த பின்பே, புதிய மாநில அரசுகளை உருவாக்க முடியும். இந்த ஏற்பாடுகளைச் செய்வதற்கு விரிவான விசாரணையும், நேரமும் தேவை. இது தவிர, மாவட்டங்களில் இருக்கும் மக்களுடைய கருத்தையும் அறிந்து கொண்டால்தான் அவர்கள் எந்த மாநிலத்தில் சேர விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரியும். மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பது அவசியமா, அப்படியென்றால், அப்பிரிவினையைச் செய்ய ஏற்ற முறை எது; எந்த அமைப்பால் அப்படிப்பட்ட ஏற்பாட்டைச் செய்து தர முடியும் என்பது எல்லாம் அதற்காகவே அமைக்கப்பட்ட சட்ட பூர்வமான கமிஷன் முன் உள்ளது. ஆகவே, ஆந்திர மாநிலத்தை மட்டும் பிரிப்பதற்காக நாம் ஒரு தனி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இது உசிதமான நேரமுமல்ல'' என்றார்.

திரு ஏ.பி.ஷெட்டி:—

''மாண்டேகு—செம்ஸ்போர்டு அறிக்கையின் 246—ஆவது பத்தியின் படி, மொழிவழி மாகாணங்களை ஏற்படுத்துவதுதளிவாகத் தெரிகிறது. 1919—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தில் 52-ஏ பிரிவின்படி, இந்த நாட்டின் வைஸ்ராய் பெருமானுக்கு அந்த அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த அவையிலுள்ள பல உறுப்பினர்களுடைய ஒருமித்த கருத்தெல்லாம் கன்னடம் பேசுகின்ற மக்கள் வாழ்கின்ற பகுதியைப் பிரித்துத் தனி மாநிலமாக ஆக்க வேண்டுமென்பதுதான். கன்னட மொழி பேசுபவர்களின் மாநாடுகளில் இப்படிப்பட்ட கருத்து வற்புறுத்தப்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகளும், நகர சபைகளும் இதற்கென்றே தீர்மானங்கள் நிறைவேற்றி

உள்ளன. 1565-ஆம் ஆண்டிற்குப் பின்புதான் கருநாடகா பகுதி பல சிறிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுச் சென்னை, குடகு மற்றும் பம்பாய் மாநிலங்களின் அரசாங்க எல்லைக்குள் சேர்க்கப்பட்டது. கன்னடம் பேசுபவர்கள் வேறு வேறு மாநிலங்களுடன் இணைக்கப்பட்டிருப்பதால், அம்மக்களின் கலை, கலாச்சாரம் மொழி இவைகள் வளர்க்கப்படாமலும், பாதுகாக்கப்படாமலும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். திரு சிவராவ் அவர்கள் உறுப்பினராகவிருந்த சைமன் கமிஷன்தான் கருநாடக மாநிலம் தனியாக உருவாவதற்கு உதவி செய்யாமல் விட்டு விட்டது'' என்றார்.

திருவாளர்கள் நாகன் கவுடா, எஸ்.அற்புதசாமி உடையார் மற்றும் பி.சிவராவ் ஆகியோர் பேசிய பின்பு மொழிவழி மாநிலமாகக் கன்னடம் பேசுகின்ற பகுதியைப் பிரித்துக் கருநாடக மாநிலமாக ஆக்க வேண்டுமா என்ற பொருள் அவையின் தீர்மானத்திற்கு விடப்பட்டு நிறை வேற்றப்பட்டது.

1931-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17—ஆம் நாள் பொது வரவு—செலவு மானியக் கோரிக்கை மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட திரு கே.கோடி ரெட்டி ஒரு வெட்டுப் பிரேரணையைக் கொண்டு வந்து உரையாற்றினார்.

அவர் சொன்னதாவது:—

''என்னுடைய வெட்டுப் பிரேரணையின் வாயிலாக மொழிவாரி மாநிலங்கள் அமைக்கப்படுவதின் அவசியத்தை வலியுறுத்த விரும்புகிறேன். ஆந்திர மாநிலம் பிரிப்பது சம்பந்தமான தீர்மானம் மாநில அரசால் நிறை வேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. இதற்கு மேலும் மத்திய அரசுதான் நட வடிக்கை எடுக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. இருப்பினும், இப்பிரச்சினையில் பொது மக்கள் பெரிதும் ஊக்கம் செலுத்தியும், எதிர்பார்த்தும், இருபது ஆண்டு

களுக்கு மேல் போராடியும் வந்திருக்கின்றனர். நாம் நமக்காக அரசியல் சட்டத்தை வகுக்க இருக்கிறோம். ஆகவே, இச்சமயத்தில்தான், மாநிலங்களை மொழிவாரியாகப் பிரிப்பது பற்றி எண்ண வேண்டும். மக்களுக்கு வாக்குரிமை அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மேலும், மக்களாட்சியின் அங்கங்கள் ஆங்காங்கே நிறுவப்பட இருக்கிறது. சாதாரண கிராம மக்கள் நிருவாகத்தில் பங்கேற்க வேண்டுமென்றால், ஆங்கில மொழியின் மூலமாக இக்காரியத்தைச் சாதிக்க முடியாது. சட்டமன்றங்களிலும், நிருவாகத்திலும், நீதித் துறையிலும் வட்டார மொழிகளைப் பயன்படுத்துவதன் மூலமாகவும், அரசாங்க ஆணைகளை மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் இடுவதன் மூலமாகவுமே மக்களாட்சியின் உண்மையான உணர்வை ஏற்படுத்தியவர்களாவோம். ஆகவே, மொழிவாரி மாகாணங்கள் உடனடியாக ஏற்படுத்துவதை நான் வலியுறுத்துகிறேன்'' என்றார்.

தொடர்ந்து இராவ்சாகிப் டி.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசியதாவது:

''ஆங்கிலேயர்களுடைய ஆட்சி வந்த பிறகு, சென்னை மாகாணமும் மற்ற மாகாணங்களும் மாறுபட்ட அடிப்படையில் அமைக்கப்பட்டன. போரிட்டும் அரசியல் காரணமாக இணைத்தும், ஆங்கிலேயர்கள் மாகாணங்களை உருவாக்கினார்கள். இதற்கு எந்தவிதமான அர்த்தமுள்ள அடிப்படையும் இருந்ததில்லை. ஒரே மொழியைப் பேசக்கூடிய மக்களை ஒரு எல்லைக்குள் கொண்டு வந்து தனி மாகாணமாக ஆக்குவதுதான் நிருவாகத்திற்கு உகந்ததாக இருக்க முடியும். குறிப்பாக நம் மாகாணத்தில், தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் என்று மொழிகளைப் பேசக்கூடிய மக்களும், பகுதிகளும் உள்ளன. மொழி பேசக்கூடிய பகுதிகளுக்கு ஏற்பத் தனி மாகாணங்கள் அமைக்கப்பட்டால், நிருவாகச் செலவு குறையும் என்பது என்னுடைய கருத்தாகும். ஆகவே, இம்மாநில அரசு மத்திய

**அரசிடம் நம்முடைய கருத்தை எடுத்துச் சொல்லி, தக்க சமயத்தில் புதிய மாநிலங்கள் அமைக்க வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.**

*திரு பி.சி. முத்துச் செட்டியார்:—*

''டிமாண்டு 8 விஷயமாய், பாஷைக்குத் தக்கபடி மாகாணத்தை அல்லது இராசதானியைப் பிரிக்க வேண்டுமாய் நமது நண்பர்கள் கூறுகிறார்கள். அந்த விஷயத்தில் எனது அபிப்பிராயம் இடங்கொடுக்க வில்லை. அவைகள் அப்படிச் செய்வதினால், ஏராளமான பணச் சிலவுகள் நேரிடும். இராசதானியில் பணச் சிலவைச் குறைக்கவே யோசனை உண்டாக்க வேண்டியது அவசியம்.

இதில் கொஞ்சம் கஷ்டம் நமது நண்பர் சொல்வதில் இருக்கலாம். இந்த ராஜதானி கன்னட தேசம், தெலுங்கு தேசங்கள், மலபார், தமிழ் தேசம் இந்தப் பாஷைகள் பொருந்தியதே. பெரும்பாலும், மலபார் தமிழைச் சார்ந்த தே. இந்தப் பிராவின்ஸானது தமிழ்ப் பிராவின்ஸே அல்லாது வேறில்லை.

பல்லாரி, தார்வார், பல்காம், நார்த் கானரா, சவுத் கானரா, கூர்க் இவைகளைக் கன்னட தேசமாகக் கூறலாம். ஒன்றைப் பலவாகப் பிரித்தால் சம்பளங்களைக் குறைந்த தாரணையில் ஏற்படுத்தலாம். என்றாலும், அதில் எல்லா அங்கங்களையும் உண்டாக்க வேண்டி வரும். அப்போது ஏராளமான சிலவிற்கே காரணமாகும். அவசியமானால், அடுத்த மாகாணத்திற்கு மெஜாரிடி சேர்க்கையாயிருந்தால் அவைகளில் கன்னட, தெலுங்கு, ஒரியா தேசம் சேர்க்க ஏதுவாகும் என்று யோசிக்கலாம். எது எப்படி இருந்தாலும் நமது நண்பர்களோடு நான் வோட்டுக் கொடுப்பினும் செலாவணியாகும் எனத் தோன்றவில்லை.

ஆகையால், நான் என்னுடைய முக்கிய அபிப்பிராயத்தை இதில் தெரிவிக்கிறேன். ஆங்கில பாஷை

யினால் மட்டும் இந்த மாகாணக் கௌன்சில் நடை பெறுவது சரியல்லவென்றும், பெரும்பாகம் இம் மாகாணவாசிகள் அபிப்பிராயம் டயார்க்கி வந்த காலம் முதலே இந்த உணர்ச்சியைத் தெரிவித்திருக்கிறது. இதை நமது அங்கத்தினர்களான கனவான்கள் ஊர்ஜிதத்துக்குக் கொண்டு வராத காரணமே இப்பிராவின்ஸைப் பிரிக்கத் தோன்றி வந்திருக்கிறது. இந்தக் கௌன்சில் கவர்னரின் கௌன்சிலாக இருந்து அப்பால் சுமார் 60 கௌன்சில் வரை அதிகமாக்கியதும், அப்பால் 1920—ஆம் வருஷம் முதல் 120 கௌன்சிலாக்கியதையும் அறிவேன். அந்தந்தக் கால இயற்கைக்குத் தக்கபடி வந்தது சரியே, இப்போதிய காலத்தில் ப்யூர் இங்கிலீஷ் பாண்டித்தியம் இருந்தாலொழிய, பேசுந் திறமையும், அறியுந்திறமையும் பொருந்துமேயல்லாது, அரைகுறை விற்பத்தியும் சொல்பமாக Yes, sir, No sir, Come on sir, Excuse me sir, Please sir, Beg your pardon sir, I know sir, Good night, Good-bye sir, very well, thanks sir ...... என்று சொல்வதினாலும், கையெழுத்து அல்லது விலாசமோ இங்கிலீசில் போடு வதினாலும், இங்கிலீஷில் தெரியவில்லையே என்று காட்டிக் கொள்ள லஜ்ஜையாகிறது. ஹவுசில் பேசுவது சரியாய்க் கேட்பதற்கு இப்பால் கருவிகள் அமைந் திருந்தும், பக்கத்தில் தெரிந்தவர்கள் பேசுவது கேட்க வில்லையே, என்ன சொல்கிறார் என்று சுயபாஷையில் தெரிந்து கொள்வதுமாய் இருக்கிறது. அத்தகைய கனவான்கள் சுயபாஷையில் விவகரிக்கும் போது, அவர்களது ஜீவனோபாயத்தில் அவர்களுக்குத் தோன்று கிறபடி விலையுள்ள டயத்தை வீணாக்கி இந்தக் கௌன் சிலுக்குக் காலத்தைக் கொடுப்பது வருந்தத்தக்கது.

ஒரு மாஜிஸ்டிரேட் என் சம்பந்தமான ஒரு கேசில் கௌரவமான லாயர் ஆஜராகி விவகரிக்கும்பொழுது, 'ரெலவன்ஸி' என்றால் என்ன என்று கேட்டார். அவரது இங்கிலீஸில் செய்யும் நடவடிக்கைகள் ஹைகோர்ட்டு வரை

வரத்தக்கது. விசேஷ பணச் சிலவு செய்து அறியக்கூடிய ஆங்கில பாஷையை நான் குறை கூறுவதாக நினைக்கப் படாது.

என்னுடைய அனுபவத்தில் தமிழுக்குச் சரியான இங்கிலீஸ் டிரான்ஸ்லேஷன் செய்வது பெரிய ஆனர் வாங்கியவர்களும் யோசனையாய் விடுகிறார்களென்பது அறிந்த விஷயம்.

மலையாளமோ தமிழை ஆதரித்துள்ளது. அதிலிருந்து வந்திருப்பவர்கள் பூரணமாக ஆங்கில ஞானத்தை அடைந்தவர்களாகவும் இந்துஸ்தானிகள் பூராவும் தமிழே சுயமாகவும் இங்கிலீஷும் தேர்ச்சி உள்ளவர்களாயிருக் கிறார்கள். கன்னடம், தெலுங்கில் சிற்சிலர் அவர்களது சுயபாஷையோடு இங்கிலீஷ் தெரிந்தவர்களாயிருக்கிறார் கள். ஆகவே, தமிழே விசேஷமாய் தெரியக் கூடியதாயும் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை.

எப்படியிருந்தாலும், 2, 3 பாஷையில் நடவடிக்கை பிரிண்டாவதில் இது ஒரு சிலவாகச் சொல்லப்படாது. அப்படிச் சொல்பவை சரியான காரணமாயும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாயுமில்லை. ஏனெனில், 1920—ஆம் வருஷத்திலேயே ஒப்பற்றவரும், கிடைக்கக் கூடாதவருமான ஆனரபிள் இராசகோபாலாச்சாரியரவர்கள் பிரசிடெண்ட் டயத்தில் தமிழுக்கு ஷார்ட்ஹாண்டு சாமிநாதய்யரை நியமித்திருந்தார். அப்போது என்னை அன்னியில் என்னைப் போலுள்ள நண்பர்கள் பேச யோசனையாய் இருந்தார்கள்; அதையுத்தேசித்து அந்தப் போஸ்டை வெகு நாளைக்குப் பிறகு இலாபமாக்கி விட்டார்கள்.

சமீபத்தில் வந்திருந்த கனம் பொருந்திய சைமன் கமிஷனர் அவர்கள், இந்து பிராவின்சுக்கு ஏன் அதிகமாக 250 மெம்பர்களாக்கப்படாதென்று யோசித்தார். அப் போது அதை மதுரையில் ஆக்ஷேபித்துச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆனாலும், அவர்களது மேநாட்டின் கன

வான்களை அறிந்த சுபாவத்தினால் விசாலமான மனதுடையவராகச்சே அவரது ரிப்போர்ட்டில் அதிக மெம்பர் கண்டிருக்கிறதாக அறிகிறேன். அப்படியானால், இந்த ஹவுஸ் புதிதாக வேறேதான் அமைக்க வேண்டி வரும். நேர்ந்தால், யார் வருவார்களென்று இப்பவே எனக்கு தோன்றுகிறது. அப்போது பிரசிடெண்டு அவர்களுக்கு ஆர்டர், ஆர்டர் என்று சொல்ல டயம் கிடைக்குமா என்பதில் சந்தேகிக்கிறேன்.

இந்த ஆங்கில பாஷையை யான் அறியாததற்கு எனது பெற்றோர்கள் கடமையாயினும், எனது தௌர் பாக்கியமே காரணம் என்பதை மிக்க கவலையுடன் தெரிவிக்கிறேன். தெளிவாயும் உண்மையாயும் ஜனங்களின் பிரதிநிதிகளுக்குச் செய்ய வேண்டியது இராச கடமையாகும். அதற்கு இடமில்லாது கொடுத்திருக்கும் சுதந்திரம் போலியாயிருப்பதை சொல்லத் தேவையில்லை.

ஆனரபிள் பிரசிடெண்டு அவர்களும் இதை ஊர்ஜிதத்துக்கு நடைபெறுத்த அவர்கள் ஆலோசனையோடு சீக்கிரம் கைப்பற்ற வேண்டும். ஆகையால், தயவு செய்து தமிழிலும் தெலுங்கு இங்கிலீஷ் பாஷையிலும் அஜெண்டா, கொஸ்சன், ரிசல்யூஷன்களும் பிரிண்டாக வேண்டுமென்றும் ஒவ்வொருவர் ஸ்பீச்சுகளின் முடிவை இரண்டு வார்த்தையில் ரொம்ப சுருக்கமாயும் சங்கிரகமாயும் ஹவுசில் சொல்வதற்கு ஒரு டிரான்ஸ்லேடரை அல்லது செக்ரெடரியை அனுமதி செய்ய வேணுமாய் பிரார்த்திக்கிறேன்.'' என்றார்.

மாண்புமிகு திரு ஏ.ஒய்.ஜி. கேம்ப்பெல் அவர்கள் (நிர்வாகக் குழு உறுப்பினர்):

''மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டுமென்ற அடிப்படையில் இத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஒரிசா மாநிலமும், கன்னட மாநிலமும் அமைக்கப்பட வேண்டுமென்ற விருப்பத்தையும் தெரிவித்து இருக்கிறார்கள். ஆந்திர மாநிலம் அமைய வேண்டுமெனவும்

சொல்லுகிறார்கள். இதைப் போன்ற தீர்மானம் முன்னரே இந்தச் சபையில் கொண்டு வரப்பட்டிருக்கிறது. 1927—ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் பிரிக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஒரியா மொழி பேசக்கூடிய பகுதிகளைத் தனி நிருவாகத்தின் கீழ் கொண்டு வரவும், சட்டமன்றக் கீழ் அவையில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கிறது. இத்தகைய தீர்மானங்கள் உணர்ச் சியின் அடிப்படையில்தான் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன என்பதை நாம் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். இப்பிரிவினையினால் நிருவாகச் சங்கடங்கள் ஏற்படும் என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. இதனால் நிதிப் பற்றாக்குறையும் ஏற்படும். புதிய மாநிலங்கள் தன்னுடைய தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய வலிமை வாய்ந்ததாயும் நிருவாக இயந்திரத்தைத் தாங்கு வதாயும், வளர்ச்சிப் பணிகளுக்குப் போதிய நிதி வசதி உடையதாயும் அமைய வேண்டும். இருப்பினும் தனி மாநிலங்கள் அமைய வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்பினால், இதற்காகத் தனியான தீர்மானங்களைக் கொண்டு வர வேண்டுமே தவிர, வெட்டுப் பிரேரணை மூலமாகத் தங்களுடைய கருத்தைத் தெரிவிக்கக் கூடாது. ஆகவே, ஒவ்வொரு உறுப்பினருடைய தெளிவான எண்ணத்தைப் புரிந்து கொள்ளத் தனித் தீர்மானம் அவையின் முன் கொண்டு வர வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

வெட்டுப் பிரேரணையை ஆதரித்து 36 உறுப் பினர்களும், எதிர்த்து 50 உறுப்பினர்களும் வாக்களித் தார்கள். ஆகவே, தீர்மானம் தோல்வியுற்றது.

1933—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21—ஆம் நாள் சட்ட மன்றத்தில் திரு ஏ.எஸ்.சகசானந்தம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் யூனிவர்சிடி வேண்டுமென்று கிளர்ச்சி நடந்ததன் பயனாக இந்தக் கவுரவம் வாய்ந்த சபையின் மூலம் இராமநாதபுரம் அரசனைத் தலைவராகக் கொண்ட கமிட்டி ஒன்று தோன்றியது. அதில் நமது 2—ஆவது மந்திரி கனம் பி.டி.இராசன் அவர்களும் அங்கத்தினராய் இருந்தார்கள். அந்தக் கமிட்டி சிதம்பரம் வந்திருந்தபொழுது, தமிழ் யுனிவர்சிடியை வைப்பதற்கு விரும்பினார். இருக்கிற யுனிவர்சிடிகள் போதாதா? அதற்காக மற்றுமோர் யுனிவர்சிடி வைக்க வேண்டுமா எனப் பலர் ஆட்சேபித்தார்கள். அது சமயம் மந்திரியாயிருந்த கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் சென்னை யுனிவர்சிடியால் தமிழர் நாகரீகத்தைப் பிரதானமாக வெளிப்படுத்த முடியவில்லை; மற்றைய நாட்டினருக்கும் தமிழர் மேன்மையை அறிவிக்கும் வண்ணம் தமிழ் நாட்டில் ஒரு தமிழ் யுனிவர்சிடி இருத்தல் அவசியமெனப் பேசினார். அண்ணாமலை யுனிவர்சிடி தோன்றிய பின், முதல் பட்டமளிப்பு விழாவில் அதன் ஸ்தாபகரும் வைஸ்—சான்ஸ்லரும், இருவரும் இது தமிழ் அபிவிருத்திக்கு ஏற்பட்ட நிலையம் என்று சொன்னார்கள். ஆனால்,இந்த யுனிவர்சிடியில் எது பிரதானமாகக் கருதப்படுகிறதென்பதை அதன் செலவினத்தால் காணலாம். அண்ணாமலை யுனிவர்சிடியின் 1932—33—ஆம் ஆண்டுகளில் வரவு—செலவுகளின் புள்ளி விவரம்:—

| | |
|---|---|
| இங்கிலீஷ் | ரூ.24,000/— |
| சமஸ்கிருதம் | ரூ.17,300/— |
| கணிதம் | ரூ.15,400/— |
| சரித்திரம் | ரூ.15,400 |
| தமிழ் | ரூ.15,000/— |

தமிழ் யுனிவர்சிடி என்று பெயர் படைத்துள்ள அண்ணாமலை யுனிவர்சிடியில் தமிழ் கடைசி ஸ்தானத்தைப் பெறுவது நியாயமாகுமா? சமஸ்கிருத காலேஜில்

சேர்ந்து படிப்பவருக்கும், தமிழ்க் காலேஜில் சேர்ந்து படிப்பவருக்கும் நூறு ஸ்காலர்ஷிப்புகள் ஏற்படுத்தியுள்ளார்கள். ஆனால், சமஸ்கிருத காலேஜில் 36 மாணவர்களுக்கு மேல் சேரவில்லை தமிழ்க்காலேஜில் 75 மாணவர்கள் சேர்ந்த படித்து வருகிறார்கள். சமஸ்கிருதத்திற்கு மாணவர்கள் கிடைக்காமையால், அதனைத் தமிழ் மாணவர்களுக்குக் கொடாமல் வேறு இனத்திற்குச் செல வழித்தது தமிழின் மீது அதன் நிருவாகத்தினர் கொண்டுள்ள வெறுப்பையல்லவா காட்டுகிறது? சமஸ்கிருத காலேஜுக்கு ஆசிரியர்கள் 13 பேர்கள்; 75 மாணவர்கள் படிக்கும் தமிழ்க் கல்லூரிக்கு ஆசிரியர் எண்மர். சமஸ்கிருத காலேஜுல் படித்த மாணவர்கள் முப்பத்தெட்டில் இருவர்தான் பரீட்சைக்கு போனார்கள். அந்த இரண்டு பேர்களும் பாசாகாமல் போய் விட்டார்கள்.

தமிழ்க் காலேஜுல் படிப்பவர்கள் எழுபத்தைந்து பேர்கள். எப்ஃ.ஏ, பி,ஏ., ஹானர்ஸ் முதலான வகுப்பில் தமிழ் படிக்கும் மாணவர்கள் சுமார் இருநூறு பேர்களுள்ளார்கள். தமிழாசிரியர்கள் மொத்தம் 8 பேர்கள். ஆங்கிலக் கல்லூரி மாணவர்களுக்குப் போதிக்க நான்கு பேர்கள் போவார்கள். மீதம் நான்கு ஆசிரியர்களே தமிழ்க் கல்லூரி ஆசிரியர்கள். இந்த நான்கு பேரும் 75 மாணவர்களுக்கு ஆசிரியர்கள். தமிழ்க் கல்லூரி மாணவர்கள் 12 பேர்கள் பரிக்ஷைக்குப் போனார்கள். அவர்கள் 10 பேர்கள் பாஸானார்கள். ஆங்கிலம் ஹானர்ஸ் படிப்பவர்களில் 9 பேர்கள் தமிழ் எடுத்துள்ளார்கள். அதில் அரை ஸ்காலர்ஷிப் இரண்டு பேருக்குக் கிடைக்கிறது சமஸ்கிருதம் எடுத்தவர்கள் எல்லோரும் உதவி பெறுகிறார்கள். அடுத்த வருஷம் தமிழ் ரீடர் ஒருவர் போட்டால்தான் வகுப்புகள் நடைபெறும்; இல்லாவிட்டால் ஒரு வகுப்பு நின்றுவிடும் என்றும் அதற்காக ஒரு ரீடர் போடவேண்டுமென்றும் கேட்டார்கள். 1933—ஆவது வருஷம் சனவரி மாதம் நடைபெற்ற சிண்டிகேட்டில் இதற்கு இருவர் தவிர மற்ற மெஜாரிட்டி

யார் ஒத்துக் கொண்டார்கள். கல்வி இலாகா டைரக்டர் முதல் ஆறு பேர்கள் ஒத்துக் கொண்டார்கள். இருவர் வேண்டாமென்றார்கள். பிப்ரவரி மாதம் நடந்த மீட்டிங் கில் அது வேண்டாமென்று பாஸ் பண்ணினார்கள். இதனால், அடுத்த வருஷம் தமிழ் ஹானர்ஸுக்கு உபாத்தி யாயர் இல்லை. தமிழ் ஹானர்ஸ் இந்த யுனிவர்சிடியைத் தவிர வேறு எங்குமேயில்லை'' என்றார்.

1935—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13—ஆம் நாள் சட்ட மன்றத்தில் திருமதி கே.அலமேலு மங்கத்தாயாரம்மாள் சட்டமன்றத்திற்கான மானியக் கோரிக்கை மீது ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்து பேசினார். அவருடைய தமிழ்ப் பேச்சு ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுக் குறிப்பில் காணப்படுகிறது:—

''1934—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14—ஆம் நாள் அன்றும் தமிழ் சுருக்கெழுத்தாளர்கள் நியமிப்பது குறித்து நான் பேசினேன். ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர்கள் பத்துப் பேர் உள்ளனர். தமிழிலே நன்றாகப் பேசக்கூடிய ஐந்து உறுப்பினர்களும், தமிழிலே பேசும் ஆர்வம் உள்ள மற்ற உறுப்பினர்களும் இந்த அவையிலே உள்ளனர். அப்படிப் பட்டவர்கள் ஏன் தமிழிலே பேசுவதில்லையென்றால், தாங்கள் பேசிய பேச்சை ஆங்கிலத்திலே மொழி பெயர்த்து, அலுவலகத்திலே கொடுக்க வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதனால்தான். தொகுதி மக்கள் தங்களுடைய தாய் மொழியில் சொல்லுகிற கருத்தையும் குறைகளையும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்கள் அரசுக்கு அப்படியே தெரிவிக்க வேண்டும். தமிழிலே எழுதக்கூடிய சுருக்கெழுத்தாளர்கள் இல்லாத குறையினால், உறுப்பினர் கள் பேச முடிவதில்லை. இம்மாநிலத்தில் பிரதான மொழி தமிழாகும். தமிழிலே பேசப்படுவதை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது கடினமாக இருப்பதாலும், அப்படியே மொழி பெயர்க்கப்பட்டாலும், மொழி பெயர்ப்பில் தவறுகள்

நேர்ந்து விட்டால் செய்தித்தாளில் செய்திகள் திரிந்து வெளியிட வாய்ப்பாகி விடும். ஆகவே, தமிழ் சுருக் கெழுத்தாளர்கள் கட்டாயமாக நியமிக்கப்பட வேண்டும்''.

மாண்புமிகு சர் ஹோராட்டன் ஸ்டோக்ஸ் (நிதித்துறை உறுப்பினர்) அவர்கள் திருமதி அலமேலு மங்கத் தாயாரம்மாள் கொண்டு வந்த வெட்டுப் பிரேரணைக்குப் பதிலளித்துப் பேசினார்:—

''இப்பிரச்சினை பலமுறை இச்சபையில் எழுப்பப் பட்டிருக்கிறது. ஒரு சில உறப்பினர்களே தமிழிலே பேசுவதால், தமிழ் சுருக்கெழுத்தாளர்களுக்கு முழுநேர வேலை இருக்காது என்ற காரணத்தினால் இக்கருத்து ஏற்கப்படவில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னால், முன் பிருந்த சட்டமன்றத்தில் ஓர் உறுப்பினர் எழுந்திருந்து தான் தமிழில் பேசப் போவதாகப் பிடிவாதமாகச் சொன்னார். சட்டமன்ற உறுப்பினர்கள் இச்செய்கையைப் பார்த்து அயர்ந்து போனார்கள். அவ்வுறுப்பினர் எழுந்து, அவருக்கும் புரியாத நிலையில், தமிழிலே பேசுகின்ற உறுப்பினருடைய பேச்சு முடியும் வரை இடைவேளை உணவுக்காக அவையில் உள்ள மற்ற உறுப்பினர்கள் கலைந்து செல்லலாம் என்று சொன்னார். ஆகவே, நாம் தமிழிலோ தெலுங்கிலோ பேசினால், அதே நிலைமைதான் இன்றும் ஏற்படும். உறுப்பினர் சொன்ன யோசனையை நான் ஏற்கிறேன். ஆனால், இப்பிரச்சினையில் தீர்வு காண முடியாத நிலை இருக்கிறது. 1921—ஆம் ஆண்டு தமிழ்ச் சுருக்கெழுத்து தெரிந்த துணைக்காவலர் ஒருவர் நிய மிக்கப்பட்டார். அவருக்கு ஆங்கிலச் சுருக்கெழுத்தும் நன்றாகத் தெரிந்திருந்தது. ஆனால், போதிய வேலை யில்லாத காரணத்தினால் இம்முயற்சி கைவிடப் பட்டது. சட்டமன்றத்திற்குப் புதியதாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட உள்ளார்கள். அவர்களில் பலர் தமிழிலே பேச விருப்பப்பட்டால், தேவையான

எண்ணிக்கையில் சுருக்கெழுத்தாளர்களை நியமிக்க நான் தயாராயுள்ளேன்''.

நிதித்துறை உறுப்பினர் கொடுத்த வாக்குறுதியின் பேரில், திருமதி அலமேலு மங்கத்தாயாரம்மாள் தன்னுடைய வெட்டுப் பிரேரணையைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்.

*1938—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30—ஆம் நாள், 1938—39—ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்ட விவாதத்தின் மீது பதிலளித்து திரு சி.இராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஆற்றிய உரை:—*

''உருது என்று சொல்வதும், இந்துஸ்தானி என்று சொல்வதும், இஸ்லாம் மதத்துடன் எந்த வகையிலும் தொடர்புடையது அல்ல. இந்துஸ்தானி மொழி நம் நாட்டில் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பொதுவான ஒன்றாகும். இந்திய நாட்டிற்கு வெளியே வாழ்கிற எந்த முஸ்லீம் பெருமகனும், இந்துஸ்தானி மொழியை எந்த வகையிலும் பயன்படுத்துவதில்லை. அராபிய மொழியும், இந்துஸ்தானி மொழியும் வெவ்வேறானவை. துருக்கியில் இருப்பவர்களும், பெர்ஷியாவில் இருப்பவர்களும், அரேபியாவில் இருப்பவர்களும் இந்துஸ்தானி அல்லாத, அவரவர்களுடைய தாய் நாட்டு மொழியையே பயன் படுத்துகின்றனர். இந்துஸ்தானத்தில் இருப்பவர்களுடைய மொழி இந்துஸ்தானி. இந்துஸ்தானி இந்திய மக்களுடைய மொழியுமாகும். இதற்காக நாம் மிகவும் பெருமைப்பட வேண்டும். தமிழ் மக்களும் இந்துஸ்தானத்தின் ஒரு பகுதியில் வாழ்வதால், இந்துஸ்தானி மொழிக்கு ஆதரவு தர வேண்டும்.

வட இந்தியாவில், உருது மொழிக்கும் இந்தி மொழிக்கும் முரண்பாடு இருப்பதாகச் சிலர் சொல்லு கிறார்கள். இரு மொழி பேசுபவர்களும் சண்டையிட்டுக்

கொள்வது உண்மையே. அப்படிப்பட்ட மொழிச் சண்டையைத் தென்னகத்திலும் உண்டாக்க வேண்டும் என்று சிலர் விரும்புகிறார்கள். இம்முயற்சி ஆபத்தான ஒன்றாகும். இதனால் உயிர்ச்சேதம் ஏற்படலாம். ஒரு சில தேவையற்ற சந்தர்ப்பங்களை வட நாட்டினரும், தென்னாட்டினரும் சந்திக்க வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். வட நாட்டுச் சண்டையைத் தென் நாட்டிற்குக் கொண்டு வருவதால் இங்குள்ள மக்களுக்கும், நம் நாட்டிற்கும் பெரும் அநீதி இழைத்தவர்களாக நாம் ஆவோம். ஆகவே, வட நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் உருது மற்றும் இந்தி மொழிகளிலான சண்டையைத் தென்னிந்தியாவிலும் இடம் மாற்றி நிகழ்ந்து வருவது மிகவும் துரதிர்ஷ்டமாகும். இது அபாயகரமானதும், தேவையில்லாததுமாகும். வட இந்தியாவில் பேசப்படுகிற மொழி பல பிரிவுகளாக உள்ளது. வெவ்வேறு பிரிவினர் வெவ்வேறு விதங்களில் இந்தி மொழியைப் பேசுகின்றனர். தமிழ் நாட்டில் படித்தவர்கள் ஒரு விதமாகவும், படிக்காதவர்கள் கொச்சையாகவும் பேசுவது போல, வட இந்தியாவிலும் பேசப்படுகிறது. நம் மாகாணத்திலேயே, சேலத்தில் இருப்பவரும், திருநெல்வேலி, திருச்சி முதலான இடங்களில் இருக்கும் விவசாயிகளும் பல விதமாகக் கொச்சை மொழியில் பேசுவதை நாம் கேட்கிறோம். பிராமணர்கள் தமிழில் பேசுவது மற்றவர்கள் பேசுவதிலிருந்து மாறு பட்டது. ஆகவே, மாவட்டங்களுக்கிடையேயும் பல சாதியினருக்கிடையேயும் சமுதாயத்தில் படித்த பிரிவினருக்கிடையேயும் பேசப்படுகின்ற மொழி வித்தியாசப் படுகிறது. இது தமிழில் மட்டுமல்ல; பல மொழிகளிலும் இருக்கிறது.

இந்துஸ்தானியை நகரி எழுத்தில் எழுதினால், இந்தியாகிறது. இந்துஸ்தானியை உருது எழுத்தில் எழுதினால் அது உருது மொழியாகிறது. உருதுவில் பயன் படுத்துகிற எழுத்துக்கள், பாரசீக மற்றும் அராபிய

எழுத்துக்களாகும். இவ்வெழுத்துக்களெல்லாம் முகலாயர் படையெடுப்பாலும், அதற்கு முந்தைய முஸ்லீம்களாலும் வந்ததாகும். ஆகவே, உருது எழுத்துக்களை முஸ்லீம்களும் நகரி எழுத்துக்களை இந்துக்களும் பயன்படுத்துகிறார்கள். பஞ்சாப் மாநிலத்தில், இந்துக்கள் உருது எழுத்துக்களைத் தான் பயன்படுத்துகிறார்கள். அங்கு வாழும் இந்துக்களுக்கு நகரி எழுத்துக்கள் தெரியாது.

இந்துஸ்தானி என்ற வார்த்தைதான் தென்னிந்தியாவில் வழக்கில் இருக்கிறது. வட இந்தியாவில் தங்களுடைய விருப்பத்திற்கேற்ப உருது என்றோ இந்தி என்றோ அழைக்கிறார்கள். தக்காணத்து முஸ்லீம்களும் ஹைதராபாத் நிஜாம்களும் மற்றும் நவாபுகளும் தென்னிந்தியாவில் அம்மொழியை இந்துஸ்தானி என்று அழைத்தார்கள். இந்துஸ்தானி என்ற வார்த்தை வழக்கிலிருந்து மறைந்து மங்கி இப்பொழுது உருது என்றே நிஜாம் ஆட்சி செய்யும் பகுதிகளில் வழங்கப்படுகிறது. இதற்கு வரலாற்று மற்றும் அரசியல் காரணங்கள் உண்டு.

தென்னிந்தியாவில் 'இந்துஸ்தானி' என்று சொன்னாலே, மக்களைத் திசை திருப்பி முஸ்லீம்களாக மதமாற்றம் செய்து விடுவதாக அச்சப்படுகிறார்கள். ஆனால், இந்துஸ்தானி என்ற வார்த்தை தென்னிந்தியாவில் வழங்கப்பட்டு வருகிற ஒன்றாகும். இந்தப் பின்னணியில், இரண்டாவது பொது மொழியாக ஒரு மொழியை உருவாக்கும் இயக்கத்தில், காங்கிரஸ் கட்சி தன்னைப் பிணைத்துக் கொண்டது. அம்மொழியே இந்திய நாட்டின் பொது மொழியாகவும், மக்கள் தங்களுடைய கருத்துக் களைப் பரிமாறிக் கொள்ளும் சாதனமாகவும் அமையும் எனக் காங்கிரஸ் கட்சி நினைத்தது. நாம் அதை இந்தி என்றோ இந்துஸ்தானி என்றோ சொல்லலாம்; ஆனால், இது உருதுவிலிருந்து மாறுபட்ட ஒன்றாகும் என்று எடுத்துக் காட்டி விளக்குகிறது காங்கிரஸ் கட்சி. இந்த முறையில்தான்

இந்துஸ்தானி என்ற வார்த்தையைக் காங்கிரஸ் கட்சி பயன்படுத்தியது.

சந்தையில் பேசப்படுகிற மொழியும், கிராமங்களில் பேசப்படுகிற மொழியும் ஒன்றுதான். நன்றாகப் படித்தவர்கள், தங்களுடைய படிப்பின் காரணமாகவோ பழக்கத்தினாலோ அல்லது வழக்கத்தினாலோ சமஸ்கிருத வார்த்தைகள் அல்லது பெர்ஷியன் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறார்கள். நம்முடைய கலாசாரத்தை வளர்ப்பதற்காக ஒரு மொழியைச் சொல்லிக் கொடுக்க நாம் முயலவில்லை. இந்தியா முழுவதற்கும் மனிதனுக்கு மனிதன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளத்தான் ஒரு மொழி தேவைப்படுகிறது. உருது எழுத்துக்களைக் கொண்டோ தேவநாகரி எழுத்துக்களைக் கொண்டோ எழுதப்படும் ஒரு மொழியை உருவாக்கி, அதன் மூலம் எளிதாகக் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் முயற்சியில்தான் நாம் இறங்கியிருக்கிறோம். இரண்டு வகையான எழுத்துக்களையும் பயன்படுத்தி ஒரே வகையான பாடத்திட்டத்தை ஏற்படுத்துவதுதான் நம் கொள்கை. இதை இரண்டு மொழி என்பது மிகைப்படுத்திச் சொல்வதாகும். எந்தவிதத்திலும் இது இரண்டு மொழியாகாது தென்னிந்தியாவில் இதனால் எந்தவிதக் கஷ்டமும் வராது

இந்தத் திட்டத்தை எவ்வாறு செயல்படுத்தப் போகிறோம் என்று எதிர்க் கட்சித் தலைவர் கேட்கிறார். இம் மொழித்திட்டத்தை நிறைவேற்றுகிற நிறுவனங்களுக்கு முழு சுதந்திரம் கொடுக்கப்படும். உருது எழுத்துக்களைப் பயன்படுத்த விரும்புகிற முஸ்லீம் மாணவர்கள் உருது மொழியில் படிக்கலாம்; தேவநாகரி எழுத்தை விரும்புகிறவர்களுக்கும் அவ்வசதி கிட்டும்; தேவநாகரியில் படிக்கும் இந்து மாணவர்களுக்கு ஒரு வசதி உண்டு; அவர்கள் இந்தி மட்டுமல்லாமல், மராத்தி, குஜராத்தி என்று தேவநாகரி எழுத்தைப் பயன்படுத்துகிற பல இந்திய மொழிகளைக் கற்கலாம். அத்துடன் நில்லாமல்சமஸ்கிருதம்

கற்றுக் கொள்வதற்கும் இம்முறை வழிகோலும். ஆகவே, இந்து மாணவர்கள் தேவநாகரி எழுத்துதான் தேவை என்று விரும்பிக் கேட்க உரிமையிருக்கிறது. அதே போல் தேவையானால், உருது பேசுகின்றவர்கள் உருது எழுத்துக் கள்தான் வேண்டும் என்று கேட்கலாம். ஆனால், மொழி பொதுவானது; இதைப் பண்டிதர்களும், மௌல்விகளும் ஒப்புக் கொள்வார்கள்.

'நாங்கள் விரும்புகிற மொழியைக் கற்றுக் கொடுங்கள்' என்றும் கேட்கலாம். இப்படிக் கேட்பது தேவையற்றதாகும். நான் சொன்ன ஏற்பாட்டால் பலவித வசதிகள் உள்ளன. நம் முன்னோர்கள் இந்தியா முழுவதும் பேசக்கூடிய ஒரு மொழியின் அறிவைப் பெறக் கூடிய வாய்ப்பை நமக்கு அளிக்கத் தவறியது பெருங் குற்றமாகும். இது நம் மாநிலத்தைப் பாதிக்கக் கூடிய ஒன்றாகும் நமக்கு காலங்காலமாக ஏற்படப்போகும் பேரிழப்பாகும் இது. ஆகவே, நாம் அரசாங்கப் பொறுப்பிலிருக்கும் பொழுதே அத்தவறுகளைத் திருத்தி, ஏற்பட்டுள்ள வெறுமையைப் பூர்த்தி செய்ய வேண்டும். நாம் நாட்டின் மற்றப் பகுதி களுடன் தொடர்பு வைக்காமல் தவறிவிட்டால், நாம் நாகரிகம் அடைந்தவர்களாகக் கருதப்படமாட்டோம். அடிப்படைப் படிப்பிற்குப் பின்பும், நம் மாணவர்கள், கல்கத்தா, பம்பாய், பனாரஸ் போன்ற நகர வீதிகளில் பழக முடியவில்லை என்றால், நம்மை நாமே நாகரீகம் அடைந்தவர்களாகக் கருத முடியாது. இதை ஒரு பாரமாகக் கருத வேண்டியதில்லை. இதனால் பயமோ சந்தேகமோ கொள்ள வேண்டிய அவசியமுமில்லை.

மதிப்பிற்குரிய ரைட் ஹானரபிள் சாஸ்திரி அவர்கள் நிதானத்தை நான் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். அவர் சொல்வதும் சரிதான். ஆனால், இந்த முயற்சியில் எதை ஏற்றுக்கொள்ளலாம், எதை ஏற்றுக் கொள்ளக் கூடாது என்று தீர்மானிப்பதற்குரிய

உரிமையை எனக்கு அவர் வழங்க வேண்டும். இருப்பினும் என் முயற்சிக்கு அவருடைய பொதுவான ஆதரவு இருக்கிறது.

சொல்லிக் கொடுக்கப்படுகிற கல்வி இயல்பாக மட்டும் இருந்தால் போதாது என்பது ரைட் ஹானரபிள் சாஸ்திரி அவர்கள் ஆசிரியர் என்ற காரணத்தினால் அறிவார். அதில் 'கட்டாயத்தை' ஓரளவிற்குப் புகுத்த வேண்டும் என்பதையும் அவர் அறிவார். பள்ளிப் படிப்பு என்பது வற்புறுத்தப்படுகிற ஒன்று. ஏனென்றால், படிக்கிற மாணவனுக்கு ஒவ்வொன்றையும் சீர்தூக்கிப் பார்த்துத் தீர்மானிக்கத் தெரியாது.

கல்வி என்பது விலைமதிக்க முடியாதது; வேறு எதில் வேண்டுமானாலும் பரீட்சார்த்தமாக மாறுதலைச் செய்யலாம். படிப்பு என்பது நாம் கடந்து செல்லும் ஓடம் போன்றது. தண்ணீரில் இருக்கும் பொழுது ஓடத்தின் அடிப்பகுதியில் எப்படி பழுது பார்ப்பதுசரியில்லையோ, அதேபோன்று படிப்பிலும் கவனமாக மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று நமக்கு சாஸ்திரி அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார். அவர் சொல்வது போலவே கல்விதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை; ஆகவே, அடிப்படையில் நாம் முன்னேற்றம் காணாமல், மற்ற துறைகளில் நாம் முன்னேற்றம் காண முடியாது என்றார்.

*1938—ஆம் ஆண்டு மார்ச் 21—ஆம் நாள் 'மானியம் 15—கல்வி' என்ற மானியக் கோரிக்கையின் விவாதத்தில் கலந்து கொண்டு மாண்புமிகு முதல்வர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் ஆற்றிய உரை:*

''இந்துஸ்தானியைப் பொறுத்தவரையில் திரு கலிபுல்லா அவர்கள் மிகவும் காட்டமாகத் தாக்கிப் பேசினார். கட்டாயமாகப் பள்ளிகளிலே இந்துஸ்தானி மொழியைப் புகுத்தியது தவறு என்று அவர் சொன்னார்.

ஒரு நாட்டிற்குப் பொதுவான மொழி தேவையில்லை என்று அவர் சொன்னார். பல நாடுகளில் பொது மொழி இல்லை. அப்படியிருக்கையில் நாம் மட்டும் ஏன் கவலைப்படு கிறோம் என்றார் அவர். பள்ளிகளில் இந்துஸ்தானியைப் புகுத்துவதன் மூலம் ஒரு பொது மொழியை உண்டாக்கி விடுகிறோம் என்பது பொருளல்ல. இந்துஸ்தானி ஏற்கனவே நம் நாட்டின் பெரும் பகுதியில் பொது மொழியாக இருக்கிறது; ஆகவே, நம் மாணவர்கள் அம் மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் நான் சொல்லுகிறேன். தென்னிந்திய மக்களும், படித்தவர்களும் இந்துஸ்தானி மொழியைக் கற்றுக் கொள்ளக் கூடாது என்றும், தென்னிந்தியா மொழியைப் பொறுத்த மட்டில் தனித்தே இருக்க வேண்டுமென்றும் அவர் சொல்வாரே யானால், அவர் கூற்றிலிருந்து நான் மாறுபட்டேயாக வேண்டும். இரண்டு வகையான எழுத்துக்கள் இருக்கின் றனவே; அப்படியிருக்கையில் பொதுவான மொழி அங்கில்லையே என்பதும் அவர் கூற்று. ஒரே எழுத்தைப் பயன்படுத்தினாலும் அவர் எதிர்க்கிறார். இரண்டு வகையான எழுத்துக்கள் இருந்தாலும் எதிர்ப்பதாகச் சொல்லுகிறார். பொது மொழி ஒன்று பெரும்பாலான பகுதிகளுக்கு இருக்கிறது. இரண்டு வகையான எழுத்துக்கள் இருப்பதனால், இந்த நிலைமையில் பாதிப்பு ஏற்பட்டு விடாது. ஐக்கிய மாகாணத்திலும், பஞ்சாபிலும் இரண்டு வகையான எழுத்துக்கள் இருந்தாலும், பொது மொழியைப் பயன்படுத்தி மக்கள் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொள்வதுடன், மற்றக் காரியங்களையும் சுமுகமான முறையில் நடத்துகிறார்கள். ஆகவே, நம்முடைய கொள்கை யைக் கடினமானதாகவோ நடைமுறைக்கு ஒத்து வராத தாகவோ கருத முடியாது.

இந்துஸ்தானி மொழியை ஓரளவு தெரிந்து கொள் வதனாலேயே வேலை வாய்ப்பு இருப்பதாகவும், அம் மொழியில் பழக்கம் இல்லாததனால் வேலை வாய்ப்பு

நழுவி விடுவதாகவும் ஒரு தோற்றத்தை உண்டாக்குவது சரியல்ல என்று கலிபுல்லா அவர்கள் கூறினார்கள். நம்முடைய மாகாணத்திலும் வேலையின்மை இருக்கிறது. மொழியை வைத்து வேலைவாய்ப்புப் பிரச்சினையை எவ்வாறு சமாளிக்கப் போகிறோம் என்கிறார் அவர் சிறிதளவு படிப்பும், வேலையில் அனுபவமும் உள்ள ஒரு தென்னாட்டு இளைஞர் வடநாட்டிற்குச் சென்றால், இந்துஸ்தானி மொழி தெரிந்திருப்பதனால் வேலையில் சேர்த்துக் கொள்ளப்படும் சந்தர்ப்பம் இருக்கிறது. ஆகவே, இந்துஸ்தானி மொழியைக் கற்பதனால், நம் இளைஞர்களின் வேலை வாய்ப்பிற்கான சந்தர்ப்பம் அதிகப்படுகிறது என்பதே என் கருத்தாகும்.

இந்தி என்பது சமஸ்கிருதமோ அல்லது திராவிட வார்த்தையோ அல்ல. இது பெர்ஷியன் சொல்லாகும். இந்திய நாட்டின் மொழி இந்தியாகும். கனடா நாட்டிற்கோ அமெரிக்க நாட்டிற்கோ ஒரு முஸ்லீம் சென்றால் அவர் இந்துவாகத்தான் கருதப்படுவார். ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட இங்கிலாத்துக்காரர்ஆங்கிலேயராக எப்படிக் கருதப்படுவாரோ அதேபோல, இந்துஸ்தானத்தின் மொழி இந்தியாகும்.

தாய்மொழியில் கல்வி கற்பது மிகவும் முக்கியமாகும். தென் மாவட்டங்களில் தெலுங்கு பேசும் மாணவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுடைய வீடுகளில் தெலுங்கிலே பேசுவார்கள். ஆனால், தமிழில் கல்வி கற்பதனால் எந்தவித சங்கடமும் அவர்களுக்குக் கிடையாது. ஏனென்றால், அவர்களைச் சுற்றித் தமிழ் பேசுபவர்கள் இருப்பதனால்தான் என்றார்.

1938—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31—ஆம் நாள், திரு கே.பி.மல்லிகார்ஜுனுடு அவர்கள், மொழிவாரி மாகாணங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை முன் மொழிந்தார். அத்தீர்மானமாவது:

''தமிழ், தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் ஆகிய மொழிகள் பெரும்பான்மையாகப் பேசப்படுகிற பகுதிகளை இணைத்து, 1935—ஆம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டத்தில் 290—ஆம் பிரிவின்படி தனித்தனி மாகாணங்களாக அமைக்க, மேன்மைதங்கிய அரசருக்கு இம்மாமன்றம் மத்திய அரசின் வழியாகப் பரிந்துரைக்கிறது'' என்றார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

''1870—ஆம் ஆண்டு சர் ஜார்ஜ் செஸ்னி என்பவர், மொழியின் அடிப்படையில் ஒரிசா மாநிலம் அமைய வேண்டும் என்றார். 1900—ஆம் ஆண்டு சர் பிரான்ஸிஸ் யங் ஹஸ்பென்ட் என்பவர் மொழிகளின் அடிப்படையில் மாநிலங்கள் அமைய வேண்டும் என்றார். 1902—ஆம் ஆண்டு லார்ட் கர்ஸான் அவர்கள் எல்லை மற்றும் நிருவாக அமைப்புகள் மாற்றி அமைப்பது மிகவும் அவசரமும் அவசியமுமாகும்'' என்றார்.

1911—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 11—ஆம் நாளிட்ட லார்ட் ஹார்டின்ஜ் அவர்களுடைய பிரசித்தமான கருத்து எல்லோருக்கும் தெரிந்ததே. பேசப்படு கிற மொழியின் அடிப்படையிலும் இனங்களின் அடிப்படையில் புதிய எல்லையை வகுத்தால்தான் இந்திய மக்கள் வளர்ச்சியடைய முடியும்' என்று எழுதினார்.

1919—ஆம் ஆண்டின் சீர்திருத்தச் சட்டத்திற்கு முன்பாக வந்த கூட்டுப் பாராளுமன்றக் குழுவின்முன், சர் லயணல் கர்டிஸ் அவர்கள் வைத்து மனுவின் பகுதியில் குறிப்பிட்டதாவது: 'சமுதாயம் மற்றும் மொழி வழிப் பிரிவினை மூலம்தான் மாகாண சுயாட்சியை இந்திய நாட்டில் கொண்டு வர முடியும். எதிர்காலச் சமுதாயத் திற்கு இம்முறை நிரந்திர பயனளிக்கும்' என்றார். ஆங் கிலத்தில் அரசாங்கத்தை நடத்துவதுதான் மக்களாட்சி முறையை இந்தியாவில் கொண்டு வருவதற்குத் தடையாக இருப்பது

என்று அவரே 'இந்திய மக்களுக்கு என் கடிதங்கள்' என்ற புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிட் மோதிலால் நேரு அவர்களுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:—

'பேசப்படும் மொழிகளின் அடிப்படையில் மாகாணங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். இன்று மாகாணங்கள் பிரிக்கப்பட்டிருப்பதில் எந்தவித அடிப்படை விதிகளும் பின்பற்றப்படவில்லை. அரசாங்கம் நடத்துவதற்கும் இப்போதுள்ள நிலைமை பயனற்றதாக உள்ளது. ஆகவே, பொருளாதார அடிப்படையிலும் ஒரே மொழியைப் பேசுகின்ற மக்களின் விருப்பத்திற்கேற்ற படியும்மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதே நேரு கமிட்டியின் அறிக்கையாகும்.

வசதியான எல்லைக்கோட்டில், ஒரே மொழியைப் பேசும் மக்களை உள்ளடக்கி. சுயதேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் பகுதியைத் தனி மாகாணமாக ஆக்க வேண்டும் என்று சைமன் கமிஷனும் சுட்டிக் காட்டியுள்ளது.

1917—ஆம் ஆண்டிலேயே காங்கிரஸ் மகாசபையும், மொழிவழி மாகாணங்கள் அமைய வேண்டும் என்ற கொள்கையை ஒப்புக் கொண்டு உள்ளது. தமிழர்களும் தெலுங்கு, கன்னடம் மற்றும் மலையாளம் பேசுபவர்களும் ஒரு தேசியத் தனித்தன்மை பெற்றவர்கள். அவர்கள் தங்களுடைய பழம் பெருமையை உணர்ந்தவர்கள். ஆந்திர மக்களை மட்டும் எடுத்துக் கொண்டால், அவர்கள் வாழும் பகுதி 82,000 சதுர மைல்களாகும். 1.9 கோடி மக்கள் இப்பகுதியில் வாழ்கிறார்கள். ஆந்திர மாநிலம் என்று ஒன்று ஏற்பட்டால், அஸ்ஸாம், வட கிழக்கு எல்லை மாகாணம், ஒரிஸ்ஸா, சிந்து மற்றும் பீகார் போன்ற மாநிலங்கள் எல்லாவற்றையும் விடப் பெரிதாக அமையும். இப்படிப் பட்ட புள்ளி விவரங்களை எடுத்து வைப்பதிலிருந்தே ஆந்திர மாநிலம் அமைப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கிறது என்பதை நீங்கள் உணர்வீர்கள். இருந்தாலும்,

இதற்கு இப்பொழுது என்ன அவசரம் என்று நீங்கள் கேட்பீர்கள்!

முதலாவதாக, இதைத் தீர்மானிப்பதில் ஏற்கனவே காலதாமதமாகி விட்டது. இரண்டாவதாக, மக்களுடைய ஆட்சி இப்பொழுது நடைபெறுகிறது. புதிய மாகாணங் களை உண்டாக்க வேண்டுமென்று மக்கள் விரும்புகிறார்கள். மூன்றாவதாக, புது மாகாணத்தை உண்டாக்குவதில் இங்கிருக்கும் சட்டமன்றத்தில்தான் முயற்சி எடுக்கப்பட வேண்டும். நான்காவதாக, மாகாணங்களை மொழி வாரியாகப் பிரிப்பதன்மூலம்தான், எதிர்கால ஐக்கியத்தை உண்டாக்க முடியும். ஐந்தாவதாக, பொறுப்புள்ள அரசாங்கங்கள் ஏற்படுவதற்கு மாகாணங்கள் புதியதாக அமைய வேண்டுமென்று சைமன் கமிஷன் குறிப்பிட் டுள்ளது.

ஆந்திர மாநிலம் அமையவோ புதிய மாகாணங்கள் அமைப்பதற்கோ ஏதாவது போராட்டம் நடந்திருக்கிறதா என்றும் கேட்கலாம். ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டுமென்று சென்ற 25 ஆண்டுகளில் பலவிதப் போராட்டங்கள் நடைபெற்று வந்திருக்கிறது. மாநாடுகள் கூட்டப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

*1921*—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *21*—ஆம் நாள் டெல்லி சட்டமன்றத்தில் மாகாணங்களை மொழி வாரியாகப் பிரிக்க வேண்டும் என்ற பொதுவான தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

*1922*—ஆம் ஆண்டு பிப்ரவரி *3*—ஆம் நாள் மீண்டும் அப்படிப்பட்ட தீர்மானம் திரு ஜெயந்தி ராமய்யா பந்துலு அவர்களால் சட்டமன்றத்தில் கொண்டுவரப்பட்டது.

*1927*—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் *16*—ஆம் நாள் திரு வி.இரமதாஸ் பந்துலு அவர்களால் மேலவையில் மீண்டும் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

*1927*—ஆம் ஆண்டு மார்ச் மாதம் *17*—ஆம் நாள் சென்னை சட்டமன்ற மேலவையில் திரு பி.ஆஞ்சநேயலு அவர்களால் தீர்மானம் கொண்டு வரப்பட்டுப் பெரும் பான்மையான உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டது.

*1928*—ஆம் ஆண்டு மார்ச் மாதம் *28*—ஆம் நாள் ஒரு வெட்டுப் பிரேரணை திரு ஏ.காலேஸ்வர ராவ் அவர்களால் கொண்டுவரப்பட்டு, ஆந்திர மாநிலம் பற்றிய விவாதம் நடைபெற்றது.

*1935*—ஆம் ஆண்டு மார்ச் மாதம் *13*—ஆம் நாள் திரு கோடி ரெட்டி ஒரு வெட்டுப் பிரேரணை கொண்டு வந்து ஆந்திர மாநிலம் அமைப்பது பற்றி விவாதிக்கப்பட்டது.

*1933*—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் *2*—ஆம் நாள் திரு ஹரீஷ் சந்திராவினால் தீர்மானம் கொண்டு வரப் பட்டது.

பல மனுக்களும் அவ்வப்பொழுது கொடுக்கப் பட்டது என்றாலும், வட்டமேஜை மாநாடுகளுக்குத் திரு மோச்சேர்லா இராமச்சந்திர ராவ், திரு வி.வி.கிரி முதலியோர் கொடுத்தவை குறிப்பிடத்தகுந்தது.

இவ்வாறு புது மாநிலங்கள் கேட்பதால், நம் நாட்டின் ஒற்றுமைக்குக் குந்தகம் ஏற்படும் என்ற குற்றச் சாட்டைச் சுமத்துகிறார்கள். நம்முடைய பல போராட்டங் கள் மூலம் நாட்டின் ஒற்றுமையைப் பலப்படுத்தியிருக் கிறோமே தவிர, எந்த வழியிலும் குந்தகம் விளையும் முயற்சியில் நாம் ஈடுபடவில்லை. நம் நாட்டு மக்களின் அறிவும், தலைவர்களின் தொலை நோக்கும் நம்மை எதிர்காலப் பிரிவினைச் சக்திகளிலிருந்து கட்டாயம் காப்பாற்றும் என நிச்சயமாக நான் நம்புகிறேன். புது மாநிலங்கள் அமைக்கப்படுவதால், கூடுதல் சிலவு ஆகும் என்றும் சொல்லப்படுகிறது. நம்முடைய அரசியல் வளர்ச்சியில் இக்கூடுதல் சிலவு தேவை என்றே நான்

கருதுகிறேன். எல்லைகளைப் பிரிப்பதனால் சிறிய சச்சரவுகள் ஏற்படும் என்கிறார்கள். இப்படிப்பட்ட பிரச்சினைகளை எதிர்காலத்தில் எல்லைக் கமிஷன் போடுவதனால் எளிதாகச் சமாளித்து விடலாம். மற்றும் பல நிருவாகக் குழப்பங்கள் ஏற்படலாம் என்ற அச்சத்தையும் தெரிவித்தார்கள். நம்முடைய தலைமை அமைச்சர் இந்தக் குழப்பங்களையெல்லாம் தீர்த்து வைக்கக்கூடிய வல்லமை படைத்தவர்.

திரு கே.பி.மல்லிகார்ஜுனுடு கொண்டு வந்த தீர்மானத்தைத் திரு வி.வி.ஜோகைய பந்துலு வழிமொழிந்து பேசினார். அவரைத் தொடர்ந்து டாக்டர் சர் கே.வி.ரெட்டி நாயுடு உரையாற்றினார். அவரைத் தொடர்ந்து திரு ஏ.அரங்கசாமி அய்யங்கார் பேசியதாவது:—

''மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பதற்குக் கொண்டு வந்துள்ள இத்தீர்மானத்தை நான் ஆதரிக்கிறேன். மொழிவழி மாகாணங்களைப் பிரிப்பதென்பது உண்மை யான பிரச்சினை அல்ல. அயல்மொழியில் நாம் சட்ட மன்றத்தையும் நீதிமன்றத்தையும் நிருவாகத்தையும் நடத்தி வருகிறோம். இந்த நிலை நீடிக்குமென்றால், சாதாரண மக்கள் நம்முடைய அரசாங்க நடப்பில் எந்தவிதப் பங்கும் எடுத்துக் கொள்ளாமல் ஒதுக்கி விடப்படுவார்கள். இதனால் நம்மை நாமே ஆளக்கூடிய நிலைமை வராமல் தள்ளிப் போய்விடும் என்பதுதான் உண்மையான பிரச்சினை. மக்களுடைய தாய் மொழியில் சட்டமன்றத்தையும் நிருவாகத்தையும் நடத்தினாலொழிய, நம்முடைய மக்களுக்குப் பொறுப்பான அரசாங்கம் இல்லையென்ற நிலைமை ஏற்பட்டு விடும். இந்திய அரசியல் சட்ட விதிகள் எப்படி மாற்றப்பட்டாலும் விரிவு பெற்றாலும் மக்களுடைய நேர்முகப் பங்கு அதிகமாக்கியாக வேண்டும். ஆந்திர மாநிலம் எப்படி வேண்டுமென்று கிளர்ச்சி செய்கிறார்களோ அதேபோன்று தமிழ் மொழி பேசுபவர்களுக்குத் தனி மாநிலம் தேவை. இன்று பல்கலைக் கழகங்களிலே

படித்துவிட்டு அறிஞர்களாக இருக்கின்றவர்களின் எண்ணங்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் வேறானது. சாதாரண மனிதனுடைய கொள்கைகள் மற்றும் கோட் பாடுகள் வேறானது. படித்தவர்களுடைய வாழ்க்கை முறை, மற்ற இயல்புகளெல்லாம் பாமர மக்களை விட மாறானவை. அதனால்தான், தற்போதைய அரசியல் அமைப்பு சாதாரண மக்களுக்கு உகந்தது அல்ல என்று சொல்கிறோம். காங்கிரஸ் கட்சியும் இந்நிலைமையைத் தெரிந்தே கொள்கையளவில் பல ஆண்டுகளுக்கு முன்பாகவே ஒப்புக் கொண்டுள்ளனர்'' என்றார்.

டி.பிரகாசம் (31.3.1938):—

''காங்கிரஸ் கட்சி மக்களுடைய உரிமையையும் விடுதலையையும் பெற்றுத் தருவதற்குச் சபதம் எடுத்துக் கொண்டுள்ளது. நம்மைத் தேர்ந்தெடுத்த பொதுமக்கள், அவர்களுக்கு எது நல்லது என்பதைத் தீர்மானிக்கும் கட்டத்தில் இருக்கிறார்கள். மக்களுடைய ஆசைகளைப் பிரதிபலிக்கின்ற வகையில்தான் தற்போதைய சென்னை மாகாணத்தை மொழியின் அடிப்படையில் நான்கு மாகாணங்களாகப் பிரிப்பதற்குரிய தீர்மானத்தைச் சட்ட மன்றத்தின் முன்னே வைத்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியின் கொள்கைப்படியும் நியாயத்தின் அடிப்படை யிலும் இப்படிப்பட்டக் கருத்து அரசின் முன்னே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வட்டமேசை மாநாடு நடந்தபொழுது, அந்த மா நாட்டில் கலந்து கொண்ட ஏதாவது ஒரு உறுப்பினர் ஆந்திர மாநிலம் வேண்டுமென்று கேட்டிருந்தாலோ எழுதிவைத்துக் கொண்டாவது படித்திருந்தாலோ ஆந்திர மாநிலம் பிரிவதற்கு ஆங்கிலேய அரசாங்கம் ஒப்புதல் தந்திருப் பார்கள். ஆனால், இம்மாநாட்டில் இந்தக் கோரிக்கை எழுப்பப்படவில்லை. 25 ஆண்டுகளாகப் போராட்டம்

நடத்தி வருகிறோம் என்கிறார்கள். ஆனால், கேட்க வேண்டிய நேரத்தில் கேட்கத் தவறிவிட்டோம்.

காங்கிரஸ் மகாசபையின் அமைப்பே வட்டார மொழிகளின் எல்லைக்கல்லை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியா முழுவதற்கும் 21 காங்கிரஸ் மாநிலங்கள் அமைக்கப்பட்டன. போராடுவதற்காக அழைத்தபோதும், திட்டங்களைச் செயல் படுத்துவதற்காக அழைத்தபோதும், எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து தோளோடு தோள் நின்று பணிபுரிந்தார்கள். அந்த முறையில் நம் மக்கள் வரலாற்றையும் நிகழ்ச்சிகளையும் மாற்றியமைத்திருக்கிறார்கள் என்றே சொல்லலாம்.

30 ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர் சி.ஆர். ரெட்டி அவர்கள் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் சட்டம்படித்துக் கொண்டிருக்கும்போது அவரைப் பார்க்கச் சென்றிருந்தேன். அவர் ஒரு முதல்தர மாணவராக இருந்தார். நான் சந்தித்த பொழுது அவர் மகாபாரதக் கதையைக் கையிலே வைத்துப் படித்துக் கொண்டிருந்தார். நான் ஷேக்ஸ்பியர் அவர்கள் பிறந்த ஊருக்கும் சென்றிருந்தேன். அங்கு நான் கண்ட தென்ன? அவர் பிறந்தது மிகவும் சிறிய ஊர். 'அவான்' என்ற நதி நம் ஊரிலுள்ள வாய்க்காலைப் போல உள்ளது. அவருடைய வீடு தாழ்ந்த வாயிலையுடையதாகவும், ஓடுவில்லை வேய்ந்ததாகவும் இருந்தது. அதை நல்ல முறையில் பாதுகாத்து வருகிறார்கள். இதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால், ஆந்திர மாநிலம் பிரிக்கப் படுமானால், நம்முடைய மொழி, இலக்கியம் முதலியவை விரிவடையும்; பாதுகாக்கவும் வழி ஏற்படும் என்பதற் காகத்தான்.

இப்பொழுது இருக்கிற அரசியல் சட்டப்படி புதிய மாகாணங்கள் பிரிப்பது என்பது இயலாத காரியமாகும். ஏனென்றால், அப்படிப்பட்ட தீர்மானத்தை இந்த அவையில் நிறைவேற்றினால் மட்டும் போதாது; மேலும் மேலும் பல

அவைகளுக்கு அனுப்பப்பட்டு ஆங்கிலேயப் பாராளு மன்றமும் பரிசீலிக்க வேண்டியதாகிறது. மேலும் இப்படிப் பட்டப் பிரிவை வேண்டுமா, வேண்டாமா என்பதிலே நம்மில் பலருக்குக் கருத்து வேற்றுமையும் குழப்பமும் இருக்கிறது. நமக்குள்ளேயே பிளவுபட்டு, விருப்பு வெறுப்புகளை வெளியிட்டு வேடிக்கை பார்த்தால், ஆங்கிலப் பேரரசும் நம்முடைய கோரிக்கையைக் கட்டாயமாக ஆராயவும் மாட்டார்கள். ஆமோதிக்கவும் மாட்டார்கள்.

ஆந்திர மாநிலத்தின் பகுதியை எப்படி நான் தெரிந்து வைத்திருக்கிறேனோ, அதேபோன்று மற்ற மூன்று மாநிலத்தின் எல்லாப் பகுதிகளும் எனக்குப் பழக்கப் பட்டவைதான்.

இன்று மாநில சுயாட்சி என்றெல்லாம் பேசுகிறார் கள். அப்படிச் சொல்லிவிட்டுக் கோடிக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாம், அவர்களுடைய கருத்துக்களை எடுத்து வைக்காமல் கவர்ச்சியான ஆங்கில மொழியில் இந்த அவையில் பேசுவதுதான் இன்று நாம் செய்து கொண்டிருக்கும் காரியம். ஆகவே, நாம் நடத்துகிற நிகழ்ச்சிகளை மக்கள் புரிந்து கொள்ளவில்லையென்றால், நம்மைப் பதவி நீக்கம் செய்துவிடச் சொல்வார்கள். ஆகவே, ஆட்சிமொழியும் பள்ளி, கல்லூரிகளில் பயிற்சி மொழியும் வட்டார மொழிகளே இருக்க வேண்டும் என்பதை நாம் உணர வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் டி.எஸ்.எஸ்.இராசன் (அமைச்சர்) **31.3.1938:—**

“மொழி வழியே மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டும் என்பதற்கான ஒருமித்த கருத்து இருப்பதை நாம் அறிய முடிகிறது. நம் சட்டமன்ற வரலாற்றில் முதல் முறையாக இந்தத் தீர்மானம் நிறைவேறுவதற்கு வேண்டிய

பொறுப்பை அரசே ஏற்றுக் கொண்டுள்ளது என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். இதுவரையிலும் சட்ட மன்றங்களிலும் பொதுக் கூட்டங்களிலும் நிறைவேற்றப் பட்ட பல தீர்மானங்களின் கதி என்னவாயிற்று என்பதை உறுப்பினர்கள் உணர்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்பொழுதிருந்த அரசுகள் இயற்றப்பட்ட தீர்மானங்கள் மீது வாளாயிருந்ததையும், பொதுப் படையாக நிராகரித்ததையும் இப்பொழுது எண்ணிப் பாருங்கள். இப்பொழுதிருக்கிற அரசு, பொதுமக்களின் கருத்துக்கு மதிப்பளிக்கிற அரசாக இருக்கிறது என்பதையும், நம்முடைய அடிப்படைக் கொள்கையை நிறைவேற்றும் துணிச்சல் கொண்டுள்ளதாயும் இருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் ஒரு பெரிய இயக்கத்தின், தேசிய இயக்கத்தின் தொண்டர்களாக இருப்பதனாலும், அவ்வியக்கம் ஏற்கனவே இக்கொள்கை யை ஏற்றுக் கொண்டு நடைமுறைப் படுத்தியிருக்கிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தத் தீர் மானத்தை நிறைவேற்றுவதில், நடைமுறைக்குக் கொண்டு வருவதில் பல சிக்கல்கள் இருந்தாலும், அவற்றைத் தெரிந்தே நாம் நிறைவேற்றுவதற்குத் தயாராக உள்ளோம். நம்மில் பலரைத் திராவிடர்கள் என்று அழைக்கிறோம். அவர்களை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. மொழியால் பண்பாட்டால் நாம் ஒரு இனமாக இருக்கி றோம். திராவிட மக்கள் தமிழர்களாகவும் தெலுங்கர் களாகவும் மலையாளம் மற்றும் கன்னடம் பேசுபவர்களாக வும் இருக்கிறோம். இவர்களுடைய அடிப்படை வாழ்க்கை முறையில், ஒன்றாய் இணைந்த திராவிடர்கள் என்ற பண்பாட்டின் த்த்துவத்தை அடையாளம் காண முடிகிறது. திராவிட இனத்துப் பண்பாட்டில் அடிப்படை மொழியின் வாயிலாகவும், அரசியல் வழியாகவும் பல ஆண்டுகளாக மக்களின் மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது.

முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் பல இலட்சம் ஆந்திர

தேசத்து மக்கள் தமிழர்களுடன் பின்னிப் பிணைந்து வாழ்ந்து வருகின்றனர். மொழி வாரி மாகாணங்கள் அமைக்கப்பட்ட பின்பு, இம்மக்கள் தமிழ்நாட்டை விட்டுப் பிரிந்து செல்ல வேண்டும் என்று சொன்னாலும், அவர்கள் பிரிந்து செல்ல மறுத்துவிடுவார்கள். ஆகவே, பிரிவினை யென்பதை நாம் சந்தித்தேயாக வேண்டும். நாளைக்கே வேண்டுமானாலும், ஆந்திரப் பிரதேசத்தைப் பிரித்துக் கொடுத்து விடலாம். ஆனால், நம்முடைய தீர்மானம், 1935—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்ட விதிகளுக்கு உட்பட்டதாக இயற்றப்பட்டுள்ளது. ஆகவே, இத்தீர்மானம் எங்கெல்லாம் பயணம் செய்ய வேண்டுமோ, அங்குச் சென்றேயாகவேண்டும். ஆகவே, இந்த அரசின் திடமான கொள்கை என்னவென்றால், புதிய மாகாணங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றால் அவை மொழிவாரி மாகாணமாகத்தான் அமையவேண்டுமென்பதாகும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம், தேசிய உணர்வு மங்கி, மொழிவெறியும், வட்டார உணர்ச்சியும் மேலோங்கும் என்று சொல்லப்படுகிறது. அரசியலில் பிரிவினைச் சக்திகள் இருந்தால் அபாயகரமான விளைவுகளை உண்டாக்கும். ஆனால், எங்களுக்கு நம் நாட்டு மக்கள் மீது நம்பிக்கை இருக்கிறது. அரசியல் வாழ்க்கையிலும் உறுதி இருக்கிறது. நம்முடைய தேசிய அமைப்பின் மீதும் நாம் எல்லோரும் நம்பிக்கை வைத்திருக்கிறோம். ஒரு தனி மனிதன் வளர்ச்சி அடைவதன் மூலம்தான், அவனுடைய வளர்ச்சிக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம்தான் நாம் தேசிய உணர்வையும், நாட்டுப் பற்றையும் உண்டாக்க முடியும். ஆகவே, வளர்ச்சி என்பது நாட்டின் மொத்த வளர்ச்சி ஆகும். பல மொழி பேசுகின்ற வகுப்பினருடைய வளர்ச்சிக்கு எல்லாவித வசதிகளும், வாய்ப்பும் செய்து தர நாம் முயற்சி செய்வோம்'' என்றார்.

இந்தத் தீர்மானம் அவையில் முடிவுக்கு விடப்பட்டு ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

*1939—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24—ஆம் நாள் திரு ஏ. டி. பன்னீர்ச்செல்வம் அவர்கள், 1939—40—ஆம் ஆண்டிற்கான வரவு—செலவுத் திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசியதாவது:—*

முதல்வர் திரு சி.இராசகோபாலாச்சாரியாரைப் பார்த்துத் தமிழர்களின் மீது இந்தியைக் கட்டாயமாகத் திணிப்பதைக் கைவிட வேண்டுமென்றார். இதனால் அரசாங்கத்திற்கு நிதி இழப்பு ஏற்படும் என்றார். இந்தியைத் தமிழ் நாட்டிலே பரப்புவது, ஆழமாக உருவாக்கப்பட்ட சதித்திட்டத்தின் அடிப்படையிலேயாகும் என்றார். தமிழனின் தனித்தன்மையை நீக்கும் எண்ணத்தில் இந்தியைப் புகுத்தும் சதித்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது என்றார். முதல்வர் அவர்கள் அதிகாரத்திற்கு வருவதற்கு முன்பு, இந்தி கட்டாயப் பாடமாக்கப்படும் என்று சொன்னதற்கு நாவலர் சோமசுந்தர பாரதியார் உள்பட பல நீதிக் கட்சித் தலைவர்களிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியதாகத் தெரிவித்தார். தமிழர்கள், இந்துக்கள், மற்றும் முகம்மதியர்கள் என எல்லோரும் இந்தியை எதிர்த்தார்கள். தமிழர்கள் இப்பொழுதுதான் இந்தியை எதிர்க்கிறார்கள் என்பதல்ல; ஒரு சமயம் சமஸ்கிருதம் புகுத்தப்பட்ட பொழுதும் தமிழர்கள்தான் அந்த முயற்சியை எதிர்த்தார்கள். முதல்வரைப் பார்த்து, 'பொதுமக்கள் ஒன்றாக இணைந்து கட்டாய இந்தி புகுத்தலை எதிர்ப்பதற்காக, உங்களை அவமதித்ததாகவும், திட்டியதாகவும் சொன்னீர்கள்' என்று சொன்னார்.

''இப்பொழுது ஒவ்வொரு நாளும் மக்கள் பிரதிநிதிகள், பெண்கள், கைக்குழந்தையுடன் உள்ள தாய்மார்கள், வயது முதிர்ந்தோர் ஆகியோர் பள்ளிக்கூடங்களுக்கு முன்பாகவும், முதலமைச்சர் வீட்டு முன்பாகவும் கோஷங்கள்

எழுப்பி எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்கள். அவர்களை யெல்லாம் போலீசார் கைது செய்து நீதிபதியின் முன் நிறுத்தி குறைந்தது ஆறமாத தண்டனையாவது வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள்" என்றார்.

*1939*—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் *24*—ஆம் நாள் குமாரராசா முத்தையா செட்டியார் அவர்கள் வரவு செலவுத் திட்டப் பொது விவாதத்தின்மீது ஆற்றிய் உரை:—

"எந்தக் கட்சியையும் சாராமல் பெரும் பொறுப்பி லுள்ள பெரியவர்களும், இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்படுவதைக் கண்டித்துக் கைவிடும்படி அரசைக் கேட்டுக் கொண்டனர். இந்திப் பிரசார சபை மூலமும், மற்ற தனிப்பட்ட அமைப்புகளின் மூலமும், இந்தி மொழி பரப்பப்பட்டு வருகிறது. காங்கிரஸ் கட்சியும் அம் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அப்படியிருக்கையில் கட்டாயமாக இந்தியைப் பரப்புவது அவசியமே இல்லை. தமிழ்நாட்டில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பையும், உணர்ச்சியையும் அரசாங்கம் புரிந்து கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். சென்ற முறை, சட்ட மன்றத்திலே இப்பிரச்சினை எழுப்பப்பட்ட போது, இந்தியை எதிர்க்கும் இயக்கத்திலே இருவர்தான் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று பதில் தந்தார்கள். அரசாங் கத்தின் தரப்பில் குறிப்பிட்டவர்கள், ஒரு வேளை இராமசாமி நாயக்கரும், சோமசுந்தர பாரதியும் இருக்கக் கூடும். உண்மையிலேயே தமிழ்நாட்டில் இந்தி மொழிக்கு எதிரான உணர்ச்சி பெருமளவில் உள்ளது என்பதைத் தெரியப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன்" என்றார்.

*1939*—ஆம் ஆண்டு பிப்பிரவரி மாதம் *24*—ஆம் நாள் வரவு செலவுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்து, முதல்வர் திரு சி.இராசகோபாலச்சாரியார் அறிவித்த பதில்:—

"அரசாங்கத்தை நேரிடையாக எதிர்ப்பதற்குப்

பதிலாக, இந்தியை எதிர்ப்பது போல் பாவனை செய்கிறார்கள். இந்துஸ்தானி மொழியைப் பெயரளவிற்கு எதிர்த்தாலும், சாதித் துவேஷத்தைக் கிளறவே இன்று போராட்டம் ஆரம்பித்திருக்கிறார்கள். அரசியல் காரணங்களுக்காக இந்துஸ்தானி மொழியைப் புகுத்துவது குறித்து எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். ஆனால், சாதிகளுக்கிடையே எந்தவித மனக்கசப்பையும் வெறுப்பையும் வளரவிடக் கூடாது. ஆரியர்கள் என்றும் திராவிடர்கள் என்றும் ஆங்கிலம் என்றும் சமஸ்கிருதம் என்றும் தவறான கருத்துக்களைப் பரப்பிவிட்டு வருகிறார்கள். நாம் இந்தியாவின் ஒரு பகுதியான தமிழ்நாட்டில் இருக்கிறோம் என்பதை உறுப்பினர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். நான் பிடிவாதமாக இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் குற்றம் சாட்டுகிறார். இப்படிப்பட்ட போராட்டங்களை நான் விரும்பவில்லை. அதனால்தான் பிடிவாதத்துடன் இருக்கிறேன். இந்துஸ்தானி மொழியைப் புகுத்த வேண்டும் என்ற காரணத்திற்காக மட்டும் நான் பிடிவாதமாக இருக்கிறேன் என்று நினைக்க வேண்டாம்; இம்மொழி நமக்கும் தேவை; அதை ஒப்புக் கொள்வதுதான் சரியான வழி மக்களுக்கு இம்மொழி தேவை என்ற கருத்தை மிகவும் தைரியத்துடன் என்னால் சொல்லி வற்புறுத்த முடியும். நான் இன்று செய்கின்ற காரியத்திற்காக, எதிர்கால இந்தியா என்மீது குற்றம் சாட்டாது. இன்று எதிர்க்கின்றவர்களை நினைத்து எதிர்கால இந்தியா சிரிக்கப் போகிறது. இதிலே எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை'' என்றார்.

திருமதி வி. லட்சுமி அம்மாள் தமிழில் பேசினார் (23.3.39):—

''இந்தியைப் பற்றிப் பொது ஜனங்களிடம் ஆதரவிருக்கிறதா இல்லையா என்பது வெளியில் போய்ப் பார்த்தால் நன்றாகத் தெரியும். சென்னையிலும் இன்னும்

சில இடங்களிலும் மட்டும் பார்த்தால் போதாது. கிராமங்களில் இந்தியை எலிமெண்டரி பாடசாலைகளில் கூடச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஒரு குழந்தையாவது இந்திப் படிப்புப் படிக்க மாட்டேன் என்று சொல்வது கிடையாது. குழந்தைகள் ஐந்தாவது வகுப்பிலிருந்து இந்தி கற்றுக் கொள்ள வேண்டுமென்பதாகச் சொல்லுகிறார்கள். இந்திப் படிப்பு விஷயத்தில் எவ்வளவு குதூகலம் பெற்றோர்களுக்கு இருக்கிறதென்பதை உறுப்பினர்கள் வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த வருஷம் கூட நூறு பள்ளிக் கூடங்களில் இந்தி வைத்திருப்பதைப்பற்றி என் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். நமது சர்க்காரில் பணமிருந்தால், இந்த மாகாணம் பூராவும் இந்தியை ஒரே நாளில் வைப்பார்கள். இந்தி பாஷையை எப்பொழுது எல்லோரும் கற்று முன்னுக்கு வருகிறோமோ, அப்பொழுதுதான் இந்தச் சபையில் தமிழில் பேச வேண்டும், தெலுங்கில் பேச வேண்டும், ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்பதில்லாமல் ஒரே பாஷையைத் தெரிந்த எல்லோரும் ஒரே பாஷையில் பேசும்படியான சந்தர்ப்பம் வருமென்று சொல்லிக் கொள்கிறேன்'' என்றார்.

*1939*—ஆம் ஆண்டு மார்ச் மாதம் *24*—ஆம் நாள் சட்ட மன்றத்தில் எந்த மொழியில் பேச வேண்டும் என்ற ஒழுங்குத் தீர்மானத்தின் மீது நடந்த விவாதத்தில் குமாரராசா முத்தையா செட்டியார் அவர்கள் கலந்து கொண்டு ஆற்றிய உரை:—

''85—ஆம் பிரிவின் படி, ஒரு மாகாணச் சட்டமன்றத்தில் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலேயே நடைபெற வேண்டும். அம்மொழி தெரியாத உறுப்பினர்கள், மாகாணங்களால் இயற்றப்படும் சட்டமன்ற விதிகளுக்குட் பட்டு, வேறு மொழியைப் பயன்படுத்தலாம் என்றிருக்கிறது. ஆகவே, ஆங்கிலம் தெரிந்தவர்கள் 'ஆங்கிலத்தில் தான் பேசமுடியும்; ஆங்கிலம் தெரியாதவர்கள்தான் மாற்று

மொழியைச் சட்டமன்றத்தில் பயன்படுத்த முடியும். அதே போன்று, சட்டமன்றத்தில் 46—ஆவது விதியின்படி, சட்டமன்றத்தின் எல்லா நடவடிக்கைகளும் ஆங்கிலத்திலே யே நடத்தப்படல் வேண்டும். ஏதாவதொரு உறுப்பினருக்கு ஆங்கிலத்தில் பழக்கமில்லையென்றால், மாநிலத்தில் அங்கிகரிக்கப்பட்ட ஏதாவதொரு மொழியில் பேசலாம் என்று இருக்கிறது'' என்றார்.

தொடர்ந்து நடந்த விவாதத்தை இடைமறித்து, முதல்வர் திரு இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பேசியதாவது:—

''1935—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தின் விதிப்படி ஆங்கிலம்தான் சட்டமன்றங்களில் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற தடையை ஏற்படுத்த வில்லை. உறுப்பினர்கள் சட்டமன்ற நடவடிக்கைகளைப் புரிந்து கொள்வதுதான் முக்கியமே தவிர, ஒரு தனி மொழியை வளர்ப்பதற்காக அல்ல.

1935—ஆம் வருஷத்திய அரசியல் சட்ட விதிகளைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். சட்டப் பேரவையின் தலைவரு டைய கடமையைப் பற்றிக் குறிப்பிடும்போது, எல்லா உறுப்பினர்களுக்கும் சட்டமன்றத்தின் நடவடிக்கைகள் பயன்படும் வகையில் ஏற்பாடு செய்வதும், உதவி செய் வதும் சட்டமன்றத்தின் தலைவருடைய கடமையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையின் நடவடிக்கைகள் ஒரு சிலவற்றிற்கு விதிகள் இல்லையென்றால், அச்சமயங்களில் உறுப்பினர்களுக்கு வசதியாக நடவடிக்கைகளை ஏற் படுத்தித் தருவதுதான் மன்றத் தலைவரின் கடமை யாகும். ஆங்கிலம் போதுமான அளவுக்குத் தெரியவில்லை யென்றால்தான், ஓர் உறுப்பினர் வேறு வேறு வேறு மொழியில் பேசலாம் என்று விதி உள்ளது. எந்த நட வடிக்கையைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதற்கு அவ்வுறுப்பினர்களுக்கு உரிமையிருக்கிறதோ அந்த

விஷயத்தை ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இப்படிப்பட்ட ஏற்பாட்டிற்கு விதியில் இடமில்லை. 1935—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்ட விதியில் இப்படிப்பட்ட அவசர நிகழ்ச்சிகளுக்கு விதிகள் ஏற்படுத்தவில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் பேரவைத் தலைவர் உதவி செய்ய வேண்டும் என்பதுதான் கருத்து. ஆங்கிலத்திலேயே நடவடிக்கைகள் நடக்கின்ற அவையில், ஆங்கிலமே தெரியாத ஒருவர் நடக்கின்ற விவாதங்களில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும். அந்த ஏற்பாட்டைத்தான் அவைத்தலைவர் செய்ய வேண்டும். அந்த ஏற்பாடுதான் செய்யப்பட்டிருக்கிறது'' என்றார்.

தொடர்ந்து நடந்த விவாதத்திற்குப் பிறகு, அவைத்தலைவர் தம்முடைய கருத்தை வெளியிட்டார். அவர் பேசிய தாவது:—

"இவ்விஷயம் மன்றத்தைப் பாதிக்கக்கூடிய மிக முக்கியமான ஒன்றாகும். 1935—ஆம் ஆண்டின் இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையில்தான் இன்று உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவையில் இருக்கிறீர்கள். மாநில சுயாட்சியை அளிக்கக்கூடிய வகையில்தான் அரசியல் சட்டம் இயற்றப்பட்டிருப்பதனால், தன்னிச்சை யாக நடக்கக்கூடிய சட்டமன்றமாக நாம் இயங்குகிறோம். பெரிய தொகுதிகள் உண்டாக்கப்பட்டு ஆங்கிலம் தெரியாத இலட்சக்கணக்கான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக நீங்கள் இருக்கிறீர்கள். கிராமத்தை உள்ளடக்கிய தொகுதிகளிலிருந்து இனிமேல் ஆங்கிலம் தெரியாதவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படப் போகிறார்கள். பெரும்பாலும் விவசாயிகள்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறார்கள். மதிநுட்பம் மிகுந்த உறுப்பினர்களாகிய நீங்கள் இம்மன்றத்தில் நடக்கின்ற விவாதத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். (உறுப்பினர்களிடமிருந்து ஆரவாரம்) இம்மன்றத்தில் நடக்கின்ற விவாதங்களின் மீது

உறுப்பினர்கள் மட்டுமல்லாமல், மன்றத்திற்கு வெளியே இருக்கிற இலட்சக்கணக்கான பாமர மக்களும் கவனத்தைச் செலுத்தி, நாம் எதை விவாதிக்கிறோம். எப்படி நடந்து கொள்கிறோம் என்பதைத் தெரிந்து கொள்வதிலே மிகவும் ஆர்வமாக உள்ளனர். அவர்களுடைய எண்ணங்கள் இந்த அவையில் பிரதிபலிக்கிறதா, நாம் அவர்களுக்கு நம்முடைய கடமையை நல்ல முறையில் ஆற்றுகிறோமா என்றெல்லாம் தெரிந்து கொள்ள மக்கள் விருப்பப்படுகிறார்கள். ஒவ்வொரு நாளும் சட்டமன்ற நடவடிக்கையைப் பார்ப்பதற்கும் பல்லாயிரம் பார்வையாளர்கள் வந்தவண்ணம் உள்ளனர். அப்படிப்பட்ட மக்களுக்குத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள்தான் தெரியும். இப்படிப்பட்ட சூழ்நிலையில்தான் நாம் சட்டமன்றத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். இவ்வரசு பொறுப்பற்ற அரசு இல்லை என்பதைச் சுட்டிக் காட்ட நான் விரும்புகிறேன். ஆகவே, உங்களை இங்கே அனுப்பிருக்கிற இலட்சக்கணக்கான மக்களுக்கு இம்மன்றம் தன் பொறுப்பை நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது.

1935—ஆம் ஆண்டின் அரசியல் சட்டப்படி, பெரிய தொகுதிகளிலிருந்து ஆங்கிலம் தெரியாத மக்களால் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறீர்கள். இருப்பினும், சட்டமன்ற நடவடிக்கைகளை அரசியல் சட்டக் கோட்பாடுகளுக்கு உட்பட்டுத்தான் நாம் நடத்த வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். அரசியல் சட்ட விதிகள் எங்கெங்குத் தெளிவாக இல்லையோ அங்கெல்லாம் விதிகளைத் தெளிவுபடுத்துவது நம்முடைய கடமையாகும்.

ஆங்கிலேயப் பாராளுமன்றம், பாராளுமன்ற விதிமுறைகளை நன்கு அறிந்தது என்பது உறுப்பினர்களுக்குத் தெரியும். ஆங்கிலேயப் பாராளுமன்றம்தான் மக்களாட்சிப் பண்புகளைக் கடைப்பிடித்து வருவது என்பதும் உங்களுக்குத் தெரியும். 85—ஆம் விதி நிறை

வேற்றப்பட்டபொழுது, ஆங்கிலம் தெரியாத உறுப்பினர் கள் சட்டமன்றங்களை நிரப்புவார்கள் என்று ஆங்கிலேயப் பாராளுமன்றத்திற்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. அதனால்தான், ஆங்கிலம் தெரியாதவர்கள் மற்ற மொழி களிலும் பேசலாம் என்று விதியிலேயே சொல்லியிருக்கி றார்கள். சட்டமன்றம் நல்ல முறையில் இயங்குவதற்கும், மன்ற விதிகளை விமர்சனம் செய்வதற்கும், சட்டமன்ற நடவடிக்கைகளைச் சரியாக நடத்திச் செல்வதற்கும் அவைத்தலைவருக்குப் போதிய அதிகாரங்கள் கொடுக்கப் பட்டிருக்கிறது.

அரசியல் சட்ட 85—ஆவது விதியானது கட்டளை யிடுவது போன்றதாகும் என்பர் ஒரு சிலர். 85—ஆவது விதியானது கட்டளையிடுகின்ற விதியாகாது என்று நான் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். அவ்விதி, வழி காட்டு வதுதான். ஒரு உறுப்பினர் ஆங்கிலத்தில் மட்டும்தான் பேச வேண்டும் என்று 85—ஆவது விதி தெளிவாகக் குறிப்பிட வில்லை. ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்கள், மற்ற மொழிகளைப் பயன்படுத்தலாம் என்பதை 85—ஆவது விதி குறிப்பாக எடுத்துச் சொல்லுகிறது. ஆங்கிலம் தெரிந்து உறுப்பினர்கள் சதி செய்வது போல், ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களுக்குப் பாதகமாக நடந்து கொள்வார்கள் என்ற முறையில்தான் ஆங்கிலேயப் பாராளுமன்றம் இவ்விதியை உருவாக்கியிருக்கிறது. இதற்கு முன்பிருந்த விதிகள் வேறாக இருந்தது. புதிய விதியின் மூலம் ஆங்கிலம் தெரிந்தவர்கள் மற்ற மொழியில் பேசக்கூடாது என்ற தடையேதும் இல்லை. ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில் மட்டும்தான் பேச வேண்டும் என்ற குறுகிய நோக்கில் விதியை எதிர்க்கட்சித் தலைவர் சொன்னது போல விமரிசனம் செய்தால், இந்த அவையில் ஆங்கிலம் தெரியாதவர்களிடமிருந்து வாக்கெடுப்பில் பங்கேற்க

முடியாமல் செய்துவிட முடியும். ஆங்கிலம் தெரியாதவர்களும் தங்களுடைய கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று அரசின் சார்பில் கருதுவதற்குரிய உரிமையிருக்கிறது. சட்டமன்றத்தில் நடக்கக்கூடிய நிகழ்ச்சிகளைப் புரிந்து கொண்டு வாக்களிப்பதில் ஒவ்வொரு உறுப்பினரும் முக்கியத்துவம் பெறுகிறார்கள். ஆங்கிலம் தெரிந்தவர்கள் தங்களுடைய தாய் மொழியைப் பயன்படுத்தக் கூடாது என்பது ஆங்கிலேயப் பாராளு மன்றத்தின் எண்ணமாக இருந்திருக்க முடியாது.

ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கிலத்தில்தான் பேச வேண்டும் என்று ஆங்கிலேயப் பாராளுமன்றம் கருதியிருந்தால், அதைத் தெளிவாகக் குறிப்பிட்டிருப்பார்கள். வேறு சில சட்டங்களை நிறைவேற்றும் பொழுது, அச்சட்டத்தின் மொழி ஆங்கிலம் என்றோ பிரெஞ் என்றோ திடமாகக் குறிப்பிட்டு உள்ளார்கள். ஆகவே, ஆங்கிலத்தில் மட்டும்தான் பேச வேண்டும் என்று கட்டளையிடாமல், அப்படிப் பேசவில்லை என்றால் இதுதான் தண்டனையென்று குறிப்பிடாமல் விட்டிருப்பதும், ஆங்கிலேயேப் பாராளுமன்றத்தின் நிலையை நமக்கு உயர்த்துகிறது. 'ஷல்' என்ற ஆங்கிலச் சொல் எங்கெங்குக் குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அச்சொல் கட்டளையைக் குறிக்காமல், அனுமதியாகத்தான் பெயர் பெற்ற சட்ட நிபுணர்களால் கருதப்பட்டு வருகிறது. 'ஷல்' என்பதற்கும் 'மே' என்பதற்கும் எவ்வாறெல்லாம் பலதரப்பட்ட விமர்சனங்கள் செய்யப்பட்டிருக்கிறது என்பதற்கு என்னால் ஆதாரம் காட்ட முடியும். அறிஞர்களைக் கொண்ட அவை இது; மேற்போக்காகப் புல் மேயும் அரைவேக்காடுகள் நாமல்ல; நாம் அனுபவசாலிகள். ஆகவே, 1935—ஆம் ஆண்டின் அரசியல் சட்ட ஷரத்துக்களைப் பரந்த நோக்குடன் நாம் அணுக வேண்டும்.

சட்டமன்றத்தில் பயன்படுத்த வேண்டிய மொழியைப் பற்றிய சங்கடம் இப்பொழுது திடீரென்று நமக்கு எப்படி ஏற்பட்டது? தெலுங்கிலே ஒரு உறுப்பினர் துணைக்

கேள்வி போட்டார். ஆந்திரக் காகித ஆலையைப் பற்றிய அனுபவம் அவருக்கு நிறைய உண்டு. அவர் தெலுங்கில் கேட்ட கேள்விக்குப் பதில் இன்று அளிக்கப்பட்டது. ஆந்திரக் காகித ஆலையில் ஒரு டைரக்டராக அவர் இருந்தார். அவருக்கு ஆங்கிலம் இம்மியளவும் தெரியாது. முக்கியமான துணைக் கேள்வி ஒன்றை அவர் போட்டார். தெலுங்கு தெரியாத மற்ற உறுப்பினர்களுக்கு அவர் கேட்டது புரியவில்லை. பாராளுமன்றச் செயலருக்குத் தெலுங்கு தெரியும். ஆகவே, அவர் பதிலளித்தார். ஆகவே ஆங்கிலம் தெரியாத் பல உறுப்பினர்கள் சென்ற 21 மாதங்களாக மிகவும் பொறுமையாக இருந்தனர். அமைச்சர்கள் ஆங்கிலத்தில் பதிலளிக்கிறார்கள். எதிர்க்கட்சியினர் ஆங்கிலத்திலேயே கேள்வி கேட்கின்றனர். அக்காகித ஆலை பற்றி நன்றாகத் தெரிந்த அந்த உறுப்பினர் பல துணைக் கேள்விகளைத் தெலுங்கிலேயே கேட்டார். இதைப் பொறுக்காத ஆங்கிலம் தெரிந்த பல உறுப்பினர்கள், வரிசையாக எழுந்து அவையின் நடவடிக்கைகள் நடக்க முடியாத நிலை உருவாகியிருப்பதாகப் பேசினார்கள். ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களுடைய சங்கடங்களை இப்பொழுதாவது மற்ற உறுப்பினர்கள் உணருவார்கள் என்று நான் நம்புகிறேன். ஆங்கிலம் தெரியாத உறுப்பினர்களுக்குப் பாதகமாக, தொடர்ந்து நாளுக்கு நாள் நடவடிக்கைகள் நடந்து வருவதை இப் பொழுதாவது உறுப்பினர்கள் உணரவேண்டும். ஆங்கிலம் தெரிந்த உறுப்பினர்கள் மற்றவர்களிடம் பொறுமையும், மரியாதையும் காட்ட வேண்டுமாய் நான் கேட்டுக்கொள் கிறேன. ஆங்கிலத்தில் பேசிய பிறகு, அவ்வுறுப்பினர்கள் தாங்கள் பேசியதைத் தங்களுக்குத் தெரிந்த வட்டார மொழியில் சுருக்கமாகச் சொல்வதற்கு ஒப்புக் கொள்வார் களேயானால் நாம் நம் தாய் நாட்டிற்குச் செய்யும் சேவையாக அதை நான் கருதுவேன்.

சட்டமன்ற நடவடிக்கைகளைக் கவனிப்பதும், அதிலே ஈடுபடுவதும், ஒவ்வொரு உறுப்பினருடைய அடிப்படையான மற்றும் அரசியல் உரிமையாகும். ஆங்கிலம் தெரியாதவர்களும் மற்றவர்களைப் போலவே, சட்டமன்ற அரங்கத்தில் எந்தத் தடையுமில்லாமல், தாராளமாகத் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லலாம். மலையாளத்திலோ தமிழிலோ உறுப்பினர்கள் கேள்வி போட்டால், அதைப் புரிந்து கொள்ளும் முறையில் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும். இக்காரியம் எளிதானதல்ல. சென்னை மாகாணத்தை மொழிவாரியாகப் பிரிப்பதன் மூலம், ஒரு வேளை இப்பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும். (கரகோஷம்) மொழிவாரி மாகாணமாகச் சென்னை மாகாணத்தைப் பிரிக்க வேண்டுமென்று இச் சட்டமன்றம் ஒருமுகமாகத் தீர்மானம் இயற்றியது. மக்களுடைய தீர்ப்பால் உருவாக்கப்பட்ட இச்சட்ட மன்றத்தின் தீர்மானத்தை மதிக்காது இன்றுவரையிலும் முடிவெடுக்காமல் இருக்கிறது செக்ரடரி ஆஃப் ஸ்டேர் அமைச்சகம். (பலத்த கரகோஷம்) இச்சட்டமன்றத்தின் தீர்மானத்தையொட்டி மேலவையும் மொழிவாரி மாகாணம் அமைக்கப்பட வேண்டுமென்ற தீர்மானம் இயற்றியது இன்னும் கிடப்பில் போடப்பட்டுள்ளது. இச்சபையின் நடவடிக்கைகளை நடத்துவதில் பல சிரமங்கள் இருக்கின்றது. 21 மாதங்களாக ஒரு வழியாக, இச்சபையை நடத்தி வருகிறோம். ஆங்கிலத்தைத் தவிர மேலும் ஐந்து மொழிகளை உடைய மாகாண சட்டமன்றத்தில் வேகமாக நடவடிக்கைகளை நடப்பதைப் பார்த்து எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது. ஒவ்வொரு சொற்பொழிவையும் மொழி பெயர்க்க வேண்டுமென்றால், ஒரு ஆண்டில் 365 நாட்களும் போதாது. பேச்சுக்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். இந்த யோசனையை ஏற்றுச் செயல்படுதத முடியாது. இச்சொற்பொழிவு நடத்தப்படும் மன்றம் அல்ல இச்சட்ட மன்றம். உறுப்பின

ரல்லாதோர் இங்கு ஆற்றப்படும் சொற்பொழிவை மொழி பெயர்க்க அனுமதிக்க முடியாது. அப்படிப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களை அரசும் வேலையில் அமர்த்த முடியாது. மேலும், பல பாராளு மன்றச் செயலாளர்களை அமர்த்துவதன் மூலம் இவ் வேலையைச் செய்யலாம். இதற்கும் சட்டமன்ற உறுப் பினர்களைத்தான் அமர்த்த வேண்டியிருக்கும். இதுவும் முடியாத ஒன்றாகும். ஆங்கிலச் சொற்பொழிவை ஒரு பாராளுமன்றச் செயலர் தமிழிலும், அப்படியே மற்ற மொழிகளிலும் மொழி பெயர்ப்பதாக இருந்தால், இதற் கெல்லாம் முடிவே இல்லாததாகிவிடும். இருப்பினும், சபையின் நடவடிக்கைகள் மிகுந்த திறமையுடன் நடத்தப் பட்டு வந்திருக்கிறது. ஆங்கிலத்திலும் தெலுங்கிலும் தமிழிலும் பலசொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டாலும், அம்மொழி தெரியாதவர்களும் அப்பேச்சை வரவேற்று உள்ளர்த்தத்தைப் புரிந்து கொள்வதை உறுப்பினர்களின் முகத்திலிருந்தே என்னால் ஊகிக்க முடிகிறது. (சிரிப்பு) ஆங்கிலேய உறுப்பினர்களும் அப்படியே செய்கின்றனர். (தொடர்ந்து சிரிப்பு)

ஆகவே, திடமான தீர்வு என்பது காணமுடியாத ஒன்றாகும். இருந்தாலும், நல்ல மாற்றுமுறையை நாம் அடையும் வரை, நான் ஏற்கனவே சொன்ன வழியைக் கடைப்பிடிக்க வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறேன். தமிழும் தெலுங்கும் தெரியாதவர்கள் இதுவரையில் எந்த அள விற்குப் பொறுமையும் நிதானமும் கடைப்பிடித்து வந்தார்களோ, அதையே தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏதாவது முக்கியமான பகுதியைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று உறுப்பினர்கள் விரும்பினால், அவைத் தலைவராகிய நான் அதற்கு ஏற்பாடு செய்யத் தயாராக இருக்கிறேன். அதே போன்று ஆங்கிலம் தெரிந்தவர்கள், மற்ற மொழிப்

பேச்சுக்களின் சாரம் தெரிய வேண்டுமென்று விருப்பப் பட்டால், அதற்கும் ஏற்பாடு செய்யப்படும்'' என்றார்.

*1946*—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2—ஆம் நாள் 'கோரிக்கை 15—கல்வி' என்ற மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு திரு எச்.எஸ்.டவுன் பேசினார்:—

''இந்தியாவின் உண்மையான வளர்ச்சிக்கு வட்டார மொழிகளைவிட ஒரே மொழி தேவை என்பதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நான் ஒரு வெளிநாட்டவன். எந்த மொழியை இந்நாட்டு மக்கள் வைத்துக் கொள்வது என்ற விவாதத்தில் நான் பாதிக்கப்பட மாட்டேன். ஆகவே, பாரபட்சமற்ற முறையில் என் கருத்துக்களைச் சொல்ல முடியும். நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் கொஞ்ச காலத்திற்கு முன்பு மகாத்மாவைச் சந்தித்த பொழுது, இந்துஸ்தானி மொழியிலே தன்னுடைய கேள்வியைப் போடவில்லை என்ற காரணத்தினால் கண்டிக்கப்பட்டார். (rebuked) என்பது உங்களுக்குத் தெரியும். கல்வியமைச்சர் அவர்கள் தன்னுடைய வட்டார மொழியிலும் கேள்வியைக் கேட்கவில்லை என்பது எனக்குத் தெரியும். அப்படிக் கேட்பதற்கும் அவருக்குத் தெரியாது; கேட்டிருந்தாலும் மகாத்மா அக்கேள்வியைப் புரிந்து கொண்டிருக்க மாட்டார். ஆகவே, உலக மொழியான ஆங்கிலத்தில் கேள்வி கேட்ட பொழுது, ஆங்கிலத்திலேயே மகாத்மாவும் பதிலளித்தார் என்பதை நான் அறிவேன். 'சீரமைப்பு செய்யப்படும் பொழுது வட்டார மொழிக்கு உரிய இடமும், முக்கியத்துவ மும் கொடுக்கப்படும்' என்று கல்வியமைச்சர் தம்முடைய பட்ஜெட் சொற்பொழிவில் குறிப்பிட்டார். வட்டார மொழிகளுக்கு எந்த இடத்தை அளிப்பது என்ற கருத்துக்கு மாகாணத் தலைமையமைச்சர் ஒரு தீர்மானத்திற்கு வரவில்லை என்று நான் நினைக்கிறேன். ஒரு வேளை அரசியலில் நிலவுகிற பனிப்படலம் விலக வேண்டுமென்று

காத்திருக்கிறார் போலும்; இந்தியா ஒரே நாடாக இருக்க வேண்டுமானால், இன்று இங்கிலாந்து நாட்டுப் பொதுப் பள்ளிகளில் கிரேக்க மொழியும் லத்தீன் மொழியும் எந்த இடத்தைப் பெற்றிருக்கிறதோ அதே இடத்தைத்தான் வட்டார மொழிகளும் பெறும் என்பது உறுதி. வட்டார்ர மொழிகளின் முக்கியத்துவத்தைக் குறைப்பதற்காக நான் இதைச் சொல்லவில்லை. ஒரே பொதுவான மொழி இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தவே இதை நான் சொன்னேன்.

இந்த நாடு ஒன்றாக இருக்க வேண்டும் என்பதுதான் எங்களுடைய விருப்பமும், என்னைச் சார்ந்திருப்பவர் களுடைய ஆசையும். பிளவுபடாத ஆங்கிலேய இந்தியா என்று அழைக்கப்படுகிற இந்த நாடு ஒரே நாடாக இருக்க வேண்டுமென்றால், பொதுவான ஒரு மொழி இந்நாட்டிற்கு மிகவும் அவசியம்.

இந்திய நாட்டில் இம்மாகாணம்தான் மொழிப் பிரச்சினையை அலசி ஆராய்ந்து உண்மையான நிலையை மக்கள் முன் எடுத்து வைக்கிற பக்குவத்தைப் பெற்றிருக் கிறது.

ஆங்கிலத்தைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாகத் தொடர்வதனால், சிறுபான்மையினர் உலகத்தோடு தொடர்பு வைத்துக் கொள்ளவும்,கிராமத்திலுள்ள சாதாரண மக்கள் வட்டார மொழிகளைப் பயின்று தங்களுடைய எல்லைக்குள்ளேயே கிடக்கும் நிலைமையும் மாநில எல்லையைத் தாண்டி உறவு வைத்துக் கொள்ள முடியாத சங்கடங்களும் ஏற்படப் போகின்றது. இப்படிப்பட்ட சாதாரண மக்கள் எல்லாம் 150 ஆண்டுக் காலத்திற்குப் பின் தள்ளப்பட்டவர்களாக ஆக்கப்படுவார்கள். நீதி மன்றங் களிலிருந்தும், நிர்வாகத்திலிருந்தும் பெர்ஷியன் மொழி அகற்றப்பட்டு ஆங்கிலத்தைப் பயன்படுத்தியதால், ஒரு சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் மற்ற சமூகத்தினர்

வீழ்ச்சிக்கும் வித்திட்டது. ஆங்கிலம் தொடரவும், வட்டார மொழி வளரவேண்டுமென்ற கோரிக்கையினை வைத்துப் பார்க்கும் பொழுதும், முன்பு என்ன நடந்ததோ அந்த முடிவுதான் ஏற்படும்.

வட்டார மொழிகள் அவற்றின் வளர்ச்சி என்று சொல்வதெல்லாம் தற்காலிக முழக்கங்களாகும். இந்தியா வின் வளர்ச்சிக்கு இவை உதவாது. மற்ற மாநிலங்களில் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். நம் மாகாணத்தைப் பொறுத்த வரையில் பல்கலைக்கழகங்களில் எந்த மொழியில் பாடத்திட்டங்களை வைக்கப் போகி றோமோ, அதே மொழியில் குழந்தையாக இருக்கும் பொழுதிருந்தே படிக்கவும், சிந்திக்கவும் ஏற்ற வசதிகளை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும் என்றார்.

*1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3—ஆம் நாள் 'பதினைந்தாம் கோரிக்கை—கல்வி' என்ற மானியக் கோரிக்கையின் விவாதத்தில் கலந்து கொண்டு திரு எம். முகம்மது இஸ்மாயில் சாயபு அவர்கள் ஆற்றிய உரை:—*

சில நாட்கள் முன்புவரை வழக்கிலிருந்த பயிற்சி முறையை அவசரம் அவசரமாக இக்கல்வியமைச்சர் எந்த வித முகாந்திரமோ முன்னேற்பாடோ இல்லாமல் மாற்றி யிருப்பது சரியல்ல. இந்த மாற்றம் பல சமூகத்தினரின் நலனைப் பாதித்திருக்கிறது. இந்த அவசரத்தில் செய்த இந்த மாற்றம், கல்வி முன்னேற்றத்திற்குத் தடையாக வந்துள்ளது என்றே நான் கருதுகிறேன். சென்னை மாகாணத்தின் தமிழ் பேசும் பகுதியிலும், சென்னை நகரிலும், ஆந்திரா பகுதியிலும் வாழ்கின்ற முஸ்லீம் மக்கள் உருதுவைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள். முஸ்லீம் மக்களின் தாய் மொழி உருதுதான் என்பது வெட்டவெளிச்சமான உண்மை. முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற இம் மாகாணத்தில் அவர்களுடைய தாய் மொழியும், வேற்று

மொழியாகவும் உள்ள ஒரு மொழியைப் பயிற்று மொழி யாக்குவது அவர்களுடைய நலனுக்குக் குந்தகம் விளைவிக்கும் ஒன்றாகும்.

வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாக ஆக்கும் முயற்சியில் பள்ளியின் நிர்வாகங்களுக்குப் போதிய அவகாசம் கொடுத்து இம் மாறுதலைக் கொண்டு வர வேண்டும். பாடப் புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும். அத்துடன் ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுக்க வேண்டும்.

தங்களுடைய தாய்மொழியை விட்டுக் கொடுக்க முஸ்லீம்களைக் கட்டாயப்படுத்தவோ கட்டாயத்துக் குள்ளாக்கவோ முடியாது என்பதைத் தெளிவாக்க விரும்புகிறேன் என்றார்.

திரு டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் *(கல்வியமைச்சர்) (3.9.46):—*

''முஸ்லீம்களுடைய குழந்தைகளுக்கு உருது அல்லது ஆங்கிலத்தில் பாடம் சொல்லிக் கொடுக்கப்படுமா என்று ஒரு உறுப்பினர் கேட்டார். உருதுவில்தான் பாடம் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை விட்டால், அதை என்னால் புரிந்து கொள்ள முடியும்'' என்றார்.

இச்சமயம் பேகம் சுல்தான் மீர் அம்ருதீன் எழுந்து குறுக்கிட்டுப் பேசினார். ''பள்ளியில் படிக்கும் முஸ்லீம் பெண்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கப் போதுமான எண்ணிக்கையில் உருது ஆசிரியர்கள் கிடைக்கும் வரை, ஆங்கிலமே தொடர்ந்து உயர்நிலைப்பள்ளிகளில் பயிற்று மொழியாக இருக்க வேண்டும்'' என்றார்.

தொடர்ந்து பேசிய கல்வியமைச்சர் குறிப்பிட்டதாவது:—

''முஸ்லீம்களைப் பொறுத்தவரையில், வட்டார மொழிகளுக்குப் பதிலாக ஆங்கிலத்தையே வரவேற்கிறார்கள். எதிர்கட்சித் தலைவர் வட்டார மொழிகளை வேற்று

நாட்டு மொழி என்கிறார். ஆந்திர தேசத்திலுள்ள முஸ்ஸீம்களுக்குத் தெலுங்கு வேற்று நாட்டு மொழியாகத் அவர்களுக்குத் தெரிகிறது. எதிர்கட்சித் தலைவர் சொன்னது போல முஸ்லீம்கள் ஆங்கிலத்தை வரவேற்கிறார்களே தவிர, வட்டார மொழி வேற்று நாட்டு மொழியாகத் தென்படு கிறது. இது சரியான எண்ணமில்லை. இந்த விஷயத்தை அவையே தீர்மானித்துக் கொள்ளட்டும்.

வட்டார மொழிகளே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று அரசு ஏன் கருதுகிறது? மேல் வகுப்பு களிலும் உயர்நிலைப் பள்ளிகளிலும் ஆங்கிலமே இன்று பயிற்று மொழியாக இருந்து வருகிறது. அதனால்தான் படித்தவர்களுக்கும் பாமரர்களுக்கும் பெரிய வித்தியாசம் இந்நாட்டில் இருக்கிறது. உலகத்தில் எந்த நாட்டிற்கும் போய்ப் பாருங்கள். படித்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்த நாட்டைப் போல அதிகமான வித்தியாசம் கிடையாது. ஏனென்றால், அங்குப் படிப்பெல்லாம் அந்நாட்டின் மொழியிலேயே சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

"நாம் ஏன் வட்டார மொழிகளே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறோம். இந்நாட்டு மக்கள் படிப்பறிவு பெற வேண்டும். ஒரு சிலர் மட்டும் கல்வி கற்பது இந்நாட்டிற்குப் போதாது. நூற்றைம்பது ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று நாம் என்ன காணுகிறோம். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் ஆயிரத்தில் ஒருவருக்குக் கூட சரியான முறையில் ஆங்கிலம் பேசத் தெரியாது. கல்வியின் மூலம் உயர்ந்த அறிவைப் பெற்றவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். சாதாரண மனிதர்கள் ஆங்கிலக் கல்விக்குப் பிறகும் உயர்தர அறிவை இன்னும் பெறவில்லை என்பதை நாம் அறிவோம். பல்லாண்டுகளாக மக்கள் அழுத்தி வைக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள், முன்னேற வேண்டும். ஆகவே, மக்கள் கல்வியறிவு பெற

வேண்டுமானால், வட்டார மொழிகளில்தான் அக்கல்வி யறிவைப் பெற முடியும்.

வட்டார மொழி என்று சொல்வதைவிட, தாய்மொழி என்று ஏன் சொல்லக்கூடாது என்று எதிர்க்கட்சித் தலைவர் கேட்டார். இதற்கு அடிப்படைக் காரணங்கள் இருக்கின்றது. அதிகாரத்தில் இருக்கிற எந்த அரசும் அக்காரணங்களைத் தான் கவனமாக எடுத்துச் சொல்வார்கள். தாய் மொழியில்தான் கல்வி கற்க வேண்டும் என்று உத்தர விடுவதாக வைத்துக்கொள்வோம். வட்டார மொழியில் பாடங்களைப் பயிற்றுவிக்கும் பள்ளியில் முஸ்லீம் மாணவர்கள் இருப்பதாக வைத்துக் கொண்டால், அம்மாணவர்கள் தங்களுடைய தாய் மொழியில் பாடம் படிப்பதற்கு வசதி செய்து கொடுக்கும்படி உரிமையுடன் வேண்டுவார்கள். இது முடியாத ஒன்றாகும். எந்த அரசாங்கமும் இதற்கு ஒப்புக் கொள்ளாது. நாங்கள் எவரையும் ஏமாற்ற விரும்பவில்லை. நாங்கள் நடு நிலைமையுடன் இருக்க விரும்புகிறோம். ஒன்றைச் சொல்லி வேறொன்றைச் செய்ய நாங்கள் விரும்பவில்லை. இந்தக் காரணங்களுக்காகத்தான், 'வட்டார மொழிகள்' என்ற சொல்லை நாங்கள் பயன்படுத்தியிருக்கிறோம்.

ஆந்திர தேசத்தில் வாழும் முஸ்லீம்களுடைய தாய்மொழி உருதுவாகும் என்று சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள்: ஈ.தர்ஸ்டன என்பவர் எழுதிய 'தென்னாட்டுச் சாதிகளும் மலைச் சாதியினரும்' என்ற புத்தகத்தில் 'தூதேகுலாஸ் என்பவர்கள் கயிறு திரிப்பவர்களாகவும், பஞ்சு சுத்தம் செய்பவர்களாகவும் உள்ள முகம்மதியர்களாவார்கள்.• அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவியவர்களாக அல்லது முஸ்லீம்களுக்கும் உள்நாட்டுப் பெண்களுக்கும் பிறர்ந்தவர்களாக இருக்க வேண்டும். அவர்கள் திராவிட மொழிகளான கன்னடம்

அல்லது தெலுங்கைப் பேசுபவர்கள்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆந்திர தேசத்திலுள்ள எல்லா முஸ்லீம்களுக்கும் உருது மொழியில் கல்வி கற்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை விடுத்து, உருது மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட முஸ்லீம்களுக்கு மட்டும் உருதுவில் கல்வி கற்க ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று இப்பொழுது கேட்கிறார்கள். ஐந்து அல்லது ஆறு சதவீதத்திற்கு மேலிருக்காது. நம் மாகாணம் மொழியின் அடிப்படையில் பல மாகாணங்களாகப் பிரிக்கப்படும் நல்லநாள் வெகு தூரத்தில் இல்லை. அப்படிப் பிரியும் பொழுது, ஆந்திர தேசத்து நிருவாகம் தெலுங்கு மொழியில்தான் நடக்கும். உருதுவில் படிப்பவர்களின் நிலை என்னவாகும்? நிருவாகம் முழுவதும் வட்டார மொழியில் படிப்பை முடித்த இளைஞர்களால் நடக்கும் பொழுது, உருது மொழியில் கல்வி கற்ற ஒரு சிலருடைய நிலைமை என்னவாகும்? முஸ்லீம்களுக்கு உருது மொழி தான் பயிற்று மொழியாக வேண்டும் என்பதை அரசாங்கம் ஒப்புக் கொண்டால், அவ்வாறு படிப்பவர்கள் எதிர்கால நிருவாக இயந்திரத்திற்குத் தகுதியில்லாதவர்களாக ஆகிவிடுவார்கள்.

முஸ்லீம் நண்பர்கள், தெலுங்கு மொழி தங்களுக்கு வேற்று மொழி என்று சொன்னாலும், அதே தொனியில் உருதுவை வேற்று மொழி என்று நான் சொல்லத் தயாராக யில்லை. இந்திய நாட்டின் பொது மொழியாக இந்தியைக் கொண்டு வர நாம் விரும்புகிறோம். பெர்ஷியன் மற்றும் நகரி என்ற இரண்டு வகை எழுத்துக்களை உடையது அம்மொழி. நகரியில் எழுதப்பட்டது இந்தி என்றும், பெர்ஷியன் எழுத்தால் ஆக்கப்பட்டது உருது என்றும் வழங்கப்படுகிறது. எதிர்காலச் சந்ததியைக் கருத்தில் கொண்டே வட்டார மொழிதான் பயிற்று மொழியாக

இருக்க வேண்டும் என்ற உத்தரவை அரசு வழங்கி இருக்கிறது என்றார்.

தலைமையமைச்சர் திரு டி.பிரகாசம் அவர்கள் (3.9.1946):—

"எதிர்க்கட்சியிலிருப்பவர்கள் எழுந்து நின்று, ஆந்திரப் பிரதேசத்திலுள்ள முஸ்லீம்களுக்கு உருதுதான் தாய்மொழி என்றார்கள். எந்த அடிப்படையில் அதைச் சொன்னார்கள் என்று தெரியவில்லை. நான் ஆந்திரப் பிரதேசத்தில் பிறந்து, பல ஆண்டுகளாக வாழ்ந்து வருபவன். இன்னமும் அப்பகுதியுடன் நெருங்கிய தொடர்பு உடையவன். வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் வயது முதிர்ந்தவன் என்பதனாலும் திட்டவட்டமாக என்னால் ஒரு சில கருத்தைச் சொல்ல முடியும். கிராமப் பஞ்சாயத்துக்கள் உருதுப் பள்ளிகளை ஆரம்பித்தது எனக்குத் தெரியும். கிராமங்களில் இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் எந்தவித வித்தியாசமும் கிடையாது. கிராமப் பகுதிகளில் வழக்கில் இருக்கிற உருது மொழி உண்மையான உருது மொழி என்று சொல்ல முடியாது. ஆங்கிலேயர்கள் நம் நாட்டிற்கு வந்து தங்களுடைய ஆட்சியை ஏற்படுத்திய பின்பு, முன்பிருந்த உருது மொழி மறையத் தொடங்கியது. ஆந்திர தேசத்திலுள்ள முஸ்லீம்களின் தாய்மொழி உருதுதான் என்று திரு போக்கர் சொன்ன பொழுது திரு நாகராஜ மணிகார் எழுந்து, 'திருக்குரான் எந்த மொழியில் இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட்டது' என்று கேட்டார். திருக்குரான் அராபிய மொழியில் உள்ளது. அராபிய மொழி என்பது உருதுவல்ல. அராபியமும், மற்ற மொழிகளும் கலந்ததுதான் உருது மொழியாகும்.

எல்லா மாவட்டங்களிலும் வாழ்கின்ற முஸ்லீம் களைப் பெரும்பாலும் எனக்குத் தெரியும். அவர்களுடைய தாய்மொழி உருது என்று என்னால் சொல்ல முடியாது. மாவட்டங்களில் இருக்கிற பல முஸ்லீம் குடும்பங்களுக்கு

உருது அல்லது இந்துஸ்தானி மொழி தெரியாது. ஆகவேதான், வட்டார மொழிகளே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறோம்' என்றார்.

விவாதத்தின் முடிவில் திரு முகமது இஸ்மாயில் சாகிபு எழுந்து, அரசாங்கத்தினுடைய ஆணை தங்களுக்குத் திருப்தி ஏற்படுத்தவில்லை என்று சொல்லி, சபையின் அன்றைய நடவடிக்கைகளில் கலந்து கொள்ள முடியாது என்று வெளிநடப்புச் செய்தார்.

1947—ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30—ஆம் நாள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பயிற்றுவிக்க உருது மொழியைப் பயன்படுத்தல் என்ற தீர்மானம் கொண்டு வரப்பட்டது. திரு முகம்மது இஸ்மாயில் சாகிபு அவர்களுடைய பேச்சு:

"உருதுவைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு வசதியாகக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் பாடங்களை அம் மொழியிலேயே சொல்லிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்றும், போதிய எண்ணிக்கை இருந்தால் அவர்கள் விருப்பப்படுகிற இடத்திலேயே இந்தவசதிகளைச் செய்து தர வேண்டும் என்றும் தீர்மானத்தை நான் சட்டமன்றத்தின் முன் வைக்கிறேன்.

இத்தீர்மானம் மிகவும் நியாயமான ஒன்றாகும். எந்தவித ஆட்சேபணையும் இதற்கு இருக்க முடியாது. உருது பேசுகின்ற மக்கள் கணிசமாக இருக்கின்றார்களா இம் மாகாணத்தில் என்று ஒரு சில நண்பர்கள் கேட்கிறார்கள். இந்த உண்மையைச் சென்சஸ் புத்தகங்களிலிருந்தும் மற்ற வழிகளிலிருந்தும் சரி பார்த்துக் கொள்ளலாம். ஏறக்குறைய இருபது இலட்சம் முஸ்லீம் மக்கள் இம்மாகாணத்தில இருக்கின்றார்கள். உருது மொழியின் வாயிலாகப் பாடங்கள் நடத்துவது சாத்தியமா என்று கேட்கிறார்கள்.

சென்னை, மதுரை முதலான நகரங்களில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகள் இருக்கின்றன. அங்கெல்லாம் பள்ளிகளில் உருது மொழியின் மூலம் பாடம் புகட்ட முடியும்.

இந்த நாட்டிற்கு ஒரு மொழிதான் தேவை என்று சில நண்பர்கள் குறிப்பிட்டார்கள். சில ஆண்டுகளுக்கு முன்பு, 'இந்து சாஹித்திய சம்மேளனம்' என்ற பெயரில் ஒரு மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டிற்கு மஹாத்மா காந்தி வந்திருந்தார். நகரி எழுத்தை எல்லா மொழியும் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மகாத்மா காந்தி அம்மாநாட்டில் வலியுறுத்தினார். அதை அவர் தன்னுடைய யோசனை யாகவும், தீர்மானமாகவும் சொன்னார்.வரவேற்புக்குழுவின் தலைவராக இருந்த லேடி சதாசிவ அய்யர் என்ற தமிழ் நாட்டுப் பெண்மணி இதை எதிர்த்தார். இந்த நாட்டின் மொழிகளை ஒருங்கிணைக்க வேண்டும் என்பதற்காகக் கூட்டப்பட்ட மாநாடு அது. அங்கேயே எதிர்ப்பு கிளம்பியது.

உருது மொழி தேசிய மொழி என்று ஒப்புக் கொள்ளப்படவில்லையே என்ற ஆட்சேபணையும் தெரி விக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், முஸ்லீம் களின் தாய்மொழி உருதுவாகும். அம்மொழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.

'முஸ்லீம்கள்' என்ற தீர்மானத்தில் சேர்த்திருக்கிற வார்த்தைக்கும் ஆட்சேபணை தெரிவித்தார்கள். இங்கிருக்கும் முஸ்லீம்கள் சிறுபான்மையினர். சிறுபான்மையினரின் இலக்கியம், பண்பாடு ஆகியவற்றை மதிப்பதிலும், பாது காப்பதிலும் அரசு அக்கறை காட்டவேண்டும்.

**''பல மொழிகளைப் பேசுகின்ற மக்களைக் கொண்ட நாடுகளில் ஒற்றுமை நிலவுகிறது. அம்முறை இந்த நாட்டிலும் இருக்க வேண்டுமென்று விரும்புகிறேன். தாய் மொழியில் கல்வி என்று நாங்கள் கேட்கும்பொழுது, வட்டார மொழிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து**

மதிப்பிடவில்லை. சிறுபான்மையினரின் நலனும் வட்டார மொழிகளைத் தெரிந்து கொள்வதிலேயே அடங்கி யிருக்கிறது. அந்நிய ஆதிக்கத்தில் இருந்ததனால், நாம் அவர்களுடைய மொழியைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருந்தோம். நாடு விடுதலை அடைந்த பிறகும், சிறுபான்மையினரின் அடிப்படை உரிமையாகக் கருதக்கூடிய தாய்மொழிக் கல்விக் கொள்கையைக் கைவிட்டு விடக்கூடாது. வட்டார மொழிகளைப் பயிற்று மொழியாகக் கொண்டு வருவது சிறுபான்மையினரின் நலனுக்கு உகந்ததல்ல'' என்றார்.

டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார், கல்வியமைச்சர் *(30.10.47)*:—

எந்தத் தனிப்பட்ட சமூகத்தினரும் அவர்கள் சிலவிலேயே பள்ளிகளைத் திறப்பதற்கும் நடத்துவதற்கும் அப்பள்ளிகளில் எந்த மொழியில் வேண்டுமானாலும் பாடத்திட்டங்களை வைத்துக் கொள்வதற்கும் உரிமை யிருக்கிறது. அரசாங்கம் அதற்கெல்லாம் ஆட்சேபணை செய்யாது. தாய்மொழியில் கல்வி கற்பதைத் தடை செய்வதும் அரசாங்கத்தின் நோக்கம் கிடையாது. ஆனால், இப்பொழுது கேட்கப்படுவதெல்லாம் அரசாங்கத்தின் சிலவில் இரண்டு வகையான பள்ளிகளை நடத்த வேண்டும் என்பதுதான்.

அவையின் முன்னே பல கருத்துக்கள் சொல்லப்பட்டன:—

1)கல்வியும் கலாச்சாரமும் தாய்மொழி மூலம்தான் வளரும்;

2)முஸ்லீம்களின் கலாச்சாரம், உருது மொழி மூலம் தான் பாதுகாக்கப்படுகிறது;

3)தனியாக அமைப்புகள் இருப்பதனால் அமைதி கெடுவதில்லை;

4)இந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் பொது மொழியாக உருது வடநாட்டில் வழங்கப்படுகிறது.

ஆகவே, உருது பேசும் முஸ்லீம்களுக்குத் தாய் மொழியிலா அல்லது வட்டார மொழியிலா கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்பதுதான் எழுந்துள்ள பிரச்சினை.

உருதுவைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு அம் மொழியிலேயே கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். எனக்குப் பழக்கப்பட்ட கோயமுத்தூர் மாவட்டத்தையே எடுத்துக் கொண்டு, இது சாத்தியமா என்று பரிசீலித்துப் பார்க்கலாம். கோய முத்தூரில் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் மராத்தி முதலான மொழிகள் பேசக்கூடிய மக்கள் வசிக்கிறார்கள். இந்துஸ்தானி, உருது மற்றும் வங்காளி மொழி பேசக்கூடியவர்களும் இருக்கிறார்கள். இத்தனை மொழி பேசக்கூடிய மாவட்டத்தில் எல்லோருக்கும் பள்ளிக் கல்வியைத் தாய் மொழியில் கொடுப்பதென்பது இயலாத காரியம். பள்ளிகளில் தாய்மொழிக் கல்வியை நாம் ஏற்பாடு செய்தால், உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தாய் மொழியிலேயே கல்வி கற்க ஏற்புாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கையும் விடப்படும. ஆகவே, நடைமுறைக்கு ஒத்துவராத இத்தீர்மானத்தை ஒத்துக் கொள்ள முடியாது. உருதுப் பள்ளிகளைப் பற்றி நான் ஒன்றிரண்டைக் குறிப்பிட விரும்புகிறேன். சமூகத்தில் உயர்ந்த நிலையில் உள்ள முஸ்லீம்கள், உருதுப் பள்ளிகளின் சீரில்லாத அமைப்பைப் பார்த்துத் தங்களுடைய குழந்தைகளை அனுப்ப மறுக்கின்றனர்.

கல்வித் திட்டத்தைப் பொறுத்தமட்டில், நாம் எதிர் காலத்தைக் கவனத்தில் கொண்டும், இத்திட்டங்கள் சமூகத்திற்கும் நாட்டிற்கும் எந்த வகையில் பயன்படப் போகின்றது என்பதைத்தான் நாம் பார்க்க வேண்டும். இந்த மாகாணத்தின் எதிர்காலம் எப்படியிருக்கப் போகிறது? வங்காளத்தில் வங்காளிதான் ஆட்சி மொழி; ஐக்கிய மாகாணத்திலும், மத்திய மாகாணத்திலும் இந்தி மொழிதான்

ஆட்சி மொழியாக உள்ளது. விரைவிலேயே இம்மா காணம் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்று பேசப்படுகின்ற மொழியின் அடிப்படையில் புதிய மாநிலங்களாகப் பிரியப் போகின்றது. அப்பொழுது, நீதிமன்றங்களிலும் கல்லூரிகளிலும் அரசு நிர்வாகத்திலும் அந்த அந்த வட்டாரமொழிகளையே பயன்படுத்துவர்கள். ஆகவே, முஸ்லீம் குழந்தைகளின் எதிர்காலத்தை முன்னிட்டும், அக்குழந்தைகள் சமூகத்தில் ஒன்றிப் பழக வேண்டிய அவசியத்தை முன்னிட்டும், கொடுத்திருக்கிற தீர்மானம் முறையானதல்ல; கெடுதலான ஒன்றாகும். முஸ்லீம் சமுதாயமும் அவர்களின் குழந்தைகளும் எதிர் காலத்தில் சொல்லொணாத் துயரத்தை, இத் தீர்மானத்தை நிறைவேற்றினால் அடைவார்கள். எதிர்காலக் கண்ணோட்டத்தில் இத்தீர்மானத்தை முஸ்லீம்களின் நலன் கருதி நான் எதிர்த்தே ஆகவேண்டும்''.

*1948—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8—ஆம் நாள் மாண்புமிகு டாக்டர் பி.சுப்பராயன் 'கோரிக்கை எண் ஒன்பது—மாநிலத் தலைமையகம்—அமைச்சர்கள்—தலைமையிடத்துப் பணி யாளர்கள்' என்ற மானியக் கோரிக்கை மீது அளித்த பதில்:—*

ஆந்திர தேசம் என்று புதிய அரசியல் சட்டத்து அட்டவணையில் குறிப்பிட்டு விடலாமா என்பதை அரசியல் நிருணய சபையில் விவாதிக்கப்பட்டது. 1935— ஆம் சட்டப்படி ஒரிசா மற்றும் சிந்து போன்ற மத்திய மாநிலங்களை எப்படி அட்டவணையில் குறிப்பிட்டார் களோ, அதே போன்று, ஆந்திர தேசத்தைப் புதிய மாநிலமாக அறிவித்து விடலாமா என்பது பரிசீலிக்கப் பட்டது. அப்படிச் செய்வது பொருத்தமாக இராது என்று தீர்மானிக்கப்பட்டது. பல முன்னேற்பாடுகள் செய்ய வேண்டியுள்ளது. புதிய ஆந்திர மாநிலம் மட்டும் அல்லாது, மொழிவாரி மாநிலங்கள் புதிதாக மேலும் அமைக்கப்பட

வேண்டுமா என்பதைப் பற்றிய விரிவான விசாரணை தேவை என்று கருதியதால் ஒரு குழு அமைக்கவும், அக்குழு விசாரணைக்குப் பின் தன் அறிக்கையை விரைவில் சமர்ப்பிக்கச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

புதிய மொழிவாரி மாநிலங்கள் அமைய வேண்டும் என்பது தான் இம்மாகாண அரசாங்கத்தின் கொள்கை. இந்தக் கருத்தை மத்திய அரசுக்கும் தெரிவித்திருக்கிறோம் என்றார்.

அடுத்ததாக மாண்புமிகு தலைமையமைச்சர் திரு ஓ.பி. **இராமசாமி ரெட்டியார் அவர்கள் தமிழில் உரையாற்றினார்:--**

தலைவர் அவர்களே! காலையில் நான் இங்கு வந்தபோது, கனம் அங்கத்தினர்கள் பேசிக் கொண்டிருந் தார்கள். அப்பொழுது என்னைப்பற்றி நான் இங்கு வருவதில்லை என்றும் சரியாக சபையை நடத்தவில்லை என்றும் ஒரு மாதிரியாக சில விஷயங்கள் பேசப் பட்டிருக்கிறது. அங்கத்தினர்கள் பட்டவர்த்தனமாகப் பேசுவதைப் பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன். இருந்தாலும், இந்தக் காலத்தில் அரசாங்கத்தை நடத்துவதில் எவ்வளவு கஷ்டங்கள் இருக்கிறது என்பதை அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக் கிறேன். இப்பொழுது அங்கத்தினர்கள் சுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று நினைத்து, பேச்சுச் சுதந்திரத் துடன் மனம்போல் பேசுகிறார்கள். ஆனால், பேச்சுச் சுதந்திரத்தை அங்கத்தினர்கள் எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்பதைப்பற்றி நான் சொல்வதற்குத் தயாராக இல்லை. எதிரிகளாக இருந்தாலும் **கண்ணியமாக** நடத்த வேண்டுமென்புதை நான் பூராவும் விரும்புகிறேன். எதிர்க்கட்சி அங்கத்தினர்களிடத்திலும் அன்புடன் நடத்த வேண்டும் என்பதுதான் என் கொள்கை. ஆனால், பேசும்போது உற்சாகத்துடன் என்னென்ன பேசுவது என்றும் எப்படிப் பேசுவது **என்றும்** கூட கவனிக்காமல்

தாறுமாறாகப் பேசப்படுகிறது. இந்தச் சட்டசபையில் என்னைப் பொறுத்தவரையில் நான் பிறரைப்பற்றிக் கவலைப்படுவது இல்லை. ஆனால், மாகாண ஜனங்களிடத்தில் நாம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை நாம் அவசியம் உணர வேண்டும். நமக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது என்று அதை அதிகமாக உபயோகப்படுத்தி விட்டால், ஜனங்கள் நம்மை எப்படி நினைப்பார்கள் என்பதை உணர வேண்டும். எந்தக் கட்சியாக இருந்தாலும் சரி காங்கிரஸ் கட்சியாக இருந்தாலும் சரி, கொஞ்சம் யோசித்துப் பேசுவதுதான் நன்றாக இருக்கும் என்று நினைக்கிறேன். நானும் தப்பு அபிப்பிராயம் கொள்வதாகச் சொல்லவில்லை. ஏனென்றால், சுதந்திரம் அடைந்த பிறகு அரசாங்கத்தை நடத்துவதில் எவ்வளவு கஷ்ட நஷ்டங்கள் இருக்கின்றன என்பதை அங்கத்தினர்கள் உணர வேண்டும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தை நடத்துவதாக இருந்தால், ஜனங்களுக்கும் மந்திரிகளுக்கும் தகுதியாக நாம் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அங்கத்தினர்கள் உணர வேண்டும் என்று நினைக்கிறேன். ஆகையால், நான் என்னென்ன செய்கிறேன் என்று அங்கத்தினர்கள் பார்த்திருந்தால் இந்த மாதிரி பேசியிருக்க மாட்டார்கள். காலையில் நான் 3 மணிக்கு எழுந்திருந்து இரவு 11 மணிக்குத்தான் படுக்கிறேன். இடையில் ஒய்வுக்காக 1/2 மணி நேரம் படுக்கிறேன்.

இது விஷயம் அங்கத்தினர்களுக்குத் தெரியாது என்று நினைக்கிறேன். ஆகையால், நான் என்னென்ன செய்கிறேன் என்பது தெரியாமல், ஏதோ நான் வேலை செய்யாமலிருக்கிறேன் என்றும் அங்கத்தினர்களை அவமதிக்கும் எண்ணத்துடன் இருக்கிறேன் என்றும் அவர்கள் எண்ணி இருந்தால் அவர்கள் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்றுதான் நான் சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இன்னும் அது மாத்திரம் அல்ல. ஒரு நாளைக்கு

எத்தனை மணி நேரம் அரசாங்க வேலைகளைப் பார்க்கிறேன் என்றும் எவ்வளவு பார்க்கிறேன் என்றும் அவர்களுக்குத் தெரிந்திருந்தால், அவர்கள் இவ்விதம் பேசி இருக்கமாட்டார்கள். காலையில் 8 மணி முதற்கொண்டு $10\frac{1}{2}$ மணி வரை வீட்டில் அங்கத்தினர்களைப் பார்க்கிறேன். பகல் 3 மணிமுதற்கொண்டு 4 மணி வரையிலும், 7 மணி முதற்கொண்டு 11 மணி வரைக்கும் இன்னும் பார்க்கிறேன். இவைகளுக்கு இடையில் அரசாங்க வேலைகளைப் பார்த்து வருகிறேன். ஆகையினாலே, இன்னும் எவ்வளவு நேரம்தான் அங்கத்தினர்களை நான் பார்க்க வேண்டுமென்பது எனக்குத் தெரியவில்லை. இன்னும் எனக்குப் பல தொல்லைகள் இருக்கின்றன. வேலைகளைப் பார்க்கும் போது உத்தியோகஸ்தர்களைப் பார்க்க வேண்டும். பொது ஜனங்களைப் பார்க்க வேண்டியதாகவும் இருக்கிறது. மந்திரிகளையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. ஒவ்வொருவருடைய குறைகளையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. அப்படி விசாரித்து அந்தந்தக் குறைகளுக்குத் தகுந்தபடி ஏற்பாடு செய்ய வேண்டியதாக இருக்கிறது. ஆகையால், இவ்வளவு வேலை செய்து கொண்டிருக்கும்போது, அங்கத்தினர்கள் இந்த மாதிரி நினைப்பது ஆச்சரியமாக இருக்கிறது. அங்கத்தினர்கள் எவ்விதத் தொல்லைகள் இருக்கிறது என்று தெரியாமல் பேசினால், அதைப்பற்றிப் பரவாயில்லை. ஆனால், ஏதோ குறை சொல்வதாக நினைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆகையினாலேதான் என்னால் சபைக்கு அடிக்கடி வர முடியவில்லை. சொல்வதற்கு முந்தி நான் என்னென்ன செய்கிறேன் என்று தெரிந்து கொண்டால் நன்றாக இருக்கும். அதற்காகத்தான் சொல்லுகிறேன். இது விஷயமாகக் கவனத்தில் வைத்துக் கொண்டால் எவ்வளவு கஷ்டமான வேலைகளைச் செய்கிறோம் என்பதை, அங்கத்தினர்கள் உணருவார்கள்.

தவிர எனக்கு ஆங்கிலத்தில் அவ்வளவு நன்றாகப் பேசத் தெரியாதுதான். அதை நான் மறுக்கவேயில்லை. தவிர அந்த உண்மையைத் தெரிந்துதானே என்னைப் பிரதமராகத் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். என்னுடைய குறைகளைத் தெரிந்து கொண்டு அதைப்பற்றிக் குறை கூறிக் கொண்டே இருந்தால், அது உங்களையே நீங்கள் குறை கூறிக் கொள்வதாகும். அது விஷயமாக நான் அதிகம் சொல்ல வேண்டாமென்று நினைக்கிறேன்.

இப்பொழுது நம் மாகாணத்தில் நான்கு பாஷைகள் இருக்கின்றன. இந்த மாகாண அரசாங்கத்தை நடத்துவதாக இருநதால், நான்கு பாஷைகளும் தெரிந்திருக்க வேண்டும். ஒரு மாகாணத்தின் அரசாங்கத்தை நடத்துவதாக இருந்தால், அந்தந்த மாகாணத்தின் பாஷையிலேயேதான் நடத்த வேண்டும். அப்படி நடத்தாவிட்டால், அங்கத்தினர்களும் அங்கத்தினராக இருக்க லாயக்கில்லை. ஆகையால், மற்றவரைக் குறை கூறிக் கொண்டிருப்பதில் நியாயமில்லை. குறை கூறிக்கொண்டிருக்கிறவர்கள் தாங்கள் எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பதை நினைத்திருந்தால் நன்றாக இருக்கும். இப்பொழுது ஆகஸ்டு 15—ஆம் நாளுக்குப் பிறகு இந்த மாகாணத்தின் அரசாங்கத்தை மாகாண பாஷையில்தான் நடத்த வேண்டும். இனிமேல் அப்படித்தான் நடத்த வேண்டுமென்பதை நான் எச்சரிக்கை செய்திருப்பதை ஞாபகப்படுத்துகிறேன். இனி இங்கிலீஷ் பாஷையில் அரசாங்கத்தை நடத்த முடியாது என்பதையும் சொல்ல விரும்புகிறேன். அரசாங்கத்தை மாகாண பாஷையில் நடத்த வேண்டுமென்று பொதுமக்கள் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். அதற்கனுகூலமாகவேதான் நானும் இப்பொழுது பிரதமராக வந்திருக்கிறேன் என்பதை அங்கத்தினர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன். (சிரிப்பு) அங்கத்தினர்கள் இதை மனதில் வைத்துக் கொண்டு இனிமேல் சாவதானமாகப் பேச வேண்டும். காங்கிரஸ் கட்சி அங்கத்தினர்கள்கூட குற்றம்

சொல்லிப் பேசியிருக்கிறார்கள். அதைக்கூடக் கேட்க எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. எந்தெந்த விஷயத்தைப் பற்றிப் பேசுகிறோம் என்பதைத் தெரிந்து கொண்டு பேச வேண்டும். மனதைச் சரியான முறையில் உபயோகப் படுத்திப் பேச வேண்டும். சுதந்திரம் அடைந்த பிறகு நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை மனதில் வைத்துக் கொண்டு இனிமேல் முன் மாதிரி பேசாமல் தாங்கள் பேசுவது என்னவென்பதை நாம் தெரிந்து கொண்டு பேசவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நாம் பொது ஜனங்களுக்குப் பிரதிநிதியாக வந்திருக்கிறோம். நாம் அவர்களுக்குச் சட்டம் செய்வதற்காக வந்திருக்கிறோம். இயற்றிய சட்டத்தை நடைமுறையில் நடத்திக் காட்ட வேண்டியதும் அதற்குத் தகுந்த முறையில் நாம் தயார் பண்ணிக் கொண்டு நடத்த வேண்டியதும் நம்முடைய கடமை. குறைகள் இருக்கலாம். மனிதர்கள், தானே அந்தக் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு நடத்த வேண்டும். அப்படி நிவர்த்தி செய்து கொண்டு நியாயமாக நடக்க வேண்டும். முதலில் தங்களிடத்தில் இருக்கும் குறைகளை நிவர்த்தி செய்து கொண்டு பிறரைக் குற்றம் சொல்வதாக இருந்தால், அதைச் சாவதானமாகச் சொல்ல வேண்டும். நான் ஏதாவது செய்திருந்தால், அது அங்கத்தினர்களைத் துன்புறுத்த வேண்டுமென்பதற்காக இல்லை என்றும், அப்படி ஏதாவது இருந்தால் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவர்களையும் சரியாக நடந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

*1948—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11—ஆம் நாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் அவர்கள், 'கோரிக்கை எண் 15—கல்வி' என்ற மானியக் கோரிக்கை மீது ஆற்றிய உரை:—*

"வட்டார மொழிகளின் வளர்ச்சி பற்றி ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மற்ற நாடுகளில்

தங்களுடைய மொழிகளை எந்த அளவு வளர்த்திருக்கிறார்களோ அந்த அளவு நம்முடைய மொழிகள் வளர்ச்சி காணவில்லையென்றால், மற்ற நாடுகளில் வளர்ந்துள்ளது போன்ற எண்ணப்போக்கும் கலாச்சாரமும் நம் நாட்டில் அதே அளவில் வளர்ச்சி அடையாமல் குன்றிவிடும். இதைக் கருத்தில் கொண்டு, அரசாங்கம் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறது.

1)எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் வட்டார மொழிகளைப் புகுத்துவது;
2)பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் மொழியைப் போதிக்கின்ற ஆசிரியர்களின் தகுதியையும் சம்பளத்தையும் உயர்த்துவது;
3)வட்டார மொழிகளைக் கல்லூரி வகுப்புகளில் புகுத்துவது;
4)வட்டார மொழிகளில் எழுதப்படும் புத்தகங்களுக்குப் பரிசுகள் வழங்குவது;
5)மாகாணத்தின் இரண்டு பிரதான மொழிகளில் கலைக்களஞ்சியம் தாயாரிப்பவர்களை ஊக்குவிப்பது.

திருமதி டோரா லாஸரஸ் என்பவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் பதவியை ஏற்படுத்துவதற்காக ரூ.68,000/— கொடுத்திருக்கிறார் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்" என்றார்.

1949—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4—ஆம் நாள் வரவு—செலவுத் திட்டப் பொது விவாதத்தில் கலந்துகொண்டு சாதாரண உறுப்பினர் என்ற முறையில் டாக்டர் பி.சுப்பராயன் ஆற்றிய உரை:—

"பல்கலைக்கழகங்களில் வட்டார மொழிகளைப் புகுத்த நடக்கும் முயற்சியானது தவறானது. நாட்டுப் பிரிவினைக்குப் பின்பும் இந்த நாடு ஒற்றுமையாக, ஒன்றாக இருக்க வேண்டுமென்பதிலே அக்கறையுள்ளவன் நான்.

நாட்டு ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமென்றால், இந்த நாட்டின் தேசிய மொழியாக எதை ஏற்றுக் கொள்ளப் போகிறோமோ அம்மொழியையே பல்கலைக்கழகங்களிலும் பயிற்று மொழியாக வைக்க வேண்டும். அரசியல் நிருணய சபையில் இதன்மீது எந்த முடிவும் எடுக்கவில்லை. இன்றைய தினம் ஆங்கிலம் இருக்கிறது; பல்கலைக்கழகக் கல்வியைப் பொறுத்தவரையில், நாம் பரிசீலனை செய்யும் வகையில் தற்காலிக முடிவை எடுத்தல் கூடாது. அப்படிச் செய்தோமானால், எதிர்காலத்தில் ஏராளமான சங்கடங்கள் வந்தே தீரும். நம் நாட்டின் தலைமையமைச்சர் மைசூரிலே பேசும் பொழுது, உலகிலேயே மிகவும் வலுவான மொழி இன்று ஆங்கிலம்தான் என்று குறிப்பிட்டார். இங்கிலாந்து நாட்டினால் அம்மொழி வளர்ந்துள்ளது என்பதைச் சந்தேகமறச் சொன்னார். அதைப்போலவே, நம் நாட்டிலும் ஆங்கிலம் போல, தேசிய மொழி ஒன்று உருவாகப் போகிறது. நம்முடைய தலைமையமைச்சர் மேலும் குறிப்பிடுகையில் சட்டத்தினாலும், கட்டாயத்தினாலும் எந்த ஒரு மொழியையும் தேசிய மொழியாக ஆக்கிவிட முடியாது என்றார். உலகம் முழுவதும் இன்று ஆங்கில மொழியைப் புரிந்து கொள்கிறார்கள். நம் மாநிலத்திலும் ஆங்கிலம் அந்நியமாகக் கருதப்படவில்லை. இந்துஸ்தானியில் நம்மிடையே யாராவது பேசினால், அதை வரவேற்பதில்லை. ஆகவே, பல்கலைக் கழகங்களில் வட்டார மொழிகளைப் புகுத்துவதன் மூலம் நாம் பிளவுச் சக்திகளுக்கு வழி வகுத்தவர்களாசு ஆவோம். பல்கலைக்கழக மட்டத்திலாவது, ஆண்களும் பெண்களும் பயிலுகின்ற மொழியை, காஷ்மீரத்திலிருந்து, கன்னியாகுமரி வரை உள்ளவர்கள் புரிந்து கொள்ளும் வசதியைப் பெற வேண்டும். அந்த வகையிலாவது. அவசரத்தில் மாற்றங்களைச் செய்வதைக் கல்வி அமைச்சர் தவிர்க்க வேண்டும். எதிர்காலத்தில் இதற்காக வருந்துதல் கூடாது. பிறந்த நாட்டில் புதிதாகப் பல சீர்திருத்தங்களை

வேகமாகச் செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்கும். ஆகவே, அவசரப்படாமல் காரியமாற்ற வேண்டும் என்றார்.

மாண்புமிகு டி.எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் கல்வியமைச்சர் (4.3.49):—

"பல்கலைக்கழகங்களில் பயிற்று மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பதில் முடிவெடுத்துவிட்டதாகப் பல உறுப்பினர்கள் நினைத்துக் கொண்டு பேசினார்கள். இவ்விஷயம், மாநில மற்றும் மத்திய அரசுகள், மேலும் பல்கலைக்கழகம் ஆகியோரது பரிசீலனையில் இருந்து வருகிறது.

மத்திய அரசு பல்கலைக்கழகத் துணைவேந்தர்களைக் கொண்ட குழு ஒன்றை நியமித்தார்கள். அக்குழுவிற்கு டாக்டர் தாராசந்த் தலைவராக இருந்தார். பல்கலைக்கழகப் பயிற்று மொழியாக எந்த மொழி இருக்க வேண்டும் என்பதை விரிவாக அக்குழு பரிசீலித்தது. அக்குழுவின் பரிந்துரை வருமாறு:—

ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அதற்குப் பதிலாக வட்டார மொழியைப பயிற்று மொழியாக உயர்கல்வியில் ஆக்குவதற்குரிய தருணம் ஒன்று வரவேண்டும் என்ற கருத்தை ஒருமுகமாக ஏற்றுக் கொண்டார்கள். பொருத்தமான வார்த்தைகளைக் கண்டு பிடிப்பதும், பாடப் புத்தகங்கள் கிடைக்காத நிலைமையும்தான் இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதில் சங்கடத்தை உண்டு பண்ணுகிறது. ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு, ஆங்கில மொழியிலிருக்கிற உலகநாடுகள் வார்த்தைகளையும் டெக்னிகல் சொற்களையும் இந்திய மொழிகளில் அப்படியே எடுத்துக் கையாள வேண்டும். இப்படிச் செய்தால் இந்தியாவில் மட்டுமல்லாமல், உலகம் முழுவதற்கும் பொதுவான வார்த்தைகளின் தொகுப்பு உருவாக்குவது எளிதாகிவிடும்'' என்று பரிந்துரைத்தார்கள். விவாதத்திற்குப் பிறகு, அடுத்த ஐந்தாண்டுகளில் ஆங்கிலத்தை

அகற்றி விட்டு, இந்திய மொழிகளையே பல்கலைக் கழகங்களில் பயிற்று மொழியாக ஆக்குதல் வேண்டும். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, ஆங்கிலம் பயிற்று மொழியாக நீடிக்காது என்று பரிந்துரைக்கப்பட்டது.

மேற்கண்ட பரிந்துரைகள் மாநில அரசுகளின் கருத்தினை அறிய அனுப்பப்பட்டது. சென்னைப் பல் கலைக்கழகத் துணைவேந்தரும் மேற்சொன்ன பரிந்துரை களை எதிர்க்கவில்லை என்று தெரிகிறது.

ஆங்கிலம் உலக மொழி; ஆகவே, அம்மொழியைப் படிக்க வேண்டும் என்று எல்லோரும் சொல்கிறார்கள். ஆனால், பொது மக்களின் கருத்து என்னவென்றால், காலப்போக்கில், பல்கலைக் கழகங்களின் பயிற்று மொழி வட்டார மொழிகளாகத்தான் இருக்க முடியும். அந்நிய மொழிப் படிப்பு, படித்தவர்களுக்கும் படிக்காதவர் களுக்கும் வேற்றுமையை உண்டாக்கியிருக்கிறது. இலட்சக்கணக்கான மக்கள் மேற்படிப்பு படிப்பதற்குரிய வாய்ப்பை நாம் ஏற்படுத்தித் தர வேண்டும்.

*1952*—ஆம் ஆண்டு ஜூலை மாதம் *25*—ஆம் நாள் ஒன்பதாம் எண் கோரிக்கை மீது திரு டி.விஸ்வநாதம் பேசியதாவது:—

''சட்டமன்றத்தில் தினமும் கஷ்டங்களுக்கு நாம் உள்ளாகிறோம். பல மொழிகளைப் பேசுகின்ற நம் மாநிலத்தில் இச்சங்கடங்கள் வருவது இயல்பு. இதற்கு நாம் தீர்வு காணவேண்டும். இருபது சதவீதத்திற்கு மேல், சிறுபான்மையாக உள்ள உறுப்பினர்களடங்கிய இச்சட்ட மன்றத்தில் அவர்களுடைய மொழியிலேயே பேசுவதற்குச் சட்டமன்றத் தலைவர் மாற்று ஏற்பாடுகளைச் செய்வது நல்லது. *1937*—ஆம் ஆண்டு மொழி பெயர்ப்பாளர்களை அமர்த்துவது பற்றிய விவாதம் நடந்தது. அப்படிப்பட்ட ஏற்பாடு சாத்தியமா என்பது எனக்குத் தெரியவில்லை. ஐக்கிய நாட்டுச் சபையில் செய்யப்பட்டிருக்கும்

ஏற்பாட்டைப்போல், பல மொழிகளில் உள்ள சொற் பொழிவுகளை மொழி பெயர்க்க முடியுமா என்பதைத் தெரிந்து கொண்டால், அந்த ஏற்பாட்டை இங்கே செய்யலாம். மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரையிலும், அமைச்சர்கள் அங்கத்தினர்களால் கேட்கப்படும் கேள்வி களுக்குப் பொறுமையுடன் பதிலளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்''.

1952—ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25—ஆம் நாள், சென்னை மாகாணத்தின் முதலமைச்சர் திரு சி.இராச கோபாலாச்சாரியார் வரவு—செலவுத் திட்ட அறிக்கை விவாதத்திற்குப் பதில் அளிக்கும் போது குறிப் பிட்டதாவது:—

''இந்த மாகாணத்தில் பேசப்படுகிற எல்லா மொழிகளையும் உறுப்பினர்கள் புரிந்து கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும், என நான் வற்புறுத்துகிறேன். ஒரு மொழியை நாம் எவ்வாறு புரிந்து கொள்கிறோம்? பள்ளிகளுக்குச் செல்வதால் மொழியைக் கற்றுக் கொள்வதில்லை. கைச் சைகையினாலும், மற்றவர் பேசுவதைக் கேட்பதனாலும், உற்றுக் கவனிப்பதனாலும் மொழியைக் கற்றுக் கொள்கிறோம். சட்டமன்றத்தில் பேசப்படுகிற எல்லா மொழிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது. இயந்திரங்களைப் பயன்படுத்தி மொழி பெயர்த்து, மற்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ளும் ஏற்பாட்டைச் செய்வது என்பதெல்லாம் ஒரு குறுகிய கால ஏற்பாடே தவிர, எதிர்காலத்தை முன்னிட்டு நாம் ஏற்றுக் கொண்ட முயற்சிக்குத் தீர்வு ஆகாது. ஆகவே, நான் மொழி பெயர்ப்பையோ மொழி பெயர்ப்பாளர்களையோ எதிர்க்கிறேன் என்று பொருளல்ல. ஒரு மொழியை மட்டும் பேசுவதனால் நாம் மற்றவர்களிடமிருந்து ஒதுங்கி நின்று பின்னுக்குத் தள்ளப்படும் நிலைமையை உருவாக்குகிறோம். திரு கோபாலகிருஷ்ணய்யர் போன்றவர்கள் தெலுங்கு மொழியில் மட்டும்தான் பேச வேண்டுமென்று சபதம்

மேற்கொண்டுள்ளார்கள். இது சரியல்ல. மொழியினால் சங்கடம் ஏற்பட்டால், அதைத் தீர்ப்பதற்கு ஒரே வழி மற்ற மொழிகளைப் புரிந்து கொள்வதுதான். அதற்காக நாம் குறுக்கு வழிகளை நாடக்கூடாது"

*1952*—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26—ஆம் நாள் திரு வி.வி.இராமசாமி இரண்டு கேள்விகளைக் கேள்வி நேரத்தில் முதலமைச்சர்களுக்குப் போட்டார்.

1)திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக அரசாங்க வேலைகள் தமிழில் நடக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டதா?
2)பரீட்சார்த்தமாக நடைமுறையில் இருந்ததை மற்ற தமிழ் மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா?

என்ற கேள்விகளைப் போட்டார்.

அரசாங்க நடவடிக்கைகளைத் திருச்சி மாவட்டத்தில் பரீட்சார்த்தமாக நடத்தி வருவது உண்மைதான், அந்தத் திட்டத்தை மற்ற மாவட்டங்களுக்கு விரிவுபடுத்த வேண்டுமென்று பரிசீலித்ததில், தற்சமயம் அப்படிச் செய்யத் தேவையில்லை என்று தீர்மானித்துள்ளதாகவும், முதலமைச்சர் திரு சி.இராசகோபாலாச்சாரியார் பதிலளித்தார்.

திரு வி.வி.இராமசாமி அவர்கள் தொடர்ந்து, என்ன காரணத்தினால் தள்ளிப் போடப்பட்டது என்று கேட்டதற்கு, இப்படிப்பட்ட மாற்றங்கள் மெதுவாகத்தான் செய்ய வேண்டும் என்ற காரணத்தினால் தள்ளிப் போடப்பட்டது என்று முதலமைச்சர் பதிலளித்தார்.

திரு.ஏ.கோவிந்தசாமி நாயக்கர் அவர்கள்:—

"அரசாங்க நடவடிக்கைகள் தமிழில் இருப்பதால கஜானா என்பதற்குக் கருவூலம் என்றும் மோட்டார் கார் என்பதற்கு உந்து என்றும் பொதுமக்களுக்குப் புரியாதபடி தமிழ்ச் சொற்களை அமைப்பதை மாற்றிப் பொது

மக்களுக்குப் புரியக்கூடிய வகையில தமிழ் வார்த்தைகளை அமைப்பார்களாவென்று நான் கேட்கிறேன்" என்று கேட்டார்.

திரு சி.இராசகோபாலாச்சாரியார்:—

"பாஷை நிதானமாகத்தான் மாறும். இடையில் பல்வேறு விதமாக மாறும். கடைசியில் முடிவாக, சரியாக மாறும் என்றார்.

"மேலும், திரு வி.வி.இராமசாமி ஒரு கேள்வியைப் போட்டார். "பரீட்சார்த்தமாக நடைபெற்று வரும் இந்த முயற்சியில் கஷ்டங்கள் இருந்தாலும், வட்டார மொழியில் நிருவாகத்தை நடத்துவது என்ற கொள்கையைக் கைவிட்டு விடாமல் தொடர்ந்து செயல்படுத்த முதலமைச்சர் உறுதியளிப்பாரா?" என்று கேட்டார்.

திரு இராசகோபாலாச்சாரியார்:—

"இந்த உலகத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டியிருக்கிறது. மொழியையும் சீர்திருத்த வேண்டும். நிருவாகத்தைச் சீர்படுத்தி நடத்தி வருதல் வேண்டும். ஒன்றைச் சீர்திருத்தம் செய்யும் பொழுது, அதன்பால் பற்றுவைத்து, மற்றவற்றை மறந்துவிடக்கூடாது. ஆகவே, மொழிச் சீர்திருத்தம்தான் நம் பயனத்தின் எல்லைக்கோடு என்று நாம் நினைக்கக் கூடாது என்றார்.

1952—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 4—ஆம நாள் திரு சி.வி.கே.ராவ் அவர்கள் ஒரு பிரேரணையைச் சட்ட மன்றத்தில் முன் மொழிந்தார்கள். அதாவது "சட்ட மன்றத்தில் மொழி பெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட வேண்டும். குறிப்பாகப் பல உறுப்பினர்களுக்குத் தெரியாத மொழியில் ஒருவர் பேசினாரேயானால் அப்பேச்சு மொழி பெயர்க்கப்பட வேண்டும்" என்றார்.

இச்சமயம் திரு டி.விஸ்வநாதன் அவர்கள் குறுக்கிட்டுத் தானும் அவ்விதமான பிரேரணையொன்றைக்

கொடுத்திருப்பதாகவும், அதையும் விவாதத்திற்குச் சேர்த்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து திரு சி.வி.கே.ராவ் அவர்கள் தன்னுடைய தீர்மானத்தை விவரித்துப் பேசினார். "ஒரு உறுப்பினர் தன் தாய் மொழியில் இந்த அவையில் பேசும் பொழுது கேட்பவர்கள் சரியான கண்ணோட்டத்துடன் அப்பேச்சைக் கவனிப்பதில்லை. இச்சட்டமன்றத்தின் அமைப்பையும் உறுப்பினர்களுடைய தொகுப்பையும் கவனித்துப் புரிந்து கொள்ள வேண்டுமென்றும், இது அரசின் பொறுப்பு என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

உறுப்பினர்கள் பல மொழி பேசக்கூடிய பகுதி களிலிருந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. இன்றைய அரசு அந்நிய அரசு போலவே செயல்படுகிறது. பல உறுப்பினர்கள் ஆங்கிலத்தில் பேச இயலாது ஆங்கிலத்தில் பேசினால் ஒழிய, அவர்களுக்கு இந்த அவையில் பங்கு கொள்ள முடியாது என்ற நிலைமையும் அந்த முறையிலே சட்டமன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருகிறது. அந்நிய ஆதிக்கத்திலும் சட்டமன்ற நடவடிக்கைகள் இப்படித்தான் நடந்து வந்தது. தொழிலாளர் வர்க்கத்திலிருந்தும், மத்தியதரக் குடும்பத்திலிருந்தும் இன்றைய உறுப்பினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுச் சட்டமன்றத்தை அலங்கரிக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ஆங்கிலம் படிக்கவோ பேசவோ தெரியாது. தமிழ்தான் மாநில மொழி என்ற உணர்வே இங்குக் காட்சியளிக்கிறது. தமிழர்கள்தான் இந்த மாநிலத்தை ஆள்கிறார்கள் என்ற நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்த உணர்வை நீக்க ஒவ்வொரு உறுப்பினரும் தனக்குத் தெரிந்த மொழியில் அரசாங்க அறிக்கைகளைப் படிக்கவும், சட்டமன்றத்தில்

பேசவும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் தங்களுக்குத் தெரிந்த மொழியில் கேட்கின்ற கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்கத் தயங்குகிறார்கள். இது எதைக் காட்டுகிறது 'என்றால், அவ்வுறுப்பினர் ஆங்கிலம் தெரியாததனால் வேறு எந்த மொழியிலும் பேசக்கூடாது என்றும், இல்லையென்றால் பேச வேண்டிய அவசியம் இல்லையென்றும் தெரிவிக்கக்கூடிய ஒன்றாகக் கருத வேண்டியிருக்கிறது. இதனால், உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளுக்குச் செல்லும் பொழுது மிகவும் மனவருத்தமும், சோர்வும் அடைகிறார்கள். மேலும் பல மொழி பேசும் பிரிவினர்களுக்கிடையே சச்சரவை உண்டாக்குகிறது" என்றார். ஆகவே, தன்னுடைய தீர்மானத்தை ஏற்க வேண்டும் என்று வலியுறுத்தினார். இத்தீர்மானத்தின் மீது திரு பி.இராமமூர்த்தி பேசினார் (4.12.52):—

இந்தத் தீர்மானத்தை ஆதரிக்கும் முறையில் சில வார்த்தைகளைப் பேச விரும்புகிறேன். இந்தத் தீர் மானத்தின் உள்ளடக்கம் ஏதோ சிலருக்கு ஆங்கிலம் தெரியவில்லை. அதனால் எல்லாவற்றையும் மொழி பெயர்த்து அவர்களுடைய சௌகர்யத்திற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும் என்பது மட்டும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். ஐந்து வருஷங்களுக்கு மேலாக நம் நாடு சுதந்திரம் அடைந்திருக்கிறது. இந்த ஐந்து வருஷங்களாகியும் நாம் இன்னும் இந்த அந்நிய பாஷையை வைத்துக் கொண்டு அந்நிய பாஷையில் பேச வேண்டிய நிர்ப்பந்தம் இருப்பது வேடிக்கையிலும் வேடிக்கையாக இருக்கிறது. உலகில் வேறு எந்த நாட்டிலும் சுதந்திரம் வந்த பிறகு இப்படிப்பட்ட ஒரு காட்சியை நாம் காண முடியாது. அந்நியன் இந்த நாட்டை ஆள்கிற காலத்தில் இந்நாட்டு மக்கள் வளர்ச்சி அடையாமல் தடை செய்வதற்காகவும் அவர்களுடைய ஜனநாயக வாழ்க்கையைத் தடை செய்

வதற்காகவும் பிரயோகிக்கப்படும் முறைகளில் ஒன்று அந்த நாட்டுப் பாஷையை வளரவிடாமல் தடைசெய்வது. இதை எதிர்த்து நீண்ட காலமாகத் தேசிய இயக்கம் நடைபெற்று வந்திருக்கிறது. குறிப்பாக 1900—ஆம் வருஷத்திற்குப் பிறகு தேசிய பாஷையில், அவரவர்களுடைய பாஷையில் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்று இயக்கம் நடத்தப்பட்டது. அவரவர்களுடைய பாஷையில் அவர்களுடைய கல்வி வளரவேண்டும் என்று மிக மிகப் பெரிய கிளர்ச்சி நடந்து வந்தது.

இன்றைக்கு இருக்கக்கூடிய அமைப்பின்கீழ் மொழிவாரி மாகாணங்கள் இல்லாத காரணத்தால், பன் மொழி பேசக்கூடியவர்கள் இங்கு உட்கார்ந்து கொண்டிருக்கிற காலத்தில் நம்முடைய நடவடிக்கைகளை அதன்படி அமைத்துக் கொள்வது என்பதுதான் இதில் அடங்கியிருக்கிறது. அந்தப் பிரச்சினைதான் இதில் அடங்கியிருக்கிறது. அவ்விதம் பல அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இப்பொழுது வேண்டும் என்று சொல்வது அவர்களுடைய நன்மைக்கு இல்லை. நம்முடைய அரசியல் சட்டத்தில் நாம் என்ன சொல்லியிருக்கிறோம். நாம் இப்பொழுது சர்வ ஆதிபத்தியம் அடைந்திருக்கக்கூடிய இந்த நிலையில், ஜனநாயகக் குடியரசு அமைப்பதற்கு நாம் கீழ்க்கண்ட சபதத்தை அரசியல் சட்டத்தில் அமைத்துக் கொண்டிருக்கிறோம். நீங்களாகவே அவ்விதம் அமைத்துக் கொண்டிருப்பதாகப் பறை சாற்றிக் கொண்டிருக் கிறீர்கள். ஆகவே, இங்கு இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்கள், பிற மொழி தெரியாத அங்கத்தினர்கள், தங்களுடைய மொழி ஒன்றையே அறிந்திருக்கக்கூடிய அங்கத்தினர்கள், ஏதோ பொம்மையாக உட்காருவதற்கு இங்கு வரவில்லை. பல்லாயிரக்கணக்கான மக்கள், கிட்டத்தட்ட இலட்சக் கணக்கான மக்கள் அவர்களை இங்கு அனுப்பியிருக் கிறார்கள். அவர்களும் இராஜ்யத்தின் அரசியல்

விவகாரங்களில் பூராவும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் அவர்களை ஜனங்கள் இங்கு அனுப்பியிருக்கிறார்கள். இங்கு என்ன நடக்கிறது என்றும், இங்கு என்ன பேசிக் கொள்ளுகிறார்கள் என்றும் தெரிந்து கொள்ள முடியாமல் இங்கு உட்கார்ந்து கொண்டிருக் கிறார்கள் என்றால், அவர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்பி இருக்கக்கூடிய மக்களின் உரிமை இங்குப் பறிக்கப் படுகிறது என்பதாக இல்லையா? இன்றைக்கு இந்த அரசியல் சட்டத்தின் கீழ் நாம் இந்தச் சட்டசபையில் சபதம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அந்தச் சபதத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். அதனுடைய முக்கியமான பொறுப்பு நமக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கிறது. அப்பொழுதுதான் உண்மையாகவே சர்வ ஆதிபத்திய வசதிகளைச் செய்து கொடுத்ததாகும். மொழிவாரி மாகாணம் இலலாத நிலைமையில் எடுத்துக் கொள்வதற்கு அவர்களுக்குப் பூர்ண உரிமை அளிக்க வேண்டியது முதல வேலை. இரண்டாவதாக இந்தத் தீர்மானத்தின் பிரகாரம் இங்கு வரக்கூடிய தஸ்தாவேஜுகள் பூராவும் அந்தந்தத் தாய் மொழியில் இருந்தாக வேண்டும். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும். ஆகவே, இந்தத் தீர்மானம் மிகவும் அவசியமாக இருக்கிறது. இதற்காக எவ்வளவு பணம் செலவானாலும் அதைப்பற்றிக் கவலை இல்லை. அரசியல் சட்டத்தை நிறைவேற்றக்கூடிய பொறுப்பு நமக்கு உண்டு. இந்தத் தீர்மானத்தை, சர்க்கார் ஏற்றுக் கொண்டு அதை நடைமுறையில் கொண்டு வருவதற்குப் பணம் இல்லை என்று சொன்னால், இப்பொழுது ஒரு சப்ளி மெண்டரி பட்ஜெட் கொண்டு வந்தாலும் அதை ஏகமனதாக நிறைவேற்றிக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அதை இன்றைக்குக் கொண்டு வந்தாலும் இந்தப் பக்கத்தில் இருக்கக் கூடியவர்கள் அதற்குப் பரிபூரணமான ஆதரவு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள் என்று சொல்லிக் கொண்டு இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்

என்று கேட்டுக் கொள்ளுகிறேன்''என்றார்.

திரு வி.ஆர். கிருஷ்ண அய்யர் அவர்கள்:—

''இந்தத் தீர்மானத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு அடிப்படைக் காரணங்கள் உள்ளன. ஒன்று, இத்தீர் மானத்தின் தத்துவம்; இரண்டாவது, அவையில் நடவடிக்கைககளை எந்த முறையில் நடத்துவது என்பது. இம்மாகாணத்தில் வாழ்கிற இலட்சோபலட்சம் மக்களின் தினசரி சமூக, பொருளாதார, அரசியல் வாழ்க்கையைப் பாதிக்கிற விஷயங்களைப் பற்றி விவாதிக்கவும், முடிவுகள் எடுக்கவும் இங்கே நாம் அவர்களுடைய பிரதிநிதிகளாகக் கூடியுள்ளோம். வயது வந்தோருக்கு வாக்குரிமை கொடுத்திருப்பதினால், படிக்காத, பாமர மக்களுடைய பிரதிநிதிகளாக நாம் உள்ளோம். தேர்தலில் நிற்க வேண்டும் என்றால், ஆங்கிலம் தெரிய வேண்டும் என்ற கட்டுப்பாடு இல்லை. ஆங்கிலம் இந்த நாட்டு மொழியில்லை. இந்த நாட்டிலும் அம்மொழி வேரூன்றவல்லை. அப்படி இருக்கிற மொழியை நாம் இந்நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும். திரு சி.வி.கே. ராவ் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தீர்மானம், மக்களுடைய உரிமையை நிலைநாட்டும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டிருக்கிறது. ஊமைகளாய் இருக்கிற பல கோடி மக்களின் பிரதிநிதிகளாய் நாம் இருக்கிறோம். அம்மக்கள் தங்களுடைய தாய் மொழியை மட்டும்தான் அறிவார்கள். அவர்களுக்கு ஆங்சி ் தெரியாது. இருப்பினும் அவர்களுக்கு ஆசையும், எண்ணங்களும், சுய கஷ்டங்களும் இருக்கின்றது என்பதை நாம் அறிய வேண்டும். ஒன்றாய்க் கூடியிருக்கிற நாமும், ஒருவரையொருவர் புரிந்து கொள்ள வேண்டும். ஒத்த கருத்துடைய முடிவுகளை எடுக்க வேண்டும்.

''அரசியல் சட்டத்தின் 210-ஆவது பிரிவின்படி, சட்டபூர்வமாக நாம் நம் மொழிகளான கன்னடம், தமிழ், மலையாளம் மற்றும் தெலுங்கு ஆகிய மொழிகளில் பேசுவதற்கு உரிமையிருக்கிறது. நமக்கு இருக்கிற பல

சங்கடங்களினாலும், வட்டார மொழிகளில் பேசக்கூடிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். பல உறுப்பினர்களுக்கு ஆங்கிலத்தில் பேசத் தெரியாது; ஆங்கில மொழி தெரிந்தாலும் மன்றத்தில் பேச முடியாத நிலைமையிலும் பல உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய தாய் மொழியில் பேசக்கூடிய வாய்ப்பை உறுப்பினர்கள் பெறாதது வருந்தக்கூடிய ஒன்றாகும். இந்த முறையைப் போக்க வேண்டியது அவசியமாகும். அரசியலிலிருந்து ஆங்கிலேயர்களை விரட்டிய பின்பும், தொடர்ந்து அவர்கள் விட்டுச் சென்ற மொழியைப் பயன்படுத்துவது மிகவும் அவமானத்தைத் தரக்கூடிய ஒன்றாகும். இங்கே பேசப்படும் பேச்சுக்கள் மொழி பெயர்க்கப்பட வேண்டும். எவ்வளவு முக்கியமான கருத்துக்களை ஒரு உறுப்பினர் எடுத்து வைத்தாலும் அது மற்ற உறுப்பினர்களுக்குப் புரியவில்லையென்றால், அந்தப் பேச்சால் எந்தப் பயனும் இல்லை. விவாதித்து, பொதுவான முடிவெடுப்பது என்பது மக்களாட்சி முறையின் அடிப்படையாகும்'' என்றார்.

திரு பி.ஜி.கருத்திருமன்:—

இப்பொழுது உத்யோகப் பற்றற்ற முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கும் தீர்மானம் யார் யார் எந்தெந்தப் பாஷையில் பேசுகிறார்களோ அவர்களுக்கெல்லாம் மற்றவர்கள் பிற பாஷைகளில் பேசும்பொழுது அதை அவர்கள் பாஷையில் மொழி பெயர்த்துச் சொல்ல மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டுமென்று கோருகிறது.

அத்தீர்மானத்தை ஆதரித்துத் தோழர் இராமமூர்த்தி தமிழில் பேசியபொழுது எனக்கு, மிகவும் சந்தோஷமாக இருந்தது. மிகவும் அழகாக இவ்வளவு நாளாக ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டிருந்த ஸ்ரீ இராமமூர்த்தி இன்றைய தினம் தமிழின் பெருமையைப் பற்றியும், அதன் இனிமையைப் பற்றியும் அழகாக ஒரு சொற்பொழிவைச்

சபையில் ஆற்றினார். அவர் உள்ளத்தில் இவ்வளவு நாளாக உணர்ந்திருப்பதைப் பற்றிப் பேசினார்களா, இன்றைய தினம் சபை முன்பு வந்திருக்கும் தீர்மானத்தை ஆதரிப்பதற்காகப் பேசினார்களா என்று எனக்குத் தெரியாது. தீர்மானத்தை ஆதரித்துப் பேசும்பொழுது, பாரதியார் பாடியுள்ள, 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்' என்ற பாடலைத் தமிழ் இனிமையானது என்பதைப் பற்றிச் சொல்ல உபயோகப்படுத்தினார்.

நன்மை தீமை என்னவென்பதை உணர்ந்து பாராமலேயே நாம் வாதம் செய்து கொண்டிருப்பதனால் நன்மை எதுவுமில்லை. அந்நிய ஆட்சியினாலே இந்தத் தேசத்திற்கு எவ்வளவோ தீமை ஏற்பட்டிருந்தாலும் கூட, ஒரு பெரிய நன்மை அவர்களால் ஏற்பட்டது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. அவர்களால் ஏற்பட்ட நன்மை என்னவென்று பார்த்தால், பல மொழிகள் பேசப்பட்டு வந்த இந்தப் பாரத நாட்டு மக்களிடையே ஆங்கிலத்தைப் பரப்பி, அதனால் ஆங்கிலத்தின் வாயிலாகப் பாரத மக்கள் ஒருவரை ஒருவர் பூர்ணமாக அறிந்து கொள்வதற்கு வசதி அளித்து இந்த நாட்டிடையே ஒரு ஐக்கியத்தை உண்டு பண்ணியதுதான். ஆதலினாலேதான், அந்த ஆங்கிலப் பொதுப் பாஷையை வைத்துக் கொண்டு நாம் சுதந்திரப் போராட்டத்தைக் கூட்டாக நடத்த முடிந்தது. இந்தியா பூராவுக்கும் ஒரு பொது சர்க்காரை நிருணயிக்க முடிந்தது. ஆகையால், 220 ஆண்டுகளாகப் பிரிட்டிஷ் ஆட்சியால் இந்திய மக்களுக்குப் பல கெடுதல்கள் ஏற்பட்டதென்றாலும், மறக்க முடியாத இந்த ஒரு பெரிய நன்மை கிடைத்தது. ஆகையினாலே, ஒருவரை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு வசதியளித்த பொது மொழி ஆங்கிலத்தை நாம் ஒழிக்க முயற்சி செய்யக் கூடாது.

அடுத்தபடியாக, இங்குத் தாய்மொழியில் சட்ட மன்ற நடவடிக்கைகளை நடத்துவதற்கு வேண்டிய வசதிகள்

இல்லாததால் ஆங்காங்கே உள்ள மக்கள் இங்கே என்ன நடக்கிறதென்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதாகச் சில அங்கத்தினர்கள் பேசினார்கள். அதை ஒப்புக் கொள்ள முடியாது. ஏனென்றால், இங்கே நடக்கும்படியான ஒவ்வொரு விஷயத்தையும் மறுநாள் தினசரிப் பத்திரிகைகளில் நாம் பார்க்கிறோம். சபையில் நாம் இருந்தும்கூட நம் கவனத்திற்கு வராத சில நுண்ணிய விஷயங்களையும்கூடப் பத்திரிகைகளே நமக்குத் தெரிவிக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அதோடு தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பல பத்திரிகைகள் இருப்பதால் அந்தந்த மொழியில் அன்றன்றே சபையில் நடக்கும் விஷயங்கள் பொது மக்களுக்கு அனுப்பப்படுகிறது என்பதை நாம் எல்லோரும் மறந்து விடக் கூடாது. ஆனால், சில ஆந்திர அங்கத்தினர்கள் ஏதோ சில காரணத்தை மனதிற்கொண்டு இவ்வளவு நாளாக ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தவர்கள், இப்பொழுது தெலுங்கில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். என்னைக் கேட்டால், அவர்களுக்குத் தாய்ப் பாஷையிடம் ஏற்பட்டிருக்கும் பக்தியைவிட சபையில் நடவடிக்கைகளைச் சுமுகமாக நடக்கவிடாதபடி ஏதாவது செய்து கொண்டேயிருக்க வேண்டுமென்பதற்காகத்தான் அப்படி நடக்கிறார்களோ என்று எண்ணுகிறேன். ஒரு காலத்தில் அறிஞர் பெர்னாட்ஷா சொன்னார்கள், எனக்குப் பூர்ண சுதந்திரம் இருந்தால், நான் ஒரு சர்வாதிகாரியாக இருந்தால், உலகிலுள்ள மேடைப் பிரசங்கிகள், வரி போடுபவர்கள், இன்ஷுரன்ஸ் ஏஜெண்டுகள் ஆகிய மூன்று பேரையும் ஒழித்துவிடுவேன்' என்பதாக அதன் கருத்து என்னவென்றால், மேடைப் பிரசங்கிகளுக்கு நியாயமான விஷயத்தை அநியாயமானதாகவும், உண்மையைப் பொய்யாகவும் தன்னுடைய வாக்குச் சாதுரியத்தால் மாற்றிப் பொது மக்கள் மனதையே திருப்பிவிடக்கூடிய சக்தி உண்டு என்பதற்காகத்தான். அந்த முறையில்

பார்த்தால் ரொம்பவும் சின்ன விஷயமான, அவசியமற்றதான இந்தத் திருத்தத்தை மிகவும் அவசியமுள்ளது போலவும், இப்படிச் செய்யாவிட்டால் எல்லா விஷயமும் அழிந்து போய்விடுவது போலவும் சட்டசபை அங்கத்தினர்கள் பலர் தம்முடைய மேடைப் பிரசங்கச் சாமர்த்தியத்தைக் காட்டினார்கள். மேடைப் பிரசங்கம் ஓரளவுக்கு அவசியம்தான் என்றாலும், உண்மையை மறைத்துப் பேசுவதற்குத் தன்னுடைய சாமர்த்தியத்தைக் காட்டுவது சரியல்ல.

ஆகையால், அங்கத்தினர்கள் கொஞ்சம் தாராள மனதுடன் இச்சபையிலுள்ளோர்களின் நலனை உத்தேசித்து, எல்லோருக்கும் புரியும் பாஷையில் பேச வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்தத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

திரு கே.வினாயகம்:—

"நான் ஒரு மொழியிலே அதிகமாகப் பற்றுக் கொண்டவன். ஏன்? தமிழுக்காகவே, தமிழ் வாழ வேண்டும் என்றுதான் நான் நிச்சயிக்கிறேன். அதற்காக வேண்டிய போராட்டங்களையும், நான் பிறந்த இடத்திலேயே துவக்கியிருக்கிறேன். நான் தமிழ் நாட்டு வடக்கு எல்லையில் பிறந்தவன். நான் பிறந்த இடத்தில் என்னுடைய மொழி கொல்லப்பட்டது, நசுக்கப்பட்டது ஆந்திரர்களாலே. நான் ஆந்திரம்கூடப் படித்தவன். பி.ஏ.வகுப்பிலே கூட ஆந்திரம்தான் எனக்கு இரண்டாவது மொழியாகப் பயிற்சி தரப்பட்டது.

ஆனால் தனிப்பட்ட ஹோதாவிலே, சட்டசபைக் காரியங்கள் எந்த மொழியிலே நன்றாக நடத்தப்பட முடியுமென்று நினைத்தால், என்னைப் பொறுத்த வரையிலும் மற்றவர்கள் அதை ஆதரித்தாலும் சரி, மறுத்தாலும் சரி. ஆங்கிலமாகிய ஒரே மொழியிலேதான்

நல்ல முறையிலே நடத்த முடியும். 300 வருஷங்களாக நன்றாகப் பயிற்சி கொடுக்கப்பட்டு, நுட்பமான விஷயங்களை எல்லாம் ஆங்கிலத்தின் மூலம் அறிந்து கொள்ள முடிகின்றது. மொழியிலே இவ்வளவு பற்று வைத்திருக்கும்போது, ஆங்கிலத்தின் மூலமாக இந்தியா சுதந்திரம் அடைந்திருக்கிறதென்பதை எவருமே மறுக்க முடியாது. ஆந்திரர் விரும்பினாலும் சரி, தமிழ்ச் சகோதரர்கள் விரும்பினாலும் சரி, ஆங்கிலத்தை மாத்திரம் இந்தியாவிலிருந்து அகற்றிவிடுவது என்பது கனவுதான். இந்தியை நாம் இங்கு வரவேற்கிறோம். அதற்காக ஆங்கிலத்தை இந்த நாட்டிலிருந்து போக்க வேண்டுமென்று எவராவது சொல்ல முடியுமா? ஆகையால், இன்று இவர்களுடைய உரிமை பாதிக்கப்படுகிறது என்ற ஒரு அளவுக்குத்தான் நான் இதை ஆதரிக்கிறேனே தவிர, தனிப்பட்ட ஹோதாவிலே ஆங்கிலத்தைத்தான் நான் விரும்புகிறேன். ஆங்கிலம் பயிலுங்கள். அதைத்தான் சொல்லலாம். நீங்கள் உங்கள் தொகுதியிலுள்ள மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்று விரும்பு கிறீர்கள். ஆகையால், எந்த அடிப்படையிலே சர்க்கார் நடக்கிறதோ, அதற்கு அங்கத்தினர்கள் சரியாக வரவேண்டுமேயொழிய, அங்கத்தினர்களுடைய அளவுக்கு சர்க்கார் வரவேண்டுமென்று விரும்புவார்களேயானால், ஓடுகிற வெள்ளத்தை எதிர்த்து எவனொருவன் நீந்த விரும்புவானோ, அவ்வளவு அசாத்தியமான காரியமாகும்.

அயல் நாடுகளிலே ஏதாவது ஒரு கூட்டம் நடந்தால், அங்குப் பல மொழிகளில் பேசக்கூடிய தோழர்கள் வருவார்கள். அப்பொழுது இந்த மொழி பெயர்க்கும் கருவி வைத்து, அவர்கள் சொல்லக்கூடிய கருத்துக்களை மொழி பெயர்க்கிறார்கள். ஆனால் அதிலே உண்மையாகவே பேசுகிற தோழர் அந்தக் கருத்தை மற்றவர்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்புகிறாரோ, எவ்வளவு அழுத்தந்திருத்தமாகச் சொல்லுகிறார்களோ அந்தக் கருத்து

மற்ற மொழிகளிலே மொழி பெயர்க்கப்படுகிறது. இங்கு ஒருவர் பேசிவிட்டு, மற்றொரு அறையிலே கருவியை வைத்து அங்கிருக்கிற தோழர் மொழி பெயர்த்து, பிறகு அந்த மொழி வேண்டுமென்ற தோழர் கருவியைக் காதிலே வைத்துக் கொண்டு கேட்கும்போது, பேசினதற்குப் பிறகு ஐந்து நிமிஷமோ இரண்டு மூன்று நிமிஷங்கள் கழிந்த பிறகோதான், இவன் பேசுகிற கருத்து மொழி பெயர்ப்புச் செய்து அந்தச் சரக்கு இங்கே வரும் என்றார்.

திரு பி.ஜீவானந்தம்:—

"நம் எல்லோருக்கும் தெரியும், துரதிருஷ்டவசமாக இன்றைய நம்முடைய இராஜ்ய சர்க்கார் பன்மொழிகள் பேசக்கூடிய பிரதிநிதிகளைக் கொண்ட சட்டமன்றத்தை உடையதாக இருக்கிறது. வங்கம் மாதிரி இல்லை; உத்திரப்பிரதேசம் மாதிரி இல்லை; பிகார் மாதிரி இல்லை; சென்னை இராஜ்ய சட்டமன்றத்தில் மலையாளம், தமிழ், தெலுங்கு, கன்னடம் பேசக்கூடிய நான்கு மொழிப் பிரதிநிதிகள் இருக்கிறார்கள் என்பதைக் கனம் ஸ்ரீ கருத்திருமன் எண்ணிப் பார்த்தாரா என்று தெரியவில்லை. இந்தச் சட்டமன்றத்திற்கு வரும் பிரதிநிதிகள் தங்கள் தாய்ப்பாஷையில் பேசவும், உரிமை அளிக்கிறது சட்டங்கள். இந்திய அரசியல் சட்டப்படி இந்திய அரசியல் சட்ட மன்றங்களில் இந்திய மக்களுடைய குரல்தான் கேட்க வேண்டும். அதாவது, மக்களுடைய ஆட்சியில் சட்ட மன்றங்களில் மக்களின் குரல்தான் கேட்க வேண்டும். இந்த இராஜ்யத்தில் மக்களின் குரல் ஏது? ஒரு குரல் அல்ல, அதைத்தான் நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். தமிழ்க் குரல், கன்னடக்குரல், தெலுங்குக் குரல், மலையாளக் குரல் ஆகிய நான்கு குரல்களும் இந்தச் சட்டமன்றத்தில் கேட்க வேண்டும். அதற்கு வேண்டிய எல்லா வசதிகளையும் அத்தியாவசியமான ஏற்பாடுகளையும் சென்ற ஐந்து ஆண்டுகளாக நடந்து வந்த காங்கிரஸ் சர்க்கார் செய்யத் தவறிவிட்டாலும், கனம் ராஜாஜியின் ஆட்சியில்

அவைகளைச் செய்வதற்கு வேண்டிய முயற்சியைச் செய்ய வேண்டும். அதைச் செய்வதற்குத்தான் இந்தத் தீர்மானம் வந்திருக்கிறது. 375 அங்கத்தினர்களுள்ள இந்தச் சபையில் சர்க்கார் தரப்பில் யாராவது பன்மொழிப் புலவர்கள் இருக்கிறார்களா என்று பார்த்தால், கனம் ராஜாஜி ஒருவரைத் தவிர வேறு யாரும் கிடையாது என்று நான் நிச்சயமாகச் சொல்வேன். (இப்புறத்தில் இரண்டொருவர் இருக்கலாம்) கனம் ராஜாஜிக்குத் தமிழில் நல்ல பாண்டித்தியம் உண்டு. தெலுங்கில் பேசினாலும் மலையாளத்தில் கன்னடத்தில் பேசினாலும் அவரால்தான் புரிந்து கொள்ள முடியும். அப்படியிருக்கையில் நடை முறையில் சில சமயங்களில் அவரே தெலுங்கில் யாராவது பேசினாலும், சரியாகப் புரியவில்லை என்று சொல்வதைக் கேட்டிருக்கிறோம். முதலமைச்சருக்கே சபையில் பேசப் படும் பன்மொழிகளையும் புரிந்து கொள்ள முடியவில்லை. இது மிகவும் துரதிருஷ்டமானதாகும். இந்நாட்டிலே நூற்றுக்கு 20 பேர்களுக்கு மேல் ஆங்கிலம் படித்தவர்கள் இலலை. அப்படியிருந்தும்கூட, இன்றையதினம் ஆங்கிலம் பொது மொழியாகக் கருதப்படுவதைக் கண்டு வெட்கப் படாமலிருக்க முடியாது. 150, 200 ஆண்டுகளாக ஆதிக்க மொழியாக இருந்த ஆங்கிலம் இன்றும் ஆதிக்கப் பொது மொழியாக இருப்பது நமது சாபத்தீடு. காந்திஜியுடன் நான் பேசியிருக்கிறேன். அப்பொழுது ராஜாஜி அவர்களும் இருந்தார்கள். செட்டி நாட்டில் அவ்வாறு பேசியபொழுது அவர்கள் சொன்னார்கள், 'உங்களுக்கு முதல் மொழி தமிழ் மொழிதான்; அடுத்தது இந்தி, அதற்கடுத்தது தெலுங்கு; அல்லது மலையாளம் போன்ற அண்மை மொழிகள்; நான்காவது வடமொழி; ஆங்கிலம் பஞ்சம மொழி யாகத்தான் கருதப்பட வேண்டும்' என்பதாக. அப்படி யிருக்கையில், இன்னும் பொது மொழியாகவே ஆங்கிலம் இருக்க வேண்டுமென்று கனம் கருத்திருமன் சொல்வது எப்படியிருக்கிறது என்பதைச் சபையோர் கவனிக்க

வேண்டும். பல மொழிகளிலும், மொழி பெயர்ப்பது என்றால் கஷ்டமான காரியம்தான். அதனால், ஆங்கிலம் பொது மொழியாகவே இருக்க வேண்டுமென்று சொன்னால் அதை ஒப்புக் கொள்ள முடியுமா? அது சரியான வாதமா என்று பார்க்க வேண்டும். சர்க்கார் தாய் மொழியில் மொழி பெயர்ப்பதற்கு மொழி பெயர்ப் பாளர்களை நியமிப்பதில் என்ன கஷ்டம் இருக்கிற தென்பதை நாம் கவனிக்க வேண்டும். இந்த இராஜ்யத்தில் உள்ள மக்கள் எல்லோரின் குரலும் இந்த இராஜ்ய சட்டமன்றத்தில் கேட்கச் செய்ய, அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள், தாங்கள் எடுத்துக் கொண்ட பிரஜைகளுக்குக் குந்தகமில்லாமல் சட்ட மன்றத்தில் பணியாற்றுவதற்காக, சர்க்கார் பணம் செலவழித்தல் தவறு ஆகாது. அதை ஒரு செலவு என்று கருதக் கூடாது.

நான்கு மொழிகள் பேசக்கூடிய இந்தச் சபையில் ஒருவர் மொழியைத் தவிர மற்றவர் மொழி தெரியாது இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் ரொம்பப் பேர் இருக்கிறார்கள். முக்கியமாக மொழிவாரி மாகாணப் பிரிவினை மிகவும் அவசியம். மொழிவாரி மாகாண அமைப்பு உடனடியாக சாத்தியம் இல்லை என்பதால், மிகக் குறைந்தபட்சமாக, உடனடியாக மொழிபெயர்ப் பாளர்களை நியமிக்க வேண்டும் என்ற இந்தத் தீர்மானம் மிகவும் நியாயமானது; அவசியமானது. இது குறைந்தபட்ச ஜனநாயகக்கோரிக்கையைக் கொண்ட தீர்மானம். இதில் கருத்து வேற்றுமைக்கு இடமில்லை. ஆகவே, கனம் ராஜாஜி அவர்கள் கட்டாயம் இந்தத் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்றார்.

*திரு ஏ.கோவிந்தசாமி நாயக்கர்(4.12.52):—*

"இந்தத் தீர்மானத்தை எதிர்க்கட்சிக் காரர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதற்காகவே

சர்க்கார் தரப்பில் இருக்கிற நண்பர்கள், ஆங்கிலத்தில் பேசினால் புரியாது இருக்கின்ற மெம்பர்களும் கூட எதிர்க்கும்படியான நிலைமையில் இருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நண்பர் ஜீவானந்தம் அவர்கள் கூறியதுபோல், யாரும் எதிர்க்க வேண்டிய அவசியமேயில்லை. அதற்குக் காரணமென்னவென்றால், சில அங்கத்தினர்கள் தெலுங்கில் பேசும்போது, கனம் சபாநாயகர் அவர்களுக்குக்கூடப் புரியவில்லை. முதல் மந்திரியாருக்கும் புரியவில்லை. சில தமிழ் மந்திரிகளுக்கும் புரியவில்லை. அப்படியென்றால் இந்தத் தீர்மானத்தை ஏன் எதிர்க்க வேண்டுமென்று நான் கேட்கிறேன். கல்வி மந்திரியாரைப் பார்த்து, தமிழில் 'எப்பொழுது எங்கள் ஊரிலே பள்ளிக்கூடம் திறக்கப்படும்?' என்று கேட்டால் அவர், 'நோட்டீஸ் ப்ளீஸ்' என்று சொல்கிறார். ஆங்கிலம் தெரியாதவர்களுக்கு இது எப்படிப் புரியும்? ஆகையால் ஒருவர் சொல்வதை மற்றவர் புரிந்து கொள்ள முடியாத நிலைமையில் இருக்கிறோம். மந்திரி அவர்கள் சொல்வது அங்கத்தினர்களுக்குப் புரிவதில்லை. அங்கத்தினர்கள் கேட்கும் கேள்விகளை மந்திரிகள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. அதே மாதிரி, கனம் மாணிக்கவேலு நாயக்கர், கனம் பழனிசாமி கவுண்டர், கனம் சுப்ரமண்யம் ஆகிய தமிழ் மந்திரிகளைப் பார்த்து, தெலுங்கில் சில அங்கத்தினர்கள் கேள்விகள் கேட்கும் போதும், அவர்களும், 'நோட்டீஸ் ப்ளீஸ்' என்று சொல்லுகிறார்கள். இந்தத் தீர்மானத்தை எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் ஏன் எதிர்க்க வேண்டுமென்பதுதான் எனக்குப் புரியவில்லை.

ஸ்ரீ அனந்தபாய் அவர்கள் கன்னடமும் ஆங்கிலமும் படித்திருந்தும் இதை எதிர்க்கிறார்கள். கன்னட தேசத்தில் இருக்கின்றவர்கள் எல்லோருக்கும் ஆங்கிலம் தெரியும் என்று அவர் சொல்ல முடியுமா? முடியவே முடியாது. எல்லோரும் ஸ்ரீ அனந்தபாய் ஆக இருக்க முடியாது என்று

சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னும் தமிழில் பேசுகின்ற ஸ்ரீமான் கருத்திருமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்ப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருக்கிக்கின்றது.

ஒரு நாட்டை அழிக்க வேண்டுமானால், முதலில் அந்த நாட்டினுடைய பாஷையைக் கொல்ல வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு நாட்டினுடைய மொழியில் நாட்டினுடைய நடவடிக்கைகள் இல்லாமல், வேறு ஒரு மொழியானது இருந்தால், அந்த நாட்டினுடைய கலாச்சாரம் அழிந்துவிடும். ஆகவேதான், ஒரு நாட்டினுடைய கலாச்சாரத்தை அழிக்க வேண்டுமானால், அந்த நாட்டினுடைய மொழியை அழித்துவிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

வெள்ளைக்காரன் இந்த நாட்டைவிட்டுப் போனதும், வட நாட்டிலிருந்து இந்தியைக் கொண்டு வந்து இங்கே புகுத்தினார்கள். 1937—ஆம் ஆண்டு கனம் இராஜாஜி அவர்களே கட்டாய இந்தியை இங்குக் கொண்டு வந்தார். தாய்மொழிக்குப் பாதுகாப்பு அளிக்க, பெரியார் தலைமையில் தாளமுத்து நாடராஜன் முதலானவர்கள் இந்திமொழி திணிக்கப்படுவதை எதிர்த்து உயிர் நீத்தார்கள். சமீபத்தில் இந்திமொழி தமிழ்நாட்டில் வரக்கூடாது என்ற நோக்கத்தோடு பெரியார் அவர்களும் அணணாதுரை அவர்களும் இன்னும் பலரும் ரயில்வே நிலையங்களிலுள்ள ஊரின் பெயர்களை இந்தியில் எழுதியிருந்ததை அழித்தார்கள். அப்போது கனம் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் சும்மா இருந்து விட்டார்கள். அன்று ஜெயிலில் அடைத்தார்கள், இன்று ஜனங்களுக்குத் தாய் மொழியின் மீது பற்று வந்திருக்கிறது என்பதைப் பற்றி யாரும் மறுக்க முடியாது. ஆகவே, சும்மா இருந்து விட்டார்கள். இராஜாஜி அவர்களுக்கும் தமிழ் மொழியில் பற்றிருக்கிறது. நான் தமிழில் கேள்வி கேட்டால், தமிழிலேயே பதில் கூறுகிறார்.

வடநாட்டில் ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரி முதலானவர்கள் இந்தியிலேயே பேசுகிறார்கள். டாக்டர் கிருஷ்ணசாமி அதை எதிர்த்து வெளியேறக்கூடிய நிலைமையில் இருக்கிறது. வடநாட்டார்களுக்கு வடநாட்டுப்பற்று இருக்கிறது. தெலுங்கர்களுக்கு ஆந்திரப்பற்று இருக்கிறது. வடநாட்டார்களுக்கு இந்தியின்மீது அதிகப்பற்று இருக்கிறது. ஆந்திரர் களுக்குத்தெலுங்கின்மீது பற்று இருக்கிறது. ஆனால், தமிழ் பேசுகின்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த நண்பர் கருத்திருமன் அவர்கள் இந்தத் தீர்மானத்தை எதிர்க்கின்றார் என்றால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியவில்லை.

இந்தப்பக்கத்தில்தான் ஆங்கிலம் தெரியாதவர்கள் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. காங்கிரஸ் தரப்பிலும் ஆங்கிலம் தெரியாதவர்கள் இருக்கிறார்கள். அநேக சட்டசபை உறுப்பினர்கள் கொடுக்கப்பட்ட கேள்வித்தாள்களையும், மற்ற அச்சிட்ட அத்தனைக் காகிதங்களையும் சுருட்டி வைத்துக் கொண்டு ஒழுங்காக வீட்டிலே கொண்டு வைக்கின்றார்கள் அல்லது என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பதைச் சரிவர புரிந்து கொள்ள முடியாத நிலையில் அனேக அங்கத்தினர்கள் இருக்கின்றார்கள். அப்படியிருக்கும்போது, இந்தத் தீர்மானத்தை எதிர்க் கட்சியில் இருக்கின்ற நாங்கள் கொண்டு வந்திருக்கிறோம் என்ற காரணத்திற்காக அந்தத் தரப்பில் இருக்கக் கூடியவர்கள் எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என்று நான் அவர்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். ஒருவர் மொழியை மற்றவர் புரிந்து கொள்ள முடியாமல் இருப்பது கஷ்டமாயிருக் கிறது. ஆங்கிலத்தில் பேசும்போது, ஆங்கிலம் தெரியாத அங்கத்தினர்களில் சிலர் வெளியே போகின்றார்கள். இன்னும் தெலுங்கு பேசும்போது, தெலுங்கு தெரியாத அங்கத்தினர்கள் வெளியே போகிறார்கள். அதேமாதிரி மலையாளம் பேசும் போது மற்றவர்கள் அதைப் புரிந்து

கொள்ள முடியாமல் வெளியே போகின்றார்கள். இந்த மாதிரி நிலைமை இருக்கும்போது, தமிழ் மொழியில் நடவடிக்கைகளை நடத்துவதற்கு நாம் ஆதரவு காட்ட வேண்டும். அதற்காக நாம் பாடுபடவேண்டும்" என்று பேசினார்.

திரு எஸ். சோமயாஜுலு (4.12.52):—

பல நாட்கள் வரையில் ஆங்கிலத்தில் வாசாம கோசரமாக, சண்டப் பிரசண்டம் புரிந்து வந்த எதிர்க் கட்சியைச் சேர்ந்த சிலர்கள் திடீரென்று ஒரு நாளைக்கு ஒரு எண்ணத்தைக் கற்பித்துக் கொண்டு, நடப்பை மறந்து ஏதோ ஆகாசத்தில் தாங்கள் சஞ்சரிப்பது போலக் கனாக்கண்டு கொண்டு, சபையிலுள்ள நடவடிக்கைகள் நடந்தால் நடக்கட்டும், தடைப்பட்டுப் போனால் போகட்டும் சபையிலுள்ளோர்கள் புரிந்து கொண்டால் புரிந்து கொள்ளட்டும், இல்லாவிட்டால் ஸ்தம்பித்து உட்கார்ந்திருக்கட்டும் என்று ஏதேதோ எண்ணிக் கொண்டு, 'அத்யக்ஷ! இ பில்லுனு வித்தரேகிது மாட்லாடு துன்னானு' என்று ஒன்றும் புரியாத தெலுங்கிலே பேச ஆரம்பித்து விட்டார்கள். சபையிலுள்ள பல அங்கத்தினர்களின் நிலைமையை மிகவும் இக்கட்டானதாகச் செய்து விட்டார்கள். என்னால்கூடச் சில சமயம் தெலுங்கில் பேசுவோர்களைப் புரிந்து கொள்ள முடியாது. ஓரிரண்டு வார்த்தைகளை வேண்டுமானால் அறிந்து கொள்வேன். வீட்டில் நான் பேசும் தெலுங்கிற்கும் இங்கேயுள்ளதற்கும் வித்தியாசமதிகம். இது எல்லோருக்கும் சகஜமே. எல்லோரும் எல்லாப் பாஷையிலும் பாண்டியத்தியம் பெற்றிருக்க முடியாது. ஆகையால், இங்கே தெலுங்கில் பேசுவோர்களுக்கு ஆங்கிலம் தெரியாதென்றால் சரி; நன்றாகப் பேசியவர்கள்; மிக அழகாகப் பேசியவர்கள், மற்றவர்களைவிட ஆங்கிலத்தில் இதுவரையிலும் பேசி வாதாடியவர்கள் இன்று சபையில் உள்ளோரிடையே அவர்களுக்குப் புரியாத பாஷையில் விதண்டாவாதமாகப்

பேசுவதன் கருத்துதான் என்னவென்பதை நாம் பார்க்க வேண்டும். அதோடு கூட, இன்றைய ராம் சர்க்கார் மொழி பெயர்ப்பாளர்களை நியமிக்க வேண்டுமென்று சொல்வதினால், அவர்களுடைய நோக்கம் என்ன என்பதையும் கவனிக்க வேண்டும். இது சாத்தியமா? மொழி பெயர்ப்பாளர்களை நியமித்தாலும் பேசும்போது ஏற்படுகின்ற பாவம், பொருள், கருத்து இவைகளை எல்லாம் உடைக்காமல் சரியாக அவர்களால் மொழி பெயர்க்க முடியுமா? அவர்கள் ஒன்றுக்கு ஒன்றாக மொழிபெயர்த்து அதனால் ஏற்பட இருக்கின்ற பல தொல்லைகளுக்கு அது இல்லாமலிருப்பதே மேல் என்றுதான் தோன்றுகிறது. இது மிகவும் சாதாரணமான பிரச்சினை. இதை ஆழ்ந்து, ஆத்திர புத்தியின்றி நாம் யோசித்துப் பார்த்தால் நன்கு தெரியும். இதை நாங்கள் ஏன் எதிர்க்கிறோம் என்ற காரணத்தையும் புரிந்து கொள்வார்கள். என்னை எடுத்துக் கொண்டால், நான் ஒன்றை நிச்சயமாகச் சொல்ல முடியும். நாம் இங்கே இருப்பது ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு ஒரு பகுதியிலுள்ள மக்களின் சுகதுக்கங்களை, மற்ற பகுதியிலுள்ள மக்களின் வாயிலாக அறிந்துகொண்டு, யார் யாருக்கு என்னென்ன காரியங்களைச் செய்ய வேண்டுமோ அவைகளையெல்லாம் செய்வதற்காகத்தான் இருக்கிறோம். ஒருவர் மற்றொருவருக்குத் தெரியாத பாஷையில் பேசிக் கொண்டிருப்பதால் நாம் நம்முடைய காரியத்தைச் சாதித்துக் கொள்ள முடியாது. மொழி என்றால் என்னவென்று பார்க்க வேண்டும். ஒருவர் மற்றொருவருக்குப் புரியும்படியாகப் பேசுவதற்கு உபயோகமாக இருக்கும் ஒன்றையே மொழி என்று சொல்லுகிறேன். ஒருவர் சொல்வதை மற்றவர் புரிந்து கொள்ளும் பொழுது சந்தோஷம் உண்டாகிறது. அவரது சுகதுக்கங்களை உணர்ந்து கொள்ள முடிகிறது. அவருக்கும் உதவி செய்யவும் அனுதாபப்படவும் முடிகிறது. எல்லோருக்கும் தெரிந்த வகையில் பேசிக் கொண்டிருக்கும்

நான், சுத்தத் தமிழிலேயேதான் பேசுவேன் என்று சொல்லிக் கொண்டு, 'அவைத் தலைவர் அவர்களே, இங்கே நும் முன் விளம்புபவை' என்று கடினத் தமிழில் பேச ஆரம்பித்தால் எவ்வளவு பேரால் அதைப் புரிந்து கொள்ள முடியும் என்று நான் கேட்கிறேன். மக்களின் நன்மையைக் கருத்தில் கொண்டு, நாம் இங்கே வந்திருப்பதன் காரணத்தைக் கருத்தில் கொண்டு, வீணாகச் சபையின் பொழுதையெல்லாம் மொழிப் பிரச்னையில் செல வழிக்காமல் மக்களின் நல்வாழ்வுக்கு, நாட்டின் நல்வாழ்வுக்கு அடிகோலும் வகையில் செலவிட வேண்டியது பொறுப்புணர்ச்சியுடைய ஒவ்வொரு சபை அங்கத்தினரின் கடமையாகும்.

சாதாரணமாக எப்படிச் சொன்னாலும் புரியாதவர்கள் இருக்கிறார்கள். விஷயத்தைப் புரியும்படி எடுத்துச் சொல்லி அவர்களுக்குப் புரிந்து விட்டாலும்கூடப் புரியாதவர்களைப் போலவும் பலர் இருக்கிறார்கள். அதேபோல, விஷயத்தை நாம் அழகாக விளக்கா விட்டாலும் கூட அதைப் புரிந்து கொள்ளக்கூடியவர்களும் இருக்கிறார்கள். ஆகையினால், மொழி பெயர்ப் பாளர்களை வைத்து விட்டால் எல்லோரும் எல்லா விஷயத்தையும் புரிந்து கொண்டு காரியங்களை நிறைவேற்ற முடியுமென்பதை யாரும் ஒப்புக் கொள்ள முடியாது.

குறிப்பாக, இன்றைய தினம் மொழிவாரியாக மாகாணம் அமைத்துவிட்டால் ஆந்திர இராஜ்யத்தையும், தமிழ் இராஜ்யத்தையும் ஏற்படுத்திவிட்டால் ஆந்திரர்களால் தமிழர்களுக்கு இம்மாதிரியான தொந்தரவு ஏற்படப்போவதில்லை. அவர்கள் தொண்டை கிழியத் தெலுங்கிலே தங்கள் சட்டமன்றத்தில் நாளெல்லாம் பேசிக் கொள்ளலாம். அதைப்போலவே, பாலும் தேனும் கலந்த தாற்போன்ற இனிமைத் தமிழிலே தமிழர்களும் தங்கள்

அலுவல்களைச் சட்டமன்றத்தில் வாதாடித் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், அதற்குக் குறுக்கே நிற்பது எது? அந்தத் துறையில் அதன் குறுக்கேயுள்ள பூசல்களை நீக்கிக் கொண்டு சமாதானமான முறையில் செல்ல முயற்சி செய்யாமல் மொழி பெயர்ப்பாளர்களைச் சர்க்கார் நியமிக்க வேண்டும் எவ்வளவு லக்ஷம் செலவானாலும் பரவாயில்லை என்று கூறினால், ஓடிப் போகிறவர்களுக்கு இந்த இராஜ்யத்தின் பொரளாதார நிலைமை எப்படிப் போனால் என்ன என்ற அசிரத்தையாலா அப்படிச் சொல்லுகிறார்கள் என்று கேட்கிறேன். ஆகவே, உடனடியாகச் சென்னை நகர் 'மனதா, நிமதா' என்று சண்டை போட்டுக் கொண்டிருக்கலாகாது. ஆந்திரர்கள் ஒற்றுமையாக ஆந்திர மாகாணம் அமைக்க ஏற்பாடு செய்து கொண்டு போகவேண்டுமே தவிர, வீணாக அந்தத் துறையில் கால தாமதம் செய்து கொண்டு இம்மாதிரியாக வீண் விவாதம் செய்வதைத் தவிர்க்க வேண்டும். ஆகவே, இந்தத்தீர்மானத்தை நான் பூர்ணமாக எதிர்ப்பதோடு எதிர்க்கட்சி அங்கத்தினரை உடனடியாக வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

**திரு டி. விஸ்வநாதன் (8.12.52):—**

"இப்பொழுது ஒன்றிரண்டு வார்த்தைகளை நான் சொல்லப் போகிறேன். எனக்குத் தமிழோ கன்னடமோ மலையாளமோ தெரியாது. தமிழோ, தெலுங்கோ, இங்கிலீஷோ வேண்டாம் என்று ஒன்றும் இல்லை. இந்தத் தீர்மானம் அதற்காகக் கொண்டு வந்தது இல்லை. நான் சொல்வதையெல்லாம் தமிழில் சொல்ல முடியாது. அது எனக்குத் தெரிந்த பாஷையல்ல" என்றார். (சிரிப்பு)

அவர் தொடர்ந்து ஆங்கிலத்தில் பேசினார்:—

"தெலுங்கு தெரிந்தும் புரிந்து கொள்ளக்கூடிய சக்தியும் உள்ளவர்கள் 69 பேர்கள் இந்த அவையில் உள்ளனர். அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாது. தமிழ்

மட்டும் தெரிந்த உறுப்பினர்கள் 38 பேர்; மலையாளம் தவிர வேறு எந்த மொழியும் தெரியாத உறுப்பினர்கள் 11 பேர்; 220 பேருக்கு மட்டும் என்னால் கணக்குக் கொடுக்க முடிந்தது. மேலும் இருக்கிற 150 உறுப்பினர்கள் பற்றிய தகவல் என்னிடம் இல்லை. ஒரு வேளை அவர்களுக்கு ஆங்கிலம் தெரிந்திருக்கலாம். மேலே சொன்ன கணக்குப்படி பார்த்தால் அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற விருப்பத்தையும் நோக்கத்தையும் நாம் பூர்த்தி செய்கின்றோமா என்பது சந்தேகமே. நம்மை எதற்காகத் தேர்ந்தெடுத்து நம்முடைய தொகுதி மக்கள் அனுப்பியிருக்கிறார்களோ அவ்வெண்ணத்தை நிறைவேற்றவில்லையென்பது திண்ணம். ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியவில்லையென்றால், இந்த அவையில் உட்காருவதைவிட உன்னுடைய வீட்டில் உட்காருவது மேல் என்று கூடச் சொல்லலாம். உறுப்பினர்களைப் பார்த்து அப்படி நாம் குறை கூற முடியாது. ஏனென்றால், நாம் அப்படிக் கேட்க முடியாமல் தடுக்கப்பட்டிருக்கிறோம். இது எப்படி இருக்கிறது என்றால், புரியாத மொழியில் நடத்தப்படுகிற நாடகத்திற்கு அழைத்துச் சென்று கட்டாயமாகப் பல மணி நேரம் உட்கார்ந்து பார்ப்பதற்கு வற்புறுத்துவது போன்றதாகும். ஆகவே, மொழி பெயர்ப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார்.

திரு சி. சுப்ரமணியம், கல்வியமைச்சர் (8.12.52):—

''இத்தீர்மானத்தின் மீது இதுவரையிலும் 6: உறுப்பினர்கள் பேசியுள்ளனர் . . . . . . எதிர்க்கட்சி தலைவர் திரு இராமமூர்த்தி தம்முடைய பேச்சை வேண்டுமென்றே தமிழில் நிகழ்த்தினார். தாய் மொழ மற்றும் மற்ற மொழிகளில் உணர்வை முன் வைத்து உறுப்பினர்களின் எண்ணத்தைத் தொடும்படி அவா வேண்டுமென்றே இப்படிப் பேசினார். இத்தீர்மானத்தைட

பொறுத்தவரையில் மொழிகள் தொடர்பான எந்தவிதச் சிக்கலும் இல்லை என்பதைத் தெளிவு படுத்த விரும்பு கிறேன். ஆங்கிலம் அந்நிய மொழி; விடுதலை அடைந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்பும் **ஆங்கிலத்தையே** பயன்படுத்தி வருகிறோம் என்றார். அவர் கொண்டு வந்திருக்கிற தீர்மானம் ஆங்கிலத்தை ஒரேடியாக ஒழித்து விடுகிற முயற்சி ஏன்று சொல்ல முடியுமா? ஆங்கிலத்தைத் தொடர்ந்து கட்டாயமாகப் பயன்படுத்த வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தும் வண்ணம்தான் அவருடைய தீர்மானத்தின் அடிப்படை அமைந்திருக்கிறது. ஆங்கிலத்தைப் பயன்படுத்துவதா? இல்லையா? என்ற கேள்வி அரசியல் நிருணய சபையின் தலைவர்கள் முன் வைக்கப்பட்டது. நீண்ட விவாதத்திற்குப் பின், அவர்கள் ஆங்கில மொழியைப் பற்றிய தீர்மானம் ஒன்றை இயற்றியுள்ளனர். இந்திய அரசியல் சட்டத்தின் 345—ஆவது பிரிவு சொல்வதாவது:— '346 மற்றும் 347— ஆவது பிரிவுகளுக்கு உட்பட்டு, மாநிலச் சட்டமன்றம் வழக்கத்தில் இருக்குமானால் ஒன்று அல்லது பல மொழிகளையோ இந்தியையோ சட்டபூர்வமாக மாநிலத்தின் ஒரு சில துறைகளிலோ எல்லாத் துறைகளிலுமோ ஆட்சிமொழியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம். சட்டபூர்வமாக ஒரு சட்டமன்றம் மாற்று ஏற்பாடு செய்யும் வரை, ஆங்கில மொழி தொடர்ந்து அரசாங்க அலுவல் நடத்தப் பயன்படுத்தப்பட வேண்டும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆகவே, ஆங்கிலத்தை அடியோடு அகற்றி விட வேண்டுமென்றால் புதிய சட்டம் இயற்றுவதன் மூலம்தான் செய்ய முடியும். மொழிவழி மாகாணங்கள் பிரிப்ப தனால்தான் சிக்கல் பல ஒழியும் என்றார்கள். நானும் அதை ஒப்புக் கொள்கிறேன். அப்படிப்பட்ட மொழிவாரி மாகாணங்கள் உருவாவதற்கு நாம் எல்லோரும் ஒன்றாகத் திரண்டு உழைப்போமாக. புதிய மாகாணங்கள் அமை

வதற்கு நாங்கள் தடைக் கற்களாக இருக்க மாட்டோம். நாங்களும் அதை விரும்புகிறோம்.

சட்டமன்றத்தில் நிகழ்த்தும் பேருரைகள் எல்லாத் தினசரிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரசுரிக கப்படுகிறது. மிகவும் சிறந்த முறையில் நடத்தப்படுகிற பல மொழிச் செய்தித் தாள்களுக்கு நாம் நன்றிக் கடன் பட்டிருக்கிறோம். சட்டமன்றத்திற்குச் சில சமயம் வராத உறுப்பினர்கள், சபையின் நடவடிக்கைகளைச் செய்தித்தாளில் படித்துத் தெரிந்து கொள்ள முடிகிறது. சட்டமன்றத்திற்கு வெளியேயிருக்கும் மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, இப்படிப்பட்ட தீர்மானமோ, மாற்றமோ, சட்டமன்றத்தில் கொண்டு வரத் தேவையில்லை.

சட்டமன்றத்தில் நிகழ்த்தப்படும் உரையைப் புரிந்து கொள்வதில் நமக்கென்ன சங்கடம் இருக்கிறது. நாம் பல மொழி பேசப்படும் மாநிலத்தில் வாழ்கிறோம். எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடிய தனி மொழியொன்று இங்கில்லை. பொதுவான மொழி இல்லாத காரணத்தினால், ஆங்கிலத்தைத் தவிர்த்து வேறு எந்த ஒரு மொழியையோ கொண்டு வருவதனால், நம்முடைய சங்கடங்கள் தீர்ந்து விடாது. ஒரு சட்டத்தை இயற்றுவதனால் இந்தச் சிக்கலைத் தவிர்க்க முடியாது. ஆகவேதான், இந்திய விடுதலைப் போராட்டத்தின் மகாத்மா காந்தி அவர்கள், இந்திய நாட்டில் பொதுவான மொழியொன்று தேவை என்பதை உணர்ந்தார்கள். நாமும் இந்தியைப் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ளாமல் எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம். இப்படிப்பட்ட எதிர்ப்புகளினால்தான் இந்தி பொது மொழியாக வளர்ச்சி அடையவில்லை. அதே சமயம் பொதுமொழியாக ஏற்றுக் கொள்ளக்கூடிய வேறு மொழியும் நம் நாட்டில் இல்லை. இன்றைய நிலைமையை நாம் எப்படி நீடிக்கலாம் என்பதை நாம் சிந்திக்க் வேண்டியவர்களாக இருக்கிறோம். நம் திறமையைப்

பயன்படுத்தி இந்தச் சிக்கலை எப்படியாவது தீர்க்க வேண்டும். ஆனால், அது நடைமுறைக்கு உகந்ததாக இருக்க வேண்டும்.

இப்பொழுது ஆங்கிலத்தில் பேசினால், அப்பேச்சை மற்ற நான்கு மொழியிலும் மொழி பெயர்க்க வேண்டும். இதே போன்று மற்ற மொழிகளில் பேசினாலும், மொழி பெயர்ப்பு பேசப்படாத மொழிகளில் செய்தாக வேண்டும். மொழிபெயர்ப்பு செய்யும் பொழுது ஒருவருடைய பேச்சின் சாராம்சத்தை மட்டும் சொன்னால் போதாது. முழுப் பேச்சும் மொழி பெயர்க்கப்பட வேண்டும். இந்த முயற்சியில் நிதி அமைச்சர் என்ற முறையில் எவ்வளவு நிதி இக்காரியத்திற்குத் தேவைப்படுகிறதோ, அவ்வளவையும் ஒதுக்கீடு செய்து தர நான் தயாராக இருக்கிறேன். உலக நாடுகள் சபையில் பேசுபவர்கள், தாங்கள் பேசக்கூடிய செய்தியை முன்னதாகவே தயார் செய்து கொண்டு வந்து அவையில் உரை நிகழ்த்துவார்கள். அவ்வாறு செய்யும் பொழுது, பேசுகின்ற பேச்சை உடனுக்குடன் மொழி பெயர்க்கலாம். ஆனால் நம்முடைய சட்டமன்ற நிகழ்ச்சிகள் அப்படிப்பட்டதல்ல. திரு சோமயாஜுலு போன்ற நண்பர்கள் வேகமாகப் பேசுவதில் வல்லவர்கள். அவருடைய பேச்சை, வேறு எந்த மொழியிலாவது எவராவது மொழி பெயர்க்க முடியுமா என்று முயற்சி செய்து பார்க்கட்டும். இம்முயற்சி தோல்வியடையக் கூடிய ஒன்றாகும். ஒருசில உறுப்பினர்கள் தெலுங்கிலே பேசும்பொழுது, செய்தித்தாள் நிருபர்கள் கூட செய்தியைச் சேகரிக்க முடியாமல் திணறுகிற நிலைமை இருக்கிறது" என்றார்.

திரு. டி.விஸ்வநாதன் அவர்கள் 1953—ஆம் ஆண்டு ஜுலை மாதம் 14—ஆம் நாள், ஆந்திர மாகாண மசோதா மீது ஆற்றிய ஆங்கில உரையின் சுருக்கம்:—

''மொழிவாரி மாகாணங்கள் உருவாக்கப்பட வேண்டுமென்ற போராட்டத்தில் நாடு பல சிக்கல்களைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அந்தப் போராட்டத்தின் உச்சகட்டமாகப் பொட்டி ஸ்ரீராமுலு அவர்கள் உயிர்த் தியாகம் செய்தார்கள். அதைத் தொடர்ந்து 15 அல்லது 16 பேர்கள் இந்தப் போராட்டத்தின் பகுதியாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். இதைப் போன்ற தியாகங்களுக்குப் பின்புதான், மொழிவாரியாக மாநிலங்கள் நம் நாட்டில் பிரிக்கப்பட வேண்டுமென்ற கருத்து உருப் பெற்றது.

நம்முடைய நாட்டின் பிரதமர் அவர்கள் மாநிலங்கள் மிகவும் சக்தி வாய்ந்தவை என்று பேசியிருக்கிறார். ஆனால், தங்களுடைய கொள்கைகளுக்காக உயிர்த் தியாகம் செய்யும் பொழுதுதான் மாநிலங்களும் அதிகாரமில்லாத தன்மை அடைகின்றன. நான் மேல் மட்டத்திலுள்ள தலைவர்களுக்குச் சொல்லிக் கொள்ளு வேன். மாநிலங்கள் மொழிவாரியாகப் பிரிக்கப்படும் பொழுதுதான், நாடு முழுமையான வலிமை பெற்று விளங்கும். பொதுவான மொழியினால்தான், சாதாரண மக்களின் நெஞ்சத்தைத் தொட முடியும். ஆட்சி செய் கின்றவர்களும், ஆளப்படுபவர்களும் நெருங்கிய தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள மொழி கருவியாக இருக்கிறது. ஆந்திர மாநிலம் உருவாவதற்காக நாங்கள் நாற்பது ஆண்டுகளுக்கு மேல் போராடி இருக்கிறோம். ஆகவே, பாராளுமன்றத்தில் இம்மசோதா விரைவிலேயே அறி முகப்படுத்தப்பட வேண்டுமென்று நாங்கள் விரும்பு கிறோம்'' என்றார்.

*திரு எம்.பி.சிவஞான கிராமணியார் (21.7.53):—*

''இந்த மாதிரி மொழிவழி இராஜ்யம் அமைக்கா விடில் கேடு என்ன என்பதையும், கொஞ்சம் சிந்திக்க வேண்டும். இந்திய சுதந்திரம் என்பது சமுதாயம் என்ற கப்பலின் அடித்தளத்திலுள்ள மக்களுக்குச் சரியாகப்

பயன்படுகிறதா என்று பார்த்தால், இல்லை என்பது தெரியும். இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்திரம் சமுதாயத்தின் மேல்தளத்தில் இருப்பவர்களுக்கே பயன்படுகிறது. அடித்தளத்தில் இருப்பவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியவில்லை. நியாயமாகப் பார்த்தால், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கள் உழைப்பாளி மக்கள். அவர்களும் நம்முடையரத்த சகோதரர்கள்தான். சமத்துவம் வேண்டும்; பிரிவினைக்குப் பிறகும் அப்படி இருக்க வேண்டும் என்று அக்கறைப்படுகிறது அரசாங்கம். எல்லாரும் அப்படித்தான் விரும்புகிறார்கள். சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கள் அல்லல்படுகிறார்களே, அவர்களும் வாழ்க்கைப் பாதையில் முன்னேறிச் செல்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்க வேண்டும். ஆகவே, சாதாரண பொதுமக்கள் பேசுகின்ற பாஷையில் ஆட்சி நடந்தாலொழிய, அவர்களுக்கு எந்த இராஜ்யம் வந்தாலும், எத்தகைய குடியரசு வந்தாலும் அவர்கள் வாழ்க்கை உயர முடியாது. ஆகவே, கலாச்சாரம் மொழி இந்த அடிப் படையில் இல்லாமல், அரசியல் பொருளாதாரம் என்பதை மட்டும் வைத்துக்கொண்டு பார்க்கக்கூடாது, பொதுமக்கள் பேசுகின்ற மொழியை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி அமைய வேண்டியது இன்றியமையாதது. அப்பொழுது தான் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர்கள் மற்றவர்களோடு சமத்துவமாக வாழ முடியும்.

மொழிவழியாக இராஜ்யம் அமைகிறபோது, வோட்டுக் கொடுப்பவருககும, வாங்கிச் செல்பவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு ஏற்படுகிறது. வோட்டுப் பெற்ற வர்கள் அப்பொழுதுதான் பொது மக்களின் குறைகளைத் தெரிந்து கொள்ள முடியும். வோட்டுப் பெற்றவர்கள் பொதுமக்களுக்கு என்ன செய்கிறார்கள் என்பதை அவர்கள் கவனித்து வருவார்கள். பொதுமக்கள் கவனத்தோடு இருந்தால், வோட்டு வாங்கிச் சென்றவர் தவறு இழைக்க முடியர்து. தவறு இழைத்தார் என்றால், அவனைத் தள்ளிப்

போட்டு, தங்களுக்கு உகந்த அவரைத் தேர்ந்தெடுக்க அவர்களுக்கு முடியும். ஆகவே, இந்த அமைப்பு, அரசியல் வளர்ச்சிக்குச், சமுதாயத்தின் அடித்தளத்தில் இருப்பவர் களுக்கு நன்மை பயக்கும். அவர்கள் முன்னேற்றத்திற்கு அடிகோலும் என்று நான் நம்புகிறேன்.

மூன்றாவது கலை வளர்ச்சி; நான்காவது மொழி வளர்ச்சி. இந்த அடிப்படையில் நம் சமுதாயம் அமைய வேண்டும் என்று காந்தியடிகள் ஆரம்பித்து வைத்தார். ஆனால், சுதந்திரத்திற்குப் பின்னாலும் இருந்தால், இந்த மொழிவாரிப் பிரிவினையை ஏற்படுத்தியிருப்பார். அவர் இறப்பதற்கு முந்திய நாள் பிரார்த்தனைப் பேச்சில் கூட இந்த மொழிவாரிப் பிரிவினையை வற்புறுத்திப் போனார்கள். அவருடைய மரண வாக்குமூலத்தை மொழிவாரி இராஜ்யப் பிரிவினையினால் அபாயம் நேரும் என்று அச்சப்படுபவர்கள் கவனிக்க வேண்டும். ஆரம்பத் திலேயே அச்சப்படுவதில் பிரயோஜனமில்லை என்றார்.

ஆந்திர மாநிலம் பிரிந்த பிறகு, 1953—ஆம் ஆண்டு ஜுலை மாதம் 30—ஆம் நாள்,சட்டமன்றப்பிரிவுபசாரக் கூட்டத்தில் திரு டி.பிரகாசம் அவர்கள் ஆற்றிய உரை:—

''நம் நாட்டை மகாத்மா காந்தி அவர்கள் வட்டார மொழி பேசும் எல்லையின் அடிப்படையில்தான் உருவாக்கித் தம்முடைய இயக்கத்தை நடத்தி வந்தார். காங்கிரஸ் கட்சியின் இயக்கத்தில் இருந்தவர்களும், அவ்வியக்கத்தின் கணக்கு வழக்குகளெல்லாம் அதே முறையில்தான் நடந்து வந்தது. முப்பது ஆண்டுகளுக்கு மேலாக இதே முறையில் பணி புரிந்து இயக்கி நடத்தி வந்தார். ஒரு மொழி பேசப்படுகிற பகுதியை எல்லையாகக் கொண்டு, அவருடைய ஆக்கப்பணி செயல்பட்டு வந்தாலும் மக்கள் இயக்கம் வலுவாகவும் ஒன்றுபட்டும் தங்களுடைய எல்லா அலுவல்களையும் பொதுவான மொழி பேசுபவதன் மூலம் தீர்த்துக் கொள்வதில்

போதுமான வசதியும் வாய்ப்பும் ஏற்பட்டது. நம் நாட்டை 21 முக்கிய மொழிகள் பேசப்படும் பகுதிகளாகப் பிரித்துத் தம்முடைய பணியைத் தொடர்ந்ததனால், மக்கள் மத்தியிலே ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் ஒற்றுமையையும் ஏற்படுத்த முடிந்தது. அதற்கு மேலும் சொல்லப் போனால், மக்கள் தங்களுடைய சக்தியை உணரவும் உருவாக்கவும் இப்படிப்பட்ட ஏற்பாடு சிறந்ததாகக் கருதப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்தியச் சுதந்திரப் போராட்டம் இந்த அடிப்படையில்தான் நடத்தப்பட்டது. மக்களை ஒன்றாகத் திரட்டியதும் நடத்திச் சென்றதும் தடியடி பட்டதும் குண்டடி பட்டதும் சிறைச்சாலைகளை நிரப்பியதும் மொழிவாரியாக நம் நாட்டைப் பிரித்து விடுதலை இயக்கத்தை நடத்தியதன் மூலம்தான் ஏற்பட்டது'' என்றார்.

வட்டார மொழிகளில் அரசாங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் என்ற தலைப்பில், திரு வி.ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் 1953—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23—ஆம் நாள் ஒரு கேள்வியைச் சட்டமன்றத்தில் கேட்டார். ''மாவட்ட அளவிலேயும் அங்கேயுள்ள நீதி மன்றங்களிலும் வட்டார மொழியில் நட வடிக்கைகள் அமையுமா?'' என்றார்.

பரீட்சார்த்தமாக 1948—ஆம் ஆண்டு எல்லா அரசாங்க நடவடிக்கையும் கடிதப் போக்குவரத்தும் ஒன்றிரண்டு மாவட்டங்களில் அமுல் நடத்த வேண்டும் என்று ஆணையிடப்பட்டது என்றும், ஆனால் அரசுடன் கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே தொடரும் என்றும் திரு சி.இராசகோபாலாச்சாரியார் (தமிழக முதல்வர்) சட்டமன்றத்தில் பதிலளித்தார். உள்ளாட்சித் துறை அலுவலகங்களிலும் இச்செயல் முறை நடைமுறையில் இருக்க ஆணையிடப்பட்டது எனவும், ஆனால், நீதி மன்றங்களில் அமுல்படுத்தப்படவில்லை எனவும் அவர்

தெரிவித்தார். ஒவ்வொரு ஆண்டும் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துத் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு அறிக்கை அனுப்பி வருவதாகவும் முதல்வர் தெரிவித்தார். விரிவான மற்றும் மாறுதலான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிற உறுப்பினர்களின் கருத்து, மிகவும் கவனமாகப் பரிசீலிக்கப்பட வேண்டும் என்றும் முதல்வர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, திரு ஏ.கோவிந்தசாமி நாயக்கர் மேலும் ஒரு கேள்வியைக் கேட்டார். 'அண்மையில் சர் கட்சிகளும் சட்டசபை அங்கத்தினர்களும், தமிழ் ஆட்சி முறை மாநாடு நடத்தி, தமிழ் ஆட்சிமொழியாக ஆக வேண்டுமென்ற தீர்மானம் சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. சர்க்காருக்கு அது கிடைத்திருக்கிறதா? அப்படியானால், இத்தீர்மானப்படி நடவடிக்கை எடுக்குமா' என்று கேட்டதற்கு, அப்படித் தமிழ் ஆட்சிமொழியாக வேண்டுமென்றால் சட்டமாக இயற்றப்பட வேண்டும் என்று சட்டமன்றத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்.

மேலும், திரு வி.கிருஷ்ணய்யர் கேட்ட ஒரு கேள்விக்கு முதல்வர் திரு சி.இராசகோபாலாச்சாரியார் அவர்கள் பதிலளிக்கையில், வட்டார மொழிகளை ஆட்சிமொழியாக ஆக்குவது ஒன்றுக்கொன்று தொடர்பானதாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது என்றார். ஒரு மட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்தினால்தான் மற்ற மட்டங்களிலும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். ஒரு குறிப்பிட்ட வட்டார மொழியில் அரசாங்க நடவடிக்கைகளைக் கொண்டு வருவதால், மாவட்டங்களும் மாவட்டங்களுக்குள்ளேயே சிறு சிறு பகுதிகளும் தனிமைப்படுத்தப்பட்டு ஒதுங்கி விடும். ஒருங்கிணைந்து செயலாற்றும் நிலைமை அற்றுப் போய்விடும் என்றார்.

ஆந்திர மாநிலம் பிரிந்த பிறகு, 1954—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11—ஆம் நாள், திரு எம்.கல்யாணசுந்தரம் அவர்கள், சென்னைச் சட்டமன்ற விதிகள் மீது ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்தார். அதாவது.. ''சென்னைச் சட்டமன்ற நடவடிக்கைகள் ஆங்கிலம், தமிழ், மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழியில் உறுப்பினர்கள் பேச இயலவில்லை என்றால், அப்படிப்பட்ட உறுப்பினர் தம்முடைய தாய்மொழியில் பேச அவைத் தலைவர் அனுமதி அளிக்கலாம்'' என்றார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

''நம்முடைய அரசியல் சட்டப்படி பதினைந்து வருஷங்களுக்குள்ளாக ஆங்கிலத்தை விட்டு நம்முடைய தாய் மொழியிலேயே நிருவாக அலுவல்களையெல்லாம் நடத்த முயற்சிக்க வேண்டுமென்ற ஒரு கட்டளை இருக்கிறது. இப்பொழுதே நாம் நம்முடைய தாய் மொழியில் பேசுவதற்கும், நிருவாக விஷயங்களை விவாதிப்பதற்கும், சட்டம் இயற்றுவதற்கும் ஆரம்பித்தால்தான், நம்முடைய அரசியல் சட்டத்தில் கொடுத்திருக்கக்கூடிய உத்தரவை நாம் நிறைவேற்றக் கூடிய நிலைமைக்கு வர முடியும் என்று நான் கருதுகிறேன். மொழிவழி மாகாணம் அமைத்து ஒவ்வொரு இராஜ்ய சபையின் நடவடிக்கைகள் அந்தந்தப் பிரதேச மொழியில் நடைபெற்றால்தான் ஜனநாயகம் வளர்வதற்கு உதவியாக இருக்கும்.

ஆந்திர இராஜ்யம் நம்மிடமிருந்து பிரிந்து விட்டது. மலையாளப் பகுதியைத் திருவாங்கூர்—கொச்சி இராஜ்யத்தில் சேர்த்து மலையாள இராஜ்யத்தை அமைத்து விடலாம். தென் கன்னட ஜில்லாவில் கன்னடப் பகுதியை மைசூர் இராஜ்யத்தோடு சேர்த்து விட்டால், இந்தப் பிரச்சினை இன்னும் சுலபமாகிவிடும். அப்பொழுது நம்முடைய சட்டசபை நடவடிக்கைகள் பூராவும் புரிந்து கொள்ளப் பெரும்பாலான அங்கத்தினர்களுக்கு

இயலாமலிருக்கிறது. அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும், அநேக விஷயங்களில் தாங்களின் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று விருப்பமுடையவர்களாகவும் இருக்கிறார்கள். ஆங்கிலத்தைப் புரிந்து கொள்ள முடியாத காரணத்தினால் அவர்கள் இந்தச் சபை நடவடிக்கைகளில் முழுப்பங்கு எடுத்துக் கொள்ள முடியாமலும், தங்களுடைய திறமைகளை உபயோகமான முறையில் இந்தச் சபையில் பிரயோகிக்க முடியாமலும் இருக்கிறார்கள். சபை நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடந்தாலும்கூட, அச்சடித்துக் கொடுக்கப்படும் கேள்விகள், மசோதாக்கள் சம்பந்தப்பட்ட வரையிலுமாவது தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மூன்று மொழிகளிலும் மொழி பெயர்த்து எல்லா அங்கத்தினர்களுக்கும் எந்தெந்த மொழியில் வேண்டுமென்று விரும்புகிறார்களோ அப்படிக் கொடுத்தால் அவர்களுக்கு உதவியாக இருக்கும் என்றார்.

பதிலளித்த திரு சி.சுப்ரமண்யம் பேசும் போது, உறுப்பினர்களுக்குத் தெரிந்த மொழியிலேயே, சட்ட மன்றத்தில் நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதில் எந்தவிதக் கருத்து வேறுபாடும் இருக்க முடியாது என்றார். மலையாளம் மற்றும் கன்னடம் பேசுகின்ற உறுப்பினர் நண்பர்கள் தொடர்ந்து சட்டமன்றத்தில் இருப்பதனால் மூன்று மொழிகளையும் பயன்படுத்துவது மிகவும் சிக்கலிற்கும் அநாவசியச் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கும் உள்ளாக்கப்படுவோம் என்று அவர் சொன்னார். மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்பட்டால், இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு கட்ட முடியும். அந்நாள், விரைவிலேயே வரும் என்று தாம் எதிர்பார்ப்பதாக அவர் சொல்லி, இந்தத் திருத்தத்தைத் திரும்பப் பெறும்படி கேட்டுக் கொண்டதற்கிணங்கத் திரு கல்யாணசுந்தரம், தான் அறிமுகப்படுத்திய திருத்தத்தைத் திரும்பப் பெறுவதாக அறிவித்தார்.

1955—ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17—ஆம் நாள் திரு ஏ.கஜபதி நாயக்கர் அவர்கள், தமிழிலும், ஆங்கிலத்திலும், சட்டமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட பேச்சுக்கள் எத்தனை என்ற கேள்வியைப் போட்டார்.

நிதியமைச்சர் திரு சி.சுப்ரமணியம் இக்கேள்விக்குப் பதில் அளித்தார்:—

''சென்ற வரவு—செலவுத் திட்ட அறிக்கைக்குப் பிறகு, இந்தக் கவுன்சில் கூடுகின்ற ஆகஸ்டு 1954 வரை, 332 ஆங்கிலப் பேச்சுக்களும் 34 தமிழ்ப் பேச்சுக்களும் சட்ட மன்ற நிருபர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதே சமயத்தில், சட்டமன்றக் கீழவையில் 596 ஆங்கிலப் பேச்சுக்களும் 515 தமிழ்ப் பேச்சுக்களும் பதிவு செய்யப் பட்டுள்ளது'' என்றார்.

தொடர்ந்து அவர் குறிப்பிடும் பொழுது, ஆங்கிலத்தில் பதிவு செய்யப் பன்னிரண்டு நிருபர்களும் நான்கு தமிழ் நிருபர்களும், மலையாளத்தில் பதிவு செய்ய ஒரு நிருபரும் சட்டமன்றத்தில் உள்ளார்கள் என்றார். தமிழ்ப் பேச்சு பேசுவோர் அதிகமாக இருப்பதனால், தமிழ் சுருக்கெழுத்தாளர்களை அதிகமாக ஏற்படுத்துவதற்கு அமைச்சர் ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கோரிக்கைக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாக அமைச்சர் உறுதி யளித்தார்.

1955—ஆம் ஆண்டு மார்ச்சு 19—ஆம் நாள் திரு ஏ.கஜபதி நாயக்கர் அவர்கள் செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு வட ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் இருக்கும் அலுவலகங்களிலும், இவைகளுக்கு இடையேயும், இவைகளுக்கும் சென்னைவாழ் செக்ரடேரிட்டுக்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்துக்கள் இப்போது நடைபெறும் ஆங்கிலத்தில் இருப்பதைத் தவிர்த்து, தமிழ் மொழியில் நடத்த வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

இதை ஏன் கொண்டு வந்தேனென்றால், இதற்கு முன்னதாகத் தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று ஒரு சட்டம் கொண்டு வந்தேன். அது இந்தச் சட்டசபையில் இருக்கிறது. நமது மாகாண கவர்னர் பெருமான் அவர்களால் அதிக செலவாகும் என்று அதை விவாதிக்க உத்திரவு அளிக்கவில்லை. அக்காலத்தில் நிதி அமைச்சரைக் கேட்டதற்குக் கவர்னர் பெருமான் அனுமதி அளிக்காத காரணத்தினால், அது அப்படியே உயிருடன்தான் இருக்கிறது என்று கூறினார். அது இப்பொழுது எப்படியிருக்கிறது என்றால், இருந்தும் இல்லாதது போல் இருக்கிறது.

அப்படி இந்த மசோதா ஏற்கனவே இருக்கும்போது, இந்தத் தீர்மானம் எதற்கு என்று கேட்கலாம். அதை அப்படியே சும்மா விட்டுவிடாமல், மேலும் மேலும் தமிழை வளர்க்கும் முறையில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். தீர்மானம் என்ன சொல்லுகிறது? மூன்று மாவட்டங்களிலும் நடைமுறையில் நடவடிக்கைகள் தமிழில் நடைபெற வேண்டுமென்று சொல்லுகிறது. இப்போது திருச்சியிலே நமது அரசாங்கம் அங்கு நடக்கும் நடவடிக்கைகள் எல்லாம் தமிழில் நடக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஏற்பாட்டை அடிப்படையாகக் கொண்டதே இந்தத் தீர்மானமும். இப்போது திருச்சி ஒன்றிலே இருக்கிறது. நான் கொண்டு வந்திருக்கும் தீர்மானம், திருச்சி மாவட்டத்திலே நடப்பதோடு மட்டுமல்லாமல் மற்ற மூன்று மாவட்டங்களிலும் அதாவது செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு ஆகிய மூன்று மாவட்டங்களுக்கும் அவைகளுக்கு இடையேயும் சென்னையிலே உள்ள செக்ரடேரியட்டுக்கு இடையிலும் கடிதப் போக்குவரத்துக்கள் தமிழில் நடக்க வேண்டுமென்று கூறுகிறேன். ஒரு மாவட்டத்திற்குள்ளேயே

நடந்தால் அது நாட்டுப்புற மொழியாகத்தான் இருக்கும். அப்படியல்லாமல், செக்ரடேரியட்டிற்கும் சம்பந்தம் வைத்துக் கொண்டால், அது நாட்டு மொழியாக அமையும். அப்போது ஒரு மதிப்பையும் பெறும். கனம் நிதி அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்தால், இதை ஒப்புக் கொண்டு செய்யலாம்; செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திருச்சியிலே மட்டும் கொண்டு வந்திருக்கிறார்கள். அது எவ்விதம் நடைபெறுகிறது என்று பார்த்தால், பொறுப்பற்ற நிலையில் தான் நடைபெறுகிறது. அது எப்படி நடைபெறுகிறது என்று யார் கவனிக்கிறார்கள். அது எப்படி நடைபெறுகிறது என்பது பற்றி ஏதாவது ரிப்போர்ட் உண்டா? எதுவும் கிடையாது. அதைப்பற்றிக் கண்காணிப்பும் கிடையாது. ஒருவிதமான பாதுகாப்பும் கிடையாது. இப்படிப் பொறுப்பு இல்லாமல் அமுல் நடத்தினால், அது ஒழுங்காக இல்லாமல் போய் விடுகின்றது. அதற்காகவே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். இந்தத் தீர்மானத்தின்படி, திருச்சிக்கும் சென்னையில் உள்ள செக்ரடேரியட்டிற்கும் தமிழில் போக்குவரத்து நடந்தால், அப்போது நடவடிக்கைகள் நன்றாக நடக்கும். காரணம், அப்போது பொறுப்பு ஏற்படும். உண்மையில் தமிழ் மொழி வளரும். நமது இந்தியப் பேரரசை எடுத்துக் கொண்டால், ஹிந்தியை வளர்ப்பதற்குச் சங்கங்கள் வைத்து விரைவில் ஹிந்தியையே அரசியல் மொழியாக ஆக்க வேண்டுமென்பதற்காக எந்தெந்த விதங்களில் வளர்ந்து வரச் செய்கிறார்கள். நம்முடைய நாட்டிலே எடுத்துக் கொண்டால், தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எந்த விதமான திட்டமும் கிடையாது. சட்டமும் கிடையாது. திருச்சியில் இன்று நடைபெறும் விதம், குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொள்வதுபோல்தான் இருக்கிறது. அப்படி எத்தனை

நாளைக்கு ஓட்ட முடியும்? என்றைக்கு இருந்தாலும் வெளியே கொண்டு வரத்தானே வேண்டும்? அப்போது ஏன் உடனடியாகச் சென்னைக்கு இப்போதே கொண்டு வரக்கூடாது.?

இப்போது வரவு—செலவுத் திட்டத்தை இந்த ஆண்டு தமிழிலே அச்சடித்துக் கொடுத்தார்கள். அது எல்லோருக்கும் ரொம்பவும் உதவியாக இருந்தது. நாம் பேசுவதெல்லாம் தமிழ் மொழி; கனம் மந்திரி அவர்கள் பேசுவதும் தமிழ்மொழி. ஆனால், சில அங்கத்தினர்கள் கேட்பதற்காக உடனே ஆங்கிலத்தில் பேசிவிடுகிறார்கள். இவ்வாறு சில சமயங்களில் மற்றவர்களைக் கவனியாது பொறுப்பில்லாமல் பேசி விடுகிறார்கள். ஆத்திரத்தில் பேசுகிறேன் என்று நினைக்க வேண்டாம். எல்லா நட வடிக்கைகளையும் இன்று ஆங்கிலத்திலே அச்சடித்துக் கொடுத்துவிடப்படுகிறது. ஆனால், பேசுவதெல்லாம் தமிழ் மொழி, என்ன பொருத்தம்? தமிழில் அச்சடித்து இருந் தால்தான் தமிழ் ஆர்வம் பிறக்கும். அப்பொழுது அம்மொழி பழக்கத்திற்கு வரும். அச்சிலே கொண்டு வருவதற்கு அச்சப்பட்டுக்கொண்டு தமிழிலே மட்டும் பேசி என்ன பயன்? அச்சமில்லாமல் கடிதப் போக்குவரத்துக்கள் எல்லாம் தமிழிலே நடத்துவதற்கு முன் வரவேண்டும்.

இரண்டாவதாக, நமது செக்ரடேரியட்டில் பல ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் தமிழிலே ரொம்ப ஆர்வம் கொண்டவர்கள். தமிழிலே வரவேண்டு மென்ற எண்ணம் உடையவர்கள். தமிழை இரண்டாவது மொழியாகப் படித்தவர்கள். அவர்களால் எவ்விதக் குறையும் வராது. அவர்கள் ஐ.ஏ.எஸ்., அல்லது ஐ.சி.எஸ்., என்ற பெரிய படிப்பைப் படித்தவர்கள். அவர்கள் உதவி செய்யச் சித்தமாய் இருக்கிறார்கள். ஆகையால், அவர்கள் உதவியும் இதிலே நல்ல முறையில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கவர்னர் பெருமான் அதிகச் செலவாகும் என்ற காரணத்தினாலே அப்போது சொல்லியிருக்கலாம். ஆனால், முதலில் சிறிதளவு செலவிலே இதை ஆரம்பிக்கலாமே! செங்கல்பட்டு, தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, சென்னை நகரத்திலுள்ள செக்ரடேரியட்டு ஆகியவற்றிற்கு மட்டும் சிறிய செலவிலே் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இரண்டு தமிழ்த் தட்டெழுத்தாளர்கள், இரண்டு தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களை நியமித்து, ஒரு சிறிய அலுவலகம் நடத்தினால், அதன் மூலம் நாட்டிலே எவ்வளவோ தமிழ்ப் பற்று வளரும்; தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக வளரும். சும்மா செலவு ஆகிறது என்று மட்டும் சொல்லிக் கொண்டிருந்தால் பிரயோஜனம் இல்லை. பணம் எதற்காக இருக்கிறது? இம்மாதிரியான நல்ல முறைக்குப் பயன் படத்தானே இருக்கிறது. ஏதோ நான் கொண்டு வருகிறேன் என்பதற்காக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த வில்லை. நிதியமைச்சர் அவர்களே இந்தத் திருத்தத்தைக் கொண்டு வருவதாக எண்ணி, இதைச் செய்வதற்கு மனம் கொள்ள வேண்டும். கருணை கூர்ந்து இந்த மூன்று மாவட்டங்களுக்கும் உடனடியாகத் தமிழில் எல்லாப் போக்குவரத்துக்களும் நடத்துவதற்கு முன் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்போது சில தலைவர்கள் இங்குப் பெரும்பாலும் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள். நானும் இம்மாதிரி ஒரு காலத்தில் ஆங்கிலத்திலேயேதான் பேசிக் கொண்டிருந்தேன். ஆனால், இனிமேல் அம்மாதிரி எவ்வளவு நாளைக்கு முடியுமென்று பார்க்கு போது, கொஞ்சம் நாட்களுக்கே முடியும். கல்லூரிகளிலேதான் ஆங்கிலம் வளர்க்கப்பட்டு வந்தது. இப்போது அங்கும் இனிமேல் தமிழ் வந்துவிடப் போகின்றது. ஒரு சிலர் ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லிக் கொண்டு வருகிறார்கள். ஆனால், உண்மையில் நாளுக்கு நாள் இவ்வெண்ணம் குறைந்து கொண்டு வருவதையே நாம் பார்க்கிறோம். அதிலும் நமது நாட்டிலே

இன்னும் 10 ஆண்டுகளுக்குள் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே இருக்க வேண்டும். ஹிந்தி மொழி ஆட்சி மொழியாக வரவேண்டுமென்றிருக்கிறது. ஆகவே, பிற் காலத்தில் வரக்கூடியதைப்பற்றி இப்போதே தயாரித்துக் கொள்ள வேண்டாமா? ஆகையால், என்னுடைய தீர் மானத்தின் மூலம் சர்க்காரை வலிவுறுத்துவதற்காகக் கொண்டு வரவில்லை. நாளைக்கு வருவதை இன்றே தயார் செய்து கொள்ள வேண்டியதை ஞாபகப்படுத்தும் முறையிலேயேதான் கொண்டு வந்திருக்கிறேன். ஆகையால், இந்த மூன்று மாவட்டங்களுக்கும், சென்னையிலே செக்ரடேரியட்டிற்கும் இடையே மட்டும் எல்லாப் போக்குவரத்துக்களும் இனிமேல் தமிழில் நடக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த மசோதாவில் என்ன சொல்லப்படுகிறது என்றால், தமிழ் மாவட்டங்களாகிய மூன்று மாவட்டங் களில் மட்டும்தான் தமிழில் நடக்க வேண்டுமென்று சொல்லுகிறேனே தவிர, மலபாரையும், கன்னடத்தையும் இதில் சேர்க்கவில்லை. அவர்கள் ஆங்கிலத்திலேயே பேசட்டும்; அல்லது அவர்களுடைய மொழியிலேயே நடத்தட்டும். அதற்கு நான் குறுக்கே நிற்கவில்லை. அவைகளைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் தமிழ் ஏற்படுத்தலாம். ஆகவேதான் முதலில் மூன்று மாவட்டங் களை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அப்படி எழுதப் பழகினால் என்ன ஆகும் தெரியுமா? ஒருவருக்குள் ஒருவர் தமிழை நன்கு கற்றுக் கொள்ளலாம் என்று சொன்னேன். அப்படி எழுதப் பழகினால் நாளடைவில் ஆங்கிலமும் குறைந்து விடும். பிற்காலத்தில் செய்ய வேண்டியதை நாம் முன் ஜாக்கிரதையாகவே செய்தவர் களாகவும் ஆகி விடுவோம். இதையெல்லாம் உணர்ந்துதான் அப்போது தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்ற மசோதாவையும் கொண்டு வந்தேன்; இப்போது அதை நினைவூட்டும் முறையிலேயே இந்தத் திருத்தத்தையும்

கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, ஆட்சியாளர்கள் இதற்குக் கருணை கூர்ந்து இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, இதைச் செய்வதால் தமிழ் மொழி உயரும்; தமிழ் மக்கள் சிறப்படைவார்கள்; தமிழ்நாடு முன்னேறும்; அதற்கு அரசியலார் உதவி செய்ய வேண்டுமென்று மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

திரு கஜபதி நாயக்கரைத் தொடர்ந்து திரு ஏ.சுப்ர மணியம் அவர்கள் பேசினார்:—

"ஆந்திர நாடு பிரிந்த பிறகு இந்த நாடு இப்போது தமிழ் நாடாக விளங்குகிறது. தமிழிலே பேசக்கூடிய அங்கத்தினர்கள்தான் இந்தக் கவுன்சிலில் அதிகமாக இருக்கிறார்கள். குறிப்பிட்ட வேறு பாஷைகள் பேசக் கூடியவர்கள் இருந்தாலும் கூட, அவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில்தான் இருக்கிறார்கள். அவர் களுடைய சௌகரியத்தை நாம் ஒரு பக்கம் கவனிக்க வேண்டியிருந்தாலும் கூடத் தமிழில் பேசக்கூடிய மக்கள் பெருவாரியாக இருப்பதால், தமிழிலேயே தாய் மொழி யிலேயே நடவடிக்கையெல்லாம் நடத்த வேண்டும் என்பது என்னுடைய ஆசை, நமது புரட்சிக் கவிஞர் பாரதியாரும் கூட,

'வேறு வேறு பாஷைகள் கற்பாய் நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ, போ, போ,
நூறு நூல்கள் போற்றுவாய், மெய்கூறும்
நூலிலொத்தியல்கிலாய் போ, போ, போ'.

என்று கூறி நமக்கு எச்சரித்து இருக்கின்றார்.

நாம் பேசும் ஒவ்வொரு வார்த்தையிலும் தமிழின் இன்பத்தை அனுபவிக்கிறோம். கொஞ்ச நேரத்திற்கு முன் மிருகங்களைப் பற்றிப் பேசினார்கள். பகுத்தறிவில்லாத மாடுகள், 'அம்மா' என்றுதான் கத்துகின்றது. அதுவும் தமிழ்

உச்சரிப்பையே உச்சரிக்கின்றது. நம் தாய் பாஷை எவ்வளவு எளிதான வகையில் இருந்து வருகிறது. ஆகவே, நம் தாய் பாஷையாகிய தமிழைப் புறக்கணிக்கக் கூடாது. ஏதோ கொஞ்ச நாள் கழித்து மெதுவாகக் கொண்டு வரலாமென்று இந்த விஷயத்தில் இருந்துவிடாமல், அரசாங்கம் தமிழ் மொழியை உடனடியாக ஆட்சிமொழியாக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால், இது மிகவும் முக்கியமானது. அடுத்த தேர்தல் நடக்க இருக்கிறது. தேர்தலிலே தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வருவோம் என்று சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடக் கூடாது. இப்போது கொண்டு வந்தால்தான் வாக்காளர்கள் அதிகமான வோட்டுக்கள் அளித்து நம்மைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆகவே, ஆட்சியிலுள்ள அரசாங்கம் முந்திக் கொள்ள வேண்டும். மலையாள பாஷை பேசும் அங்கத்தினர்களுக்கும், கன்னடத்தில் பேசும் அங்கத்தினர்களுக்கும் உரிய பங்கு அளிக்க முடியும். நாம் தமிழில் பேசுவது போல் அவர்களும் மலையாளத்திலும், கன்னடத்திலும் பேசலாம். நாம் அதை ஆட்சேபிக்கப் போவதில்லை. கன்னடத்திலும் மலையாளத்திலும் பேசுகிற அங்கத்தினர்கள் 4, 5 பேர்கள் தான் இருப்பார்கள்.

ஒரு எழுத்துத் தட்டு மெஷின் ஒன்றை வாங்கி, ஒரு டைப்பிஸ்டை ரூ.75/— மாத சம்பளத்திற்கு நியமிப்பதால் ஒன்றும் செலவு அதிகமாகப் போய்விடாது. சாதாரணமாக ஒரு மெஷின் 600 ரூபாய்க்கு மேல் ஆகாது. ஒரு தடவை வாங்கிவிட்டால் மறுபடியும் வாங்கப் போவது கிடை யாது. இது மாதிரியான நல்ல காரியம் செய்தால் நன்மை ஏற்படும். அதோடு வேலையில்லாதவர்களுக்கும் ஓரளவு வேலை கொடுக்க முடியும். எனவே, இதையெல்லாம் ஆலோசித்துப் பார்த்து, கனம் நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை மூன்று ஜில்லாக்களிலும் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

சில வாரத்திற்கு முன்பாக செக்ரடேரியட்டிலிருந்து சப்ளிமெண்டரி பட்ஜட் அறிக்கை கொடுப்பது பற்றி எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் பட்ஜட் அறிக்கை தமிழில் கொடுப்பதாக இருந்தது. ஆனால், அது ஆங்கிலத்தில்தான் இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் இப்படிக் கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. இம் மாதிரியான பல தவறான விஷயங்கள் நடந்து விடுகிறது. இதன் காரணத்தையும் பரிசீலனை செய்ய வேண்டும். எல்லா விஷயங்களும் இனிமேல் தமிழிலே நடந்தால் இந்த நாட்டின் பெருமை நன்கு உயரும்.

ஸ்ரீ கஜபதி நாயக்கர் அவர்கள் சொன்னது போல,ஒரு சில எழுந்துத் தட்டும் டைப்பிஸ்டுகளை அமர்த்துவதினால் அரசாங்கத்திற்கு ஒன்றும் பெரும் செலவு ஏற்பட்டுவிடாது. இதைச் செய்துவிட முடியும். பணத்தைப் பற்றி இப்பொழுது கவலைப்பட வேண்டியதில்லை. இப்பொழுது துண்டு விழும் பட்ஜட்டைச் சரிக்கட்டுவதற்குச் சர்சார்ஜ் வரி எப்படி விதித்தார்களோ, இது மாதிரியாக இதற்குத் துண்டு விழும் பணத்தை வேறு விதமாகச் சரிக்கட்டி விடலாம். இல்லாவிட்டால், அரசாங்கத்தில் ரிசர்வ் ஃபண்டு தொகை இருக்கவே இருக்கிறது. அது எதற்காக இருக்கிறது? அதை ஏன் இம்மாதிரியான நல்ல காரியங்களுக்குச் செலவிடக் கூடாது? சும்மா பணத்தை ஏன் நீண்ட காலத்திற்கு ஒதுக்கி வைக்க வேண்டும்? நம் தாய் நாட்டிற்கும், நம்தமிழ் மொழிக்கும், நம் தமிழ் மக்களுக்கும் உகந்த காரியத்திற்காகத் தாராளமாக உபயோகப்படுத்தலாமே. அது நம் கடமையும் ஆயிற்றே. ஆகவே, கனம் நிதி அமைச்சர் அவர்கள் இந்த விஷயத்தில் ஆழ்ந்து சிந்தனை செய்து தேவையின் அவசியத்தை உணர்ந்து, இப்பொழுது கொண்டு வந்திருக்கும் தீர்மானத்திற்கு முழு ஆதரவு கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன். செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மட்டுமல்லாமல், சேலத்தையும் சேர்த்துக்

கொண்டு, செக்ரடேரியட்டுக்கும் இடையே கடிதப் போக்குவரத்துக்களை தமிழிலேயே ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியாகக் கேட்டுக் கொண்டு இத் தீர்மானத்தை நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன் என்றார்.

அடுத்து டாக்டர் ஏ.சீனிவாசன் அவர்கள் பேசியதாவது:—

சில மாதங்களுக்கு முன் நான் நாகபுரிக்குச் சென்றிருந்த போது, அங்குள்ள முதல் மந்திரி பண்டிட் சுக்லா அவர்களைச் சந்தித்தேன். அவர் என்னுடன் மாநாடு நடக்கும் ஹாலுக்கு வெளியே ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தார். ஆனால் மேடைக்கு வந்தவுடன் இந்தியில் உரைக்க ஆரம்பித்தார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பொறுத்துக் கொண்டிருந்தேன். அது ஒரு அகில இந்திய மாநாடு (All India Conference). அந்த மாநாடு முடிந்த பிறகு நான் பண்டிட் சுக்கிலா அவர்களைப் பார்த்து 'I do not understand a word of what you spoke' என்று கேட்டேன். அதற்கு அவர், 'Yes, it does not matter' என்று கூறினார். அப்போதுதான் எனக்குக் கொஞ்சம் ஆவேசம் பிறந்தது. அவர்கள் மட்டும் இந்தியைப் பரப்ப வேண்டுமென்று இப்படிப் புரளி பண்ணும் போது நாம் மட்டும் ஏன் தமிழ் பேசுவதற்குப் புரளி பண்ணக் கூடாது என்று தோன்றிற்று. ஆங்கிலம் வேண்டியதுதான். சாஸ்திர விஷயங்களைப் பார்க்கின்ற போது, அனைத்துலகத்தோடு ஒட்டிப் போவதற்கு ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மனி போன்ற மொழிகள் வேண்டியதுதான். ஆனால், அதற்காக நம் நாட்டுப் பழக்கத்திற்காகத் தமிழைத் தள்ளிவிடக் கூடாது என்பது என்னுடைய அபிப்பிராயம். அந்த முறையில் நண்பர் கஜபதி நாயக்கர் அவர்கள் இந்த மூன்று ஜில்லாக்களுக்கும் தமிழைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்பது நியாயமானதே. அதை நான் ஆதரிக்கிறேன். என்றைக்காவது ஒரு நாளைக்கு நாம் இதை ஆரம்பிக்கத்

தான் போகின்றோம். பின்னால் ஆரம்பிக்கப் போவதை இப்போதே உடனடியாகக் கொஞ்சம் கொஞ்சமாக ஆரம்பித்தால், அது பயனுடையதாக இருக்கும். இதை அரசாங்கம் புறக்கணித்துவிடக் கூடாது. இன்று 'non-official day' ஆகையால் இந்தத் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு அரசாங்கம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மேலும், நம்முடைய அதிகாரிகளும் தமிழில் பேசவும், எழுதவும் தெரிந்தவர்களாக இருக்கிறார்கள். அதனால், கஷ்டமும் இராது. அப்படியெல்லாம் செய்ய முடியாது என்று ஒரேயடியாகத் தள்ளி விட்டாலும், அந்த அடியையும் வாங்கிக் கொள்ளத்தயார். ஆனால், அவ்வாறு செய்யக் கூடாது. கனம் நிதி மந்திரி அவர்கள் இதைப் பற்றி யோசனை செய்து 2,3 ஜில்லாக்களுக்காகிலும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எப்படியாவது மறு எலக்ஷனுக்குள்ளாகவாவது கொண்டு வருவதற்கு ஆராயலாம் ஆங்கிலம் இருக்க வேண்டும். அதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை. சாஸ்திர விஷயங்களிலே அவைகளை வைத்துக் கொண்டு மற்ற நடவடிக்கைகளுக்குத் தமிழை ஏன் உபயோகப்படுத்தக் கூடாது என்பது எனக்கு விளங்கவில்லை. இதை அவர்கள் உடனடியாகச் செய்யாவிடில், தமிழ் மக்கள் நிச்சயமாக அரசாங்கத்தைப் பழிப்பார்கள். இப்படியெல்லாம் கொண்டு வந்தால்தான் தமிழ் வளர முடியும். தென் கன்னடத்தைச் சேர்ந்தவர்களும், மலபாரைச் சேர்ந்தவர் களும் பலர் இருப்பதற்காகத் தமிழ் கொண்டு வருவது கஷ்டமாக இருக்கிறது என்று சொல்லுவது எனக்குப் புரியவில்லை. நம்முடைய தமிழர்களிலே எத்தனையோ பேர்கள் ஆங்கிலம் தெரியாமல் இருக்கிறார்கள். அவர்களுடைய நிலைமையைக் கவனிக்க வேண்டாமா? அவர்களுடைய பொறுப்பைக் கவனிப்பதே இல்லையே! ஏன் தமிழ் மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய இடத்தில் மந்திரிகளும் தமிழில் பேசக்கூடாது என்றுதான் எனக்குப்

புரியவில்லை. ஏதோ வாய்க்கரிசி போடுவது போல் ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் தமிழில் பேசி விட்டால் போதுமா? வீட்டிலே பேசுவதெல்லாம் தமிழ்; சாப்பிடும் போது தமிழில் பேசுகிறோம்; அப்பொழுதெல்லாம் ஆங்கிலத்தைப் பற்றி நினைப்பதேயில்லை. ஆனால், இந்தச் சபையில் வரும்போது மட்டும் ஏன் மந்திரிகள் ஆங்கிலத்தில் பேசுகிறார்கள் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. ஆகவே, இந்தத் தேர்தல் வருவதற்கு முன்பாக, எல்லா மந்திரிகளும் சேர்ந்து ஆலோசித்து உடனடியாகத் தமிழில் நடவடிக்கை நடத்துவதற்கு முன் வர வேண்டும். கொஞ்சம் மெதுவாக ஆரம்பிக்கலாம், யோசிக்க வேண்டுமென்று சொல்வதில் பிரயோஜனமில்லை. இன்று அதிகாரிகளை எடுத்துக் கொண்டாலும் go slow வாகத் தான் எந்தக் காரியங்களையும் செய்கிறார்கள். பத்து நாளைக்குள் செய்ய வேண்டியதை, 30 நாளைக்குச் செய்கிறார்கள். அப்படி go slow வாக இல்லாமல் தமிழை உடனடியாக நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, இந்தத் தீர்மானத்தை ரொம்பவும் மனப்பூர்வமாக ஆதரித்து என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்" என்றார்.

தொடர்ந்து திரு கே. பாஷ்யம் அவர்கள் பேசியதாவது:—

இந்தத் தீர்மானம் கொண்டு வந்ததைப் பற்றி நான் ரொம்பவும் சந்தோஷப்படுகிறேன். ஏனென்றால், தமிழ்ப் பாஷையை, தாய்ப் பாஷையை நாம் வளர்க்க வேண்டியது நம்முடைய கடமையாகும், அதை நான் ஒப்புக் கொள்ளு கிறேன். ஆனால், எனக்கு ஒரு சந்தேகம் மட்டும் உண்டாகிறது. அதாவது இந்தத்தீர்மானத்தைச் சற்று திருத்தி அமைக்க வேண்டும் என்பது என்னுடைய அபிப்பிராயம். என்னவென்று கேட்டால், இப்போது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இந்தத் தமிழ் மொழியில் கடிதப் போக்கு வரத்து செய்யும் விஷயத்தில் அந்த ஊரிலுள்ள மாவட்ட அதிகாரி இருக்கிறாரே, அவரைப் பற்றிய அபிப்பிராயம்

என்னவென்று யோசிக்க வேண்டும். அவரைப் பற்றிய அபிப்பராயம் என்னவென்று கேட்கிறேன். கொஞ்ச நாளைக்கு முன்பு நான் ஒரு சமாச்சாரப் பத்திரிகையை வாசிக்கும் போது, அதில் இதைப்பற்றி ஒரு விஷயம் தெரிந்து கொண்டேன். என்னவென்று கேட்டால், அவர்கள் தமிழிலே நடத்துகிற கடிதப் போக்குவரத்து இருக்கிறதே, அது கிராமவாசிகளுக்கு இந்த அதிகாரிகளால் எழுதக்கூடிய வாசகம் புரியக்கூடியதாக இல்லை. இவர்கள் பேசு கிறதுபோல் தமிழை எழுதாமல், பழைய காலத்துச் செந்தமிழ் நடையில் எழுவதுபோல் எழுதிவிடுகிறார்கள். நாடோடித் தமிழில் எழுதினால் அவர்களுக்குப் புரியும். செந்தமிழில் எழுதுவதால் அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. நான் இந்த சமாச்சாரத்தைத் தெரிந்து கொண்டேன்.

அடுத்து நான் ஓரிடத்தில் தமிழில் பேசுவதற்காகப் போயிருந்தேன். உட்கார்ந்திருந்த என்னை, அங்குள்ள ஒருவர், 'உங்களுக்குத் தமிழில் பேசத் தெரியுமா?' என்று கேட்டார். நான் அவரிடம், 'எனக்கு இலக்கண இலக்கியத்தோடு பேசத் தெரியாது; ஆனால், நாடோடித் தமிழில் பேசத் தெரியும்' என்று கூறி, அங்குள்ள மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய நாடோடித் தமிழில் பேசினேன். அங்குள்ள மக்களும் சமாச்சாரத்தைப் புரிந்து கொண்டார் கள். ஆகவே, நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், இதே மாதிரியாக நாடோடித் தமிழில் கடிதப் போக்கு வரத்துக்களை ஏற்படுத்த வேண்டுமென்பதுதான். அதை மட்டும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன்.

மற்றும் என் அபிப்பிராயங்களைச் சொல்லுகிறேன். இப்போது கிராமவாசிகளிடம் மாவட்டம் என்று சொன்னால் அவர்களுக்கு ஒன்றும் புரிந்து கொள்ள முடியாது. டிஸ்ட்ரிக்ட் என்று சொன்னால் ஒரு வேளை புரிந்து கொண்டாலும் புரிந்து கொள்ளலாம்.

குழு என்ற வார்த்தையைச் சொன்னால், அது குழுவா, புழுவா என்று சந்தேகமேற்பட்டு அவர்களால் சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை. பெடிஷன் என்று சொன்னால் எல்லோருக்கும் புரிகிறது. அதையே மனுப் போட வேண்டுமென்று சொன்னால், உடனே புரிந்து கொள்ள முடிவதில்லை.

அதேபோல் ஒரு கிராமவாசி எளிதாக 'எனக்கு இன்னும் நோட்டீஸ் வரவில்லை' என்று சொல்லுகிறான். ஆனால் அவன் அதைத் தமிழில் சொல்வதேயில்லை. அதேபோல், 'நான் இன்று கோர்ட்டுக்குப் போக வேண்டும்' என்றுதான் சொல்லுகிறான். ஆனால், 'நான் நீதி மன்றத்திற்குச் செல்ல வேண்டும்' என்று சொல்வதில்லை. அப்படிச் சொன்னாலும் நமக்கு உடனே அர்த்தம் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஒரு ஜட்காக்காரனைப் பார்த்து, 'நீ நீதிமன்றத்திற்கு வண்டியை ஓட்டு' என்று சொன்னால் அவனுக்கு அது கஷ்டமாகத்தான் இருக்கும். அதேபோல், கான்ஸ்டபிள் என்பதற்குப் போலீஸ்காரன் என்று சொன்னால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த மாதிரியாகப் பல கஷ்டங்கள் ஏற்படுகிறது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்பதற்கு என்ன தமிழ் வார்த்தை போடுவார்களோ தெரியவில்லை. இந்த மாதிரியான பல வார்த்தைகளுக்குக் கஷ்டப்பட வேண்டியிருக்கிறது. அப்பீல், கம்ப்ளைன்ட் இது போன்ற வார்த்தைகள் வந்து கொண்டே இருக்கின்றன. இவைகளுக்கெல்லாம் நாடோடித் தமிழில் வார்த்தைகளைக் கண்டுபிடிக்க வேண்டுமே தவிர, செந்தமிழைப் புகுத்தினால் கஷ்டங்கள்தான் ஏற்படும்.

சாதாரணமாக ரேடியோவைத் திருப்பினால், அதில் பேசக்கூடிய வார்த்தைகளில் பாதிக்குமேல் புரியவில்லை. ரொம்ப செந்தமிழாக இருந்து விடுகிறது. இத்தனைக்கும் நாம் தினமும் வீட்டிலே பேசுவது தமிழ்; வீட்டிலுள்ள குழந்தைகள் எல்லாம் தமிழ் பேசுகின்றன. நான் தினமும்

இராமாயணத்தைத் தமிழில் படிக்கின்றேன். ஆனால், இந்தத் தமிழ் வேண்டுமென்று சொல்லுகிற சில பேர்கள், செந்தமிழை உபயோகித்து நம்மைக் குழப்புகிறார்கள். அந்த அட்டூழியத்தைத்தான் என்னவென்று சொல்வது என்று எனக்கே தெரியவில்லை. அதை மாற்றி நாடோடித் தமிழில் அமைத்தால் நல்லதென்று தெரிவித்துக் கொள்கிறேன்'' என்றார்.

அடுத்ததாகத் திரு டி.எம்.நாராயணசாமி பிள்ளை அவர்கள் பேசினார்:—

''சாதாரணமாக 1900—ஆம் வருஷத்தில் இருந்த தமிழுக்கும், இப்போது இருக்கக்கூடிய தமிழுக்கும் நாம் வித்தியாசத்தைப் பார்க்கின்ற போது, இன்று இருக்கும் தமிழைப் பார்ப்போமானால், ரொம்பவும் சுலபமாக எல்லோருக்கும் புரியும்படியாக இலக்கண முறையை ஒட்டி நல்ல முறையில் உபயோகித்து எழுதுகிறார்கள். நான் பிரசிடென்ஸி கல்லூரியில் படிக்கும் போது, டாக்டர் சுவாமிநாத ஐயர் அவர்களிடம் படிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அவர் 'புத்த சரித்திரம்' என்ற ஒரு நூல் எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்திலே உள்ள ஒவ்வொரு வார்த்தையும் சுலபமாக நன்கு புரிந்து கொள்ளக்கூடிய மொழியில்தான் தமிழை எழுதி வளர்த்திருக்கிறார்கள். அதைப் படிக்கும்போது, ஒவ்வொரு மனிதனுடைய உள்ளத்திலும் அது போய்ப் பாய்ந்து, நல்ல எழுச்சியை எல்லோருக்கும் எழுப்பக்கூடிய முறையிலே எழுதி வளர்த் திருக்கிறார்கள்.

அப்படி வளர்ந்து வந்த காலத்திலேகூடத் தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்க பல காரணங்களால் முடியாமல் போய்விட்டது. ஆனால், இன்று தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க மூன்று ஜில்லாக்களுக்கும், செக்ரடேரியட்டிற்கும் இடையே ஏற்படுத்த வேண்டும் என்ற

நண்பர் ஸ்ரீ கஜபதி நாயக்கர் அவர்களுடைய தீர்மானத்தை ஆதரிக்க வேண்டியிருக்கிறது. தமிழிலே நடத்தக் கூடாது, அப்படி நடத்துவது சாத்தியமில்லை என்று ஒருவரும் சொல்ல முடியாது; சொல்லவுமில்லை. எந்த விஷய மானாலும் நன்றாகத் தமிழில் விளக்க முடியும். அப்படி இருக்கும்போது, அதற்கு ஏன் தடைகள் இருக்க வேண்டும். நண்பர் ஸ்ரீ பாஷ்யம் அவர்கள் சொன்னது போலேவே தமிழ் இருக்கலாம். அதற்கு இப்போது இருக்கும்படியான தமிழே போதும். ஆனால் சில விஷயங்களுக்குச் சில பதங்களைக் கண்டுபிடிக்க வேண்டும். அதாவது கலைச் சொற்கள் நாம் எதிர்காலத்தில் தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வரும்போது இந்தக் கலைச் சொற்கள் கண்டு பிடிக்க வேண்டிய கஷ்டம் ஏற்படும். அப்பொழுது கஷ்டப்படுவதைக் காட்டிலும் ஏன் இப்பொழுதே அக்கலைச் சொற்களைத் தேடிக் கண்டுபிடித்து வைத்துக் கொள்ளக் கூடாது? இப்போது அவைகளைக் கொஞ்சம் கஷ்டப்பட்டுத் தேடி வைத்துக் கொண்டால், பின்னால் நாம் கஷ்டப்பட வேண்டியது இல்லை. இப்பொழுதிலிருந்தே ஆரம்பித்தால்தான், கலைச் சொற்கள் மற்ற பதங்கள், அதற்கான விஷயங்கள் எல்லாம் நன்கு தேடி வைத்துக் கொள்ள முடியும். பின்னர் ஆட்சிமொழி கொண்டு வரும்போதும், பெரிய கஷ்டமாகத் தோன்றாது. இந்த விஷயத்தில் சுதந்திர வெள்ளத்தைத் தடுக்க முடியாது. சுதந்திர இயக்கத்திற்கு இதிலே இணங்கிய சம்பந்தமுண்டு. பல காரணங்களினால் இப்போது உண்டாக்க முடியாமல் இருக்கலாம். ஆனால், அது பிற்காலத்தில் நிச்சயமாகக் கஷ்டத்தை உண்டாக்கும். அப்படி வருங்காலத்தில் நாம் கஷ்டப்படுவதைக் காட்டிலும் ஏன் இப்பொழுதே அதைச் செய்து வைத்துக் கொள்ளக்கூடாது என்பதுதான் என்னுடைய கேள்வி.

முதலில் இந்த மூன்று ஜில்லாக்களுக்கும் நல்ல, தமிழில், நல்ல முறையில் நிருவாகம் நடக்க ஏற்பாடு செய்ய

வேண்டும். அதற்கான கலைச் சொற்களை முதலில் சிறிது கஷ்டப்பட்டு அமைத்துக் கொண்டால், மிகவும் நன்றாக இருக்கும். இந்த அரசாங்கமானது பல நூற்றாண்டுகளாக அந்நியர்களின் ஆட்சியில் அகப்பட்டுப் பழக்கத்தில் இருந்த சில நிருவாக மொழிகள் மறைந்துவிட்டன. நான் சில கல்வெட்டுக்களிலே நிருவாகச் சொற்களைக் கண்டேன்.

நான் சில கல்வெட்டுக்களைப் பார்த்திருக்கிறேன்; படித்தும் இருக்கிறேன். அந்தக் கல்வெட்டுக்களிலே நிருவாகச் சொற்கள் நிறைந்திருக்கின்றன. இம்மாதிரியாக ஆங்காங்கிருக்கும் சொற்களை எல்லாம் மீட்டு அலுவலக ஆட்சிமுறைக்கு ஏற்றவாறு ஒரு பெரிய கலைச் சொற்கள் அகராதி போடுவது மிக முக்கியமாகும். அப்படிச் செய்தால், அது மிகவும் உபயோகமாயிருக்கும்.

கனம் தலைவர் அவர்களே, நாம் இப்படித் தமிழில் முன்னேற்றம் செய்து கொண்டு வந்தால், ஒருவேளை ஆங்கிலம் இல்லாமல் போய்விடுமோ என்ற ஒரு அச்சம் இருந்து கொண்டிருந்தது. இருந்து கொண்டும் இருக்கிறது. என் மனதில் மட்டுமல்ல; பலருடைய மனதில் இவ்வெண்ணம் இருந்து கொண்டு வருகிறது. ஆனால், என்னைப் பொறுத்த மட்டில், தமிழுக்கு எதிர்காலத்தில் ஒரு உயர்வையோ மேம்பாட்டையோ தரத்தையோ தர வேண்டுமானால் ஆங்கிலம் இருந்தே தீர வேண்டும். ஆங்கிலம் இருந்தால் அது தமிழுக்குத் துணையாக இருந்து, முன்னேற்றத்தை அளிக்க உதவியாக இருக்கும். மற்றவர்கள் ஆங்கிலத்தைப் புறக்கணிக்கலாம். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது சுதந்திரம் வந்துவிட்ட பிறகு தமிழ் வருவதனால், ஆங்கிலத்தின் தரம் குறைந்து விடுமென்பது பலருடைய அபிப்பிராயம். அது நியாயமென்றும் தோன்றலாம். ஆனால் ஆங்கிலத்தின் துணையில்லாமல் ஒரு நாளும் தமிழ் குறைவின்றி மேன்மையடைய முடியாது.

சுதந்திரம் அடைந்தாலும் 10,12 ஜில்லாக்களுக்கு அல்லது எல்லா ஜில்லாக்களுக்குமே தமிழை ஏற்படுத்தினாலும் மக்களுடைய வாழ்வு உயர்வடைய வேண்டுமானால் ஆங்கிலம் துணையாக இருந்தால்தான் உதவியாக இருக்கும். அப்பொழுதுதான் தமிழ் மொழியானது இந்தியாவுக்கு மட்டுமல்லாமல் உலகத்திற்கே தெரியும்படியான மொழியாக விளங்க முடியும். காரணம் ஆங்கிலம் உலகத் தொடர்புடைய மொழியாக விளங்கி வருகிறது. ஆகவே, அந்த மொழியோடு நாம் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்" என்றார்.

தொடர்ந்து திரு என். அண்ணாமலைப் பிள்ளை பேசியதாவது:—

'கனம் சபாநாயகர் அவர்களே, தமிழ்மொழி ஆட்சி மொழியாகக் கொண்டு வரவேண்டும் என்பதைப்பற்றிய பிரச்சினைகள் இப்பொழுது சுதந்திரம் வந்த பிறகு ஒவ்வொரு இராஜ்யத்திலும் அந்தந்தத் தாய் மொழியிலேயே தான் விவகாரங்கள் நடைபெற வேண்டுமென்று ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் அரசியல் நிருபணம் செய்யப்பட்டது. பதினைந்து வருஷங்களுக்குள்ளாக அரசியல் சட்டத்திலே ஆங்கில மொழி அகற்றப்பட வேண்டுமென்று திட்டம் வகுத்திருக்கிறார்கள். இப்போது 5 வருஷ காலம் கழிந்துவிட்டது. ஆறாவது வருஷமும் ஆரம்பமாகிவிட்டது. இன்னும் பத்து வருஷ காலத்தில் ஆங்கில மொழியை அகற்ற வேண்டும். ஆகையால், இப்பொழுது இந்த நிலைமை நீடித்தால், ஆங்கிலம் ஒழிய வேண்டும், தாய்ப் பாஷை ஆட்சி மொழியாக வேண்டும் என்பது பகல் கனவாகத் தான் முடியும். நம்முடன் இருந்து சில நாட்களுக்கு முன் ஆந்திரர்கள் பிரிந்து, தெலுங்கிலேயே எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. எல்லா நடவடிக்கைகளையும் தெலுங்கிலேயே ஆரம்பித்து

விட்டார்கள். ஆதலால், தமிழர்களாகப் பிறந்த நாம் தமிழிலேயேதான் ஆட்சியை நடத்த வேண்டும். இந்த விஷயத்தில் எனக்கு ஒன்றும் புரியவில்லை. நம் தாய் மொழியில் நாம் பேசுவதற்கு, நாட்டு ஆட்சி நடத்துவதற்கு என்ன சங்கடம் இருக்கிறது. எதற்காக இவ்வளவு கஷ்டப்பட வேண்டும் என்பதுதான் எனக்கு விளங்க வில்லை.

ஆனால், எனது நண்பர் அவரசப்பட்டு ஜில்லாக் களில் பரிட்சார்த்தமாகக் கொண்டு வரவேண்டும் என்ற தீர் மானத்தைப் பார்த்தால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. மயக்கம்தான் வருகிறது. உள்ளத்திலே ஒரு கிறுகிறுப்பு ஏற்படுகிறது. எதற்காக இவர் இப்படிக் கேட்கிறார். ஒரு ஜில்லாவிலும் இரண்டு ஜில்லாவிலும் மூன்று ஜில்லா விலும் கொண்டு வர வேண்டுமென்று சொல்வதற்கு என் நா கூசுகிறது. நமக்குள்ளே பேசிக்கொள்வோம். நாமே தமிழிலே ஆட்சியை நடத்துவோம் என்று சொல்வதற்கு என்ன கஷ்டம் இருக்கிறது. இதற்காகத் தாய்ப் பாஷையில் நடத்துவதற்கு ஏன் மூன்று ஜில்லாக்களில் மாத்திரம் கொண்டு வரவேண்டும். எல்லா ஜில்லாக்களிலும் தாராளமாக நடத்தலாமே! நண்பர் கஜபதி நாயக்கர் கேட்பது எப்படி இருக்கிறதென்றால், அந்தக் காலத்திலே மகாபலிச் சக்ரவர்த்தியை மகா விஷ்ணு வாமன அவதாரமெடுத்து மூன்றடி மண் கேட்ட மாதிரியாக இருக்கிறது. முதல் அடி ஆகாயத்திலும், இன்னொரு அடி பாதாளத்திலும், மூன்றாவது அடி தலையிலும் வைத்தா ராம். அது மாதிரியாகவே நம்முடைய கஜபதி நாயக்கர் அவர்களும் முதலில் மூன்று ஜில்லாக்களுக்கும் தமிழ் ஆட்சி மொழியாக வர வேண்டுமென்று சொல்லி, பிறகு எல்லா ஜில்லாக்களிலும் வரவேண்டும் என்று சொல்லுவார்கள் போலும். ஸ்ரீ கஜபதி நாயக்கர் கொடுத்த தீர்மானம் அப்படித்தான் இருக்கிறதென்று நினைக்கிறேன். முதலில் மூன்று ஜில்லாக்களில் மட்டும் வைத்துவிட்டால், பிறகு

**தானாக மற்ற ஜில்லாக்களிலும் கொண்டு வந்து விடுவார்கள் என்று நினைக்கிறார்கள். முதலில் அவர்கள் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். மொத்த ஜில்லாக்களிலும் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்கு வற்புறுத்த வேண்டுமென்பதைத் தவிர, இம்மாதிரியாக இரண்டு ஜில்லாக்களுக்கும், மூன்று ஜில்லாக்களுக்குமாகக் கொண்டு வருவதில் பிரயோஜனம்** இல்லை. ஆகையால், அவருடைய தீர்மானத்தைத் கட்டாயம **வாபஸ் வாங்கிக் கொள்ளவேண்டும்" என்றார்.**

அடுத்ததாகத் திரு வி.கே.ஜான் அவர்கள் ஆங்கிலத்தில் பேசியதாவது:—

"அரசியல் சட்டத்தின் 343 (1)—ஆவது பிரிவின்படி மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழி தேவநாகரி எழுத்தைக் கொண்ட இந்தி மொழி என்றிருக்கிறது. இந்திய அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்ததிலிருந்து பதினைந்து ஆண்டுகள் வரை, ஆங்கிலம் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து இருக்க வேண்டும். அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்து ஐந்து ஆண்டுகள் முடிவடைந்துள்ளதால், குழு ஒன்று அமைக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் இப்போது இருக்கிறது. அரசியல் சட்டம் 345—ஆவது பிரிவின்படி, ஒரு மாநிலத்தின் சட்டமன்றம், அம் மாநிலத்தில் வழக்கிலிருக்கிற ஒன்றையோ அதற்கு மேற்பட்ட மொழிகளையோ அல்லது இந்தியையோ மாநிலத்தின் ஆட்சி மொழியாகச் சட்டப்படி ஆக்கிக் கொள்ளலாம் என்றிருக்கிறது. ஆகவே, சட்டமன்றத்தில் சட்டமாக ஆக்கப்பட்டால்தான் ஒரு மொழி ஆட்சி மொழியாக ஆக முடியும். இப்பொழுதிருக்கிற சென்னை மாகாணம் கருநாடகம், கேரளம், தமிழ்நாடு ஆகிய மூன்று மொழி பேசும் பகுதிகளை உள்ளடக்கியது. மூன்று மொழிகளுக்கும் பொதுவான எழுத்து இருக்குமேயானால், சட்டமன்றத்தில் நாம் தீர்மானத்தைக் கொண்டு வந்து,

தமிழை ஆட்சி மொழியாக்க முயற்சிக்கலாம். தமிழுக்கும் மலையாளத்திற்கும் பொதுவான எழுத்தை நம்மால் உருவாக்க முடியும். தமிழை ஆட்சி மொழியாக்குவதில் என் ஒத்துழைப்பு கட்டாயம் உண்டு. எட்டாவது அட்ட வணையில் குறிப்பிட்டிருக்கிற பதினான்கு மொழிகளில் தமிழும் ஒன்றாக இருப்பதால், மற்ற மொழிகளைப் போல் வளம் நிறைந்த மொழியாகத் தமிழ் இருப்பதால், ஆட்சி மொழியாகத் தமிழை ஆக்கும் முயற்சியை நான் ஆதரிக் கிறேன். தென்னாட்டில், உத்திரப் பிரதேசத்தைப் போன்ற பெரிய மாநிலம் ஒன்று தேவை. உத்திரப் பிரதேசம்தான் இன்று நம்மை ஆட்சி செய்கிறது. பிரிவினையால், சென்னை மாகாணம் சிறியதாகிவிட்டது. கேரளம், கரு நாடகம் ஆகிய பகுதிகளையும் சேர்த்த பெரிய மாகாண மாக, இம்மாகாணம் தொடர்ந்து இருக்க வேண்டும். அப்படிப்பட்ட மாநிலத்திற்குத் தமிழ் போன்ற மொழியை ஆட்சி மொழியாக நான் அங்கீகரிப்பேன்.

மூன்று மொழிகள் இருக்கின்ற பகுதியில் சிறந்த வட்டார மொழியைத் தேர்ந்தெடுத்து ஆட்சி, மொழியாக்க வேண்டுமென்றால், நான் தமிழ் மொழியையே விரும்பு வேன். ஏனென்றால், தமிழ் மொழிதான் சிறந்ததும், பழமையானதுமாகும். மலையாள மொழிக்கும் தமிழ் மொழிக்கும் நிறைய ஒற்றுமை இருக்கிறது. கன்னடத்தைப் பொறுத்த வரையில் அப்படிச் சொல்ல முடியாது. எப்படி ஆங்கிலம், மூன்று மொழி பேசப்படுகிற இங்கிலாந்து நாட்டின் ஆட்சி மொழியாக இருக்கிறதோ, அப்படியே தமிழ் மொழியையும் தென்னகத்தின் ஆட்சி மொழியாக ஆக்கிவிடலாம்.

மொழியைப் பொறுத்தமட்டில், ஒரு சிலவற்றை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். மொழி என்பது கூடப் பிறந்தது அல்ல. ஒரு குழந்தை வங்காளத்திலோ

இங்கிலாந்திலோ பிறந்தால், அந்த மொழிகளைக் கற்றுக் கொள்ளுகிறது. மொழியென்பது ஒருவரையொருவர் புரிந்து கொள்வதற்காக அமையும் கருவி.

தமிழ் மொழி மீது பற்றுள்ள காரணத்தினால், எங்களால் புரிந்து கொள்ள முடியாத நிலையில், சில உறுப்பினர்கள் அவையில் தமிழில் பேசுகிறார்கள். தமிழ் தெரியாத பல உறுப்பினர்கள் பலர் இந்த அவையில் இருக்கும்பொழுது, தமிழில் சொற்பொழிவாற்றுவதனால் என்ன பயனுண்டு. இந்த அவையில் பெரும்பாலான உறுப்பினர்களுக்கு ஆங்கிலம் தெரியும். என்னைப் போன்று, தமிழகத்தில் குடியில்லாத காரணத்தினால், பல மலையாளம் பேசும் நண்பர்களுக்கும், கன்னடம் பேசு பவர்களுக்கும் தமிழைப் புரிந்து கொள்ள முடியாத நிலை உள்ளது. ஆங்கிலம் தெரியும் பொழுது, தமிழிலே ஏன் பேச வேண்டும்? இந்த முறையில் ஒரு மொழியை வளர்க்க முடியாது.

தமிழே ஆட்சி மொழி என்பதற்கான மசோதாவை அரசாங்கம் கொண்டு வரவேண்டுமென்று நான் விரும்பு கிறேன். அப்படிச் செய்யாமல், அவையில் எங்களுக்குப் புரியாத நிலையில், தமிழிலே பேசுவது சரியல்ல.

நம்முடைய நாடு சுதந்திரம் பெற்ற நாடு. நமக்கென்று தேசிய மொழி ஒன்று வேண்டும். அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்த 15 ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தி மொழி தேசிய மொழியாக ஆகிவிடும். நான் அதை வரவேற்கிறேன். அதைத் தேசிய மொழியாக ஆக்குவதில் சிரமம் இருக்கிறது. ஆனால், நாம் முயற்சி செய்ய வேண்டும். இந்தி மொழியைக் கற்றுக் கொள்ளக் கூடாது என்ற இயக்கம் தென்னிந்தியாவிலே இருக்கிறது. அவர்களுடைய கொள்கையானது அறிவுக்கு உகந்தது அல்ல; ஒன்று நம்முடைய அரசியல் சட்டத்தைத் திருத்த

வேண்டும் அல்லது இந்தி மொழியை ஒப்புக் கொள்ள வேண்டும்.

நம்முடைய இளைஞர்கள் இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். நாம் ஒரே நாடாக இருக்க வேண்டு மென்றால், இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும். தென்னிந்தியா ஒரு தனி நாடல்ல. நம் மாகாணம் மற்ற மாகாணங்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும்; நம் தலைவர்கள் பாராளுமன்றத்திற்குத் தேர்ந் தெடுக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்தில் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தி மொழிதான் பேசப்படும். இந்தி மொழியை நாம் கற்கவில்லை என்றால், பாராளுமன்ற நடவடிக்கைகளில் எப்படிப் பங்கேற்க முடியும். ஆகவே, ஆங்கிலம், தமிழ் மற்றும் இந்தி ஆகிய மூன்று மொழிகளில் எந்த மொழியை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற முடிவை அரசு எடுக்க வேண்டும். நம்முடைய நாடு மிகப் பெரிய நாடு. நமக்கென்று தனியாக தேசிய மொழி தேவை. ஆங்கிலம் உலக மொழியாக இருக்கிறது. அம்மொழியையே நம் தேசிய மொழியாகவும் ஏற்றுக் கொள்ளலாம். ஐரோப்பிய நாடுகளில் மட்டுமல்லாது, அமெரிக்கா, இரஷ்யா முதலான நாடுகளிலும் ஆங்கிலம் இப்பொழுது கற்பிக்கப்படுகிறது. நம்முடைய தேவைகளுக்காகவும் ஆங்கிலத்தைப் படிப்பது நல்லது. நாம் கற்பதற்கு ஒரு சிறந்த மொழியையே தேர்ந்தெடுக்க வேண்டும். அப்பொழுதுதான் இலக்கியம், அறிவியல், பொருளாதாரம் ஆகிய துறைகளில் சிறந்த கருத்துக்களை நாம் பெற முடியும். நம்முடைய மொழிகள் வளர்ச்சி பெறவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆகவே, நம்முடைய மாணவர்களுக்குக் குறைந்தது மூன்று மொழி களையாவது பள்ளிகளில் கட்டாயம் கற்பிக்க வேண்டும். வட்டார ஆட்சி மொழியையும் ஆங்கிலத்தையும் கட்டாயமாகப் போதிக்க வேண்டும். இந்தியைத் தேவநாகரி

எழுத்தில் படிப்பதைவிட ரோமன் எழுத்தில் படிப்பது சிறந்ததாகும்.

தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வருவதற்கு சட்ட மன்றத்தில் மசோதா ஒன்றைத் தாக்கல் செய்யுங்கள். அந்த மசோதாவை ஆதரிக்க நான் தயாராக இருக்கிறேன்" என்றார்.

திரு எம். பக்தவத்சலம் *(26.3.1955):—*

இப்பொழுது விவாதிக்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படைக் கருத்தைப்பற்றி எவ்வித ஆட்சேபணையோ அபிப்பிராய பேதமோ எந்த அங்கத்தினருக்கும் இல்லை. தாய் மொழியில் ஆட்சி நடைபெற வேண்டும் என்பதை யாரும் ஆட்சேபிக்கவில்லை. எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கையே. ஆனால், பல மொழிகள் பேசுகின்ற ஒரு இராஜ்யத்திலே ஒரு மொழியை அரசாங்க மொழியாக்க வேண்டியிருக்கிறது. நம்முடைய தேசத்தைப் பொறுத்த மட்டில், தேசத்தினுடைய அரசியல் அமைப்பு ஐக்கிய முறையில் இருக்கிறதென்பதை எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் மறந்துவிடக் கூடாது. இந்தியாவுக்கெல்லாம் ஒரு அரசாங்க மொழியாக இந்தி மொழி கூறப்படுகின்றது. அது தேசத்தில் பெரும்பான்மையோர்களால் பேசப்படுகின்ற மொழி. இராஜ்யங்களுக்கெல்லாம் அந்த இந்தி மொழி அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்று அவர்கள் சொல்லுகின்ற அபிப்பிராயத்தை நாம் எக்காலமும் ஒப்புக் கொள்ளவில்லை. ஆனால், கான்ஸ்டிடியூஷனில் இடமிருக்கிறது. இந்திய இராஜ்யமானது பல இராஜ்யங்கள் சேர்ந்து இணைக்கப்பட்டதாகும். அது ஒரு ஐக்கிய முறை. அதன்படித்தான் நடந்து வருகிறது. மத்திய அரசாங்கம் அல்லாத இராஜ்யங்களுக்கெல்லாம் இந்திய தேசத்தின் அரசாங்க மொழி இந்தி மொழி. அது ரொம்ப சரியானது. அதற்குச் சட்டமும் இருக்கிறது. ஆனால், ஒவ்வொரு இராஜ்யத்திலும் பெரும்பாலோர் இதை

எதிர்ப்பார்கள். நம் இராஜ்யத்தைப் பொறுத்தமட்டில், அரசாங்க மொழியாக இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டியதுதான். அப்படி இந்தியைக் கற்றுக் கொண்டால்தான் நமக்குரிய பங்கை நாம் அனுபவிக்க முடியும். இந்தியைக் கற்றுக் கொள்வது ஒரு விஷயம். ஆனால், அந்த மொழியைக் கொண்டு நம்முடைய இராஜ்யத்தை நடத்துவது வேறு விஷயம். நம்முடைய இராஜ்ய விவகாரங்களை நம்முடைய தாய் மொழியில் நடத்தினால்தான் நாம் பலனடைய முடியும். அதை உணர்ந்து கான்ஸ்டிடியூஷனில் 345 ஆர்டிகிளிலும், மற்றவைகளிலும் அதற்கு இடம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய இராஜ்யத்திலே இந்தப் பிரச்சினையையெல்லாம் எப்படி எப்பொழுது நடத்துவது என்பதைத்தான் நாம் இப்பொழுது கவனிக்க வேண்டும்.

இப்போது சுதந்திரம் வந்த பிறகு, ஆட்சி மொழியை எப்படி அமைக்கலாம் என்பதுதான் பிரச்சினையாக இருந்து வருகிறது. அதைப்பற்றிக் கவனம் செலுத்தி வருகின்றோம். நான் முன்பே சொன்னேன், இதையெல்லாம் பிரச்சனையாக எடுத்துக் கொள்ள வேண்டாமென்று, ரொம்ப நாளாகவே அதாவது பிரிட்டிஷ் ஆட்சியிலேகூடக் கிராமங்களைப் பொறுத்தமட்டில் அங்கெல்லாம் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே தான் இருந்து வந்திருக்கின்றன. இதையெல்லாம் நான் கிராமங்களில் சென்று பார்த்திருக்கின்றேன். அங்கேயுள்ள முன்சீபு, கணக்குப் பிள்ளை ஆகியோரும் நில ரிக்கார்டுகள் மற்றுமுள்ள ரிக்கார்டுகளை எல்லாம் அன்றிலிருந்தே தமிழில்தான் எழுதி வந்திருக்கின்றார்கள். அதேபோல், கிராமங்களுக்குத் தாசில்தார், ரெவின்யூ இன்ஸ்பெக்டர் முதலானவர்கள் வருவது, வியாபாரம் செய்யப்படுவது போன்ற கணக்குகள் எல்லாம் தமிழில்தான் இருந்து வந்திருக்கிறது. இதெல்லாம் ஒரு கொள்கை அளவிலேயோ அல்லது ஒரு பிரச்சினையாகவோ அன்று கொள்ளவில்லை.

சௌகரியத்தை உத்தேசித்து, அப்பொழுதே கிராமங்களில் பிரயோஜனப்படுத்தி வந்திருக்கிறார்கள். ஆகவே, இதை இன்னும் வற்புறுத்தக்கூடாது என்பதுதான் என்னுடைய எண்ணம். இந்தச் சட்டசபையில் தமிழில் பேசவதைப்பற்றிக் கனம் எதிர்க்கட்சி உபதலைவர் ஆட்சேபிக்கவில்லை என்று சொன்னார்கள். நாங்கள்கூட இப்போது பெரும்பாலும் தமிழில்தான் பேசி வருகின்றோம். பேசுவது எல்லோருக்கும் முடியும். தமிழிலேயே பேசுகின்றபோது, நாங்களும் தமிழிலேயே பதில் பேசுகின்றோம். கேள்வியைத் தமிழில் கேட்டால், நாங்களும் தமிழிலேயே பதில் சொல்லுகின்றோம். தவிர, பெரும்பாலும் தமிழ் பேசப்படுகின்ற விஷயங்களானால், நாங்களும் அதற்குத் தமிழிலேயே பதில் சொல்லுகிறோம். சாதாரணமாக ஆங்கிலத்திலே சொல்லுகின்றோம். சிலர் தமிழிலே பேசுகின்றார்கள். அவ்வாறு பேசுவது பிறருக்குப் புரியவில்லை. ஆகவே, அது ரொம்பத் தவறு என்று கனம் எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் சொன்னார்கள். எது எப்படி என்பது டிரெஷரி பென்ஞ்சியிலுள்ள எங்களுக்குத் தெரியும். ஆனால், நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். எப்படித் தமிழிலே பேசுவதைப் புரிந்து கொள்ள முடியாமல் ஒரு சிலர் இருக்கிறார்களோ, அதைவிட அதிகம் பேர் ஆங்கிலத்திலே பேசினால் ஆங்கிலம் தெரிந்திருந்தாலும் சரிவர புரிந்து கொள்ள முடியாதவர்கள் அதிகம் பேர்கள் இந்தச் சபையில் இருக்கிறார்கள். நான் அவர்களைப் பற்றிக் குறை கூறுவதாக நினைக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். உண்மையை எடுத்துச் சொல்லுகிறேன். எதையும் புரிந்து கொள்ளாமல் நாம் முன்னேறிவிட முடியாது. அதை நாம் கவனிக்க வேண்டும். இப்போது நான் சொல்வதைத் தவறுதலாக நினைக்கக் கூடாது. திரு என்.அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் சற்றுமுன் எதிர்க்கட்சி உபதலைவர் அவர்கள் பேசியதைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆங்கிலம் பேசுவதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை.

ஆகவே, இந்தச் சந்தர்ப்பங்களில் தமிழிலே பேசுவதைத் தவறு என்று சொல்வது சரியல்ல என்று நான் நினைக்கிறேன். நம் அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் ஒரே மாதிரியாகத்தான் நடந்து கொண்டு வருகிறது. ஆனால், பத்திரிக்கையில்தான் ஒவ்வொரு நாளைக்கு ஒரு மாதிரியாக எழுதப்பட்டு வருகின்றது. ஒருநாள் ஒரு பத்திரிக்கையில் 'இன்று தமிழ் சரிந்து விட்டது' என்று வெளியிடப் பட்டிருந்தது. என்ன சரிந்துவிட்டதோ தெரியவில்லை. இது என்ன தமிழோ! யார் சரிந்து விட்டார்களோ தெரியவில்லை. இம்மாதிரியாக ஒவ்வொரு நாளைக்கு ஒரு கொள்கையாக எழுதப்பட்டு வருகின்றது. ஆனால், என்னைப் பொறுத்தமட்டிலும், என்னுடைய சகாக்களைப் பொறுத்த மட்டிலும், இதிலே ஒன்றும் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. அவ்வாறு நாங்கள் எதையும் மாற்றிக் கொள்ளவும் இல்லை. எங்களுடைய ஒரே கொள்கையை அனுசரித்துதான் வருகின்றோம். அதிலே மாறவேயில்லை.

இப்போது கனம் அங்கத்தினர் கஜபதி நாயக்கர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தில், மூன்று ஜில்லாக்களுக்குத் தமிழை நடைமுறைக்குக் கொண்டு வருவதோடு அல்லாமல், செக்ரடேரியட்டுக்கும் அவைகளுக்கும் நடக்கின்ற போக்குவரத்துக்கள் எல்லாம் ஆங்கிலத்திலே இருப்பதற்குப் பதிலாகத் தமிழிலேயே இருக்க வேண்டுமென்று கூறப்படுகின்றது. மூன்று ஜில்லாக்களுக்கு மட்டும் வேண்டுமா அல்லது இன்னும் உள்ள எல்லா ஜில்லாக்களுக்குமே இருக்கட்டுமா என்று சொல்வது மற்றொரு பிரச்னை. இந்தத் தீர்மானத்தை அரசாங்கம் அப்படியே அமுலாக்குவது சாத்தியமா என்பதைப் பார்க்க வேண்டும். எல்லா ஜில்லாக்களுக்கும் தமிழிலே விவகாரங்கள் நடைபெறுவதைச் செய்தாலும் செய்யலாம். ஆனால், ஜில்லாக்களுக்கும் செக்ரிடேரியட்டுக்கும் இடையே தமிழிலே கடிதப் போக்குவரத்துக்கள்

செய்வதென்றால், இது பொதுமக்களைப் பொறுத்த விஷயமல்ல. கலெக்டரோ, என்ஜினியரோ, மற்ற ஆபீசர்களோ செக்ரடேரியட்டிலிருக்கும் செக்ரடாரிகளுக்கு எழுதும் கடிதப் போக்குவரத்துக்கள் பொதுமக்கள் சம்பந்தப்பட்டதல்ல. சாதாரணமாக, எக்ஸிகியூடிவ் என்ஜினியர், சூபரிட்டென்டென்ட் என்ஜினியர் ஆகியோர் சீஃப் என்ஜினியர் அவர்களுக்கு அலுவலக விஷயங்களைத் தமிழில் எழுதினால், அது பொதுக்களுக்குச் சம்பந்தமில்லை. இப்போது நாம் இந்த மாதிரியான முறைகளில் அனுபவ சாத்தியமாகத் தமிழை ஆட்சி மொழியாகச் செய்ய முடியுமா என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் கொள்கைப் பிரச்சினையாக இதைக் கருதக்கூடாது. பொதுமக்களிடத்தில் பேசுவதற்கு உதவுமே ஒழிய, அனுபவ முறையில் இது இப்போது கஷ்டமாகும். ஒரு என்ஜினியரோ, கலெக்டரோ அல்லது ஒரு அதிகாரியோ செக்டேரி யட்டிலிருக்கும் சீஃப் செக்ரட்டரிக்குத் தமிழிலே கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதென்றால், அவர்களுக்கு சாத்தியப்படாது. அந்த நிலையில்தான் இன்று அவர்கள் இருக்கிறார்கள். நம்முடைய கனம் அங்கத்தினரோ சில வேளைகளில் உற்சாகமாகப் பேசுவதற்கு ஆங்கிலத்தில் பேசினால்தான் ரொம்ப எஃபக்டிவாக இருக்குமென்று சொல்லிப் பேசுகிறார்கள். இப்படிப் பேசும்போது, என் வாயிலேயே ஆங்கிலச் சொல்தான் வருகிறது. அதை விட்டுவிட்டு அதிகாரிகள் எல்லாம் செக்ரட்டேரியட்டுக்குத் தமிழிலேயே கடிதப் போக்குவரத்துக்கள் வைத்துக் கொள்வதென்றால், அது எவ்வளவு தூரம் இன்றைக்கு முடியுமென்பதைப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்வதால், இன்றைக்கிருக்கும் நிருவாக இயந்திரத்தை ஒழுங்காக நடைபெறச் செய்யமுடியுமா? திறம்படச் செய்ய முடியுமா? அப்படிச் செய்தால் எவ்வளவு கஷ்டங்கள் ஏற்படும், அது எவ்வளவு தூரம் சாத்தியப்படும் என்பதையெல்லாம் கவனிக்க வேண்டும்.

திருச்சிராப்பள்ளியில் ரொம்ப நாளைக்கு முன்னரே அதாவது 5 ஆண்டுகளுக்கு முன்பே, அப்போது இருந்த அரசாங்கத்தால் அந்த ஒரு ஜில்லாவில் மட்டும் முதலில் தமிழில் அந்த ஜில்லாவிற்குள்ளேயே கடிதப் போக்கு வரத்துக்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு ஜில்லாவிலும் அங்குள்ள விவகாரங்களை எல்லாம் அந்தந்தப் பிராந்திய மொழியிலே நடத்த ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடுதான் திருச்சிராப் பள்ளியிலும், ஆந்திராவில் கீழ்க் கோதாவரியிலும் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது இன்னும் திருச்சியில் பரீட்சார்த்த நிலைமையிலிருப்பது ரொம்பவும் விசனிக் கத்தக்கது. இதுவரையில் அங்கு நடைபெற்று வந்திருக்கும் முறையும் திருப்திகரமாகவே இல்லை. இன்னும் வசதிகள் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகத்தான் சொல்லப்பட்டு வருகிறது. அவர்களால் ஏற்படுத்தப் பட்டிருக்கும் சில தமிழ்ப் பெயர்கள் என்னால் ஞாபகம் வைத்துக் கொள்ளக்கூட முடியவில்லை. சிலர் ஞாபகம் வைத்துக் கொண்டு கூறலாம். ஆனால், என் நினைவுக்கு வரக்கூடியதாய் அந்த வார்த்தைகள் இல்லை. அங்கிருக்கும் கலெக்டர் தமிழர்தான். இருந்தாலும், இம்மாதிரியான புதுப் பெயர்களை எல்லாம் நினைவு வைத்துக் கொள்வது என்றால் சற்றுக் கடினம்தான். அதைத்தவிர மற்றொரு கஷ்டம் என்னவென்றால், திருச்சிராப்பள்ளி ஜில்லாவைப் பொறுத்தவரையில் ஒருவர் ஒரு ஆங்கிலச் சொல்லுக்கு ஒரு அர்த்தத்தை உபயோகப்படுத்தி வரலாம். இருவருக்கும் இடையே அந்த வார்த்தைக்கு அர்த்தம் புரிந்து கொள்ள முடிவதில்லை. நாம் இப்போது தமிழை நடைமுறைக்குக் கொண்டு வர முயற்சிப்பதெல்லாம், சாப்பிடுவதற்கோ அல்லது மற்ற வேறு எதற்கோ அல்ல. ஒருவருக்குள் ஒருவர் அர்த்தத்தை, எண்ணத்தைச் சுலபமாக வெளியிட்டுக் கொள்வதற்காகவே. ஆகவே, இந்த மாதிரியான கஷ்டங்களும் ஏற்படும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

பிறர் வெளியிடும் கருத்தானது நாம் புரிந்து கொள்ளக் கூடிய முறையில் அமைந்திருக்க வேண்டும். புதியதாக வார்த்தைகளைச் சிருஷ்டிக்க வேண்டுமென்று சிலர் கூறினார்கள். அவ்வாறு சிருஷ்டிக்க வேண்டிய அவசியமும் இல்லையென்று நான் கருதுகிறேன். சிலர் ஆங்கிலம் வளர்ந்திருப்பதாகக் கூறினார்கள். பிரிட்டிஷ் ஆட்சியானது இவ்வளவு நாள் இருந்து கொண்டு வந்த காலத்திலுங்கூட, தாசில்தார் உஷுர், செரிஷ்தார் ஆகிய வார்த்தைகள் அப்படியே இருந்து கொண்டுதான் வந்தன. அவைகளுக்கு எல்லாம் புது வார்த்தைகள் சிருஷ்டிக்க வில்லை. அதையே நாமும் பின்பற்ற வேண்டியதாகத்தான் இருக்கும்.

இப்போது கனம் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், இந்தத் தீர்மானம் கொண்டு வருவதால் பயனில்லை; சட்டம் கொண்டு வரவேண்டும் என்று சொன்னார்கள். 345 ஆர்டிகிள்படி இதற்கு ஒரு சட்டம் செய்ய வேண்டுமானால் அதை மாற்ற வேண்டும். அதைத் தவிர இந்தப் பக்கத்தில் இருக்கக் கூடிய கனம் அங்கத்தினர் அண்ணாமலைப் பிள்ளை அவர்கள், இந்தத் தீர்மானம் இருக்க வேண்டியது தான்; ஆனால், மூன்று ஜில்லாக்களுக்கு என்று இல்லாமல், ஏன் எல்லா ஜில்லாக்களுக்குமே என்று இருக்கக் கூடாது என்று சொன்னார்கள். இப்போது சட்டம் கொண்டு வர வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால், திடீரென்று ஒரு சட்டம் செய்ய வேண்டுமானால், அது எவ்வளவு தூரம் முடியும்? அதை எவ்வளவு தூரம் நிறைவேற்றலாம் என்பதைப் பற்றியும் கவனிக்க வேண்டும். இதையெல்லாம் தெரிந்து கொள்ளாமல் சட்டம் செய்வதால் பயனில்லை. மற்றொருவர், இப்போது இது வரையிலுமே ஐந்து வருஷமாகிவிட்டதே, இன்னும் ஏன் தமிழ் ஆட்சி மொழி செய்யாமல் இருக்கிறார்கள் என்று கூறுகிறார்கள்.

வாஸ்தவம் தான். ஆனால், மற்றொன்று. இந்தியாவைப் பொறுத்தமட்டில், மத்திய அரசாங்கத்தார் கான்ஸ்டிடியூஷனில் பெரும்பாலோர் பேசுகின்ற இந்தி மொழியை ராஜாங்க மொழியாகச் செய்ய வேண்டுமென்று ஒரு ஆர்டிகிள்ஸ் சட்டம் ஏற்பாடு செய்து, 15 வருஷங்களில் அமுலுக்குக் கொண்டு வர வேகமாக வேலை செய்து வருகிறார்கள். வேகம் இருப்பது இயற்கை. அதைப் பற்றி நாம் குறை கூற முடியாது. பதினைந்து வருஷத்திற்குள் அமுலுக்குக் கொண்டு வர, இப்பொழுதே அவர்கள் ஆரம்பித்து நடத்தி வரலாம். நாமும் அப்படி இப்பொழுதே ஆரம்பித்து விட்டாலும் கூட, அந்தக் காலத்திற்குள் நல்ல முறையில் செயலாற்ற முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. ஐயம்தான் ஏற்படுகின்றது. பதினைந்து வருஷம் பொறுத்துப் பார்த்தாலுங்கூட, இந்திய அரசாங்கத்திலிருந்து எல்லாக் கடிதப் போக்குவரத்துக்களும் இந்தியிலேயேயே வந்தாலுங்கூட, அது நமக்கு ரொம்ப சிரமத்தைத்தான் அளிக்கும். எவ்வளவு முயன்று கற்றாலும், நம்முடைய பங்கைச் சரியான முறையில் அளிக்க முடியாது. இன்னுமுள்ள 10 வருஷங்களிலே அதற்குத் தயாராக மாட்டோம். ஆகவே, நாம் இன்னும் காலம் கொடுக்க வேண்டுமென்றுதான் கேட்க வேண்டியிருக்கும். மத்திய அரசாங்கத்திலே கான்ஸ்டிடியூஷனிலே சட்டம் செய்தாலும், நாம் இன்னும் கொஞ்ச காலம் ஆகுமென்று சொல்லி, அதுவரை நமது பங்கைக் கொடுக்க முடியாது என்று சொல்லித் திருத்த வேண்டிதான் வரும். அப்படித்தான் கொடுக்க வேண்டியிருக்குமென்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். ஆகவே, அதை அடிப்படையாகக் கொண்டுதான் நம்முடைய இராஜ்ய விவகாரத்தையும் பார்க்க வேண்டும்.

அவசரப்பட்டுச் செய்தால், எந்தக் காரியமும் பாதிக்கப்படும். இதை நன்கு உணர வேண்டும். அப்படி நிதானமாகச் செய்யாவிடில் சிரமங்களே உண்டாகும்.

ஒழுங்காக எல்லோரும் பலனடையக் கூடிய முறையில் காரியங்களைச் செய்ய வேண்டுமானால், இன்னும் கொஞ்சம் அதிகக் கவனம் செலுத்த வேண்டும். திருச்சிராப் பள்ளியில் நடைமுறையில் எவ்வளவு தூரம் நடை பெறுகின்றது என்பதைப் பார்ப்பதற்காக முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. அது எந்த அளவில் இருக்கின்றது என்பதைப் பார்க்க வேண்டும். அதை முதன் முதலில் நல்ல முறையில் நடைபெறச் செய்ய வேண்டும். அதுவே என்னுடைய யோசனையாகும். இப்போது இன்னும் சில ஜில்லாக்களுக்கு இதை அமுல் செய்ய வேண்டுமென்று கனம் அங்கத்தினர் கஜபதி நாயக்கர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் தீர்மானம் இங்குக் குறிப்பிடத் தக்கது. இன்னும் சில ஜில்லாக்களுக்கு அல்லாமல், எல்லா ஜில்லாக் களுக்குமே அந்தந்தப் பிராந்திய மொழிகளிலே தமிழிலும் மலையாளத்திலும் நடத்தப் பார்க்கலாம். ஆனால், அதைத் தொடங்குவதற்கு முன் திருச்சியை முதலில் சரிப்படுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் முக்கியம். அதற்கு இங்குத் திருச்சியைச் சேர்ந்த கனம் அங்கத்தினர் நாராயணசாமிப் பிள்ளை அவர்கள் இருக்கின்றார்கள். அவர் நாளை முதற்கொண்டு கொஞ்சம் இதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். நாளைக்கு நானும் திருச்சிக்குப் போகிறேன் அவரும் திருச்சிக்கு வருவார். இனிமேல் சட்டசபையும் அதிகம் இருக்காது. ஆகவே, அவர் தீவிர கவனம் செலுத்தவும் வசதியாக இருக்கும். கலெக்டருடன் பேசி அதற்கு ஆவன செய்யலாம். நானும் அதுபற்றிக் கலெக்டருக்குச் சொல்லுகிறேன். இரண்டொரு மாதங்களில் கனம் அங்கத்தினர் அக்கறை செலுத்திப் பரீட்சார்த்தமாகச் சரிவர நடைபெறுவதற்கு என்ன வழிவகைகள் என்பதை முடிவு செய்தால், அதை அப்படியே அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். அவ்வாறு செய்யும் வரை பொறுத்திருந்து பார்த்து பிறகு வேறு ஜில்லாக்களுக்கும் செய்யும் யோசனை பற்றிப் பார்க்கலாம். அவ்வாறு முதலில் செய்துகொண்டு

பின்னர் மற்ற ஜில்லாக்களுக்கு எவ்வளவு சீக்கிரத்தில் இந்த இராஜாங்க மொழியைக் கொண்டு வர முடியுமோ, அதற்கான முயற்சிகளைச் செய்யலாம். ஆகவே, இதையெல்லாம் பார்ப்பதற்கு இதை ஒருபடியாக வைத்துக் கொள்ளலாம். பிறகு அதைக் கொண்டு முன்னேறலாம். பிரஜைகளுக்கு, அதாவது இந்த நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்பதுதான் இந்த அரசாங்கத்தினுடைய எண்ணமும். ஆகவே, அவர்களுக்கு எவ்வளவு தூரம் நன்மை செய்ய முடியுமோ, அவ்வளவு தூரம் இதைப் பார்த்துக் கொண்டு நன்மை செய்யலாம். ஆகவே, இந்தத் தீர்மானத்தை மேலும் வற்புறுத்தாமல், கனம் அங்கத்தினர் அவர்கள் வாபஸ் வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

திரு கஜபதி நாயக்கர் அவர்கள் (26.3.55):—

‘‘என் மதிப்பிற்குரிய நண்பர் டாக்டர் ஜான் முதலடியாகத் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று சட்டத்தைப் படித்தார். அதன் பேரில் திட்டங்களை வகுக்க வேண்டுமென்றார். சட்டத்தை நாமும் அறிவோம். அதனை உணர்ந்தோம்; உணர்ந்துதான் தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று இந்தச் சட்டசபையில் ஒரு மசோதா ஏற்கனவே கொண்டு வந்தேன். அப்போது அதனை நமது மாகாணத் தலைவர் அவர்களே தடுத்து விட்டார்கள். ஆயினும், அது இப்பொழுதும் உயிருடன்தான் இருக்கிறது. அப்போது நான் தனியனாய் இருந்தே வாதித்தேன். காலம் துணை செய்யவில்லை. அந்தக் காலத்தில் தமிழ் ஆட்சி மொழியாகக் கொண்டு வரக்கூடாது என்று சொன்னார்கள்.

தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருந்தால், எல்லா நடவடிக்கைகளும் தமிழ் மொழியிலேயே நடைபெறும். அதற்காகத் தான் இப்பொழுது மூன்று ஜில்லாக்களுக்கும் சென்னைவாழ் செக்ரடேரியட்டிலும் தொடர்பு ஏற்படுத்த

வேண்டுமென்று இந்தத் தீர்மானத்தின் மூலமாகக் கேட்கிறேன். ஆட்சி மொழியாக வேண்டும் என்பதுதான் எல்லோருடைய அவா.

ஒரு ஆணும் ஒரு பெண்ணும் மணம் செய்து கொண்டால்தான் குடும்ப வாழ்க்கையை நடத்துவதாக அர்த்தம். அதுபோல் ஒரு இராஜ்யத்தை ஆண் என்றும், மொழியைப் பெண் என்றும் வைத்துக் கொண்டு இராஜியத்திற்கும் மொழிக்கும் தொடர்பு ஏற்பட்டால்தான் ஆட்சி ஒழுங்காக நடைபெற முடியும். தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்று மசோதா கொண்டு வந்தபோது, நான் ஒருவனே தனியனாய்ப் பேசினேன். யாரும் அதற்கு ஆதரவு கொடுக்கவில்லை.

கவர்னர் பெருமான் தமது பிரசங்கத்தில்கூட, தமிழ் மொழி ஆட்சி பற்றி ஒன்றும் சொல்லவில்லை. அந்தச் சமயத்தில் நான் வருத்தம் தெரிவித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்தேன். அப்பொழுது அதை வாபஸ் வாங்கிக் கொள்ளுங்கள் என்று சொன்னார்கள்.

இப்பொழுது நாடோடித் தமிழ் வேண்டும் என்று சொல்கிறார்கள். நான் ஆங்கிலம்தான் படித்து உத்தியோகம் வகித்தேன். தமிழ் ஓரளவுதான் படித்திருக்கிறேன். ஆனால், தமிழில் உள்ள ஆர்வத்தினால் இப்பொழுது நன்கு தமிழைப் படித்தும், அதைப்பற்றிப் பேசியும் வருகிறேன். நான் இப்பொழுது என்ன சொல்லுகிறேன் என்றால், சட்டம் செய்யாது இந்தக் காலத்தில் திட்டம் ஒன்றும் செய்து விட முடியாது. அது என்றைக்கும் இழுக்கு உண்டாக்கும். ஏற்கனவே திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் நடவடிக்கைகள் தமிழில் இருக்க வேண்டும் என்று திட்டம் செய்திருக்கிறார்கள். அது ஒழுங்காக நடக்கிறதா என்பது தான் இப்பொழுதுள்ள கேள்வி. திருச்சியில் திட்டமாக அங்கு என்ன வேலைகள் நடந்து

இருக்கின்றன. திட்டம் வகுக்க வேண்டுமென்று கனம் ஓ.பி.இராமசாமி ரெட்டியார் அவர்கள் சொன்னார்களே, அதற்கெல்லாம் என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? கனம் மந்திரி அவர்கள் மனதில் கை வைத்துச் சொல் வார்களா? அப்படியிருந்தால் 100 ஆண்டுகள் ஆனாலும் தமிழ் வராது. திருச்சிராப்பள்ளியை எடுத்துக் கொண்டால், அங்கே ஒரு கலெக்டர் ஒரு குமாஸ்தாவைப் பார்த்துப் பரிகாசமாக, 'வாங்க ஒட்டக்கூட்டரே' என்று அழைப்பார். மற்றொருமுறை, 'வாருங்கள் புகழேந்திப் புலவரே' என்று அழைப்பார்; பரிகாசமாகப் பேசுவார். இப்படி நிகழ்ந்தால் தமிழ்மொழி எப்படி வளரும். இந்த மாதிரியாகத் தான் தமிழைத் தமிழரல்லாதார் அவமானப்படுத்துகிறார்கள். இது ஒருபுறம் இருக் கட்டும். நான் தமிழ் மொழியே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று ஒரு மசோதா கொண்டு வந்த சந்தர்ப்பத்திலே அதை வேண்டாமென்று தடுத்தார்கள். அதனை உடனடியாகக் கொண்டு வர முடியாது என்று சொன்னார்கள். இப்பொழுது திருச்சியில் ஐந்து ஆண்டுகளாகப் பரிசீலனை செய்த திட்டம் இன்னும் சரியாக நடைபெறுவதாகத் தெரியவில்லை. அங்கேயும் சபடேஜ் (sabotage) செய்து வைத்திருக்கிறார்கள்.

நல்ல தமிழன் இதைக்கண்டு சும்மா இருப்பானா? ஆனால், கனம் பக்தவச்சலம் அவர்களுக்குத் தமிழில் ஆர்வம் இல்லை என்று நான் சொல்லவில்லை. ஆர்வம் உண்டு. ஆனால், இதில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்பதுதான் எனக்குப் புரியவில்லை. திருச்சிராப்பள்ளியில் கொண்டு வந்திருக்கும் திட்டம் ஏதாகிலும் முன்னேற்றம் அடைந்ததா? உண்மையில் அதனை முன்னுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம்கூட இருப்பதாகத் தெரியவில்லை. எதை எப்படிச் செய்தால் பயன் அடையலாம்; முன்னுக்குக் கொண்டு வரலாம் என்று புரிந்து கொள்ளவுமில்லையே! திருச்சிராப்பள்ளியில் தமிழ் ஆட்சி மொழியாக

நடைபெறுகிறது என்று சொல்லிக் கொண்டு குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஓர் இடத்திலேயே பரீட்சை செய்து கொண்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். தமிழை உண்மையாக நாட்டு மொழியாகச் செய்ய வேண்டுமானால், சென்னை வாழ் செக்ரடேரியட்டில் அது புகுத்தப்பட வேண்டும். அப்போதுதான் தமிழ், நாட்டு மொழியாக முடியும். அப்போது தமிழின் செல்வாக்கும் அதிகமாகும். அதைத்தான் இந்தத் தீர்மானத்தில் வற்புறுத்துகிறேன். இந்தத் தீர்மானத்தில் இடையூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. நான் சட்டம் வகுக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஒரு திட்டம் போடுங்கள் என்றுதான் சொல்லுகிறேன். உங்கள் இஷ்டம் போல் ஒரு கால வரை ஏற்படுத்துங்கள் என்றுதான் கேட்கிறேன். எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று கால அளவு சொல்லுங்கள் என்றுதான் கேட்கிறேன். நாம் சுதந்திரம் அடைவதற்குக்கூட மௌண்ட் பாட்டனிடம் ஒரு கால அளவைக் கேட்டு வாங்கிக் கொண்டதினால்தான் அந்தக் குறிப்பிட்ட காலத்தில் சுதந்திரத்தைப் பெற முடிந்தது. அதைத்தான் செய்யும் படி கேட்டுக் கொள்கிறேன். மக்களைக் கலந்து செய்யுங்கள். இதற்காக அரசியலார் தயங்கக் கூடாது; தயங்கவும் மாட்டார்கள். அவர்கள் கட்டாயம் கொண்டு வருவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அந்த ஒரு நம்பிக்கை கொடுத்தால், நான் கொடுத்த தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறேன்.

தமிழ் வரவேண்டுமென்று பேசுகிறார்கள். பேசிப் பிரயோஜனமில்லை. நன்றாக உணர்ச்சியோடு தமிழ் மக்களின் எண்ணத்தில் பரவச் செய்வதற்கு ஏற்ற முயற்சி எடுக்க வேண்டும். அந்த முயற்சி எடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகுமென்று திட்டம் வகுக்க வேண்டும். இந்திய அரசியலார் கூட 15 வருஷத்திற்குள் இந்தியை அரசாங்க மொழியாகக் கொண்டு வர வேண்டுமென்று ஒரு திட்டம்

வகுத்திருக்கிறார்கள். ஆனால், நம்முடைய தமிழைப் பொறுத்த வரையில் என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்? திடுமென்று ஆட்சிமொழியாக வேண்டுமென்றால், அப்பொழுது என்ன செய்யப் போகிறார்கள்? தமிழை ஆட்சிமொழி ஆக்குவதற்கு முன் அதற்கு வேண்டிய முன் ஏற்பாடுகளைச் செய்தார்களா? இந்தியை வளர்ப்பது போல் தமிழை வளர்க்காமல் சும்மா இருந்துவிட்டுத் திடுமெனத் தமிழை ஆட்சி மொழியாகச் செய்ய வேண்டுமென்று சொல்வதில் பயன் இல்லை. அதை உணர்ந்துதான் ஸ்ரீ அண்ணாமலைப் பிள்ளை அவர்கள் எல்லா ஜில்லாக்களிலுமே தமிழ் உடனடியாகக் கொண்டு வருவதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

கனம் பக்தவத்சலம் அவர்களும் திருச்சிக்குப் போவதாகச் சொன்னார்கள். போகட்டும்; ரொம்பவும் சந்தோஷம். உண்மையாக நல்ல முயற்சி எடுத்துக் கொள்ளுங்கள். நான் அதை வரவேற்கிறேன். முயற்சி செய்தால்தான் எதையும் செய்ய முடியும். கற்றுக் கொண்டால் எல்லாம் வரும். நானும் கொஞ்ச நாட்களாக அக்கறை எடுத்துக் கொண்டு இப்பொழுது கற்றுக் கொள்வதால்தான் ஓரளவு பேச முடிகிறது. அதற்குமுன் நானும் ஆங்கிலத்தில்தான் பேசி வந்தேன். ஆகவே, முயற்சி வேண்டும். இதற்கெல்லாம் ஒரு முடிவான எண்ணம் வேண்டும். இது மாதிரியாக ஏன் சொல்லுகிறேன் என்று சொன்னால், சமீபத்தில் ஆந்திர தேசத்தில் ஒவ்வொரு ஆபீசருக்கும் ஓர் அகராதியைக் கொடுத்து, அதிலுள்ள சொற்களைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் அவ்விதம் செய்யும் போது, நாம் ஏன் செய்யக் கூடாது? அந்த அளவுக்கு நம் மனம் மாற வேண்டும். அதற்கான முயற்சிகள் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் ஒழிய, எந்தக் காரியமும் செய்ய முடியாது. இதையெல்லாம் என் போன்றவர்களால் செய்ய

முடியாதுதான். ஆனால், அதிகாரத்தில் இருக்கிறவர்கள் உறுதியாகச் செய்ய முடியும். அப்படிக் கனம் மந்திரியார் அவர்கள் ஓர் உறுதியளித்தால் நான் வாபஸ் வாங்கிக் கொள்ளுகிறேன்" என்றார்.

ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்ட திரு சி. கந்தசாமி ஆற்றிய உரை, (2.8.55):—

"பாஷைப் பிரச்சினையானது மிக முக்கியமானதாக இருக்கிறது. அது சம்பந்தமாக வாதப் பிரதிவாதங்கள் இருக்கின்றன என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த ஆட்சியாளர்கள் சமீபத்தில் தமிழ்ப்பாஷையைக் கலாசாலைகளில் போதனா பாஷை ஆக்குவதற்கு ஆரம்ப நடவடிக்கை எடுத்துக் கொண்டதைப் பாராட்டுகிறோம். அத்துடன் நின்றுவிடாமல், அரசாங்கத் துறையிலும், ஜில்லா நிருவாகம், சட்டசபை நடவடிக்கைகள் ஆகிய பலதரப்பட்ட துறைகளிலும்கூட தமிழ்ப் பாஷையும், இதர பிரதேச பாஷைகளும் கையாளப்பட வேண்டும். அந்த முறையில் அரசாங்கத்தார் போதிய முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்தி சம்பந்தமாக ஒரு பெரிய அதிருப்தியும் நிலவுகிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இந்தியாவுக்கு என்று ஒரு பொது பாஷை இருக்க வேண்டியது அவசியம் என்பதையும், அம் மாதிரி வருவதற்கேற்ற முறையில் இந்தி பாஷைக்கு வாய்ப்பு இருக்கிறதென்பதையும், அதற்கான வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பதை ஒத்துக் கொண்டாலும், எந்த ரூபத்திலும் இந்தியானது நம் நாட்டில் பலவந்தமாகத் திணிக்கப்படக் கூடாது. பள்ளிக் கூடங்களிலும் கல்லூரிகளிலும் அகில இந்திய சர்வீஸ் சம்பந்தமாகவும்கூட ஒரு காலம் வரையில் இந்தி பாஷை கட்டாயம் திணிக்கப்படக் கூடாது. ஒவ்வொரு

பிரதேசத்திலும் அந்தந்தப் பிரதேச பாஷை வளர்ச்சி அடைந்தாலும், அகில இந்தியாவுக்கும் ஒரு பொது பாஷை இருக்க வேண்டியதன் அவசியத்தை எல்லோரும் உணருகிறார்கள். அந்தந்தப் பிரதேச பாஷை வளர்ச்சியடைந்தால்தான் அகில இந்தியாவுக்கும் உள்ள பொது பாஷை வளர்ச்சியடைய முடியும். அம்மாதிரி நிலையில்தான் இந்தியாவுக்கும் ஒரு பொதுபாஷை அவசியம் என்ற உணர்ச்சி மக்களிடையே ஏற்பட்டு, அந்தப் பொது பாஷை இயற்கையாகவே வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்தியானது அகில இந்திய பாஷையாக வருவதற்கு இயற்கையான வாய்ப்புகள் இருக்கும்போது, அதற்கு நேர்மாறாக இந்தியைப் பலவந்தமாகப் புகுத்தக் கூடிய எந்தவிதமான நடவடிக்கையும் இந்தி பொது பாஷையாக வருவதற்கே குந்தகமான வழியில் கொண்டு போய் விடும் என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

*திரு பி. அரங்கசாமி ரெட்டியார் (ஆளுநர் உரை)(2.8.55):—*

"சமீபத்தில் 2 வார காலமாகத் தென்னாட்டில் ஒரு பெரிய புரட்சிகரமான செய்தி பரவி வந்தது. இந்தி மொழியை எதிர்ப்பதின் அறிகுறியாக 1.8.1955—இல் தேசியக் கொடியை எரிப்பது எனத் திராவிடக் கழகத்தார் முடிவு செய்து ஒரு பெரிய கிளர்ச்சி செய்து வந்தார்கள். கிளர்ச்சியின் காரணமாக நம்து முதன் மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்ருக்கிறார். அந்த அறிக்கையில் பல பகுதிகள் இருந்தாலும், ஒரு முக்கியமான விஷயமும் இருக்கிறது. அந்தந்த இராஜ்யத்தைப் பொறுத்த வரையில் மொழிப் பிரச்சினை சட்டசபையின் கையில் இருக்கிறது. அரசியல் சட்டத்தில் 345—ஆவது பிரிவில் மாகாணச் சட்டசபை எவ்வாறு தீர்மானிக்கிறதோ அந்த மாதிரி அந்தந்த இராஜ்யத்தில் மொழியானது ஆட்சி மொழியாக நிலவி வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, நம்முடைய

சட்டசபையில் இன்னும் அந்த மாதிரி அதிகார பூர்வமாகத் தீர்மானம் செய்யப்படவில்லை. கன்னடம், மலையாளம் பேசுகிற பகுதிகளும், நம் இராஜ்யத்தில் இருப்பது காரணமாக அவ்வாறு செய்யப்படாமல் இருக்கலாம். ஆந்திர இராஜ்யம் இயங்குவது போல் நம்முடைய தமிழ்நாடு தனியாக இயங்க வேண்டுமானால், இப்பொழுது இருக்கும் சூழ்நிலை அதற்கு மாறாக இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆந்திராவில் தெலுங்கு ஆட்சி மொழியாகவில்லையென்றும், ஆட்சிமொழியாக்கத் தீர்மானம் செய்து கொள்ளவில்லையென்றும் கனம் நிதி மந்திரி அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு என்ன அர்த்தம்? அது மாதிரி நாமும் இருக்க வேண்டுமா? இந்தியைப் பொறுத்துச் சொல்வேறு, செயல்வேறு என்று இல்லாமலிருந்தால்தான், இந்த மாதிரி unpleasant கிளர்ச்சிகள் இல்லாமல் இருக்கும்.

10, 15 நாட்கள் கிளர்ச்சி இருந்திருக்கிறது. இது பெருமைப் படக்கூடிய விஷயமல்ல. தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமானால், அதற்கு விரோதமான செயல்கள் இருக்கக் கூடாது. இப்பொழுது கார்டு, கவர் முதலியவைகளில் பூராவும் இந்தி. மணியார்டர் பாரங்களை பி.ஏ. படித்தவர்கள்கூட வாங்கிப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் இருக்கின்றன. ஏனென்றால் form கள் இந்தியில் இருக்கின்றன. இப்பொழுது இந்தியில் இருக்கின்றன. இப்பொழுது இந்தி ஏகாதிபத்தியத்தை நாட்டில் நிலை நாட்ட ஏற்பாடு செய்து வருவதாகத் திராவிடக் கழகத்தார் சொல்வது உண்மை என்று நம்பும்படியாக இருக்கிறது. அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருப்பது அந்தந்த இராஜ்யத்திலுள்ள மொழியோ இந்தி மொழியோ இராஜ்ய சர்க்கார் மொழியாக இருக்கலாம் என்பது. ஒரு இராஜ்யத்திற்கும் இன்னொரு இராஜ்யத்திற்கும்

இடையேயோ மத்திய சர்க்காருக்கும் மாகாண சர்க்காருக்கும் இடையேயோ கடிதப் போக்குவரத்து இந்தியிலோ வேறு பாஷையிலோ (இங்கிலீஷ்) வைத்துக் கொள்ளலாமென்று இருக்கிறதேயொழிய ஒரு இராஜ்யத்தில் அவசியம் இந்தி ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற விதமான யாதொரு விவரமும் அரசியல் சட்டத்தில் இல்லை. ஆகவே, 345—ஆவது பிரிவை மனதில் வைத்துக் கொண்டால், நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தமட்டில், தமிழ் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். இந்த நாட்டிலுள்ளவர்கள் தமிழ் மொழியில் பயிற்சி பெற ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய இராஜ்யத்திற்கும், இன்னொரு இராஜ்யத்திற்கும் அல்லது மத்திய சர்க்காருக்குமுள்ள கடிதப் போக்குவரத்துக்கு மாத்திரம் இந்தியில் இருந்தால் போதுமென்று இருக்க வேண்டும். எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் மாணவர்கள் கட்டாயமாக இந்தி படிக்க வேண்டும். இந்தி பாடம் optional ஆக இல்லாமல் பிடித்தாலும் பிடிக்கா விட்டாலும் படிக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கப்படாது. இந்தியைக் கட்டாயமாய்ப் போதித்து அதை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டுமென்ற ஏற்பாடு இல்லையென்று சொல்கிறார்களேயொழிய தமிழ் ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு இப்போது எவ்வித ஏற்பாடுகளும் செய்யப்படவில்லை. மற்றப் பிரதேசங்கள் பிரிந்த பிறகு ஏற்பாடு செய்து கொள்ளலாமென்று சொல்வது பொருந்தாத விஷயம் என்றார்.

திரு பி.ஜீவானந்தம் *(ஆளுநர் உரை) (3.8.55):—*

அடுத்த பிரச்னை நான் இங்கே குறிப்பிட வேண்டியது இந்த இராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு பகுதி மக்களையும் கவர்ந்து இருக்கக் கூடிய பிரச்னை. அதாவது, இந்த இராஜ்யத்தின் ஆட்சி மொழி, இந்த இராஜ்யத்தின் கல்லூரிகளில் இருக்க வேண்டிய போதனா மொழி. இதைப்

பற்றி ஒரு வார்த்தைகூட கவர்னர் உரையில் குறிப்பிடப் படாமல் இருப்பது வருந்தத்தக்கது. ஒவ்வொரு இராஜ்யத் தின் ஆட்சி மொழியும் அந்தந்த நாட்டு மொழியாகத்தான் இருக்க வேண்டுமென்று எல்லோரும் உணர்கிறார்கள். ஆகவே, நம் இராஜ்யத்திலும், நம் நாட்டு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும். இது நமக்கு மிகவும் தேவை. நாட்டு மொழியே ஆட்சிமொழியாக வேண்டு மென்று சொன்னால், நான் இந்த இராஜ்யத்தின் ஆட்சி மொழி தமிழாகத்தான் இருக்க வேண்டுமென்று கருது கிறேன். தமிழ் மட்டுமல்ல. கன்னடியர்களும், மலையாளி களும் நம் இராஜ்யத்துடன் இருக்கும் வரையில் கன்னடமும், மலையாளமும்கூட நம் இராஜ்ய ஆட்சிமொழியாகவே இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். உலகம் முழுவதும் எப்படி இருக்கிறதென்றும் நாம் பார்க்க வேண்டும். எந்த வேறு நாட்டையும் நான் உதாரணமாகக் காட்டவில்லை. சோவியத் யூனியனுக்கோ சீனாவுக்கோ நான் யாத்திரை செய்ய விரும்பவில்லை. ஐரோப்பாவில் சுவிட்ஜர்லாந்தை எடுத்துக் கொண்டால், 60 லட்சம் மக்கள் வசிக்கிறார்கள். அவர்களில் இத்தாலியர்கள், பிரஞ்சுக் காரர்கள், ஜெர்மானியர்கள், சுவிஸ்காரர்கள் ஆகிய நான்கு தேசத்தவர்களும் இருக்கிறார்கள். அந்த நாட்டில் ஜெர்மன், சுவிஸ், பிரெஞ்சு, இத்தாலி ஆகிய நான்கு பாஷைகளும் வழங்கப்படுகின்றன. நான்கு தேசத்து மக்கள், நான்கு தேசத்து மொழிகள் வழங்கப்படுகிற அந்த நாட்டிலே நான்கு மொழிகளும்தான் ஆட்சி மொழியாக இன்றைக்கு வழக்கில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தக் குரல் கேட்கும் நாட்டு மக்கள் ஊக்கமும் உற்சாகமும் பெறுவதற்கு மிகவும் வசதியாக இருக்கும். ஆகவே, நாட்டு மொழி ஆட்சி மொழியாக்கப்பட வேண்டியது மிகவும் அவசரமான பிரச்னை. ஆட்சி மொழியாக நாட்டு மொழியை ஆக்க முடியாது என்பதற்கு ஏற்கனவே சொல்லி வந்த காரணங்களையே திருப்பித் திருப்பிச் சொல்லி இதனை

இனியும் தட்டிக் கழிக்கக் கூடாது.

இனி இந்தியா பூராவையும் எடுத்துக் கொண்டு பார்த்தால் இந்தியா பூராவுக்குமாக ஒரு மொழி இருக்க வேண்டியது மிகவும் முக்கியம். அதற்குத் தகுந்த மொழி எது என்று பார்க்கிறபோது, எங்களைப் பொறுத்தவரையில் மத்திய சர்க்கார் தங்கள் ஆட்சி மொழியாகவும், இராஜ்ய சர்க்கார்களுடன் தொடர்பு கொள்வதற்கு உபயோகப் படுத்தும் மொழியாகவும் இந்தியை வைத்துக் கொள் வதை ஒப்புக் கொள்ளுகிறோம். இந்தி தேசீய மொழியாக உருவாகிக் கொண்டிருக்கிறது. பிரிட்டிஷார் காலத்திலேயே அதற்கான வழி ஏற்பட்டது என்பதை விட, அதற்கும் முன்னதாக முஸ்லிம்களுடைய ஆட்சிக் காலத்திலிருந்தே அது இயல்பாகவே உருவாகிக் கொண்டு வந்திருக்கிறது. பிரிட்டிஷார் காலத்தில் அது தடைப்பட்டிருந்தது. இப்பொழுது இந்திய சர்க்கார் எடுத்துக் கொள்ளும் நடவடிக்கை இந்தி மொழி தேசீய மொழியாக இயல் பாகவே உருவாவதற்குத் தடையாக இருக்கிறது. அதன் இயல்பான வளர்ச்சி தடைப்படுத்தப்படுகிறது என்றே குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால், மத்திய சர்க்கார் இந்தி மொழியைக் கட்டாயப் பாடமாகப் பரீட்சையில் திணிக்கிறார்கள். மறைமுகமாக இந்தி மொழி தாய் மொழியாக இல்லாத பிரதேச மக்களிடையே பலவந்தமாகத் திணிக்கப்படுகிறது. எங்கே மறைமுகமாகத் திணிக்கப் படுகிறதோ அங்கே பெரிய ஆபத்துக்களையும் அது விளைவிக்கும். அதோடு சீக்கிரத்திலேயே கல்லூரி களிலும்கூட ஆங்கிலம் இருந்த ஸ்தானத்தில் இந்தி போதனா மொழியாகத் திணிக்கப்படக்கூடிய ஆபத்தும் இருக்கிறது. ஆகவேதான், உடனடியாக நமது இராஜ்யக் கல்லூரிகளில் நம் நாட்டில் வழங்கும் தமிழ் மொழியைப் போதனாமொழியாக ஏற்படுத்த வேண்டும் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ் மொழியைப் போதனா மொழியாக ஏற்படுத்த வேண்டும் என்று சொல்லும்போதே, மலையாளம் பேசக் கூடிய மக்கள் வாழும் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் மலையாள மொழியையும், கன்னடம் பேசக்கூடிய மக்கள் வாழும் பிரதேசங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் கன்னட மொழியையும் போதனாமொழியாக ஆக்க வேண்டுமென்றும் விரும்புகிறேன்.'

கன்னடம், மலையாளம், தமிழ் பேசக்கூடிய கேந்திரங்களில் இருக்கக்கூடிய கல்லூரிகளில் அந்தந்த மொழியையே போதனா மொழியாக ஏற்படுத்த வேண்டு மென்பதில் கருத்து வேற்றுமையே இருக்கக்கூடாது. ஆகவே தமிழ் மக்கள் வாழக் கூடிய பிரதேசத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவும், போதனா மொழியாகவும் உடனடியாக ஏற்படுத்த வேண்டுமென்று செய்வதில் கால தாமதம் செய்யக் கூடாதென்றே வலியுறுத்த விரும்புகிறேன். ஆங்கில மொழியிடம் எங்களுக்கு வெறுப்பு இல்லை. அது உலக மொழி, மிகவும் விசாலமாக வளர்ந்து பரவிக் கிடக்கும் ஒரு மொழி. ஆனால், அந்த மொழியே நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் நம்மை ஆதிக்கம் செலுத்தும்போது, பலவந்தமாகப் புகுத்தப்பட்ட ஆதிக்க மொழியாக இன்றும் இருப்பதினால்தான், அந்த மொழியையே வைத்துக் கொள்வதற்கு நாம் வெட்கப்படுகிறோம். நூற்றைம்பது ஆண்டுகளாக நம்மை அடக்கி ஆண்டவர்கள் நம்மிடையே அந்த மொழியைப் புகுத்தியதினால்தான் நமக்கு அதனிடம் வெறுப்பு. அதைப் போலவே, இன்று மத்திய சர்க்கார் இந்தியை ஆதிக்க மொழியாக இந்தியைத் தாய்ப் பாஷையாகக் கொள்ளாதவர்களிடையே பலவந்தமாகத் திணிப்பதினால்தான் பலருக்கு அதனிடம் வெறுப்பு ஏற்படுகிறது. அந்த மொழியின் இயல்பான வளர்ச்சியும் வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. அந்தந்தப் பிரதேசங்களில் வாழும் மக்களின் தாய்மொழியையே அந்தந்தப் பிரதேசங் களில் இருக்கும் கல்லூரிகளில் தாய்மொழியாகப்

போதிக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை உடனடியாக வற்புறுத்த வேண்டுமென நாங்கள் கருதுவதற்கும், முக்கியமான காரணம் மத்திய சர்க்கார் ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை ஆதிக்க மொழியாகத் திணிக்க கூடாது என்பதற்காகவேதான். இந்த விஷயத்தைப்பற்றி நான் இப்பொழுது பேசுகின்றேன். நான் இதைப் பற்றி இங்கே பேச வருவதற்கு ஐந்து நிமிஷத்திற்கு முன்பாகத்தான் ஒருவருடன் இதைப் பற்றியே பேசிக் கொண்டு வந்தேன். சீனமொழி இந்தி மொழியைப் போலவோ ஆங்கில மொழி, பிரஞ்சு மொழியைப் போலவோ மிகவும் வளர்ச்சி அடைந்த ஒரு மொழி அல்ல. இருந்தாலும்கூட சீனா குடியரசு அந்தஸ்தைப் பெற்றவுடனேயே, அதன் தலைவர் மாசேதுங்கிலிருந்து அந்நாட்டு மக்கள் அத்தனைபேரும் எல்லா விஷயங்களையும், எவ்வளவு முற்போக்கான விஷயங்களாக இருந்தாலும் சரி, விஞ்ஞான விஷயங்களாக இருந்தாலும் சரி, அத்தனை விஷயங்களையும் சீன மொழியிலேயே பேசிப் பயில்கிறார்கள் என்கின்ற விஷயத்தை சீனாவிருந்து வந்த அந்த நண்பரிடமிருந்து தெரிந்து கொண்டேன். அப்படியிருக்கும்போது, மிகவும் வளர்ச்சி அடைந்த மொழிகளை உடைய நாம் நம் மக்களுடைய தாய் மொழியையே ஆட்சி மொழியாகவும், கல்லூரிகளில் போதனா மொழியாகவும் ஏன் செய்யக் கூடாது என்றே கேட்க விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இந்தியை பத்து ஆண்டுகளுக்குள்ளாகத் தேசிய மொழியாக்கிவிட எவ்விதமான நடவடிக்கையும் எடுத்துக் கொண்டாலும் சரி, நம்முடைய இராஜ்ய சர்க்கார் நம்முடைய இராஜ்யத்தில் வழங்கும் மொழியையே கல்லூரிகளில் போதனா மொழியாகவும், ஆட்சி மொழி யாகவும் ஏன் உடனடியாகச் செய்யக் கூடாது. இதுபற்றி நிபுணர்களின் அபிப்பிராயத்தை அறிய ஒரு கூட்டம் சென்னையில் கூட்டப்பட்டது. அதில் பெரும்பாலான வர்கள் எல்லோரும் போதனா மொழியாகப் பிரதேச மொழி

களையே கல்லூரிகளில் ஏற்படுத்தலாம் என்று அபிப்பிராயம் தெரிவித்திருக்கிற போதிலும், அதில் இன்னமும் அவநம்பிக்கை கொள்ள இடமேயில்லை என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இது ஒன்று.

இன்னொரு விஷயத்தை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்ல விரும்புகிறேன். சமீபத்தில் தமிழைப் போதனா மொழியாக ஆக்குவதற்கு ஒரு கூட்டம் நடந்தது. அங்கே வந்திருந்தபோது. நாம் என்ன பார்த்தோம்? எத்தனை வேந்தர்கள், எத்தனைக் கல்லூரித் தலைமை ஆசிரியர்கள் பேசினார்கள்? ஆங்கிலத்தில் பயிற்சி பெற்ற அவர்கள் எல்லோரும் கல்வி இலாகா நிருவாகத்தில் ஆங்கிலத்தைப் பற்றிப் பேசினார்கள். மக்களிடையே பழகி, தேசீய இயக்கத்தையும் சுதந்திர இயக்கத்தையும் விடுதலை இயக்கத்தையும் அந்தந்த மொழியின் அடிப்படையில் நடத்தியவர்கள்தான் நமக்கு எந்தப் பாஷை தேவை என்பதைச் சொல்ல முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

தமிழைக் கல்லூரி போதனா மொழியாகவும் பிரதேச மொழியாகவும் கொண்டு வர வேண்டியது அவசியம். அதே மாதிரி மத்திய சர்க்கார் நடத்தும் பரீக்ஷைகளில் பிரதேச மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். அவ்வாறு முக்கியத்துவம் கொடுக்காவிட்டால் என்ன நேரிடும், நாம் எங்கே போவது என்ற பயம் ஏற்பட்டிருக்கிறது. ஐந்து வருஷத் திட்டம் வெற்றியடைவதற்கு மக்களைத் திரட்டி ஒற்றுமையை ஏற்படுத்தி இந்திய யூனியனைப் பலப்படுத்த வேண்டும். இப்பொழுது சூடாக இருக்கக் கூடிய பிரச்னைகளைப் பொறுத்தவரையில், நம்முடைய இராஜ்யத்திலுள்ள Policy யைக் கவர்னர் தன்னுடைய உரையில் தெளிவுபடுத்தியிருக்கிறார். அந்த உரையில் மொழிப் பிரச்னையைப் பற்றி ஒரு குறிப்பும் காணப்படவில்லை. இது ஒரு குறைபாடு.

இந்தியைப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கூறிவிட்டேன். ஆனால், திரும்பவும் இது சந்தர்ப்பத்தில் நான் ஒன்று குறிப்பிட விரும்புகிறேன். இந்தி எதிர்ப்பு என்ற பேரில் துரதிருஷ்டவசமாக நம்முடைய இராஜ்யத்தில் தேசீயக் கொடிக்கு நெருப்பு வைக்கக்கூடிய ஒரு பேச்சு, ஒரு முயற்சி ஏற்பட்டிருந்தது. அது நடைபெறாமல் போனது எல்லாரும் வரவேற்கக்கூடிய விஷயம்; சந்தோஷப்பட வேண்டிய விஷயம். நம்முடைய இராஜ்ய சர்க்காரைப் பொறுத்தவரை, மத்திய சர்க்காரைப் பொறுத்தவரை அவர்களுடைய நடவடிக்கைகளில் மக்களுக்காகத் திட்டம் செய்து வரும் அடிப்படையில் பலருக்குப் பல கடுமையான கருத்து வேற்றுமைகள் இருக்கலாம். ஆனால், இப்படிப் பட்ட கருத்து வேற்றுமைகள் தேசீயக் கொடியைக் கொளுத்துவதில் கொண்டு வந்துவிடலாமா என்று கேட்கும்போது, எவ்வளவு கருத்து வேற்றுமை இருந்தாலும், தேசீயக் கொடியைக் கொளுத்த நினைப்பதே தவறாகும். ஒரு சர்க்காரை மாற்றிவிட்டு இன்னொரு சர்க்காரைக் கொண்டு வர வேண்டுமென்றால், சர்க்காருடைய திட்டங்களைக் கடுமையாக எதிர்க்கலாம். ஆனால், சர்க்காருடைய திட்டங்களை எதிர்ப்பதற்கும், நாட்டின் தேசீயக் கொடிக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. ஐம்பது ஆண்டுகளாக எல்லாத் துறையிலும் உள்ள புனிதமான மக்கள், தியாக மூர்த்திகள், மிகுந்த தேச பக்தர்கள், தேசீய உணர்ச்சி பெற்றவர்கள், இவர்களெல்லாருடையதுமான உணர்ச்சி, இரத்தம், வாழ்வு, இவற்றைக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒப்புயர்வற்ற பொதுவான கொடியே தேசீயக் கொடியாகும். அப்படிப்பட்ட தேசீயக் கொடியைக் கொளுத்த நினைபபதை உண்மையிலேயே தேச பக்தி, தேசீய கௌரவம், தேசீய வாழ்க்கையில் அக்கறையுள்ள மனிதர்கள் யாரும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இந்தச் சபையில் இருக்கக்கூடிய எல்லா அங்கத்தினர்களும் அதற்குக் கொஞ்சம் நினைவில்கூட ஒத்துக் கொள்ளமாட்டோம்

என்று குறிப்பிட்டு வருகிறார்கள். அதிருஷ்டவசமாக சம்பந்தப்பட்டவர்கள் கொடி எரிப்பு இயக்கத்தை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டார்கள். இருந்தாலும் எந்த ஒரு கொள்கையாக இருப்பினும் அதனை வற்புறுத்த வேண்டும் என்ற கொள்கையை எந்தக் காலத்திலும் யாரும் ஆதரிக்கக் கூடாது. தங்கள் இன்னுயிரைக் கொடுத்தேனும் கொடியினைக் காப்போம் என்ற உறுதியைக் கட்சி மனப்பான்மை அற்று எல்லா மக்களும் திடசங்கல்பமாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதைப்பரப்ப வேண்டும். இந்தி எதிர்ப்புக்காக இப்படிப்பட்ட அநீதியான பாதையில் போக வேண்டிய அவசியமே இருக்காது, நம்து சர்க்காரே இந்தி விஷயத்தில் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். தேசபக்தி சிறிதும் இன்றி தேசீயக் கொடியைக் கொளுத்த வேண்டும் என்பதற்காக இந்தி எதிர்ப்புச் சாக்கு காட்டுவது இருக்கிறதே, அது கொஞ்சங் கூட சரியல்ல. அப்படிப் பட்டவர்களுடைய போக்கை எந்தத் தமிழ் மகனும் அனுமதிக்கமாட்டான் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன் என்றார்.

ஆளுநர் உரையின் மீது நடந்த விவாதத்திற்குப் பதிலளித்து நிதி அமைச்சர் திரு சி.சுப்ரமணியம் அவர்கள் 1955—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 5—ஆம் நாள் பேசினார்:—

இந்தி மொழியைப் பரப்புவதில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதுடன், மக்களின் மீது திணித்தல் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்து. இந்தியை ஒரு சாரார் எதிர்க்கின்றனர். அவர்களுக்கு நாட்டு ஒற்றுமையில் நம்பிக்கை கிடையாது; வடநாட்டு இந்தி மொழியைத் தென்னாட்டவர் மீது திணிக்கக் கூடாது என்பது அவர்களுடைய வாதமாகும். நம்முடைய கருத்திற்கும் எதிர்க்கட்சிகளுடைய திட்டங்களுக்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது.

நம்முடைய தேசிய வாழ்க்கையில், இந்தி மொழியின் பங்கு என்ன என்பது பற்றிய குழப்பம் வடநாட்டில் அதிகமாக உள்ளது. அரசியல் சட்டத்தை ஆதாரமாகக் கொண்டும், தலைமை அமைச்சரின் கருத்துக்களை வைத்தும், இந்தி மொழி இந்நாட்டின் தேசிய மொழி அல்ல; பல தேசிய மொழிகளில் இதுவும் ஒன்று என்பதை என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும். 8—ஆம் அட்டவணையில் கண்டிருக்கிற பதினான்கு மொழிகளும் தேசிய மொழிகளாகும். எந்த ஒரு மொழியும் மற்றொரு மொழியைவிட உயர்ந்தது அல்ல என்பதைத் தலைமை அமைச்சர் அவர்களே குறிப்பிட்டுள்ளார். அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிற ஒவ்வொரு மொழியையும் வளர்ப்பதும் போற்றுவதும் மத்திய மற்றும் மாநில அரசுகளின் கடமையாகும். ஆகவே, ஒவ்வொரு வட்டாரமும் தன்னுடைய மொழியை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

இந்தியைப் பொறுத்தமட்டில், மத்திய அரசின் ஆட்சி மொழி என்று அரசியல் சட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. அதைத் தவிர, வேறொன்றும் எழுதப்பட வில்லை. மாநிலங்கள் அனைத்தையும் உள்ளடக்கிய மத்திய அரசின் நிருவாகத்தை நடத்த ஒரு மொழி தேவை. இதற்கு ஆங்கிலத்தை வைக்க முடியுமா? முடியாது. நாட்டின் ஒற்றுமையில் நம்பிக்கை வைத்திருப்பவர்கள், ஒரு பொதுவான தீர்வைக் காண வேண்டும். அப்படிப் பார்க்கும் பொழுது, பதினான்கு கோடி மக்களால் பேசப் படுகின்ற இந்தி மொழிதான் மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழியாக இருக்க முடியும். சந்தர்ப்ப சூழ்நிலையால் இந்தியை நாம் ஒத்துக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால், வட்டாரமொழிகள் இரண்டாந்தர மொழிகளாக்கப்படும் என்ற பயம் தேவையில்லை. மத்திய அரசின் ஆட்சி மொழியாக இந்தியை ஆக்குவதிலும்

பலவிதக் கட்டுப்பாடுகள் அரசியல் சட்டத்தில் விதிக்கப் பட்டுள்ளது. ஐந்தாண்டுகளுக்குப் பிறகு, கமிஷன் ஒன்றை அமைக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட கமிஷன், மத்திய அரசு வேலைவாய்ப்பில், இந்தி பேசாத மக்களுக்கு ஏற்படும் சிரமங்களைக் கவனிக்க வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கிற கமிஷன், இதுபோன்ற சிக்கல்களை ஆராய்ந்து தன் பரிந்துரையை அனுப்ப வேண்டும். பொதுத் தேர்வுகளுக்கு இந்தியைப் பயன்படுத்த வேண்டும் என்று குரல் எழுப்பும் வடக்கத்தியர்கள், அரசியல் சட்டத்தைப் புரட்டிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். மத்திய அரசு வேலைகளில் இந்தி பேசாதோர் நலன் பாதிக்கப்படுமானால், அவற்றைப் பரிசீலித்து, மேல் நடவடிக்கைக்குரிய பரிந்துரையை இக்கமிஷன் அனுப்ப வேண்டும். ஆகவேதான், இவ் விஷயங்களில் மத்திய அரசு நிதானமாகச் செயல்பட வேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். இதில் நாங்கள் மிகவும் தீவிரமாகவே இருக்கிறோம். எதிர்ப்பு இருப்பதனாலோ எதிர்ப்பு கிளம்பும் என்ற காரணத்தி னாலோ இதை நாங்கள் சொல்லவில்லை. நீண்ட நாளைக்கு முன்பே, தென்னாட்டு மக்கள் மீது இந்தித் திணிப்பு கூடாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஒரு சில சந்தர்ப்பவாதிகள், இச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார்கள். அச்சந்தர்ப்பவாதிகளை நாம் ஒதுக்கிவிடுவது நல்லது. ஏற்படுகின்ற கஷ்டங்களை மாநில அரசு எடுத்துச் சொன்ன பிறகு, மத்திய அரசும், தலைமை அமைச்சரும், உள்துறை அமைச்சரும் தங்களுடைய கொள்கையை இப்பொழுது அறிவித்திருக்கிறார்கள்.

நம்முடைய கொள்கை இதுதான்; வட்டாரமொழி மாநில ஆட்சிமொழியாக ஆக்க வேண்டும். ஒரு சில கழகங்களைச் சார்ந்தவர்கள், தமிழ் மொழியை மாநில

ஆட்சிமொழியாக உடனே பிரகடனம் செய்ய வேண்டும் என்கிறார்கள். இன்றைய நிலையில் கன்னடம், மலையாளம், தமிழ் ஆகிய மூன்று மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்ற கருத்தை நண்பர் ஜீவானந்தம் தான் குறிப்பிட்டார். இப்படிப்பட்ட மாற்றத்தைச் செய்வதற்கு இது ஏற்ற சமயம்தான். ஏனென்றால், மாநிலச் சீரமைப்புக் கமிஷன் நியமிக்கப் பட்டிருக்கிறது. மொழியின் அடிப்படையில் மாநிலங்கள் அமைக்கப்படலாம் அல்லது வேறு ஏதாவது அடிப் படையையும் பின்பற்றலாம். செப்டம்பர் மாதம் முப்பதாம் தேதிக்குள்ளாக இக்கமிஷன் தன் அறிக்கையைத் தாக்கல் செய்யும். அதன்மீது முடிவுகளும் எடுக்கப்படலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில், மூன்று மொழிகளை நிருவாக மொழிகளாக அறிவிப்பது எப்படிப் பொருத்த முடையதாகும்? ஆகவே, பொறுத்திருந்து பார்க்கலாம். நிருவாகத்திற்காகவும் நம்முடைய மொழிகளைத் தயார் படுத்த வேண்டும். அதற்காக வேண்டிய ஏற்பாட்டை நாங்கள் செய்து வருகிறோம்.

நாங்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கிறவரை, இந்தி எந்த வகையிலும் நம் கல்விக் கூடங்களில் பயிற்று மொழியாக வராமல் பார்த்துக் கொள்வோம். எங்களைப் பொறுத்தவரை, வட்டார மொழிதான் பயிற்று மொழியாக இருக்க முடியும் என்பதைத் திட்டவட்டமாக அறிவித் துள்ளோம். அதற்குத் தேவையாக முன்னேற்பாட்டையும் நாங்கள் செய்திருக்கிறோம்.

மத்திய அரசின் வேலைகளுக்கு இந்தி மட்டுமல்லாது எட்டாவது அட்டவணையில் கண்டுள்ள எல்லா மொழி களிலும் தேர்வு நடத்தப்பட வேண்டும் என்று மத்திய அரசுக்கு நாங்கள் சொல்லியிருக்கிறோம். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய வட்டார மொழி எது என்பதை மத்திய அரசுக்குத் தெரிவித்து

விடுவோம். அம்மொழியில்தான் தேர்வுகள் நடத்தப்பட வேண்டும். அகில இந்திய பொதுத் தேர்வுக்கு வட்டார மொழியைப் பயன்படுத்திக் கொள்ளப் போதிய முன்னறி விப்பு கொடுத்த பின்பு, தேர்வுகளை நடத்தலாம். அப்படி யென்றால், அகில இந்திய நோக்கு எங்கேயிருக்கிறது என்று சிலர் கேட்கலாம். தேர்விலே தேர்ந்தெடுக்கப்பட்ட பின்பு, இந்தி தெரியாதவர் இந்தி மொழியிலும், இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர் வேறு ஏதாவது ஒரு வட்டார மொழியிலும் தேர்வு எழுதி வெற்றி பெற வேண்டும் என்ற நிபந்தனையை வைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம்.

1955—ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28—ஆம் நாள் சென்னைச் சட்டமன்றத்தில் மாண்புமிகு திரு பக்த வத்சலம் (பொதுப்பணித்துறை அமைச்சர்) அவர்கள் மாநிலங்களுடைய கருத்தை அறிய வெளியிடப்பட்ட மத்திய அரசின் அரசாங்க மொழிகளில் தயாரித்த வினாத்தாளைச் சட்டமன்றத்தின் முன் வைத்தார். அதை முன் மொழிந்து அவர் நீண்ட சொற்பொழிவாற்றினார். மத்திய அரசால் நியமிக்கப்பட்ட அரசாங்க மொழிக் கமிஷன் எந்தெந்த வகையில் இந்திய நாட்டிற்கு விரிவான மொழிக் கொள்கையைப் பரிந்துரைக்க வேண்டும் என்ற அடிப்படையில் உறுப்பினர்களுடைய கவனத்தை அவ் வினாத்தாளின் பல பகுதியில் கவனத்தைச் செலுத்தும்படி சொல்லி உறுப்பினர்களுடைய மேலான கருத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும்படி கேட்டார். அவர் பேசும்பொழுது, வினாத்தாளில் கண்டுள்ள பல தலைப்புக் களின் மீது உறுப்பினர்கள் தங்களுடைய விவாதத்தை வைக்க வேண்டுமென்றார். மொழிக் கொள்கையைப் பொறுத்த வரையில், மத்திய மாநில அரசுகளில் பணி புரியும் அலுவலர்கள், அலுவல்கள் ஆகிவற்றைப் பற்றித் தீர்மானம் செய்ய வேண்டும். மத்திய மாநில அரசுகளுக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கத் தேர்வு நடத்தும் பொழுது எந்த

மொழியைப் பயன்படுத்த வேண்டுமென்பதையும் தீர்மானிக்க வேண்டும். அப்படிச் செய்யும்பொழுது தேர்வின் மொழியாக இந்தியா, ஆங்கிலமா அல்லது அந்தந்த மாநில மொழியா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மத்திய அரசின் அலுவலர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது பல்வேறு மொழிகள் பேசப்படுகின்ற மாநிலத்திலிருந்தும் மாணவர்கள் கலந்து கொள்வார்கள். அப்படி நேரும் பொழுது தமிழ்நாட்டு மாணவர்கள் எந்தவகையிலும் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்றார்.

அவர் மேலும் சொன்னார்:—

''மாநிலச் சட்டமன்றத்தில் எந்த மொழியில் விவாதங்களை நடத்தவேண்டும் என்ற கேள்வியை எழுப்பி மத்தியப் பாராளுமன்றத்திலும், மாநிலச் சட்டமன்றங்களிலும் வெவ்வேறு மொழிகளைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் இருக்கிறது. ஒரு மாநிலத்தின் மொழிதான் அச்சட்டமன்றத்தின் மொழியாக இருக்க முடியும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது'' என்றார்.

''பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு மொழியில்தான் விவாதங்கள் நடைபெற வேண்டுமா அல்லது உறுப்பினர்களுக்கு மற்ற மொழியிலும் பேசுவதற்கு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமா என்பதையும் தீர்மானிக்க வேண்டும். மத்திய அரசின் நிருவாகத்திற்கு இந்திதான் ஆட்சிமொழி என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள 14 மொழிகளையும் தேசீய மொழிகளென்று அறிவிக்கப்பட வேண்டும்'' என்றும் சொன்னார்.

மத்திய மாநில அரசுகளின் நிருவாகமொழியும் அந்த நாட்டின் தேசீய மொழியும் மாறுபட்டு இருக்கலாம் என்பதை உணர வேண்டும். ஆகவே, மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகள் எந்த மொழியில் நடத்தப்பட வேண்டும்,

பாராளுமன்ற நடவடிக்கைகள் எந்த மொழியில் இருக்க வேண்டும் என்பதை நாம் தெளிவாக வரையறுக்க வேண்டும். மேலும்; நீதிமன்றங்களில் எந்த மொழியைப் பயன்படுத்துவது, கல்விக் கூடங்களில் பயிற்சி மொழியாக எந்த மொழியை ஏற்றுக் கொள்வது, உயர்நிலைப் பள்ளி களைப் பொறுத்தவரையில் அந்தந்த மாநில மொழிதான் பயிற்சி மொழி என்பது தீர்மானமான ஒன்று, மாநில அரசுகளும் பல்கலைக்கழகங்களும் கல்லூரிகளில் எம் மொழியைப் பயிற்சி மொழியாக வைக்க வேண்டுமென்ற விவாதத்தில் இறங்கியுள்ளனர். ஆங்கிலத்தின் எதிர்காலம் என்ன? மாநிலங்களுடைய நிருவாக மற்றும் கல்வி இவற்றில் மத்திய அரசின் மொழியாக அங்கீகரிக்கப்பட்ட இந்தியின் பங்கு என்ன? எங்களைப் பொறுத்தவரையில், தேவ நாகரியை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டுமா அல்லது ரோமானிய எண்களை அடிப்படை யாகக் கொள்ள வேண்டுமா என்பதை அடிப்படையாகத் தீர்மானிக்க வேண்டும்.

அவையின் முதல்வர் திரு பக்தவத்சலம் அவர்கள், அரசாங்க மொழிக் கமிஷன் வெளியிட்டுள்ள வினாத்தாள் மீது சட்டமன்றத்தில் கொண்டு வந்த தீர்மானத்தின் மீது, சில திருத்தங்களைத் திரு முகம்மது சாசாகான் அவர்கள் கொண்டு வந்தார்.

அவைகளாவன:—

1)மாநில ஆட்சிமொழியாக அவ்வட்டார மொழி அல்லது மொழிகள் மட்டும்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இந்தி எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளக் கூடாது.

2)மாநிலங்களுக்கிடையேயும், மாநிலத்திற்கும் மத்திய அரசுக்கும் இடையேயும் குறிப்பிட்ட எல்லைக்குள் மொழி பெயர்ப்பாளர்களை மாநில அரசு பயன் படுத்திக் கொள்ள வேண்டும்;

3)மத்திய தேர்வாணைக் குழுவைப் பொறுத்த வரையிலும் நியாயமான சமசந்தர்ப்பம் கொடுக்கக் கூடிய முறை என்ன என்றால், தேர்வு எழுத விரும்பு கின்ற ஒவ்வொரு மாணவனும் அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கிற ஏதாவது ஒரு மொழியில் தேர்வு எழுத அனுமதித்து, மொழி பேசப்படுகிற மக்களு டைய எண்ணிக்கையின் அடிப்படையில் ஒரு குறிப்பிட்ட விகிதாசாரத்தைப் புகுத்தி விடுதல் வேண்டும்;

4)மாநில உயர்நீதிமன்றம் மற்றும் ஏனைய நீதி மன்றங்களில் வட்டார மொழி/மொழிகளையே பயன்படுத்த வேண்டும்;

5)மாநிலச் சட்டமன்றத்தில் வட்டார மொழி/ மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டும். பாராளு மன்றத்தில் பல மாநிலத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், அவரவர்களுடைய வட்டார மொழியில் பேசுவதற்கு வசதியும் வாய்ப்பும் செய்து தரல் வேண்டும்;

6)மத்திய அரசுப் பணிகளுக்காகத் தேர்ந் தெடுக்கப்படுபவர்கள், தேர்வுக்குப்பின் இந்தி பேசுகிற மாநிலங்களைச் சார்ந்தவர்களாக இருந்தால், வேறொரு வட்டார மொழியிலும் இந்தி பேசாத மாநிலத்தைச் சார்ந்தவர்கள் இந்தியிலும் தேர்வோ அல்லது தேர்வுகளோ எழுதி வெற்றி பெறவேண்டும்;

7)சர்வதேச எண்ணிக்கைக்குரிய குறிகளைக் கைவிட்டு தேவநாகிரி குறிகளைப் புகுத்துதல் தேவையில்லை;

8)பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சிறந்த கொள்கையாகச் சொல்லப்படுவது, படிப்படியாகத் தாய் மொழியைப் பயன்படுத்துவதுதான். ஆங்கிலம்

அகற்றப்படுமேயானால், அவ்விடத்தைத் தாய் மொழிதான் நிரப்ப முடியும்;

9)வட்டார மொழிகளைக் கல்லூரிகளிலும், மேலும் தொழில் நுணுக்கக் கல்வியிலும் புகுத்தும்பொழுது, வட்டார மொழியில் பயிற்றுவிக்கக் கூடிய தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் போதுமான எண்ணிக்கையில் கிடைக்கிறார்களா என்பதைக் கணக்கிட்டே ஆங்கிலத்தை அகற்றி, வட்டார மொழியை உயர் கல்வியில் புகுத்த வேண்டும்;

10) சர்வதேச மொழியான ஆங்கிலத்தைப் படிப் பதற்கும் உயர்கல்வியில் தொடர்ந்து பயன்படுத்து வதற்கும் வசதி செய்து தரப்பட வேண்டும்.

மேற்கூறிய தீர்மானங்களை முன்மொழிந்து, திரு முகம்மது சாசாகான் அவர்கள், தம்முடைய கருத்துக்களை விளக்கிப் பேசினார்.

''சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில், வட்டார மொழி/மொழிகள்தான் ஆட்சி மொழியாக இருக்க முடியும். புதிய சமுதாயம் ஆங்கிலத்தைத் தொடர்ந்து பயன்படுத்துமா என்பது சந்தேகம். ஒவ்வொரு மாநிலமும், தங்களுடைய வட்டார மொழிகளிலேயே அலுவல்களைக் கவனிக்கவும, விவாதிக்கவும் செய்யும் நாட்கள் நீண்ட தூரத்தில் இல்லை. சென்னை மாநிலத்தைச் சார்ந்த மக்கள் இந்தியைக் கற்றுக் கொண்டு அலுவல்களைக் கவனிக்க குறைந்தது முப்பது ஆண்டுகளாவது பிடிக்கும்'' என்றார்.

அவர் மேலும் பேசும்பொழுது, மாநிலச் சட்ட மன்றத்தில் வட்டார மொழிகளில் பேசுவதால் எந்தப் பிரச்சினைகளும் ஏற்படுவதில்லை. ஆனால், பாராளு மன்றத்தின் இரு சபைகளிலும், இந்தி தவிர மற்ற மொழி தெரியாதோர் பேசும்பொழுதுதான் பல சிக்கல்கள்

ஏற்படுகின்றன. இந்தியில் பேசாத மற்ற உறுப்பினர்கள் தொடர்ந்து தொல்லைக்குள்ளாவதுடன் அவர்கள் மன்றத்தின் நடவடிக்கைகளைப் புரிந்து கொள்ளாமல் அமர்ந்திருப்பது நியாயமுமாகாது. அரசியல் நிருணய சபையில், தற்போதைய தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் தலைவர் திரு கக்கன் அவர்கள், முதல் சொற்பொழிவைத் தமிழில் ஆற்றிய பொழுது மற்ற உறுப்பினர்கள் அப்படிப் பேசியதற்காகக் கேள்விகளை எழுப்பினார்கள்; மற்றும் அவர் சொற்பொழிவைக் கேட்டு இகழ்ச்சியுடன் சிரித்தார்கள்.

நம்முடைய நாட்டுப் பிரதமர் ருஷிய நாட்டில் சுற்றுப் பயணம் செய்தபோது, இந்தி மொழியில்தான் பொதுக் கூட்டங்களில் பேசினார். அவர் ஆங்கிலத்தில் பேசியிருந்தாலும் ரஷிய மக்களுக்குப் புரிந்து இருக்காது. அவருடைய இந்திப்பேச்சு, ரஷிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டது. நாட்டின் பல பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுப் பாராளுமன்றத்தின் உறுப்பினராக ஒருவர் இருக்கின்ற வரையில், அவர் சார்ந்திருக்கிற வட்டார மொழியில் பேசுவதற்கு எல்லாவிதமான வசதிகளும் செய்து தரப்பட வேண்டும். மற்ற உறுப்பினர்களும் பேசப்படுகின்ற பேச்சைப் புரிந்து கொள்வதற்கு ஏற்ற சாதனங்களை ஏற்படுத்தித் தர வேண்டும். பாராளுமன்றத்தில் ஒரே மொழியில் பேசவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுமேயானால், தன்மானமுள்ள எவரும் அதை ஆட்சேபித்தே தீருவார்கள் என்றார்.

திரு முகம்மது சாசாகான் அவர்கள் முன்மொழிந்த திருத்தங்களை வழிமொழிந்து திரு ஏ.க்ஜபதி நாயக்கர் அவர்கள் ஆங்கிலத்தில் பேச முற்பட்டபோது, ஓர் உறுப்பினர் அவரைத் தமிழில் பேசும்படி சொன்னார். தொடர்ந்து அவர் பேசும்பொழுது, ஆங்கிலத்தில் பேசினால்தான் புரியக்கூடியவர்களுக்கு எட்டும் என்று சொல்லி, தான் 1954—ஆம் ஆண்டிலே தமிழை ஆட்சி

மொழியாக்க வேண்டுமென்று சட்டமன்றத்திலே கொண்டுவந்த தீர்மானத்தை எதிர்த்த திரு முகம்மது சாசாகான் அவர்களே இன்று இப்படிப்பட்ட திருத்தங் களைக் கொண்டு வந்ததற்கு மகிழ்ச்சி தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து சொன்னார்:—

அரசியல் சட்டத்தின் 'எட்டாவது அட்டவணை யின்படி பதினான்கு மொழிகள் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. பல மொழிகள் பேசப் படுகின்ற மாநிலங்கள் ஒன்றாக்கப்பட்டு மத்திய அரசு செயல்பட்டாலும், மொழிவாரி மாநிலங்களாக நாடு பிரிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். நாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக் கிறோம். மக்கள் எந்த மொழியில் பேசுகின்றார்களோ அந்த மொழி சட்டமன்றங்களில் ஒலிக்க வேண்டும். இந்தச் செயல் சட்டமன்றத்திற்குள் மட்டும் அடங்கி விட்டதாக எவரும் கருதிவிடக் கூடாது. கல்விக் கூடங்கள், நீதிமன்றங்கள், அரசாங்கப் பணிகள் ஒன்றுபடப் பல துறைகளிலும் மாநில மொழி வழக்கில் கொணர்தல் வேண்டும்.

மத்திய அரசின் ஆட்சி மொழியாக இந்தியை ஏற்றுக் கொண்டு அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநிலச் சட்டமன்றங்கள் அதேபோன்ற சட்டம் இயற்றி, வட்டார மொழியைச் சட்டபூர்வமாக ஆட்சி மொழியாக்க வேண்டும். இப்பொழுது ஐந்து ஆண்டுகள் முடிவடைந்து விட்டது. நான் 1945—ஆம் ஆண்டு 'சென்னை மாகாண மொழிச்சட்டம் 1945' என்ற தனியார் மசோதாவைச் சட்டமன்றத்திலே தாக்கல் செய்தேன். அவ்வமயம் சட்ட மேலவையின் 10 உறுப்பினர்களும், சட்டமன்றத்தின் 35 உறுப்பினர்களும் நான் அறிமுகப்படுத்திய சட்ட முன்வடிவு போன்றே மன்றத்தில் அறிமுகப்படுத்தினர். என்னுடைய முயற்சியில் டாக்டர் ஏ. இலட்சுமணசாமி முதலியார் போன்றோர் மிகவும் உதவி செய்தனர்.

நாட்டிற்கு ஒரு பொதுவான மொழி தேவை என்பது சரித்திர சாபக்கேடு என்றே நான் கருதுகிறேன். ஆங்கிலேயர்கள் நம்மை அடிமைப்படுத்தியும், மற்ற வழிகளிலும் ஆண்டார்கள். அவர்களுடைய மொழியை நம்மீது திணித்தார்கள். ஆங்கிலம் படித்தால் உனக்கு வேலையுண்டு என்ற வற்புறுத்தல் இருந்ததனால், ஆங்கிலம் தொடர்ந்து நம் நாட்டில் ஒட்டிக் கொண்டது. ஆங்கிலம் பொது மொழியாக இருந்ததில்லை. அரசாங்கம் நடத்துவதற்கு வசதியான மொழியாகப் பயன்பட்டது. அல்லது தன்னடத்தையே குறிக்கோளாகக் கொண்ட அறிவாளிகள் என்று கருதப்பட்டவர்களால் ஆங்கிலம் கையாளப்பட்டது. என்னுடைய கருத்து என்னவென்றால், எவ்விதமான பொது மொழியும் இந்த நாட்டிற்குத் தேவையில்லை. ஆகவே, இந்தியையும் சேர்த்து எல்லா மாநில மொழிகளையும் ஒரே ரீதியாகக் கருதப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன் என்றார்.

கே.பாஷ்யம் அவர்கள் கஜபதி நாயக்கரைத் தொடர்ந்து மேலவையில் பேசும்பொழுது, அரசியல் நோக்கில் நாட்டின் ஒற்றுமைக்காக ஒரு பொதுவான மொழி தேவை என்றும், ஒவ்வொரு மாநிலத்திலும் பொதுவான மொழியைப் புரிந்து கொள்கிற அளவிற்குப் போதுமான மக்கள் தொகை இருக்க வேண்டும் என்றும் சொன்னார். தமிழ் மொழியை மட்டும் கற்றுக் கொண்டு, இது என் மொழி' 'இது என் மாநிலம்' என்று சொல்லிக் கொள்வதில் எந்தவிதப் பயனும் இல்லை என்றார். தமிழ் மட்டும்தான் இருக்க வேண்டும் என்று சொல்வது சரியல்ல. மொழி விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். நாட்டின் நலனைக் கருத்தில் கொண்டும், நம் மாணவ மாணவியரின் எதிர்கலத்தைக் கருதியும்' இந்தியை நாம் மெதுவாகப் புகுத்தியே ஆகவேண்டும்;

இந்தி ஆங்கிலம் விட்டுச் சென்ற இடத்தை நிரப்ப வேண்டும் என்றார்.

டாக்டர் ஏ.லட்சுமணசாமி முதலியார்:—

‘‘மொழிக் கமிஷன் மசோதா மீது முக்கியமான விவாதம் ஒன்று நேற்றைய தினம் லோக்சபையில் நடந்த பொழுது, உள்துறை அமைச்சருடைய பேச்சு செய்தித் தாளில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. லோக்சபையில் உள்துறை அமைச்சர் பேசியதாகக் குறிப்பிட்ப்பட்ட பத்தியில் ‘ஒரு நாட்டின் சுயமரியாதை ஒரு மொழியைப் பெற்றிருப்பதிலும், அம்மொழியை எல்லாப் பகுதிகளிலும் பயன்படுத்துவதிலும், மற்ற நாடுகளில் வாழுகின்ற இந்தியர்கள் அம்மொழியைப் பேசவதிலும் அம்மொழியை இந்நாட்டின் மொழி என்று அழைப்பதிலும்தான் அடங்கியிருக்கிது’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஒரு மொழியை கற்பதில் மட்டும்தான் சுயமரியாதை அடங்கியிருக்கிறது என்று நான் கருத வில்லை. இப்படிப்பட்ட அறிவிப்புகளை என்னால் புரிந்து கொள்ள முடிவதில்லை. நம்மைச் சேர்த்து வைப்பதும், ஒருமைப்பாட்டை உருவாக்குவதும் மொழி தான் என்று என் நண்பர் பாஷ்யம் குறிப்பிட்டார். எங்கிருந்து அதைத் தெரிந்து கொண்டாரோ! நாட்டின் ஒருமைப்பாட்டைப் பேசுகின்ற மொழி எப்பொழுதும் ஏற்படுத்தாது. சுவிட்சர்லாந்து நாட்டில் மூன்று மொழி களைத் தேசிய மொழிகளாக ஏற்றுக் கொண்டு, இருக்கிற ஆறு பல்கலைக்கழகங்களில் ஒவ்வொன்றிலும் இரண்டு மொழிகளை வைத்திருக்கிறார்கள். ஐக்கிய நாடுகள் சபையில் ஏழு மொழிகளை வைத்துள்ளார்கள்

மற்ற நாடுகளுக்குப் போகும் பொழுது நாம் நம்முடைய மொழியைப் பேசவேண்டுமென்பது உண்மை தான். இருப்பினும், நாம் எந்த நாட்டில் இருக்கிறோமோ,

அந்த நாட்டு மொழியைப் பேசுவதுதான் மிக முக்கிய மானதாகும். பலநாடுகளில் தூதுவர்கள் வேலை செய்வதை நான் பார்த்திருக்கிறேன். எந்த நாட்டில் தூதுவராக இருக்கிறாரோ, அந்த நாட்டு மொழியைப் பயன்படுத்த வசதியில்லாமல் பலர்பட்ட சங்கடங்களை நான் அறிவேன்.

ஒரு மொழியைப் பேசுவதனால்தான் நாட்டின் ஒற்றுமை காக்கப்படும் என்று சொன்னார்கள். 1950—ஆம் ஆண்டு அரசியல் சட்டம் நடைமுறைக்கு வந்தபிறகு நடந்த வன்முறைச் சம்பவங்கள் நாட்டில் எப்பகுதியில் நிகழ்ந்தது. அச்சம்பவங்கள் எல்லாம் பீகாரிலும், உத்தரப் பிரதேசத்திலும் தான் நடந்தது.

நாம் எந்த வழியில் அறிவைப் பெருக்கலாம், அனுபவத்தைக் கூட்டலாம், மற்றும் சமுதாயத்தில் பயனுள்ள குடிமகனாக எவ்வாறு இருக்க முடியும் என்பது தான் இன்றைய கேள்வி. எந்த மொழியையும் துணை மொழியாகக் கற்றுக் கொள்வதை நான் எதிர்க்கவில்லை. ஆனால், பள்ளிப் பருவத்திலிருந்து தாய் மொழியைக் கைவிட்டு, வட்டார மொழியை விடுத்து, இந்தியைக் கற்க வேண்டுமென்று எவரேனும் சொன்னால் நாம் அதை முழு மூச்சுடன் எதிர்க்க வேண்டும்.

நான் எட்டு வயது சிறுவனாக இருந்தபொழுது, என் தகப்பனார் எங்கள் மாவட்ட ஆட்சித் தலைவரின் இல்லத்திற்கு அழைத்துச் சென்ற சமயங்களிலெல்லாம் அவர்களிருவரும் தெலுங்கிலே உரையாடியதை நான் பார்த்திருக்கிறேன். அப்போதிருந்த ஆங்கில அதிகாரிகள் நம் கிராமத்து மொழியைப் படிக்கவும், பேசவும் கற்றிருந்தார்கள்.அப்படிப்பட்ட அதிகாரிகள் நம் மொழியைப் பற்றிய செய்திகளைச் சொல்வதிலும், விளக்கவுரைகள் எழுதுவதிலும் வல்லவர்களாக இருந்தார்கள்.

''1900, 1905, மற்றும் 1910—ஆம் ஆண்டு வரையிலும்கூட, மாவட்ட அளவிலான நீதிமன்றங்களில், அம்மாவட்டத்தில் வழங்கப்பட்ட மொழியிலேயே வழக்குகள் நடத்தப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் மட்டும்தான் வேறொரு மொழி பயன்படுத்தப்பட்டது.

அடுத்த பதினைந்து ஆண்டுகளுக்கு இந்தியும் ஆங்கிலமும் ஆட்சி மொழியாகத் தொடர்ந்து பயன் படுத்தப்பட வேண்டுமென்று அரசியல் சட்டத்தில் கண்டிருக்கிறது. இருப்பினும், அஞ்சல் அட்டைகள் இந்தித் தலைப்பைக் கொண்டும், பணம் அனுப்புவதற்கான பாரங்கள் இந்தியிலும் அச்சடிக்கப்பட்டுள்ளது. அதைப் பார்த்தால், நானே ஒரு படிக்காத முட்டாளாகத் தெரிகிறது. இந்தப் பதினைந்து ஆண்டுகளுக்காவது ஆங்கிலத்தையும் இந்தியையும் பயன்படுத்துவதுதான் எளிதான காரியமென்று நான் கருதுகிறேன்.

---

ஆங்கிலத்தை அகற்றிவிட வேண்டும் என்று இப்பொழுதெல்லாம் சொல்வது நாகரிகமாகவும், நாட்டுப்பற்றாகவும் கருதப்படுகிறது. கட்டாயமாக ஆங்கிலத்தை கற்றுக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத் திலும் ஒருவரும் இல்லை. தற்சமயத்தில், ஆங்கிலத்தை எல்லோராலும் அகற்றிவிட முடியாது என்பதுதான் உண்மை. உயர்நிலைக் கல்விக்காக ஏற்படுத்தப்பட்ட கமிஷனின் தலைவராக நான் இருந்த பொழுது, பல நாட்டுத் தூதுவரலுவலகங்களிடம் ஆங்கிலத்தைப் பற்றிய தகவலைக் கேட்டோம். பிரான்சு நாட்டில் பதினோராவது வயதிலிருந்து ஆங்கிலம் சொல்லிக் கொடுக்கப்பட்டிருக் கிறது. ஆனால் கட்டாயப்பாடமில்லை. ஜப்பான் நாட்டுப் பள்ளிகளில் ஆங்கிலம் இருக்கிறது. உயர்நிலைப்பள்ளி அளவில் கட்டாயப்பாடமாகவும், பல்கலைக் கழகத்தில் விருப்பப் பாடமாகவும் உள்ளது.

ஆட்சிமொழி என்பது ஆட்சி செய்வதற்காகத்தான். ஆனால், அம்மொழி 36 கோடி மக்களுக்கும் பொது மொழியாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவது, உண்மை நிலையை அறியாது கற்பனை உலகில் வாழ் வதற்கொப்பும். நிதானமான மாற்றத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிற என்னைப் போன்றவர்களைத் தேசத் துரோகிகள் என்றாவது சொல்லாமல் இருக்கட்டும் என்றார்.

திரு எம்.பி. கோவிந்த மேனன்:—

''இந்திய நாட்டின் பிதா என்று போற்றப்படும் மகாத்மாகாந்தி அவர்கள், 1920—ஆம் ஆண்டு முதலே மொழிக் கொள்கையும், அதன் பிரச்சினை பற்றியும் ஆய்ந்து வந்திருக்கிறார்கள். மகாத்மாக காந்தி அவர்கள், காங்கிரஸ் கட்சியின் செயல்பாடுகளை மொழிவாரி மாநிலங்கள் என்ற அளவில் தான் பிரித்து நிருவகித்து வந்தார்கள். இந்திய நாட்டை, பேசப்படுகின்ற மொழி களின் அடிப்படையில் பிரித்துக் காங்கிரஸ் கட்சியைப் பயன்படுத்தினார். ஆங்கிலேயர்களை வெளியேற்றும் நோக்கத்துக்காக மட்டும் இதைச் செய்தார் என்று சொல்ல முடியாது. எதிர்கால இந்தியாவின் நிருவாகம், பேசப் படுகின்ற மொழிகளின் அடிப்படையில் மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்படவேண்டும் என்ற தீர்க்க தரிசனத்துடன் தான் இந்த ஏற்பாட்டைச் செய்தார் என்று சொல்லலாம்.

என் ஆசையெல்லாம், தமிழ் நாட்டின் நிருவாகம் தமிழ் மொழியிலேயே நடத்தப்பட வேண்டும் என்பது தான். தலைமைச் செயலகம் தொடங்கி கிராமங்கள் வரையிலும், உயர்நீதிமன்றத்திலிருந்து கீழ்மட்டக் கிராமத்து உயர்நீதிமன்றங்கள் வரையிலும், கல்லூரிகள் முதல் கிராமத்துப் பள்ளிகள்வரை எங்கெங்கும் தமிழ்மயம் என்ற நிலைமை வரவேண்டும். அப்படிப்பட்ட சூழ்

நிலையில்தான் ஒருவன் தன்னுடைய பொறுப்புகளை உணரமுடியும்.

மலபாரிலும், ஆந்திரப் பிரதேசத்திலும் இந்தியைப் பொறுத்த மட்டில் அதைத் தேசிய மொழியாகவும், மத்திய ஆட்சி மொழியாகவும் ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். ஆந்திர தேசம் பிரிந்ததைப் போலவே கேரளாவும் பிரிந்து தனி மாநிலமாக மலர்ந்துவிடும். ஆனால், தமிழ் நாட்டு நண்பர்களுக்கு ஒன்றை நான் எடுத்துச் சொல்லி எச்சரிக்கை செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் பெரிய தவறு செய்யப்போகிறீர்கள். இந்தியை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். காலப் போக்கில் இந்தி ஏற்றுக் கொள்ளப் படும். 200 ஆண்டுகளாக இருந்து வந்த மொழியான ஆங்கிலத்தைக் கற்காததனால், மக்களில் ஒரு சாரார் தாழ்ந்தவர்களாக, பிற்போக்கானவர்களாக ஆக்கப்பட்டுவிட்டார்கள். அந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கக் கூடாது. பல வகையிலும் ஒதுக்கப்பட்ட மக்கள்தான் தொழில்கல்வி கற்பதற்கும், வேலையில் சேர்வதற்கும் சலுகைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்களின் எதிர்கலத்தைத் தொடர்ந்து பாழாக்கப் போகின்றீர்களா? இது ஒரு நல்ல சமயம்; நழுவ விடாதீர்கள்; இந்தியைப் படித்து முன்னேறுங்கள் என்றார்.

*1955*—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *29*—ஆம் நாளன்று, சென்னை சட்டமன்றக் கீழவையில் அரசாங்க மொழிக் கமிஷனின் கேள்வித்தாளை விவாதத்திற்கு அறிமுகப் படுத்தி, திரு சி. சுப்பிரமணியம், கல்வியமைச்சர் அவர்கள் பேசியதாவது:—

இது முக்கியமான பிரச்சினையாக இருப்பதால், ஒரு கமிஷனுடைய கேள்வித்தாளையே சட்டமன்றத்தின் விவாதத்திற்காக வைக்கப்பட்டுள்ளது. மொழி என்பது மக்களுடைய விவகாரங்களில் மிக முக்கியமான இடத்தை வகிக்கிறது. மொழியைப் பற்றிய விவாதத்தில், நாம் இந்திய நாட்டைப் பற்றியும், இந்திய அரசியல்

சட்டத்தைப் பற்றியும் கவனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நாட்டின் ஒற்றுமையில் நம்பிக்கை இல்லாதவர்களுக்கும், தனிநாடு கேட்பவர்களுக்கும், இவ்விவாதம் நடத்த சரியான நேரமுமாகாது; பொருத்தமான இடமுமாகாது. மொழிக் கமிஷனின் கேள்வித்தாள், ஒற்றுமைப் பட்ட இந்தியாவைப் பற்றியது. தனிநாடு வேண்டுபவர்கள் இக்கேள்வித்தாளைப் பார்த்துக் குழம்ப வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்திய ஒருமைப்பாட்டில் நாங்கள் நம்பிக்கை வைத்திருக்கிறோம். தமிழ்நாடு, தனிநாடாக வேண்டுமென்ற கோரிக்கையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, இவ்விவாதத்தில் கலந்து கொள்ளுங்கள். நம் நாட்டின் தற்போதைய அரசியல் ஏற்பாட்டில், மொழியின் பங்கு என்ன என்பதைப் பற்றித்தான் நாம் விவாதிக்க வேண்டும்.

இந்த விஷயம், நாடு முழுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்தது. அரசியல் நிருணய சபையிலும் இதைப்பற்றி விவாதித்தார்கள். கருத்து வேற்றுமையை உருவாக்கிய மிக சிக்கலான விஷயமாகும் இது. பொதுவாக ஒப்புக் கொள்ளகூடிய முடிவு எடுக்கப்பட்டு, அரசியல் சட்டத்தில் பொறிக்கப்பட்டுள்ளது இந்த நாடு முழுவதற்கும் ஒரு ஆட்சிமொழி தேவையா என்பதைத் தீர்மானிக்க வேண்டும். இந்தியா ஒரு நாடாக இருக்கும் வரையிலும், ஆட்சி மொழியொன்று தேவைப்படுகிறது. ஆங்கிலத்தை ஆட்சி மொழியாகத் தற்பொழுது பயன்படுத்தி வருகிறோம். இதைக் காலவரையின்றித் தொடர வேண்டுமா என்பதின் மீது இம்மன்றம் கருத்துத் தெரிவிக்க வேண்டும்.

நம் வட்டார மொழிகளைப் பொறுத்தமட்டில், அதனுடைய வளர்ச்சியும், முன்னேற்றமும் எந்தக் காரணத்தைக் கொண்டும் தடைப் படக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கிறோம். வட்டார

மொழிகளின் பாதுகாப்பும், வளர்ச்சியும் மாநில அரசின் பொறுப்பாகும். இதைப் பொறுத்தமட்டில், மத்திய அரசு தலையிட முடியாது. சட்டமன்றத்தின் நடவடிக்கைகளுக் காவும், ஆட்சி நடத்தவும், கல்வியைப் புகட்டவும், ஏதாவது ஒரு மொழியைப் பயன்படுத்துவதற்கு மாநில அரசுக்குப் பூரண உரிமை இருக்கிறது. மத்திய அரசு இதற்காகச் சட்டமியற்ற முடியாது. மத்திய அரசைப் பொறுத்தவரையில், இப்படிப்பட்ட விஷயங்களில் மாநில அரசு தன் கருத்தைச் சொல்லலாம். மாநில விவகாரங் களில் மத்திய அரசு தலையிட முடியாது என்ற காரணத் தினால், மத்திய அரசின் மொழி விவகாரங்களில் மாநில அரசும் தலையிடக் கூடாது என்பது சரியல்ல. கால வரையறையின்றி ஆங்கில மொழியைத் தொடர வேண்டும் என்று சொல்வதும், மத்திய அரசில் ஆட்சிமொழியாக நீட்டிக்க வேண்டும் என்பதும் சரியல்ல; இவற்றை யெல்லாம் வைத்துப் பார்த்து முடிவெடுப்பது எளிதாகும்.

நீண்ட விவாதத்திற்குப் பின்னும், தீர ஆலோசித்ததின் பேரிலும் இந்திதான் மத்திய அரசின் ஆட்சிமொழியாக இருக்க முடியும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட தீர்மானத்தினால, இந்தியாவின் எந்தப் பகுதியும், பாதகமான நிலைக்குத் தள்ளப்படக் கூடாது என்பதை நாம் கவனிக்க வேண்டும் என்றார்.

பி.ஜீவானந்தம்:—

அரசாங்க மொழிக் கமிஷன் விடுத்துள்ள கேள்வித் தாளுக்கு நம்முடைய அரசாங்கத்தார் பதில் சொல்வதற்கு முன்னால், பதில் சொல்வதற்கு அனுகூலமாக இந்தச் சபையினுடைய கருத்தைத் தெரிந்து கொள்ள இப்பொழுது இந்த விவாதம் நடைபெறுகிறது. இந்தப் பிரச்சினையில் அடங்கியுள்ள முக்கியமான சில அம்சங்களுக்குக்

கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்து என்ன என்பதை நான் இந்தச் சபையின் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

"அரசாங்க மொழி பற்றிய பிரச்னை வருகிற பொழுது முதன்முதலாக ஒன்றைக் கவனிக்க வேண்டும். பிரதேச மொழி பற்றி, நம் எல்லோருடைய தாய் மொழி பற்றி அதற்கு எந்த ஸ்தானம் கொடுக்கப்பட வேண்டு மென்பதைக் கமிஷனுக்கு முன்னால் நாம் நம் கருத்தைத் தெளிவுபடுத்திவிட வேண்டும் என்று விரும்புகிறேன். ஏன், நம்முடைய தேசீய இந்தியாவின் வளர்ச்சியில் பல மொழிகளைக் கொண்ட இந்த நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இந்த மொழிப் பிரச்னை கிளம்பியிருக் கிறது.

நம்முடைய மாபெரும் தலைவர் எல்லாம் தேசீயப் போராட்டத்தை நடத்திய காலத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தை நடத்திய காலத்தில் பல்வேறு மொழிகளைப் பேசக்கூடிய மக்கள் உள்ள இந்த நாட்டில் எல்லா மக்களிடையேயும் அதிகபட்சமான ஒற்றுமை ஏற்படவேண்டுமென்ற காரணத்திற்காக ஒரு பெரும் கொள்கையை வகுத்தார்கள். அதாவது பிரதேச வாரியாக, மொழிவாரியாக, காங்கிரஸ் தலைமை ஸ்தானங்களை அமைத்தார்கள். பிரதேசவாரியாக மொழிவாரியாக காங்கிரஸ் கமிட்டிகளை அமைத்து, இந்திய நாட்டின் விடுதலைக்காக நாட்டு மக்களின் ஏகோபித்த ஒற்றுமை யைத் திரட்டினார்கள். அதற்குப் பிறகு, அந்தப் போராட்டம் முடிந்து நாடு சுதந்திரம் அடைந்த பிறகு, பலமொழி பேசும் மக்கள் உடைய இந்த நாட்டை ஆளும் போது, பிரிட்டிஷ் காலத்தில் ஏற்பட்டிருந்த மாகாணப் பிரிவினையை அப்படியே வைத்துக் கொண்டு இராஜ்ய சர்க்கார்கள் அமைப்பது சரியல்ல என்பதும் எல்லோ ராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மை. இராஜ்யங்களை அமைக்கும் போது அது பூகோள சாஸ்திர ரீதியில்

அமைக்கப்படவேண்டும். ஆனால், இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஆங்காங்கே மக்கள் பேசக்கூடிய மொழி வழி அடிப்படையில் அமைக்கப்பட வேண்டும் என்பது நேரு சர்க்கார் ரிப்போர்ட். இதைப்பற்றித் தெள்ளத் தெளிவாகக் கருத்துச் சந்தேகமின்றித் தெளிவுபடுத்திவிட வேண்டும். மொழி வழியே இராஜ்யங்கள் அமைக்கப்படுவது பலம் பொருந்தியதாக இந்திய யூனியன் திகழ்வதற்கு வழி வகுக்கும் என்கின்ற உண்மையைத் தேசீயப் போராட்டம் நமக்கு எடுத்துக் காட்டிவிட்டது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

ஆகவே, பிரதேச மொழிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். நான் தமிழன். என்னுடைய மொழியே இந்த இராஜ்யத்தில் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அதேபோல், மலையாளிகளும், கன்னடர்களும் இந்த இராஜ்யத்தில் இருக்கும் வரையிலும், மலையாளமும் கன்னடமும் இந்த இராஜ்யத்தின் ஆட்சி மொழிகளாகவும் இருந்து வர வேண்டும். இதுதான் அடிப்படை நியதி. கல்விக் கூடங்களிலும் ஆட்சி மன்றத்திலும், நியாய மன்றத்திலும், நிருவாகத்துறையிலும், பிரதேச மொழியே விலங்க வேண்டும். ஆகவே, வெரு சீக்கிரமாக தமிழ் மொழியை ஆட்சிமொழியாக்க அரசியலார் தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். உயர்நீதிமன்றத்திலும் தமிழ்மொழிதான் கையாளப்பட வேண்டும். கல்வியைப் பொறுத்தவரையில் பல படிகளிலும் தமிழ் மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டும். ஜனநாயகத்தின் முதல் அடிப்படையான கொள்கை இதுதான். இப்படிச் செய்தால்தான் ஜனநாயகத்தின் முதல் வடிவம் சிருஷ்டிக்கப்படும். தமிழ் தெரிந்தால் போதும், இந்நாட்டின் ஆட்சியாளராகவும் ஆகலாம், உயர்நீதிமன்ற நீதிபதி ஆகவும் ஆகலாம், கல்லூரிப் பேராசிரியர்களாகவும் ஆகலாம் என்று நீதி, நேர்மை,

உழைப்பு ஆகியவற்றைக் கொண்டடோர் எண்ணும் காலம் உண்டாக வேண்டும். ஆகவே, உடனடியாகப் பிரதேச மொழியாகவும், நிருவாக மொழியாகவும், கல்லூரி போதனா மொழிய்ாகவும், ஆக்கவேண்டும். இது முதல் கடமை. அரசியல் சட்டத்திலே பத்து ஆண்டுகளுக்குள்ளாக இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களையும் கல்வி அறிவு உடையவர்களாக ஆக்க வேண்டுமென்ற விதி இருக்கும் போது, அதனை அமுலாக்கப் பாடுபட வேண்டும். சுயராஜ்யம் கிடைத்த பிறகு, ஆரம்பப் பாடசாலைகளில் நாம் தமிழையே போதனா மொழியாக்கி விட்டோம். அதற்கு அடுத்தப்படியாக உயர் நிலைப்பள்ளியிலும் தமிழையே போதனா மொழியாக்கி விட்டோம். தர்க்க ரீதியாகத் தொடர்ந்து தமிழையே கல்லூரிகளிலும் போதான மொழியாக்குவதுதான் நியாயம். இந்த விஷயத்தில் நம்முடைய சர்க்கார் துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழை ஆட்சி மொழியாக்கவும் படிப்படியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்பொழுதே யூனியனின் ஆட்சிமொழியைப் பற்றிய பிரச்னை சுலபமாகவும் ஒற்றுமையாகவும் உருவாக வழியேற்படும்.

அடுத்தப்படியாக இந்திய யூனியனின் ஆட்சி மொழிக்கு வருவோம். பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலிருந்து இன்று வரைக்கும் ஆங்கிலம்தான் யூனியனின் ஆட்சி மொழியாக இருந்து வருகிறது. கடந்த 150 ஆண்டுகளாக இருந்து வருகிறது. தொடர்ந்தும் அது ஆட்சிமொழியாகவே இருந்து வரவேண்டுமா என்பதற்குத் தொடர்ந்து அது இனிமேல் இருக்கக் கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். இன்று வரையில் அது ஆதிக்கம் செலுத்தும் மொழியாகவே இருந்து வந்திருக்கிறது. இனிமேலும் அது ஆதிக்கம் செலுத்தும் மொழியாக இருக்கக் கூடாது. ஆங்கிலம் தெரியாது என்பதற்காக மற்றவர்களை முன்னுக்கு வரவிடாமல் தடுக்கும் மொழி யாக இருக்கக் கூடாது என்பதை எல்லோரும் ஒப்புக்

கொள்ளுகிறார்கள். அப்படியானால், நம் நாட்டிலுள்ள மொழிகளில் வேறு எந்த மொழி இந்திய யூனியனின் ஆட்சிமொழியாக வருவதற்கு ஏற்றது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும் போது, மிகப் பெரும்பாலோரால் இந்திய நாட்டிலே பேசப்பட்டுவரும் இந்தி மொழியே இந்திய யூனியனின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்து.

நான் யூனியனின் ஆட்சிமொழியாக இந்தி இருக்க வேண்டுமென்பது கம்யூனிஸ்டுக் கட்சியின் கருத்து என்னும் போது, அது ஆதிக்க மொழியாக இருக்கக் கூடாது என்பதும், எங்கள் கட்சியின் கருத்து என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். ஏனென்றால், இந்தி மொழி ஒன்று மட்டும் தான் இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களும் பேசக்கூடிய பொதுமொழி? இல்லை. இந்தி தேசிய மொழியா? அதுவுமில்லை. இந்தியாவின் தேசிய மொழிகளில் அது ஒன்று. அவ்வளவுதான். இந்தியாவிலுள்ள சமஸ்கிருதம் உள்பட இருக்கும் 16 தேசிய மொழிகளில் இந்தியும் ஒன்று என்பதைத்தான் எல்லோரும் ஒப்புக் கொள்ளுகிறார்கள். அரசியல் சட்டத்திலும் அவ்வாறே தான் குறிப்பிட்டிருக்கிறது. ஆனால், அரசியல் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிற தேசீய மொழிகள் 16—இல் இந்தி கனிசமான அளவுக்கு அதிகமான மக்களால் பேசப்பட்டு வருவதால், அது இந்திய யூனியனின் நிருவாக மொழியாக இருப்பதற்குத் தகுதியானது என்கின்ற காரணத்தினால் தான், மத்திய அரசாங்கத்தின் நிருவாக மொழியாக இந்தி இருக்க வேண்டுமென்பதை கம்யூனிஸ்டுக் கட்சி ஆதரிக்கிறது. மத்திய அரசாங்கம் இந்தியை நிருவாக மொழியாக வைத்துக் கொள்வதற்கும், வெளி நாட்டோரது தொடர்பு வைத்துக் கொள்வதற்கும், இராஜ்ய சர்க்கார்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஆனால், எல்லா இராஜ்யங்களின் நிருவாக

மொழியாக அதை ஆக்கக் கூடாது. அந்தந்த இராஜ்யங் களின் பிரதேச மொழி அந்தந்த இராஜ்யங்களின் நிருவாக மொழியாகவே இருக்க வேண்டும். ஆங்கிலம் இன்றைக்கு இருப்பதுபோல இந்தி எந்தக் காலத்திலும் ஆதிக்க மொழியாக வரக்கூடாதென்பதைத் திட்டவட்டமாகக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தி மத்திய சர்க்காரின் அரசாங்க மொழியாக வருகிறபோதே மாகாண சர்க்கார் களின் நிருவாக மொழியாக அந்தந்த மாகாணத்திலுள்ள பிரதேச மொழிகள் ஆக்கப்பட வேண்டுமென்பதை வலியுறுத்த வேண்டும். நமது இராஜ்ய சர்க்காரும் அதற்கான நடவடிக்கையை துரிதமாக எடுக்க வேண்டும். தாய்மொழியாகிய தமிழை இந்த இராஜ்யத்தின் நிருவாக மொழியாகவும், கல்லூரிகளில் போதனா மொழியாகவும், நீதிமன்ற நிருவாக மொழியாகவும் ஆக்கத் துரித நட வடிக்கை எடுக்க வேண்டும்.

மூன்றாவது மத்திய பப்ளிக் சர்விஸ் கமிஷனைப் பற்றி ஒரு வார்த்தை. நம்முடைய இராஜ்ய சர்விஸ் கமிஷன் அறிவுச் சோதனை (General Knowledge) பரீக்ஷை நடத்தும் போது அதற்கு நம்முடைய பிரதேச மொழியை உப யோகப் படுத்துகிறோம். இராஜ்ய சர்வீசுக்கு வரக் கூடியவர்கள் தகுதியுடையவர்களா, அறிவு படைத்தவர் களா என்பதைப் பரீக்ஷை பண்ணுவதற்குப் பிரதேச மொழியே போதும் என்று இருக்கிறபோது, யூனியன் பப்ளிக் சர்விஸ் கமிஷன் அறிவுச் சோதனைப் பரீக்ஷையும் பிரதேச மொழியிலேயே இருக்க வேண்டும் என்பது கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய கருத்து.

இந்தி, மத்திய அரசாங்க மொழி என்பதற்காக அதை மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் நடத்தும் Knowledge test க்குக் கொண்டு வரவேண்டும் என்பது தவறு. ஆகவே கூடாது என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிரதேச மொழியின் மூலம் அறிவுச் சோதனை பரீக்ஷை எழுதி, அந்தப் பரிசோதனையில் ஒருவர் தேறிய பிறகு அவருக்குச் சாவகாசம் கொடுக்க வேண்டும். அப்படிப்பட்டவர் இந்தியா முழுவதிலும் வேலை செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால் மொழிச் சோதனை Language test என்ற முறையில் அதற்குமட்டும் இந்தி மொழியை உபயோகப்படுத்த வேண்டும் என்பது எங்களுடைய கருத்து.

பார்லிமெண்டிலும் இந்திதான் மொழியாக இருக்க வேண்டுமா என்ற தகராறு இருக்கிறது. அது எங்களுடைய கருத்து அல்ல. பாராளுமன்றத்திற்கு எல்லாப் பிரதேசத்தில் இருக்கக் கூடியவர்களும் அங்கத்தினர்களாக வருகிறார்கள். எந்த மொழி பேசும் இராஜ்யத்திலிருந்து அங்கத்தினர்கள் பாராளுமன்றத்திற்கு வந்தாலும், அவர்கள் முழு மூச்சுடன் தங்களுடைய பிரதேச மக்களின் கருத்துக்களை அங்குப் பிரதிபலிக்கக் கூடிய வகையில் நடவடிக்கைகளில் பங்கு எடுத்துக் கொள்ளக் கூடிய வசதியும், அங்கு நடைபெறும் விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்கு வாய்ப்பும் இருக்க வேண்டும். இந்தியாவிலுள்ள எல்லா மொழி பேசும் மக்களும் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளில் முழு மூச்சுடன் பங்கெடுத்துக் கொள்ளக்கூடிய வகையில், இந்தியாவின் தேசிய மொழிகளாகவுள்ள அத்தனை மொழிகளுக்கும் அங்கு இடம் இருக்க வேண்டும்.

இந்தி மொழி பேசுபவர்களுக்கு என்ன உரிமை பாராளுமன்றத்தில் இருக்கிறதோ, அதே உரிமை தமிழ் பேசும் பிரதிநிதிகளுக்கும் இருக்க வேண்டும். அதேபோல, மலையாளம், கன்னடம் பேசும் ஒவ்வொரு பிரதேசத்திலிருந்து வருபவர்களுக்கும் சம உரிமை இருக்க வேண்டுமென்று நான் கூறுகிறேன். அப்படிச் செய்யவேண்டும் என்று சொல்லும்போது, 'டெக்னிகல் டிபிகல்டீஸ்' இருக்கின்றன என்ற பிரச்னையையெல்லாம் கிளப்புவார்கள்,

கிளப்ப முடியும். ஐக்கிய நாட்டுச் சபையில், பல மொழிகள் பேசுகிறவர்கள் இருக்கிறார்கள். ஆயினும், அங்குப் பல மொழிகளில் நடவடிக்கைகள் நடத்திவருவதைப் பார்க்கிறோம். அதைத் தவிர, ஐரோப்பா கண்டத்திலுள்ள ஒரு சுண்டைக்காய் நாடாக இருக்கக் கூடிய, அதாவது சுவிட்ஸர்லாந்து தேசப் பாராளுமன்றத்தில் மூன்று மொழிகள் பேசப்படுகின்றன என்பதையும் அறிகிறோம். அப்படிப்பட்ட ஒரு சிறு தேசத்திலேயே மூன்று மொழிகளில் பார்லிமெண்டு நடைபெறுகிறதென்றால், மிகப் பெரிய தேசமாகிய இந்தியா தேசத்தில் அப்படிச் செய்வதென்பது ஒரு பெரிய கஷ்டமாக இருக்க முடியாது. மொழி பெயர்ப்பாளர்களை வைத்து, ஒரே சமயத்தில் மொழி பெயர்த்துச் சொல்லும் இயந்திரத்தை வைப்பதற்கு முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதமாக இப்பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்க முடியும். இதில் அதிக கஷ்டமொன்றும் இருப்பதற்கில்லை. ஏனென்றால், நம்முடைய இந்தியா தேசத்தில் பல்வேறு மொழி பேசக்கூடிய மக்கள் இருக்கிறார்கள். 16 மொழி பேசக்கூடிய பெரும்பான்மையான மக்களும் பாராளுமன்றத்திற்கு வந்து தங்கள் தங்களுடைய பிரதேச மக்களின் கருத்துக்களை அங்குப் பிரதிபலிக்கச் செய்வதன் மூலம் பார்லிமெண்ட் செழிப்படையும். அப்பொழுதுதான் ஜன நாயகத் தன்மை நல்ல முறையில் வளர முடியும். ஒரே சமயத்தில் மொழி பெயர்த்துச் சொல்லுகின்ற கருவிகளையும் மொழி பெயர்ப்பாளர்களையும் ஏற்பாடு செய்தால், இந்தச் சிறு கஷ்டத்தைச் சுலபமாகச் சமாளித்து விடலாம். இந்தியாவுக்கு இது கஷ்டம் அல்ல. பார்லிமெண்ட் மொழி இந்தி அல்ல; எல்லாப் பிரதேச மொழிகளும் பார்லிமெண்டு மொழிகளாகும் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இம்மாதிரி எந்தெந்தத் துறையில் இந்தி இருக்க வேண்டும் என்று பார்க்கிறபோது, ஒரு குறிப்பிட்ட

எல்லைக்குள்தான் அது இருக்க முடியும் என்று வந்து விடுகிறது. ஒன்றுபட்ட இந்தியா மேலும் மேலும் வளர வேண்டும் என்று விரும்புகிறபோது, இந்தி பேசப்படாத பிரதேசத்தில் இருக்கிறவர்கள் இந்திாவிலுள்ள ஒரு பிரதேச மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும், இந்தி பேசப்படும் பிரதேசத்தில் இந்தியாவின் பிரதேச மொழி களில் ஒன்றையும் கற்றுக் கொள்ள வேண்டும் என்றும் செய்ய வேண்டும். ஆகவே, இந்திக்கு இடம் என்ன? இந்தி கற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் எற்படும்போது, அவசியப்பட்டால், அவசியப்படுகிறவர்கள் இந்தியைக் கற்றுக் கொள்வார்கள். ஆகவே, அவசியப்பட்டால்தான் இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்றுதான் வர வேண்டும்.

இம்மாதிரி வடக்கே உள்ளவர்கள் இந்தியைத் தவிர வேறொரு பிரதேச மொழியையும், தெற்கேயுள்ளவர்கள் அவரவர் பிரதேச மொழியையும் தேவைப்பட்ட பொழுது இந்தியையும் கற்றுக் கொண்டு வரும்போது, காலப் போக்கில் தென்னாட்டவர்களும் வடநாட்டவர்களும் ஒன்றுபட்டு, ஒன்றுபட்ட இந்தியா நல்ல முறையில் ஒற்றுமையுடன் வளருவதற்கு ஏதுவாயிருக்குமென்று கம்யூனிஸ்டுக் கட்சியினராகிய நாங்கள் விரும்புகிறோம்.

மத்திய சர்க்காருடைய அரசாங்க மொழி, யூனியன் அரசாங்க மொழி இந்தி என்று நான் குறிப்பிட்டேன். மத்திய சர்க்கார் நிருவகித்துவரும் ரயில்வே, போஸ்டல், சென்ட்ரல் எக்ஸைஸ், இன்கம்டாக்ஸ் போன்ற பல இலாக்காக்கள் இருக்கின்றன. இவைகளைப் பொறுத்தவரை, டில்லியிலிருந்து வருகிற உத்தரவு இந்த இராஜ்யத்தில் இருக்கக் கூடிய இலாக்காக்களுக்குக் கடிதங்கள் இந்தியில் வரட்டும். ஆனால், அந்த இலாக்காக்கள் மக்களோடு உறவு வைத்துக் கொள்ளும்போது, அந்தந்த இராஜ்யத்தில் பழக்கத்தில் இருக்கக் கூடிய பிரதேச மொழியில்தான்

கடிதப் போக்குவரத்து நடத்த வேண்டும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

எந்த அளவுக்கு எவ்வளவு வேகமாக, எவ்வளவு முழு மூச்சுடன் முயற்சி எடுத்துக் கொண்டு நம்முடைய தாய் மொழியை, அது இருக்க வேண்டிய இடத்தில் வைக்க வேண்டும். அதாவது எல்லாத் துறைகளிலும் அரசு வீற்றிருக்கக்கூடிய முறையில் பிரதேச மொழியை எவ்வளவுக்கெவ்வளவு கொண்டு வருகிறோமோ அவ் வளவுக்கவ்வளவு யூனியன் அரசாங்க மொழியாக இந்தி இருக்க வேண்டும் என்ற காரியம் வெற்றி பெறும்.

இந்தியைப் பற்றிப் பிரமாதமாக வினாத்தாள் வந்திருக்கிறது. அதைப்பற்றிக் கேள்விக்குமேல் கேள்வி வருகிறது. பிரசாரம் நடக்கிறது. அதே சமயத்தில் தமிழ் நாட்டில் தமிழ் ஆட்சி மொழியாக இல்லை. கல்லூரிகளில் தமிழின் மூலம் பாட போதனை நடைபெறவில்லை. உயர் நீதிமன்றத்திலும் தமிழில் நிருவாகம் நடைபெறவில்லை. தமிழ் அலட்சியப்படுத்தப்படுகிறது. ஆங்கிலம் திணிக்கப் பட்டபோது, பிரதேச மொழிக்கு என்ன பாதகம் ஏற் பட்டதோ, அதே மாதிரி இந்தி திணிக்கப்படுவதால் பாதகம் வரும் என்ற எண்ணம் உருவாக இடம் இருக்கிறது என்பதை அடுத்தபடியாக வற்புறுத்திக் கூற விரும்புகிறேன். எந்தெந்தப் பிரதேசத்தில் எந்தெந்த மொழி பேசப்படு கிறதோ அந்தந்த மொழிகள் எந்த முறையில் பல துறை களிலும் வளர்க்கப்படுகிறதோ துரிதமாக வளர்க்கப்படு கிறதோ அந்த அளவுக்குத்தான் யூனியன் அரசாங்க மொழியாக இந்தி வெற்றிகரமாக ஏற்படுவதற்கான நிலைமை ஏற்படும் என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்தக் காரியத்தில், இந்தக் கருத்தின் அடிப்படையில் இந்திக் கமிஷனுடைய கேள்வித்தாளுக்கு நம்முடைய சர்க்காரின் பதில் இருக்க வேண்டுமென்று நான் கூற விரும்புகிறேன். அதே சமயத்தில், நம்முடைய பிரதேச

மொழி, நம்முடைய தாய் மொழி நம் நாட்டில் ஆட்சி மொழியாகவும், போதனா மொழியாகவும் எல்லாத் துறைகளிலும் வழங்கப்பட வேண்டும். மத்திய அரசாங்க மொழி என்ற வகையில் இந்தி ஒரு குறிப்பிட்ட எல்லையில் இருக்க வேண்டும். அந்த முறையில் சர்க்காருடைய கருத்து இருக்குமானால், சர்க்காரோடு இது விஷயத்தில் கம்யூனிஸ்டுக் கட்சி பரிபூரணமாக ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது, முழு ஆதரவை அதற்கு அளிக்கிறது என்பதைக் கூற ஆசைப்படுகிறேன்.

அரசியல் சட்டப்படி, சட்டம் அமுலுக்கு வந்து 15 ஆண்டுகளுக்குள் அதாவது 1965—ஆம் ஆண்டுக்குள் இந்தி வந்துவிட வேண்டும் என்று இருக்கிறது. அந்த ஷரத்தை எடுத்துவிட வேண்டும் என்பது கம்யூனிஸ்டுக் கட்சியினுடைய அபிப்பிராயம். இந்தக் காரியங்கள் நிறைவேறுகிறபோது, 'கட்டாயம்' என்று நாளைக்கு வந்தாலும் சரி, அல்லது இன்னும் 200 ஆண்டுகள் கழித்து வந்தாலும் சரி, தகராறு இருக்கத்தான் செய்யும். இந்தி மொழி 'கட்டாயம்' என்ற முறையில் எத்தனை ஆண்டுகள் கழித்து வந்தாலும், அதை மக்கள் ஒப்புக் கொள்ளவே மாட்டார்கள். ஆகவே, அந்த ஷரத்தை எடுத்து விட வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி கூறுகிறது.

தொடர்ந்து முத்தையா செட்டியாரைப் பார்த்து, 'இந்திய யூனியன் அரசாங்கத்திலும், நமது மாகாண அரசாங்கத்திலும், ஆட்சி மொழி எந்த மொழியாக இருக்க வேண்டு' மென்று அவருடைய அபிப்பிராயம் என்னவென்று திரு எம்.கல்யாணசுந்தரம் அவர்கள் கேட்டார்கள். அதற்குப் பதிலளித்தார் திரு முத்தையா செட்டியார்:—

வட்டார மொழிகளையோ மலையாளத்தையோ கல்லூரிகளிலும், சட்டமன்றத்திலும் பயன்படுத்தலாம். முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு மாகாண ஆட்சி மொழியை

மாற்றுவதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. முப்பது ஆண்டுகளுக்காவது, உறுப்பினர்கள் ஆங்கிலத்திலோ தமிழிலோ மலையாளத்திலோ சட்டமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு இருக்க வேண்டும். இருபத்து ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு சென்னை சட்டமன்றத்தில் பெரும்பாலான உறுப்பினர்கள் தமிழில் பேசுவார்கள் என்று நினைத்துப் பார்த்தது உண்டா? முப்பது ஆண்டுகளுக்கு முன்பு திரு பி.வி.நரசிம்மாச்சாரி என்பவர் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார் அவர் தமிழில் பேச ஆரம்பித்தவுடன் ஒரு முக்கிய உறுப்பினர் எழுந்திருந்து, அப்பேச்சு முடியும் வரை மதிய உணவுக்குக் கலைந்து செல்லலாம் என்று மிகவும் கிண்டலாகப் பேசினார். கல்லூரிகளிலும் பள்ளியிலும் ஆங்கிலமே தொடர்ந்து பயன்படுத்தப்பட வேண்டு மென்பதை ஆதரிக்கிறேன். இன்று மத்திய அரசில் ஆட்சிமொழியாக ஆங்கிலம் இருக்கிறது. பதினைந்து ஆண்டு முடிவில், இந்தி புகுத்தப்பட வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. முப்பது ஆண்டுகளுக்குப் பிறகு, இந்தி ஆட்சி மொழி ஆவதில் எனக்கு ஆட்சேபணை ஏதுமில்லை என்றார்.

திரு பி. அரங்கசாமி ரெட்டியார்:—

முதல் முதலில் காங்கிரஸ் சர்க்கார் இருந்த காலத்தில், அதாவது 1937—இல் இந்தி மொழியைப் பள்ளிக் கூடங்களில் கட்டாயப் பாடமாகப் புகுத்துவதற்குக் காரணமாக இருந்த, அப்பொழுது முதன் மந்திரியாக இருந்த இராசகோபாலாச்சாரியார் அவர்களே, நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்பு தமிழ் வாரப் பத்திரிக்கையாகிய கல்கியில், மொழிப் பிரச்னை பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையைப் பூராவும் படித்துப் பார்ப்போமேயானால், இந்தியாவில் எல்லோரிடையேயும் சகோதரத்துவம், நல் அன்னியோன்னிய மனோபாவம்

ஏற்பட வேண்டுமானால் ஒரு மொழியைப் பேசுகின்றவர்கள், அந்த மொழியைப் பேசாதவர்களின் மீது அந்த மொழியைப் புகுத்தக் கூடாதென்றும், அப்படிப் புகுத்துவதற்கு அலலது திணிப்பதற்கு முயற்சி செய்தால் நாட்டின் அமைதிக்கும், சகோதரத்துவத்திற்கும் பங்கமேற்படும் என்ற முறையில் கட்டுரை எழுதியிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 17 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது நாட்டிலிருக்கிற பல பிரச்னைகளில் மொழிப் பிரச்னை ஒன்று. கனம் நிதி அமைச்சர் அவர்கள் நேற்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கும்போது, காங்கிரஸ் கூட்டத்திற்கு ஆட்கள் சேருவதுபோல மற்றக் கட்சிக் கூட்டங்களுக்கு ஆட்கள் சேருவதில்லை என்றார்கள். அவர்கள் மற்றக் கட்சி மகாநாடுகளைப் பார்த்ததில்லை என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அவர்கள் மகாநாடு கூட்டினார்கள், அதிகப்படியான கூட்டம் வந்தது, மற்றவர்கள் கூட்டுகிறார்கள் கூட்டம் வருவதில்லை என்று கூறுகிறார்கள். நான் சொல்லுகிறேன், திராவிடக் கழக மகாநாடுகள் நடக்கின்றன, கம்யூனிஸ்டுக் கட்சியின் மகாநாடுகள் நடக்கின்றன, அவைகளுக்கு எவ்வளவு கூட்டம் வருகிறது என்பதைப் பார்க்க வேண்டும். எந்த மகாநாடுகள் நடந்தாலும் கனம் மந்திரி அவர்கள் நினைப்பதற்கு மேலாகக் கூட்டம் வருகிறது என்பதை நான் எடுத்துக் காட்டுகிறேன். இதையே கனம் மந்திரி அவர்களுக்கும் சொல்ல ஆசைப்படுகிறேன். 1936—37—ஆம் வருஷம் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தபொழுது கூட்டம் போட்டார்கள். அப்பொழுது அந்தக் கூட்டத்திற்கு இருபதாயிரம், ஏன் ஒன்றரை லட்சம் ஜனங்கள் வரைகூட வந்திருந்தார்கள் என்று சொல்லலாம். அதனால் எந்தக் கூட்டம் போட்டாலும் அதற்கு ஜனங்கள் அதிகமாகத்தான் வருவார்கள். ஆனால் எல்லோரும் அந்த மகாநாட்டை

ஆதரிப்பவர்கள் என்று சொல்ல முடியாது. கட்சியைச் சேர்ந்தவர்களும் வருவார்கள் சேராதவர்களும் வரு வார்கள். அங்கு வந்திருந்த அவ்வளவு பேர்களும் அந்தக் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிவிட முடியாது. அப்பொழுது என்ன நடந்தது? அங்குள்ள எல்லோரும் ஏகோபித்து கட்டாய இந்தி மொழி தென்னாட்டில் வேண்டாம் என்றுதான் ஒற்றுமையாகச் சொன்னார்கள். நம்முடைய மக்களும், நம் மக்களுடைய பிரதிநிதிகளும் எல்லோரும் ஒரே மனதாக இந்தி வேண்டாம் என்றுதான் சொன்னார்கள். அதற்காகத்தான் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அவர்கள் அப்பொழுது என்ன சொன்னார்கள்? அந்தந்தப் பிராந்தியங்களில் அந்தந்தப் பிரதேசத்திலுள்ள மொழியின் மூலமாகத்தான் அரசாங் கத்தை நடத்த வேண்டும் என்று சொன்னார்கள். அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள மொழியில்தான் நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்றும், கோர்ட்டுகளிலும், நடவடிக்கைகள் அந்தந்தப் பிரதேச மொழியில்தான் நடக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். ஒரு மாகாணத்திற்கும் மற்றொரு மாகாணத்திற்கும் மத்திய அரசாங்கத்திற்கும் ஏற்படக்கூடிய போக்குவரத்து அவ்வளவும் ஆங்கிலத்திலும் இந்தியிலும் இருக்கலாம் என்றும் அபிப்பிராயம் ஏகோபித்து இருக்க வேண்டுமானால் இவ்வளவு வினாக்கள் அவ்சியம் இல்லை. இது என்னுடைய தாழ்மையான கருத்து. தமிழ் இராஜ்ய நடவடிக்கைகள் தமிழ் மொழியில நடத்தப்பட வேண்டும். கல்லூரிகளில் போதனா மொழி தமிழில் நடக்க வேண்டும். சென்னை இராஜ்யத்தில் நடக்கிற சகல விதமான நடவடிக்கைகளும் தமிழிலேயே நடக்க வேண்டும். நம்முடைய இராஜ்யத் திற்கும் மற்ற இராஜ்யத்திற்கும் நடக்கும் கடிதப் போக்குவரத்து அல்லது மத்திய அரசாங்கப்போக்குவரத்து விஷயங்கள் எல்லாம், அந்தந்த அரசாங்கத்தில் நடத்தப் படுகிற மொழியில் அல்லது இந்தியில் இருக்கலாம். நான்

தமிழைப் பற்றிச் சொல்லும்போது, அது மலையாளத் திற்கும் கன்னடத்திற்கும் பொருந்தும்.

இப்பொழுது. மொழி அடிப்படையில் மாகாணங்கள் அமைக்கப்படப் போரகின்றன. அதுவும் சீக்கிரத்தில் உறுதியாகப் போவதாகத் தெரிய வருகிறது. அப்பொழுது இந்தப் பிரச்சினையெல்லாம் தீர்ந்து போய் விடும். சமீபத்தில் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு, பெரியார் இராமசாமி அவர்களுடைய வீட்டில் சிலர் கண்டு பேசினார்கள். 'என்ன அடிப்படையில் உங்களுக்கும் அரசாங்கத்திற்கும் பெரிய கருத்து வேறுபாடு இருக்கிறது' என்றும் கேட்டார்கள். அதற்குப் பெரியார் சொன்னார்: 'பழைய காலத்தில் வெள்ளைக்காரன் வந்தபோது, அவனுடைய ஏகாதிபத்யம் இருந்த காலத்தில் வெள்ளைக் கார உத்யோகஸ்தர்களை நியமிக்கும்போது எப்படி நியமித்தான். ஆந்திர நாட்டில் வேலை பார்த்தவன் அந்த நாட்டு மொழியைக் கற்றுக் கொண்டு வரவில்லை. ஆந்திர நாட்டிற்கு வேண்டிய தெலுங்கைக் கற்றுக் கொண்டு வரவில்லை. தமிழ் நாட்டில் உத்யோகம் பார்க்க வந்த போது, தமிழைக் கற்றுக் கொண்டு வரவில்லை. அந்தந்த இராஜ்யங்களுக்கு வந்தபிறகுதான் அந்தந்த இராஜ்யங் களின் மொழியைக் கற்றுக் கொண்டான்'. அதேமாதிரி, வடஇந்தியாவில் போய் உத்யோகம் பார்க்க வேண்டும் என்பவர்கள் அங்குச் சென்ற பிறகு அங்குள்ள மொழியைக் கற்றுக் கொள்ளலாம். வடநாட்டில் வியாபாரம் செய்யப் போகிறவர்களும், வியாபாரத் தொடர்பு வைத்துக் கொண்டிருப்பவர்களும் இந்தியைப் படித்துக் கொள்ளட்டும். மற்ற மாகாணத்துடன் போக்கு வரத்து வைத்துக் கொணடிருக்கக் கூடியவர்கள் அந்தந்தப் பிராந்தியத்திலுள்ள மொழிகளைக் கற்றுக் கொள்ளட்டும். அதனால் நம் பள்ளிகளில் எந்த ஸ்டேஜிலும் இந்தியைக் கட்டாயமாக்கக் கூடாது எல்லா ஸ்டேஜிலும் இந்தியைக்

கற்றுக் கொள்ள வேண்டும் என்று அரசாங்கம் சொல்வதால்தான் இந்தி ஏகாதிபத்தியம் அமைக்கும் முயற்சி இருக்கிறது என்று சொல்ல வேண்டியதாக இருக்கிறது. இதைக் கனம் அங்கத்தினர்கள் கருத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். இந்நாட்டில் நடக்கும் சகலவிதமான நடவடிக்கைகளும் சட்டசபை நடவடிக்கை, கோர்ட்டு நடவடிக்கைகள் எல்லாம் மற்றும் அரசாங்கத்தில் நடக்கும் எல்லா நடவடிக்கைகளையும் நம் நாட்டு மக்கள் சரியாகப் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் நடக்க வேண்டும். நம்முடைய நாட்டு மக்கள் எல்லா நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ள வேண்டுமென்ற அவா அரசாங்கத்திற்கு இருக்குமானால், அவர்கள் சுலபமாகத் தெரிந்து கொள்ளக் கூடிய தாய் மொழியாகிய தமிழ் மொழியில்தான் நடத்த வேண்டும். அதைக் கற்றுக் கொடுக்க அதிகப்படியான செலவு தேவையில்லை, குறைந்த காலத்தில் கற்றுக் கொடுக்கலாம், சுலபமாகக் கற்றுக் கொடுக்கலாம்; ஆகையினால், மாகாண மொழியாகிய தாய் மொழியில் எல்லா நடவடிக்கைகளையும் நடத்துவதற்கும், அதைக் கற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும்.

இதை மனதில் இருத்தி, அதற்குப் பிறகு இந்தியைப் பொறுத்தவரையில், அகில இந்திய உத்யோகத்திற்குச் செல்லுகிறவர்களுக்கு அதைக் கற்றுக் கொடுக்கலாம். நம் நாட்டிலிருந்து எவ்வளவு பேர்கள் அகில இந்திய உத்யோகங்களுக்குப் போகப் போகிறார்கள். எவ்வளவு பேர்கள் அகில இந்தியப் பிரயாணம் செய்யப் போகிறார்கள்? அவர்கள் வேண்டுமென்றால் இந்தியைக் கற்றுக் கொள்ளட்டும். அப்படி இல்லாமல் எல்லோரும் இந்தியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று சொல்வது சரியல்ல. அரசாங்க பாஷையாக இந்தியைக் கட்டாயமாக வைத்துவிட்டால் அது எல்லோருக்கும் வேலையைக் கொடுக்கும் என்று நினைத்துக் கொள்ளக் கூடாது. அந்த

அடிப்படையில் மொழித்திணிப்பு வேலை செய்யக் கூடாது.

பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டு போகும் என்று எண்ணிக் கொள்ளும் என் பார்களே, அதைப்போன்றதே இவ்விஷயம். அதாவது ஒரு போராட்டம் ஆரம்பித்தார்கள். அதற்கு முன்பு இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் இரயில்வே நிலையங் களில் எழுதப்பட்டிருந்த இந்தி எழுத்தை அழிக்க ஆரம் பித்தார்கள். அதை அழிப்பதினால் அரசாங்கம் அதைச் செய்யாதவாறு நிர்ப்பந்தப்படுத்த முடியவில்லை. இந்திக்கு இந்த இராஜ்யத்தில் எதிர்ப்பு இருக்கிறது என்பதை எடுத்துக் காட்ட வேண்டுமென்றே அதனை ஆரம்பித்தார்கள். அந்த இயக்கத்தை ஆரம்பித்தது ஒரு சிலர் தங்களுடைய சுயநலத்திற்காக ஆரம்பித்ததாக யாராவது நினைத்தால், அரசாங்கமே நினைத்தால் அது தவறு. அரசாங்கத்தார் அதை அலட்சியப்படுத்தக் கூடாது. நாட்டு மக்களுடைய உள்ளக் கருத்தின் எதிரொலிதான் அம்மாதிரி இயக்கங்கள் என்பதை நினைவில் வைத்துக் கொண்டு, இந்த மொழிப் பிரச்னையைக் கவனிக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன். சுதந்திரம் வந்த பிறகு, அந்நிய மொழியாகிய ஆங்கிலம் இருக்காது. அவரவர்களுடைய பிரதேச மொழியே ஆட்சி மொழியாக இருக்கும் என்று மக்கள் எண்ணி வந்தார்கள். அவ்வாறு எண்ணியது மக்கள் தவறு என்று யாரும் சொல்ல முடியாது. இந்தியைக் கொண்டுவந்து ஆங்கிலத் திற்குப் பதிலாக வைப்பதானால், பலமான எதிர்ப்பு இருக்குமென்று நான் முன்பு சொன்னேன். இவைகள் ஏதோ திராவிடக்கட்சியின் எதிர்ப்பு, அதுவும் ஒரு சிலரால் நடத்தப்படுகின்ற எதிர்ப்பு என்று சொல்லி, தட்டிக்கழிப் பதில் பிரயோஜனமில்லை. இந்த நாட்டிலுள்ள எல்லா மக்களின் விருப்பமும் அதுதான்.

ஆனால் மத்திய அரசாங்கம் இந்த இந்தி விஷயத்தில் மிகவும் மோசமாக நடந்து வருகிறது. குறிப்பாக இரயில்வே ஸ்டேஷன்களின் போர்டுகளில் முதலிலே இந்தியில் ஸ்டேஷன்களின் பெயர்களை எழுதி வைத்திருக்கிறார்கள். தமிழில் எழுதினாலேயே படிப்பதற்குத் தெரியாத மக்கள் இருக்கக் கூடிய பிரதேசத்தில் இந்தியில் பெயர் போர்டு களை எழுதுவதிலிருந்தே இந்தியை அவர்கள் ஆதிக்க மொழியாகத் திணிக்கவே விரும்புகிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. அதனால்தான் இவ்வளவு போராட்டமும் நடந்தது. ஐந்து ரூபாய் கரன்ஸி நோட்டுகளில்கூட ஆறாவது இடத்தில் தமிழ் பொறிக்கப் பட்டிருக்கிறது. இந்திய யூனியனில், இன்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்ட 14 மொழிகளையும் தேசிய மொழியாகக் கருதவேண்டுமென்பதே எங்கள் கருத்து. இந்த இராஜ்யத்தின் ஆட்சி மொழிகளாகத் தமிழ் வரவேண்டும். கல்தோன்றி மண் தோன்றாத காலத்தே கையில் விரலுடன் தோன்றினான் தமிழன் என்று சொல்கிறார்கள். அவ்வளவு தொன்மை வாய்ந்த தமிழனின் தாய் மொழியாகிய தமிழ் மொழியை மத்திய சர்க்காரின் நிருவாக மொழியாக இருப்பதற்கு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் நம்முடைய பிரதேசத்தில் அதற்கு முதன்மையான ஸ்தானம் கொடுக்கப் பட வேண்டும் என்பதே எங்கள் கோரிக்கை. இதை நமது அரசாங்கத்தாரும் வலியுறுத்த வேண்டும். வேண்டுமானால், மத்திய சர்க்காரின் சிப்பந்திகளாகிறவர்கள் இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத் தலாம். இருந்தாலும் கற்றுக் கொள்வதற்கும் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும். அதைத் தவிர கல்லூரி களிலோ பாடசாலைகளிளோ இந்தியைக் கட்டாயப் பாடமாக வைப்பதற்கு ஒருக்காலும் ஒப்புக் கொள்ளக் கூடாது என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு பி.பி.கே.இராசாசிதம்பரம்:—

....ஆனால் நமது அரசியல் சட்டத்தை இயற்றும்

போது இந்த ஒக்கலான பிரச்னை எழுந்ததாகவும், அப்பொழுது ஏதோ ஒருவாறாக அவர்களுக்குள் ஒரு விதமாக முடிவுக்கு வந்ததாகவும் இந்தத் தீர்மானத்தைப் பிரேரேபிக்கும்போது அமைச்சர் அவர்கள் சொன்னார்.

ஒரு மொழியானது மக்களுக்குப் பலதரப்பட்ட துறைகளிலும் பயன்படக்கூடும். கலையை வளர்ப்பதற்கும், வியாபாரத்தை வளர்ப்பதற்கும் மொழிதான் பலவகையிலும் பயன்படுகிறது. ஆனால், இன்றைக்கு நம் நாட்டின் முன்புள்ள பிரச்சினை இந்தியைத் தேசீய மொழியாக்கினால், அது எந்தெந்த வகையில் கலையை வளர்ப்பதற்கும், வியாபாரத்தைப் பெருக்குவதற்கும், ஆட்சிமுறையை நடத்துவதற்கும், நிருவாகத்துறையில் பல செய்கைகளைப் புரிவதற்கும் பயன்படும் என்பதுதான். இந்தியைத் தாய்ப்பாஷையாகக் கொள்ளாத மக்களுக்கு இதனால் எவ்விதப் பிரயோஜனமும் இல்லையென்பதை எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும். மேலும் கலையில் சிறந்த மொழி அல்ல இந்தி. வியாபாரத்தைப் பெருக்குவதற்கும் சிறந்த மொழி அல்ல இந்தி. இருந்தாலும், நம் இந்தியாவில் இந்தி பேசும் மக்கள் இதர மொழிக்காரர்களைவிட மிக அதிகமாக இருக்கிறார்கள் என்ற ஒரே காரணத்திற்காக இந்தியை இந்திய யூனியனின் நிருவாக மொழியாக ஆக்க விரும்புகிறார்கள். வேறு எந்தக் காரணத்திற்காகவும் அவ்வாறு செய்வது கிடையாது. இருந்தாலும், நாட்டுக்கு ஓர் அரசியல் மொழி இருக்க வேண்டியது அவசியம்தான், அதைப்பற்றி யாரும் மறுக்க முடியாது. உலகத்தில் பெருமையாக, திறமையாக இந்த நாடு செயலாற்ற வேண்டுமென்றால் ஒரு மொழி தான் இந்த நாட்டில் அரசியல் மொழியாக இருக்க வேண்டுமென்கின்ற அவசியம் இல்லை. இன்று காமன்வெல்த் நாட்டைச் சேர்ந்த கனடாவை எடுத்துக் கொள்வோம். அங்கும் ஆங்கிலமும், பிரெஞ்சும் அரசியல்பாஷையாக விளங்குகிறது. ஸ்விட்ஸர்லாந்தைப் பற்றியும் சில அங்கத்தினர்கள்

குறிப்பிட்டார்கள். சுவிஸ் போலவே இதரமொழி பேசும் மக்களுடைய மொழிகளும் அங்கே அரசியல் பாஷையாக இருக்கிறது. ஏன், இலங்கையை எடுத்துக் கொண்டாலும் கூட, சிங்களமும், தமிழும் இலங்கையில் அரசியல் பாஷையாக ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. அப்படியிருக்கும்போது, இந்திய யூனியனின் அரசியல் மொழியாக இந்தி மாத்திரம் இருக்கவேண்டுமென்று முன்பே அரசியல் சட்டத்தில் ஏன் முடிவு செய்தார்கள் என்பது ஒன்றும் புரியாத மர்மமாக இருக்கிறது. இப்பொழுது அதை ஆராய்ச்சி செய்ய விரும்பவில்லை.

ஒரு அரசியல் மொழி மத்திய அரசாங்கத்திற்கு மட்டுமா; இராஜ்ய அரசாங்கங்களுக்கு மட்டும் தேவையில்லையா என்பதை இப்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் கமிஷனும் சற்று ஆராய்ந்து பார்க்க வேண்டும். இந்திய நாட்டிலுள்ள எல்லா இராஜ்யங்களிலும் அந்தந்தப் பிரதேச மொழியில் அரசாங்கம் நடத்தப்படுகின்றனவா, நடத்தப் படாவிட்டால், ஏன் நடத்தப்படவில்லை? முக்கியமாக இந்தி மொழி பேசக்கூடிய உத்தரப் பிரதேசத்தில் இதுவரை இராஜ்ய சர்க்காரின் அலுவல்களெல்லாம் இந்தி மொழியில் நடத்தப்படுகின்றனவா, வங்காள இராஜ்யத்தில் வங்காள மொழியிலும், சென்னை இராஜ்யத்தில் தமிழிலும் சமீபத்தில் ஏற்பட்ட ஆந்திர இராஜ்யத்தில் தெலுங்கிலும் அரசாங்கம் நடக்கிறதா என்று பார்த்தால், அதற்காக மத்திய அரசாங்கமும் சரி, எந்த இராஜ்ய அரசாங்கமும் சரி எவ்வித முயற்சியும் எடுத்துக் கொள்ளவேயில்லை.

பையன் படிப்பதற்கு ஆரம்பப் பள்ளிக்கே அனுப்பாமல் அவன் மேல்படிப்புக்கு எந்தக் கல்லூரியில் படிக்க வேண்டும், அந்தக் கல்லூரியில் எந்தப் பாடங்கள் போதிக்கப்பட வேண்டும் என்று ஒரு தந்தை தீவிரமாக யோசனை செய்தால் எவ்வாறு இருக்குமோ, அதைப்போல இராஜ்ய சர்க்கார்கள் எந்த மொழியில் அரசாங்கம்

நடத்தவேண்டுமென்று திட்டமிட்டு, அதை அமுலுக்குக் கொண்டு வந்து, அது எவ்வாறு நடக்கிறது என்று சற்றும் ஆராய்ந்து பார்க்காமல், மத்திய சர்க்கார் அலுவல்கள் எந்தமொழியில் நடத்தப்பட வேண்டும், அதைப் பத்து வருஷங்களில் கொண்டு வரலாமா, அதற்கு முன்பே கொண்டு வந்துவிடலாமா என்று தீவிரமாக ஆராய்ச்சி செய்கின்றவர்கள் மொழி வெறியர்களே தவிர, நாட்டு நன்மைக்குப் பாடுபடுகிறவர்கள் என்று சொல்ல முடியாது.

இந்த நிலைமையில், முதலில் நாம் இந்தக் கமிஷனுக்குச் சென்னை இராஜ்ய சர்க்காரின் சார்பாக யோசனை சொல்ல வேண்டியது எதுவாக இருக்க வேண்டும் என்பதற்கு என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் இதுதான்: நமது இந்திய நாட்டிலுள்ள எல்லா இராஜ்யங்களிலும் அந்தந்த இராஜ்யத்தில் வழங்கப்படும் பிரதேச மொழியில் அரசாங்கம் நடத்தப்பட வேண்டும். 10 ஆண்டுகளோ 20 ஆண்டுகளோ 30 ஆண்டுகளோ வேண்டுமானால் நடத்திப் பார்க்கட்டும். எந்தப் பிரதேச மொழியில் அரசாங்கத்தை நடத்துவது சுலபமாக இருக்கிறதோ அந்த மொழியை இந்தியாவில் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ளலாம். கேவலம் அதிகப்படியானவர்கள் பேசுகிறார்கள் என்ற ஒரு காரணத்திற்காக மட்டும் இந்தி மொழியை இந்தியாவின் அரசியல் மொழியாக இருக்க வேண்டுமென்ற அவசரப்பட்ட முடிவை நாம் இன்று அமல் நடத்த வேண்டாம். மெதுவாகச் செய்யலாம் என்பதுதான் தமிழ்நாட்டவர்களுடைய அபிப்பிராயம். இந்தியை வேண்டாமென்று சொல்லவில்லை. அந்தந்த இராஜ்யங்களில் பிரதேச மொழியில் இராஜாங்கத்தை நடத்திப் பார்க்கட்டும். எந்த மொழியில் இராஜாங்கத்தை நடத்துவதற்குச் சுலபமாக இருக்கிறதோ, அந்த மொழியை இந்திய நாட்டில் அரசியல் மொழியாக ஏற்றுக் கொள்ளலாமே தவிர, பெரும்பான்மையான மக்கள் இந்தி பாஷையைப் பேசுகிறார்கள்

என்பதற்காக அது இந்தியநாட்டின் அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்ற முடிவுக்கு வருவது நல்ல முடிவு அல்ல என்று சபையின் அபிப்பிராயமாக இந்தக் கமிஷனுக்கு நாம் எடுத்துச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்திய அரசியல் சட்ட அமைப்பிலே, 15 ஆண்டுகளுக்குப் பின்பு ஆங்கிலத்திற்குப் பதிலாக இந்தியை அரசியல் பாஷையாக ஆக்க வேண்டுமென்று சொல்லப் பட்டிருக்கிறது. இன்று நடைபெறுவது என்னவென்று பார்க்கிறோம். தபாலாபீசுக்குச் சென்று money order பாரத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்றால், அதில் இந்தி மொழியில் அச்சடிக்கப்பட்டிருக்கிறது. பணம் அனுப்புகிறவர் யார், யாருக்கு அனுப்பப் படுகிறது என்ற விவரங்களெல்லாம் எங்கெங்கே இருக்கின்றன என்பதைப்பற்றிக் கூட நம்மால் அறிய முடியாமலிருக்கிறது. நமது நாட்டிலோ தமிழ்ப் படிப்புப் படித்தவர்களே மிகக் குறைவாக இருக்கும்போது நமக்கு ஒன்றும் புரியாத இந்தி மொழியிலே இம் மாதிரி நமூனாக்கள் இருந்தால் என்ன செய்வது? மத்திய சர்க்காரைச் சேர்ந்த தபால் இலாகா, இரயில்வே இலாகா, இன்னும் மற்ற இலாக்காக்களிலும் இந்தி மொழியில் அவர்கள் இதைப் போன்ற நமூனாக்களைப் போட்டிருப்பது சட்டத்திற்குப் புறம்பானது. சென்னை இராஜ்யத்திலுள்ள மக்கள் அதை விரும்பவில்லை என்பதையும் அரசாங்கத்தார் அவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

தென்னாட்டில் இருக்கிற இரயில்வே நிலையங்களில் தமிழ், இந்தி, ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் பெயர் எழுதப்படுகிறது. ஒவ்வொரு ஊரின் பெயரையும் மூன்று மொழிகளில் எழுதுவதென்றால் எவ்வளவு பணச் செலவாகும்? அதை ஏன் நமது நாட்டில் நிலவி வரும் ஒரே ஒரு மொழியில் மட்டும் எழுதினால்

இன்றைய செலவில் மூன்றில் இரண்டு பகுதிப் பணம் மிச்சம் ஆகாதா என்பதையும் இரயில்வே நிருவாகத்திற்கு நமது அரசாங்கத்தார் எடுத்துக் காட்ட வேண்டும்.

இதற்கிடையில் சில தீவிரவாதிகள் கல்வியும் இந்தி மூலமாகப் போதிக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். இந்தி மொழியை நான் அதிகம் அறிந்தவன் அல்ல. உண்மைக் கல்வி என்பது அறிவைப் பெருக்குவதற்காகப் பயன்படவேண்டும். இந்தி மொழி மனிதனுடைய அறிவைப் பெருக்கக்கூடிய அளவுக்கு வளர்ந்து விட்டதா என்பதும் இந்தி மொழியின் மூலமாகக் கல்வியைப் போதிக்கலாமா என்பதும் மிகவும் சர்ச்சைக் குள்ளான விஷயம். ஏற்கனவே, நமது அரசாங்கத்தில் நமது கல்வி அமைச்சர் சொல்லி வருவது போல அந்தந்தப் பிரதேச மொழியில்தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். அந்தந்தப் பிரதேச மொழியில்தான் இராஜ்யத்தில் அரசாங்கம் நடக்க வேண்டும். எல்லா இராஜ்யங்களிலும் அந்தந்தப் பிரதேச மொழியில் அரசாங்கம் நடக்க ஆரம்பித்த பிறகு, இன்று நியமிக்கப்பட்டிருப்பது போல் ஒரு கமிஷன் நியமிக்கப்பட்டு, அந்தக் கமிஷன் எந்த மொழியில் அரசாங்கம் நடத்துவது சுலபமாக இருக்கிறது, தெளிவாக இருக்கிறது என்பதைத் தெரிந்து அதன் பிறகு நமது நாட்டுக்கு எது அரசியல் மொழியாக இருக்க வேண்டுமென்பதை நிருணயிக்க வேண்டும் என்றார்.

திரு பி.ஜி.கருத்திருமன்:—

**இந்தப் பாஷையியைப் பொறுத்த வரையில், அவரவர்களுடைய தாய்ப் பாஷையில் நிருவாகம் இருந் தால் தான் சௌகரியமாக இருக்கும் என்பது சர்வ சாதாரண இயற்கை. ஆனால், ஒரு விஷயத்தை நான் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தாய்ப் பாஷை**

கன்னட பாஷை. ஆனால், கன்னட பாஷை பேசுகிறவர் களைப் பார்த்தால்கூட அவர்கள் என்ன பாஷை பேசுகி றார்கள் என்று எனக்குத் தெரியாது. அதற்குக் காரணம் நான் தமிழ்ப் பாஷை பேசப்படும் சூழ்நிலையில் இருந்து, தமிழையே . படித்ததுதான். தமிழர்கள் காட்டும் ஆர்வத்தைவிட தமிழில் அதிகமான அக்கறையை நான் காட்டமுடியும். ஆகவே, எந்த எந்தச் சூழ்நிலையில் மக்கள் வாழ்கிறார்களோ, எந்த எந்தப் பாஷையில் முன்னேற்றத் துக்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்படுகின்றதோ, அந்த அந்தப் பாஷையில்தான் அவர்களுக்குப் பாண்டித்யம் ஏற்படச் சந்தர்ப்பமுண்டு. அதே மாதிரி கன்னடம் தாய்ப் பாஷையாக இருந்தாலும் கூட, எங்கள் பிராந்தியத்தில் கன்னடம் பேசுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள். ஆனால், கன்னடத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். எங்கள் பிராந்தியத்தில் 20 ஆயிரம், 40 ஆயிரம் பேர்கள் கன்னடம் பேசினாலும் கூட, கன்னடத்தில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிக மிகக் குறைவு. அனேகமாக யாராவது ஒருவர் இருவர்தான் இருப்பார்கள். ஆகவே, ஒரு பாஷையில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் எத்தனைப் பேர் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து, புள்ளி விவரங்களைத் தயாரித்துப் பார்ப்பதைவிட, ஒரு பாஷையில் பேசுபவர்கள் எத்தனைப் போ என்று கணக்கெடுத்துப் பார்க்கலாம். தங்கள் மனதிலுள்ள எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் தெரியப்படுத்துவதற்கு, அதிகமான பேர்களுக்கு எந்தப் பாஷை உதவியாக இருக்கிறது என்று பார்க்கலாம். அப்படி ஒருவருடைய எண்ணங்களைத் தெரியப்படுத்து வதற்குக் காரணமாக இருக்கும்படியான பாஷையை எடுத்துக் கொண்டால், இந்திதான் 16 கோடி பேர்கள் அறிந்து கொள்வதற்கு ஒரு பாஷையாக இருக்கிறது. இதனால், தமிழை வேண்டாமென்று நான் சொல்லு வதாகவோ, இதர பாஷைகளை வெறுப்பவனாகவோ

அர்த்தமில்லை. சர்க்காரை நடத்துவதற்கு ஒரு பாஷை வேண்டும். இப்போது அதற்கு எந்தப் பாஷை வேண்டும் என்ற பிரச்னை சிக்கலான பிரச்னை. பல்வேறு பாஷைகள் பேசப்படும் இந்த மாபெரும் உபகண்டத்தில் எந்தப் பாஷையை அரசியல் பாஷையாக எடுத்துக் கொண்டாலும், வேறு பாஷைக்காரக்களுக்கு துவேஷமோ, சங்கடமோ ஏற்படும். இதில் முக்கியமான ஒரு முறையை அன்னிய ஆட்சியில் ஏற்படுத்தினார்கள். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் ஆங்கிலத்தைப் பலவந்த மாகத் திணித்து, எல்லோரையும் ஆங்கிலம் படிக்கச் செய்து கஷ்டப்படுத்தினாலும் கூட, இந்தியா பூராவும் ஒரு நிலையான நிருவாக இயந்திரத்தை ஏற்படுத்தச் சாதனமாக இருந்தது அந்த ஆங்கிலப் பாஷைதான். அந்த ஆங்கிலப் பாஷையைக் கற்பதை மாணவர்களுக்குக் கட்டாயமாக வைத்து மிகவும் கஷ்டப்படுத்தினார்கள். நாலாவது பாரத்தில் எல்லாம் ஆங்கிலத்தில் படிக்க வேண்டும் என்று இருந்தது. 8 அல்லது 10 சதவிகிதத்தினர்தான் அப்படி ஆங்கிலத்தில் படிக்க முடியும். பாக்கி 90 சதவிகிதத்தினர் படிக்க முடியாது. நாலாவது பாரம் போனவுடன் அனேக மாணவர்கள் பிச்சுக் கொண்டு போவார்கள். அதேபோல், கல்லூரிக்கு மிகக் குறைவான மாணவர்களே போவார்கள். கடைசிவரை படித்தவர்கள் சர்க்கார் உத்தியோகத்திற்குப் போக முடிந்தது. அப்போது யார் அப்படி ஆங்கிலம் படித்துச் சர்க்கார் உத்தியோகத்திற்கு வந்தார்களோ, அவர்கள் எல்லாம் நல்ல நிலையில் இருந்ததை நாம் பார்க்க வேண்டும். அப்படி வெள்ளையர் காலத்தில் ஆங்கிலம் படித்தவர்கள் ஒரு சிறு பகுதியினரான பிராம்மணர்கள் ஆவார்கள். அவர்களுக்குச் சமஸ்கிருதத்தில் பாண்டித்யம் உண்டு. அதனால், மற்ற பாஷைகளைத் திறமையாகக் கற்றுக் கொண்டார்கள். அவர்கள் முன்னேறினார்கள். மற்றவர்கள், ஆங்கிலம் நீசமான பாஷை, அதைக் கற்றுக் கொள்ளவேண்டாம் என்றிருந்தார்கள். ஆங்கிலம் படித்த

பிராம்மணர்கள் முன்னேறியதைப் பார்த்ததும், அதன் பிறகு பிராம்மணரல்லாதாரும் 50, 60 வருஷங்களில் ஆங்கிலம் கற்றுக் கொண்டார்கள். முஸ்லீம் சகோதரர் களோ ஆங்கிலம் படிக்கவே வேண்டாமென்று இருந்தார்கள். அவர்கள் பின்னால் இருந்தார்கள். "struggle for existence" என்ற theory ப்படி யார் ஆங்கிலம் படித்தார்களோ அவர்கள் முன்னுக்கு வந்தார்கள். அதேமாதிரி எந்தச் சமூகத்தினரை முற்போக்குச் சமூகத்தினர் என்று கூறிக் கொண்டிருக்கிறோமோ, அந்த முற்போக்குச் சமூகத்தினர் முன்பு ஆங்கிலத்தைப் படித்த மாதிரி இன்று இந்தி படித்தாய் விட்டது. அவர்கள் வட இந்தியாவுக்குப் போகலாம். அவர்கள் எந்த இடத்தில் போனாலும், எந்தக் காரியத்தைச் செய்வதற்கும் தகுதியுள்ளவர்களாகி விட்டார்கள். பாக்கியுள்ளவர்கள், இனிமேல் அவர்கள் உத்யோகங்களைப் பெற்ற பிறகு பொறாமைப்படலாம். அப்போது இவ்வளவு தூரம் இந்தியை எதிர்த்துக் கொண்டிருந்தோமே என்று உணருவார்கள். ஆகவே, 'வேண்டாத பெண்டாட்டி கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்பது போல், இந்தியை வேண்டாம் என்று சொல்லக் கூடாது.

பெரியவர்களே இந்தியை எதிர்ப்பதினால் மாணவர்களும் இந்தி படிப்பதில்லை. மாணவர்கள் 'இந்தி ஒழிக' என்கிறார்கள். பொது இடங்களில் உள்ள போர்டு களில் உள்ள இந்திப் பெயரைத் தார் போட்டு அழிக் கிறார்கள். படிப்பையெல்லாம் விட்டு, இம்மாதிரி வேறு காரியங்களில் அவாகள் இறங்கிறார்கள். இதற்கெல்லாம் அரசியல் கட்சிகள் அவர்களுக்குத் தூண்டுதலும் செய்கின்றன. அரசியல் கட்சிகளும் பெற்றோர்களும் முன்னோர்களும் அவர்கள் செய்யும் இந்தக் காரியங் களுக்குக் காரணமாக இருக்கிறார்களே தவிர, அவர்கள்

படித்து முன்னேறுவதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதில்லை.

இந்தப் பாஷாவாரி இராஜ்யங்கள் அமைக்கப்படும் தறுவாயில், இந்த நிருவாகப் பாஷைப் பிரச்னையை எடுத்துக் கொண்டது ஒரு படியாக அமைந்து இருக்கிறது. சிறந்த பாஷையாக இருக்க வேண்டுமென்றால், அந்தப் பாஷை கலைச் செல்வம் கொண்டதாக இருக்க வேண்டும், பண்பாடு உள்ளதாக இருக்க வேண்டும், புராதனமானதாக இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. புராதன பாஷையாக இருக்க வேண்டும் என்றால், பலர் பேசும் பாஷையாகவும் இருப்பது அரிது. சமஸ்கிருதம் ஒரு ஆதிகாலத்துப் பாஷைதான். ஆனால், அது நடைமுறையில் பேசப்படுவதில்லை. ஆங்கிலம் சமீபத்தில் வந்த பாஷை தான். இருந்தாலும், அதில் எவ்வளவோ கலைச்செல்வம் இருக்கிறது. ஷேக்ஸ்பியரின் நாடகங்களை எடுத்துக் கொண்டால், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் வெறி கொண்டவர்களைக்கூட 'ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் வேண்டுமா, அல்லது ஏகாதிபத்தியம் வேண்டுமா?' என்று கேட்டால், 'ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் வேண்டும், ஏகாதிபத்தியம் தேவையில்லை' என்று சொல்லுகிறார்கள். அந்த அந்தப் பாஷைக் கலையிலேயே செல்வாக்குள்ள ஆசிரியர்களும், புலவர்களும் இருந்தால்தான் அந்த அந்தப் பாஷை சிறப்பாக இருக்க முடியும். அதோடு மட்டுமல்ல, அப்போதுதான் அதை மக்கள் உணரவும், மக்கள் சரியானபடி பிரயோஜனப்படுத்தவும் முடியும்.

நாளடைவில் இது நடைமுறைக்கு வரும்படியான ஒரு பிரச்னை. கனம் முத்தையா செட்டியார் அவர்கள் 15 வருஷ காலத்திற்குள் இந்தியை இன்று ஆங்கிலம் வகிக்கும் ஸ்தானத்திற்குக் கொண்டு வந்து அமைக்க வேண்டும் என்று அரசியல் சட்டத்தில் இருப்பதை 30 வருஷ காலமாக வைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினார். நான்

அவர்கள் கூறியதை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். அதே மாதிரி சென்னை இராஜ்யத்தில்கூட இப்போது இருக்கும்படியான சூழ்நிலையில், அரசாங்க மொழியாக நமது மாகாணத்தில் அதிகமான பேர்களால் பேசப்படும் தமிழ் மொழிதான் இருக்க முடியும். ஆகவே, ஆங்கில பாஷையையும் வைத்துக் கொண்டு, தமிழ் மொழியில் நடவடிக்கைகள் சிறந்த முறையில் நடக்கும்படியான அளவிற்கு நாம் வழிவகைகள் செய்ய வேண்டும். தனிப் பட்ட ஒரு பாஷைமாத்திரம் தெரிந்தால் பிரயோஜன மில்லை. இதர பாஷைகளில் இருக்கும் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள, மற்றப் பாஷைகளையும் நாம் கற்றுக் கொள்ள முற்படவேண்டும்.

பள்ளிக் கூடங்களில் மாணவர்களுக்கு இந்தியை எந்த முறையில் அமைக்க வேண்டும் என்பதுதான் நம் முன்னுள்ள மற்றொரு பிரச்னை. கட்டாயப் பாடமாக வைக்கலாமா அல்லது இஷ்ட பாடமாக வைக்கலாமா என்றால், என்னைப் பொறுத்தவரையில் இந்தியை இஷ்ட பாடமாக வைத்தால், நிச்சயமாக இஷ்டப்பட்டுப்படிப் பவர்கள் இருக்க மாட்டார்கள், இருக்க முடியாது என்றே கருதுகிறேன். விளக்கெண்ணெய் குழந்தைக்குக் கொடுத் தால், அதன் உடலுக்கு நல்லது. உடலிலுள்ள பாரம் நீங்கும் என்று அதனிடம் சொன்னால் குழந்தை ஏற்றுக் கொள்ளாது. எனவே, தாயின் போக்கு எப்படி இருக்க வேண்டுமென்றால், குழந்தையின் நலனை உத்தேசித்து, அவள் அதை அமுக்கிப் பிடித்து அதன் வாயில் விளக் கெண்ணெய் வார்த்துப் பேதியாகும்படிச் செய்யவேண்டும். இந்த மாதிரியே சில சமயங்களில், மக்களின் அபிப் பிராயம், இஷ்டத்தைக் கேட்டுச் சட்டங்களை, முறைகளை வகுப்பதைவிட, அவற்றில் கட்டாயமாக இருந்து செய்வது நன்மையைத் தரும். அதேமாதிரி, இந்தி பாஷையையும் கட்டாயப் பாடமாக வைத்து, மற்ற பாடங்களைப் போல், இந்தப் பாடத்திலும் இவ்வளவு மார்க்குகள் வாங்க

வேண்டும்; அப்பொழுதுதான் உத்தியோகம் கொடுக்கப் படும் என்ற முறையில் வைப்போமேயானால், இந்தியை மாணவர்கள் சீக்கிரம் படிப்பார்கள். அப்படியில்லாமல், இஷ்டப் பாடமாகச் செய்து படிக்கலாமா, வேண்டாமா என்ற முறையில் வைத்தால், நிச்சயமாக ஒருவரும் விரும்பிப் படிக்க மாட்டார்கள். இப்போது இருக்கும்படியாக 10-ஆவது படிப்பு பரீட்சை Certificate களைப் பார்த்தால், இந்தி என்ற பிரிவின் கீழ் '5' இரண்டு பக்கமும் கோடு என்ற எண்ணிக்கையைத் (Marks) தான் பாஸ் செய்துள்ள மாணவர்களின் Certificate லும் காணமுடிகிறது. ஆங்கிலப் பாடம் கட்டாயப் பாடமாக இருப்பதால், அதில் 70 மார்க்கு வாங்கியிருப்பார்கள். எனவே, இஷ்டப்பாடம் என்று வைப்பதால், படிப்பதே இஷ்டமா இல்லையா என்ற முறையில் போகிறது என்பதை மறுபடியும் வலியுறுத்த விரும்புகிறேன்.

இப்போது இருக்கும்படியான சூழ்நிலையில் பார்ப்போமானால், அனேகர் பேசக்கூடிய, ஒருவருக்கு ஒருவர் அறிந்து கொள்ளக்கூடிய மொழியாக இந்தி இருப்பதால், மத்திய சர்க்கார் இந்தி மொழியை அரசாங்க மொழியாகக் கொண்டு வந்துதான் தீருவார்கள். அப்பேர்ப் பட்ட நிலைமைதான் ஏற்படும். நமது எதிர்ப்புகளை அவர்கள் கவனித்து மக்கள் எதிர்க்கிறார்கள். ஆதரிக்க வில்லை என்று அறிந்தாலும்கூட, அகில இந்தியாவைக் கணக்கில் கொண்டு பார்ப்போமேயானால், இந்திதான் அரசாங்க பாஷையாக இருக்க முடியும் என்ற நிலையில் உள்ளது. மேலும், அந்தப் பாஷை எப்பேர்ப்பட்ட பாஷை என்று யோசனை செய்யும் போது, இங்கிலாந்தில் இங்கிலீஷ், ஜெர்மனியில் ஜெர்மன் என்ற பாஷைகளில் பெயர் பொருந்தியிருப்பது போல, இந்தியாவிலும் பெரும்பாலான மக்கள் இந்தி மொழியைப் பேசினாலும், இந்தியாவில் இந்தி என்ற பெயர் கூடப் பொருத்தமாக

வந்திருக்கிறது. ஆகவே, இந்த மொழிப் பிரச்னையில் நாம் தனிப்பட்ட முறையில் பிரிவு மனப்பான்மை காட்டாமல், ஏக மனதாக ஒரு தீர்மானத்திற்கு வருவோமேயானால், அதன்மேல் நாம் உறுதியாக நின்று வெற்றிகரமாக அமுல் நடத்த முடியும். பொதுப்படையாகப் பார்த்தாலும் கூட, 15 வருஷமல்ல, 20 வருஷமல்ல, 50 வருஷங்கள் கழிந்த பின்னும் இந்தி மொழி மத்திய சர்க்காரின் அரசாங்க மொழியாக வந்துதான் தீரும் என்றார்.

திரு எம்.பி.சுப்ரமணியம்:

''இந்தியைப் பற்றிக் குறிப்பாகத் தமிழ்நாட்டில் உள்ளவர்கள் வெகு காலமாக அதை ஆதிக்க மொழியாக ஆக்கிவிடக் கூடாது என்பதாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் பேசும் பொழுதும், இந்தி இந்தியாவின் ஒரே ஒரு தேசீய மொழி அல்ல. இருக்கக் கூடிய 14 தேசீய மொழிகளில் இதுவும் ஒன்று எனக்குறிப்பிட்டார்கள். மேலும், திராவிட நாடு பற்றியோ தமிழ் தனி இராஜ்யம் பற்றியோ அவசியம் இல்லாத விஷயங்கள் எதுவும் இதுபற்றிய விவாதத்தில் குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லையென்றும் சொன்னார்கள். திராவிடநாடு தனித்து இயங்க வேண்டு மென்ற கொள்கையுடைய வாலிபர்கள் நாளுக்கு நாள் இலட்சக் கணக்கில் பெருகிக்கொண்டிருக்கிறார்கள் என்பது மறக்கக் கூடாத உண்மை. அதனால், இந்தி மொழியே அவசியம் இல்லையென்று கருதுகிறவர்களும் இருக் கிறார்கள். ஆனாலும்கூட, இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் அடிப்படையில் கருத்துக்களைச் சொல்வதில் பிரயோ ஜனம் இல்லை என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், ஒரே ஒரு விஷயம். பெரிய அறிவாளிகள் கூட, ஸ்ரீ மௌலங்கர் உள்பட சில பேர்கள் எங்குச் சென்றாலும், இந்தியே தேசீய மொழி என்பதாகப் பிரசாரம் செய்து வருகிறார்கள். பாமர மக்களிடையே இந்தத் தவறான

கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்கள். இது உண்மைக்குப் புறம்பானதாக இருந்தாலும், எப்படியாவது இந்தியை இந்தியாவின் ஒரே ஒரு தேசீய மொழியாகக் கொண்டு வந்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில்தான் பிரச்சாரம் செய்து வருவதாக நாங்கள் எண்ண வேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஒரு முறைக்குப் பலமுறைகளாக நமது நிதி அமைச்சர் அவர்கள் உட்பட பலர் இந்தியாவின் தேசீய மொழிகள் 14—இல் இந்தி ஒரு தேசீய மொழி என்பதாகத் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கம் தங்கள் நிருவாகத்தை நடத்துவதற்கும், இராஜ்ய சர்க்கார்களுடன் கடிதப்போக்குவரத்தை நடத்துவதற்கும் இந்தியை நிருவாக மொழியாக வைத்துக் கொள்ளலாம் என்று சொல்லப்படுகிறது. மத்திய அரசாங்கம், இதர இராஜ்யங்களுடன் தொடர்பு வைத்துக் கொள்வதற்கு ஒரு மொழியை வைத்துக் கொள்ள வேண்டுமென்பதை நாங்கள் உணர்கிறோம். இதில் எந்த விதமான மாறுபட்ட கருத்தும் கிடையாது. அதற்காக இந்தியை இராஜ்யங்களின் மீது திணிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்தி மொழியை மத்திய சர்க்காரின் நிருவாக மொழியாக ஏற்றுக் கொள்ளும் போதே, அந்தந்த இராஜ்யங்களில் வழங்கும் மொழியை அந்தந்த இராஜ்யங்களின் நிருவாக மொழியாகவும் செய்ய வேண்டியது மிகவும் அவசியமாகும். மொழிவழி இராஜ்யங்களை அமைத்து, அந்தந்த இராஜ்யங்களில் அந்தந்த மொழியை நிருவாக மொழியாக ஆக்குவதில் எவ்விதமான தீங்கும் கிடையாது. எவ்விதமான தீங்கும் ஏற்படாது என்பதை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். சில அங்கத்தினர்கள் ஆங்கிலத்தைப் பற்றியும் பேசினார்கள். ஆங்கிலம் இருக்கக்கூடிய ஸ்தானத்தில் இந்தியைப் படிப்படியாகக் கொண்டு வரவேண்டுமென்றும் சிலர் குறிப்பிட்டார்கள். இது தவறான போக்கு. ஆங்கிலத்தை நாம் கற்க வேண்டிய மொழிகளில் ஒன்றாக அவசியம் வைத்துக் கொள்ள

வேண்டும். சுதந்திரப் போராட்டம் நடத்திய காலத்தில் ஒரு மொழிக்காரர்களை இங்கே இன்னொரு மொழிக்காரர்கள் உணர்ந்து கொள்ளவும், ஒன்றுபட்ட தேசீய ஐக்கியத்தைத் திரட்டவும் நமது மாபெரும் தலைவர்கள் எல்லாம் மகாத்மா காந்திஜி உள்பட ஆங்கிலத்தைத்தான் உபயோகப்படுத்தி வந்திருக்கிறார்கள். பல கருத்துக்களை ஆங்கில மொழியிலேயே பேசியும், கட்டுரைகள் எழுதியும் வந்திருக்கிறார்கள். எந்தக் காலத்திலும் ஆங்கிலம் இருக்கவேண்டும் என்பதைப் பலர் ஆதரிப்பார்கள் என்றே நம்புகிறேன். விஞ்ஞானத்துறையில், தொழில் துறையில் ஆங்கிலம் வகிக்கும் ஸ்தானத்தை வேறு எந்த மொழியும் அடையவில்லை யென்பதை நாம் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டும். ஆகவே, ஆங்கிலமும் இந்த நாட்டு மக்களுக்குப் போதிக்கப்பட வேண்டியது மிக மிக அவசியமாகும். பிற நாட்டுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள அதுவே சிறந்த சாதனமாக இருக்கும். ஆகவே, ஆங்கிலமும் இந்த நாட்டு மக்களுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற கொள்கையும் இருந்தாக வேண்டும். அதனை நாம் புறக்கணித்து விடமுடியாது.

அந்தந்த வட்டாரத்தில் பேசப்படும் மொழி, அதாவது நம்முடைய இராஜ்யத்தில் தாய் மொழியாகிய தமிழ் மொழி, ஆட்சி மொழியாக இருக்க வேண்டும். அந்தந்த இராஜ்யத்தில் அந்தந்தப் பிரதேச மொழி எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறப்படுகிறது. இந்திய யூனியனோடு இராஜ்ய அரசாங்கம் கடிதப் போக்குவரத்து வைப்பதற்கும், ஒரு இராஜ்யத் தோடு மற்றொரு இராஜ்யம் கடிதப் போக்குவரத்து வைப்பதற்கும், இந்தி மொழி அந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. வெளிநாட்டு விவகாரங்களில் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு ஆங்கிலம் இருக்க வேண்டும் எனவும் கூறப்படு கிறது. ஆகவே, பிரதேச மொழி குறிப்பிட்ட பிரதேசத்

திலும், இந்தி மொழி மத்திய சர்க்காருடனும் மற்ற இராஜ்யங்களோடும் தொடர்பு வைத்துக் கொள்வதற்கும், ஆங்கில மொழி வெளிநாட்டாரோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் அவசியம் என்ற முறையில் மூன்று மொழிகளைப்படிக்கவேண்டிய அவசியம் இருக்கிறது.

பொதுவாக, ஒரு மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும்போது, அந்த மொழி மனிதனுடைய வாழ்வுக்கு அவசியந்தானா, அந்த மொழி இல்லாவிட்டால் வாழ முடியாதா என்று பார்த்து எவ்வளவுக்கெவ்வளவு அதிக மொழிகளைக் கற்காமல் இருக்க முடியுமோ, அவ்வளவுக்கவ்வளவு கற்கவேண்டிய மொழிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்க வேண்டும்.

தமிழ் படித்தவர்கள் 100-க்கு 18 பேர் கூட சென்னை இராஜ்யத்திலே கிடையாது என்று இருக்கும் போது, எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் ஆரம்ப காலம் முதற்கொண்டு மூன்று மொழிகள் படிப்பது என்பது நிச்சயமாக முடியாத காரியம். எவ்வளவு குறைந்த அளவுக்கு மொழிகளைக் கற்றுக் கொண்டால் போதுமோ அவைகளை மட்டும் கற்றுக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இந்தி மொழியையும் தமிழோடு சேர்ந்து கற்க வேண்டுமென்று சொல்லப்படுகிறது. ஏனென்றால், மத்திய சர்க்காரில் உத்தியோகத்திற்குப் போக வேண்டும், மத்திய சர்க்காரோடு தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் யாருக்கும் ஏற்படலாம். யாரும் எந்த உத்தி யோகத்திற்கும் போகமுடியும் என்ற நிலைமை இருக்க வேண்டும் சாதாரண பாட்டாளி மக்கள், தொழிலாளி, விவசாயி எந்த ஜாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும், எல்லோருக்கும் வாய்ப்பு இருக்கின்ற முறையில் தேர்ச்சி பெற்றுக் கொள்ளச் செய்வது மிகவும் அவசியம் என்பதை எல்லோரும் உணருகிறோம். இந்தி மொழியானது மத்திய சர்க்காரோடும் இதர இராஜ்ய சர்க்காரோடும் தொடர்பு

வைத்துக் கொள்வதற்கும், ஆங்கில மொழியானது வெளி நாட்டோடு தொடர்பு வைத்துக் கொள்வதற்கும் தெரிந்து இருக்க வேண்டும். விஞ்ஞானத் துறையில் அறிவைப் படிப்படியாக, வளர்ப்பதற்கு விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேலும் வளர்க்க வேண்டுமென்றால், ஆங்கில மொழியின் மூலந்தான் முடியுமே தவிர, இந்தி மொழியின் மூலம் முடியாது. இம்மூன்று மொழிகளும் அவசியம்தானா என்று பார்ப்போம். இந்தியும் ஆங்கிலமும் செய்யக்கூடிய காரியத்தை ஆங்கிலமே செய்துவிடும். ஆங்கிலத்தை மட்டும் வைத்துக் கொண்டால் இன்று இந்தி எந்தத் தேவைக்காக அவசியம் என்று எல்லோராலும் பேசப்படு கிறதோ, அந்தத் தேவையையும் ஆங்கிலத்தால் பூர்த்தி செய்துவிட முடியும் என்பதையும் சபையிலுள்ளவர்கள் உணரவேண்டும். இரண்டாவதாக, 150 ஆண்டுகளுக்கு மேல் நம் தேசத்தில் ஆங்கிலம் இருந்தபோதிலும் ஆங்கிலத்தையே தாய்மொழியாகக் கொண்டவர்களோடு நம் நாட்டவர்கள் போட்டி போடமுடியுமா? முடியாது. வெள்ளைக்காரனோடு போட்டி போடக் கூடிய அளவுக்கு ஆங்கிலத்தில் திறமை நம் நாட்டவர்களுக்கு வளரவில்லை. ஆங்கிலம் இத்தனை ஆண்டுகள் நம் நாட்டில் இருந்து வந்தபோதிலும், ஸ்ரீ.ஏ. இராமசாமி முதலியார், ஸ்ரீ.ஏ. இலட்சுமணசாமி முதலியார், ஸ்ரீ.சி.பி.இராமசாமி அய்யர், ஸ்ரீ இராசகோபாலாச்சாரியார் இவர்களைப் போன்றவர்கள் ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசக்கூடிய சக்தியுடையவர்களாக இருந்தாலும்கூட ஆங்கிலத்தையே தாய் மொழியாகக் கொண்டிருக்கும் வெள்ளைக்காரருக்கு ஆங்கிலத்தில் இருக்கும் அறிவும் ஆற்றலும் இருக்கக்கூடிய அளவுக்குச் சமமாக இருக்கிறார்கள் என்று நாம் சொல்ல முடியாது. பணத்திற்காக, உத்தியோகத்திற்காக ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் இருந்தும் சிலர்கூட வெள்ளைக்காரருக்குச் சமமாக

ஆங்கிலத்தில் வரமுடியவில்லை என்ற நிலைமையைப் பார்க்கிறோம்.

இந்தி மொழியைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளவர்களோடு நம் இராஜ்யத்தவர்கள் உத்தியோகத்தில் போட்டி போட முடியாது. எத்தனை ஆண்டுகள்தான் இந்தியில் நம்மவர்கள் பயின்றாலும் இந்தியையே தாய் மொழியாகக் கொண்டுள்ளவர்களோடு நாம் போட்டி போட்டு உத்தியோகத்தில் முன்னேறுவது என்பது முடியாத காரியம். மத்திய சர்க்காருடைய அரசாங்க மொழி என்ற ஒரே காரணத்திற்காக இந்தி மொழியை வலுக் கட்டாயமாக நம் இராஜ்யத்தவர் மீது திணிக்கக் கூடாது.

ஸ்ரீமான் கருத்திருமன் அவர்கள் பேசும்போது முதல் படிவத்திலிருந்து இந்தி மொழி கட்டாயமாகப் போதிக்கப் படவேண்டும் என்று குறிப்பிட்டார். அதனால் மட்டும் இந்தியில், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்களோடு சரியாக நம்மவர்களுக்குப் புலமை வந்துவிட முடியுமா? ஆங்கிலத்தில் இத்தனை வருஷ காலமாகப் பழகி வந்தும் நல்லமுறையில் ஆங்கிலம் பேசத் தெரியாமல் இருக்கிறோம். போதனா முறையைத் தமிழில் வைத்து, இந்தியை இஷ்ட பாடமாக வைத்து, ஆங்கிலமும் கற்க வேண்டுமென்று வைத்தால், தமிழ் படித்ததோடு இந்தியில் என்ன பயிற்சி இருக்க முடியும், அறிவு இருக்க முடியும் என்று நாம் பார்ப்போமேயானால், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டிருக்கக் கூடியவர்களோடு நம்மைப் போன்றவர்கள், இதைக் கட்டாயமாகப் படித்தாலும் அவர்களோடு சரியாக வர முடியாது. மலைக்கும் மடுவுக்கும் உள்ள வித்தியாசம்தான் இருக்கும் என்பதை நான் தெரிவித்துக கொள்கிறேன். 100 ஆண்டுகள் ஆனாலும் கூட, அவனோடு சமமாக வருவது இயலாத காரியம்.

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை, 150 ஆண்டு களுக்குப் பிறகாவது ஏதோ சில குறிப்பிட்டவர்கள் இரண்டு சதவிகிதம் மூன்று சதவிகிதம் இருந்தாலும் சரி, ஓரளவு தெரிந்து கொள்ளும் அளவுக்காவது (Working knowledge) தெரிந்து கொண்டிருக்கிறோம். ஆங்கிலத் திலும் இந்தியிலும் என்ன காரியங்களைச் செய்ய முடியுமோ, அந்த இரண்டு மொழியின் மூலம் செய்யக் கூடியதை ஆங்கிலம் ஒன்றினாலேயே பார்த்துச் செய்து கொள்ள முடியும். அந்தத் தகுதி ஆங்கில மொழிக்கு இருக்கிறது. ஆனால், இந்தி மொழிக்கு இல்லை. இந்தி மொழி அரசாங்க மொழியாக இருக்க வேண்டியதற்கு அருகதையைப் பற்றிப் பேசும் போது, காங்கிரசில் இருக்கக் கூடியவர்கள்கூட புகழ்ந்து கூற இந்தியில் ஒன்றும் இல்லை எனச் சொன்னார்கள். இந்திதான் அரசியல் மொழியாக இருக்க வேண்டுமென்று சொல்லும் ஸ்ரீ பிரகாசா போன்ற அரசியல் தலைவர்கள் உட்பட இந்திக்கு உள்ள ஒரே அருகதை இந்த நாட்டிலுள்ள அதிகப்படியான மக்களால் புரிந்து கொள்ளப்படுகிறது என்பதுதான். இந்த ஒரே காரணத்தைத் தவிர வேறு காரணம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தியையும் சமஸ்கிருதத்தையும நான் வெறுக்க வில்லை. 5—ஆவது வகுப்பிலிருந்து இந்தியையும் சமஸ்கிருதத்தையும் நான் இரண்டாவது பாடமொழியாகப் படித்திருக்கிறேன். இந்தியின் மீதோ, சமஸ்கிருதத்தின் மீதோ எனக்குத் தனிப்பட்ட முறையில் வெறுப்பு கிடையாது. அரசாங்க மொழியாக வருவதற்கு வேண்டிய அருகதை இந்தி மொழிக்கு இருக்கிறதா என்றால், அவர்கள் சொல்லும் ஒரு காரணத்தைத் தவிர, இந்திக்கு வேறு அருகதை கிடையாது. பல மக்களால், பெருவாரியான மக்களால் பேசப்படுகிறது என்ற ஒரே காரணத்திற்காக அதை அரசாங்க மொழியாக ஆக்க வேண்டுமென்ற அவசியம் இருக்கிறதா என்றால், பலநாட்டு

வரலாறுகளைத் தெரிந்தவர்கள் அவசியம் இல்லை என்றுதான் சொல்வார்கள். பல நாட்டு வரலாறுகளைப் பார்த்தால், அதிகமான பேர்களால் ஒரு மொழி பேசப் படுகிறதென்ற ஒரே காரணத்தை வைத்துக் கொண்டு அதை அரசாங்க மொழியாக்குவது கூடாது என்ற முடிவுக்கு வருகிறோம்.

ஐரோப்பாக் கண்டத்திலே ஸ்விட்ஸர்லாந்து தேசத்திலே மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஜெர்மானிய மொழி, பிரெஞ்சு மொழி, இத்தாலிய மொழி ஆகிய மூன்று மொழிகளும் Official language களாக அங்கு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கின்றன. ஜெர்மானிய மொழியை 72 சதவிகிதத்தினர் புரிந்து கொண்டு பேசுகிறார்கள். ஆனால், பெரும்பான்மையானவர்கள் புரிந்துகொண்டு பேசக்கூடிய ஜெர்மானிய மொழியொன்றையே அந்தத் தேசத்தில் ஆட்சி மொழியாக ஆக்காமல், சொற்பமாகப் பேசக்கூடிய மற்ற இரண்டு மொழிகளையும் ஆட்சி மொழிகளாக அங்கு ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்றால், அதுவல்லவோ ஜனநாயகப் பண்பு? அதுவல்லவோ சிறுபான்மை யினருக்குக் காட்டக்கூடிய சலுகை? மற்ற மொழிகளைவிட ஒரு குறிப்பிட்ட மொழியைத்தான் அதிகமானவர்கள் புரிந்து கொள்கிறார்கள் என்ற ஒரே காரணத்தில் இந்தியைப் புகுத்துவது என்பது மிகவும் தவறான காரியம் என்பதை அரசாங்கமும் சர்க்கார் கட்சித் தலைவரும் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இந்தியாவில் உள்ளவர்கள், ஒற்றுமைப்படுவதற்குப் பெரும்பான்மையோரால் பேசப்படும் இந்தி மொழி ஒன்றினால்தான் முடியும் என்று தவறாக நினைப்பது கூடாது. ஒற்றுமை இருக்க வேண்டுமென்று பேசும்பொழுது மொழியை மட்டும் வைத்துக் கொண்டு பேசுவது கூடாது. நாட்டின் பண்பாடு, நாட்டின் வரலாறு, நாட்டின் பழக்க

வழக்கங்கள், ஆக ஒட்டுமொத்தமாக இருக்கக் கூடிய எல்லாவற்றையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும். மொழியின் அடிப்படையில் மக்கள் தனித்தனியாக வாழ வேண்டுமென்று நினைக்கிறார்கள். பொது மொழி ஒன்றில்தான் ஒற்றுமை ஏற்படுமென்று நினைக்கிறார்கள். பல மொழிகள் இருந்தால் இந்தியாவினுடைய ஒற்றுமை சிதறிவிடும் என்று நினைப்பவர்கள் உலக வரலாற்றைக் கவனத்தில் வைத்துக் கொள்ளவில்லை அல்லது நன்றாகப் படிக்கவில்லை என்றுதான் தெரிகிறது. இந்தியா மீண்டும் பிரிந்து சின்னாபின்னப்பட்டுவிடும் என்ற எண்ணத்தைக் கொண்டு, பயத்தைக் கொண்டு, சிலர் இந்தியை வற்புறுத்துகிறார்கள். இந்தி மொழி ஒன்றினால் இந்தியாவை ஒற்றுமைப்படுத்த முடியும், பல மொழி பேசுபவர்களைப் பிணைத்துவிட முடியும் என்று மனப்பால் குடிக்கக் கூடாது. இந்தியாவை ஐக்கியப்படுத்துவதற்கு மொழியால் முடியுமா? இந்தியா ஒன்றாகவே இருக்கட்டும்—திராவிட நாடு, வங்காளநாடு குஜராத்தி நாடு, மராத்தி நாடு என்றெல்லாம் பிரிக்கப்பட வேண்டுமென்ற பிரச்னைகள் ஒருபுறமிருக்கட்டும். அதைப்பற்றி இப்பொழுது கவலையில்லை. இந்தியா ஒன்றாகவே இருக்க வேண்டுமானாலுங்கூட, இந்தி மொழியை எல்லா மக்கள் மீதும் திணிப்பது வழி அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

கனம் அங்கத்தினர் திரு டி.ஸி.நாராயணன் நம்பியார் பேசும்போது, ஐக்கிய கேரளம் தமிழகம் என்று ஏற்பட வேண்டும் என்றும், சென்னை இராஜ்யம் composite தன்மையில் இருக்க முடியாது என்றும் சொன்னார்கள். சமீபத்தில் ஆந்திரநாடு பிரிந்தது. ஆந்திரர்கள் சென்னை இராஜ்யத்தில் சேர்ந்திருந்தபோது என்ன நினைத்தார்கள்? தமிழ் நாட்டவர்கள் ஆந்திரர்களைச் சுரண்டுகிறார்கள் என்ற தவறான அபிப்பிராயம் அவர்களிடையே அப்பொழுது இருந்து

வந்தது. அதை வைத்துக் கொண்டு அவர்கள் தனியாகப் போய்விட்டார்கள். நமக்கும் அவர்களுக்கும் இப்பொழுது பழைய வேற்றுமைகள் மறைந்து உண்மையாகவே நேசப் பான்மை இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இன்று இருக்கிறது. ஆகவே, ஒரே மொழியாகப் பலருக்கு வைத்துக் கொண்டிருப்பதால் மட்டும் ஒற்றுமை ஏற்பட்டுவிட முடியாது. ஆங்கிலம் இருந்தால்தான் ஒற்றுமை இருந்தது என்று நினைப்பதற்கில்லை. அதைப் போலவே இந்தியையும் எல்லோரும் ஒப்புக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை, ஆங்கிலத்தை வேண்டாமென்று சொன்னால்கூட, இராஜாங்க அலுவல்கள் விஷயத்தில் இன்னும் சில வருஷங்களுக்கு ஆங்கிலத்தை வைத்துக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை. ஸ்விட்ஸர்லாந்து நாட்டில் மூன்று மொழிகள் ஆட்சி மொழிகளாக இருக்கும் போது, கனடா தேசத்தில் இரண்டு மூன்று மொழிகள் ஆட்சிமொழிகளாக இருக்கும்போது, இலங்கையில் தமிழும் சிங்களமும் ஆட்சி மொழிகளாக இருக்கும்போது, கிழக்குப் பாகிஸ்தானில் உருதுவும், வங்காளமும் ஆட்சி மொழிகளாக இருக்க வேண்டுமென்று கிளர்ச்சி நடந்து கொண்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் போது, 36 கோடி மக்கள் வசிக்கும் இந்திய உபகண்டத்தில் நான்கு அல்லது ஐந்து மொழிகளை மத்திய அரசாங்கத்தின் ஆட்சி மொழிகளாக வைத்து விட்டால் என்ன கஷ்டம் வந்துவிடப் போகிறது என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஐக்கிய நாட்டுச் சபையில் பல மொழி பேசக்கூடிய பல தேசங்களிலிருந்து பிரதிநிதிகள் கூடியிருந்து கருத்துக்களைத் தெரிவிக்க முடியவில்லையா? விஞ்ஞான வளர்ச்சியின் காரணமாக ஒரே சமயத்தில் பல மொழிகளில் மொழி பெயர்க்கக் கூடிய அளவு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. ஆகவே, மிகச் சொற்ப செலவிலேயே அதாவது சில இலட்சக் கணக்கான ரூபாய் செலவிலேயே இம்மாதிரி செய்து கொள்ளலாம். தனிப்பட்டவர்கள் ஆங்கிலத்திலேயோ

இந்தியிலேயோ வங்காளத்திலேயோ தமிழிலேயோ இன்னும் மற்ற இந்திய மொழிகளிலேயோ தங்களுடைய அனுபவம் வாய்ந்த கருத்துக்களையும், நாட்டின் முன்னேற்றத்திற்கான கருத்துக்களையும் எடுத்துச் சொல்வதற்கு முடியும். அவர்களுடைய அறிவையெல்லாம் மத்திய அரசாங்கம் நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ளலாம். சென்னை இராஜ்யத்தைப் பொறுத்த வரையில் இந்தி மொழிக்கு என்ன அவசியம் தேவைப்படப் போகிறது? கிராமப் புறத்தில் இருக்கக் கூடிய விவசாயி முதல், முதல் மந்திரி கனம் திரு காமராஜ் அவர்களுடைய பதவி வரையில் தமிழ் மொழியே இருந்தால் போது மானது. அதற்கு ஆங்கிலமும் தேவையில்லை, இந்தியும் தேவையில்லை. ஆகவே, இந்தி பள்ளிக் கூடங்களிலே கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட வேண்டும் என்று ஒரு நண்பர் மிகத் தீவிரமாகப் பேசினார். தமிழைப்பற்றி நான் சொல்லும்போது, மலையாளம் கன்னடம் ஆகிய மொழிகளும் பிரதேச மொழிகள் என்ற அளவுக்குத் தான் பேசுகிறேன். மலையாளம், கன்னடம் போன்ற மொழி களும் தமிழிலிருந்தே பிறந்தன என்பதை அவர்கள் இப்பொழுது ஏற்றுக் கொண்டாலும், ஏற்றுக் கொள்ளா விட்டாலும், சமஸ்கிருதத்திலிருந்து இந்தி பிறந்தது என்பதையும், சமஸ்கிருதத்திலிருந்து தெலுங்கு, மலையாளம் பல வார்த்தைகளை எடுத்துக் கொண்டன என்பதையும் யாரும் மறுக்க முடியாது.

இந்தி மொழியானது எந்தவிதக் காரணத்தைக் கொண்டும் நிச்சயமாக வரக்கூடாது என்று நாங்கள் கூறு கிறோம். உத்தியோகத்திற்கானாலும் சரி, பள்ளிக்கூடத்தில் படிக்க வேண்டிய மொழியாக இருந்தாலும் சரி, அது தேவை இல்லை. அதற்குள்ள அருகதை இந்தி மொழிக்கு இல்லை. இந்தச் சென்னை இராஜ்யத்தில் தமிழர்கள் மட்டும் இந்தி திணிக்கப்படுவதை எதிர்க்கிறார்கள் என்பதல்ல தாய்மொழியின் மீது பற்றுக் கொண்ட வங்காளிகளும்,

பஞ்சாபியர்களும் எல்லா மொழியினர்களும் அதை எதிர்க்கிறார்கள். தென்னாட்டிலே உள்ள அத்தனைப் பேரும் இந்தி அவசியம் இல்லை என்று கருதுகிறார்கள்; தேவையில்லை என்று கருதுகிறார்கள்; வேறு பல நாடுகளிலே பொது மொழி இல்லாமல் ஒற்றுமையாக இருக்கவில்லையா?

வெள்ளைக்காரன் எப்படி நீசத்தனமான எண்ணத்துடன் தன்னுடைய மொழியைப் புகுத்த விரும்பினானோ, அதே மாதிரியான நீசத்தனமான எண்ணத்துடன் வடநாட்டார் இந்தியைப் புகுத்தி நம்மை அடக்கி ஆளவேண்டுமென்று கனவு காண்கிறார்கள். அது முடியாத காரியம். இந்தியை எந்த விதத்திலும் புகுத்தக்கூடாதென்று இந்தச் சட்டசபை வற்புறுத்தவேண்டும். அரசாங்கம் இதற்குச் செவி சாய்க்க வேண்டும். இது அவர்களுடைய அபிப்பிராயம் அல்ல. நாட்டிலுள்ளவர்களுடைய அபிப்பிராயத்தைச் சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன் என்றார்.

திரு பி. இராமமூர்த்தி:—

இந்தப் பிரச்னை தமிழ் நாட்டில் இருக்கக் கூடிய மக்களை மட்டுமல்ல, நமது நாட்டிலிருக்கிற சகல மக்களையும் பாதிக்கும்படியான ஒரு முக்கியமான பிரச்னை. இந்தத் தேசத்தில், ஒற்றுமை மேன்மேலும் ஓங்கி உரம்பெற்று, பலம் பெற்று, விளங்கப் பேகிறதா அல்லது சீர்குலைவிற்கான சக்திகள் மேன்மேலும் பலமடையப் போகின்றனவா என்பது இந்தப் பிரச்னையை நாம் எவ்வளவு புத்திசாலித்தனமாகத் தீர்க்கிறோம் என்பதைப் பொறுத்துத்தானிருக்கிறது. ஆகவே, இது சம்பந்தமாக நாம் அடிப்படையான சில விஷயங்களை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு, பாஷை, மொழி சம்பந்தமாக இருக்கும் பிரச்னைகளைச் சிறிது ஆற அமர

ஆலோசிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

தங்கள் மொழியின் மீது அன்பு, பற்று உலகில் இருக்கக்கூடிய மக்களுக்கு ஏற்படுவது இயற்கையான விஷயம். ஆகவே, இந்த மொழிப் ,பிரச்னை பற்றிக் கவனிக்கும்போது இந்த மொழி வளர்வதற்கு வேண்டிய யோக்யதாம்சங்கள் கொண்டிருக்கக்கூடிய மொழியா, அது நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்திருக்கிறதா, தமிழ் மொழி வளர்வதற்கு இந்தி மொழிக்கு இருக்கக் கூடிய அளவிற்கு யோக்யதாம்சங்கள் இருக்கின்றனவா அல்லது வேறொரு மொழிதான் அந்த மாதிரி வளர்வதற்குத் தகுதி வாய்ந்ததாக இருக்கிறதா என்ற ஆராய்ச்சியில் இறங்குவது உண்மையில் பிரயோஜனமற்ற விஷயமாகும். ஏனென்றால், மொழி என்பது என்ன என்று பார்ப்போமே யானால், மனிதன் உலகத்தில் தோன்றி, சமூக வாழ்வு வாழ ஆரம்பித்த காலம் முதற்கொண்டு சமூகத்தில் தங்களுக்குள் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளப் பலரும் சேர்ந்து இயற்கையை எதிர்த்துப் போராடி, இயற்கையிலிருந்து தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சம்பாதிக்க அவர்கள் செய்யும்படியான முயற்சிகளுக்கு மொழி மிகவும் இன்றியமையாத கருவியாக இருந்து வருகிறது. மொழி இல்லாமல் போகுமேயானால், மனிதனுடைய கருத்துக்களுக்கு உருவம் ஏற்பட முடியாது. கருத்துக்களுக்கு மொழியென்ற உருவம் இல்லாமல் போனால், அவைகள் அந்தரத்தில் தொங்கும். ஆகவே, மொழி வளர்ச்சி அடையாது போனால், சமூக வாழ்வே நசித்துப் போய்விடும் என்பது உலக சரித்திரம் கண்டறிந்திருக்கக்கூடிய உண்மை.

மொழியின் வளர்ச்சியை நாம் குறிப்பாக எடுத்துப் பார்க்க வேண்டுமென்றால், அந்த மொழியைப் பேசும் படியான சமுதாயம் எவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது

20 FEB 1990 Govt. Oriental Manuscripts Library Madras

என்பது போன்ற விஷயங்களை எடுத்துப் பார்த்தால்தான், குறிப்பிட்ட காலத்தில் ஒரு மொழிக்கு ஏற்பட்டுள்ள வளர்ச்சியை நாம் கணக்கிடுவது சாத்தியமாகும். ஆகவே, இந்த மொழி வளர்வதற்குத் தகுதி உள்ளது, இந்த மொழி வளர்வதற்குத் தகுதியற்றது என்ற பேச்சு சந்தர்ப்பம் அற்ற பேச்சு. அது பிரயோஜனமற்றது. அப்படியானால் நாம் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்ன என்று கேட்பீர்கள். மொழி என்பது மனிதர்கள் உற்பத்தி செய்து வளர்த்திருக்கக் கூடிய கருவி என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் உற்பத்தி செய்து, தமிழ்ச் சமுதாய வளர்ச்சிப் போக்கில் அவர்கள் வளர்த்து இருக்கக் கூடிய மொழி தமிழ் மொழி. ஆங்கில மொழி பிரிட்டனில் பிறந்திருக்கக்கூடிய மக்கள், தங்கள் சமுதாய வளர்ச்சிப் போக்கில் வளர்த்திருக்கக் கூடிய மொழி. இரஷ்ய மொழி, அந்த இரஷ்ய மக்கள் தோற்றுவித்து, அவர்களுடைய சமுதாய வளர்ச்சிப் போக்கில் வளர்த்திருக்கும் மொழி. இதே மாதிரி ஒவ்வொரு நாட்டில் இருக்கக்கூடிய சமுதாயங்களில் உள்ள மக்கள் தோற்றுவித்து, வளர்த்திருக்கக் கூடிய மொழியின் மீது அருவறுப்பு காட்டுவது, அந்த மக்களின் மீது அருவருப்பு காட்டுவதாகும். ஆகவே, இந்த மொழிப் பிரச்னையைப் பார்க்கும் போது, மனிதனால் உற்பத்தி செய்யப்பட்டு வளர்க்கப் பட்டது மொழி என்பதை மனதில் கொண்டு, எந்த மனிதனாக இருக்கட்டும், தமிழ்நாட்டில் பிறந்தவனாக இருக்கட்டும், பம்பாய், மலபாரில் பிறந்தவனாக இருக்கட்டும், அல்லது இங்கிலாந்து அமெரிக்கா தேசங்களில் பிறந்தவனாக இருக்கட்டும், உலகத்தில் இருக்கக் கூடிய மனித சமுதாயத்தை வணங்குகிறோம், அவனுக்கு நாம் கௌரவம் அளிக்கிறோம் என்ற கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டுமேயல்லாது, இந்தப் பிரச்னையில் விருப்பு, வெறுப்பு என்பதற்கு இடமில்லை என்பதை நான் முதலில் சொல்லிக் கொள்ள

ஆசைப்படுகிறேன். இந்தக் கண்ணோட்டத்துடன், அதாவது ஒவ்வொரு நாட்டிலும் இருக்கக்கூடிய மக்களுக்கு அந்தந்த மொழிபேசக்கூடிய மக்களுக்குக் கௌரவம் அளிக்க வேண்டியது அவசியம் என்ற கண்டோட்டத்துடன் இந்த மொழிப் பிரச்னையைப் பார்க்கும்போது, நமது நாட்டிலும் பல மொழிகள் பேசும் சமுதாயங்கள் இருக்கின்றன. அந்தப் பல்வேறு சமுதாய மக்களை நாம் கௌரவித்தாக வேண்டும் என்ற அடிப்படையில் நாம் போக வேண்டும். அந்த அடிப்படையில் நாம் பிரச்னையை அணுகினால், நம் நாட்டிலுள்ள சமுதாயங்கள் அனைத்திற்கும் சம அந்தஸ்தைக் கொடுக்கிறோம் என்றால்தான், அப்பேர்ப்பட்ட நிலையில் அந்தப் பல்வேறு சமுதாயத்தினர் பேசக்கூடிய மொழிகளுக்குச் சமமான அந்தஸ்து இருக்கவேண்டுமென்றும் தெரிவிப்பது சாத்தியமாகும். ஆகவே, இந்த அடிப்படையில் போனால், துவேஷத்திற்கு இடமிருக்க முடியாது, பரஸ்பர விரோதத்திற்கு இடமிருக்காது.

நம் தமிழ்நாடு சம்பந்தப்பட்ட மட்டில், தமிழ் மொழியில் எல்லா விஷயங்களும் நடைபெற்றாக வேண்டும் என்ற உணர்வு நிச்சயமாக இந்த நாட்டில் இருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கத்தான் செய்திருக்கிறது. இது எப்பொழுது ஏற்பட்டது என்பதையும், நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். நம் நாட்டில் தேசீய இயக்கம் வளர்ந்து பலப்பட்டுப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டுமென்ற உணர்ச்சி மேலிட்டபோதே, நம் நாட்டில் எந்தப் பிரதேசத்தை எடுத்துப் பார்த்தாலும் சரி, அந்தக் காலக்கட்டத்தில் மொழிப்பற்றும் கூடவே வளர்ந்து வந்திருக்கிறது. 1915—ஆம் வருஷம் முதற்கொண்டு தேசீய இயக்கம் மிகவும் உச்சாணி நிலையை அடைந்து வந்திருக்கும் சமயத்தில், தமிழ் நாட்டில் பாரதியார்

தோன்றியிருக்கிறார். ஆந்திராவில் வீரசலிங்கபந்துலுவும், வங்காளத்தில் இரவீந்திரநாத தாகூரும், இந்துஸ்தானில் மைதிலேஸ்வரன் குப்தாவும் தோன்றியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டிலும் இதேமாதிரி அன்னிய ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்கள் வளர்ந்த காலக் கட்டத்தில், அந்த நாட்டு மொழிகளை வளர்க்க வேண்டுமென்ற எண்ணமும் கூடவே வளர்ந்து வந்திருக்கிறது என்பதையும் பார்க்கிறோம். இப்படி இருக்கக்கூடிய சந்தர்ப்பத்தில் நம் நாட்டில் இன்றைக்குக் கூட சிலர் சொல்லுகிறார்கள். தமிழ் நாட்டில் தமிழ் மொழிதான் ஆட்சி மொழியாக வேண்டும், கல்லூரிகளிலும் அந்த மொழியில்தான் இன்றைக்குப் பயிற்சி அளிக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள்; ஆனால் துரதிருஷ்டவசமாக தமிழ் மொழி இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் பலவகைப்பட்ட கலைகளைப் போதிக்க வேண்டிய யோக்கிதாம்சங்கள் பெற்றிருக்கவில்லை. அதற்கு வேண்டிய திறமை அந்த மொழிக்கு இன்னும் ஏற்படவில்லை. அந்தத் திறமை ஏற்படுகிற வரையில் நாம் ஆங்கில மொழியை உபயோகப்படுத்தியதாக வேண்டும் என்று இன்றைக்குக் கூட பேசுகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். துரதிருஷ்டவசமாக அந்த மாதிரி பேசக்கூடியவர்கள், நம் குழந்தைகளுக்குப் போதிக்கக் கூடிய ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் சர்வகலாசாலை ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள். குறைந்தது இன்னும் 15, 20 வருஷங்கள் ஆங்கிலம் இன்றைக்கு இருக்கிற இடத்தில் இருக்கத்தான் வேண்டும். 20 வருஷங்களுக்குப் பிறகு, தமிழ் மொழிக்குச் சம்பூர்ணயோக்கியதாம்சங்கள் ஏற்பட்டவுடன்தான், அந்த மொழியை ஆட்சிமொழியாக்க வேண்டிய ஏற்பாடுகள் நாம் செய்ய முடியும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள். எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் பாரதியாரின் ஒரு பாட்டு ஞாபகத்திற்கு வருகிறது. தமிழ்

நாட்டில் தமிழ்ப்பற்றை பரப்பிய பாரதியார் அன்றைக்குப் பாடினார்:

'கன்னிப் பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசை மொழியெல்லாம்
என்னென்னவோ பெயருண்டு—பின்னர்
யாவும் அழிவுற்றிறந்தன கண்டீர்'

என்று பாடியிருக்கிறார். அந்த நாளில் நான் எத்தனையோ மொழிகளின் பெயரைக் கேட்டேன். ஆனால் அவையாவும் பின்னர் அழிவுற்றன என்று கூறியிருக்கிறார். உதாரணமாக, இன்று இந்தி என்று பேசுகிறோமே அந்த இந்தி என்ற ஒரு மொழி 600 வருஷத்திற்கு முன்பு இருந்தது கிடையாது. இன்று இந்தி மொழி பேசக்கூடிய பகுதிகளை எடுத்துப் பார்த்தால், மதுரா பக்கத்தில் அன்றைக்குப் பேசியிருக்கக் கூடிய மொழி 'ப்ரஜா', அயோத்தியில் 'அவுத்', அதற்குப் பக்கத்தில் 'சப்ரா', அதற்குப் பக்கத்தில் 'பலி', அதற்குப் பக்கத்தில் 'மகதி', இந்த மாதிரியாக பலவகைப் பட்ட மொழிகளாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் காலப்போக்கில் இவையெல்லாம் ஒன்றாக மாறி 'கடிபோலி' இந்துஸ்தானியாக மாறிவிட்டது. இந்த மாதிரியாக 'ப்ரஜா மொழி' பெயர்களெல்லாம் இல்லாமல் இறந்துவிட்டன என்று அன்றைக்குப் பாரதியார் பாடியிருக்கிறார். இப்படிப் பாடிவிட்டு அவர் சொல்லுகிறார்:—

'கன்னிப்பருவத்தில் அந்நாள்—என்றன்
காதில் விழுந்த திசை மொழி யெல்லாம்
என்னென்னவோ பெயருண்டு—பின்னர்
யாவும் அழிவுற்றிறந்தன கண்டீர்,
தந்தை அருள்வலியாலும்—முன்பு
சான்ற புலவர் தவவலியாலும்
இந்தக்கண மட்டும் காலன்—என்னை
ஏறிட்டுப் பார்க்கவும் அஞ்சியிருந்தான்,

இன்றொரு சொல்லினி கேட்டேன்—இனி
ஏது செய்வேன்? எனதாருயிர் மக்காள்
கொன்றிடல் போலொரு வார்த்தை—இங்குக்
கூறத்தகாதவன் கூறினன் கண்டீர்!
புத்தம் புதிய கலைகள்—பஞ்ச
பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்,
மெத்த வளருது மேற்கே—அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை.
சொல்லவும் கூடுவதில்லை—அவை
சொல்லுந்திறமை தமிழ் மொழிக்கில்லை
மெல்லத்தமிழினி சாகும்—அந்த
மேற்கு மொழிகள் புவிமிசையோங்கும்
என்றந்தப் பேதை உரைத்தான்—ஆ!
இந்த வசையெனக் கெய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்
தந்தை அருள்வலியாலும்—இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும்—புகழ்
ஏறிப்புவிமிசை என்றும் இருப்பேன்'.

என்று 1908—ஆம் வருஷத்திலேயே பாரதியார் பாடியிருக்கிறார். தேசிய வளர்ச்சி ஏற்பட்ட பிறகும், அந்நிய ஏகாதிபத்தியத்தை இந்நாட்டை விட்டு வெளியேற்றிய பிறகும், அவர்களுடைய பாஷை வேண்டும் என்று சொல்லக்கூடிய நிலைமை இந்நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. அப்படி அந்நிய பாஷை இன்னும் நம் நாட்டில் இருக்க வேண்டும் என்று ஆசிரியர்கள் சொல்லி வருகிறார்கள். இன்னும் முப்பது வருஷங்கள் அது இருக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். முப்பது வருஷங்களான பிறகும் எந்த நிலைமை ஏற்படும் என்று அவர்களால் சொல்ல முடியாது. இந்தப் பிரச்னையை இப்படிப்பட்ட பிரகிருதிகள் கையில்,

நம்பிக்கை இல்லாதவர்களுடைய கையில் விட்டுவிட்டால் அது எந்த நிலைமையில் கொண்டு போய் விடும் என்பதை யோசிக்க வேண்டும். அவர்களுடைய கையில் இந்தப் பிரச்னையை விட்டு விட்டால், இந்தப் பிரச்னையைத் தீர்க்கவே முடியாது. தமிழ் மொழி கல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் பரப்ப வேண்டும் என்ற எண்ணம் கொண்டால் அது முடியாத காரியமாகிவிடும். அப்படி அவர்களுடைய கையில் விட்டு விட்டால் நிச்சயமாக இந்தப் பிரச்னையைத் தீர்க்கவே முடியாது. ஆகவே, நான் இப்பொழுது சொல்லுகிறேன், அவர்கள் ஆங்கிலம் இருக்க வேண்டும் என்று பல காரணங்கள் கொடுக்கிறார்கள். கல்லூரிகளிலும் கலாசாலைகளிலும் போதனா முறை ஆங்கிலத்தில் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். இதற்கும் இந்திப் பிரச்னைக்கும் நேரடியான சம்பந்தம் உண்டா என்பதை விளக்கிக் காட்டிப் பேசுகிறேன். தமிழ் மொழி வளர்ச்சி அடைந்த பிறகு அதைக் கொண்டு வரலாம் என்று சொல்லுவது எப்படி இருக்கிறது என்றால், நீந்திப் பழகிய பிறகு, தண்ணீரில் இறங்கினால் போதும் என்று சொல்லுவது போல் இருக்கிறது. நீந்தப் பழகிய பிறகு தண்ணீரில் இறங்க வேண்டும் என்று ஒருவன் இருந்தால் இவன் ஒரு நாளும் நீந்தக் கற்றுக் கொள்ளப் போவது இல்லை. அதைப் போல இருக்கிறது தமிழ் மொழி வளர்ச்சி அடைந்த பிறகு அதைக் கொண்டு வரலாம் என்று சொல்லுவது.

உலகத்தில் இப்பொழுது எவ்வளவோ மொழிகள் இருக்கின்றன. அவைகள் எப்படி வளர்ச்சி அடைந்தன என்பதைப் பார்க்க வேண்டும். இன்டோனேஷியா இருக்கிறது. அங்கு இன்டோனேஷிய பாஷையை மக்கள் ஏற்றுக் கொள்ள முடியாமல், டச்சு ஏகாதிபத்தியம் தன்னுடைய பாஷையாகிய டச்சு பாஷையை வளர விட்டுக் கொண்டிருந்தது. அப்படி 1949—ஆம் வருஷம்

வரையில் இருந்தார்கள். அந்த டச்சு ஏகாதிபத்தியம் போன பிறகு, அவர்கள் உடனடியாகக் கலாசாலை, கல்லூரி முதலிய இடங்களில் தங்களுடைய சொந்தப் பாஷை யாகிய இன்டோனேஷிய பாஷையைப் புகுத்தினார்கள். அதனால் எந்த விதமான கெடுதலும் ஏற்படவில்லை. மற்றபடி, சைனா இருக்கிறது. அங்கும் நீண்ட காலமாக சைனா பாஷையை வளர விடாமல் ஆங்கிலத்தைப் புகுத்தியிருந்தார்கள். ஆங்கிலத்தில்தான் எல்லா நடவடிக்கைகளும் விஞ்ஞானம் முதலியவைகளும் நடந்து வந்தன. அதன் பிறகு, ஆங்கிலத்தை எடுத்து விட்டு சைனா பாஷையைக் கொண்டு வந்தார்கள். அப்படிக் கொண்டு வந்ததினால், அவர்களுடைய கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் எந்த விதமான மாறுதலும் ஏற்பட வில்லை. அதனால், ஜனங்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை. கலைத்துறையில் மக்கள் குறைந்துவிடவில்லை, மேலும் மேலும் வளர்ந்து கொண்டு வருகிறார்கள் என்று நமது பிரதம மந்திரி ஜவஹர்லால் நேரு அவர்களே தன்னுடைய சுற்றுப் பிரயாணத்தை அங்கிருந்து முடித்துக் கொண்டு வந்த பிறகு சொல்லியிருக்கிறார். ஆகவே, நம்முடைய தேசிய பாஷையைக் கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்பலாம்.

நம்முடைய இராஜ்யத்தில் தமிழாகிய தேசிய மொழியே வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அந்த மொழியில்தான் நம் நாட்டில் சகல விதமான நடவடிக்கைகளும் நடக்க வேண்டும் என்று சொல்லு கிறார்கள். போதனையையும் அதில்தான் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். தமிழ் மொழியிலேதான் எல்லா நடவடிக்கைகளும் நடக்க வேண்டும் என்று அரசாங்கம் சொல்லிவிட்டால், அந்த மொழி வளர்ச்சி அடைய வசதி ஏற்பட்டு விடும். 1600—ஆம் வருஷத்திற்கு முன்பாக ஆங்கிலம் இந்த வளர்ச்சி அடைந்திருக்க முடியும் என்று

நினைத்திருக்க முடியுமா? அப்படி அவர்கள் நினைத்திருக்க முடியாது. ஐரோப்பாவிலுள்ள எந்தப் பாஷையை எடுத்துக் கொண்டாலும் அவைகள் இப்படித்தான். இப்பொழுது தான் ஆங்கிலத்திற்கு ரினைசான்ஸ் ஏற்பட்டிருக்கிறது. அதன் பிறகுதான் இப்படிப்பட்ட கூக்குரல் ஏற்பட்டிருக்கிறது. முதலில் லத்தீன் பாஷையில்தான் பைபிள் இருந்தது. அதை ஒழிக்க வேண்டும் என்று கிளர்ச்சி எற்பட்டது. அதன் மூலம்தான் மொழிக் கிளர்ச்சி ஏற்பட்டது. ஜெர்மனியில் கிளர்ச்சி ஏற்பட்டது, ஐரோப்பாவில் கிளர்ச்சி ஏற்பட்டது, மற்றும் பல நாடுகளில் கிளர்ச்சிகள் ஏற்பட்டன. அவர்களுடைய கிளர்ச்சியின் விளைவாகப் பைபிளை லத்தீன் பாஷையில் பிரசுரிப்பதை விட்டு விட்டு ஆங்கிலத்தில் பிரசுரித்தார்கள். அதன் பிறகுதான் மக்களுடைய மொழி வளர்ச்சி அடைந்தது. அதைப் போலவே, ஒரு மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்றால் அது வளருவதற்கு வேண்டிய சந்தர்ப்பம் கொடுக்காமல் இருந்தால் அது எப்படி வளர்ச்சி அடைய முடியும். வளர்ச்சி அடைந்த பிறகுதான் அதற்கு இடம் கொடுப்போம் என்று சொன்னால், நீந்தக் கற்றுக் கொண்ட பிறகுதான் தண்ணீரில் இறங்க வேண்டும் என்பது போலாகும்.

தேசிய மொழியில் பற்றுள்ளவர்களுக்குத் தங்கள் தங்கள் மொழி வளர்ச்சி அடைய வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டிருக்கிறது. சோவியத் நாடுகளில் பல மொழிகள் இருந்தன. ஆனால் இரஷ்ய ஏகாதிபத்தியத்திலிருந்த ஜார் காலத்தில் இரஷ்ய சாம்ராஜ்யத்துடன் சேர்ந்திருக்கும் மற்ற இராஜ்யங்களுக்கும் இரஷ்ய பாஷையே இருக்க வேண்டும் என்று ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். அதனால், மற்ற இராஜ்ய மக்களுக்கும் இரஷ்ய மக்களுக்கும் மனத்தாங்கல்

ஏற்பட்டது. அப்படிப்பட்ட பிரச்னை இங்கு இல்லை. தமிழ், வங்காளம், ஆந்திரம் முதலிய பாஷைகளின் மீது ஆங்கிலேயர்கள் ஏகாதிபத்திய ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள். தேசிய இனத்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அந்த ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார்கள். இரஷ்ய சாம்ராஜ்யத்தில் மற்ற இனத்தைச் சேர்ந்த மக்கள் எப்படி இரஷ்ய மொழியை எதிர்க்கிறார்களோ, அதேபோல், இந்நாட்டிலும் தமிழ், ஆந்திரர் வங்காளியர் முதலிய பல இனத்தவர்கள் ஆங்கிலத்தை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆதனால், அனைவரும் ஒன்று சேர்ந்து பிரிட்டிஷ் ஏகாதிபத்தித்தை எதிர்த்துப் போராடினார்கள். ஒற்றுமையாக வளரவேண்டும். சகலவிதமான அஸ்திவாரமும் இருக்க வேண்டும் என்று அன்றைய தினம் ஒற்றுமையாக இருந்து எதிர்த்துப் போராடினார்கள். இந்நாட்டில் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கும் ஒரு தேசிய இனத்தைச் சேர்ந்த மக்கள் மற்றொரு தேசிய இனத்தைச் சேர்ந்த மக்களுடன் பரஸ்பரம் பரிமாறிக் கொள்வதற்கும், வியாபாரத்தை நடத்திக் கொள்வதற்கும் அரசாங்கம் ஒரே மொழியில் நடத்தப்பட வேண்டும் என்ற பிரச்னைக்கு வழி காண வேண்டியது அவசியமா? அப்படிக் கண்டிருந்தால் அது சுலபமாகத் தீர்ந்து விடுமா என்று பார்க்க வேண்டும். எப்படிப்பட்ட பெரிய கிளர்ச்சி நம் நாட்டில் ஏற்பட்டது என்பதைக் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும். *1938*—ஆம் வருஷம் இந்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. *1934*—ஆம் வருஷத்தில் இராமசாமி நாயக்கர் ஜஸ்டிஸ் பார்ட்டிக் கட்சிக்காக உழைத்த காலத்தில் அவருக்கு அன்றுள்ள மக்கள் ஒத்துழைப்புக் கொடுக்காமல் ஜஸ்டிஸ் கட்சி படுதோல்வி அடையச் செய்தார்கள். ஆனால், இராமசாமி நாயக்கர் *1938*—ஆம் வருஷம் இந்தி எதிர்ப்பு இயக்கத்தை

ஆரம்பித்தபோது மக்கள் அவருக்கு ஆதரவு கொடுத்தார்கள். அதிலிருந்து இராமசாமி நாயக்கருக்காகத் தனி ஆதரவு எதுவும் கொடுக்கவில்லை. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்குத் துணையாக ஜஸ்டிஸ் பார்ட்டி இருந்த காரணத்தால் ஜஸ்டிஸ் பார்ட்டிக்காக உழைத்த இராமசாமி நாயக்கருக்கு 1934-இல் ஆதரவு கொடுக்காத மக்கள் இந்தியை இந்நாட்டில் புகுத்தக் கூடாது என்று மக்களின் கருத்தை இராமசாமி நாயக்கர் எடுத்துச் சொன்னபோது அந்தக் கருத்திற்காக மக்கள் தானே வந்து ஆதரவு கொடுத்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

எனவே, சுயராஜ்யம் கிடைத்த பிறகு அவர்களுடைய தாய் மொழியிலேயே ஆட்சி நடைபெறும் என்று மக்கள் எண்ணினார்கள். காங்கிரஸ் ஆட்சி வந்த பிறகு உடனடியாகத் தமிழிலேயே நிருவாகம் வந்து விடும் என்று நம்பினார்கள். அப்படி எண்ணிய மக்களுக்குத் தமிழ் மொழியிலே நிருவாகத்தை நடத்த எவ்விதமான ஏற்பாடும் செய்யாமல், கல்லூரிகளில் தமிழிலேயே பாட போதனை நடத்த வழி வகைகளைச் செய்யாமல் ஆங்கிலம் இருந்த இடத்தில் இந்தி இருக்குமென்று மத்திய சர்க்கார் சொன்னால், அதை மக்கள் எப்படி ஏற்றுக் கொள்வார்கள் என்று நான் கேட்கிறேன். வளர்ச்சி அடையாத இந்தி மொழியை ஆங்கிலம் இருக்கக் கூடிய ஸ்தானத்தில் கொண்டு வந்து வைக்கப் போகிறோம் என்று சொன்னால், ஆங்கில மொழியைக் கொண்டு பிரிட்டிஷ்காரர்கள் நம்மை ஆதிக்கம் செய்தது போலவே, இன்றைக்கு இந்தியைக் கொண்டு வடநாட்டார் தென்னாட்டை ஆதிக்கம் செய்ய விரும்புகிறார்கள் என்றுதானே மக்கள் எண்ண முடியும். ஆகவே, இப்படிப்பட்ட கருத்து மக்களுடைய எண்ணத்தில் ஊன்றிவிட்ட காலத்தில், தமிழ் மொழியை நமது இராஜ்ய சர்க்கார்களின் அரசாங்க பீடத்தில்கூட ஏற்ற மாட்டார்கள் போலிருக்கிறதே என்ற அவநம்பிக்கை வளர்ந்து வந்த காலத்தில் இந்தி எதிர்ப்புப்

போராட்டத்தை இராமசாமி நாயக்கர் ஆரம்பித்தார். ஆகவே மக்கள் இந்தக் கருத்துக்கு ஆதரவாக ஸ்ரீ இராமசாமி நாயக்கர் ஆதரித்தார்கள் என்பதுதான் உண்மை.

இந்திய நாட்டின் பொது மொழியாக ஒரு மொழி இருக்க வேண்டுமானால், அது இந்தி மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று நாங்கள் நிச்சயமாகச் சொல்லுகிறோம். அதைப்பற்றி எங்களுக்கு என்றைக்குமே சந்தேகம் இருந்தது கிடையாது. ஒளிவு, மறைவு இல்லாமல் சொல்லுகிறோம், இந்தி மொழிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டுமென்று அப்படிச் சொல்லும் போது அதற்கு ஜனங்களுடைய எதிர்ப்பைச் சம்பாதிக்கக் கூடாது. ஜனங்களுடைய ஒத்துழைப்பை அடிப்படையாகக் கொண்டு இந்தி மொழியை வளர்க்க வேண்டும். இப்படிப்பட்ட சூழ்நிலையை இந்த நாட்டில் எப்படி ஏற்படுத்துவது என்பதுதான் இன்றைக்கு அடிப்படையான பிரச்னையாக இருக்கிறது. நேற்றைய தினம் பல கட்சிகளைச் சேர்ந்த அங்கத்தினர்கள் பேசும்போது என்ன சொன்னார்கள்? மத்திய சர்க்காரின் விவகார மொழியாகவும் மத்திய அரசாங்கம் பல்வேறு இராஜ்யங்களுக்கிடையே கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்வதற்கேற்ற மொழியாகவும் இந்தி மொழி இருப்பதில் ஆட்சேபணை இல்லையென்று பலர் பேசியிருக்கிறார்கள். இதைச் சாத்தியமாக்குவது எப்படி? அதற்கு என்னென்ன நடவடிக்கை எடுக்க வேண்டு மென்பதைத்தான் நாம் பிரதானமாகப் பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்னையை மேலெழுத்தவாரியாக, தத்துவார்த்த ரீதியாகப் பார்க்காமல், பிரத்தியட்சக் கண்ணோட்டத்தோடு கவனிக்க வேண்டும். முதன் முதலாக என்ன செய்ய வேண்டும்? அந்தந்தப் பிரதேச மொழியை வளர்ப்பதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளையும் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டும். பிரதேச

மொழியை அந்த இராஜ்யத்தில் ஆதிக்க மொழியாக ஆக்குவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யாத ஒரு காரணத்தால்தான், மேலும் மேலும் இந்திக்கு எதிர்ப்பு வளருவதற்கு இடம் ஏற்படுகிறது. ஆகவே, பிரதேச மொழிகள் இராஜ்யத்தில் தங்களுக்குரிய ஸ்தானத்தை முதலில் அடையச் செய்ய வேண்டும் என்று நான் வற்புறுத்திக் கூற ஆசைப்படுகிறேன்.

யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சை நடத்தும் போது, அந்தந்தப் பிரதேச மொழியிலேயே நடத்தித்தான் ஆக வேண்டும். இடைக்காலத்தில் வேண்டிய அளவுக்கு இந்த நாட்டில் ஒரு சுமுகமான நிலைமையை ஏற்படுத்தி யாக வேண்டும். மத்திய அரசாங்கத்தில் வேண்டிய ஏற்பாடுகள் செய்தால் நிச்சயமாக முடியும். இது ஒரு பிரமாதமான விஷயம் அல்ல.

நமது இராஜ்யத்தை எடுத்துக் கொள்வோம். நமது இராஜ்யத்தில் இன்றைக்கு ஆங்கிலத்தில் எல்லா வேலைகளும் நடைபெற்று வருகின்றன. நமக்கு இருக்கக் கூடிய முதல் மந்திரி அவர்களுக்கு அந்த அளவுக்கு ஆங்கிலம் தெரியும் என்று நான் நினைக்கவில்லை. தெரியாது. இருந்தாலும் இதை ஒரு குறையாக நான் சொல்லவில்லை. ஆங்கிலம் தெரிந்திருக்கத்தான் வேண்டும் என்றும் நான் சொல்லவில்லை. ஆங்கிலம் அந்த அளவுக்குத் தெரியாமல் போனாலுங்கூட, மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டு பேப்பர்களைப் பார்த்து வேண்டிய உத்தரவு போடுவதற்கு அவர்களுக்குத் திறமை இருக்க முடியும். திறமை இருக்கிறது. திறமை இருக்கத்தான் செய்யும். இந்த இராஜ்யத்தில் முதல் மந்திரியாக இருப்பவருக்கு ஆங்கிலம் அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும் இராஜ்யத்தில் நிருவாகத்தை நடத்துவதற்குத் திறமை இருக்கும்போது, அதே மாதிரி மத்திய அரசாங்கத்திலும் அதே நிலைமை இருப்பதால்,

அவ்விதமான இடைஞ்சலும் கிடையாது. ஆகவே, ஆங்கிலம் தெரிந்திருக்க வேண்டுமென்பது அவசியம் இல்லை. ஆங்கிலம் தெரிந்தால்தான் ஆட்சியை நடத்த முடியும் என்ற நிலைமை இருக்கக்கூடாது. அதே மாதிரிதான் இந்தி தெரியாதவர்களால் ஆட்சி நடத்த முடியாது என்று நிலைமை ஏற்படக்கூடாது. இந்தி வளருகிறவரை, அந்த நிலைமை ஏற்படுகிறவரை, மொழி பெயர்ப்பாளர்களை வைத்துக் கொண்டு காரியங்களைச் செய்ய முடியும். தேவையான மொழி பெயர்ப்பாளர்களை நியமிப்பதற்கு மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்தால் இது சாத்தியமாகும். மனக் கசப்பைத் தடுத்து நிறுத்துவது சாத்தியம்.

இந்த நாட்டில் எந்தப் பகுதி மக்களுடைய பாஷையாகவும் சமஸ்கிருதம் இருந்தது கிடையாது. புராதன காலத்தில் சாதாரண மக்கள் பேசுகின்ற பாஷையாக சமஸ்கிருதம் இருந்ததே கிடையாது. சாதாரண மக்களுக்குப் புரியக்கூடாத—அவர்கள் தெரிந்து கொள்ளக் கூடாதென்பதற்காகவே ஆதிக்கத்தில் இருக்கக்கூடிய சில வகுப்பார்கள் என்றென்றைக்கும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்ற எண்ணத்திலோ என்னமோ தெரியாது—மக்களுக்குப் புரியாத, மக்களிடத்தில் பழகாத ஒரு செயற்கையான பாஷையாக சமஸ்கிருதத்தை வளர்த்து வந்தார்கள். சமஸ்கிருதத்தின் இலக்கணத்தை எடுத்துக் கொண்டாலோ அது கர்ணகடூரமான ஓர் இலக்கணம்.

1955—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26—ஆம் நாள், திரு ஏ.கஜபதி நாயக்கர் ஒரு தனி நபர் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அதாவது, 'எல்லா மாவட்ட அலுவலகத்திலும் இருந்துவரும் கடிதப் போக்குவரத்து மற்றும் நடைமுறைக்குப் பயன்படுத்தப்பட்டு வரும் ஆங்கில மொழியை அகற்றி விட்டு, தமிழ் மொழியைப் பயன்படுத்த அரசைக் கோருதல்'.

அவர் தொடர்ந்து பேசியதாவது:—

ஆந்திர நாட்டிலே, ஆபிசர்களுக்கெல்லாம் ஓர் அகர வரிசை கொடுக்கப்பட்டுக் கூடியவரை கடிதப் போக்கு வரத்து தெலுங்கு மொழியிலேயே இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருப்பதாகக் கேள்விப் படுகிறேன். கடிதப் போக்குவரத்துக்குக் கலைச் சொற்கள் தேவையில்லை. கல்வி விஷயமாக கலைச் சொற்களைத் தயாரிப்பதற்கு ஒரு தனி கமிட்டி இருக்கிறது. இது ஒரு சிறிய தீர்மானம். மாவட்ட அலுவலகங்களிலே எல்லா நடவடிக்கைகளும் கடிதப் போக்குவரத்தும், சாதாரண மக்கள் பேசும் மொழியிலேயே இருக்க வேண்டுமென்றது தான் என்னுடைய தீர்மானம். ஆபிசர்கள் உத்தரவு போடுவது ஆங்கிலத்தில் பிறகு அந்த உத்தரவைத் தமிழில் மொழி பெயர்ப்பது என்று இருக்கக் கூடாது. நான் கேட்பது என்னவென்றால், ஆபிசர்கள் உத்தரவு போடுவது தமிழிலேயே இருக்க வேண்டுமென்பதுதான். சிறு சிறு உத்தரவுகளைத் தமிழிலேயே போடக்கூடாதா? தமிழ் தெரியாத ஆபிசர்களாயிருந்ததால் அவர்கள் வேண்டுமானால், ஆங்கிலத்தில் சொல்லட்டும். கூடிய வரைக்கும் கடிதப் போக்குவரத்து மக்கள் பேசும் மொழியில் நாட்டுப்புற மொழியில் இருக்க வேண்டும். அங்கிருக்கும் மக்கள் அனுப்புகிற மனுக்களின் பேரிலாவது, மனு எந்த மொழியிலிருக்கிறதோ அந்த மொழியிலேயே உத்தரவு போட வேண்டும். எல்லா உத்தரவுகளையும் வேண்டுமானால் தமிழில் போட வேண்டாம்.

அதிகமாகச் செலவாகிற விஷயமாயிருந்தால், நான் அதைப் பற்றி அரசியலாருக்கு ஒரு விதமான கஷ்டமும் கொடுக்க மாட்டேன். தமிழ் டைப்ரைட்டர்கள் முக்கியமாக அதிகம் வேண்டும். அது விஷயத்தில் அரசியலார் ஊக்கம் கொண்டு ஏதாவது முயற்சி எடுக்க வேண்டும்.

இந்த மாதிரி ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்து கவர்ன்மெண்டாருக்கு ஒரு கவலை உண்டு பண்ண வேண்டுமென்ற எண்ணம் எனக்கில்லை. இது விஷயத்தில் ஏதாவது உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இப்பொழுது ஆரம்பித்து ஏதாவது ஓர் உத்தரவு போட்டால்தான் அது அமுலுக்கு வருவதற்கு ஒரு மாதம், 10 மாதங்கள் அல்லது ஒரு வருஷங்கூட ஆகும். அரசியலார் உறக்கம் கொண்டிருப்பதாக நான் சொல்லவில்லை. அவர்கள் உறங்குவது போல மக்களுக்கு வெளியே தெரிகிறது. ஆகவே, ஊக்கம் காட்டி உடனடியாக ஏதாவது செய்யுங்கள். உத்தரவை முதலில் ஆங்கிலத்தில் போட்டுப் பிறகு அதை மொழி பெயர்ப்பதை விடுத்து, உத்தரவே தமிழில் போட வேண்டுமென்று மாவட்ட அதிகாரிகளுக்கு அரசியலார் ஓர் உத்தரவின் மூலம் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன் என்றார்.

திரு ஏ.சுப்ரமணியம்:—

'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்னும் பழமொழி போலே, நம்முடைய இராஜ்யங்களெல்லாம் பாஷாவாரியாகப் பிரிய இருக்கின்றன. அதற்கு முன்னதாகவே சென்னை இராஜ்யத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலுள்ள அரசாங்கக் காரியாலங்களிலும் எல்லா நடவடிக்கைகளும் தமிழில் நடைபெற வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்க வேண்டியது மிக மிக அவசியமும் அவசரமும் ஆகும். இது விஷயத்தில் இனியும் காலதாமதம் செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கோரிக்கை.

ஒன்றிரண்டு ஜில்லாக்களில் பரீட்சார்த்தமாக இப்பொழுது தமிழிலேயே நடவடிக்கைகள் நடந்து வருகின்றன. குறிப்பாகத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அம்மாதிரி நடக்க வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவு

பிறப்பித்து அதன் பிரகாரம் அங்கே நடந்து கொண்டு வருகிறது. 'இது விஷயமாக அரசாங்கம் ஏன் சிரத்தை கொள்ளவில்லை? எல்லா ஜில்லாக்களிலும் ஏன் தமிழில் நிருவாகம் நடைபெறுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை?' என்று சில சமயங்களில் அரசாங்கத்தாரைக் கேட்டபோது என்ன. பதில் சொல்லப்பட்டதென்றால், 'பரீட்சார்த்தமாக எடுத்துக் கொண்ட ஜில்லாவில் கூட சரியானபடி நடக்கவில்லை' என்பதாகச் சொல்லப்பட்டது. அதற்குக் காரணம் என்ன? தமிழ்ப் பாஷையின் மூலம் அங்கு நிருவாகத்தை நடத்துகிறார்களே தவிர, நல்ல தமிழில், நடைமுறை வழக்கத்தில் இருக்கும் தமிழ் வார்த்தைகளைக் கொண்டு மக்களெல்லோருக்கும் சுலபமாகப் புரியும்படியான தமிழ்ப் பாஷையிலே எல்லாக் கிராமங்களிலும் வாழும்படியான மக்கள் அறிந்து கொள்ளும்படியான தமிழ்ப் பாஷையிலே அங்கு நடவடிக்கைகள் நடைபெறுவது இல்லை. இம் மாதிரி செய்தால் என்ன பயன்?

ஜில்லாவுக்குத் தலைவராக இருந்து ஆட்சி செய்யும்படியான ஜில்லா கலெக்டர் இருக்கிறாரே, அவருக்குத் திருச்சி ஜில்லாவில் என்ன பெயர் என்று கேட்டால், தமிழில் அங்கு நிருவாகம் நடக்கும்படியான முறையின் பிரகாரம் என்ன பெயர் என்று கேட்டால், 'தலை தண்டல் நாயகம்'. ஜில்லா கலெக்டருக்குத் தமிழ்ப் பெயர் 'தலை தண்டல் நாயகம்' என்று திருச்சி ஜில்லாவில் வைக்கப்பட்டிருக்கிறது. இது யாருக்காவது புரியுமா? பொதுவாகக் கிராமங்களில் இருப்பவர்களுக்கு 'ஜில்லாக் கலெக்டர்' என்று சொன்னால் புரியுமா அல்லது 'தலை தண்டல் நாயகம்' என்று சொன்னால் புரியுமா? இது எவ்வளவு வேடிக்கையாக இருக்கிறது! 'கலெக்டர்' என்னும் பதத்திற்கு 'வசூலிப்வர்' என்பது பொருள். அதாவது வரி வசூலிக்கக் கூடிய அதிகாரி. ஜில்லாக் கலெக்டர் என்பவரைத் தமிழில் 'வரி அதிகாரி' என்று சொல்லிக்

கொள்ளலாம். 'ஜில்லா' அதிகாரி' என்று வேண்டுமானாலும் சொல்லலாம். 'மாவட்ட அதிகாரி' என்று சொன்னாலும் பாதகமில்லை. ஆனால், 'தலை தண்டல் நாயகம்' என்று சொன்னால் அதை மக்கள் எவ்வாறு புரிந்து கொள்ள முடியும்? திருச்சி ஜில்லா கலெக்டர் ஆபீசில் 'லாரி' என்னும் பதத்திற்குப் பதில் என்ன எழுதுகிறார்கள் தெரியுமா? 'பேருந்து' என்று எழுதுகிறார்கள். இது யாருக்காவது புரியுமா? அழகான தமிழ்ப் பாஷையை இப்படியா குழப்ப வேண்டும்?.

தமிழில் ஜில்லா நடவடிக்கைகள் நடக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை நான் வரவேற்கிறேன். அதை நான் ஆதரிக்கிறேன். கூடிய சீக்கிரத்திலும் அது நடைபெற வேண்டுமென்றும் நான் வற்புறுத்துகிறேன். ஆனால், இப்பொழுது சில ஜில்லாக்களின் நிருவாகம் எப்படித் தமிழில் நடைபெறுகிறது. அதில் என்ன தவறுகள் இருக்கின்றன என்பதைப் பற்றியும் நான் இந்தச் சமயத்தில் குறிப்பிட வேண்டியது பொருத்தமுடையதாக இருக்கின்றது. தமிழில் நிருவாகம் நடைபெற வேண்டு மென்று சொல்லுகிறோம். ஆனால், அது நல்ல முறையில் நடைபெற வேண்டாமா? அப்பொழுதுதானே மேலும் மேலும், ஜில்லாக்களில் விஸ்தரிப்பதற்கு முடியும். நல்ல முறையில் நடைபெறாமல் தவறான முறையில் நடந்தால் இதுவும் இல்லாமல் போய்விடுமே என்பதற்காகத்தான் நான் இப்பொழுதே எச்சரிக்கையாயிருக்க வேண்டுமென்று சொல்கிறேன். நல்ல அஸ்திவாரத்தின் மீது தமிழ் மொழியில் நிருவாகம் நடைபெற வேண்டும். ஜில்லாக் களில் அரசாங்க நடவடிக்கைகள் தமிழில் நடைபெற வேண்டுமெனறு ஏதோ சொல்லிவிட்டால் போதுமா? சர்க்கரை என்ற வார்த்தையைக் காகிதத்தில் எழுதி, அதை நக்கிவிட்டால் அது இனிக்குமா? அதைப போலே, ஏதோ சொல்லிவிட்டுப் போய்விட்டால் போதாது. நாம் சொல்லக்கூடிய யோசனை நடைமுறையில் தவறில்லாமல்

குறைபாடு இல்லாமல், மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய முறையில் எல்லோரும் பாராட்டத்தகுந்த முறையில், இருக்கும்படியும் சொல்ல வேண்டும். நாம் சொல்லும் யோசனை காரியத்தில் நடைபெறக் கூடியதாகவும் இருக்க வேண்டும். அதற்காகத்தான் நான் எச்சரிக்கையாகவே இந்த இந்த முறையில் நடக்க வேண்டுமென்று சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். இம்மாதிரி தவறான வழியிலே தமிழில் நிருவாகம் நடக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

நிருவாகத்திற்கும் தமிழை உடனடியாகக் கொண்டு வர வேண்டுமென்பதற்கு இன்னொரு காரணத்தையும் நான் சொல்கிறேன். 'சென்னைப் பட்டணம்' என்பது எல்லோருக்கும் தெரிந்த பெயர் என்பதும் வாஸ்த்தவம். இப்பொழுது அதற்குத் 'தமிழ்நாடு' என்று மாற்றினாலும் எல்லோரும் புரிந்து கொள்வார்கள். இங்கே, எப் பொழுதோ எந்தக் காலத்திலோ 'ஹாமில்டன்' என்ற பிரிட்டிஷ் துரை ஒருவர் இருந்தார். அவருடைய பெயரைக் கொண்டு ஹாமில்டன் பிரிட்ஜ் என்று ஏற்படுத்தி விட்டார்கள். தமிழருக்கு அந்தப் பெயர் நுழைவது சுலபமாக இருக்கவில்லை. காரணம் ஆங்கில பாஷை புரியாததே. அதனால் காலப்போக்கில் அந்தப் பெயர் 'அம்பட்டன் பிரிட்ஜ்' என்று புழங்க ஆரம்பித்துவிட்டது. அம்பட்டன் பிரிட்ஜ் என்று சொல்லப்பட்டு சகஜமாக கூறப்பட்டு வந்தது. அதை அத்தோடு விட்டார்களா ஆங்கிலம் தெரிந்தவர்கள், கற்றறிந்தவர்கள்! அம்பட்டன் பிரிட்ஜ் என்பதை 'பார்பர்ஸ் பிரிட்ஜ்' என்று மொழி பெயர்த்துவிட்டார்கள் ஆங்கிலம் படித்தவர்கள். அது இப்பொழுது பார்பர்ஸ் பிரிட்ஜாக வழங்கி வருகிறது. இதற்குக் காரணம் பாஷை புரியாததுதான். ஹாமில்டன் என்ற அழகான பெயரைப் பாஷை புரியாத காரணத்தால், அம்பட்டன் என்று மாறின விதம் இதுதான். பாஷை தெரியாத காரணத்தால் நல்ல

மனிதருடைய பெயர் அம்பட்டனாகவும் மாறி விடுகிறது. தமிழிலேயே பெயர் வைத்திருந்தால் இப்படி மாறியிருக்குமா என்று கேட்கிறேன். ஆகவே, மேற்சொன்ன உதாரணத்தைப் போலே, சென்னைப் பட்டணத்திற்கு எந்தவிதமான அகவுரவமும் வேண்டாம். தமிழ் நாட்டைச் சார்ந்த எல்லா ஜில்லாக்களிலும் தமிழிலேயே எல்லா நடவடிக்கைகளும் இருக்கட்டும். தமிழிலே நிருவாகத்தை நடத்துவதுதான் நல்லது.

ஒவ்வொரு ஜில்லாவுக்கும் தமிழ் தெரிந்த அதிகாரிகளை நியமனம் செய்ய வேண்டும். அதிலும் கூடுமானவரை 'தமிழ் நன்றாகப் புரிந்தவர்களாகவும், தெரிந்தவர்களாகவும் இருக்கக்கூடியவர்களை' ஆங்காங்கு நியமனம் செய்ய வேண்டும். இதைச் செய்வார்களானால், இந்த நோக்கம் கைகூடும். இதற்கு எந்த விதமான இடைஞ்சலும் இருந்து கொண்டு வர முடியாது. ஆகையால், உடனடியாக ஜில்லாக்களில் தமிழின் மூலம் நடவடிக்கைகள் இருக்கும்படியாக அரசாங்கம் உத்தர விடவேண்டும். ஜில்லா நிருவாகமானது எல்லாத் துறைகளிலும் தமிழின் மூலமாகவே நடவடிக்கைகள் இருக்கச் செய்யும்படி, அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

திருச்சி ஜில்லாவில் பரீட்சார்த்தமாக எடுத்துக்கொண்டு, அங்குத் தமிழில் அரசாங்க நடவடிக்கைகள் நடக்கும்படி செய்தோம். அங்கு அது சரியானபடி நடக்கவில்லை. ஆகையால், தாமதம் செய் கின்றோம் என்று அரசாங்கம் சொல்லக்கூடாது. காலதாமதம் செய்யக்கூடாது. நான் முன்னமேயே சொன்ன மாதிரி இராஜ்யப் புனரமைப்பு கூடிய சீக்கிரத்தில் ஏற்படப் போகிறது. அப்பொழுது, தமிழகமாகவே இந்த மாகாணம் இருக்கப் போகிறது.

ஆகவே, நண்பர் ஸ்ரீ கஜபதி நாயக்கர் அவர்கள் கொண்டு வந்த தீர்மானத்தை நான் ஆதரிப்பதோடுகூட, இதை உடனடியாக அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் அரசாங்கத்தை நான் கேட்டுக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன் என்றார்.

திரு என். அண்ணாமலைப் பிள்ளை:—

தமிழ் வளரவேண்டும் என்று பேசுகிறார்கள். தமிழிலேயே அரசாங்கம் நடைபெறவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால், தமிழில் பேச மனமில்லாமல் இருக்கிறார்கள். முன்பு ஆந்திரர்கள் இந்த நாட்டில் இருந்த பொழுது ஆந்திரநாடு வரப்போகிறதென்று எல்லா மெம்பர்களும் தெலுங்கிலேயே பேசினார்கள். மலையாளிகள் மலையாளத்தில் பேசினார்கள். கன்னடியர்கள் கன்னடத்தில் பேசினார்கள். தெலுங்கு மக்கள் அந்த அளவுக்குத் தெலுங்கிலேயே பேசி இந்த நாட்டை விட்டுப் பிரிந்து தெலுங்கிலேயே ஆட்சி நடப்பதற்கு ஏற்பாடு செய்து கொண்டார்கள். அதனால், பெஜவாடா நெல்லூருக்குப் போகவில்லை. நெல்லூர் பெஜவாடாவுக்கு வந்துவிடவில்லை. அப்படியெல்லாம் அங்கு ஒன்றும் தலைகீழாகப் புரண்டுவிடவில்லை. அதே மாதிரி, இங்கும் ஆங்கிலத்தை நீக்கிவிடுவதால், அப்படியெல்லாம் ஒன்றும் புரட்சி ஏற்பட்டுவிடாது. அரசாங்கத்தைத் தமிழிலேயே நடத்தினால், நலன்தான் ஏற்படுமே தவிர, வேறொன்றும் கெடுதல் நடக்காது. தமிழில் பேச முடியாத தமிழர்கள் இருந்தால் ஆங்கிலத்தில் பேசட்டும். யார் வேண்டாம் என்று சொல்லுகிறார்கள்? கனம் அல்லாபிச்சை போன்றவர்களுக்குத் தமிழில் பேசுவதற்குச் சரியாகத் தெரியாவிட்டால், ஆங்கிலத்திலேயே பேசட்டும். நீண்ட நாள் ஆங்கிலத்திலேயே பேசிப் பழகி விட்டதால் அந்தப் பழக்கத்தை மாற்றி இப்பொழுது தமிழில் தொடர்ச்சி

யாகப் பேசுவது சிரமம்தான் என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்.

சென்ற 1923 டிசம்பரில் நமது தலைவர் ஸ்ரீமான் எஸ்.ஸ்ரீனிவாச அய்யங்கார் அவர்கள் வேலூர் ஜில்லா மகாநாட்டுக்குத் தலைமை வகித்தபோது, தமிழில் பேச முடியாமல் ஆங்கிலத்தில் பேசினார். அப்பொழுது அவர் நான் ஆங்கிலத்தில் பேசுவதற்கு மன்னிக்க வேண்டும். தமிழனாகப் பிறந்த நான் தமிழிலே பேசமுடியாமல் ஆங்கிலத்தில் பேசுவது அவமானமாக இருக்கிறது. ஆனாலும் நீண்ட நாளாக நான் ஆங்கிலத்திலேயே தொழில் நடத்தி ஆங்கிலத்திலேயே பேசிப் பழகிவிட்டதினால், எனக்குத் தமிழில் பேச முடியவில்லை' என்று கூறினார். அதே மாதிரி இந்தச் சபையிலும் சரி, அசெம்பிளியிலும் சரி, தமிழில் பேச முடியாதவர்கள் ஆங்கிலத்தில் பேசட்டும். கனம் அங்கத்தினர் கஜபதி நாயக்கர் ஒரு நாளைக்குத் தமிழில் பேசுகிறார். மற்றொரு நாளில் ஆங்கிலத்தில் பேசுகிறார். நான் ஏனென்று கேட்டதற்கு, 'சில விஷயங்களைப் பற்றிப் பேசும்பொழுது, குறிப்பாக மத்திய அரசாங்கத்திற்குப் போக வேண்டிய விஷயங்களை விவரிக்கும்பொழுது, ஆங்கிலத்தில் பேசினால் தான் பொருத்தமாக இருக்கும், தொடர்ச்சியாகவும் இருக்கும். தமிழில் பேசி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதால் அநேக சங்கடங்கள் இருக்கின்றன. ஆகையால் ஆங்கிலத்திலேயே பேசுகிறேன்' என்று அவர் என்னிடத்தில் சொன்னார்.

தமிழ் நாட்டில் தமிழில் ஆட்சி நடத்த வேண்டியது மிகவும் அவசியம். ஆங்கிலத்தில் பேசினால் எனக்கு நன்றாகப் புரிந்து கொண்டு, பதில் சொல்லுவதற்கு முடியவில்லை. தமிழர்கள் என்று உணர்ந்து தமிழில் பேசினால், தமிழில் நன்றாகப் பதில் சொல்ல முடியும்.

நிருவாகமும் நன்றாக நடக்கும். அப்படியில்லாமல், தமிழ் தெரிந்தவர்களை மறைமுகமாக அடக்கி ஆள வேண்டுமென்று ஆங்கிலம் படித்தவர்கள் பிடிவாதமாக ஆங்கிலத்திலேயே பேசிக் கொண்டு, அதை ஒரு சாகசக்கியமாக சாணக்கியத் தந்திரமாக உபயோகப் படுத்துகிறார்கள் என்று நான் நினைக்கிறேன். அதில் வேறு இரகசியம், சாணக்கியம் இல்லையென்றால், தமிழிலேயே பேசலாம், தமிழிலே நிருவாகத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம். சில இடங்களில் ஒன்றிரண்டு வார்த்தைகள் எழுதுவதோ சொல்லுவதோ கஷ்டமாக இருந்தால்— அப்படி ஒன்றும் கஷ்டம் ஏற்படாது— முடுஆநு என்று வேண்டுமானால் போட்டுக் கொள்ளுங்கள். ஆங்கிலேயர் வெளியேறிய பிறகும் ஆங்கில பாஷையை விட்டு விடுவதற்கு மனமில்லை என்று யார் சொன்னாலும் அதை ஒருக்காலமும் ஒப்புக் கொள்ள முடியாது என்றார்.

1956—ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27—ஆம் நாள் சட்டமன்றத்தில் திரு சி. சுப்ரமணியம், கல்வியமைச்சர் அவர்கள், 1956—ஆம் வருஷத்திய சென்னை அரசாங்க மொழி மசோதாவைச் சமர்ப்பித்து ஆற்றிய உரை:—

“இந்த மசோதாவை இச்சபை முன்பு பிரேரேபிக்கும்பொழுது, நிருவாகத் துறையிலேயே மிக முக்கியத்துவம் பெற்ற ஒரு நிகழ்ச்சி இது என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். நிருவாகத் துறையிலே இது ஒரு முக்கியமான நிகழ்ச்சி என்று சொல்லும்போது, அந்தத் துறைக்கு மட்டும் உரித்தானது அல்ல; இது மற்ற சூழ்நிலைக்கு ஏற்ப, நிருவாகத்திலும் செய்யக் கூடிய ஒரு மாறுதல் என்பதைத்தான் நாம் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

ஒரு பூ மலர்கின்றது. அது மலர்கின்ற நிகழ்ச்சி நம் எல்லோருக்கும் மகிழ்வைக் கொடுக்கிறது. அம்மலர்ச்சி ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சிஅல்ல; செடி வளர்ந்து, பிறகு

அரும்பு விட்டு, போத்தாகி அது மலர்கிறது. அது மலர் வதோடு நின்றுவிடுவதில்லை. அதில் காய் ஏற்பட்டு, அது பழுத்து மக்களுக்கும் உதவுகிறது. அதே மாதிரிதான் தமிழ் மலர்கிறது என்றால், அது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல. நம் நாட்டிலே இந்த ஐம்பது, அறுபது வருஷ கால மாக நடந்த நிகழ்ச்சிகளின் ஒரு பலனாக, இன்றைக்கு ஒரு செடியிலே ஒரு பூ மலர்கிறது. இதிலும் நல்ல காயும் கனியும் ஏற்பட்டு மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய முறையிலே இது இன்னும் நன்றாக வளர்ச்சி அடையும் என்பதில் எனக்கு எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. ஆகையினால், நம்முடைய அரசாங்க மொழி தமிழாக இருக்கும் என்று பிரகடனம் செய்வதிலே நாம் ஒரு பெரிய முன்னேற்றப் பாதையிலே ஓர் அடியை எடுத்து வைத்திருக்கிறோம்.

இன்றைக்குத் தமிழை அரசாங்க பாஷையாகப் பிரகடனம் செய்கிறோம் என்றால், பிரகடனம் செய்த உடனேயே எல்லாவித மாறுதல்களும் உடனடியாக ஏற்பட வேண்டும் என்று நாம் எதிர்பார்க்கக்கூடிய நிலைமையில் இல்லை. எல்லாத் துறைகளிலும் தமிழையே உபயோகப் படுத்துவதற்குப் பல முயற்சிகள், பலவிதமான ஏற்பாடுகள் செய்வது மிகவும் அவசியம். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் சில இப்பொழுதே செய்யப்பட்டு முடிவடைந் திருக்கின்றன. சில இன்னும் நடந்து கொண்டு இருக்கின்றன. அதிலும், தமிழிலேயே நிருவாகம் நடக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது, ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை நிருணயம் செய்ய வேண்டியது மிகவும் அவசியம். இத்துறையிலே ஒரு கமிட்டி நியமனம் செய்யப்பட்டு, அவர்கள் தங்களுடைய ஆலோசனைகளைச் சர்க்காருக்குச் சமர்ப்பித் திருக்கிறார்கள். அதற்காக ஒரு விழாவும் கூட நடந்தது என்பதை அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள். ஆகையினால், இன்றைக்கு நிருவாகத்திலே இருக்கக்கூடிய

முக்கியமான ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை நிருணயம் செய்ய வேண்டும். அந்த வார்த்தைகளையே நிருணயம் செய்து, அதைப் பழக்கத் திற்குக் கொண்டு வர வேண்டியது மிகவும் முக்கியம். இது முதல் ஏற்பாடாக அமைய வேண்டியிருக்கிறது.

அதற்கு அடுத்தபடியாக இன்றைக்கு அரசாங்கம் டைப்ரைட்டர்களை வைத்துக் கொண்டுதான் எல்லா விதமான காரியங்களையும் நடத்துகிறது. எழுதுவது என்பது இப்பொழுது பழக்கத்தில் இல்லை. டைப் அடிப்பதுதான் இப்பொழுது பழக்கமாக இருந்து வருகிறது. ஆகையினால், தமிழ் டைப்ரைட்டர்கள் நல்ல முறையிலே போதுமான அளவில் கிடைப்பதற்கு இன்றைக்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். அதற்கும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு, அவர்களும் தங்கள் அறிக்கையை அரசாங்கத்தினிடம் சமர்ப்பித்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இப்பொழுது அதை எப்படி அமுல் நடத்துவது என்பது பற்றியும் ஆலோசனை செய்து அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும்.

அதற்குப் பிற்பாடு, ஆங்கிலப் பதங்களுக்குச் சரியான தமிழ் வார்த்தைகளை வைத்துக் கொண்டு, நாம் உபயோகப்படுத்த வேண்டிய எல்லாச் சட்டங்களையும், விதிகளையும் தமிழில் மாற்றுவதற்கு ஏற்பாடு செய்தாக வேண்டும். இவைகளெல்லாம் ஒரு நாளிலே ஒரு வருஷத்திலே செய்து முடிக்கக் கூடிய காரியமல்ல. இவைகளையெல்லாம் செய்யாமல் நாம் திடீரென்று எல்லாம் தமிழில்தான் இருக்க வேண்டுமென்று ஒரு முடிவு செய்தோமானால், அது ஒரு பெரிய குழப்பத்தில்தான் போய் முடியும். நான் மற்றொரு இடத்தில் சொன்னது போல், நீந்தத் தெரிந்தவன் ஒரு வீர உணர்ச்சி யுடன் ஆழக் கிணற்றில் குதிப்பது போல்தான் அது இருக்கும். எல்லாவிதமான ஏற்பாடுகளையும் சரியான

முறையில் செய்ய வேண்டுமென்று நாம் ஓர் உறுதி செய்து கொண்டு, அதை எவ்வளவு சீக்கிரத்தில் செய்ய முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பொழுது, அவ்வப்பொழுது பிரகடனம் செய்யும் பொழுது அந்தந்தத் துறையிலே தமிழ் உபயோகப்படுத்தப்படும் என்று இந்த மசோதாவில் கண்டிருக்கிறது. இதைத் துரிதமாகச் செய்வதோ தாமதித்துச் செய்வதோ நிருவாகத்தில் இருக்கக் கூடியவர்களைப் பொறுத்திருக்கிறது. நிருவாகத்தில் இருக்கக்கூடியவர்கள் வேண்டுமென்றால் துரிதப் படுத்தலாம். வேண்டாம் என்றால் தாமதப்படுத்தலாம். ஆனால், இதை எவ்வளவு துரிதமாகச் செய்யமுடியுமோ அவ்வளவு துரிதமாகச் செய்ய வேண்டுமென்பது இப்பொழுது இருக்கக்கூடிய சர்க்காரின் கொள்கை. அதற்கான எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப்படும் என்ற உறுதியை மட்டும் நான் உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மசோதாவை இப்பொழுது சபை முன்பு சமர்ப்பித்திருக்கிறேன் என்றார். என்னுடைய விருப்பம் என்னவென்றால், ஏதோ சாதாரண மசோதாவைக் கவனிக்கும் பொழுது இருப்பது போல், சபையில் பத்து அல்லது இருபது அங்கத்தினர்கள் இருக்கக் கூடிய நிலைமை இல்லாமல், சபையின் எல்லா அங்கத்தினர்களும் இதை ஒரு விழாப் போல் கருதி, கடைசி வரையில் இருந்து தமிழ் அன்னையின் முடிசூட்டு விழாவில் எல்லோரும் பங்கெடுத்துக் கொண்டு இந்த மசோதாவை நிறை வேற்றிவிட்டு, இது நாம் கடைசியிலே செய்த ஒரு மகத்தான காரியம் என்ற ஒரு பெருமையுடன் எல்லோரும் இந்தச் சபையிலிருந்து கலைவோமாக! (பலத்த ஆரவாரம்) என்றார்.

பி. இராமமூர்த்தி:—

உண்மையிலே இந்த மசோதா இந்தச் சட்ட சபைக்கு மட்டுமல்ல; தமிழ் நாட்டிற்கே முக்கியமானதொன்றாகும். இந்த மசோதாவைக் கொண்டு வரும் நாள் ஒரு நன்னாள் என்றுதான் கருதுகிறேன். தமிழ் நாட்டில் இருக்கும் மக்கள் நீண்ட நெடுங் காலமாக நம்முடைய அரசாங்கம் வேண்டும், நம்முடைய அரசாங்கம் வேண்டுமென்று சொன்னால் நம்மவர்கள் ஆளும்படியான, ஆட்சி பீடத்தில் இருக்கும்படியாவது மட்டுமல்ல. ஆனால், நம் தாய் மொழியை அரசாங்கத்தின் எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்தும்படியானதொரு ஆட்சி வேண்டு மென்று நீண்ட நாட்களாக ஒரு அபிலாஷை அவர் களுக்குண்டு. அந்த அபிலாஷை பூர்த்தியாவதற்குள்ள நாள் வந்திருக்கிறது. அது இந்த மசோதாவின் மூலமாக நிறைவேற்றப்படப் போகிறது என்பதை ஒட்டி நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைவது திண்ணம். ஆனால், இந்த மசோதா என்ன கூறுகிறது என்பதை நான் ஞாபகப்படுத்த விரும்புகிறேன். பல்வேறு துறைகளிலும் அரசாங்கம் அவ்வப்போது நினைக்கும் படியான அந்தச் சந்தர்ப் பத்திலே அரசாங்கம் அந்தந்தத் துறைகளில் தமிழை அரசாங்க மொழியாக்குவதற்குள்ள அதிகாரம் அளிக் கிறது. நிதி மந்திரியவர்கள் சொன்ன மாதிரி அதை எவ்வளவு தூரம் துரிதப்படுத்தவோ தாமதப்படுத்த வோ அரசாங்கத்தின் கையில் அதிகாரம் இருக்கிறது என்பதை நாங்கள் மறந்துவிட மாட்டோம். இதைச் சீக்கிரத்தில் கொண்டு வரவேண்டும். ஏனென்றால், அந்தப் பகுதியை எவரும் திருத்திக் கொள்ள முடியாது. அதைப் பார்க்கும்போது, இது கொஞ்சம் வேறு வகையில் அமைந்திருக்கிறது என்றுதான் தோன்றுகிறது.

ஏற்கனவே திருச்சிராப்பள்ளி ஜில்லாவிலே பரிட்சார்த்தமாக இருந்து வருகிறது; அந்தப் பரிட்சை

இன்னும் பல இடங்களுக்கு விஸ்தரிக்கப்படுமென்று கூறு கிறது. இதிலே பரீட்சை செய்து பார்ப்பதற்கு இன்றைக்கு இடமில்லை. திருச்சியில் அன்று தமிழைப் பரீட் சார்த்தமாக ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், இன்று இந்த அரசாங்கம் இந்த நாட்டில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்கக் கூடிய சீக்கிரத்தில் பல்வேறு துறைகளிலும் அமலாக்க முயற்சி செய்யப் போகிறது. அதை ஊர்ஜிதம் செய்ய, அதை அமலாக்குவதற்கு வேண்டி இந்த மசோதா தேவைப்படுகிறது. இதையும் எழுதி யிருப்பார்களேயானால் நன்றாக யிருக்கும். ஆகவே, அதை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுகூட, தமிழ் ஆட்சி மொழியாக அரசாங்கத் துறைகளில் ஏற்படுவதைத் தவிர கல்வித்துறையில் தமிழில் போதிப்பது என்பதும் முக்கியமானதொரு பிரச்னை யாகும். நமது அரசாங்கம் தமிழ் மொழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஏற்படும் போது போதனா முறையும் தமிழில் இருக்க வேண்டும். அதிகாரம் வகிக்கக் கூடியவர்களுக்கு, எல்லோருக்கும் பயிற்சி கிடைக்கும் படியான காலம் பால்ய காலமேயாகும். பள்ளிகளில் ஆங்கிலத்தில் பயின்றுவிட்டு, நிருவாகத்தில் வரும் போது, அது தமிழில் இருந்தால் வேலை செய்ய முடி யாமல் திணறல் மிகப் பெரிய அளவிற்கு ஏற்படும். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாகிய, அது அமலில் சீக்கிரம் நடக்க வேண்டுமென்றால், அதற்குத் தகுந் தாற்போல், இன்றைக்கிருக்கும் கல்வி போதனா முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்

ஜில்லா நிருவாகத்தைத் தமிழில் நடத்துவது அவ்வளவு கஷ்டமானது அல்ல. உதாரணமாக, உத்தரப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால், கடந்த ஐந்து வருட காலமாக அங்கு ஜில்லா நிருவாகம் பூராவும் இந்துஸ்தானியில்தான் நடைபெற்று வருகிறது. பம்பாய்

மும்மொழி இராஜ்யமாக இருந்த காலத்திலும் கூட, அந்தந்தப் பகுதிகளில் இருக்கும்படியான மொழியில் கன்னடம், மஹாராராஷ்டிரம் அல்லது குஜராத்தி என்று அந்தந்தப் பிரதேச மொழிதான் நிருவாக மொழியாக இருந்து வந்திருக்கிறது. ஆகவே, பன்மொழி இராஜ்யங்களில்கூட இந்த முறை நாலைந்து வருடங்களாக அமலில் இருக்கக்கூடிய காலத்தில் நாம் காலங்கடந்துதான் இப்பொழுது நம் வேலையைத் துவக்குகிறோம். இதை அமலாக்கும் காலத்தில் தாலுக்கா என்றில்லாமல் ஜில்லா பூராவும் உடனடியாகத் தமிழ் மொழியிலே இன்றைக்கு ஆட்சி நடக்குமென்று ஏற்படுத்திவிட்டால் நன்றாயிருக்கும்.

ஆக, தமிழ் ஆட்சி மொழியானதைப் பற்றி இந்தச் சபையில் மட்டுமல்லாமல் வெளியில் ஜனங்களிடத்திலும் தமிழ் மொழி ஆட்சி மொழி ஆனதைப்பற்றி, சந்தோஷம் தெரிவிக்கக் கூடிய முறையில் ஆரவாரம் நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் சகல கட்சிகளும் செய்யும் என்ற நம்பிக்கையுடன் முடித்துக்கொள்கிறேன் என்றார்.

திரு பி.டி. இராசன்:—

இன்று தமிழிலே பேசும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது பற்றி நான் சந்தோஷப்படுகிறேன். சபைத் தலைவர் அவர்களே, 'வேண்டிய வார்த்தைகளைத் தேடி எடுத்துப் போட்டுப் புரியும் தமிழிலே காரியங்கள் நிறைவேற்றப்படும்' என்று சொன்னார்கள். சரியான சங்கதி அது. அவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையையும் நான் ஆமோதிக்கிறேன். இந்தச் சபையின் எதிர்க் கட்சித் தலைவரும் இதை வரவேற்றார்கள். ஆகவே, நான் சொல்லக்கூடியது என்னவென்றால், எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, ஏகமனதாக இந்த மசோதாவை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

திரு பி.அரங்கசாமி ரெட்டியார்:—

"தமிழ் நாட்டிலுள்ள தமிழ் மக்கள் அனைவர்களின் சார்பாகவும், உலகமெங்கும் இருக்கிற தமிழ் மக்கள் சார்பாகவும் நமது அரசாங்கத்தை இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக மனமார வாழ்த்துகிறேன். மக்களுக்கு, நாடும் மொழியும் இரண்டு கண்கள் போன்றவைகளாகும். நமது நாட்டைத் தமிழ் நாடு என்று அழைக்க ஒரு சில காலமானாலும்; தமிழை ஆட்சி மொழியாக்கும் மசோதாவைக் கொண்டு வந்ததை யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த District Revenue Administration Enquiry Committee Report —இல் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் தமிழைப் பரீட்சார்த்தமாக ஆட்சி மொழியாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கும் போது என்னென்ன கஷ்டங்கள் ஏற்பட்டதென்று கூறப் பட்டிருக்கிறது. ஒன்று Tamil Typewriter வேண்டும். இரண்டாவது தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள் தேவை. அங்கிருக்கிற அதிகாரிகள் தமிழ் மொழி தெரியாதவர்கள் என்ற குறை மக்களிடம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

Type writers— ஐப் பொறுத்தமட்டில், ஆங்கில Type writers —க்கும் தமிழ் Type writers— க்கும் ஒரு வேறுபாடு இருக்கிறது. ஆங்கில Type writers ஐப் பொறுத்தவரையில் எந்தக் கம்பெனி manufacture செய்தாலும் ஒரே மாதிரியான keyboard தான் இருக்கிறது. ஆங்கில Type writer keyboard க்கு patent right வைத்துக் கொள்வது கிடையாது. ஆனால், தமிழைப் பொறுத்த வரையில் இரண்டொரு கம்பெனிகள் தங்கள் தங்கள் key board

களுக்கு patent right கொண்டாடுவதாகச் சொல்லப்படுகிறது. Type writers ஐப் பொறுத்தவரையில் ஒரு கம்பெனி செய்வதற்கும் இன்னொரு கம்பெனி செய்வதற்கும் உள்ள key board களில் வித்தியாசமிருக்கிறது. அந்த வித்தியாசம் சீக்கிரத்தில் மறைந்து விடுமென்று நினைக்கிறேன். இப்பொழுது தமிழ் Type writer keyboard standardization Committee தனது அறிக்கையைச் சர்க்காருக்குச் சமர்ப்பித்து இருப்பதாகத் தெரிகிறது. எந்த keyboard ஆக இருந்தாலும் அது standard keyboard ஆக இருக்க வேண்டும். இந்த keyboard உள்ள type writers களைத் தான் அரசாங்கம் வாங்கும் என்று திட்டவட்டமாகச் சொல்லி விட்டால் எல்லா கம்பெனிகளும் ஒரே மாதிரியான keyboard வைத்த Typewriter — ஐ உற்பத்தி செய்ய முற்படுவார்கள். அடுத்தபடியாக, ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர்களுக்குப் பயிற்சி எவ்வளவு இருக்கிறதோ அவ்வளவு பயிற்சி தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்களுக்கு இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் ஓரளவிற்கு வேண்டிய அளவிற்குப் போதுமான எண்ணிக்கையில்லை என்று வேண்டுமானால் சொல்லலாம். அதற்குச் சர்க்கார், இவர்கள் படித்து வரட்டும் என்று இல்லாமல் அந்தந்த ஜில்லாக்களில் stipend கொடுத்து S.S.L.C. யாவது பாஸ் பண்ணினவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு stipend கொடுத்து தமிழ்ச் சுருக்கெழுத்து type writing இவைகளில் பயிற்சி கொடுத்தால் உடனடியாகச் சர்க்காருக்குத் தேவையான அளவு தமிழ் shorthand typewriting தெரிந்தவர்கள் கிடைப்பார்கள். அதில் எந்தவிதக் கஷ்டமும் இருக்க முடியாது. இந்த ஆட்சி மொழியைப் பற்றிப் பேசும் போது, இராமமூர்த்தி அவர்கள் பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் எவ்வளவு சீக்கிரம் தமிழ் போதனாமுறை மொழியாக்கப் படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு தமிழ் ஆட்சி

மொழியாவது என்பது, அதன் தன்மையும் வளர்ச்சியும் இலாபமும் ஏற்படும்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவென்றால், பஸ், கார், போலீஸ், பேப்பர், பென்ஸில், சைக்கிள், ரோடு போன்ற வார்த்தைகளை கிராமத்தில் உள்ள எழுதப்படிக்கத் தெரியாதவர்கள்கூடப் புரிந்து கொள்கிறார்கள். இவைகளைத் தமிழிலே அப்படியே சேர்த்துக் கொண்டால் என்ன? சேர்த்துக் கொள்ளலாம் என்பதுதான் என் அபிப்பிராயம்.

அதைவிட்டு, அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்து கனம் தேவர் அவர்கள் சொன்னது மாதிரி ஆங்கிலத்தில் வியாக்கியானம் செய்வது அவ்வளவு பொருத்தமல்ல என்று நினைக்கிறேன். இன்று பெரிய மொழியாக இருக்கக்கூடிய ஆங்கில மொழியில்கூட அகராதியில் சில ஆங்கில வார்த்தைகள் பிரஞ்சு மொழியிலிருந்து எடுக்கப்பட்டது. கிரீஸ் மொழியிலிருந்து எடுக்கப்படும் என்று சேர்த்துக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்று தனித்தமிழ் என்று சொல்லி, சில சர்க்கார் மசோதாக்களை மொழி பெயர்த்திருக்கிறார்கள். அந்த மொழி பெயர்ப்பைப் படிப்பதை விட ஆங்கிலத்தில் உள்ளதையே படித்துவிடலாம். அவ்வளவு தூரம் அந்த மொழி பெயர்ப்பு இருக்கும். இது அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரிந்த விஷயம். தமிழ் மொழியை அமுல் செய்வதில் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் முழு ஒற்றுமையோடு பூரணமாக ஒத்துழைத்தால்தான் இது வெற்றி பெறும். ஆகவே, தமிழ் மொழியைக் கொண்டு வருவதில் அதிகாரிகள் ஏதேனும் தடங்கல்கள் செய்தால், அவர்களைத் தண்டிக்க வேண்டும். இறுதியாக ஒரு விஷயம். பதினாறு, பதினேழு ஆண்டுகளாகத் தமிழ்

மொழியில் சில எழுத்துக்கள் மாற்றப்பட வேண்டும், அப்பொழுதுதான் தமிழ் டைப்ரைட்டர் முதலியவைகளில் முன்னேற்றம் காண முடியும் என்று ஈ.வே. இராமசாமி நாயக்கர் அவர்கள் சொல்லி வருகின்றார். இப்பொழுது பன்னிரண்டு உயிரெழுத்து, பதினெட்டு மெய் எழுத்து, இவைகளைக் குறைக்க 'லை', 'ஞ' போன்ற எழுத்துக்களில் மாறுதல் செய்ய வேண்டும் என்று சொல்லி வருகிறார்கள். இவ்விதம் பல எழுத்துக்களை மாற்றினால், தமிழ் டைப்ரைட்டர்களில் முன்னேற்றம் ஏற்படவும், அச்சுக் கோப்பதற்கு வசதியாகவும் இருக்கும். இந்த நாட்டிற்கு ஏற்பட்ட தீங்கு மாறி, நந்தி வர்மன் நந்திக் கலம்பகத் திலே தமிழுக்கு அறம் பாடின காலம் மாறி, இன்று 'எத்துறையும் புகழ் மணக்க இருந்த பெருந் தமிழ் அணங்கே' என்று வாழ்த்துகிற அளவுக்கு வந்திருக்கிறது. தமிழ் மொழி இனி வருங்காலத்தில் அரியாசனத்தில் அமரும் என்று வாழ்த்திக் கொண்டு முடித்துக் கொள் கிறேன் என்றார்.

செட்டி நாட்டரசர் திரு முத்தையா செட்டியார்:—

தமிழில் அரசாங்கம் நடப்பதற்காக ஏற்பாடு செய்வதற்காக இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்காக நிதி மந்திரி அவர் களைப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். டாக்டர் நோயைத் தீர்க்க வருவது போல், இந்தச் சமயத்தில் இந்தச் சட்டம் வந்திருப்பது மிகவும் பொருத்தமானதாகும். ஏதோ காலம் தாழ்த்தி இது கொண்டு வரப்பட்டிருக்கிறதாகச் சொன்னார்கள். இப்பொழுதாவது கொண்டு வரப் பட்டிருக்கிறதே என்று நாம் திருப்தி அடைய வேண்டும். நம் நாட்டில் சில சொற்கள் ஆங்கிலத்திலேயே ரொம்பவும் பழக்க வழக்கமாக இருந்து கொண்டிருக்கிறது. ரெவின்யூ என்ற ஆங்கில வார்த்தை இன்று எல்லா மக்களுக்கும்' தெரிந்து கொண்டிருக்கிறது இதைப் புதிதாக மாற்றினால்,

சாதாரண மக்களுக்குப் புரிந்து கொள்வதற்குச் சிறிது கஷ்டம் ஏற்படலாம். அதனால் இதை இப்பொழுது தாலுக்கா ஆபீஸ்களில்தான் கொண்டு வரப்போகிறோம் என்று சொல்லியிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். அதன் பின்னால் படிப்படியாக எல்லா நடவடிக்கை களிலும் தமிழ் வந்து விடும் என்று நினைக்கிறேன். இனிமேல் எல்லோரும் சாதாரண அரசாங்க நடவடிக்கை களைக்கூடத் தமிழில் அறிந்து கொள்ள முடியும். அரசாங்க அறிக்கைகளையெல்லாம் தமிழில் வந்தால் சாதாரண ஜனங்களுக்குச் சுலபமாக அறிந்து கொள்ள முடியும். இன்று சர்க்கார் அறிக்கைகள் எல்லாம் பத்திரிக்கையில் இடம் இல்லாமல் வெளிவருவதில்லை. தமிழில் ஆட்சி வந்தால், எல்லா விஷயங்களுக்கும் வசதியாக இருக்கும். இதைக் கணக்கிட்டுப் பார்த்தால், மணிக்கணக்காகச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆகவே, அரசாங்கம் எவ்வளவுக் கெவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுக் கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இது வெற்றிகரமாக நடந்தேறும் என்பதில் சந்தேகமில்லை என்று சொல்லிக் கொண்டு, இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக இந்தச் சர்க்காரைப் பாராட்டுகிறேன் என்றார்.

திரு யு.முத்துராமலிங்கத் தேவர்:—

நடைபெற்ற சம்பவம் மிக மகிழ்ச்சிக்குரிய விஷயமாக இருப்பினும், இது மிகவும் காலந்தாழ்த்தித் தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதை நாம் குறிப்பிடாமல் இருக்க முடியாது. நாம் சுதந்திரம் அடைந்த காலத்திலேயே நடைபெற்றிருக்க வேண்டிய சம்பவம் இது. பல சூழ்நிலை காரணமாகவும், பல சிக்கல்கள் காரணமாகவும், பல அசந்தர்ப்பங்கள் காரணமாகவும் இதைக் கொண்டு வரவில்லை என்றாலும், இந்தக் கடைசி காலத்திலாவது, இந்த வருஷக் கடைசியிலாவது இதைக்

கொண்டு வந்திருப்பது சுபசகுனமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்கிறேன். நம்முடைய தமிழ் மொழியானது இந்த நிலைக்கு வந்ததற்கு இந்த அரசாங் கத்தைப் பாராட்டுவது மாத்திரமல்ல, இது தெய்வத்தின் கிருபையால் இந்த நிலைக்கு வந்தது என்று நாம் பகவானுக்கும் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டிருக் கிறோம். நம்முடைய தமிழ் மற்ற பாஷைகளைப் போல் தோன்றியதில்லை. ஒலி வடிவமாக நின்ற ஒன்று, வரிவடிவமாக மாறுகிறபோது, பாஷை ஆகிறது. இன்று ஒவ்வொரு எழுத்தும் என்னென்ன ஓசையோடு வந்தது, ஓம்காரம் என்ற வடிவத்திலிருந்து எவ்விதமான எழுத்துக்கள் ஆரம்பமாயின என்பதை எல்லாம் மாணிக்க நாயக்கர் அவர்கள் விபரமாக எழுதி வெளியிட்டிருக் கிறார்கள். இன்று அச்சில் அது அதிகமாக இல்லை.

தமிழ் மொழி இன்று தோன்றியதல்ல. தமிழ் மொழி உலக நாகரிகத்தையே முதலில் தொட்டு நின்ற மொழி. லெமூரியா கண்டத்தில் நாகரிகம் தோன்றிய காலத்திலே தமிழ் வளர்ந்து வந்தது. அதன் பின்னால் மற்றும் பல தேசங்களுக்குப் பரவியது. தமிழ் நாகரிகம் வாயிலாக மொழி வளருவதற்கு லெமூரியா கண்டம் தொட்டிலாக இருந்தது.

அந்தக் காலம் தான் முதல் தமிழ்ச் சங்க காலம என்று சொல்லப்படுவது. அந்த முதல் தமிழ்ச் சங்க காலம் மடகாஸ்கர் தீவை மேற்கு எல்லையாக வைத்து ஆஸ்திரேலியா கண்டத்தைக் கிழக்கு எல்லையாக வைத்து, பரந்து கிடந்த பூமியாகும். அதுதான் இன்று இந்து மகா சமுத்திரமாக அலையடித்துக் கொண்டிருக்கிறது. அக் காலத்தில் விந்தியா, சாத்பூரா மலைகள் இந்தியாவின் வட எல்லையாக இருந்தது. இமயமலை சமுத்திரத்திற்குள் இருந்தது. இதற்குப் பிந்தியது இராமாயணகாலம். அக்காலத்தில் இன்றைய இலங்கை

இதைவிட மிகப் பெரிதாய் குமரிக் கண்டம் என்ற பெயருடையதாய், இமாலய மலையைச் சமுத்திரத்திற்கு மேலே கொண்டு இயங்கியது. அப்போது, பஃறுளியாறு, கபாடபுரம் என்பனவற்றிலிருந்து இயங்கியது இரண்டாவது தமிழ்ச் சங்க காலமாகும். அதன் பிறகு ஏற்பட்ட 'கடல் கோளால்' நிலைமைகள் மாறி, மூன்றாவது தமிழ்ச் சங்கம் தென்பாண்டிய நாடான மதுரையை வந்தடைகிறது என்பது சரித்திரம். நாகரிகம் தென்னிந்தியாவிலிருந்து உற்பத்தியாகி வட இந்தியா சென்று, பாரசீகம், பாபிலோனியா நாகரிகமாக எகிப்தை அடைந்து கிரீஸைத் தொட்டு ரோமாபுரியை அடைந்து ஜெர்மனிக்குச் சென்று, பிரான்ஸுக்கு வந்து, அதன் பின் மேற்குப் பாகத்திற்கு, அதாவது ஸான்பிரான்ஸிஸ்கோ முதலிய இடங்களைத் தொட்டு, ஜப்பானை அடைந்து, அதன் மேல் சைனாவுக்கு வந்து ஒரு சுற்றை முடித்து நிறுத்தியிருக்கிறது. இப்படியாக உலகத்திற்கே ஆதியாக நிற்பது தமிழ்த் தாயகம்.

இப்பொழுது தமிழ் எழுத்துக்களில் மாறுதல் வேண்டும் என்று பலர் சொல்லுகின்றனர். நான் சொல்வது என்னவென்றால், ஆங்கிலத்திற்குச் சரியாக அதிகமான தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன. மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் அதிகமான புதிய வார்த்தைகளைப் பாண்டித்துரைத் தேவர் அவர்கள் 'செந்தமிழ் செல்வி' என்னும் புஸ்தகத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ்ச் சொற்களை எழுதி வைத்திருக்கிறார்கள். திரு உமாமகேசுவரன் பிள்ளை அவர்களும் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சில ஆயிரக் கணக்கான சொற்களை ஆங்கிலத்திற்குச் சரியாக மொழி பெயர்த்து வைத்திருக்கிறார்கள். இவைகளை அரசாங்கம் உபயோகித்தால் யாதொருவிதமான கஷ்டங்களும் இருக்காது என்று நினைக்கிறேன். புதிய சொற்களைக் கொண்டு கண்டு பிடிப்பதற்காகப் புது நபர்களைப் புகுத்தி, அதில் பழமையானதும், தெய்வீகத்துக்குப் புறம்பானது

மான முறைகளில் இருந்தும் மாற்றி வேறுவிதமாக திருத்தங்களைக் கொண்டு வந்து பழுதுபடுத்தக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். எதை எடுத்தாலும் செய்யப் போகிற காரியத்தில் நிதானம் தேவை. நிதானம் கெட்டு எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது. தீப்பிடித்த வீட்டைச் சென்று அடையாது. ஆகவே, செய்யும் காரியங்களைக் கொஞ்சம் நிதானமாகவும், திடமான நிலையிலும், ஒழுங்கான நிலையிலும் செய்ய வேண்டும். ஆங்கிலச் சொற்களுக்குத் தமிழ்ச் சொற்கள் உபயோகிக்கும் காரியத்தைப் பொறுத்தவரையில் ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை அச்சடித்து வெளியிட வேண்டுவது அவசியம். இதைச் சர்க்கார் கவனத்துக்குக் கொண்டு வருகிறேன் என்றார்.

திரு எஸ்.என்.சோமயாஜுலு:—

இன்றைக்குத் தமிழன்னை அரியணையில் வீற்று விட்டாள். அப்படி வீற்று விட்டாள் என்று நிச்சயமாக இன்று சொல்ல முடியும். இதைப் பற்றிப் பேசும்போது, யார் யார் எல்லாமோ என்ன என்னமோ சொன்னார்கள். காலம் வந்தால்தான் செய்ய முடியும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்தச் சட்டசபை தன்னுடைய முடிவு காலத்தில்தான் இந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டியதாக இருக்கிறது. அதற்கு வேண்டிய சந்தர்ப்பம் இப்பொழுதுதான் கிடைத்திருக்கிறது. பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு மொழியைப் பேசக் கூடியவர்கள் இருந்த காலத்தில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாமல் இருந்தது. இது வரையில் அதன் காரணத்தால் தமிழ் ஆட்சி மொழியாக வர முடியாமல் இருந்தது. அவர்கள் பிரிந்து போன பிறகு, நம் இராஜ்யம் தமிழ் நாடாக வந்த பிறகு, நம் இராஜ்ய ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று சொன்னதற்கு இப்பொழுது இந்தச் சட்டத்தைக் கொண்டு

வந்ததற்குக் கனம் நிதி மந்திரி அவர்களையும் இந்த மந்திரி சபையையும் நான் வாயார வாழ்த்துகிறேன். மனதாரப் பாராட்டுகிறேன். இங்கு சொல்வது மாத்திரம் அல்ல இலட்சோப இலட்ச ஜனங்கள், சென்னையிலிருந்து கன்யாகுமரி வரையில் உள்ள மக்கள் இப்பொழுது சர்க்கார் செய்திருக்கக் கூடிய காரிய்ம் நியாயமான காரியம். சந்தர்ப்பம் வந்த காலத்தில் இதைக் கொண்டு வந்து நிறைவேற்றுகிறார்கள், கன்னித் தமிழ் ஆட்சி பீடத்தில் ஏறுவதற்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறார்கள் என்றெல்லாம் புகழ்கிறார்கள்.

இதற்கு முன் கனம் அரங்கசாமி ரெட்டியார் பேசியபோது, இது நிதானமாகப் போக வேண்டும் என்றும், வார்த்தைகள் ஒன்றோடொன்று பின்னப் பட்டிருக்கிறது என்றும் சில வார்த்தைகளைத் தமிழில் எடுத்துக் கொண்டு குறிப்பிட்டார். தமிழ் பரந்த மொழியாக இருக்க வேண்டும் என்பதைப்பற்றி கனம் முத்துராமலிங்கத் தேவர் கூறினார். தமிழ் ஏடு அவசியம் இல்லை. சீவகசிந்தாமணி கொஞ்ச காலத்திற்கு முன்னதாகவே வந்திருக்கிறது. மற்றும் தமிழ் ஆட்சி மொழியாக்குவதற்கு வேண்டிய வார்த்தைகள் கிடையாது என்றும் குறிப்பிட்டார்கள். அப்படி நினைக்க வேண்டிய தில்லை. தமிழில் வேண்டிய சொற்கள் இருக்கின்றன. சீவகசிந்தாமணியை எடுத்துப் பார்த்தால் தெரியவரும். சிலப்பதிகாரம் முதலிய இந்த நூல்களிலிருந்து கம்பன் ஒரு ஆப்பையை முக்கி எடுத்துக் கொண்டான் என்று கூட சொல்லப்படுவது உண்டு. தமிழ் அவ்வளவு வளர்ச்சி அடைந்திருக்கிறது என்பது ஆப்பையைப் போட்டு எடுத்துக் கொள்ளப்பட்டது என்று சொல்லும்போதே தெரிய வரும். தமிழ் வளர்ச்சி அடைவதற்குப் பல்வேறு சொற்களை எடுத்துக் கொண்டு கூடுமான வரையில் எளிதாக, ரஞ்சனமாக, பாமர மக்களுக்குப் புரியும் தமிழ்ப்

பாஷையை உருவாக்க முயற்சிப்பதே முக்கியம். அவைகளுக்கு விளக்கம் கொண்டு வந்து தமிழ் அகராதி ஏற்படுத்தி, தமிழ்ப் பாஷையை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்த முயற்சியில் நாம் வெற்றி காண்பது நிச்சயம்.

பழங்காலம் முதற்கொண்டே தமிழில் வேண்டிய சொற்களும் வார்த்தைகளும் இருக்கின்றன. அந்தக் காலத்தைப் பற்றிக் கனம் முத்துராமலிங்கத் தேவர் சொன்னார். முதல் சங்கம், நடுச் சங்கம், கடைச் சங்கம் முதலியவைகளைப் பற்றிக் குறிப்பிட்டார். அந்தக் காலத்திலிருந்து தமிழ் மொழி வெளிக் கிளம்பாமல் இருந்தது. சிலர் கட்டுக் கோப்பாக வெளியிடாமல் அமுக்கி வைத்துக் கொண்டிருந்தார்கள். சிலவிடத்தில் தமிழ் மொழி ஆழ்ந்து அமுங்கிக் கிடந்திருந்தது. பல இலக்கியங்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் வெளியில் வரவில்லை. இனிமேல் அவைகள் வெளியில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். மற்றும் மொழியை எழுதுவதில் பல தகராறுகள் இருக்கின்றன. 'கட்சூ' என்று எழுதினால் ஒன்றும் பாதகம் இல்லை. எந்த வார்த்தையை உபயோகப்படுத்தினாலும் அது பாமர ஜனங்களுக்கு புரியும்படியாக இருக்க வேண்டும். ஆட்சி மொழி எல்லோராலும் புரிந்து கொள்ளக் கூடிய அளவில் இருக்க வேண்டும். அந்த முறையைக் கையாள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இப்பொழுது கன்னித் தமிழ் பீடத்தில் ஏறுகிறாள். அதனுடைய வயதை யாரும் நிருணயம் செய்ய முடியாது. தமிழ் நாட்டில் ஆட்சி மொழியாக தமிழ் வந்திருப்பதைக் கண்டு நான் அதை மனமார வரவேற்கிறேன். அதை நான் பாராட்டுகிறேன். எல்லாத் தமிழ் மக்களும் அதற்குத் தலை வணங்கி நிற்க வேண்டும் என்றார்.

திரு வினாயகம்:—

தமிழை ஆட்சிமொழியாக ஆக்குவதற்குக் கொண்டு வந்திருக்கிற இந்த மசோதாவை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். இது குறிப்பிட்ட காலத்திற்குள் மசோதாவாக வருகிறது. இதற்கு முன்பு நமது இராஜ்யத்தில் ஆந்திரர், கன்னடியர், மலையாளிகள் இருந்த காரணத்தால் ஆட்சி மொழியைத் தமிழாக்க முடியவில்லை என்று சொன்ன வாதம் சரியான வாதம். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாவில் சில குறைபாடுகள் இருக்கின்றன. அதை நான் காண்கிறேன். அடிப்படையில் ஆட்சி மொழி தமிழாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிற கருத்தை ஏற்றுக் கொண்டு, இந்த மசோதாவை அமுலுக்குக் கொண்டு வருகிற நேரத்தில் தாலுக்கா அடிப்படையில்தான் இதை அமுலுக்குக் கொண்டு வரப்படும் என்று சொல்வது சரியல்ல. ஏற்கனவே ஜில்லா அடிப்படையில் திருச்சியில் இதை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்திருக்கிறாகள். அதைப் போலவே, இப்பொழுதும் ஜில்லா அடிப்படையில் இதைக் கொண்டு வரவேண்டும். தாலுக்காவாரியாக இதைக் கொண்டு வந்து அதையும் பரிட்சார்த்தமாகக் கொண்டு வந்து பார்த்துவிட்டு அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக ஜில்லா அடிப்படையில் கொண்டு வரப் போவதாகச் சொல்லப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்ள முடியாது.

அதிகாரிகள் எப்பொழுது இஷ்டப்பட்டு இதை அமுலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று நினைக்கிறார்களோ, அப்பொழுது அதைக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்தில் அதைக் கொண்டு வருவதாக இருக்கிறது. அதிகாரிகளுக்கு இதை விட்டுத் தருவதாக ஏற்படுகிறது. அதிகாரிகள் உடனடியாக இதை அமுலுக்குக் கொண்டு வரக்கூடாது என்று நினைத்தால் அமுலுக்குக்

கொண்டு வராமல் தாமதப் படுத்த முடியும். அதனால்தான் நாம் ஒரு கால வரம்பு கட்ட வேண்டும் என்று திருத்தம் கொடுத்திருக்கிறேன். அதனால், வரம்பு கட்டியே தீர வேண்டும் என்று நான் வற்புறுத்துகிறேன். எல்லா நிருவாகமும் தமிழில் நடக்க வேண்டும் என்பதற்கு ஒரு காலவரம்பு வைத்தால்தான் அதற்கு முன்னதாகவே அமுலுக்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள். அதற்காகத்தான் 1960—ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியிலிருந்து சென்னை இராஜ்யத்தில் எங்குப் பார்த்தாலும் தமிழ்தான் நிருவாகப் பாஷையாக இருக்க வேண்டும், ஆங்கிலம் எந்த விதத்திலும் இருக்கக் கூடாது என்ற முடிவு செய்ய வேண்டும். தேதியை நிருணயம் செய்துவிட்டால் அதற்குள்ளாகவே அமுலுக்குக் கொண்டு வரலாம். அது தெளிவாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தத் திருத்தத்தை நான் கொடுத்திருக்கிறேன். அப்படி அமைந்தால்தான் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்குப் பெருமைப்படலாம். மேலும் மேலும், விருத்தி அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது நாட்டில் என்ன சொல்லுகிறார்கள் என்றால் தேர்தலுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதற்காகத்தான் இப்பொழுது டிசம்பர் மாதத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள் என்று சொல்லு கிறார்கள். அது ஒருபுறம் இருக்கட்டும். நல்ல காரியத்தில் நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். நல்ல காரியங்களில் நம்பிக்கை வைத்தால் முன்னுக்கு வருவதற்குச் சக்தி இருக்கிறது. அதனால்தான் ஒரு காலவரம்பு கட்ட வேண்டும் என்று சொல்லுகிறேன். 1960—ஆம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதிக்குப் பிறகு ஆங்கிலம் ஆட்சி மொழியாகக் கையாளப்படக் கூடாது. அப்படிக் கொண்டு

வருவதற்கு ஒரு வரம்பு கட்டினால்தான் நல்லது. உண்மையில் அக்கறை எடுத்துக் கொண்டதாக ஆகும்.

இரண்டாவதாக மக்களிடத்தில் கொந்தளிப்பு ஏற்பட்ட பிறகு இது கொண்டு வரப்பட்டிருக்கிறதே யொழிய, எதிர்க்கட்சிக்காரர்கள் எடுத்துச் சொன்னதற் காகக் கொண்டு வரப்படவில்லை. பொது மக்களிடத்தில் இதை எதிர் பார்த்தவுடனேயே இது கொண்டு வரப் பட்டிருக்கிறது. நல்ல தருணத்தில் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். தமிழ் மொழியை ஆட்சிமொழி யாக்குவதற்கு உள்ள அளவில் இப்பொழுது இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இப்பொழுது தெற்கு எல்லை வந்துவிட்டது. நமக்கு வடக்கெல்லை வரவேண்டும். தெற்கெல்லையில் ஓரளவிற்குப் பெரியதாக வரவில்லை. வடக்கெல்லை வருவதற்கு இப்பொழுது முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதறகு வேண்டிய நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. அதைக்கண்டு நாம் சந்தோஷப்பட வேண்டியதாக இருக்கிறது. ஆட்சி மொழியையும் தமிழ் மொழியாகக் கொண்டு வந்து விட்டார்கள். இந்த நிலைமையில் இந்த இராஜ்யத்தைத் ‘தமிழ்நாடு’ என்று சொல்வதில் என்ன தவறு இருக்கிறது. இதைத் தேர்தல் பிரச்சாரமாக வைத்துக் கொள்ளா விட்டாலும் கூடப் பொதுவாக மக்கள் இந்த இராஜ் யத்தைத் ‘தமிழ்நாடு’ என்று பெயரிட விரும்புகிறார்கள். எதிர்க் கட்சிக்காரர்கள்தான் இந்தப் பெயரை வைக்க வேண்டும் என்று சொல்லவில்லை. காங்கிரஸ்காரர்களைக் கூடக் கேட்டால் அவர்களும் இதைத் ‘தமிழ்நாடு’ என்று தான் பெயரிட வேண்டும் என்று சொல்லுவார்கள். அவர்களைக் கட்சி முறையில் கேட்காமல் தனிப்பட்ட முறையில் கேட்டால் அவர்களும் ‘தமிழ்நாடு’ என்றுதான் பெயர் வைக்க வேண்டும் என்று சொல்வார்கள். புது சட்டசபை வருவதற்கு முனனதாகவே இந்த இராஜ்யத் திற்குத் ‘தமிழ்நாடு’ என்ற பெயரை வைக்க முயற்சி

எடுத்துக் கொள்ளவேண்டும். சட்டசபை கலைந்தாலும் ஒரு அவசரச் சட்டத்தைப் போட்டாலும் அந்தப் பெயரைச் சூட்ட வேண்டும். அந்த நாளை, பொதுமக்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிக் கொண்டு வந்தால், இந்த ஆட்சியாளர்கள் நன்றாக வாழவேண்டும் என்று பொது மக்கள் சொல்வார்கள்.

''காங்கிரஸ் கட்சி ஆட்சியிலிருக்கிற நேரத்திலே, தேர்தலுக்கு முன்னாலேயே இதைச் செய்து விடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேன். வெறும் திருத்தத்தைக் கொடுக்க வேண்டுமென்பதற்காக நான் இதைக் கொண்டு வரவில்லை. இந்த மசோதா 'வழவழா' என்று இருக்கிறது. ஆகையால் தான் ஒரு குறிப்பிட்ட தேதியை நிருணயிக்க வேண்டுமென்று சொல்லுகிறேன். இந்தத் திருத்தத்தை ஏற்றுக் கொண்டால் உண்மையிலேயே தமிழ்மொழி முன்னேற்றம் அடைவதற்கு உதவி செய்தது போலாகும்'' என்றார்.

திரு பி.ஜி.கருத்திருமன்:-

''இந்த மசோதாவைக் கொண்டு வந்த 'நீதி—நிதிமதி' அமைச்சரவர்களை நான் பாராட்டுகிறேன் (சிரிப்பு). நீதி அமைச்சர் என்றால் 'சட்ட மந்திரி' என்று அர்த்தம். நிதி அமைச்சர் என்றார் 'பொருள் அமைச்சர்' என்று அர்த்தம். மதி அமைச்சர் என்றால் 'கல்வி அமைச்சர்' என்று அர்த்தம். இதுவரை வெவ்வேறு பாஷையிலே சட்டசபை நடவடிக்கைகள் நடந்து வந்தன. இப்பொழுது நமது தாய் மொழி அரசாங்க பீடத்தில் அமருகிறது. ஒரு குழந்தைக்குப் புட்டிப் பாலைவிட, தாய்ப்பால்தான் மிகவும் அவசியம். புட்டிப்பால் குடிக்கும் குழந்தைகள் நன்றாக இருந்தாலும் கூட, தாய்ப்பாலில் இருக்கும் சத்து உயர்ந்த தன்மை வாய்ந்தது. தாய்ப் பாலைக் குடிக்கும் குழந்தையின் மனோ நிலைகூட நன்றாக இருக்கும். ஆகவே, இந்த மசோதாவைக்

கொண்டு வந்ததற்காக எனது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழனின் நாகரிகம் மிகவும் உயர்ந்தது. அவனது பண்பாடும் மிகச் சிறந்தது. நமது தேசப் பிதா மகாத்மா காந்தி அடிகள் நமக்குச் சுதந்திரம் வாங்கிக் கொடுத்தார் என்றால் அதற்குக் காரணம் அவர் பூரணமாகக் கடைப் பிடித்து வந்த தமிழரின் பண்பாடும், கொள்கையுமே ஆகும். வள்ளுவர், இளங்கோ, கம்பன் ஆகியோர்கள் நமக்கு வகுத்துக் கொடுத்த வழிப்படி அரசியலிலே மட்டுமல்லாமல் சொந்த வாழ்க்கையிலும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்த தினால்தான் நமது தேசப்பிதா நமக்குச் சுதந்திரத்தை வாங்கிக் கொடுக்க அருகதை உள்ளவராயிருந்தார். நம்முடைய தாய்மொழி பிரதேச பாஷையாக இருப்பதோடு மட்டுமல்லாமல், இப்பொழுது அரசாங்க மொழியாகவும் ஆகிறது. படிப்படியாகத்தான் இதைக் கொண்டு வர வேண்டுமென்று கனம் அமைச்சர் குறிப்பிட்டதை நான் பாராட்டுகிறேன். இதற்கு உதாரணம் என்னுடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்ட ஒரு சம்பவத்தை ஞாபகப் படுத்த விரும்புகிறேன்.

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த பொழுது, நானும் எனது நண்பர்கள் சிலரும் தூய தமிழிலேயே பேசவேண்டும் என்று ஒரு பிரதிக்ஞை எடுத்துக் கொண்டோம். ஆங்கிலத்தில் யாராவது பேசினால், ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓரணா அபராதம் செலுத்த வேண்டும் என்று ஒப்புக் கொண்டோம். ஒரு சமயம் பட்டிணத்திலுள்ள இராமகிருஷ்ணா லஞ்ச் ஹோமில் நாங்கள் சந்திக்கும்படி நேர்ந்தது. எங்கள் குழுவிலுள்ள ஒரு நண்பர் 'இப்பொழுது தான் பட்டிணத்திற்கு வந்திருக்கிறீர்களோ' என்று என்னைப் பார்த்துக் கேட்டார். அச்சமயம் நாட்டுப் புறத்திலிருந்து வந்திருக்கும்

ஒருவர், தன்னைத்தான் கேலியாகச் சொல்லுகிறோம் என்று நினைத்து, 'ஏனய்யா, இப்பொழுதுதான் புதிதாகப் பட்டணத்திற்கு வந்திருக்கிறேன் என்று நினைக்கிறீர்களா? என்று சண்டைக்கு வந்து விட்டார். கடைசியாக அவரிடம் நான் சென்று 'உங்களைப் பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. தூய தமிழிலே பேச வேண்டுமென்று நாங்கள் பிரதிக்ஞை எடுத்துக் கொண்டோம். அதனால் தான் எனது நண்பர் என்னைப் பார்த்து அவ்வாறு கேட்டார்' என்று சொல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

தூய தமிழ், கொடும் தமிழ், செந்தமிழ் உபயோகித்தால் சில சமயங்களில் அர்த்தமே ஆகாது. 'துவிச்சக்கர வண்டி' என்று சொன்னால் சிலருக்குப் புரிவதில்லை. 'சைக்கிள்' என்று தமிழ்ப் பாஷையிலும் உபயோகித்துக் கொள்ளலாம். பிற மொழிகள் எல்லாம் வளர்ச்சி அடைந்திருப்பதற்குக் காரணம் என்னவென்றால் வேறு மொழிகளில் இருக்கக் கூடிய சொற்களையும் உபபோகிப்பதனால்தான். ஈரோடு முனிசிபாலிடியில் தண்ணீர் லாரிக்கு 'குடிதண்ணீர் உந்து' என்று சொல்லு கிறார்கள். 'லாரி'என்று ஏன் சொல்லக்கூடாது? புழக்கத் திலே இருக்கும் சொற்களை உபயோகிப்பதுதான் மிகவும் சிறந்த முறை என்றார்.

எஸ். சுயம்பிரகாசம்:—

''சென்ற ஐந்தாண்டு காலமாக நாம் சட்ட சபையில் பல வேலைகளை முடித்துவிட்டு, இப்பொழுது தேர்தலுக்கு மக்களிடத்திலே போகிற சமயத்தில், நீண்ட நாளாக மக்கள் விரும்புகிற தமிழ் மொழியை ஆட்சி மொழியாக ஆக்கி வைத்திருக்கிறோம் என்பதற்காக மக்களின் சார்பாக அரசாங்கத்திற்கு நன்றி செலுத்து கிறேன். அத்துடன் நமது சபை முடிகிற காலத்திலே, தேர்தல் பிரச்சாரத்திற்காகப் போகிற நேரத்திலே

ஒருவிதமான விவாதத்திற்கும் இடமில்லாத இந்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்தது பற்றிப் பாராட்டு கிறேன்.

மசோதாவைக் கவனிக்குங்கால், அதில் அதிகமாக ஒன்றுமில்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. தமிழை ஆட்சி மொழியாகச் செய்வதுதான் அரசாங்கத்தின் எண்ணம் என்பது முக்கியமாகத் தெரிகிறது. இதை நிறைவேற்றுவதில் பலவிதமான சிரமங்கள் இருக்கு மென்பதை யாரும் மறுக்க முடியாது. 'நாங்கள் தமிழை ஆட்சி மொழியாக்கி விட்டோம்' என்று சொல்லுவதற் காகவே இந்த மசோதா கொண்டுவரப் பட்டிருக்கிறதோ என்ற சந்தேகம் கூட சிலருக்கு இருக்கிறது. சிரமங்களை எல்லாம் நீக்கி ஆட்சி மொழியை நடைமுறையில் கொண்டு வருவதற்குத் தக்க நடவடிக்கைகளைக் கையாள வேண்டும். கனம் நிதி அமைச்சரும் மற்றும் பல அங்கத்தினர்களும் இதிலுள்ள சிரமங்களை எடுத்துச் சொன்னார்கள். ஒன்று தமிழ் டைப்ரைட்டர் பற்றியது. இது விஷயத்தில் அரசாங்கம் சீக்கிரமாக நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்பதில் சந்தேகமே இல்லை. அதற்கு இடையிலே ஜில்லாவாரியாக இதனை உபயோகிக்கும் நேரத்தில் சில சிரமங்கள் ஏற்படக் கூடும். இதுவரையிலும் ஆங்கிலத்தில் பழகி வந்த அவர்கள் சில சமயங்களில் தக்க வார்த்தைகள் கிடைக்காத காரணத்தாலே அதில் ஈடுபட்டிருக்கும் அதிகாரிகளுக்குச் சிரமம் ஏற்படக்கூடும். ஜில்லாவாரியாக எடுத்துப் பார்க்கும்போது, சாதாரண குமாஸ்தாவிலிருந்து ஜில்லாக் கலெக்டர் வரையில் இருக்கின்றவர்களில் சில அதிகாரிகள் தான் உள்ளபடியே தமிழில் விற்பன்னர்களாக இருப்பார்கள். மிக மிகக் குறைவாகப் பல இடங்களிலே காணப்படுகிறது. அப்படிப்பட்ட ஜாப்தாவை உடனடி யாக எடுக்க வேண்டும் என்பது என்னுடைய ஆசை. சில ஜில்லாக்களிலே தமிழ் வார்த்தைகளை அதிகமாக உபயோகப்படுத்தும் ஆட்கள் அதிகமாக இருக்கக் கூடும்.

அவர்களைப் பல ஜில்லாக்களிலே தமிழ் வார்த்தைகளை அதிகமாக உபயோகப்படுத்தும் ஆட்கள் அதிகமாக இருக்கக் கூடும். அவர்களைப் பல ஜில்லாக்களிலே பிரித்து அமைப்பார்களானால், வெகு சீக்கிரமாக, உடனடியாக நடைமுறையில் கொண்டு வருவதற்குச் சௌகரியமாக இருக்கும். உத்தியோகப் பற்றற்றவர்களைக் கொண்டு சில குழுக்களை ஜில்லா வாரியாக நியமித்துக் கொள்வார் களானால், சில வார்த்தைகளை அதிகமாகத் தாங்கள் ஏற்பாடு செய்து கொள்வதற்கும் அரசாங்க ரீதியிலே சென்னையிலே ஒரு குழுவினர் வார்த்தையைத் தேடித்தரு வதற்கு மேலாக ஜில்லாவாரியாக உடனடியாகச் சில வார்த்தைகளைச் சீக்கிரமாகவே ஏற்பாடு செய்து கொள்வதற்குச் சந்தர்ப்பங்கள் ஏற்படும்.

தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள், தமிழ் டைப் அடிப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இடைக்காலங்களிலே ஆங்கிலத்தில் மட்டும் சுருக்கெழுத்து எழுதுபவர்களுக்கும், டைப் அடிப்பவர்களுக்கும் தமிழில் பயிற்சி கொடுத்து அவர்களையும் ஊக்குவிக்க வேண்டு மென்பதுதான் என்னுடைய ஆசை. உறுப்பினர்கள் அங்கே தமிழிலும் ஆங்கிலத்திலும் வேகமாகப் பேசுகிற நேரத் திலே, தமிழ்ச் சுருக்கெழுத்தாளர்கள்கூட சில சந்தர்ப்பங் களில் ஆங்காங்கு விட்டு விடுகிறார்கள். வேகமாகப் பேசும்போது அதிகமாக அவர்களுடைய எண்ணிக்கையைச் செய்யவேண்டும். அவர்களுடைய வேகத்தையும் அதிக மாக்குவதற்குக் கொஞ்சம் உற்சாகம் அளிக்க வேண்டு மென்பதும் என்னுடைய ஆசை. இந்த முறைகளைக் கைப் பற்றவேண்டும். வெகு சீக்கிரம் சுருக்கெழுத்தாளர்களுடைய எண்ணிக்கையை அதிகமாக்குவதோடு கூட, டைப் இயந்திரங்களின் எண்ணிக்கையையும் அதிகமாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். ஜில்லாவாரியாகவும், தாலுக்கா

வாரியாகவும், மாகாண ரீதியாகவும் ஆட்களையும் இயந்திரங்களையும் அதிகமாக்க ஏற்பாடு செய்தால், வெகு சீக்கிரமாக இந்த ஆட்சி மொழி நல்ல முறையிலே இந்த நாட்டிலே புணி செய்வதற்குச் சந்தர்ப்பம் ஏற்படு மென்பதைச் சொல்லிக் கொண்டு அரசாங்கத்தார் இந்த மசோதாவிலே அதிகமாகப் பொறுப்பு எடுத்துக் கொண்டிருந்த போதிலும், அதைத் தீவிரமாக ஏற்பாடு செய்து ஆட்சிமொழியை வெகு சீக்கிரமாகப் பரப்பு வதற்குத் தக்க ஏற்பாடுகளை அரசாங்கத்தார் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன் என்றார்.

திரு ஆர். சண்முக இராஜேஸ்வர சேதுபதி:—

இந்த மசோதா மிகவும் தாமதப்பட்டுக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அது சரியல்ல என்று நான் சொல்லப் பிரியப்படுகிறேன். ஏனென்றால், நாம் தனித் தமிழ் இராஜ்யமாக இயங்குவது இப்பொழுதுதான். இதுவரை நம்முடன் இதர பாஷை பேசுகிறவர்களெல்லாம் அங்கத்தினர்களாக இருந்தார்கள். கன்னட இராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள், ஆந்திர இராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள், கேரள இராஜ்யத்தைச் சேர்ந்தவர்கள், நம்முடன் இருந்தார்கள். அவர்கள் எல்லாரும் பிரிந்த நவம்பர் 1-ஆம் தேதியிலிருந்துதான் நாம் தனித் தமிழ் இராஜ்யமாக இயங்குகிறோம். ஆகவே; குறுகிய காலத்திற்குள்தான் அரசாங்கம் இந்த ஏற்பாட்டைச் செய்ய முன் வந்திருக்கிறது என்று சொன்னால், அதை யாரும் மறுக்க முடியாது.

நவம்பர் 1—ஆம் தேதியிலிருந்தே இங்கு நடக்கும் விவகாவரங்களில் என்னைப் பொறுத்தவரையில், நான் ஆங்கிலத்தில் பேசும் போதெல்லாம் ஏதோ குற்றம் செய்த மனப்பான்மையுடன்தான் பேசி வந்திருக்கிறேன். ஆனால், அதைச் சமாளிக்க முடியவில்லை. அன்றொருநாள் கனம்

அங்கத்தினர் ஸ்ரீ கோவிந்தன் அவர்கள் தமிழிலேயே பதில் சொல்ல வேண்டுமென்று இந்தச் சபையில் கேட்டுக் கொண்டார். அன்றைக்கு நான் அறிக்கையை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு வந்திருந்தேன். அதைப் படித்து விட்டேன். அதைத் தமிழில் சொல்லும்படியாகக் கனம் அங்கத்தினர் கேட்டுக் கொண்டிருந்தும், அப்படிச்செய்ய வில்லை. காரணம், ஒட்டிக்கு இரட்டி வேலையாகுமே என்பதுதான். அதனால், அவருடைய கோரிக்கையை ஒதுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. அவர் கேட்டது நியாயமானது. ஆனால், நான் அவருக்குத் தமிழில் பதில் சொல்லாதது தவறு என்று என்னுடைய மனச்சாட்சி இருக்கிறதே, அது சொல்லிக் கொண்டே இருந்தது. அந்தக் கஷ்டம் இன்று நீங்கியது பற்றி நான் மிகவும் வரவேற் கிறேன். அதிலும், தமிழ் ஆட்சி மொழியாக வந்து, தமிழ் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டுமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், தமிழ் நாட்டிலுள்ளவர்கள் யாரும் அதை வரவேற்பார்கள்.

இப்பொழுது அதில் பிணக்குகளைக் காண்கின்றோம். அதாவது, தனித் தமிழ் எப்படி இருக்க வேண்டும், அதற்கு ஜீவன் உண்டு, அது உண்டு இது உண்டு என்றெல்லாம் பேசுகிறார்கள். அம்மாதிரி நிலைமை இப்போது உடனடியாக எதிர் பார்க்கக் கூடாது என்று நான் ரொம்பவும் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகின்றேன். பிறந்த குழந்தையைத் 'தனித் தமிழ் பேசு, செந்தமிழ் பேசு' என்று சொன்னால் அது எப்படி முடியும்? முடியாதகாரியம். இந்த மசோதாவைச் சட்டமாக இன்று நிறைவேற்றுவதன் மூலம் இன்று தான் நம் இராஜ்யத்தில் 'தமிழ் ஆட்சி' என்ற குழந்தை பிறந்திருக்கிறது, பிறந்த குழந்தை பேசுகிற முறையிலே மழலைச் சொற்களை நாம் எப்படி ரசிக் கின்றோமோ, அதைப்போல எல்லா இடத்திலும் தமிழிலேயே இயங்கும்படிச் செய்துவிட்டால் தவறு அல்ல. இந்த வார்த்தை தப்பு, இந்த வார்த்தைதான் சரி

என்றெல்லாம் அதிகமாக வாதம் செய்து கொண்டிராமல் குழந்தையின் மழலைச் சொற்களை எப்படி ரசிக்கின்றோமோ, அந்த முறையில் பாமர மக்களுக்குப் புரியக்கூடிய வகையிலே தமிழைப் பழக்கத்திற்குக் கொண்டு வரவேண்டும். அந்நியச் சொற்களாக இருந்தாலும் பரவாயில்லை. உதாரணமாக, சைக்கிள் என்னும் பதம் ஆங்கிலப் பதமாக இருந்தாலும், அதற்கென்று ஒரு தமிழ்ப் பதத்தைச் சிருஷ்டி செய்ய வேண்டிய அவசியம் இல்லை. சைக்கிள் என்றே அதைப் போட்டு விடலாமே. இந்த வகையில் பழக்கத்தில் இருந்து வரும் இம்மாதிரி சில பதங்களை அப்படியே தமிழில் எடுத்துக் கொண்டால், நடைமுறையிலே சிரமம் இருக்காது. இராஜ்யத்தைத் தமிழ் மொழி மூலம் நடத்துவதற்கு அனுகூலமாக இருக்கும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். இதனால் தமிழ் மொழிக்கு இழுக்கு ஏற்பட்டு விடாது. தமிழை வளர்க்கும் முறையிலேயே இதைத் தெரிவிக்கின்றேன்.

எதிர்க் கட்சித் தலைவர்கள் அவர்கள் சொன்னபடி, பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழ் வந்து விட்டால் ஆர்வம் தானாக உண்டாய்விடும். கல்லூரியில் நான் படித்த தமிழ் மறந்து போகிறது. அப்பொழுது சங்க இலக்கியத்திலிருந்தும் புறநானூறு போன்ற நூல் களிலிருந்தும் சில சில பகுதிகளில் வைத்திருப்பார்கள். புறநானூற்றிலிருந்து ஏதோ ஒரு பகுதியை நண்பர் ஸ்ரீ பி.ஜி.கருத்திருமன் அவர்கள் அப்படியே ஒப்பித்து விட்டார்கள். எவ்வளவு பேர் அப்படி ஒப்பிக்க முடியும்? (கனம் அங்கத்தினர் ஒருவரின் குறுக்கீடு: 'ஆம்; இன்று ஒப்பிக்க வேண்டுமென்றே அவர் தயார் செய்து இருக்கலாம்) நான் ஏதோ அவருடைய அறிவு ஆற்றலுக்குப் பிணக்குக் கூறவில்லை. ஆகையால், அம்மாதிரி நம்மை ஆங்கிலத்திலேயே பழக்கிக் கொண்டு வந்து விட்டோம். தாய்ப் பாஷையிலே பேசாமல் ஆங்கிலத்திலே

பேசுவதையே பெருமையாகக் கருதிக் கொண்டிருந்த நாள் இன்று போய்விட்டது. தமிழ் ஆட்சி மொழியாக வந்து, கல்லூரிகளிலும் இதைத்தான் பயில வேண்டுமென்று வந்தால், எத்தனைப் பேர் ஷேக்ஸ்பியரையும் மில்டனையும் படிப்பார்கள் என்று கேட்க விரும்புகிறேன். அப்படிப் பட்ட நிலைமை வரவேண்டும். சங்க நூல்களில் ஆர்வம் வந்துவிடும். தமிழ் தானாக வளர்ச்சி அடையும்.

இப்படி ஒரு மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்து விட்டிருக்கிறார்களே, ஒரு வேளை இது தேர்தலுக்கோ என்னவோ என்று ஒரு சிலர் நினைத்தால் அது தப்பான அபிப்பிராயம் ஆகும். தேர்தலுக்காக என்று ஒரு காரியம் செய்தால், அது நாளைக்கே தெரிந்து விடும். தமிழை ஆட்சிமொழியாகக் கொண்டு வந்து விட்ட பிறகே அரசாங்கம் இதைக் கைவிட முடியாது. தமிழ் நாட்டு மண்ணிலே இந்த வித்தை விதைத்துவிட்ட பிறகு, அது மேலும் மேலும் வளர்ச்சி அடையுமே தவிர, அந்த வித்தின் வளர்ச்சியை யாராலும் தடுத்துவிட முடியாது. அரசாங்கத் திற்கு இதில் ஒரு விதமான ஆர்வக் குறைவோ ஊக்கக் குறைவோ இருக்கமுடியாது. அந்த வித்து தானாக வேர் ஊன்றி வளரும். அப்படி வளரும் வளர்ச்சியை நாம் எதிர்பார்போம். இன்றைக்கு மட்டும் செய்கிற காரியம் அல்ல என்று சொல்லிக் கொள்ளப் பிரியப்படுகிறேன். அது தானாக வளர்ந்து விடும். இருந்தாலும் எல்லோரும் பங்கு கொண்டு செய்ய வேண்டியதுதான். இந்த மசோதாவைக் கொண்டு வந்துவிட்டு, அரசாங்கம் அயர்வு கொள்ளுமோ நடைமுறையில் கஷ்டம் வந்து உடனடியாக வராதோ என்று சிலர் நினைக்கலாம். தமிழ்ப் பாஷை ஆட்சி மொழியாக வந்து, சகல துறைகளிலும் உபயோகப்படவேண்டுமென்பதில் யாருக்கும் அபிப்பிராயம் இல்லை. ஆதலால் தான் நான் சொல்லுவதுபோல், பிற பாஷைச் சொற்களானாலும் அவற்றைத் தள்ளி விடாமல் தமிழில் இப்போது இருக்கிற

வார்த்தைகளை வைத்துக் கொண்டு இன்னும் இதர மொழி வார்த்தைகள் தமிழில் பழக்கத்தில் இருந்து வந்தால் அவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். அப்படிக் கடன் வாங்கிக் கொள்வதில் தப்பு இல்லை; அப்படியிருந்தால் தான் சீக்கிரமாகத் தமிழ்ப் பாஷை வளரும்; எல்லாத் துறைகளிலும் உபயோகப்படுத்துவதற்கு முடியும்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ வினாயகம் அவர்கள் சொன்னபடி, நம்முடைய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட வருஷங்களுக்குள் ஆங்கிலம் போக வேண்டுமென்று குறிப்பிட்டிருப்பது போல், இங்கும் ஒரு கட்டுப்பாடு இருந்தால் ரொம்ப நல்லது என்றுதான் நானும் கருதுகிறேன். ஒரு குறிப்பிட்ட வருஷங்களுக்குப் பிறகு ஆங்கிலம் புறக்கணிக்கப்பட வேண்டுமென்ற நியதி இருந்தால் ரொம்ப நல்லது என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். கல்லூரியிலே தமிழில் பட்டம் பெற்று அவர்கள் வரும்போது, தமிழ் தானாக வளர்ச்சி அடையும். தனித் தமிழ் இன்று என்று இன்று சிலர் தப்பாகக் கருதலாம். சரியில்லையென்றாலும் திருத்தி அமைத்துக் கொண்டே போகலாம். முதல் முதலிலே சட்ட சபையிலே நாம் செய்யும் தப்புக்களைத் திருத்தி அமைத்து வருகிறோம். அனுபவத்திலே திருத்தமாக நாம் செய்கின்றோம். திருத்தத்திற்கு இடம் கொடுத்துக் கொண்டே உடனடியாக இந்தப் பாதையிலே முன்னேறிச் செல்ல வேண்டுமென்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

கால தாமதமன்னியில் இந்த மசோதாவை ஊர்ஜிதத்திற்குக் கொண்டு வந்து, தாலுக்கா, ஜில்லா எங்கும் பரப்பும்படியாகச் செய்து விட்டால் ஒரு சில காலத்திற்கு, அந்த ஆங்கிலத்திலே பழகி வந்த காரணத்தால் குமாஸ்தாக்களுக்குச் சில சிரமங்கள் இருக்கும். இயந்திரங்களைப் பற்றியும் சில கஷ்டங்கள் இருக்கும்.

மனிதர்களால் ஏற்படும் கஷ்டங்கள்தான்; அவைகளை மனிதர்களே வெல்லக் கூடிய முறையிலே அமைத்துக் கொள்ளலாம் என்பது என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம் என்றார்.

திரு கே.எஸ். இலட்சுமிபதி நாயக்கர்:—

பழனியில் தமிழ்த் தெய்வமாக இருக்கக் கூடிய சுப்பிரமணியம் என்ற பெயர் கொண்டவர் இன்று நமது நிதி அமைச்சராக இருக்கிறார். சுப்பிரமணியத்திற்கு மற்றொரு பெயரும் உண்டு. அவரை ஞான பண்டிதன் என்றும் சொல்வார்கள். சுப்பிரமணியத்தைத் தகப்பன் சுவாமி என்று சொல்வதும், உண்டு. இன்றைய தினம் ஸ்ரீ காமராஜ நாடார் அவர்கள் தலைவராக இருக்கின்ற நேரத்திலே சுப்பிரமணியம் அவர்களுடைய வாயால் தமிழ் மொழியை நமது நாட்டின் அரசியல் மொழியாகக் கொண்டு வரவேண்டுமென்று பிரகடனம் செய்திருப்ப தானது மிகவும் பாராட்டத்தக்கது. அதிலும் முக்கியமாக நான் சொல்லிக் கொள்ள விரும்புவது என்னவென்றால், நமது தமிழ் மொழி அரசியல் மொழியாக இதுவரை வராததன் காரணமாகப் பல இடங்களில் வெவ்வேறு முறைகளிலே தமிழ் உச்சரிக்கப்பட்டு வருவதை நாம் எல்லோரும் பார்த்து வருகிறோம். சென்னையிலே ஒரு மாதிரியாக உச்சரிக்கப்படுகிறது. மதுரையிலே ஒரு மாதிரியாக உச்சரிக்கப்படுகிறது, திருநெல்வேலி ஜில்லாவில் கொஞ்சம் மாறுதலாக உச்சரிக்கப்படுகிறது. தமிழ் அரசியல் மொழியாக வந்ததின் காரணமாக நாம் எல்லோரும் சுத்தமான தமிழ் பேசுவதற்குக் கற்றுக் கொள்ள முடியும். அதிலும் கொச்சையாக நமது சென்னை நகரத்தில் பேசப்படும் தமிழ் ஒருவாறு திருத்தி நல்லமுறையிலே காதுக்கு இனிமையாக அமைய வேண்டும். செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே என்று பாரதியார் பாடியிருக்கிறார். செந்தமிழ்

மொழியை நினைத்த மாத்திரத்திலே காதில் இன்பம் ஒலிக்கிறது. அந்தச் செந்தமிழைக் கூடிய சீக்கிரத்தில் நாம் எல்லோரும் கற்க வேண்டுமென்று கூறிக் கொள்ளுகிறேன்.

தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருப்பது மட்டும் போதாது, தமிழ் அன்னைக்கு இன்று முடிசூட்டு விழா நடத்துவோம் என்று நமது அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் சொன்னார்கள். முடிசூட்டுவிழா நடத்துவதோடு மட்டும் அல்லாது, இந்த நாட்டிற்குச் செந்தமிழ் நாடு அல்லது தமிழ்நாடு என்ற பெயரிட வேண்டும் என்பது தான் இங்குள்ள நம் போன்ற தமிழ் ஜில்லாக்களிலுள்ள மக்களுடைய ஆர்வம்.அதுவே அவர்களுடைய விருப்பமும் கூட. ஆகவே, தமிழ் மொழியை ஆட் சி மொழியாக்குவது மட்டும் போதாதென்று சொல்லிக் கொண்டு, நமது நாட்டிற்குத் தமிழ் நாடு என்று பெயர் வழங்குவதற்கு வேண்டிய முயற்சிகளைச் சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ் மொழியை நாம் நடைமுறையில் கொண்டு வருவதில் சில சிரமங்கள் இருக்கின்றன. எனக்கு முன்பு பேசிய அரங்கசுவாமி ரெட்டியார் அவர்கள் சைக்கிள், பஸ், ஜட்ஜ், கோர்ட் போன்ற வார்த்தைக்கெல்லாம் தமிழ் மொழியிலேயே அப்படியே மாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். தமிழிலே மற்ற மொழியிலிருந்து சொற்களைக் கடன் வாங்கிக் கொள்ள வேண்டுமென்றால், சைக்கிள் வண்டி என்பதை எடுத்துக்கொள்வோம். அதை ஒரு இடத்திலே துவிச்சக்கர வண்டி என்று சொல்லு கிறார்கள். வேறு சிலர் துவிச்சக்கர வண்டி என்று சொல்லும்போது அது வடமொழியாகும், அதற்கு வேறு பெயர் கொடுக்க வேண்டுமென்று சர்ச்சை செய்கிறார்கள். இரு உருளை வண்டி என்று தமிழிலேயே சொல்லலாம் என்று சிலர் கூறுகிறார்கள். இம்மாதிரி சர்ச்சைகள் செய்து கொண்டிருந்தால், அது தமிழ் வளர்ச்சியை மிகவும்

பாதிக்கும். நடைமுறையிலே மற்றமொழியில் உள்ள சொற்களை நமது தமிழில் கடன் வாங்கிக் கொண்டு நம் தமிழை வளர்ப்பதில் எந்தவிதமான தவறும் இல்லை. இந்த நன்னாளில் நமது நிதி அமைச்சர் அவர்கள் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று கொண்டு வந்திருக்கக் கூடிய மசோதாவை நான் மனப்பூர்வமாக ஆதரித்து இந்தச் சந்தர்ப்பத்தில் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

திரு ஏ. சாம்பசிவம்:—

இந்த மசோதா தக்க தருணத்தில் எந்த நேரத்தில் கொண்டு வர வேண்டுமோ அந்த நேரத்தில் குறிப்பாகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதற்கு முன்பு பேசிய நமது பொது மராமத்து இலாக்கா அமைச்சர் அவர்கள் காரணமும் குறிப்பிட்டார்கள். மூன்று ஆண்டுகளுக்கு முன்னமேயே நம்முடைய அமைச்சர் பகுதியிலிருந்து தமிழிலே பேசத் தொடங்கினார்கள். அப்பொழுது சபையில் இருந்த கன்னட மலையாளத் தோழர்களுக்கு அது புரியாத காரணத்தினாலே, மீண்டும் இந்தச் சபை ஆங்கிலத்திலேயே செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இன்றைக்கு அந்த நிலைமை மாறி முற்றிலும் தமிழர்களாகக் கூடிய இந்த முதல் கட்டத்திலேயே காங்கிரஸ் கட்சி அரசாங்கமானது இந்த மசோதாவைச் சமர்ப்பித்து இருக்கிறது. இந்த மசோதாவை இப்பொழுது சமர்ப்பித்தது பற்றி எதிர்க்கட்சியில் உள்ள சில நண்பர்கள், ஏதோ தேர்தலுக்காகக் கொண்டு வந்ததாக இருக்குமோ என்று சந்தேகப்படுவது, தாய்ப்பாலில் நஞ்சு இருக்கிறதா என்று ஆராய்கின்ற புத்திசாலித்தனத்தைப் போல இருக்கிறது என்று சொல்லிக் கொள்ள மிகவும் வருத்தப்படுகிறேன். தக்க தருணத்தில் தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டுமென்று அரசாங்கத்தார் நீண்ட நெடுங்காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

குறிப்பாக நமது கல்வி அமைச்சர் தன்னுடைய சக்திக்கு ஏற்ற அளவில் தாய் மொழிக்கு எந்தெந்த உயர்வெல்லாம் செய்ய முடியுமோ அதைச் செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கிறார்கள். அவர் பல இடங்களிலும் கல்லூரிகளிலும் கூடத் தமிழைப் போதனா மொழியாக ஆக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறார்கள். ஆகவே, இதைத் துரிதப்படுத்துவதில் அவர் எந்தவிதமான தயக்கமும் காட்டமாட்டார்கள் என்ற நம்பிக்கையோடு கூட அவர்களை மீண்டும் பாராட்ட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த நோத்திலே அலுவலகங்களிலுள்ள அலுவலாளர்களுக்கும் ஆணையாளர்களுக்கும்கூட ஒரு வேண்டுகோள்விட ஆசைப்படுகிறேன். இங்குள்ள நண்பர் களிடமும் சரி, வெளியிலிருப்பவர்களிடமும் சரி, ஒரு சிலருக்கு ஓர் ஐயப்பாடு இருக்கிறது. தமிழிலே விரைவில் ஆட்சி நடத்த முடியுமா என்று ஐயப்படுகிறார்கள். முக்கியமாகப் பழைய காலத்தில் ‘ஒன்று வைத்து உலகாண்ட தொன்று படு தீந்தமிழ்க்கிளவி’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடைக்காலத்துப் புலவர் ஒருவர் கூறியிருக்கிறார். ‘சேணிற் பறக்கின்ற செந்தமிழ்க் குதிரைமுன் திடேது தட்டேது காண்’ வானமளந்த தனைத்து மளந்திடு வண்மொழி வாழியவே என்று கவியரசர் பாரதியார் பாடியிருக்கிறார். வானத்தில் ஓடுகின்ற அத்தனைப் பொருள்களையும் சொல்வளத்தால் அளந்து பார்க்க வல்லது தமிழ்மொழி. அந்த மொழியில் ஆட்சி விரைவில் நடத்த முடியுமா என்ற ஐயம் யாருக்கும் எப்பொழுதும் இருக்கத் தேவையில்லை. அரசாங்க அலுவலகத்திலுள்ள நண்பர்கள் வளம் பொருந்திய மொழி ஆட்சிமொழி என்ற உணர்வுடன் இது விஷயமாக விரைந்து செயல்பட்டால், இந்த நாட்டிலுள்ள அத்தனை மக்களும் மகிழ்வார்கள். அவர்களைப் பாராட்டுவார்கள். உண்மையில் இந்த நாள் மகிழ்ச்சி ஊட்டக் கூடிய நாள்

மாத்திரமல்ல. தமிழ் நாட்டு அரசியலிலும் பொதுமக்கள் வாழ்விலும் சிறந்த பொன்னாள். நாடு விடுதலை அடைந்த பிறகு மக்கள் வீட்டிலே பேசுகின்ற தமிழ் மொழியைத்தான் நாட்டை ஆளுகின்ற மொழியாகச் செய்ய வேண்டுமென்று விரும்பினார்கள். அந்த மக்களின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்குக் காங்கிரஸ் சர்க்கார் நீண்ட நாள்களாகத் தக்க தருணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். சிறிதும் காலம் தாழ்த்தாமல் அமைச்சர் அவர்கள் செயல்பட்டு இதனை உரிய காலத்திலே கொண்டு வந்தது மிகவும் வரவேற்கத்தக்கது. இது விஷயமாக ஓர் ஆய்வுக் குழு அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் கூறியது மிகவும் வரவேற்கக் கூடியது. ஆங்கிலத்தில் இருப்பது போல் தமிழிலும் பி.ஓ.எல்; எம்.ஓ.எல்., பட்டம் பெற்றவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ் வொருவரையும் ஓர் அரசாங்கப் பிரிவில் ஓர் உத்தியோகஸ்தராக அமர்த்தி அல்லது அவர்களை ஆய்வுக் குழுவில் அமர்த்தி, கூடியவரையிலும் முற்றிலும் தமிழிலேயே செயல்படும் வாய்ப்பைச் செய்து தர வேண்டும்.

தாலுக்கா அலுவலகத்தில் மட்டுமல்ல. சப்—மாஜிஸ்திரேட் கோர்ட் போன்ற எல்லா இடங்களிலும் தமிழிலேயே அலுவல்கள் நடத்தப்பட வேண்டும். பொது மக்களுக்கு நமது நாட்டில் தமிழ் மொழி ஆட்சி மொழி யாக விளங்குகிறது என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் விரைந்து செயல்பட வேண்டுமென்று அரசியலாரைக் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.''

திரு சி. கந்தசாமி:—

இந்தச் சபையின் கடைசி நடவடிக்கையான நமது தமிழ் மொழி பிரதேச மொழியாக அங்கீகரிக்கப் பட்டிருக்கும் இந்தச் செய்தியைக் கேட்டுத் தமிழகம் பூராவும் பூரிப்பு அடையும் என்பதில் ஐயமில்லை.

இன்றைக்கு இத்தகைய ஒரு மசோதாவை நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருந்தாலும்கூட இத்தகைய ஒரு நிலைமைக்கு வருவதற்கு 50 வருஷ காலமாக நடந்த ஒரு போராட்டத்தின் பலன்தான் இது என்பதைச் சொல்லாமல் இருக்க முடியாது. அன்று ஏற்பட்ட போராட்டத்தின் வளர்ச்சிதான் இன்றைய தினம் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்திருக்கிறது. தமிழ் மொழி அரசோச்ச வேண்டுமென்று கழிந்த 50, 60 ஆண்டுகளாகப் போராடி வந்திருக்கிறார்கள் பலர் என்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். என் போன்றவர்கள் இந்த மசோதாவினால் கூடுதலான மகிழ்ச்சி அடைகிறோம். காரணம் என்னவென்றால், சாதாரண விவசாய மக்களும் சாதாரண மக்களும் இன்று அரசாங்கத்தில் எல்லா நடவடிக்கைகளையும் புரிந்து கொள்ளும்படியான வகையில் இது அமையும் என்ற காரணத்தினால் இந்த நிலைமையில் இனிவரப் போகிற காலத்தில் கலெக்டர் ஆபீஸ்களிலும் சரி, மற்ற எந்தச் சர்க்கார் ஆபீஸ்களிலும் சரி, சட்டசபையிலும் சரி, அங்கெல்லாம் நடைபெறக் கூடிய காரியங்களைச் சாதாரண மக்கள் புரிந்து கொள்வதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. இது ஜனநாயகத்தின் ஒரு படி என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். அத்தகைய ஒரு நிலைக்கு முயற்சி எடுத்தற்காக மந்திரி அவர்களைப் பாராட்டுகிறேன். இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில் தமிழ் மொழியை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்ததற்காகத் தமிழ் நாட்டு மக்களின் சார்பாகவும், தமிழ் நாட்டு விவசாயிகள் சார்பாகவும், தமிழ் நாட்டுப் பாட்டாளிகள் சார்பாகவும், இன்று சமூகத்தில் மிதியுண்டு கிடக்கிற கோடிக்கணக்கான மக்களின் சார்பாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் இது வரை பிறமொழிகளையும் சேர்த்துத்தான் வளர்த்து வந்தோம். இன்று நம்மோடு இருக்கக் கூடிய தமிழ் அன்பானது பிற மொழிகளின் மீது

வெறுப்பை வளர்க்கக் கூடியதாக இருக்கக்கூடாது. பிற மொழிகளிலுள்ள மொழி வளர்ச்சிதான் இன்று நம்மை இந்த நிலைமைக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அதை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு நாம் தமிழை வளர்க்க வேண்டும் என்பதுதான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள் என்றார்.''

திரு ஜி. நாராயணசாமி நாயுடு:—

''இங்கு இந்தச் சபையில் இரண்டு தரப்பினர்களும் தமிழ் மொழியை வளர்க்க ஆரம்பித்து விட்டார்கள். தங்களுடைய சந்தோஷத்தைக் கொண்டாடியிருக்கின்றனர். இன்றைக்குத் தமிழ் ஆட்சி மொழியாக வந்திருக்கிறது என்றால், அந்த ஓர் உன்னத வளர்ச்சியை அடைவதற்கு நமது முன்னோர்கள் எப்படி வேலை செய்து வந்தார்கள் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தை நடத்திய வர்கள் எல்லோரும் அன்று அன்னிய மொழியாக இருந்த ஆங்கிலத்தை வெறுத்து வந்தார்கள். அப்போது மக்களுக்குத் தமிழின் மீது ஆர்வம் ஏற்பட்டது. அவர்களை முன்னோடியாகக் கொண்டுதான் செய்தார்கள். இன்று ஏதோ புதிய சொற்களை நாம் உபயோகித்தால் கஷ்டங்கள் இருக்கும் என்று நாம் நினைக்கின்றோம். ஆனால், அந்தக் காலத்தில் தமிழ் தனித்து இருந்திருக்கிறது. இன்னும் சில விஞ்ஞானச் சொற்களுக்குத் தனித் தமிழ் மொழியில் சொற்கள் இருக்கிறது. அதை நாம் உபயோகப்படுத்துவது இல்லை. அதனால்தான், இவைகள் எல்லாம் நமக்குக் கஷ்டமாக இருந்து வருகிறது. நம்முடைய அரசியல் வளர்ச்சியிலும் நாம் அவ்விதமாக இருந்து வருவதால்தான் நாம் தனித் தமிழ் மொழியில் பேசுவதற்கு முடியாத நிலையில் இருக்கிறோம். தமிழில் பேசுவது, தமிழில் எழுதுவது, தமிழில் சிந்திப்பது இவையெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாகக் குறைந்து வேறு மொழியில் நாம் போய்க்

கொண்டிருக்கிறோம்; வேறு மொழியில் பேசினால்தான் மதிப்பு இருப்பதாக எண்ணுகிறோம். என்ன 'சகோதரரே' என்று கேட்பதற்குப் பதில் என்ன 'பிரதர்' என்று கேட்டால்தான் மதிப்பு இருக்கிறது என்று நாம் நினைக்கிறோம். 'கொஞ்சம் தண்ணீர் குடியுங்கள்' என்று சொல்வதற்குக் 'கொஞ்சம் வாட்டர் சாப்பிடுங்கள்' என்று சொல்லுகிறோம். இவ்வாறு பேசுவதில் மாறினோம். ஆடைகள் அணிவதிலே மாறினோம். தலையை வெட்டிக் கொள்வதிலே மாறினோம். தலையை என்றால் முடியைத் தான் குறிப்பிடுகிறேன். இவ்வாறு நாம் இன்று தமிழ் மொழியையே மறந்திருக்கக் கூடிய காலம் இது. இந்த நிலையில் இன்று தமிழ் மொழியையே மறந்திருக்கக் கூடிய காலமிது. இந்த நிலையில் இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாக வந்திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமாகும். ஆகவே, இன்று ஆங்கிலச் சொற்களுக்குச் சரியான தமிழ்ச் சொற்களை ஒவ்வொரு துறையிலும் அனுபவமுள்ள நிபுணர்களைக் கொண்டு தயாரித்து வெளியிட்டால் சாதாரண மக்களுக்கு உபயோகமாயிருக்கும். இன்று நாம் ஒருவருக்கொருவர் பேசிப் பல புதிய சொற்களை உபயோகித்தால் அது லாவகமாக வந்துவிடும். எல்லோருக்குமே இம்மாதிரிப்பட்ட புதிய சொற்களை உபயோகிக்கக்கூடிய சக்தி வந்துவிடும். இன்று நம்முடைய மராமத்து இலாக்கா மந்திரி அவர்கள் புதிய புதிய பதங்களை எல்லாம் ரொம்ப அழகாக அமைத்துப் பேசுவதற்கு முயற்சித்தார்கள். நமக்குத் தெரிந்த பல பதங்கள் கூட இன்று நமது உபயோகததில் இல்லாமல் இருந்து வருகிறது. இதை எல்லாம் நாம் உபயோகித்து வந்தால் இது லாவகமாக வந்து அமைந்து விடும். ஆகவே இதில் பெரிய கஷ்டங்கள் ஒன்றும் இருக்காது.

நாம் பல தமிழ்ச் சொற்களை உபயோகிக்காமல் பலஹீனப்பட்டு இருக்கிறோம். உதாரணமாக 'டெமாக்

கிரசி' என்று சொன்னால்தான் பொருள் உண்டு; 'ஜனநாயகம்' என்று சொன்னால் பொருள் இல்லை என்று ஒரு தோற்றம் அல்லது ஒரு மயக்கம் நம்மிடையே இருந்து வருகிறது. இப்படியாக அரசியலில் வரக்கூடிய டெமாக் கிரசி, ஆட்டோகிரசி போன்ற ஆங்கில வார்த்தைகளுக்குத் தமிழ்ச் சொற்களை உபயோகிக்க வேண்டிய சந்தர்ப்பம் இல்லாமல் இருக்கிறது. இவைகள் எல்லாம் பழக்கத்தில் வந்துவிடும் என்று நினைக்கிறேன். கொழுந்து, சருகு என்றெல்லாம் தமிழ்ச் சொற்கள் நம்மிடம் இருக்கிறது. ஆகவே, தமிழை வளர்ப்பதில் நாம் கட்சிக் கருத்துக்களைக் கொண்டு புகுத்தாமல் ஆத்மார்த்தமாக நாம் ஒன்றுபட்டு வேலை செய்ய வேண்டும். ஏதோ இது தேர்தல் வேலைக் காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று சொல்லி அதைத் துரிதமாகக் கொண்டு வரவேண்டும் என்று திருத்தங்களைக் கொண்டு வந்து, அதைத் தேர்தலுக்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்று எதிர்க்கட்சிக் காரர்களைப் பார்த்து எங்களுக்கும் சொல்ல முடியும். ஆகவே, நாம் இவ்விதமான வீண் விவாதங்களை விட்டு விட்டுத் தமிழ் மொழி வளருவதற்காகப் பாடுபடவேண்டும். புதிய சொற்கள் இல்லையென்ற வருத்தம் நமக்கு வேண்டியதில்லை. இன்னும் ஐந்து வருடத்திற்குள்ளாக நாம் ஒருவருக்கொருவர் பேசிப் பேசி எல்லாப் புதிய சொற்களும் லாவகத்தில் வந்துவிடும். இன்று ஒவ்வொரு ஜில்லாவிலும் வெவ்வேறு விதமான சொற்கள் உபயோகிக்கப்பட்டு வருகிறது. இவைகள் எல்லாம் மாறி ஆட்சி மொழி தமிழ்மொழியாக வந்துவிட்டால் இதில் ஒரு கஷ்டமும் இருக்காது. இந்த மசோதா கொண்டு வந்ததற் காக இந்தச் சர்க்காரையும், குறிப்பாகக் கனம் மந்திரி சுப்பிரமணியும் இதில் எடுத்துக் கொண்ட முயற்சிக்காகக் கனம் மந்திரி அவர்களையும் பாராட்டிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன் என்றார்.''

திரு வி. பாலகிருஷ்ணன்:—

''நான் நீண்ட நாளாகத் தமிழில் நிருவாகம் நடக்க வேண்டும் என்று எண்ணியிருந்தவன். புதுக்கோட்டையில் தமிழில் நிருவாகம் நடந்து வந்தது. பின்னால், சென்னையுடன் இணைக்கப்பட்ட பிறகு ஆங்கிலத்தில் நடந்து வருகிறது. ஆங்கிலத்தில் நிருவாகம் நடப்பதை எல்லோரும் இன்று வெறுத்து வருகிறார்கள். புதுக்கோட்டையில் முன்னால் எல்லாம், அதாவது 150 ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழில் நிருவாகம் நடத்தப்பட்டு வந்தது, நீதிமன்றத்தில் தீர்ப்புகள் எல்லாம், மந்திரிமார்களுடைய உத்தரவுகள் எல்லாம் வசன நடையிலும், கவியாகவும் போட்டு வந்தார்கள். இதை இன்று சென்னை அரசாங்கம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அங்குள்ள ரிக்கார்டுகளை எல்லாம் பார்த்தால் இவையெல்லாம் தெரியும். இப்போது தமிழ் மொழியை ஆட்சிமொழியாக உபயோகப் படுத்துவதற்காகத் திருச்சி ஜில்லாவில் பரீட்சை செய்து வந்த காலத்தில் சில அசம் பாவிதங்கள் நடந்து இருக்கின்றன. அவர்கள் செய்து இருப்பது கன்னித்தமிழைக் கற்பழித்தது போலாகும். சாதாரணமாக 'இறிகேஷன்' என்பதற்கு 'நீர்க்கழிப்பு' என்றும், 'மைனர் இறிகேஷன்' என்பதற்குச் 'சிறுநீர்க் கழிப்பு' என்றும் மொழி பெயர்த்து இருக்கிறார்கள். நான் சொல்லுவது என்னவென்றால், இந்த மாதிரியுள்ள சொற்களுக்குச் சரியான பதம் கிடைப்பது வரை இறிகேஷன் போன்ற ஆங்கிலச் சொற்களை வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் என் அபிப்பிராயம். பாரதியார் பாடிய பாட்டுக்களைச் சிலர் சொன்னார்கள். நாம் தமிழின் பெருமையைப் பற்றிச் சொல்வதற்காக இலங்கையில் வைத்து நான் படித்த ஒரு புஸ்தகத்தில் தமிழின் பெருமையைப்பற்றி, தமிழின் இன்பத்தைப்பற்றி எழுதப்பட்ட ஒரு கதையைச்

சொல்லலாம் என்று நினைக்கிறேன். இளங்காதலர்கள் இருவர், இவர்கள் இருவரும் ஒருநாள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் சந்திப்பதாக முடிவு செய்திருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னாலேயே அந்த இளங் காதலி குறிப்பிட்ட இடத்திற்குப் போய்விட்டாள். குறிப்பிட்ட நேரம் மாலை ஐந்து மணிக்கே வந்துவிட்டாள். அவளால் பொறுத்திருக்கமுடியாமல், முன்னாலேயே வந்துவிட்ட அவள் தன்னுடைய காதலனை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறாள். காதலன் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கு வரவில்லை. காதலி இமைகொட்டாமல் காதலனுடைய வரவை எதிர்நோக்கி நின்று, காதலன் வராததினால் அவள் திரும்பி, வீட்டுக்குப் போவதற்காகத் திரும்பும் சமயத்தில் பின்னால் காலடி ஓசையைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். காதலன் வந்து கொண்டிருக்கிறான். காதலன் தன் பக்கத்தில் வந்ததும் காதலி அவனிடம் கேட்டாள், 'ஏ காதலா! (சபையில் சிரிப்பு) சரியான குறிப்பிட்ட சமயத்தில் வருவேன் என்று சொல்லிவிட்டு இப்போது இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கின்றாய், ஏன் இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கிறாய்? ஏன் இவ்வளவு கால தாமதம்' என்று கேட்டாள். அதற்குக் காதலன், 'நான் உன்னை நினைத்துக் கொண்டுதான் வந்து கொண்டிருந்தேன். நான் வந்து கொண்டிருக்கிற பொழுது வழியில் ஒருவர் இன்பத் தமிழில் பிரசங்கம் செய்து கொண்டிருந்தார்; நான் அதைக் கேட்டுக் கொண்டு அங்கேயே மெய்மறந்து நின்று விட்டேன்; அதனால்தான் காலதாமதம் ஆகிவிட்டது' என்று சொல்லுகிறான். இவ்விதமாகக் காதலியை விடவும் காதல் மிகுதி இன்பத் தமிழிடம் இன்பமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தமிழ் மொழியிலே எல்லாம் நடை பெறவேண்டும் என்று எல்லோரும் விரும்புகிறார் கள். தமிழ் மொழியில் ஆட்சி நடந்தால்தான் குடியரசு ஆட்சியின் இலட்சியம் பூர்த்தியானதாக இருக்கும்

என்பதில் சந்தேகமில்லை'' என்றார்.

திரு ஆர்.கிருஷ்ணசாமி நாயுடு:—

தமிழ் மொழி ஆட்சிமொழியாக வரக்கூடிய இந்த மசோதாவை நிறைவேற்றி வைக்கும் ஒரு பாக்கியம் நம் எல்லோருக்கும் கிடைத்திருக்கிறது. இதைக் கண்டு நாம் எல்லோரும் பூரிப்பு அடையும் நன்னாள் இது என்று நினைக்கிறேன். ஏதோ இதைக் கொண்டு வருவதற்குக் கால தாமதம் ஆகிவிட்டது என்றெல்லாம் சொல்லப்பட்டது. முன் நடந்த விஷயங்களை எல்லாம் மறந்துவிட்டு இனிமேல் தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக வேலை செய்ய வேண்டியதுதான் அவசியம். 'போனதற்கு வருந்துதல் வேண்டாம், புன்மை தீர்க்க முயலவும் வாரீர்' என்று பாரதியார் சொல்லியிருக்கிறபடி எல்லோரும் ஒற்றுமையாக இதற்காகப் பாடுபட முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவைக் கொண்டு வந்ததைப்பற்றி வாழ்த்து வதற்காக எனக்கு இங்கு ஒரு பாட்டு தோன்றியது. அதைப் புனைந்து எழுதி வைத்திருக்கிறேன். அந்தப் பாட்டை இந்தச் சபை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன். இந்த மசோதாவைக் குறுகிய காலத் திற்குள் தயாரித்துக் கொண்டு வந்ததற்காக நிதி மந்திரி அவர்களுக்கும் மந்திரிசபைக்கும் என் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டு இந்தப் பாட்டை வாசிக்கிறேன்.

''ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்தாறாம் ஆண்டு டிசம்பர் மாதம்

ஐயைந்தும் இரண்டும்சேர் தேதிதனில் அழகுமிகு சென்னை இராஜ்யத்

தாயின் மொழி தமிழ் தனிலே ஆட்சி செயத் தனிச் சட்டமியற்றும் பாக்கியம்.

தன்னையடைந்து தனிச்சிறப்பு பெற்றிருந்த சட்டசபை இறுதிக்கூட்டம்
போயின நம் குறைகள் எல்லாம் புண்ணியத்தால் தமிழ் அன்னை அரசுவீற்றுப்
புனித சிம்மாசனத்தமர்ந்தாள். பொங்கு முகத்துடன் மக்கள் ஆர்ப்பரிக்க
சேயிழையார் மகிழச் சிறுவர் சிறுமியர் களிக்கச் செம்மையார்ந்த
சோதரரே வாழ்த்துங்கள்! சுதந்திரத்தின் பயன்பெற்றோம், வாழ்க வென்றே!''

திரு இ.எல். இராகவ முதலியார்:—

இந்தச் சட்டசபை ஆரம்பித்த முதன்முதலாக இங்குப் பல மொழி அங்கத்தினர்கள் இருந்தார்கள். ஆந்திர, கேரள, கருநாடக சகோதரர்கள் நம்மை விட்டுப் பிரிந்து போன பிறகு கொஞ்ச காலம் தாமதமானாலும் இந்த மசோதாவைக் கனம் நிதி மந்திரி அவர்கள் இப்பொழுது கொண்டு வந்து சமர்ப்பித்ததற்கு அவருக்கு இந்தத் தமிழ் அகத்தின் சார்பாகவும், தமிழ் நாட்டின் சார்பாகவும், தமிழ் உலகத்தின் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மசோதாவில் பலப் பல குற்றங்களைக் கண்டு பிடிக்கலாம். பல குற்றங்கள் இருக்கத்தான் இருக்கிறது. பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டது போல் இதைக் கொஞ்சம் நிதானமாகத்தான் கொண்டு போக வேண்டும். அப்பொழுதுதான் நாம் பரிபூரணமான இலட்சியத்தை அடைய முடியும். அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுதான் மிக மிக நல்லது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மொழிப் பற்றுதலை மட்டும் கருத்தில் கொண்டு இதைக் கொண்டு வந்து விடக் கூடாது. ஜனநாயக இலட்சியத்தை அடைவதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் நாம்

எடுத்துக் கொள்ள வேண்டும். பாமர மக்கள் அறிந்து கொள்ளக் கூடிய பாஷையாக இருக்க வேண்டும். அதைக்குறிக்கோளாக மனதில் வைத்துக் கொண்டு இதைப் பாராட்டுகிறேன். இந்தச் சட்டசபையில் முதன் முதலில் தமிழில் பேச ஆரம்பித்தோம். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக அதிகமாகப் பேசி வந்து இப்பொழுது கடைசியில் ஆட்சிமொழியாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணத்துடன் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். நாம் இப்பொழுது ஐந்து வருஷத் திட்டம், பத்து வருஷத் திட்டம் என்றெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறோம். அப்படியெல்லாம் இதற்குப் போடாமல் நாம் ஒவ்வொரு வருஷத்திலும் இவ்வளவு தூரம் முன்னேற்றமடைய வேண்டும் என்று ஒரு கொள்கையை நிருணயித்துக் கொண்டு அதன்படி முன்னேற்றமடைந்து வரவேண்டும். அதற்கு ஒரு நிரந்தரமான கமிட்டியைப் போட்டு ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்திருக்கிறோம் என்றெல்லாம் பார்த்து, அதைப் பொது மக்கள் எவ்வளவு தூரம் தெரிந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டால் நாம் எவ்வளவு தூரம் முன்னேற்றம் அடைந்திருக்கிறோம் என்பது நன்றாகத் தெரியும். இப்பொழுது கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாபடி முதன் முதலாகத் தாலுக்கா ஆபீஸ்களில் இதைப் புகுத்தப் போவதாகத் தெரிய வருகிறது. அத்துடன் நிறுத்தாமல் இந்தச் சட்ட சபையிலேயே இனிமேல் யாரும் ஆங்கிலத்திலேயே பேசக் கூடாது என்றும், நடவடிக்கைகள் பூராவும் தமிழிலேயே நடைபெற வேண்டும் என்றும், கொஞ்சம்கூட ஆங்கிலம் இருக்கக் கூடாது என்றும், இங்கே ஆங்கிலச் சுருக்கெழுத்தாளர்கள் இருக்கக் கூடாது என்றும், இவைகளை மனதில் வைத்துக் கொண்டு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

திரு ஏ.ஆர்.ஏ.எம். சொக்கலிங்கம் செட்டியார்:—

நான் தமிழ் சொற்பம் படித்தவன். நன்கு படித்தவன் என்று சொல்ல முடியாது. 45 ஆண்டுகளுக்கு முன்பாக திண்ணைப் பள்ளிக் கூடத்தில் நமது மூதாதையர்கள் வகுத்திருந்த சிறந்த முறையில் சொல்லிக் கொடுக்கப்பட்ட பள்ளிக்கூடத்தில் படித்தவன். அரிச்சுவடி, எண்சுவடி, [illegible]ந்திரிக் கணக்கு, எண் கணக்கு, இலக்கிய நூல், நன்னூல் போன்ற சிறந்த நீதி நூல்களை ஐந்தாறு ஆண்டுகளில் படித்தேன். நமது பழங்காலத்தில் ஏட்டுச்சுவடிகளைப் படித்து வந்த மாணவர்களில் நான் ஒருவன். அதன் பிறகு ஆங்கில அந்நிய ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட்ட சட்ட திட்டங்களின்படி, நாம் ஆங்கிலத்தைப் படித்து அவைகளிலேயே நடவடிக்கைகளை நடத்திக் கொண்டு வந்து இன்றைய தினம் அவர்களைக் காட்டிலும் அந்தப் படிப்பில் உயர்ந்து நிற்கிறோம். இனிமேல்தான் நாம் கொஞ்சம் கொஞ்சமாகத் தாய்ப்பாஷை படிக்க வேண்டும். இன்றைய தினம்தான் நமது தமிழ்த் தாய் அரியாசனம் ஏறி ஆட்சி பீடத்தில் உட்காரப் போகிறாள். இனிமேல்தான் நாம் படிப்படியாக முன்னேற்றமடைய முடியும். நமது நாட்டில் பழம் பெரும் தேச பக்தர்—வ.உ.சி, கல்யாணசுந்தர முதலியார், இராமசாமிப் பெரியார் போன்றவர்கள் அப்பொழுதிலிருந்தே தமிழில் மிகவும் திறமையாகவும் அழகாகவும் பேசித் தமிழ் மக்களைத் தேச உணர்ச்சியில் ஈடுபடுத்தி முன்னேற்றமடையச் செய்தார்கள். இதை நாம் பலர் அறிவோம். இன்றைய தினம் நம் தமிழ்த் தாயை நாம் பீடத்தில் ஏறச் செய்வதற்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதை நாம் மறக்க முடியாது. பல எதிர்க் கட்சி அங்கத்தினர்கள் சொன்னார்கள், பல வருஷங்களுக்கு முன்னதாகவே தமிழ்த் தாய் நமது அரியாசனத்தில் ஏறியிருக்க வேண்டும் என்றும் அந்தக் காலம் கடந்து வருகிறது என்றும் சொன்னார்கள். சமீபத்தில்

தான் நம்மை விட்டுக் கேரள அங்கத்தினர்களும் கருநாடக அங்கத்தினர்கள் பிரிந்து சென்றார்கள். அதற்கு முன்பு கிடைத்தது. இந்தச் சட்டசபையில் நாம் இருந்து கடைசி கூட்டத்தில் இது வரக்கூடிய ஒரு பாக்கியம் நாம் பெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும். தமிழ்த் தயினிடம் சிறந்த பக்தி கொண்ட நமது கனம் நிதி மந்திரி அவர்கள் கடைசியாக இந்தக் கூட்டத்தில் தமிழ்த்தாய் அரியாசனம் ஏறும் ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தது மிகவும் பாராட்டக் கூடிய ஒன்று. இது வரப்போகிற தேர்தலுக்காகக் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்று ஒரு சிலர் சொன்னார்கள். அப்படிச் சொல்வது மக்களை ஏமாற்றுவதான காரியம் என்பது என்னுடைய எண்ணம். முன் சொன்னது போல், இப்பொழுதுதான் அதற்குத் தகுந்த நேரம் வந்தது. உண்மையில் சில ஆண்டுகளுக்கு முன்பாகவே திருச்சியில் தமிழில் நிருவாகம் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்து நடவடிக்கை களையும் நடத்த ஒரு வாய்ப்பு அரசாங்கம் கொடுத்தது. சென்ற சில கூட்டங்களுக்கு முன்பாக நான் இந்தச் சட்டசபையில் சொன்னேன், திருச்சியில் தமிழில் நிருவாகம் நடத்த வேண்டும் என்று ஏற்பாடு செய்து நடவடிக்கைகளையும் நடத்த ஒரு வாய்ப்பு அரசாங்கம் கொடுத்தது. சென்ற சில கூட்டங்களுக்கு முன்பாக நான் இந்தச் சட்டசபையில் சொன்னேன், திருச்சியில் தமிழில் நிருவாகம் சிறந்தமுறையில் விளங்க வேண்டுமானால், அங்கே நிருவாகத்தை ஏற்றுக் கொண்டு நடத்தும் அதிகாரிகள் நல்ல தமிழ் தெரிந்த அதிகாரிகளாக இருக்க வேண்டும் என்று அன்றைய தினமே சொன்னேன். அதைப் போலத்தான் தமிழ் வார்த்தைகளையும் நல்ல முறையில் அமைத்து நடவடிக்கைகளை நல்ல தமிழ் தெரிந்த ஆர்வமுள்ள அதிகாரிகளிடத்திலும், நேர்மையான அதிகாரிகளிடத்திலும், அதைக் கொடுத்து எவ்வளவு சீக்கிரமாக எல்லா நடவடிக்கைகளும் தமிழில் வருவதற்கு

அரசாங்கம் ஏற்பாடு செய்கிறார்களோ அதற்குத் தகுந்தவாறுதான் தமிழ்த் தாய் நல்ல முறையில் அரியாசனம் ஏற முடியும் என்பதைக் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது மாணவர்கள் எல்லோரும் பள்ளி களில் தமிழை அதிக ஆர்வத்தோடு படிக்கிறார்கள்; பேசு கிறார்கள்: ஆனால், வெளியில் அவர்கள் செல்லும் இடங்களில் அவர்கள் ஆங்கிலத்தில் மோகம் கொண்டு அதில் பேசுகிறார்கள். ஏனென்றால், அவர்களை ஆங்கில மோகம் இன்னும் விடவில்லை. வெளியில் அவர்கள் செல்லும்போதும் அவர்கள் லேசாக ஆங்கிலத்தில்தான் பேசுகிறார்கள். அப்படி இல்லாமல் மாணவர்கள் பிடிவாதமாகத் தமிழில்தான் பேச வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் தமிழ் முன்னேற்றமடைவதற்கு ஏதுவாக இருக்கும். நாம் இந்தச் சட்டசபையிலேயே பார்த்திருக்கலாம். ஆந்திரர்கள் இருக்கும்போது, அவர்கள் பிடிவாதமாகத் தெலுங்கிலேயே தான் பேசினார்கள். அவர்கள் பிரிந்து சென்ற பிறகு மலையாள அங்கத்தினர்கள்கூட பிடிவாதமாக மலையாளத்திலேயேதான் பேசி வந்தார்கள். அதைப் போலவே தமிழ் அங்கத்தினர்களும் அப்படிப் பிடிவாதமாகப் பேசவில்லையே என்புதான் என்னுடைய வருத்தம். எனக்குத் தமிழ்தான் தெரியும் என்ற முறையில் நான் சந்தோஷப்பட்ட போதிலும், வருங்காலத்தில் தமிழுக்குள்ள சீறும் சிறப்பையும் வருங்காலச் சந்ததியார்கள் அனுபவிக்கப் போகிறார்கள் என்றார்.

திரு எம். பழனியாண்டி:—

கடந்த அறுபது ஆண்டுக் காலப் போராட்டத் திற்குப் பிறகு இன்றைக்குத் தமிழ் ஆட்சி மொழியாகிறது என்று நமது நிதியமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நமது விடுதலைப் போராட்டக் காலங்களிலே ஆங்கிலத்திலேயே

பேசி, அதைத் தமிழில் மொழிபெயர்த்து வந்தார்கள். காலம் சென்ற கல்கி அவர்கள், ‘திரு வி.க.’ அவர்கள் தான் முதன் முதலாகத் தமிழிலே அழகாகப் பேச முடியும் என்பதை நிரூபித்ததாகச் சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு நம் நாட்டிலே எந்தக் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், மேடைகளிலே பிரசங்கம் செய்யும்பொழுது அழகாகத் தமிழ் பேச முற்பட்டார்கள். அன்று ஆரம்பித்தது இன்று ஆட்சி மொழியாகி விட்டது. மேலும், கனம் நிதி அமைச்சரவர்கள் இந்தப் போராட்டம் முடியவில்லை என்றும், இப்பொழுது பூ மலர்ந்திருக்கிறது என்றும், அது காயாகவும் கனியாகவும் வளர வேண்டுமென்றும் சொன்னார்கள். இந்த ஐந்தாண்டுக் கால முடிவிற்குள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்ததற்காகத் தமிழ் நாட்டு மக்கள் குதூகலமடைவார்கள். ஜனநாயகம் தழைத்தோங்க வேண்டுமானால், மக்களுடைய தாய் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடக்க வேண்டும். தமிழ் மொழியிலேயே எல்லா நடவடிக்கைகளும் நடக்க வேண்டும். தமிழ் மொழி ஆட்சி மொழியாக இருந்து மேலும் மேலும் வளர்ந்து உலகத்திலேயே ஒரு சிறந்த மொழியாக இயங்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறுகிறோம். இதைக் கொண்டு வந்த நமது நிதியமைச்சர் அவர்களுக்கும் களுக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறோம். செந்தமிழ் என்பது ‘முருகன்’ என்று சொல்லுகிறார்கள். அப்பேர்ப்பட்ட தமிழிலே பேசி, பாடி, பண்பாடித் தமிழை வளர்த்த நாடு இது என்றார்.

எம்.பி.பெரியசாமி:—

1938-ஆம் வருடத்தில் Senate House இல் சட்டசபை கூடிற்று. அப்பொழுது அங்கத்தினர்கள் ஆங்கிலத்தில் சேர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஆந்திர, மலையாள, கன்னட தமிழ் சகோதரர்கள் எல்லோரும் சேர்ந்திருந்தார்கள. பிறகு 1952—இல்

சபைக் கூட்டங்கள் இந்தக் கூட்டங்கள் இந்தக் கட்டிடத்தில் நடைபெற்றன. இங்கு வந்த பிறகுதான் எல்லா பாஷைகளிலும் பேசக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டது. இந்தக் கட்டிடம் மிகவும் அதிருஷ்டம் வாய்ந்தது என்பதுதான் என் அபிப்பிராயம். 1953—இல் ஆந்திரர்கள் நம்மை விட்டுப் பிரிந்தார்கள். சென்ற நவம்பர் மாதம் மலையாளிகளும் கன்னடியர்களும் இச்சபையை விட்டுச் சென்றார்கள். ஒன்றாக இருந்தவர்கள் பிரிந்த போதிலும்கூட இந்தக் கட்டிடம் மேன்மை வாய்ந்தது என்பதில் சந்தேகமேயில்லை. தமிழ் ஆட்சி மொழியாகும் மசோதா இந்தக் கட்டிடத்தில்தான் நிறைவேற்றப்படுகிறது. ஆகவே, எக்காரணத்தை முன்னிட்டும், சட்டசபையை எந்தக் கட்டிடத்திற்கும் மாற்றாமல் இங்கேயே தொடர்ச்சியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன் எனறார்.

திரு எஸ்.இராமசாமி நாயுடு:—

இந்த மசோதா காலம் தாழ்ந்து வரவில்லை. சரியான காலத்தில்தான் வந்திருக்கிறது. தமிழன் ஆட்சி செய்யும் நேரத்திலே தமிழ்மொழியிலேயே ஆட்சி புரிய வேண்டுமென்று சொல்லுகிறோம். எடுத்த எடுப்பிலேயே எல்லா இடங்களிலும் தமிழ் புகுத்தப் படவில்லை

என்பதைப் பற்றி நாம் சிறிது கவலைப்படுகிறோம் தமிழன் வீட்டிலே பிறந்த ஒரு குழந்தைக்குக்கூட நன்றாகத் தமிழ் பேசுவதற்கு ஐந்து வருஷகாலமாகிறது. ஆகவே, இயற்கையை அனுசரித்து நாமும் கொஞ்சம் கொஞ்சமாக எல்லோருக்கும் பயிற்சி அளித்து, கீழே தாலுக்கா கட்டத்திலிருந்து மேலே சட்டசபை நடவடிக்கைகள் வரை, எல்லாவற்றையும் தமிழிலேயே நடத்தி ஆட்சி புரிய வேண்டும்.

காங்கிரஸ் சர்க்கார் பல நல்ல காரியங்களை மக்களுக்குத் தகுந்த தருணத்தில் செய்து வந்திருக்கிறார்கள். இப்பொழுது எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்தாற் போல், இன்றைக்குத் தமிழிலேயே ஆட்சி புரிய வேண்டும் என்ற சட்டத்தை இயற்றுகிறோம். இது எல்லோராலும் வரவேற்கக் கூடிய சட்டம். வரவேற்பைத் தவிர வேறு ஒன்றையும் எதிர் பார்க்க முடியாது. ஒரு சட்டம், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டும் என்ற ஆர்வம் எல்லோருக்கும் இருக்கிறது. எல்லோரும் ஒத்துழைத்துத் தமிழை ஆட்சி மொழியாக்கி ஆங்கிலத்தை அறவே மறக்க வேண்டும். ஊர்ப் பெயர், தகப்பனார் பெயர் முதலிய வற்றைக் குறிக்கும் எழுத்துக்கள்கூட ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது. உதாரணமாக ஆங்கிலத்தில் 'S' என்று இருந்தால் தமிழில் 'எஸ்' என்று எழுதுகிறார்கள். நாம் சொல்வதும், செய்வதும் தமிழிலேயே இருக்க வேண்டும். சட்டசபைக்கு வருகிறவர்களும் தமிழ் மொழியிலேயே பேசி எல்லா நடவடிக்கைகளையும் தமிழிலே நடத்த முற்படவேண்டும்.

எல்லோரும் விரும்பக்கூடிய இந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக நமது சர்க்காரைப் பாராட்டு கிறேன். குறிப்பாக, நமது சட்டசபைக் கட்சித் தலைவர் ஸ்ரீ சுப்பிரமணியத்திற்கு நமது பாராட்டுதல் உரித்தானது. தமிழ் வளர்ந்து வந்தது. வளர்ந்த தமிழ் ஓரளவிலேயே நின்று போய்விட்டது. தமிழ் வளரவேண்டும் என்று பாரதியார் ஆசைப்பட்டார். மேலும் மேலும் தமிழை வளர்க்க வேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்க வேண்டும். தமிழைத் தமிழ்த் துறையிலேயே வளர்க்க வேண்டும். இது தவறு என்று சிலர் சொல்லுகிறார்கள்; சொல்லுவார்கள். இன்று கல்லூரிகளில் போதிக்கப் படும் உயர்தரக் கல்வியானது தமிழை வளர்க்கக் கூடிய முறையில் அமையவில்லை என்று நமது கல்வி மந்திரி அவர்கள் சொல்லுகிறார்கள். இப்பொழுது ஆங்கிலத்தில்

B.A., M.A., என்று பட்டம் வழங்குவது போல், தமிழிலேயே பட்டத்தைக் கொடுத்து, தமிழிலேயே தான் எல்லாப் பாடங்களையும் போதிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்ற மொழிகள் எல்லாம் ஆசைப்பட்டுப் படிக்கிற மொழிகளாகவே இருக்க வேண்டும். தமிழ்தான் எல்லாக் கட்டங்களிலும் போதனா மொழியாக இருக்க வேண்டுமென்று ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும் என்றார்.

திரு பி. செல்லதுரை:—

நாட்டின் வரலாற்றிலேயே ஒரு புரட்சிகரமான திட்டம் இது. இந்தப் புனித நன்னாளினை அரசாங்கத்தின் விடுமுறை நாளாக ஆக்குதல் வேண்டுமென்பது எனது கருத்து; இன்று இப்பொழுதே உத்திரவு பிறப்பித்தல் இயலாது. நாளைய தினம் விடுமுறைக்கு ஏற்பாடு செய்தல் நலமாகும். அது மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டிலும் டிசம்பர் மாதம் 27—ஆம் தேதி தமிழன்னைக்கு முடிசூட்டிய விழாவாக விடுமுறை கொண்டாட ஆணையினை அரசாங்கத்தினர் சுற்றறிக்கை மூலமாகப் பிறப்பிக்க வேண்டுமென்று வேண்டிக் கொள்ளுகிறேன் என்றார்.

திரு ஜி. கோவிந்தன்:—

நான் பள்ளிக்கூடத்திலே படிக்காதவன்; பள்ளிக்கூடத்திலே படிக்காதவனாகிய என் போன்றவரும் சட்ட சபை அங்கத்தினராக வந்து பெருமைப்படுவதற்காக காங்கிரஸ் கட்சிக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். சேதுபதி மன்னரவர்கள் தமிழ்நாட்டிலே தமிழை உற்பத்தி பண்ணின பரம்பரையில் வந்தவர்கள். பாண்டித்துரை மன்னர் காலத்திலிருந்தே முத்தமிழ்ச் சங்கத்தின் மூலமாகத் தமிழை வளர்த்த

பரம்பரையைச் சேர்ந்த இராமனாதபுரம் இராசா அவர்கள் இன்று இந்தச் சபையில் அமைச்சராக இருக்கும்போதே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு நிதி அமைச்சர் கனம் திரு சுப்ரமணியம் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தமிழிலே வீரத் தமிழ் என்று சொல்கிறார்கள். தமிழ்ப் பாஷையைத் தவிர வேறு எந்தப் பாஷையிலும்'வீரத் தமிழ்' என்ற வார்த்தை இல்லை. நான் வீட்டிலே பேசுவது தெலுங்கு. தமிழ் பேசுபவர்களைக் காட்டிலும் வேறு பாஷையாகிய தெலுங்கு பேசுபவர்களாகிய நாங்கள் தமிழை நன்றாக உணர்ந்திருக்கிறோம் என்றார்.

திரு ஏ. கோவிந்தசாமி நாயக்கர்:—

தமிழ்மொழி சீர்குலைந்ததற்குக் காரணம் அன்னிய மொழியான ஆங்கிலமும் வடமொழியான இந்தியும் தான் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. நமது தமிழ் மொழி அழிந்திருக்க அன்னிய மொழி ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்துப் பல தலைவர்கள் உயிர் நீத்தார்கள். மறைமலை அடிகள், அருணகிரிநாதர், திரு வி.க. போன்றவர்களை அதற்காக நான் பாராட்டுகிறேன். இது விஷயமாக உயிர் நீத்தவர்களுக்கு என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

கலெக்டருக்குப் பதில் 'தண்டல் நாயகம்' என்ற வார்த்தை தேவையில்லை என்று ஒரு கூட்டத்தில் நமது அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள் கூறினார்கள். தண்டல் நாயகம் என்பது தவறான வார்த்தை அல்ல. தமிழ் மொழியில் அப்பேர்ப்பட்ட வார்த்தைகளை விரும்பி ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். திருச்சியில் தமிழ் ஆட்சிமுறை சரியாக நடைபெறாததின் காரணம் தமிழில் ஆர்வம் இல்லாதவர்களையும் நல்ல தமிழ் தெரியாதவர்களையும்

திருச்சியில் அதிகாரிகளாக நியமித்திருப்பதுதான். தாலுக்கா ஆபீசில் மட்டுமல்ல, கலெக்டர் ஆபீஸ், நீதிமன்றம், சட்டமன்றங்கள் முதலிய எல்லா இடங்களிலும் தமிழ்தான் இடம் பெற வேண்டும். அதற்கான வழிவகை செய்ய வேண்டும் என்றார்.

திரு ப. ஜீவானந்தம்:—

இந்தச் சந்தர்ப்பத்தில் தமிழைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். 'கழகத்தோடு அமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்' என்று ஒரு புலவர் பாடியிருக்கிறார். 'கடல் வரைப்பின் இதன் பெருமை யாவரே கணித்தறிவார்" என்று மற்றொரு புலவர் பாடியிருக்கிறார். கவிச்சக்கரவர்த்தி கம்பன், 'என்றுமுளதென் தமிழ் இயம்பி இசை கொண்டான்' என்று பாடியிருக்கிறார்: இன்னும் அவர் கூறியிருக்கிறார். 'தென் தமிழ் நாட்டகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச் சங்கம் சேர்கிற்றீரேல் என்றும் அவன் உறைவிடமாம்' என்றும் இவ்வாறெல்லாம் தமிழைப் பற்றி வருணிக்கப்பட்டிருக் கிறது. அது மட்டுமல்ல, தமிழைப் பற்றிக் கல்லாடம் கூறுகிறது புறப்பொருள் வெண்பாமாலை கூறுகிறது. 'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோன்றி மூத்தகுடி' இவைகளெல்லாம் நீண்ட நெடுங்காலமாக இருந்து வந்திருக்கக்கூடிய உணர்ச்சி. அதையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும். பழங்காலத்திலேயே செங்குட்டுவன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றி வைத்தான். கரிகால் பெருவளவன் அரியணையில் ஏற்றிவைத்தான். நெடுஞ்செழியன் அரியணையில் ஏற்றி வைத்தான். மத்திய காலத்தில் இராஜராஜ சோழன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றி வைத்தான்.

இன்றைக்குப் புதிதாகக் குழந்தை மாதிரி தமிழ் பிறக்கவில்லை. குழந்தை வளர்ந்து அரியணையில் வீற்றிருப்பதற்கு நடுவில் ஏதோ ஒரு சாபக்கேட்டால் அது

முடியாமல், இப்பொழுது அரியணையில் வீற்றிருக்கப் போகும் சமயந்தான் இது. தேசீய இயக்கத்தில் இது எங்களது நாடு, எங்களது நாட்டை விடுதலை செய்வோம், அன்னிய ஆதிக்கத்திலிருந்து என்று, 'நாம் இருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்; அது நமக்கே உரியதாம் என்பதறிந் தோம் என்று சொன்னதை நாம் இப்பொழுது ஞாபகத் திற்குக் கொண்டு வர வேண்டும். ஞாபகத்துக்குக் கொண்டு வருகிறோம். நமது மொழிதான் நமது அரசாங்க மொழியாக இருக்க வேண்டும். மகாத்மா காந் தி அடிகள் இன்று இங் கிருந்தால், இப்படித் தமிழன் தமிழ் மொழியை அரியணையில் ஏற்றிவிட்டான் என்பதை அறிந்து ஆனந்த பாஷ்பம் அடைவார்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐயம் கிடையாது.

அன்னிய ஆட்சியின் மோகத்தில், அடிமைத்தனத்தில் நாம் நம் மொழியையே மறந்து விட்டோம். நமது நாவால் நம் மொழியில் எந்த வார்த்தையையும் சொல்லலாம், எந்தச் சொற்களையும் கூறலாம் என்பதை நாம் மறந்துவிட்டோம். பரிதாபம். 'உன் மொழி எதையும் சொல்ல வல்லது' என்று உரைத்திருக்கிறார் ஒரு பெரியார். அவர் மட்டுமா சொல்லியிருக்கிறார்? எதையும் சொல்லவல்லது, எதையும் குறிப்பிடவல்லது தமிழ் என்று எடுத்துக் காட்டியிருக்கிறார்கள், வ.வெ.சு.ஐயர், டி.கே.சி., ராஜாஜி, கல்கி போன்றவர்கள். அவர்களைப் போன்ற பெரியார்கள், அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள், தமிழ் மொழி தனியாக, சக்தியாக நிற்க முடியுமென்று. ஏன்? எடுத்துக் காட்டியுமிருக்கிறார்கள். இன்றைய நிலைமையை நாம் எடுத்துக் கொள்வோம். இன்று நாம் காண்பதென்ன? டெல்லி அரசாங்கமாயிருந்தாலும் சரி, சென்னை அரசாங்கமாயிருந்தாலும் சரி Key position என்று சொல்வார்களே, அதாவது முக்கியமான இடங்களில் தமிழர்களே இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுக்கு ஏன் அரசாங்கத்தைத் தமிழில் நடத்த முடியாது. கல்லூரிகளில் எந்த மொழியில் பயிற்சி அளிக்க வேண்டும் என்று சர்வகலாசாலையில் நடந்த கூட்டத்தில் தமிழைக் கல்லூரிகளில் போதனா மொழியாக்க வேண்டுமென்ற கருத்தை நானும் நிதி யமைச்சரவர்களும் வெளியிட்டோம். கம்பனின் கற்பனைத் திறம் வெளிவந்த கன்னித் தமிழில் எந்தப் பொருளாயிருந்தாலும் சரி, அது விஞ்ஞானப் பேர்களாய் இருக்கட்டும் அல்லது தொழில் துறைப் பேர்களா யிருக்கட்டும், அவைகளைக் கன்னித் தமிழிலேயே சொல்ல முடியும். தமிழில் சில பேர்களைச் சொல்ல முடியாதென்று சொல்வது நமது பலஹீனத்திலிருந்தே வருகிறது. நமது அந்தப் பலஹீனம் அழிவதற்குச் சராசரி மூன்று கோடி தமிழனுக்கு இன்றைக்கு ஒரு பெரிய வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இதில் ஜனநாயகம் வெற்றி பெற்றிருக்கிறது. நம் நாட்டின் சட்டசபை சரித்திரத்திலேயே தமிழனது வரலாற்றிலேயே இன்றைக்கு நிகழ்கிற நிகழ்ச்சிக்கு எதுவும் ஈடில்லை எடுப்பில்லை என்று நினைக்கும் போது நாம் பெருமிதப் படத்தான் வேண்டியிருக்கிறது. இது சாதாரண மக்களின் காரியம்.

அடுத்தபடியாக, நான் கூற விரும்புவது என்னவெனில், தமிழ் ஆட்சிமொழியாகி விட்டால், அதற்கு அந்தஸ்து வந்தாகி விட்டது. இந்த அந்தஸ்தில் ஒன்றிரண்டு குறைகளைச் சொல்லலாம். ஒன்று, தமிழ்நாடு நமக்குக் கிடைக்கவில்லையென்பது. இரண்டாவது, கல்லூரிகளில் தமிழ்மொழி போதனா மொழியாக்கப் படவில்லை என்பது. இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாகியிருப்பது உந்தித் தள்ளும், நம் நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற திருப்பெயரைப் பெறுவதற்கு. நமது இந்தச் சர்க்காரே நம் நாட்டின் பெயரைத் தமிழ் நாடு என்று ஆக்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள

வேண்டுமென்பதே எனது அவா. இதையும் சட்டமாகக் கொண்டு வரவேண்டும். இப்பொழுதே, எதிர்க் கட்சியிலிருந்து கேட்டதற்கிணங்கவல்ல இந்த மசோதாவை இங்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதை நான் அறிவேன். ஏற்கனவே,காங்கிரஸ் தரப்பிலும், நிதியமைச்சர் அவர்களுக்கும், எதிர்க் கட்சியினருக்கும், நம் மக்களுக்கும் இருக்கிற உணர்ச்சியே இந்த மசோதா, தமிழை ஆட்சி மொழியாக்கும் இந்த மசோதா இங்கு வருவதற்குக் காரணம். ஆக, தமிழ்மொழி இன்று நமது ஆட்சி மொழியாக விடிந்திருக்கிறது என்பதைப் பார்த்துக் குதூகலம் எய்துகிறோம். சில காரியங்களைக் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ஸ்ரீ இராமமூர்த்தி அவர்கள் சொன்னார்கள். அவைகளைச் சர்க்கார் கவனித்து ஆவன செய்வார்களென்று நம்புகிறேன்.

அடுத்தபடியாக, இன்று தமிழ் மொழி ஆட்சி மொழியாவது, கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாவதற்குள்ள ஒரு படியாகும். இந்த அபிப் பிராயத்தை நிதியமைச்சரவர்கள் கலைச் சொற்கள் அகராதி ஒப்படைப்பு விழாவில் வெளியிட்டார்கள். தமிழ் அறிஞர்களைக் கொண்ட ஒரு குழு அமைத்துக் கலைச்சொற்களும், பல்வேறு துறைகளில் உள்ள சொற் களையும் சேர்த்து ஒரு அகராதி வெளியிட வேண்டும். அங்ஙனம் செய்வார்களேயானால், எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய தமிழை, அதிகாரபூர்வமான தமிழ்ச் சொற்களைக் கொண்டு வந்து தமிழ் ஆட்சிமொழியாவதை நன்கு வளரச் செய்யலாம். ஆக, இன்று தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டு வந்ததில் நான் பெருமைப் படுகிறேன்; மகிழ்ச்சியடைகிறேன். இது நம் எல்லோருக்கும் பெருமை தரும்.

அடுத்தபடியாக நான் சொல்ல விரும்புவது என்னவெனில், வரப்போகும் சட்டசபையில், யார் என்ன

நினைத்தாலும் சரி, நிச்சயமாக நம் நாட்டிற்குத் தமிழ்நாடு என்ற பெயர் நிச்சயமாக வரும். அதோடு அடுத்த சட்ட சபையில், அதன் காலவரை தீருவதற்கு முன்பு, ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழ், கல்லூரிகளில் பயிற்சி மொழியாகி ஆனந்தத் தாண்டவமாடும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது என்று இங்கு எடுத்துக் கூற ஆசைப்படுகிறேன். கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாக, இப்பொழுது தமிழ் ஆட்சி மொழியாகி யிருப்பது முதல் படியாகும். வெகுவிரைவில், ஜில்லா மட்டத்திற்கும், மாகாண மட்டத்திற்கும் இந்த முயற்சி பரவும் என்பதில் எனக்குச் சந்தேகமே கிடையாது. இதை யாரும் தடுக்க முடியாது. நான் அறிவேன், நமது நிதியமைச்சரவர்கள் தமிழைக் கல்லூரிகளில் போதனா மொழியாக்க வேண்டுமென்று விரும்புவதை. தமிழ், கல்லூரிகளில் போதான மொழி யாக்குவதற்கு இப்பொழுது தமிழ் ஆட்சி மொழியாவது அடிகோலும். தமிழ் ஆட்சி மொழியானது மந்திரி அவர்களின் வெற்றியல்ல. இது தமிழனின் ஜனநாயக வெற்றி.

அடுத்தது மொழியைப்பற்றி இரண்டு வார்த்தை கள். 'அல்லி நாப்பண்' என்றால் என்ன? 'அல்' என்றால் இரவு; நாப்பண் என்றால் நள். ஆகவே அல்லி நாப்பண் என்றால் நள்ளிரவு என்று அர்த்தம். அதேபோல் சைக்கிளுக்கு மிதிவண்டி என்று சொல்வார்கள். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் அதைச் 'சமிட்டு வண்டி' என்பார்கள். அங்குச் சமிட்டு என்றால் மிதி; சமிட்டு வண்டி என்றால் சைக்கிள். மாணிக்க நாயக்கர் அவர்கள் 'ஃ' என்ற எழுத்தை எப்படிப் பிரயோகிப்பது என்பதைப்பற்றி அழகாகச் சொல்லியிருக்கிறார். தமிழில் ரேடியம் என்பதற்குக் கதிர், அவிர், சுடர் ஒளி என்றிருக்கிறது. ரேடியம் என்று சொன்னால் புரிகிறது. கதிர் என்றால் அது என்ன என்று அதைப் புரிய வைக்க

வேண்டியிருக்கிறது. நாம் இத்தகைய சொற்களை உபயோகப்படுத்திக் கொண்டே வந்தால் நமக்குச் சீக்கிரம் புரிந்துவிடும். எப்படி மலை உச்சியிலிருந்து விழும் கரடுமுரடான கற்பாறைகள் உருண்டு உருண்டு, அடிபட்டு அடிபட்டுக் கூழாங்கற்கள் ஆகிறதோ, அதேபோல் நம் மொழிச் சொற்களும் மக்களிடையே அடிபட்டு அடிபட்டுப் பழக்கப்பட்டு எளிதில் யாதொரு கஷ்டமுமின்றிப் புரிந்து கொள்ள முடியும் என்பதில் எனக்கு ஐயமே கிடையாது. உலக மொழிகள் எல்லாவற்றினும் கூடத் தமிழ் உறவாடி இருக்கிறது. அவைகளிலிருந்து சொற்கள் வாங்கியும் இருக்கிறது. கொடுத்துமிருக்கிறது. (bell) .

முடித்துக் கொள்கிறேன். தமிழ் மொழி ஆட்சி மொழியாக ஆவதின் மூலம், நாம் எந்த அதிகாரிகளிடமும் நாம் நினைப்பதைச் சொல்ல முடியும். எந்தக் காரியத்தையும் சொல்லலாம் என்றார்.

கல்வியமைச்சர் திரு சி. சுப்ரமணியம்:—

இந்த விவாதத்தில் எல்லாக் கட்சித் தரப்பினர்களும் பேசினார்கள். எல்லாக் கட்சியிலுமுள்ள வீரத் தமிழர்கள் பேசினார்கள் இதிலே. பல புலவர்கள் பேசினார்கள் இதிலே; தமிழ் அன்பர்கள் பேசினார்கள் இதிலே; தமிழ் வளர்த்த மன்னர்களின் பரம்பரையிலே உதித்தவர்கள் பேசினார்கள் இதிலே. இதையெல்லாம் கேட்டு உணர்ச்சி மேலிட்டு இருக்கின்றேன். ஆகையினால், இந்தச் சபையிலுள்ள அனைவரும் ஒன்றுபட்டு ஏகோபித்து இதற்குக் கொடுத்த ஆதரவு ஏதோ இந்த மசோதாவுக்குக் கொடுத்த ஆதரவு அல்ல; தமிழ் அன்னைக்குக் கொடுத்த ஆதரவு; தமிழ் அன்னைக்குச் செய்யக்கூடிய சேவையாக எடுத்துக் கொள்கிறேன்.

இந்தச் சமயத்தில் சில வாதங்கள் இங்குச் சொல்லப்பட்டது. அதற்கு ஓரளவு பதில் சொல்லுவது அவசியம் என்று கருதுகிறேன். தமிழ்ச் சொற்களை எப்படி அமைக்க வேண்டும் என்பதில் ஒரு சில அபிப்பிராய பேதங்கள் காணப்பட்டன. இந்த அபிப்பிராய பேதங்களை நாம் கவனித்துக் கொண்டிருந்தால் நாம் முன்னேற்றம் அடையமுடியாது. ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் சொன்னது மாதிரி கரடு முரடான கல்லை உருட்டி விட்டால் அது எப்படிக் கடைசியில் நல்ல உருளைக் கல்லாக மாறிவிடுமோ, அதுபோல் பழக்கவழக்கத்தில் இது வந்துவிடும் என்றுதான் நான் நினைக்கிறேன். சில புதிய சொற்கள் பழக்கத்தில் இல்லாமல் இருந்தாலும் சரி, மற்ற மொழிகளிலிருந்து எடுக்கப்பட்டிருந்தாலும் சரி, அதை எல்லாம் ஜீரணித்துத் தனதாக்கக்கூடிய சக்தி தமிழுக்கு இருக்கிறது. தமிழ் மொழியை நான் ஒரு நோயாளியாகக் கருதவில்லை. உணவை உட்கொள்ளாத படி அஜீர்ணமுள்ள நோயாளியைப் போன்றதல்ல தமிழ் மொழி. தமிழ் மொழி சக்தி உடையது. பிறமொழிச் சொற்கள் கலப்பதினால் தமிழ் மொழி சிதைந்து போகும், தமிழ் வளர்ச்சி குறைந்துவிடும், தமிழ்மொழியினுடைய தரம் பாதிக்கப்பட்டு விடும் என்றெல்லாம் யாராவது சொல்லுவதனால் அது தமிழ் மொழியினுடைய சக்தியின் மேல் நம்பிக்கை இல்லாமல் சொல்லுவது என்பதுதான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம்.

அடுத்தபடியாகத் தமிழ் மொழி ஆட்சி மொழியாக வருவதற்குப் பாடுபட்ட எல்லாப் பெரியார் களுக்கும் நம்முடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள நாம் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழ் மொழி ஆட்சி மொழியாக வரவேண்டும் என்பது இன்று ஏற்பட்டது அல்ல. சுதந்திரப் போராட்டக் காலத் திலிருந்தே இது ஏற்பட்டிருக்கிறது. இதை ஸ்ரீ ஜீவானந்தம் அவர்கள் வெகு அழகாக எடுத்துக்கூறினார்கள். இதுவரை

அது நடக்காமல் இருந்தது. மத்தியிலே ஏற்பட்ட சாபக்கேடுதான் இது. இன்று அந்தச் சாபக்கேடு நீங்கி விமோசனம் கிடைத்திருக்கிறது. இதற்காக வேலை செய்த அத்தனைப் பெரியார்களுக்கும் நாம் இந்தச் சபையின் மூலம் நன்றியைச் செலுத்துகிறோம்.

கனம் அங்கத்தினர் ஸ்ரீ இரத்தின கவுண்டர் அவர்கள் பேசும் போது, ஆங்கிலத்தை விட்டுவிட்டுத் தமிழிலே பேசவேண்டும் என்ற உணர்ச்சியை அண்ணா அவர்கள் தான் ஊட்டினார்கள் என்று சொன்னார்கள். அதை யார் ஊட்டினாலும் சரி, அதைப்பற்றி இப்போது விவாதிக்க வேண்டாம். ஆனால், ஆங்கிலமே பொதுமொழியாக இருக்க வேண்டும் என்று சம்மதித்து இதே அண்ணாதான் ஒரு அறிக்கையில் கையெழுத்திட்டிருக்கிறார்கள். அதை ஸ்ரீ இரத்தின கவுண்டர் அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன். நாம் எல்லோரும் ஒன்றுபட்ட மனதுடன் ஒற்றுமை உணர்சசியுடன் நின்று தமிழை மேலும் வளர்ப்பதற்கும் தமிழ் எல்லாத் துறைகளிலும் வழங்கி வருவதற்கும் எல்லோரும் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இதிலே பல திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஒவ்வொரு திருத்தத்திலும் சொல்லப்படுகிற காரியங்கள் எல்லாம் ஒப்புக் கொள்ளக்கூடிய காரியங்கள்தான். ஆனால், இவை யெல்லாம் திருத்தங்களாகக் கொண்டு வந்து அமைக்க வேண்டிய அவசியமில்லை என்று நான் நினைக்கிறேன். முக்கியமாகக் கனம் அங்கத்தினர் ஸ்ரீ விநாயகம் அவர்கள் கொஞ்சம் ஆவேசம் உள்ளவர். அவர்கள் சொல்லுவது, இதை நடைமுறையில் கொண்டு வருவதற்கு ஒரு காலவரம்பு கட்ட வேண்டும் என்பது. இந்தக் காலவரம்பை நிருணயிக்கும் விஷயத்தில் ஒவ்வொரு படிக்கும் எந்தெந்தக் காலவரம்பு இருக்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் இனியும் ஆலோசனை செய்ய வேண்டியிருக்கிறது. ஆனால், நான்

கனம் அங்கத்தினர் அவர்களுக்கு ஓர் உறுதி மொழி மாத்திரம் கொடுக்கிறேன். என்னவென்றால், இந்த மந்திரிசபை கலைவதற்கு முன்பாகவே இதற்கு ஒரு திட்டமான கால வரம்பு முடிவைக் கொண்டு வருவதற்கு என்னால் இயன்ற அளவு முயற்சி செய்கிறேன். ஆகையினால், இந்தத் திருத்தங்களை எல்லாம் வற்புறுத்த வேண்டிய அவசியமில்லை என்று சொல்லிக் கொள் கிறேன். ஆகையினால், இதிலுள்ள எல்லா விதி களையும் எந்தவித மான திருத்தங்களும் இல்லாமல் இதை அப்படியே ஒப்புக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். நான் முன்பு சொன்னது போல், நாம் எவ்வளவு ஆர்வம் கொண்டு ஒத்துழைக்கிறோமோ அந்த அளவுக்கு முன்னேற முடியும். வெறும் சட்டத்தைக் கொண்டு மாத்திரம் முன்னேற முடியாது. இந்த முயற்சியில் எல்லோரும் ஆர்வத்தோடு உழைக்க வேண்டும். இந்த முயற்சி குறைவு அடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அது நம்முடைய கடமை. ஆகவே, இந்த விஷயத்தில் என்னைப் பொறுத்தவரையில் எந்தவிதமான ஆர்வக் குறைவோ முயற்சியின்மையோ இருக்காது என்ற உறுதியை இந்தச் சபை முன்பும் தமிழ் நாட்டு மக்களின் முன்பும் சொல்ல முடியும். இந்த உறுதியுடன் இந்தச் சபை முன் இருக்கக் கூடிய தீர்மானத்தை அங்கத் தினர்கள் எல்லோரும் ஒரே மனதாக ஏற்றுக் கொண்டு இந்த மசோதாவை நிறைவேற்றி வைக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன் என்றார்.

திரு எம். கல்யாணசுந்தரம்:—

"இதர சட்டங்களைப் போல் நான் இதை நினைக்கவில்லை. தமிழ் நாட்டிலுள்ள மூன்று கோடி மக்களுடைய அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய ஒரு சட்டத்தை நாம் இறுதியாக நிறைவேற்றிவிட்டு இந்தச் சபையைக் கலைக்கக்கூடிய கட்டத்தில் இருக்கிறோம்.

இது, நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய விஷயம். நான் இந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்கிறேன். அதனால் தான் இந்த மசோதாவிற்கு நான் திருத் தங்கள் கொடுக்கவில்லை. அதனால் இந்த மசோதாவை முழுமனதுடன் வரவேற்கிறேன். அதனால் இந்த மசோதா திருத்தங்கள் கொடுக்கமுடியாத நிலையில் இருக்கிறது என்று அர்த்தமல்ல. திருத்தங்கள் கொடுக்க வேண்டுமானால் எவ்வளவோ திருத்தங்கள் கொடுத் திருக்கலாம். அப்படிக் கொடுக்க வேண்டும் என்று நான் விரும்பவில்லை. இந்தச் சட்டம் ஏகமனதாக நிறைவேற வேண்டும் என்ற காரணத்தால் திருத்தங்கள் கொடுக்கப் பட்டாலும் அவைகளை வாபஸ் வாங்கிக் கொண்டு விட்டோம்.

அதே சமயத்தில் ஒரு விஷயத்தை மட்டும் கனம் மந்திரிக்கு எடுத்துக்காட்ட விரும்புகிறேன். இந்தச் சட்டத்தின் மூலம் சர்க்கார் எடுத்துக் கொள்ளக் கூடிய அதிகாரம் எல்லாம் தமிழ் ஆட்சி மொழி யாகிவிடும் என்று பிரகடனப்படுத்துவதற்குத்தான். அப்படிப் பிரகடனப்படுத்துவது வேறு விஷயம். இனிமேல் எல்லாவற்றையும் சர்க்கார் அவர்களுடைய நிருவாக உத்தரவுகள் மூலம் வெளியிடவேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அதில் குறைபாடுகள் இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. வேண்டிய உத்தரவுகளைக் கொண்டு வருவதற்குக் கனம் மந்திரி அவர்கள் இருக்கிறார்கள். கனம் நிதி மந்திரி அவர்களும் அதற்கு வேண்டிய திட்டவட்டமான உறுதிமொழியும் கொடுத்திருக்கிறார். அநேகமாக இந்தச் சபை கலைந்தவுடன் இவர் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்வார் என்று நினைக்கிறேன். அந்த நம்பிக்கையுடன் இந்தச் சட்டத்தை ஏற்றுக் கொள்ள நான் தயாராகஇருக்கிறேன். அதோடு,

இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டியது. இந்த மசோதா ஆறு பிரிவுகள் கொண்டது. இன்னும் ஒரு பிரிவையும் சேர்த்திருந்தால், அதை எல்லோரும் வரவேற்றிருப்பார்கள். தமிழ் தான் நம் சர்வகலா சாலைகளில் போதனா மொழி ஆக இருக்கவேண்டும் என்ற பிரிவைச் சேர்த்திருந்தால், நாம் எல்லோரும் இரு கரங்களையும் கூப்பி இந்த மசோதாவை வரவேற்கக் கூடிய நிலையிலிருந்திருப்போம். இந்த விஷயத்தில் சர்க்கார் நிதானமாகப் போகவேண்டுமென்று விரும்பினால், அதைப்பற்றி ஆட்சேபணையில்லை. எல்லோருடைய ஒத்துழைப்பையும் பெறவேண்டுமென்பதுதான் நோக்கம். காலக்கிரமத்தில் அதற்கு ஒரு சந்தர்ப்பம் வந்தே தீரும். அப்பொழுது ஓர் எதிர்ப்பும் இருக்கமுடியாது. இன்றைக்கு மாறுபட்ட கருத்து உடைய சர்வ கலாசாலை நிருவாகிகளும்கூட, தங்கள் கருத்தைமாற்றிக்கொண்டு, தமிழைப் போதனா மொழியாக்கும் காலம் வெகு சீக்கிரத்திலேயே வரவிருக்கிறது என்று சொல்லிக் கொண்டு இந்த மசோதாவை வெகு சந்தோஷத்துடன் ஆதரிப்பதோடு கூட, இதைக் கொண்டு வந்ததற்காகச் சர்க்காரைப் பாராட்டுகிறேன்" என்றார்.

திரு ஆர்.வி.சுவாமிநாதன்:—

சட்டசபை நடவடிக்கைகள் முதல் தாலுக்கா ஆபீஸ் நிருவாகம் வரை எல்லா நடவடிக்கைகளும் தமிழிலே நடந்தால்தான் பாமர மக்கள் கஷ்டமில்லாமல் புரிந்து கொள்ள முடியுமென்றுதான் இந்தச் சட்டத்தைச் செய்திருக்கிறோம். இடைக்காலத்தில் இருக்கக் கூடிய கஷ்டங்களைப் பல அங்கத்தினர்கள் விவாதத்தின் போது எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக நமது மராமத்து மந்திரி அவர்கள் சில விஷயங்களை நன்றாக விளக்கிச் சொன்னார்கள். தமிழ் வளரவேண்டும் என்று

சொல்பவர் சிலர் கஷ்டமான, பல் உடைந்து போகக்கூடிய பதங்களை உபயோகிக்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்கிறார்கள். அந்த மாதிரி சொற்களைத் தமிழில் புகுத்தி, பாமர மக்கள் புரியாத அளவுக்கு நாம் கொண்டுபோய் விடக்கூடாது. நிருவாகத்தில் உபயோகிக்கப்படும் சொற்கள் சுலபமாக எல்லோராலும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது அரசாங்கத்திலிருந்து வரும் சில அறிக்கைகளையும் நோட்டீஸ்களையும் பார்த்தால், ஒருவராலும் புரிந்து கொள்ள முடியாத நிலையில்தானிருக்கிறது. காரணம் என்ன என்றால், மொழி பெயர்ப்பாளர்கள் சில சொற்களைத் தமிழில் ஆக்கும்போது, மிகக் கடுமையான சொற்களை உபயோகிக்கிறார்கள். இதனால் பாமர மக்கள் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆகவே, இப்பொழுது ஆங்கிலத்திலுள்ள சொற்களைத் தமிழில் ஆக்கும்போது ஏற்கனவே நிருவாகத்தில் உபயோகிக்கப்படும் சில சொற்களையும் தமிழில் ஆக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்மாதிரி தமிழ்ப் படுத்தும்போது, சில சொற்கள் ஆங்கிலச் சொற்களே என்று அவைகளைத் தள்ளிவிடக் கூடாது என்றார்.

திரு சி. சுப்ரமணியம்:—

சட்டசபையின் சார்பாக, தமிழ் மக்கள் சார்பாக, இந்த மசோதாவைத் தமிழ் அன்னையின்மலரடியில் சமர்ப்பிக்கிறேன். தமிழனாய்ப் பிறந்த பிறவிப்பயனை நான் பெற்று விட்டதாகவே கருதுகிறேன். இந்த மசோதாவை இங்குப் பிரேரேபித்து, இதைச் சட்டமாக்குவதற்கு நான் ஒரு கருவியாக அமைந்ததைப் பற்றி உண்மையிலேயே

பெருமைப்படுகிறேன். அந்தப் பெருமை எனக்கு ஏற்பட்டது என்னுடைய தகுதியினால் அல்ல என்பதை உணருகிறேன். ஏதோ நான் செய்த தவப்பயன் கூட அல்ல. என்னுடைய முன்னோர்கள் செய்த தவப்பயன் காரணமாக இந்தப் பெருமை எனக்குக் கிடைத்தது என்று கருதுகிறேன். என்னைவிட தகுதி பெற்றவர்கள், தமிழுக்காக உழைத்தவர்கள், தமிழிலேயே பெரும் பாண்டித்தியம் பெற்றவர்கள் எல்லாம் இருக்க, எனக்கு இந்தப் பாக்கியம் கிடைத்தது தனிப்பெருமை. அதைப் பற்றி உண்மையிலேயே எண்ணி எண்ணி மகிழ்கிறேன். இன்றைக்கு உயிர்நீத்த தமிழ்ப் பெரியார்களின் ஆவிகள் எல்லாம் பார்க்கக்கூடிய சக்தி பெற்றிருக்குமேயானால், இன்று நமது சட்ட சபையின் மேலிருந்து ஆரவாரம் செய்து கொண்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அப்பேர்ப்பட்ட ஒரு நல்ல நிகழ்ச்சியிலே பங்கு எடுத்துக் கொள்ளக் கூடிய ஒரு வாய்ப்பு கிடைத்தது நம் மெல்லோருக்கும் பெருமகிழ்ச்சியைக் கொடுக்கிறது. ஆகையால், இன்று பாரதியார் சொன்ன வார்த்தைகளுடன் என்னுடைய உரையையும், சட்டசபையின் அலுவலையும் முடித்துக்கொள்கிறேன். பாரதியார், 'வாழ்க செந்தமிழ்' என்றார்; 'வாழ்க நற்றமிழர்' என்றார்; அந்த வாழ்வு ஏதோ பிரிந்த வாழ்வு என்று அவர் கருதவில்லை. 'வாழிய பாரத மணித்திரு நாடு' என்று சொன்னார். அப்பேர்ப்பட்ட வாழ்வு எங்கெங்கும் ஓங்கவேண்டும். வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!! (பலத்த கரகோஷம்) என்றார்.

ஸ்ரீ பி. இராமமூர்த்தியும் மற்றும் அவருடன் சேர்ந்து எல்லா அங்கத்தினர்களும் 'வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! வாழ்க தமிழ்!!!' என்று முழங்க, பலத்த ஆரவாரத்துக் கிடையே மசோதா ஏகமனதாக நிறைவேறியது.

# இணைப்புகள்

'பெண்களுக்கு வாக்குரிமை' என்ற தலைப்பில் நடந்த விவாதத்தின் போது, 1921—ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி, திரு பி.சி.முத்து செட்டியார் ஆற்றிய உரை:—

ஸ்திரீகளினுடைய சுதந்திர உரிமைகளைப் பற்றிய சமாச்சாரம் இந்தச் சபையில் விஜயம் செய்திருக்கிறது. முந்திய காலங்களில் பெரியவாள் எல்லாம் ஸ்திரீகளுக்கு ஒரு சுதந்திரமும் கொடுக்கக்கூடாதென்று ஏற்படுத்திய நியாயங்கள் அநேக காரியங்களை உத்தேசித்து வைத் திருந்தார்கள். இதைப்பற்றி நான்றாய் யோசித்தேன். காலத்துக்குத் தகுந்தபடி வந்ததைப்பற்றி ஆச்சரியத்துக் கிடமில்லை. திருஷ்டாந்தரம் பார்க்கலாம். எத்தனையோ நூற்றாண்டுகளாகக் கருநாடக இராஜாக்களும் சரியே, நம் துரைத்தனத்தாரும் சரியே, இந்த ஏற்பாடு கொண்டு வந்தார்களா? அவர்கள் புத்திசாலிகள் இல்லையா? அவர்கள் உலகத்தை எப்படி ஆண்டு வந்தார்கள் என் பதிலிருந்தே அவர்கள் புத்திசாலித்தனம் தெரிய வில்லையா? அவர்களுக்கு மடந்தைகள் என்றும் பேதையர்கள் என்றும் பெயர் ஏற்பட்டு 5 குணங்களையும் குறித்திருக்கிறார்கள். அதாவது மடமை, அச்சம், நாணம் என்ற பல திருநாமங்களையும் பெற்றவர்கள். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் குடும்ப விஷயத்தில் Happiness உண்டாகும்படி முன்னமேயே அவர்கள் வேலைகளையும் விவஸ்தை செய்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்தூங்கி முன் எழுபவள் என்றும் பாராட்டியிருக்கிறார்கள். அவர்களுக்கு அதிக நேரம் ஒழிவாய் இல்லை. அதற்காகத் ''தெய்வந்தொழாஅள் கொழுநனைத் தொழுதெழுவாள் ,பெய்யெனப் பெய்யும் மழை'' என்றும் வள்ளுவர் குறள் ஏற்பட்டிருக்கிறது. தன் நாயகனைப் பூஜிக்கவும் கிருஹ கிருத்தியத்துக்கு

வேண்டிய சொற்ப வித்தையை (அதாவது moral and religious) வேண்டுமென்று முன் கர்த்தாக்களால் ஏற்பட்டிருக்கிறது. இயற்கையிலேயே ஸ்திரீகளுக்குப் புத்திசாதுர்யம் உண்டானபடியால் படிப்பைக் குறைத்து வைத்தது நியாயமென்றுதான் நான் நினைக்கிறேன். இது மட்டுமல்ல காரணம். Zenana ஆயும் சில சமஸ் தானங்களில் குழந்தை பிறக்கும் முன்னே Zenana ஆயும் இருந்தது. இதனால் ஸ்திரீகளுக்குப் பாவம் அதிகம் கிடையாது. ஆயுசு ஜாஸ்தி. அவர்கள் மஹாலட்சுமி யினுடைய அவதாரமானதினால் எல்லாச் சுபமும் புருஷார்த்தமும் அந்த அம்மையார் மூலமாகத்தான் பதிகள் அடைகிறார்கள் என்றும், அதினால் அவர்களைப் புருஷர்கள் புஷ்பத்துக்குச் சமானமாகக் கொண்டாடத் தக்கதாக நீண்ட காலமாய் இது அனுபோகத்திலும் இருக்கின்றது. ஷட்கர்மம் சொல்லப்பட்டிருக்கிறது ஸ்திரீகளுக்கு. முக்கியமாகப் பதிக்குத் தாயாகவும், ஸ்நேகிதனாகவும் இருக்கும்படியான சந்தர்ப்பமும் நேர்ந்திருக்கிறது. கொஞ்சப் படிப்பு சரி அல்லதான். 'Little knowledge is a dangerous thing' என்று இங்கிலீஷில் சொல்லப்படுகிறது. இக்காலத் தர்மமானது விபரீதமாய் மிகுந்த அறிவாளிகளாய் எவ்வளவோ ஸ்திரீகள் வந்து கொண்டு இருக்கிறார்கள். ஒரே அளவான படிப் பாளிகளுக்குள் (of equal qualification ) ஸ்திரீகள் ஒரு மாத்திரை ஜாஸ்தி புத்திசாலியாய்த்தான் இருக்கிறார்கள். அவர்கள் கைத்தொழில் மெச்சத் தக்கதாய்த்தான் இருக்கிறது. Club, society தேகப் பயிற்சி இவைகளெல்லாம் ஏற்பட்டுவிட்டது. விசேஷ படிப்பினால் அவர்களுக்கு மேற்சொல்லிய ஒருவித பயமும் வேண்டியதில்லை. படிப்பினால் அறிவு தெளிவடைகிறது. தெளிவடைந்தால் நல்ல பலனைத்தான் கொடுக்க வேண்டும். அதுதான் கற்றதின் பிரயோஜனம். புருஷர்களிலும் கற்றவர்களில் மூடர்களாயிருக்

கிறார்கள். மகாலட்சுமியைப் போல் இருக்கும் படியான மாதுசிரோன்மணிகளும் ஒவ்வொரு ஸ்தானங்களிலும் சுதந்திரம் பெற முன் வந்தது மங்களகரமாய்த்தானிருக் கிறது. புராணங்களில் ஸ்திரீ தேவதைகள் சாரத்தியம், யுத்தம் முதலானவைகள் செய்யவில்லையா? எப்பொழுதும் வராதவர்கள் ஒரு போதும் வரார். Local Board, Municipality —களில் வோட் கொடுக்கிற சுதந்திரம் நடைபெற்று வருகிறது. ஆனால் (qualification) விஷயத்தில் தோது இல்லாமலிருக்கிறது. கலியாணக் காகிதம் மாதிரி குடும்பசகிதம் வந்து ஓட்டுக் கொடுங்கள் என்று எழுதத்தான் வேண்டும். ஆனால், ஒன்றுக்குப் பயப்படுகிறேன். ஜனங்கள் எப்படி அவர்களைப் போய் (வீட்டுக்குள் இருக்கிறவர்களை) வோட் கேட்பது. இங்கிலாண்டில் வேலைக்காரர்களுக்குக் கிராக்கி வந்தது போல் இங்கு வராமல் இருக்குமா? சிசுக்களுக்கு அமிர்தம் கொடுத்து வளர்க்க டைம் (நேரம்) கிடைக்காது. அது சிசுக்களின் அதிஷ்டக் குறைவுதான். ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் சொல் வித்தியாசம் இருப்பினும் அவர்களுள் வசிக்கிற பரமாத்மா ஒன்றே. ஆதலால், நாம் அவர்களை வித்யாசம் செய்யாது அவர்களுக்கும் சோஷலாயிருக்க, புருஷர்கள் அனுமதி கொடுக்க வேண்டியதுதான். மேலும், இப்பொழுதுள்ள சீமாட்டி களை வைத்து முந்திய பெரியவர்கள் ஏற்பாடு செய்யாததினால், அந்த ஏற்பாடு இவர்களைக் கட்டுப்படுத்தாது. ஸ்திரீகளுக்கு ஓட் சுதந்திரம் கொடுப்ப தினால் பாதகமில்லை என்றுதான் தோன்றுகிறது. ஆகையினால் சுதந்திரம் விரும்புகிறவர்களுக்குக் கொடுக்கத்தான் வேண்டும்'' என்றார்.

வேல்ஸ் இளவரசரை வரவேற்று 1921—ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 6ம் தேதி, சட்டமன்றத்தில் திரு எம்.சி. மதுரைப் பிள்ளை ஆற்றிய தமிழ் உரை:—

இந்தப் பரதகண்டம் என்னும் இந்தியாவில் தமிழ்க் கால அளவுப்படி கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம் என்று மூன்று யுகங்களாய் கலியுகம் பிறந்து 5,023 வருஷங்கள் ஆகின்றன. இந்த இந்தியாவைப் பூர்வகாலத்தில் மனு நெறி தவறாமல் தசரதர் என்ற சக்ரவர்த்தி ஆண்டு வந்தார். அவருக்கு ஒப்பாகத் தற்காலம் நமது நாட்டை ஐந்தாம் ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்கள் பரிபாலனம் செய்கிறார்கள். மேலே சொன்ன தசரத சக்ரவர்த்திக்கு வல்லமை, ஈகை, தயவு, பொறுமை, சத்யம் முதலான சகல நற்குணங்களும் நிறைந்த ஸ்ரீ இராமர் என்ற மூத்த குமாரர் ஒருவர் இருந்தார். இவர் பிதாவின் கட்டளையை மீறாதவர். இவருக்கு ஒப்பாக (His Royal Highness the Prince of Wales) என்ற இளவரசர் தற்காலம் தமது பிதாவாகிய ஜார்ஜ் சக்ரவர்த்தி அவர்களின் கட்டளைப்படி இந்தியாவை விஜயம் செய்யப் போகிறபடியால், சக்ரவர்த்தித் திருமகனாகிய அவர்களை நாம் எல்லோரும் எதிர்கொண்டு வந்தனம் செய்து முழுமனதோடும், அன்போடும் வரவேற்று அவர்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்த்து மறுபடி சமுத் திரங்களைக் கடந்து ஆங்கில நாட்டிலிருக்கும் தமது மாதா பிதாக்களைச் சேருகிறவரையிலும் அவர்களுக்கு எப் பொழுதும் எல்லாவிடத்தும் எவ்விதமான கஷ்டமும் உண்டாகாதபடி அவர்களைக் காப்பாற்றி அவர்களுக்கு சர்வ க்ஷேமமும், மங்களமும் பெருகும்பொருட்டு நாம் எல்லோரும் ஒருமித்துக் கடவுளைப் பிரார்த்தித்து அவர்களுக்கு மங்களாசாசனம் செய்யும்படி இந்த மகா சபையிலுள்ள கனவான்களை நான் வேண்டிக் கொள்ளு கிறேன். சபையிலுள்ள யாவருக்கும் வந்தனம் செய்கிறேன் என்றார்.

*1927—28—ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையின்மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு, 1927—ஆம் ஆண்டு*

மார்ச் மாதம் 4—ஆம் தேதி திரு கே.கிருஷ்ணசாமி நாயக்கர் ஆற்றிய உரை:—

அக்கிராசனரவர்களே! கனம் பொருந்திய Finance மெம்பர் அவர்கள் கொடுத்த வரவு செலவுத் திட்டம் மிகவும் அதிருப்திகரமாயிருக்கிறதென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சட்டசபைத் தேர்தல் சமீபத்திலேயே நடந்ததாகையால், கிராமவாசிகள் வெளியிட்ட குறைகளும், கவர்ன்மெண்டைப் பற்றியும் சட்டசபைகளைப் பற்றியும் அவர்கள் என்ன சொல்லிக் கொள்கிறார்கள் என்பதும் அங்கத்தினர்கள் ஞாபகத் திலிருக்கலாம். ஓட்டுக்காக அபேட்சகர்கள் போனபோது பிரதி கிராமங்களிலும் ஜனங்கள், 'ஓட்டுக் கொடுப் பதில் என்ன பிரயோஜனம்! எங்கள் பேரிலுள்ள வரிச் சுமை அதிகப்படுகிறதேயல்லாமல் எவர் சட்டசபைக்குப் போன போதிலும் எங்களுக்கு ஒரு நன்மையுமில்லை,' என்று சொன்னார்கள். இவ்விதம் ஜனங்கள் நினைப் பதற்குத் தகுந்த நியாயங்கள் இருக்கின்றது என்பதை ஒருவரும் மறுக்க முடியாது. சென்ற ஆறு வருடங்களாய் புதிய சீர்திருத் தங்களால் கவர்ன்மெண்டின் சிலவு ஏராளமாய் அதிகப்பட்டிருக்கிறதே தவிர, ஜனங்களின் சௌகர்யங்களில் ஒரு அனுகூலமும் உண்டாகவில்லை. என்னுடைய ஜில்லாவில் அனேக கிராமங்களில் போக்குவரத்துக்குச் சரியான பாதை களில்லாமலும், குடிக்க ஜல வசதியில்லாமலும் ஜனங்கள் கஷ்டப்படுகின்றார்கள் என்றால், சீர்திருத்தங்கள் யாருக்காக ஏற்பட்டனவென்று நான் கேட்கிறேன். இந்த முக்கிய சௌகர்யங்கள்கூட கவர்ன்மெண்டு சரிவர செய்ய முடியாவிட்டால், கவர்ன்மெண்டும் சட்டசபைகளும் எதற்காகவென்று நான் கேட்கிறேன். ஒரு கிராமத் திலுள்ள ஜனங்கள் ஒரு பாதை போட வேண்டுமென்றோ, ஒரு ஆஸ்பத்திரி வேண்டுமென்றோ, தாலுக்கா

போர்டாரைக் கேட்டால், அவர்கள் தங்களிடம் பணமில்லை என்கிறார்கள். கவர்ன்மெண்டை ஸ்தல ஸ்தானபனங்களுக்குப் பண உதவி செய்யும்படிக் கேட்டாலோ தங்களிடம் பணமில்லை என்கிறார்கள். ஆனால, ஸ்தலஸ்தாபனங்களும் கவர்ன்மெண்டும் எவ்வளவு வரி போடலாமோ அவ்வளவும் போட்டிருக் கிறார்கள். ஆனால் ஏழைகளிடம் வாங்கும் வரியே பெருத்த சம்பளங்களாகவும் இன்னும் ஜனங்களுக்கு அனுகூலமில்லாத இதர வழிகளிலும் சிலவிடப்படுகிறது. மற்றெந்த கவர்ன்மெண்டிலும் இந்தக் கவர்ன்மெண்டில் உள்ளது போல் உயர்ந்த சம்பளங்கள் இல்லை. நிருவாகக் கவுன்ஸில் மெம்பர்களும் மந்திரிகளும் தாங்களாகவே குறைந்த சம்பளம் ஒப்புக் கொள்வார்களென்று நான் நம்புகிறேன். கவர்ன்மெண்டாருக்கு உண்மையில் ஜனங்களிடம் அன்பு இருந்தால் அநியாய சிலவைக் குறைத்து ஏழை ஜனங்களுடைய சௌகர்யங்களுக்குச் செலவு செய்ய வேண்டும். நிருவாக மெம்பர்களுக்கும் மந்திரிகளுக்கும் வெளிப் பிரயாணத்திற்கு செலூன் அநாவசியம். அவர்கள் இனி செலூனில் போக மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன். மற்றும் நமது நாட்டில் முழு வயிறுக்கு உண்ணவழியில்லாமல் அநேக ஏழைகள் கஷ்டப்படும்போது, பெரிய உத்தியோகஸ்தர்கள் தாங்கள் வாங்கும் பெருத்த சம்பளங்களில் ஏன் கொஞ்சம் குறைக்கக்கூடாதென்று நான் கேட்கிறேன். என்னுடைய ஜில்லாவில் நீர்ப்பாய்ச்சல் விஷயத்தில் கவர்ன்மெண்டு வேண்டியவரையில் கவனிப்பதேயில்லை. அனேகமாய் ஆற்றுக்கால் பாய்ச்சலில்லாமல் ஏரிகளையும், மழையை யுமே எதிர்பார்த்திருக்கும் செங்கல்பட்டு ஜில்லா வில் உள்ள ஜனங்கள் மிகுந்த கஷ்டப்படுகிறார்கள். காட்டிலாகாவினால் கவர்ன்மெண்டு தங்களுடைய வருமானத்தை மாத்திரம் கவனியாமல், விவசாயி களுடைய நம்மையும் கவனிக்க வேண்டும். வரிகள் மூன்று

மடங்கு அதிகமாகிவிட்டன. குடியானவர்களுடைய வீட்டுக்குப் பக்கத்திலேயே காடுகள் இருப்பதால் ஆடு மாடுகள் காட்டுக்குள் அடிக்கடி நுழையும்படி இருக்கிறது. அப்படி நுழைந்தால் உடனே பிடித்து பவுண்டில் அடைத்து அபராதம் போடுகிறார்கள். இவ்விதம் ஏழை விவசாயிகள் ஹிம்சிக்கப்படுகிறார்கள். காட்டு வரியைக் குறித்து ஜனங்கள் குடி இருக்கும் வீடுகளுக்குக் கொஞ்சம் தூரம் வரையில் காடுகள் இருக்கக் கூடாதென்று கவர்ன்மெண்டு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சுகாதார விஷயத்திலும் வைத்திய விஷயத்திலும் கவர்ன்மெண்டு ஏராளமாய் செலவு செய்கிற போதிலும், கிராமங்களில் சுகாதார விஷயத்தைப் போதிப்பதற்கு இதுவரையில் கவர்ன்மெண்டு ஒரு ஏற்பாடு செய்ய வில்லை. வைத்திய வசதிகளும் இல்லை. தவிர, ஜனப் பிரதிநிதிகளாகிய மந்திரிகள் ஆறு வருஷம் கவர்ன்மெண்டு நடத்திய பின்னும் என் ஜில்லா வில் அநேக கிராமங்களில் நாகதாளிப் புதர்களிருப்பதைக் காணலாம். இவைகளைக் கவர்ன்மெண்டார் எடுக்காமல் கிராமத்தாரை எடுக்கும்படிக் கவர்ன்மெண்டு நோட்டீஸ் கொடுக்கிறார்கள். அவர்கள் எடுக்காவிட்டால், கவர்ன் மெண்டே எடுத்து கிராமத்தாரிடம் செலவை வசூல் செய் கிறார்கள். கிராமத்தார் எடுக்கக்கூடிய ஸ்திதி யிலிருந்தால் கவர்ன்மெண்டு சொல்வதற்கு முன்னமே எடுத்திருப்பார்கள். அவர்களாகவே, செய்யாததற்கு அவர்கள் ஏழ்மையே காரணம். ஆகையினால் கவர்ன் மெண்டாரே இந்த அநாவசியமான வேலையைச் செய்ய வேண்டும்.

தவிர என்னுடைய ஜில்லாவில் டோல்கேட்டுகள் கள்ளுக்கடை போல் அநேகமிருக்கின்றன. சில இடங்களில் இருபத்தைந்து மைல் தூரத்திற்குள்ளேயே இரண்டு டோல்கேட்டுகளுக்குப் பகுதி கட்ட வேண்டியிருக்கிறது.

அதுவுமில்லாமல், இரண்டு மூன்று மைல் தூரத்திற்குள் ஒரு கிளை டோல்கேட் ஏற்பட்டிருக்கிறது. சில மாதங்களுக்கு முன்கூட டோல்கேட் ஏலம் விட்டப் பிறகு ஒரு கிளை டோல்கேட்டை எங்கள் ஜில்லா போர்டு தலைவர், ஏற்படுத்தியிருக்கிறார். இந்தக் கிளை டோல்கேட்டுகளால் முக்கியமாய் ஏழை விவசாயிகளுக்கே அஸௌகர்யம் ஏற்படுகிறது. சீக்கிரத்தில் சட்டசபை விவரத்திற்கு வரும் ஸ்தலஸ்தாபன சீர்திருத்த மசோதாவில் டோல் கேட்டுகளை அடியோடு எடுத்து விட ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது எனது அபிப்பிராயம்.

கடைசியாக நான் ஒரு விஷயத்தைப்பற்றி சொல்ல விரும்புகிறேன். ஏழை ஜனங்கள் அநேகர் கோர்ட்டுக்குப் போகிறவர்களாய் இருக்கிறார்கள். கோர்ட்டுகளில் வியாஜ்ஜியங்கள் முடிவதற்கு மிகுந்த காலம் செல்வதுடன் ஏராளமான செலவு ஏற்படுகிறது. விவசாயிகள் கடன்படுவதற்குக் காரணம் வரிச்சுமையும் வியாஜ்ஜியச் செலவுமே. கவர்ன்மெண்டு வழக்குகள் தாமதமில்லாமல் முடிவதற்கு ஏற்பாடு செய்வதுடன் ஸ்டாம்பு சட்டத்தையும் கோர்ட்டு பீஸ் சட்டத்தையும் திருத்தி முன்னிருந்த நிலைக்குக் கொண்டு வரவேண்டும். ஏழைக் குடியானவர்களின் பிழைப்பையும், மானம், குலம், கல்வி,வன்மை, அறிவுடமை இவைகளைப் போக்கும் குடியை ஒழிக்கும் முறையை அனுசரிக்க வேண்டும். கவர்ன்மெண்டார் வரும்படியைக் கவனிக்காமல் ஜனங்களுக்கு நன்மையளிப்பதற்கு இக் குடியை அறவே ஒழிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்கிறேன்.

*1929—30—ஆம் ஆண்டிற்கான பட்ஜெட் உரையின் மீது நடந்த விவாதத்தில் கலந்து கொண்டு 1929—ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28—ஆம் தேதி திரு எஸ். சுப்ரமணிய மூப்பனார் ஆற்றிய உரை:—*

கனவான்களே! அடியேன் சொல்வதை இக்காருண்ணிய கவர்ன்மெண்டாரவர்களும், இச்சபையிலுள்ள மகாத்மாக்களெல்லோரும் ஆதரிக்கும்படி தங்களனைவோருடைய பாதத்தை வெகு கோடான கோடி நமஸ்காரஞ் செய்து கேட்டுக் கொள்கிறேன். அதாவது, திருச்சி ஜில்லாவில் தாழ்ந்த குலத்தாருக்கு தங்குமிடமென்று சொல்லப்படுகிற சத்திரங்கள் எங்குமில்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். இதர நாடுகளிலிருந்து திருச்சி டவுனுக்கு கோர்ட்டுக் காரியங்களாகவும் சொந்தக் காரியங்களாகவும் அநேக தாழ்த்தப்பட்ட மக்கள் வருகிறார்கள். அவர்கள் தங்குவதற்கு இடமில்லை. தீண்டாமை என்பது ஒன்றுயிருப்பதால் அவர்கள் யார் வீட்டிற்கும் போக முடியாது.

அப்பொழுது அடிக்கும் வெய்யிலும், பெய்யும் மழையும் அவர்கள் திரேகத்திலே பட்டு அனுபவிக்க வேண்டியிருக்கிறது. சாதம் வேண்டுமானால் 50 மைலுக்கப்புறம் இருந்து புறப்பட்டபோதிலும் அவ்விடமேயிருந்து கட்டுசாதம் கொண்டு வரவேண்டியிருக்கிறது. அன்றிரவு பகலே சாதம் முடிந்து விடுகிறது. பிறகு, அடுத்தநாள் ஜனங்கள் அவ்விடம் தங்க வேண்டுமானால் அன்ன ஆகாரம் கிடையாது. தாழ்த்தப்பட்ட ஜனங்கள் இந்த நிலமையிலிருப்பதை அடியேன் கருதி, திருச்சிராப்பள்ளி தாலுக்கா கம்பரசம்பேட்டை கிராமத்தில் சில குழியுள்ள நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலமானது கான்சர்வென்ஸி இன்ஜினியரிங் டிபார்ட்மெண்டுக்குச் சொந்தமுள்ள நிலம். அந்த நிலத்தை எனக்கு அடமானஞ் செய்ய வேண்டியது என்றும், அதற்குச் செய்நேர்த்திச் செலவு ரூ. 25,000/— பிடிக்கும். அந்த ரூபாயை என் சொந்த ஐவேஜியிலிருந்து செலவு செய்து பலனுக்குக் கொண்டு வந்து, ஷை பலனைக் கொண்டு சத்திரம் கட்டவும், தங்குகிற தாழ்ந்த ஜாதியினருக்கு அன்னம்

போட்டு வருகிறேனென்றும், ஷை நிலமானது கவர்ன் மெண்டுக்கு வேண்டும் போது 24 மணி நேரத்தில் காலி செய்து விட்டுவிடுவதாகவும், தஞ்சாவூர் கான்சர்வென்சி இன்ஜினீர் அவர்களுக்கும் திருச்சி கனம் கலெக்டர் துரை அவர்களுக்கும் மனு கொடுத்திருக்கிறேன்.

அதற்கு மறு உத்தரவு ஷை நிலங்களைப் பப்ளிக் ஏலம் விடப் போவதாக உத்தரவு செய்துவிட்டார்கள். என்னுடைய மனுவானது கனம் திருச்சி கலெக்டர் துரை ஆபீஸிலிருக்கிறது. வரவழைத்துக் காகிதங்களைப் பரிசோதித்து, தருமத்துக்கு அடமானஞ் செய்யும்படிக் கோருகிறேன்.

ஸ்ரீரங்கம் (திருச்சி தாலுக்கா) பள்ளத்தெருவும், சுடுகாடும் ஒன்றாயிருக்கிறது. பிணத்தின் நாற்றமும் புகையும் பள்ளர்களுடைய சமைக்கும் பானையில் நுழைந்து 15 வருடத்துக்கு முந்தி ஆயிரக்கணக்கான ஜனங்கள் இருந்தவர்கள், இப்போது 400 அல்லது 500 ஜனத்துக்கு வந்துவிட்டது. இதைப்பற்றி திருச்சி தாலுக்கா, ஸ்ரீரங்கம் முனிசிபாலிடிக்கும் லேபர் ஆபீசருக்கும் மனு கொடுத்திருந்தோம். அந்த மனுக்கள் எங்கே போய் விட்டதோ நமது எம்பெருமானுக்குத்தான் தெரியும். ஆகையால் அடியேனுடைய அபிப்பிராயம் எப்படி யென்றால், சுடுகாட்டை எடுத்துவிட வேண்டும் அல்லது பள்ளர்கள் தெருவை எடுத்து வேறு இடம் போடும்படி காருண்ணிய கவர்ன்மெண்டாரைப் பாத நமஸ்காரஞ் செய்து கேட்டுக்கொள்ளுகிறேன்.

திரு எஸ். சஹஜானந்தம் அவர்கள் ஆற்றிய சொற் பொழிவுகளின் சில பகுதிகள்:—

1. மதுவிலக்கு:—

எங்கள் வகுப்பினர்க்கு இன்றியமையாத தேவைகளை சகோதரர் வி.ஐ. முனுசாமி பிள்ளையவர்கள்

எடுத்துச் சென்னார்கள். மதுவிலக்குப் பிரச்சாரத்துக்கு நான்கு இலட்சங்கள் ஒதுக்கி வைத்திருப்பதைப் பாராட்டினார்கள். யானும் பாராட்டுகிறேன். மதுபானக் கடைகளைச் சாத்தினாலொழிய மதுவிலக்குப் பிரசாரம் பயன்தராது. பிரசாரத்திற்காக வைத்திருக்கும் பணம் அவ்வளவும் வீண் செலவாக முடியும். சிலர் சாப்பிட் டொழிப்பதைத் தவிர வேறு பயன் விளையாது. திருவள்ளுவர் 'அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல் வேண்டும் வேண்டியவெல்லாம் ஒருங்கு' என்று கூறுகிறார். இதன் பொருள் ஐம்புல நுகர்ச்சியைத் தடுத்தல் வேண்டும். அதற்கு ஏதுவாக ஐம்மொறிகள் விழைந்து பற்றற் கேதுவான நுகர்ச்சிப் பொருள்களை முற்றும் விடுதல் வேண்டும் என்பதேயாம். நுகர்ச்சிப் பொருளுள்ளவரை பொறிகளைத் தடுத்தல் கூடாது. உதாரணமாக, எனக்குக் காப்பி சாப்பிடும் பழக்கமுண்டு; கையில் காசும் காப்பிக் கடையும் இருக்கு மானால் யான் காப்பி சாப்பிடாமல் இருக்க முடியாது. யானே காப்பி கிளப்புகளில்லாத காட்டுப்புறம் பக்கம் போய்விடுவேனாயின் காப்பி எண்ணந் தோன்றாது, பலியாது மறந்துவிடும். அவ்வாறே, மதுபானக் கடைகளை மூடிவிட்டால் குடிப்பழக்கம் ஒழிந்துவிடும். கடைகளை மூடாது எத்துணைப் பிரசாரம் செய்யினும் விழலாக முடியும். கடைகளைச் சாத்தி விடுவதோடு அப்பணங்களை ஆதி திராவிட மக்களின் அபிவிருத்திக்குச் செலவிடலாம். மதுவிலக்குப் பிரசாரம் மகாத்மா காந்தியடிகள் செய்த அளவிற்கு வேறு யாராலும் செய்ய முடியாது. காங்கிரஸ் காரர் செய்த அளவிற்குச் சர்க்காரால் செய்ய முடியுமா? யான் எனது சொந்த முயற்சியால் மதுவிலக்குப் பிரசாரம் செய்தேன். என்னை அரஸ்டு செய்யும்படி ஜில்லா மாஜிஸ்ரேட் ஒரு காலத் தில் உத்தரவு பிறப்பித்தார். மதுவிலக்கு பிரசாரம் செய்பவர்களைத் தடுப்பதில்லை என்றால், எப்பொழுதோ அது வெற்றி பெற்றிருக்கும். ஆதலால் ஒரு ஜில்லாவில்

பூரணமாக மதுபானக் கடைகளை ஒழித்துப் பார்க்க வேண்டும். யானிருக்கும் ஜில்லாவில் பூரண மதுவி லக்கு செய்யும்படி அரசாங்கத்தார் முயற்சிக்க பிரார்த் திக்கிறேன்.

''மதுவால் வரும் பணம் எங்கள் இரத்தத்தைப் பிழிந்து எடுப்பதாகும். அரசாங்கத்தார் மதுவிலக்கால் பணக் கஷ்டமுண்டாகும் எனக் கருதுவாராயின், எங்களுக்கு மனைக்கட்டு வேண்டாம், நிலம் வேண்டாம், படிப்பு வேண்டாம், மற்றும் பல நன்மைகளையும் தியாகம் செய்யச் சித்தமாயிருக்கிறோம். வீடு, நிலம், படிப்பு முதலான எல்லா நன்மைகளையும் விட மதுபானத் தீமையே பெரிதாயிருப்பதால் அதனை அடியோடு ஒழிக்க வேண்டும்.''

2. சுகாதாரம்:—

வரவு—செலவுத் திட்டத்தில் சுகாதாரத்திற்காக ஏராளமாகப் பணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. இதில் எங்களுக்கு எள்ளளவும் பயனில்லை. யான் பிறந்து முப்பத்தெட்டு வயதாகிறது, இதுவரைக்கும் எந்தச் சேரியிலும் எந்தச் சுகாதார இலாக்கா அதிகாரியும் வந்ததாக யான் பார்க்கவில்லை. சேரிகளில் சுகாதாரங்கள் மிகவும் சீர்கேடாகவிருக்கிறது. காலரா நோய் முதலிய தொத்து நோய்கள் முதல் முதல் சேரிக்குத்தான் வருகிறது. அவர்களுக்கு உதவி செய்ய அதிகாரிகள் முன் வருவதில்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஜலவசதி சரியாயில்லை. இவ்விஷயத்தில் ஸ்தல ஸ்தாபனங்கள் சிரத்தை காட்டுவதில்லை. தாலுக்கா போர்டிலோ கிணறுகள் வெட்டுகிறார்கள். அவைகள் சில நாளில் தண்ணீர் இல்லாமல் பாழ்படுகிறது. தொழில் கமிஷனர் இலாக்காவிலும் கிணறுகள் வெட்டுகிறார்கள். அவைகள் சில வேலைக்காரருக்கும் குத்தகைக் காரருக்கும் பிழைப்பிற்கு ஏதுவாயிருக்கிறது. சில நாளில் கிணறுகள் இடிந்தோ

தண்ணீரில்லாமலோ பாழ்படுகிறது தண்ணீர் இல்லாமல் சுகாதாரம் ஏற்படாது. தாழ்த்தப்பட்ட மக்களின் குறை களையும் தேவைகளையும் தெரிய வேண்டுமானால் அவர்கள் வசிக்கும் சேரிகளைச் சென்று பார்க்க வேண்டும். இப்போது வந்திருக்கும் சைமன் கமிஷனர்கள் கிராமங் களுக்குச் சென்று சேரிகளைப் பாராமல்போனால், உண்மையாகவே ஜனங்களின் குறைகளை உணரவே மாட்டார்கள்.

*3*. தர்க்காஸ்து நிலம்:—

நிலம் கொடுக்கும் முறை சரியாயில்லை என கடந்த மூன்று ஆண்டுகளாக ஒப்பாரி பாடினேன். இன்றைய வரை யாதொரு சீர்திருத்தமும் ஏற்படவில்லை. இவ்வாண்டின் இறுதியில் யாங்கள் கவுன்சிலைவிட்டு வெளியேறுஞ் சமயத்தில் எங்கள் வகுப்பினர் எங்களைப் பார்த்து 'நீங்கள் சட்டசபையில் உறுப்பினராயிருந்து யாது காரியம் செய் தீர்கள்' என்று கேட்டால் 'ஒப்பாரி பாடினோம்' என்பதைத் தவிர வேறு என்ன பதில் கூறமுடியும்.எங்களுக்காக ஒதுக்கி வைத்திருக்கும் நிலங்கள் எல்லாம் பெரும்பாலும் மலையாயிருக்கும், கடலாயிருக்கும், மடுவாயிருக்கும் அல்லது ஆகாயமாயிருக்கும். எங்கேனும் த்ப்பித் தவறி நல்ல நிலங்களைக் கொடுத்துவிட்டால் சட்டப் பிசகாக கொடுத்து விட்டார்களென ரத்து செய்து விடுகிறார்கள். அரசாங்கத்தார் இது விஷயத்தில் யாதுஞ் சிரத்தை எடுத்துக் கொள்வதில்லை. ஏதேனும் பிசகு நடக்கும் விஷயமாகக் கேள்விகள் கேட்டால், ஆம், உண்டு, யோசிப்போம், தெரியாது, விசாரிந்கிறோம் என்று சொல்லிவிடுகிறார்களே ஒழிய, அதுபற்றி நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வது அரிதாயிருக்கிறது.

''மைசூர் அரசாங்கத்தில் எழை ஜனங்களுக்கு நிலங்கள் இலவசமாகக் கொடுப்பதோடு சுமார் எண்பது ரூபாய்கள் ஜீவனத்திற்கு இலவசமாகக் கொடுக்கிறார்கள்.

மாடுகள், விதை முதலானவற்றிற்குக் கடனாக எண்பது ரூபாய்கள் கொடுக்கிறார்கள். சுதேச சமஸ்தானத்தில் ஏழைகளுக்கு நிலங்கள் கொடுக்கும் விஷயத்தில் இத்துணை உதவிகள் செய்யும்போது மிகவும் பெருமை வாய்ந்த பிரிட்டிஸ் இராஜாங்கத்தில் ஏன் அவ்வாறு செய்யக் கூடாது? இனியேனும் தாராள சிந்தை காட்டும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நிலங்களைத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கி வைக்க வேண்டுமென அரசாங்கத்தார் உத்தரவு பிறப்பித்தாலும் கீழுள்ள சிப்பத்திகள் கெடுத்து விடுகிறார்கள். அதற்காக ஒரு ஸ்பெஷல் ஆபீஸரை ஏற்படுத்தி நல்ல நிலங்களை ஒதுக்கி வைத்து ஏழை மக்களுக்குக் கொடுக்க வேண்டுமெனவும், அவ்விஷயத்தில் தீவிரமாக முயற்சிக்கும் அதிகாரிக்குப் பதவியை உயர்த்தப் படுமெனவும் அரசாங்கத்தார் ஏற்பாடு செய்வார்களானால், அது உண்மையாகவே உதவி செய்ததாகும்.''

4. தமிழில் நீதிமன்ற நடவடிக்கைகள்:—

கனம் தலைவர் அவர்களே! கோர்ட்டு நடவடிக்கைள் தமிழில் நடைபெற வேண்டும் என 744—ஆவது மோஷனும் காபிஸ்டர்கள் விஷயமாகப் பேசுவதற்கு 813—ஆவது மோஷனும் கொடுத்திருக்கிறேன். சொற்ப நேரத்தில் அவைகள் வராதென அவற்றையும் இதில் பேசுகிறேன்.

ஐயா! இங்கிலந்து முதலிய நாடுகளில் நூற்றுக்கு 97 பேர்கள் படித்தவர்கள்; ஆனால் இந்தியாவில் நூற்றுக்கு 97பேர்கள் படியாதவர்கள். படியாதவர்களது வழக்குகளை ஆங்கிலத்தில் பேசுவதால் நியாயவாதி எதனைப் பேசுகிறார் என கட்சிக்காரர்களுக்குத் தெரிவதில்லை. சில சமயங்களில் நியாயவாதிகள் கட்சிக்காரனது கேஸை மறந்து பாதகமாகவுஞ் சொல்லலாம். வேண்டுமென்றும் சொல்லலாம். தாய்ப் பாஷையிலேயே பேசினால் கட்சிக்

காரர்கள் தெரிந்து கொண்டு திருத்துவார்கள். தங்கள் கேசைக் காப்பாற்றிக் கொள்வார்கள். தாய் மொழியில் பேசினால் எங்கள் வகுப்பாருக்கு மிகவும் நன்மையைத் தரும். இப்போதும் வாதியாகவும் பிரதியாகவும் இருக்கும் ஆங்கிலப் படிப்பில்லாதவர்களிடம் கோர்ட்டுகளில் தமிழிலேயே வாக்குமூலம் வாங்குகிறார்கள். கட்சிக்காரர்களிடம் தமிழில் வாக்குமூலம் வாங்கும் போது ஏன் எல்லா நடவடிக்கைகளும் தமிழிலேயே நடை பெறக் கூடாது. சில நாட்களுக்கு முன்னர் தமிழிலேயே நியாயவாதிகள் இருந்தார்கள். அவர்களால் கட்சிக்காரர்களுக்கு மிகவும் திருப்தி இருந்தது. ஆங்கிலத்தில் நியாயவாதிக்குப் படித்து நீதிமன்றத் திற்கு வர சுமார் 35 வயதாகிறது. அவனுக்கு எவ்வளவு செலவாகும் என்பதை அரசாங்கத்தார் சிந்தித்துப் பார்க்கும்படிக் கேட்க்கிறேன். மிகவும் பணம் செல வழித்துப் படித்த பிறகு ஏழைகளை நசுக்கிப் பணம் எடுக்க வேண்டியதாகிறது. தாய் மொழியிலேயே இருந்தால் இந்தக் கஷ்டங்களில்லை. பல வித்வான்களும் நியாய வாதிகளாக வருவார்கள். மலேயா, கொச்சின், சைனா முதலான நாடுகளில் அவ்வந்நாட்டுத் தாய்மொழிகளி லேயே நீதி மன்றங்கள் நிகழ்கின்றன. இந்தியா விலும் அவ்வாறே நடைபெற வேண்டும். இந்தியாவிற்குச் சயராஜ்யம் அளிக்காவிட்டாலும், தாய்மொழிகளிலேயே நீதி மன்றங்கள் நடைபெறின் அது பாதி சுயராஜ்ஜிய மாகும். நீதிபதிகளுக்காகவும் நியாயமன்றங்கள் இல்லை; ஆங்கிலம் தெரியாத ஜனங்களுக்காகவே மன்றங் களிருக்கின்றன. ஆதலால் எல்லாக் கோர்ட்டுகளிலும் தாய்மொழி வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

காபீஸ்டர்கள்:—

''கோர்ட்டுகளில் காபீஸ்டர்களுக்குச் சரியானபடி சம்பளம் கொடுப்பதில்லை. கோர்ட்டுகளெல்லாம்

காபீஸ்டர்களாலேயே நடைபெறுகின்றன. காபீஸ்டர் களுக்கு மாதம் ஒன்றுக்கு இருபது ரூபாய்கள் சம்பளம் கொடுக்கிறார்கள். 3 அணா விலையுள்ள காப்பீ ஸ்டாம்புகளில் எழுத வேண்டும். ஒரு ஸ்டாம்பு கடிதத்தில் 22 கோடுகள் போட்டிருக்கும். ஒரு ஸ்டாம்பில் 175 வார்த்தைகளுக்குக் குறையாமல் எழுதவேண்டும். 8 காபீஸ்ட்டுகள் எழுதுவதைச் சோதிக்க ஒரு ரீடரும் ஒரு எக்ஸாமினரும் இருக்கிறார்கள். 8 காபீஸ்ட்டுக்கு 1 வீதம் எக்ஸாமினரும் ரீடர்களுமிருப்பார்கள். இவர்களுக்கு மேல் ஒரு சூபரின்டெண்டெண்டு இருக்கிறார். இந்தக் காபீஸ்ட்டுகளிடம் ஸ்டாம்புகளைக் கொண்டு கொடுக் கவும், எழுதிய பிறகு வாங்கிக் கொண்டு கொடுக்கவும் அட்டெண்டர்கள் வைத்திருக்கிறார்கள். இந்த அட்டெண்டர்களுக்கும் ரீடர்களுக்கும் எக்ஸாமினர்களுக்கும் சூபரின்டெண்டெண்டுகளுக்கும் அரசாங்கத்தில் உபகாரச் சம்பளம் கொடுப்பதாகச் சென்ற வருஷம் எப்படியோ முடிவாயிருக்கிறது. இவ்வனைவருக்கும் வேலை கொடுக்கும் காபீஸ்டர்களுக்கு யாதொரு உபகாரச் சம்பளமும் இல்லை. ஸ்கூல் பைனல் படித்துத் தேறி ஸ்டாஃப் செலக்ஷன் போர்டில் தேராதவர்களுமே காபீஸ்ட் வேலைக்கு வருகிறார்கள். இவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் 10 வார்த்தைக்கு ஒரு காசு வீதம் கணக்குப் பார்த்துக் கொடுக்கிறார்கள். மாதத்தில் இவர்கள் செய்த வேலைகள் 20 ரூபாய்க்கு போதுமானதாயிரா விட்டால் அடுத்த மாதத்தில் அவர்கள் செய்த வேலையில் பிடித்துவிடுகிறார்கள். இந்தக் காப்பீஸ்டுக்களும் அரசாங்க ஊழியராம்.

இவர்களின் வேலை:—

பலவிதமான பத்திரங்கள், நியாயத் தீர்ப்புகள், வாக்குமூலங்கள், சிலாசாசனம், செப்பேடு, ஓலைச்சுவடி முதலான கஷ்டமான பொருள்களைக் கண்ணைத்

துடைத்துக் கொண்டு பார்த்து எழுத வேண்டும். லீவு எடுத்துக் கொண்டால் சம்பளமில்லை. 30 வருஷங்கள் வேலை செய்துவிட்டு நின்றுவிட்டால் அவர்கள் கதி யென்னாகும். முப்பது வருஷங்கள் வரை கண்ணுங் கருத்தும் கையும் ஓய்ந்துபோக வேலைசெய்து வெளியிற் சென்று வருவாயின்றி கஷ்டப்படுவதைச் சொல்லுந் தரமன்று.

இவர்களால் வரும் இலாபம்:—

'ஒவ்வொரு காபீஸ்ட்டாலும் ரிட்டயர்ட் ஆவதற்குள் அரசாங்கத்திற்கு சுமார் பதினாயிரம் ரூபாய்கள் இலாபம் உண்டாகிறது. இப்படி இலாபந் தேடியவர்கள் வேலை செய்யச் சக்தியற்று, பிறர் உதவியை எதிர்நாடும் தள்ளாத பருவத்திற்கு உதவியாக அட்டெண்டர், ரீடர், எக்ஸாமினர், சூபரின்டெண் டெண்டுகளுக்கு உபகாரச் சம்பளம் அளிப்பதுபோல், காபீஸ்டர்களுக்கும் மாதம் 20 அல்லது 15 ரூபாய்களேனும் உபகாரச் சம்பளம் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளு கிறேன்.''

## மாகாண நிருவாக அறிக்கை

1961-ஆம் ஆண்டு கீழ்க்கண்ட மாவட்ட அளவிலான எல்லா அலுவலகங்களிலும் தமிழ்மொழி அறிமுகப் படுத்தப்பட்டது:—

1) வணிகத்துறை;

2) வனத்துறை;

3) அரிஜனத் துறை;

4) மீன்வளத் துறை;

5) உள்ளாட்சித் தணிக்கைத் துறை;

6) பதிவாளர் துறை;

7) காவல் துறை;

8) தீயணைப்புத் துறை;

9) நில அளவைத் துறை;

10) பொதுப் பணித்துறை;

11) மருத்துவத் துறை;

12) உணவு உற்பத்தித் துறை;

13) சிறைச்சாலைத் துறைகள்;

14) சமூக நலத் துறை;

15) எடையும் அளவுகளும் துறை.

1956—ஆம் ஆண்டின் மாநில ஆட்சிமொழிகள் சட்டத்தின்படி, இந்த ஆண்டுவரை 5,686 அலுவலகங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

ஆட்சி மொழிக் குழுவில் வெளியிடப்பட்ட ஆங்கிலம்—தமிழ் நிருவாகச் சொல்லகராதி திருத்தியமைக்கப்பட்டு, மறுபடியும் அச்சிடப்பட்டது. பல துறைகளில் பயன்படுத்தப்படும் அலுவலர்களின் அலுவல் பெயர்கள் மொழி பெயர்க்கப்பட்டுத் திருத்திய வெளியீட்டில் அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ளன. துறைகளுக்கே உரிய சிறப்பான சொற்கள் மொழி பெயர்க்கப்பட்டு ஒன்பது துறைகளிடமிருந்து வந்தன. அவை பரிசீலிக்கப்பட்டு அந்த அந்தத் துறைகளுக்கே அச்சிட்டு வழங்க அனுப்பி வைக்கப்பட்டன. மாவட்ட நடைமுறைக் கையேடு தமிழாக்கப்பட்டு, அச்சிட்டு எல்லாத் துறைகளுக்கும் அவர்களின் கீழுள்ள அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னைச் சட்டமன்ற நிருபராகப் பணிபுரியும் திரு அனந்த நாராயணன் அவர்களால் தமிழில் தயாரிக்கப் பட்ட சுருக்கெழுத்துக் கையேடு, வல்லுநர்களால்

பரிசீலிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இந்தக் கையேட்டைப் பிரசுரிக்க ஆட்சிமொழிக் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

சட்டங்கள், கோட்பாடுகள், கையேடுகள் மற்றும் படிவங்கள் ஆகியவற்றை மொழிபெயர்க்கப் பல மொழிப் பெயர்ப்பாளர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளன. நிருவாகச் சொற்களையும் கலைச் சொற்களையும் மொழி பெயர்த்தது ஒரே சீராக இல்லாமையினால், ஆட்சி மொழிக் குழுவின் பரிந்துரையின் பேரில், தனி அலுவலர் ஒருவரை அரசு நியமித்துள்ளது. மொழி பெயர்ப்பில் கவனம் செலுத்துவதும், ஒரே சீராகச் சொற்களை அமைத்து ஒழுங்கு படுத்துவதும் அவரது வேலை. அவரை முழுநேர அலுவலராக அரசு நியமித்துள்ளது.

இதுவரையிலும் மொழி பெயர்க்கப்பட்ட சட்டங்கள், கோட்பாடுகள், கையேடுகள், படிவங்கள் வருமாறு:—

1) சென்னைக் கூட்டுறவுச் சட்டம்;

2) சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டம்;

3) சென்னை மாகாணத் மொழில் உதவிக்கான சட்டம்;

4) சென்னைப் பொது இடங்களுக்கான சட்டம்;
(The Madras Places of Public Resort Act)

5) சென்னை ஆரம்பக் கல்விக்கான சட்டம்.

சட்டங்களில் கீழ் வகுக்கப்பட்டுள்ள விதிகளும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஏழு விதிகள் (Rules) எடுத்துக் கொள்ளப்பட்டு நன்கு பரிசீலிக்கப்பட்டு விட்டன.

வாரியத்தின் (போர்டின்) நிலையான விதிகள் ஒன்று முதல் நான்கு வரை மொழி பெயர்க்கப்பட்டுப் பரிசீலிக்கப்பட்டன.

ஆறு கையேடுகள் (Manuals) மொழி பெயர்க்கப்பட்டன. இருபத்திரண்டு துறைகளுக்கான படிவங்கள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1,700 தட்டச்சு எந்திரங்களை வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் 1,131 எந்திரங்களைத்தான் கம்பெனிகள் வழங்கியுள்ளன. 1,479 தட்டச்சர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. ஆட்சிமொழிக் குழுவின் பரிந்துரையின் பேரில், எல்லா அரசாங்கத் தட்டச்சர் களுக்கும் தமிழில் பயிற்சி அளிக்க வேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளது. உயர்தரத் தேர்வில் வெற்றி பெறுகிற தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சர்களுக்கு ஊக்கம் அளிக்கிற வகையில், ரூ.50/— மொத்தமாக வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

ஆட்சிமொழிக் குழுத் தலைவரும் தனி அதிகாரியும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சென்று அலுவலகங்களில் இத்திட்டம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பார்த்து வருகின்றனர்.

*1964—'65:—*

மாவட்ட அளவிலான 8,000 அலுவலகங்கள் இதுவரையிலும் தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. மாநில அளவிலான 47 தலைமை அலுவலகங்களிலும் 36 வட்டார அலுவலகங்களிலும் முதற்படியாகக் கடிதப் போக்குவரத்து ஒரு சில அலுவலகங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. பொது மக்களிடமிருந்து தமிழில் பெறப்படும் மனுக்கள் மீது இவ்வலுவலகங்களில் தமிழிலேயே பதில் அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டது.

1966—ஆம் ஆண்டு மே மாதம் முதல் தேதியிலிருந்து சட்டம் மற்றும் நிதித்துறை நீங்கலாக தலைமைச் செயலகத்தின் மற்ற துறைகளில் முதல் கட்டத் தமிழ் கடிதப் போக்குவரத்து துவக்கப்பட்டது. சட்டமன்றத் துறையில், அத்துறைக்குப் பொருத்தமான முறையில் தமிழ் மொழியில் கடிதப் போக்குவரத்தைப் புகுத்தத் தீர்மானிக்கப்பட்டது.

தலைமைச் செயலகத்தில் பணியாற்றும் தமிழ் தட்டச்சுப் பொறியாளர்களுக்குக் கட்டாயப் பயிற்சி கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் மொழியில் போதுமான புலமை இல்லாத அரசுப் பணியாளர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் திட்டம் துவக்கப்பட்டது. பயிற்சிக் காலம் பதினோரு மாதங்களாகும். தமிழ்த் தட்டச்சுப் பொறியை வைத்துக் கொள்ள வேண்டுமென்று எந்தெந்த அலுவலகங்கள் கருதப்பட்டனவோ, அவ்வலுவலகங்களுக்கு அப்பொறிகள் கொடுக்கப்பட்டுவிட்டன. திருத்தப்பட்ட தமிழ்ச் சொல்லககராதி எல்லா எழுத்தர்களுக்கும், பிரிவுத் தலைமை எழுத்தர்களுக்கும், அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டு விட்டது. சிறப்புச் சொல்லகராதி மேலும் 42 துறைகளுக்கு அச்சிடப்பட்டுக் கொடுக்கப்பட்டது.

1968—'69

ஆட்சிமொழிக் குழு மாற்றியமைக்கப்பட்டது. முழுமையான தமிழ் மொழித் திட்டம் ஆட்சித்தலைவர் அலுவலகங்கள் அனைத்திலும் மாநில அளவிலான தலைமை அலுவலகங்கட்கு உட்பட்ட கீழ்மட்ட எல்லா அலுவலகங்கட்கும் விரிவாக்கப்பட்டுவிட்டது. மாநிலத் தலைமை அலுவலகங்களில் பெறப்படும் தமிழில் எழுதப்பட்ட விண்ணப்பங்களுக்குத் தமிழிலேயே பதில் அனுப்பப்படவேண்டும் என்பது முதல்கட்டம். மாநிலத் தலைமை அலுவலகங்கள் கீழ்மட்ட அலுவலகத்துடனும்,

மாவட்ட அளவிலான அலுவலகங்களோடும் தமிழிலேயே ஒரு சில குறிப்பிட்ட பொருள் பற்றிக் கடிதப் போக்கு வரத்து வைத்துக் கொள்ள வேண்டுமென்பது இரண்டாவது கட்டம்.

1965—ஆம் ஆண்டோடு இவ்விரண்டு கட்டமும் நிறைவு அடைந்து, மாநிலத் தலைமை அலுவலகங்கள் தங்களுக்குள்ளாகத் தமிழிலேயே கடிதப்போக்குவரத்தை வைத்துக் கொள்ள வேண்டுமென்பது மூன்றாவது கட்டம். இது அரசின் ஆய்வில் உள்ளது. 1967—ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சித் துறையிலும், பொதுத் துறையிலும், ஒரு சில விதிவிலக்குடன் தமிழ்த் திட்டம் முழுமையாக அமுல் நடத்தப்பட்டது.

குறிப்புகள் மற்றும் கடிதங்கள் தமிழில் எழுது வதற்குத் தலைமைச் செயலகத்திலுள்ள எழுத்தர்கள், கண்காணிப்பாளர்கள், சுருக்கெழுத்தர்கள் முதலியோருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதுவரையிலும் ஐந்து சட்டங்கள் பதினோரு துறைகளுக்கான விதிகள், 14 கோட்பாடுகள் மற்றும் 47 கையேடுகள் மொழிபெயர்க்கப்பட்டு அந்தந்தத் துறை களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு 23 மசோதாக்கள், 17 மாநிலச் சட்டங்களுடன், 1,300 விதிகளும் மற்றக் குறிப்புகளும், மேலும் 3,000 சட்டமன்ற வினா, விடைகளும் மொழி பெயர்க்கப்பட்டன.

வழக்கம் போல், வரவு—செலவுத் திட்டப் புத்தகங்கள் தமிழிலே கொண்டு வரப்பட்டன. பல துறைகளின் கொள்கை விளக்கக் குறிப்புக்களும் தமிழில் தயாரிக்கப்பட்டன.

தமிழ் வளர்ச்சித் துறை:—

*1968—'69*—ஆம் ஆண்டிலிருந்து, அறிவியல் மற்றும் கணிதவியலைத் தமிழில் பயிற்றுவிக்க மாற்றுப் புகுமுக வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டன.

தமிழ்நாடு அரசும் கோரியது போலவே, மைய அரசும் மைய அரசுப் பணித்தேர்வு ஆணைக்குழு பதினான்கு மொழிகளையும் பயன்படுத்த ஒப்புக் கொண்டது.

*1968*—ஆம் ஆண்டு சனவரி மாதம் உலகத் தமிழ் மாநாடு சென்னையில் நடந்தது.

*1969—'70:*

மாநிலத் தலைமை அலுவலகங்களுக்கிடையேயும், ஆட்சித்தலைவர் அலுவலகங்களுக்கிடையேயும் முழு அளவுக் கடிதப் போக்குவரத்து நடைபெற வேண்டுமென்ற திட்டம் *1969*—ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் *27*—ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வந்தது. தலைமைச் செயலகத்திலும், (1) விடுப்பு, மாறுதல் ஆணைகள், பயண நிரல் முதலியனவும், (2) குறிப்புகள், கடிதங்கள் முதலியனவும் மாநிலத் தலைமை அலுவலகங்ளிலிருந்தும், ஆட்சித் தலைவர்களிடமிருந்தும் வந்திருந்தால் அவற்றின் மீதும், தமிழிலேயே நடவடிக்கை எடுக்க ஆணையிடப் பட்டது. சட்டம் மற்றும் நிதித்துறையில், முதல்கட்டத் தமிழ்த்திட்டம் அமுலுக்கு வந்தது. காவலர் நிலையான ஆணைகளும் தலைமைச் செயலக விதிகளும் தமிழாக்கப் பட்டன.

*1969*—ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வெளியிடப் பட்ட அரசு ஆணையில் சாட்சியங்களைத் தமிழிலேயே பதிய வேண்டும் என்று கண்டுள்ளது. உயர் நீதி

மன்றத்திற்குக் கீழ்ப்படிதலுள்ள எல்லா நீதி மன்றங்களிலும், மற்றும் குற்றவியல் பிரிவு நீதி மன்றங்களிலும் இவ்வாணை அமுலுக்கு வரும்.

அரசாங்க அலுவலகங்ளில் தமிழைப் புகுத்த புதிய முயற்சிகளும், நோக்கமும் 1969—'70 க்குப் பிறகு எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்றே தோன்றுகிறது. 1956 முதற்கொண்டு, 1970—ஆம் ஆண்டு வரையிலான 15 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றத்தை அவ்வளவு சிறப்பானதாகவோ, வேகமானதாகவோ கருத முடியாது. அரசாங்கக் கடிதப் போக்குவரத்தும், சட்ட திட்டங்களைத் தமிழில் கொண்டு வருவதும் தனியாக இதற்கென்றே ஏற்பட்ட துறையின் வேலையாகும் என்பது போலத்தான், மற்ற எல்லாத் துறைகளும் எண்ணுவது போலத் தோன்றுகிறது. கடிதப் போக்குவரத்தை விரைவு படுத்துவதும், அலுவலகக் குறிப்புகள், ஆய்வுகள், ஆணையிடுதல் முதலிய எல்லாச் செயல்களையும் ஒவ்வொரு துறையும் எப்படித் தங்களுடைய நியாயமான, சொந்த, சட்டபூர்வமான வேலையாகக் கருதுகிறார்களோ, அதேபோன்று, தமிழ்ப்படுத்துவதையும் தங்களுக் குள்ளாகவே செயல்படுத்த முனைந்தால் ஒழிய, இம்முயற்சி வெற்றி அடையாது; நிலையான பயனைத்தராது.

# முடிவுரை

''தமிழ் ஆட்சி மொழி—ஒரு வரலாற்று நோக்கு'' என்பது தலைப்பு. 1921—ஆம் ஆண்டிலிருந்து 1956—ஆம் ஆண்டு வரை, சென்னை மாநிலச் சட்டமன்ற நடவடிக்கைகளில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் எவ்வாறெல்லாம் தமிழை ஆட்சி மொழியாக ஆக்க வேண்டும் என்று போராடியும், தங்களுடைய கருத்தை எடுத்து வைத்துப் பணி ஆற்றியும் இருக்கிறார்கள்; அப்பணியில் குறிப்பான பங்கு எவருக்காவது உண்டா என்பனவற்றைக் கணிப்பதே என் பணி.

இம்முயற்சியில் நான் தோல்வியடைந்தேன் என்றே சொல்ல முடியும்; அதற்குப் பல காரணங்கள் உண்டு.

1) முப்பத்தைந்தாண்டு காலச் சட்டமன்ற வரலாற்றில் உறுப்பினர்கள் மாற்றம் பெற்றிருக்கிறார்கள்.

2) அரசியல் நிகழ்ச்சிகளும் வேகமாக மாறியிருக்கின்றன.

3) ஆங்கிலமே தொடர வேண்டுமென்ற கருத்து மேலோங்கி இருந்திருக்கிறது.

4) மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்ற வற்புறுத்தல் அவ்வப்பொழுது இருந்தாலும், இந்த முயற்சி 1950—க்குப் பிறகுதான் நிறைவேறியிருக்கிறது.

5) நாட்டு விடுதலை, நாட்டு ஒருமைப்பாடு, மக்களாட்சி முதலிய பொதுவான எண்ணங்களின் போராட்டம் இக்காலக் கட்டத்தில் முதன்மை பெற்று மற்ற எல்லாக் கோரிக்கைகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டன.

6) வட்டார மொழிகள் வலிமை பெறாமல், வாய்ப்பும் இல்லாமல் வழியின்றித் திரிந்த நேரம்.

7) ஆந்திரர்களும், கன்னடியர்களும், ஒரியா மொழி பேசுபவர்களும் தங்களுக்கென்று தனி மாநிலமும், தங்கள் மொழி வழக்கில் வர வேண்டு மென்ற கோரிக்கைகள் கேட்ட வண்ணம் இருந்த நேரத்தில், தமிழர்கள், தங்களுக்கென்று தனியாக மாநிலமும், தங்களுடைய மொழியே பயன் படுத்தப்பட வேண்டுமென்ற வற்புறுத்தலும் இல்லாமல் அமைதியாக இருந்திருக்கின்றனர் இதற்கு நடைமுறையில் பல சிக்கல்கள், பல காரணங்கள் இருந்திருக்கின்றன.

8) சென்னை நகரை மையமாகக் கொண்டு மாநில ஆட்சி நடத்தினால், தமிழ் மொழியோ தனித்தமிழ் மாநிலமோ கேட்பது உகந்ததல்ல என்று அன்றைய தலைவர்கள் நினைத்திருக்கலாம். அப்படிக் கேட்பதனால் சென்னை நகரமும் அதனைச் சார்ந்த தமிழக மக்களும் பல வசதிகளை இழக்க நேரிடும் என்ற காரணத்தையும் அத்தலைவர்கள் கருத்தில் கொண்டிருந்திருக்லாம்.

9) சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு அப்பாற்பட்டு, வெளி உலக நிகழ்ச்சிகளில் அரசியல் கட்சிகள், தனித்தமிழ் மாநிலமும், தமிழே ஆட்சி மொழி என்ற கோரிக்கையும் இருந்திருக்குமானால் அத்தகவல் களை இந்த அறிக்கையில் சேர்க்கவில்லை, அதனால், எந்த இறுதியான முடிவையும் எடுக்க முடியாத நிலைமையில் இவ்வறிக்கை முழுமை பெற்றதாகக் கருத முடியாது.

இந்த அறிக்கையில் கண்டுள்ள தகவல்கள் அனைத்தும் தமிழ்நாடு ஆவணக் காப்பகத்திலுள்ள

சட்டமன்ற நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து சேகரிக்கப் பட்டுள்ளன. பல வழிகளிலும், ஆவணக் காப்பகம் எனக்கு உதவி செய்தமைக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

விடுமுறைகளிலும், ஓய்வு நேரங்களிலும் என் நேரத்தைச் செலவு செய்து இவ்வறிக்கையைத் தயாரித் துள்ளேன். இதை நல்ல முறையில் தயாரிக்க வேண்டிய முன் அனுமதியைத் தமிழக அரசு அளித்துள்ளது. அவர்களுக்கும் என் மனமுவந்த நன்றியை உடமையாக்கு கிறேன்.

இவ்வறிக்கையைத் தயாரிக்க என் உடனிருந்து ஊக்குவித்ததுடன், எழுதுவதில் உதவி செய்த என் துணைவியார் திருமதி ஜோதிலட்சுமி அவர்களுக்கும் என் நன்றி.